ஐயம் தெளிதல்

(இரண்டாம் பகுதி)



தெளிவிப்பவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஐயம் தெளிதல்

(இரண்டாம் பகுதி)

प्रज्ञानं ब्रह्म

தெளிவிப்பவர்:
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
1997

தபோவனத் தொடர் *178*

முதல் பதிப்பு 1997 3,000

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

விலை ரு. 60-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

L5-3

பொருளடக்கம்

☆ ☆
☆

14. தெய்வீக வாழ்வு

கேள்வி: *(318)* அறநெறி பிறழாது வாழ்ந்தால் உலகத்தவர் வாழத்தெரியாதவர் என்று ஏசுகின்றனர். இதற்கு என்ன செய்வது? விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: "ஊருடன் கூடிவாழ்" என்பது கோட்பாடு. ஆனால் ஊரில் உள்ளவர்களெல்லாம் அறநெறியைப் பின்பற்றுகிறவர் களென்று உறுதி கூறமுடியாது. அறநெறியை அறியாதவர்களும், அதில் ஊக்கம் கொள்ளாதவர்களும் அதினின்று பிசகியிருப்பவர் களும் சமுதாயத்தில் அதிகம்பேர் இருப்பார்கள். அவர்களோடு கூடிவாழ்வது எப்படியென்னும் பிரச்னை எழவேண்டிய அவசிய மில்லை. வாழ்க்கையில் மக்கள் எல்லாருக்கும் பொதுவான பகுதியும், பொதுவல்லாத பகுதியும் இருக்கின்றன. பொதுவான பகுதியில் ஊருடன் கூடிவாழக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுநலனுக்கு வரி விதிக்கிறார்கள். அம்முறைக்கு ஒத்துழைத்து வரி செலுத்துவது நம் கடமை. பின்பு அவரவர்க்கு நலன் என்று தோன்றுவதை அமைதியாகக் கடைப்பிடித்தல் வேண்டும். ஆடம்பரத்துக்காகவோ, விளம்பரத்துக்காகவோ அவைகளைக் கடைப்பிடித்தால் உலகம் ஏளனம் செய்யும். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். 'வைகறையில் துயிலெழு' என்பது ஆன்றோர் வாக்கு. அது அறநெறி ஆகின்றது. சமுதாயத்தில் பலபேர் அதிகாலையில் எழுந்திருப்பதில்லை. அவ்விஷயத்தில் நாம் ஊருடன் கூடிவாழலாகாது. அதிகாலையில் எழுந்திருந்து அமைதியாகக் கடவுள் வழிபாட்டிலும், வேறு நல்ல அலுவல் களிலும் ஊக்கத்தோடு ஈடுபடவேண்டும். கடவுள் வழிபாடு என்னும் பெயர் வைத்துக்கொண்டு கூச்சல் போட்டு, உறங்கு கிறவர்களுக்கு இடைஞ்சல் பண்ணலாகாது. இடைஞ்சல்

செய்தால் உலகம் ஏளனம் செய்யும். ஆக்ஷேபம் செய்யும். அமைதியாக நம் அலுவல்களைக் கவனித்தால் உலகத்தவர்களுள் ஒருசிலர் நம் வழிக்கு வர முயல்வார்கள். வேறு சிலர் பரிகாசம் செய்யக்கூடும். அவர்களுடைய ஏளனத்தை நாம் அமைதியாக ஏற்றுக்கொண்டால் ஏளனம் செய்வது தானாக நின்றுவிடும். நிற்காது ஏளனம் நிகழ்ந்து வருகிறவிடத்தும் நாம் அமைதியாக நன்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். பிறருடைய அவதூறுக்கு அஞ்சி நல்வழியை நாடாதவர்கள் கோழைகள். அரும்பெரும் செயல் எதையும் அவர்கள் சாதிக்க முடியாது.

உலகில் அறநெறியைப் பரப்புவது எங்ஙனம் என்பது எக்காலத்துக்கும் உரிய கேள்வியாகும். அறநெறியைப்பற்றி ஏராளமாகப் பிரசங்கம் செய்வதால் அதைப் பரப்பமுடியாது. அறநெறியை நாமே ஒழுங்காக அனுஷ்டித்து வருவோமாகில் நம்முடைய ஒழுங்குப்பாடான வாழ்வே மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டு ஆகும். நாளடைவில் சிறிது சிறிதாக மற்றவர்களும் நாம் ஒழுகுகிற நல்வழிக்கு வருவார்கள். ஏளனத்துக்கு அஞ்சுவது நல்வழியாகாது. அது உறுதிப்பாடும் ஆகாது. உலகமே எதிர்த்து நின்றாலும் அறநெறி பிறழாது அதை உறுதியாகக் கடைப்பிடிப்பவர்களே மேன்மக்களாவார்கள். அவர்களே உலகுக்கு நலம் செய்பவர்களும் ஆவார்கள்.

சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். நரேந்திரன் என்பது விவேகானந்தரின் பிள்ளைத் திருநாமம். பரமஹம்சதேவர் அவரிடம் கேட்டதாவது: "நரேந்திரா, நாளைக்கு நீ துறவறம் பூண்டு காவியுடையணிந்து கொண்டு கல்கத்தாவிலே வீதியில் நடந்து போனால் உன்னுடைய கல்லூரித் தோழர்களும் ஏனையவர்களும் உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றும், நீ வாழ்க்கையைப் பாழ்படுத்திவிட்டாய் என்றும் இன்னும் என்னென்னவோ சொல்லி உன்னை ஏளனம் பண்ணுவார்கள். அந்த ஏளனத்தை நீ எப்படிச் சமாளிப்பாய்?"

நரேந்திரன்: "மதம் பிடித்த யானை வீதியில் கம்பீரமாக நடந்துபோகிறது. அப்பொழுது நாய்கள் பல குரைத்துக்கொண்டு அந்த யானைக்குப் பின்னால் ஓடிவருகின்றன. ஆனால் யானையோ குரைக்கின்ற நாய்களைப் பொருள்படுத்துவதில்லை. அதுபோன்று என்னை ஏளனம் பண்ணுகிறவர்களைக்

குரைக்கின்ற நாய்களுக்கு நிகராகக் கருதுவேன். அவர்களைப் பொருள்படுத்தாது நான் கம்பீரமாக என் போக்கில் போவேன்.

பரமஹம்சதேவர்: "அவர்களை அலட்சியப்படுத்துதலில் அவ்வளவு தூரம் வரம்பு கடந்து போய்விடவேண்டாம். அவர் களும் நாராயண சொரூபம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்."

இதில் நம் எல்லாருக்கும் பாடம் இருக்கிறது. உலகத் தவருடைய போக்குக்கு நேர்மாறாகப் போனதனால் விவேகா னந்தர் உலக நலனுக்குப் பெரிய இயக்கம் ஒன்றைத் துவக்க இயன்றது. உலகில் அரும்பெருஞ் செயல்கள் புரிந்தவர்கள் உலக ஏளனத்தைப் பொருள்படுத்தவில்லை.

உலகத்தவரின் போக்குக்கு நேர்மாறாகப் போன மகாத்மா காந்திக்குச் சுதந்திரப்போராட்டத்தை நாடெங்கும் பரப்ப இயன் றது. அவரைப் பைத்தியக்காரன் என்று ஆங்கில ஆட்சியினர் எண்ணினர். பின்பு அவர்களே மகாத்மாவைப் போற்றுவ ராயினர்

அறநெறியில் நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கை அசையாத கற்பாறை போன்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்கும் உலகுக்கும் நல்வழியில் சென்று நலம்புரிய முடியும்.

கேள்வி: *(319)* உலகப்பற்றை விட்டுவிட வேண்டு மென்று பெரியோர்கள் வற்புறுத்துகின்றனர். ஆனால் பற்று வைத்தால்தானே உலக வாழ்வு நடைபெறும்? பற்றை விட்ட வர்கள் அனைவரும் முக்தி அடைந்தார்கள் என்பதனை எப்படி நம்புவது? இந்த முரண்பாட்டை விளக்குக.

பதில்: பற்றுதலை அடிப்படையாகக் கொண்டது வாழ்வு. உண்மையில் பற்றுதலும் வாழ்வும் ஒன்றே. பற்றுதல் காரணமா கிறது; வாழ்வு காரியமாகிறது. ஆயினும் காரியமாகிய வாழ்வு நிலைத்திருப்பதில்லை. ஒரு சூழ்நிலையிலும், ஓர் உடலிலும் வைத்துள்ள பற்றுதலை இயற்கைத்தாய் மாற்றியமைக்கிறாள். சாவு என அச்செயல் [illegible]ப்படுகிறது. ஆக வாழ்வும், சாவும் இணைபிரியாதவைகள். ஒ[illegible] முன்பின் ஒன்றாக அவ்விரண்டும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்நிகழ்ச்சிக்குப் பிறவிப்பெருங்கடல் என்று பெயர். பற்றுதலே பிறகு பற்றற்ற

நிலையாக மாறுவது இயற்கையின் கூறு. மரத்தை இலைகள் பற்றிக்கொண்டிருக்கின்றன. பற்றியிருந்து இலைகள் மரத்துக்கு உணவு ஊட்டுகின்றன. பின்பு அவைகள் பட்டுப்போகின்றன. மரத்தில் பூ உண்டாகி அது பிஞ்சு ஆகிறது. அது காய் ஆகப் பரிணமிக்கிறது. மரத்தைப் பற்றியிருந்தே அப்பரிணாமம் நிகழ்கிறது. பழுத்த கனியோ கனிந்தபின் மரத்தோடு பற்றுதல் வைப்பதில்லை. பற்றற்ற நிலையை அது எய்துகிறது. சிசு தாயின் கர்ப்பத்தைப் பற்றியிருக்கிறது. தாயின் வயிற்றில் முற்றிலும் உரு எடுத்தான பிறகு கர்ப்பத்தினின்று அது விலகிக் கொள்கிறது. இந்நிகழ்ச்சிகளில் பற்றுதலும், பற்றற்ற நிலையும் இன்றியமையாதவைகள் ஆகின்றன. இனி, மனிதன் தனக்குத் தானே செயற்கையாக வரவழைத்துக்கொள்ளுகிற பற்றுதலையும் பற்றற்ற நிலையையும் ஆராய்வோம். சிறுவன் ஒருவன் பள்ளியில் வைக்கப்படுகிறான். அப்பள்ளியில் அவன் பற்றுதலை வளர்க்க வேண்டும். பள்ளியில் பற்றுதல் இல்லா விட்டால் பாலன் படிப்பில் முன்னேற்றம் அடையான். ஆங்குக் கற்க வேண்டியவைகளையெல்லாம் கற்றான பிறகு பள்ளியில் வைத்துள்ள பற்றுதலை நீக்குதல் வேண்டும். இது வாழ்க்கைத் தத்துவம். பற்றுதல் வைக்கவேண்டிய இடத்தில் தேவைக்கு ஏற்றவளவு பற்றுதல் வைத்திருக்க வேண்டும். பின்பு பற்றுதலை விட்டொழித்தே ஆகவேண்டும்.

பிரபஞ்ச வாழ்வைப்பற்றி ஜீவர்கள் முதிர்ந்த அனுபவம் பெறும் வரையில் அவர்கள் பற்றுதலிலேயே நிலைபெற்றிருக் கின்றனர். அன்னவர்களுக்குப் பற்றுதலை ஒழித்தல் வேண்டு மென்று புகட்டுவது பொருளற்றது. பல பிறவிகளில் ஜீவர்கள் முன்னேற்றமடைந்து வருவதுபோன்று இன்ப துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். ஜீவர்கள் அனைவரும் இன்பத் தையே நாடுகின்றனர். அதற்குத் துன்பம் என்னும் விலைகொடுத் தாக வேண்டும். துன்பம் கலவாத இன்பம் இவ்வையகத்தில் இல்லை. இவ்வுண்மையை அறிகிற ஜீவர்கள் மனபரிபாகம் அடைகின்றனர். உலகப்பற்றை விட்டுவிட வேண்டுமென்று மனபரிபாகம் அடைந்தவர்களுக்குப் பெரியோர்கள் புகட்டு கின்றனர். இக்கோட்பாட்டை வற்புறுத்தியும் கூறியுள்ளனர். ஆதலால் ஒருவருக்குப் புகட்டிய போதனையை இன்னொருவர்

மீது ஏற்றலாகாது. உலகப்பற்றை ஆழ்ந்து பற்றிப் பிடித்திருப் பவர்களிடம் பற்றை நீக்கு என்று நவிலுதலில் பயன் இல்லை. இவ்வுலக வாழ்வில் துன்பம் மிக உண்டு என்பதைத் துருவி ஆராய்ந்து பார் என்று அவர்களுக்குப் போதிக்கலாம். பின்பு துன்ப நிவர்த்தியை நாடுபவர் தாமே பற்றுதலை ஒழிக்கின்றனர். உடல் பற்று மிக வைத்திருப்பவர்கள் வயோதிகத்தில் நோயால் மிக வருந்துகின்றனர். நோயை முன்னிட்டு உடல் பற்று ஒழி கிறது. அதை ஒழித்தல் வேண்டும் என்று அன்னவர்களுக்கு உரைக்கலாம். பற்றுதலை நீக்கவேண்டுமென்று அந்தச் சூழ்நிலை யில் போதிக்கும்போது அந்தப் போதனை பயன்படுகிறது. இனி, வாழ்வின் மர்மத்தை அறிய விரும்புகின்றவர்களுக்கும் அக்கோட்பாட்டை எடுத்துரைக்கலாம். ஆனால் வாழ்வில் பெரும் பற்றுதல் வைத்திருக்கிறவர்களிடம் அக்கோட்பாட்டைப் புகட்டலாகாது. ஆக, பெரியோர் புகட்டுகின்ற பெரிய போதனை களுக்கு அதிகாரிகள் யார் என்பதைக் கருத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்னும் மறைமொழிக்குப் பக்குவம் அடையப்பெற்ற பெருமக்களே அதிகாரி ஆகிறார்கள். இன்னும் உலகப்பற்றில் உழல்பவர்களுக்கு இப்போதனை உதவாது. ஆக, ஒருவருக்குப் பொருத்தமான போதனை இன்னொருவருக்குப் பொருத்தமான தாகாது.

பழுத்த பழம் மரத்தினின்று முக்தியடைகிறது. பிறந்த குழந்தை தாயின் கர்ப்பத்தினின்று முக்தியடைகிறது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்னும் கோட்பாடு முக்தி அடைந்தவர்களுக்கு உரியதாகிறது. முக்தி அடைந்தவர்களுக்கு மறுபிறவி இல்லை. மற்றவர்கள் பிறந்துகொண்டே இருக்கவேண்டும். இனி முக்தி அடைந்திருப் பதை எதைக்கொண்டு யூகிப்பது? பசித்திருப்பவனுடைய முகத்தில் வாட்டம் காண்கிறோம். புசித்தவன் முகத்தில் எழில்

காண்கிறோம். வேண்டியவளவு உணவைப் புசித்திருப்பவன் தனக்குப் பசியில்லையென்பதை அனுபவத்தில் அறிகிறான். அதைப்பற்றி மற்றவர்கள் அறிந்து கொள்ளுவதைவிட மிகத் தெளிந்த பாங்கில், மிக உறுதியான பாங்கில் தானே அறிந்து கொள்ளுகிறான். அதைக்குறித்துச் சந்தேகப்பட்டுப் பிறகு யாரிடமும் அவன் கேட்பதில்லை. அதேபாங்கில் முக்தியடைந் துள்ளவன் தான் ஆத்மா என்பதைச் சுவானுபூதியில் அறிகிறான். உடல் அழியும் பாங்குடையது. உடலுக்குப் பிறப்பும், வளர்ச்சியும், தேய்வும், அழிவும் உண்டு. ஆத்மாவுக்கோ இத்தகைய விகாரங்கள் இல்லை. ஆத்மா யாண்டும் இருந்தபடி இருக்கிறது. சுவானுபூதியில் அதை அறிகிறவன் தனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்று தெளிவடைகிறான். அன்னவனே முக்தபுருஷன். உலகப் பற்றில்லாததால் அவன் முக்தன் என்று ஏனைய அறிஞர் அறிகின்றனர். பின்பு ஆத்ம ஞானம் அடையப் பெற்றவனுக்கோ முக்திநிலை ஸ்பஷ்டமாம். வேண்டப்படாததினின்று விடுதலையடைவது முக்தி. உலகில் எதை எதையோ முதலில் வேண்டுகிறோம். பிறகு வேண்டாமென்று ஒதுக்கி வைக்கிறோம். உலகத்தைப்பற்றிய அனுபவங்களை வேண்டியவாறு பெற்றான பிறகு உலக வாழ்வு வேண்டாமென்று நீத்துவிட்டு இறைவனை இறுதியாக அடைவது முக்தியென்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.

கேள்வி: *(320)* ஆத்மபோதம் பெற உடல் உறுதியாக இருக்க வேண்டும். உடல் உறுதிக்கு நல்லுணவு உண்ண வேண்டும். நல்லுணவு பெறுவதற்குப் பொருள் வேண்டும். ஆத்மீக உணர்ச்சியை வளர்க்கும் கோயில்கள் அமைப்பதற்கும் பொருள் தேவை. எனவே முதலில் பொருள் தேடிவிட்டுப் பிறகு ஆத்ம வளர்ச்சிக்குப் பாடுபடுவதா? அல்லது ஆத்ம போதத்தை வேறு எம்முறையில் வளர்க்கப் பாடுபடுவது?

பதில்: உடலுக்கும் உள்ளத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. திண்ணிய உள்ளம் பெறுவதற்கு உடல் உறுதி அவசியம். திண்ணிய உள்ளம் ஆத்ம போதம் பெறுவதற்குத் துணைபுரிகிறது. திண்ணிய உள்ளத்திற்கு உடற்கட்டும் ஓரளவு

அவசியம். எனவே உடல் உறுதி உடையவனாக இருப்பது ஆத்ம போதத்திற்கு உதவுகிறது என்பது விளங்குகிறது.

அரிசியைச் சத்துள்ள உணவாகத் தயார் செய்து உண்ணுவதில் செலவு குறைவு. அதை மிஷினில் போட்டுத் தீட்டி அதிலுள்ள சத்துள்ள பகுதியெல்லாம் போக்கி நாகரிக உணவு என்று கருதி உண்ணுவதில் செலவு அதிகம். இவ்வுணவு போன்று அகப்படுகின்ற மற்ற உணவுப் பொருளிலுள்ள சத்தைப் போக்கிவிடாது முறையாகப் பக்குவப்படுத்தி உண்டு வந்தால் அது நம் உடலுக்குப் புஷ்டியைத் தருகிறது. அம்முறையில் உணவின் மூலம் வரும் புஷ்டி உடலுக்குப் போதுமானது. புஷ்டி தரும் உணவை உண்ணுதற்குச் செல்வம் இல்லையே என்று வருந்தத் தேவையில்லை.

ஆத்ம சாதனத்திற்குத் தூய உணவுதான் மிகமிக அவசியமாகிறது. ஜாதி தோஷம், நிமித்த தோஷம், ஆச்ரய தோஷம் என்னும் மூன்று தோஷங்களால் உணவின் தூய்மை பாதிக்கப்படுகிறது. இம்மூன்று தோஷங்களும் நீங்கிய உணவு தூய உணவு ஆகிறது. சூரிய வெளிச்சம் படாது பூமிக்கடியில் விளையும் கிழங்கு வகைகள், வெங்காயம் போன்றவைகள் தமோகுணத்தை வளர்க்கின்றன. ஆத்மசாதகர்கள் இவற்றை அதிகம் உண்ணலாகாது. இது உணவிலுள்ள ஜாதி தோஷம் ஆகிறது. உணவில் உரோமம், நகம் முதலியவை இருந்தால் அப்பொழுது அது தோஷமுடையதாகிறது. நாள்பட்ட பழைய உணவும் தோஷமுடையதாகிறது. இது உணவிலுள்ள நிமித்த தோஷமாகிறது. இத்தகைய உணவுகளைச் சாதகன் குறைத்துக் கொள்கிற அளவு சாதனைக்கு இடைஞ்சல் இருக்காது. மாசு படிந்த உள்ளம் படைத்தவர்கள் கைப்பட்ட உணவு தோஷமுடையதாகிறது. இது உணவிலுள்ள ஆச்ரய தோஷமாகிறது. இத்தகைய உணவை ஏற்றுக்கொள்ளாதிருப்பது சாதனைக்கு நல்லது. இதைவிட இன்னும் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அஃதாவது உள்ளத்தில் தூய எண்ணங்களே குடிகொண்டிருக்குமாறு செய்வதாம். தூய எண்ணங்கள் எவ்வளவுக்கெவ்வளவு உள்ளத்தில் அதிகம் இடம் பெறுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சாதனையில் மேலே போகலாம். உள்ளத்தில் தூயசிந்தனை இடம்பெறுவதற்குப் பொருள்

படைத்திருக்க வேண்டியது அவசியமில்லை. பொருள் படைத்திருப்பதானது தூயசிந்தனைக்கு இடைஞ்சலாக இருக்குமென்று சொல்லலாம். எனவே ஆத்மபோதம் பெறுவதற்குச் செல்வத்தைத் தேடவேண்டும் என்பது அவசியமில்லை.

ஆத்மபோதத்தைப் பெறுவதற்குக் கோயில்கள் அமைப்பதும் விழாக்கள் கொண்டாடுவதும் அவசியமில்லை. பொருள் படைத்திருக்கின்றவர்கள் அப்பொருளை ஆத்ம சாதனத்துக்காகப் பயன்படுத்த வேண்டுமானால் நல்ல முறையில் செலவழிக்க வேண்டும். ஆத்மிகச் சூழ்நிலையை உண்டாக்கும் கோயில்கள் அமைப்பதிலும் சமய சம்பந்தமான விழாக்கள் கொண்டாடுவதிலும் அப்பொருளைச் செலவழித்தால் அவர்கள் படைத்திருக்கும் பொருள் ஆத்மசாதனைக்குப் பயன்பட்டது ஆகிறது.

ஆத்ம நாட்டம் உடையவர்கள் பொருள்மீது பற்றுதல் கொள்ளலாகாது. இறைவனுக்கென்றே தங்களுக்கு அமைந்த தொழிலைச் செய்ய வேண்டும். தங்கள் தொழில் மூலம் வரும் செல்வத்தை மக்களுக்குப் பயன்படுகிற முறையில் செலவழிக்க வேண்டும். தங்களுக்குத் தேவையான செல்வம் போக மீதிப் பொருளைக் கல்விச் சாலைகள் அமைப்பது, கோயில்கள் அமைப்பது போன்ற பொதுநலப்பணிக்குச் செலவழிக்கவேண்டும். சாதகன் எப்பொழுதும் தனக்காக வாழாது பிறருக்கென்றே வாழவேண்டும். எனவே தனக்கு வரும் செல்வத்தை எந்த அளவுக்குப் பிறருக்குப் பயன்படும்படி செய்கிறானோ அந்த அளவு ஆத்ம சாதனையில் முன்னேறுகின்றான். மாணிக்கவாசகர் குதிரை வாங்குவதற்கு அரசன் கொடுத்த திரவியத்தை இறைபணிக்கென்று செலவழித்து விடுகிறார். இஃது சாதகனுக்கு ஓர் அரிய பாடத்தைப் புகட்டுகிறது. ஆத்மபோதத்தைப் பெறுவதற்குத் தன்னிடமுள்ள செல்வத்தையோ அல்லது தனக்கு வரும் செல்வத்தையோ மாணிக்கவாசகர் போன்று இறைபணிக்குப் பயன்படுத்தவேண்டுமென்பது அப்பாடமாகும்.

இனி, செல்வம் படையாதவர்கள் ஆத்மபோதத்தைப் பெறுவதற்குச் செல்வத்தைத் தேடவேண்டுமென்பது அவசியமில்லை. தங்களுக்கமைந்த சூழ்நிலையில் சீரிய வாழ்வு

வாழ்பவர்களே ஆத்மபோதம் பெறுகிறார்கள். மனம் புறவுலகில் செல்லாது அகத்தே செல்லுமளவு ஆத்மபோதம் உண்டாகிறது. ஆத்மபோதம் பெறவிரும்பிய பெரியோர்களெல்லாம் செல்வத்தைத் திரஸ்கரித்தே இருக்கிறார்கள். பட்டினத்தடிகள், புத்தர், துருவன் போன்றவர்கள் இதற்குச் சான்றுகள் ஆவார்கள். தன்னலம் குறைந்து பரநலம் ஓங்குவதே ஆத்மபோதத்தை வளர்க்கிறது. இதைக் கருத்தில் கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே ஆத்மபோதத்தைப் பெறுவதற்குச் சிறந்த முறையாகும்.

கேள்வி: *(321)* ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய வாழ்நாளுக்குப் பின்பு அன்னை சாரதாதேவியார் தம் சொந்த ஊருக்குச் சென்று வறுமையால் வாடியதாக அன்னையார் வரலாற்றில் இருக்கிறது. தன் மனைவிக்குத் தான் செய்யவேண்டிய கடமைகளைக் குறைவின்றிச் செய்தார் என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பெருமை என்ற நூலில் இருக்கிறது. அப்படியானால் அது பூர்வ ஜென்மாத்ம வினைப்பயனா? தன் மனைவிக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்து வைக்காமல், தான் ஆத்ம தரிசனத்திலும் பாரமார்த்திக வாழ்விலும் சதா காலமும் இருந்ததினால் கடைசியில் அன்னையார் கஷ்டப்பட வேண்டி வந்ததா, அல்லது வினைப்பயனா?

பதில்: மண்ணுலகில் மானுடராய்ப் பிறக்கின்றவர்கள் சர்வகாலமும் சுகத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பதில்லை. சுகமும் துக்கமும் மாறி மாறி வருவதே மண்ணுலக வாழ்வின் இயல்பு. செல்வம் படைத்திருக்கிறவர்களெல்லாம் சுகஜீவனம் செய்கிறார்கள் என்றோ, செல்வம் சிறிதேனும் இல்லாதவர்கள் துக்கப்படுகிறார்கள் என்றோ சொல்லுதற்கில்லை. பலதடவைகளில் பணம் மிகப் படைத்திருப்பதே துக்கத்துக்கு மூலகாரணமாகிறது. மண்ணுலகில் மக்கள் எப்படி வாழ்ந்திருக்க வேண்டும் என்பதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய வாழ்வும் அன்னை சாரதா தேவியாருடைய வாழ்வும் நல்ல எடுத்துக் காட்டுகள் ஆகும். உலக மக்கள் எல்லாரும் பணம் தேடுதலிலேயே ஓயாது கருத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பணத்தைத் தொடவோ அதைப்பற்றிச் சிந்திக்கவோ ஒருப்படவில்லை. ஆயினும் தெய்வா தீனமாக அவர் வாழ்க்கைக்குத் தேவையாயிருந்தவைகளெல்லாம் தாமாகவே வந்துசேர்ந்தன. முழுமனதோடு பாரமார்த்திக வாழ்க்கையில் ஈடுபடுகிறவர்கள் பணத்தைப்பற்றி நினைக்க வேண்டியதில்லை. உடல் வாழ்க்கைக்குத் தேவையாயிருப்பவை கனெல்லாம் தாமாகவே வந்து வாய்த்துவிடுகின்றன. இது பாரமார்த்திக வாழ்க்கையைப் பற்றிய பேருண்மை. ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் அத்தகைய் மனநிலையில் உறுதிபெற்ற வராக இருந்தார். அன்னை ஸ்ரீ சாரதாதேவியாருக்கும் அதே மனநிலையில் இருக்கும்படியான பயிற்சியை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அளித்தார். மனைவிக்குக் கணவன் செய்கின்ற உதவிகளுள் பாரமார்த்திக வாழ்வு வாழும்படி பயிலுவிப்பதே ஒப்பற்ற உபகாரமாகும். அக்கோட்பாட்டுக்கு ஒப்ப ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சாரதாதேவியாருக்குச் செய்யவேண்டிய உதவி யெல்லாம் செய்தாய்விட்டதென்றே உறுதி கூறலாம்.

அன்னை ஸ்ரீசாரதாதேவியார் சுமார் ஓராண்டுக் காலம் வறுமையில் வாடியிருந்தது உண்மை. அதினின்று நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பெரிய பாடம் ஒன்று உண்டு. எதை நாம் வறுமை என்கின்றோமோ, அதைப் பெரியோர்கள் வறுமையெனக் கருதுவதில்லை. எதைக் கஷ்டமென நாம் கருதுகிறோமோ, அதைப் பெரியோர்கள் கஷ்டமெனக் கருதுவ தில்லை. எதைத் துக்கமென நாம் கருதுகிறோமோ அதைப் பெரியோர்கள் துக்கமெனக் கருதுவதில்லை. தாம் வறுமைப் பட்டுக் கிடந்ததாக ஸ்ரீசாரதாதேவியார் எண்ணியதில்லை. தமக்குக் கஷ்டதசை வந்துவிட்டதென்றும் அவர் எண்ணக்கிடை யாது. அவர் படைத்திருந்த மனப்பான்மையே ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்கு நல்கிய பெரிய செல்வமாகும். துக்கத்துக்கு ஏதுவான நிகழ்ச்சிகளைப் பெரியோர்கள் பொருள்படுத்தாது பாரமார்த் திகப் பேரின்பத்திலேயே திளைத்திருக்கிறார்கள் என்பதற்கு ஸ்ரீ சாரதாதேவியாரின் வறுமை நல்ல எடுத்துக்காட்டாகிறது. "வறியோர்க்கழகு வறுமையில் செம்மை" என்பது முதுமொழி. ஆனால் சான்றோர்களோ வறுமையை வறுமையாய் நினைப்ப தில்லை. வறுமைவாய்ப்பட்டிருப்பவர்களின் மனநிலையைவிடப்

பன்மடங்கு உயர்ந்த மனநிலையில் ஸ்ரீ சாரதாதேவியார் இருந்தார். உலகத்தவர் அத்தகைய மனநிலையைப் பெறாதிருக்கும் பரியந்தம் துக்கத்துக்கு ஆளாகியே தீரவேண்டும். நல்ல மனமுடையாரை உலகசம்பந்தமான இன்பதுன்பங்கள் ஒருபொழுதும் வந்து பாதிப்பதில்லை என்பதற்கு ஸ்ரீ சாரதா தேவியாரின் தாற்காலிக வறுமை நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. பெரியோர்கள் தங்கள் வாழ்வின் மூலமாகவே வாழ்க்கையைப் பற்றிய பேருண்மைகள் பலவற்றைப் புகட்டுகின்றனர். வினைப் பயனைப்பற்றிய கேள்வி வினையில் கட்டுண்டிருக்கிறவர்களுக்கே வருகிறது. வினையில் கட்டுப்படாதவர்களுக்கு இன்பமும் துன்பமும் நிகராய்விடுகின்றன. நாம் இன்பமாகக் கருதுவதையும் துன்பமாகக் கருதுவதையும் கடந்த நிலையில் பெரியோர்கள் இருக்கின்றனர். ஸ்ரீசாரததாதேவியாரின் ஜீவிதம் அதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது.

கேள்வி: *(322)* சதா பகவானை நாடுபவன் கோரமான வறுமைப் பிடியில் சிக்கித் தவிக்கிறான். காரணம் என்ன? ஏன் பகவான் அவனுக்குச் சுகவாழ்வைத் தரக்கூடாது?

பதில்: மகாபாரத யுத்தம் முடிந்த பிறகு தர்மத்தின் உட்கருத்தைத் தங்களுக்கு விளக்கவேண்டுமென்று தர்மராஜா யுதிஷ்டிரரும், அவருடைய சகோதரர்களும் கிருஷ்ண பகவானிடம் விண்ணப்பித்தார்கள். தர்மத்தை விளக்குதற்குப் பீஷ்மாச்சாரியரே முற்றிலும் தகுதி வாய்ந்தவரென்று கிருஷ்ண பகவான் பாண்டவர்களை அவர்களுடைய பாட்டனாரிடம் அழைத்துச் சென்றார். அக்கிழவனாரோ போர்க்களத்தில் அம்புப் படுக்கையின்மீது உத்தராயண புண்ய காலத்தை எதிர்பார்த்துப் படுத்துக்கிடந்தார். பேரன்மார் ஐவரையும், கண்ணனையும் பார்த்து அவர் கண்ணீர் சிந்தினார். எதற்கும் வருத்தமுறாத அப்பெரியவர் வருந்தியதற்குக் காரணம் யாது என்று பேரன்மார்கள் வினவினர். அதற்கு அவர் கொடுத்த விடையில் பெருங்கருத்து ஒன்று புதைந்து இருந்தது. பீஷ்மர் பகர்ந்ததாவது: "குழந்தைகாள்! கண்ணபிரானே யாண்டும் உங்களுக்குத் துணை புரிந்து வருகிறார். அப்படியிருந்தும் இம்மண்ணுலக வாழ்க்கையில் நீங்கள் பட்டுள்ள துயரத்துக்கு ஒரு முடிவேயில்லை.

கடவுளின் போக்கையோ, தர்மத்தின் போக்கையோ உள்ளவாறு அறிந்து கொள்ள யாரே வல்லவர்!"

பாண்டவர் ஐவர் மட்டுமல்ல. பிரஹலாதன், அப்பர் சுவாமிகள் போன்றவர்கள் கடவுளின் பரமபக்தர்கள் ஆவார்கள். வாழ்க்கையில் அவர்கள் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். துன்பங்கள் தங்களுக்கு ஏன் வந்து வாய்த்தன என்று அவர்கள் கனவிலும் கருதியது கிடையாது. குழந்தை யினிடத்து மெய்யன்பு கொண்டிருக்கிற தாய் குழந்தையைப் பேணுதலில் உண்டாகும் துன்பத்தைப் பொருள்படுத்துவதில்லை. கடவுளிடத்துப் பக்தி கொண்டிருப்பவர்கள் வாழ்க்கையில் தங்களுக்கு வந்து வாய்க்கும் துன்பங்களைப் பொருள்படுத்துவ தில்லை.

சுக வாழ்வே வடிவெடுத்திருந்த பக்தர்களும் பலர் உலகத் தில் இருந்திருக்கின்றனர். அன்னவர்கள் தங்களுக்கு வாய்த்த சுகத்தைக் குறித்து மகிழ்ச்சியுற்றதில்லை. மற்ற பக்தர்கள் தங்களுக்குற்ற துக்கங்களை முன்னிட்டு மனம் சலித்தது கிடையாது. எனவே கடவுளின் மெய்யன்பர்களைப் பற்றிய உண்மையொன்றை ஈண்டு இயம்பலாம். இவ்வுலக வாழ்க்கை யினின்று விளைகின்ற இன்ப துன்பங்களைப் பக்தர்கள் ஒரு பொழுதும் பொருள்படுத்துவதில்லை. சுகதுக்கங்களைச் சமனாகப் பாராட்டுவது அவர்களின் போக்கு. சுகதுக்கங்களுக்கு அடிமைப் படுவது மற்றவர்களுடைய போக்கு. பக்தர் யார், பக்தர் அல்லாதார் யார் என்பதை உலக வாழ்வு அளிக்கின்ற இன்ப துன்பங்களே விளக்கிவிடுகின்றன.

கேள்வி: *(323)* மானுட வாழ்க்கை சோதனைகள் நிறைந்ததாக இருக்கிறது. நல்லவர்களுக்குச் சோதனைகள் வருமென்றால், அவை ஏன் மிகுதியாக இருக்கவேண்டும்?

பதில்: உடல் எடுத்துள்ள உயிர்வகைகள் அனைத்துக்குமே வாழ்க்கையில் சோதனைகள் மிக அமைந்திருக்கின்றன. தகுதி மிக வாய்ந்தவைகளே வாழ்க்கையில் தாக்குப் பிடிக்கின்றன. தகுதியற்றவைகள் துடைத்துத் தள்ளப்படுகின்றன. பக்கம் பக்கம் வளரும் மரம் செடிகொடிகளில் உறுதி படைத்தவை மேலோங்கி வளருகின்றன. உறுதியற்றவை க்ஷீணித்துப்போய்ப்

பிறகு மறைந்துபட்டுப் போகின்றன. வனத்தில் வசிக்கும் விலங்குகளுள் வல்லமை வாய்ந்தவைகள் நிலைத்திருக்கின்றன. வல்லமையற்றவை அழிந்துபட்டுப் போகின்றன. மானுட சமுதாயத்தில் ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது படையெடுத்துப் போய் அதை அடிமைப்படுத்துவதும் அல்லது ஒதுக்கித் தள்ளுவதும் காலமெல்லாம் நிகழ்ந்து வருகிறது. எனவே எல்லாப் படித்தரத்திலும் உடல்வாழ்க்கை என்பது ஓயாத போராட்டமாம். போராட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு படித்தரத்திலும் உள்ள உயிர்வகைகள் வலிவுபெற்று வருகின்றன.

மனிதன் பசியோடு போராடியாகவேண்டும். நோயோடு போராடியாகவேண்டும். எதிரிகளோடு போராடியாக வேண்டும். இதற்கெல்லாம் மேலாக அக்ஞானத்தோடு போராடியாக வேண்டும். அக்ஞானத்தோடு செய்கிற போராட்டமே சோதனை என்கிற பெயர் பெறுகிறது.

கல்வித்துறையில் மேல்நிலைக்கு வரவரப் பரீக்ஷை என்னும் சோதனை அதிகரிக்கிறது. சாமானியப் படிப்புப் போதும் என்பவனுக்குச் சோதனை மிகக் குறைவு. ஒழுக்கத்தில் மேல் நிலைக்கு வருகின்றவனுக்குச் சோதனைகள் அதிகம். கீழ்த்தரமான வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவனுக்குச் சோதனையும் மிகக் குறைவாக அமைகிறது. உலோகங்களில் அமைந்துள்ள அழுக்குகளை அகற்றுவதற்கு ஏற்ப அவைகளைப் பலதடவை உலையில் இட்டு உருக்குதல் வேண்டும். அதே விதத்தில் மானுடனொருவன் பண்பாட்டில் மேன்மையடைந்து உள்ளான் என்பது சோதனையின் வாயிலாகவே வெளியாகிறது. விளையாட்டில் தேர்ச்சி பெற்றவன் தேர்ச்சி பெற்ற மற்றவர்களோடு போராடியே தன் திறமையை வெளிப்படுத்துகிறான். அறிவில் ஓங்கியிருப்பவன் ஆராய்ச்சியின் வாயிலாகவே தன் அறிவுத்திறனை வெளிப்படுத்துகிறான். உறுதி படைத்துள்ள சமுதாயம் ஒன்று தாக்கவரும் எதிரிகளோடு போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்தே தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுகின்றது. இங்ஙனம் உலக வாழ்வு முழுதும் சோதனை மயமாக அமைந்திருக்கிறது. பண்பாட்டில் மேலே வருவதற்கேற்பச் சோதனைகளைச் சமாளிக்கும் திறமை தானாக வந்து அமைகிறது. இக்கோட்பாட்டின்படி நல்லவர்களுக்குத்தான் சோதனை

அதிகம். "வலிவுபடைத்தவன் வாழ்வுக்குரியவன்" என்னும் கோட்பாடு சோதனையின் மூலம் நிரூபிக்கப்படுகிறது.

கேள்வி: *(324)* பக்தர்களுக்கு ஏன் துக்கம் வருகின்றது?

பதில்: துக்கத்தில் இரண்டு பாங்குகள் உள்ளன. ஒன்று இவ்வுலக சம்பந்தமானது. மற்றது கடவுள் சம்பந்தமானது. மக்களுள் உலகப்பற்று வைத்திருக்கிறவர்கள் லௌகிகர் எனக் கருதப்படுகின்றனர். கடவுள் பற்று வைத்திருக்கிறவர்கள் பக்தர்கள் எனக் கருதப்படுகின்றனர். இவ்வுலகிலே உடல் தாங்கியிருக்கிற அனைவருக்கும் துக்கம் உண்டு. ஜீவாத்மனுக்கு அமைந்திருக்கிற லட்சணங்களில் ஒன்று துக்கப்படுதல். எந்திரக் கல் இரண்டுக்கிடையில் அகப்பட்டுக் கொள்ளுகிற தானியம் உடைபடுகிறது. அதே விதத்தில் மண்ணுலகம், விண்ணுலகம் ஆகிய இரண்டுக்குமிடையில் உடல் தாங்கியிருக்கும் ஜீவர்களனைவரும் ஏதேனும் ஒருவிதத்தில் துக்கப்பட்டே ஆக வேண்டும். இவ்வுலக சம்பந்தமான பொருள், போகம், பதவி, சுகஜீவனம் முதலியன வாய்க்கவில்லையென்று விசனப்படுவது உலகத்தவர் படுகிற துயரம். மற்றும் தனக்குத் தெய்வத்தின் அருள் இன்னும் வந்து வாய்க்கவில்லையே, தனக்கு அருள்தாகம் போதவில்லையே, வாழ்நாள் வீணாளாகக் கழிந்து போகிறதே என்றெல்லாம் ஏற்படுகிற துயரம் பக்தர்களுக்கு உரியதாம். இத்தகைய துயரம் இருந்தால்தான் பக்தன் ஒருவன் முன்னேற்றமடைய முடியும். உலகத்தவன் ஒருவனை உலக சம்பந்தமான துக்கம் உலக வாழ்வில் முன்னேற்றமடையும்படி தூண்டுகிறது. தான் அடைந்திருக்கவேண்டிய பாரமார்த்திகப் பெருநிலையை அடையவில்லையே என்கிற துக்கம் பக்தன் ஒருவனை ஆத்ம சாதனத்தில் தூண்டுகிறது. ஆகவே உடல் எடுத்திருக்கிற உயிர்கள் அனைத்தும் துக்கத்தைத் தவிர்க்க முடியாது. உலக சம்பந்தமான துயரம் மனதைப் பலஹீனப்படுத்துகிறது. மேலும் அத்துயரம் மனதில் குழப்பத்தையும், தெளிவின்மையையும் உண்டாக்குகின்றது. பரம்பொருளை நாடித் துயரப்படுகின்ற மனது துயரத்துக்குப்பின் தெளிவடைகின்றது. பரநாட்டத்தில் உண்டாகிற துயரம் மனதிலுள்ள மாசைப் போக்குகிறது. எனவே இவ்விரண்டுவிதமான துக்கங்களுள் பரம்பொருளை

நாடி அடைகிற துக்கம் பாராட்டுதற்கு உரியது. பிறவிகள் பல எடுத்து இவ்வுலக சம்பந்தமான நிலையற்ற சம்பத்துக் களைப் பெறுதலில் கதறிப்பதறி அழுது சலித்துப்போன பிறகே கடவுளை அடைதற்குரிய அருள்தாகம் வருகிறது. கடவுளை நாடி அழுகின்றவர்கள் அல்லது துக்கப்படுகின்ற வர்கள் பாக்கியவான்கள். "வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்கிறார் மாணிக்கவாசகர். இத்தகைய தெய்வீகத் துக்கத்தை அடையப் பெறாதவர்கள் சாதனத்தில் முன்னேற்றம் அடைவதில்லை.

கேள்வி: *(325)* இறைவன் பக்தனுக்குத் துன்பம் தருகின்றான். காரணம் என்ன?

பதில்: சர்வகாலமும் இறைவனையே எண்ணிக்கொண்டு அந்த இறைவனையே சார்ந்திருப்பது பக்தனுடைய பாங்கு ஆகும். அத்தகைய பக்தனுக்கு எக்காரணத்தை முன்னிட்டாவது துன்பம் வந்தால் அத்துன்பத்தைத் துடைத்துத் தள்ளுவதற்கு இறைவனுடன் தான் கொண்டுள்ள இணக்கத்தை அதிகப்படுத்த முயலுகின்றான். அவன் எடுத்துக்கொள்கின்ற அந்த முயற்சியைப் பார்த்து இறைவன் பூரிப்படைகின்றான். அதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் யாண்டும் அன்புமயமானது. சில வேளைகளில் தாய் மறைந் திருந்து சேய்க்கு ஏக்கத்தை உண்டுபண்ணுகிறாள். அப்பொழுது குழந்தை அழும் அழுகையில் தாய் பேரின்பமடைகின்றாள். இதே செயலைப் பக்தனிடத்தில் செய்து அவனைத் துன் புறுத்தல் மூலம் இறைவன் பரமானந்தம் அடைகின்றான். பிறகு பக்தனுக்குத் தம் சொரூபத்தைக் காட்டியருளுகிறார். இக்கோட்பாட்டையே "கன்றினுக்குச் சேதா கனிந்திரங்குவது போல்" என்கிறார் தாயுமானவர்.

கேள்வி: *(326)* தெய்வபக்தி செய்து வருகின்ற குடும்பத் தினருக்கு அதிகத் துன்பங்கள் ஏன் வருகின்றன?

பதில்: இவ்வுலகத்தில் இன்பதுன்பம் இரண்டும் கலந்தே இருக்கின்றன. மனிதனுடைய உள்ளத்தில் ஆசை இருக்குமளவு இவ்வுலக இன்பதுன்பங்கள் அவனை வந்து தாக்கிக்கொண்டே

இருக்கும். மனிதனிடத்துள்ள ஆசை நிறைவேறினால் இன்பமும், ஆசை நிறைவேறாவிட்டால் துன்பமும் ஏற்படும். கடவுளிடத்தில் பக்திகொண்டிருப்பதற்கிடையில் நம் உள்ளத்தில் உலகப்பற்றும் இருக்கிறது. பற்று இருப்பதால்தான் துன்பம் வருகிறது.

உலகப்பற்று குறைந்தால்தான் தெய்வப்பற்று அதிகரிக்கும். பக்தி வளர்வதற்குப் பக்தனுக்குக் கடவுள் துன்பத்தை அதிகம் தருகின்றார். உலக விஷயத்தில் மனிதனுக்குத் துன்பம் வந்தால் தான் உலகப்பற்றுக் குறையும். உலக விஷயத்தில் சுகத்துக்கு ஏதுவானவைகள் வந்துகொண்டிருக்குமளவு தெய்வப்பற்றுக் குறைந்து உலகப்பற்று அதிகரித்துவிடும். பக்தனுக்குத் துன்பம் வருகின்றதென்றால் அதை இறைவனுடைய அருள் என்றுதான் கூறவேண்டும்.

மேலும் துன்பத்தை ஏற்றுப் பழகுகின்ற அளவு மனதுக்கு உறுதிப்பாடு வருகின்றது. துன்பத்தின் மூலம்தான் மனது நல்ல பண்பாடு அடைகின்றது. மன உறுதியையும் வைராக்கியத்தையும் வளர்ப்பதற்குப் பக்தன் துன்பத்தை ஏற்றுப் பழகுதல் வேண்டும். ❑

15. தெய்வீகத்திட்டம்

கேள்வி: *(327)* அக்காலத்தில் அருளுக்குப் பாத்திர மானவர் திருவாதவூரர். இக்காலத்தில் அருளுக்குப் பாத்திரமானவர் விவேகானந்தர். பாண்டியன் பணத்தையெடுத்துத் திருப்பெருந்துறையில் சிவன் கோயில் கட்டச் சிவனார் வாதவூரருக்கு அனுமதி கொடுத்தார். பிறகு வாதவூரர்க்குப் பாதுகாப்பும் கொடுத்தார். காஷ்மீரத்தில் பாழ்பட்டுக் கிடந்த அம்பிகையின் கோயிலைப் புதுப்பிக்க விவேகானந்தர் எண்ணங்கொண்டார். "என்னை நீ காப்பாற்றுகின்றாயா அல்லது உன்னை நான் காப்பாற்றுகின்றேனா?" என்று அம்பிகை விவேகானந்தர் எண்ணத்துக்குத் தடை செய்ததாக வரலாற்றில் காண்கிறோம். சிவனும் அம்பிகையும் ஒன்றே. ஒருவர்க்குக் கோவில் கட்டத் தெய்வத்தின் அனுமதியும் ஆதரவும் கிடைத்தன, மற்றவர்க்குத் தடையுத்தரவு பிறந்தது. தெய்வத்திடம் இத்தகைய முரண்பாடு இருப்பானேன்?

பதில்: இது மிகப்பொருத்தமான கேள்வி. ஆத்ம சாதகர்களுடைய சிந்தனைக்குரிய விஷயம் ஆகும் இது. கோயில் கட்டுவிப்பதைப் பற்றிய கோட்பாட்டை முதலில் ஆராய்வோம். பக்தர்கள் பலர் ஆலயம் எடுப்பதை ஆத்ம சாதனமாக மேற்கொண்டிருக்கின்றனர். அதை முன்னிட்டு அவர்களுக்கு இடுக்கண் பல நிகழ்வனவாயின. அவ் இடுக்கண்களை மீளவும் சாதனத்தில் முன்னேற்றமடையவும் அருளுக்குப் பாத்திரமாகவும் பக்தர்கள் செய்திருக்கின்றனர். அரியபெரிய ஆலயங்கள் நாடெங்கும் நிறைந்திருக்கின்றன. எண்ணிக்கையிலடங்காத அன்பர்கள் அத்திருப்பணிகளுள் ஈடுபடலாயினர். இப்பொழுதும்

ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எதிர்காலத்திலும் அங்ஙனம் செய்வர். ஆயினும் இந்த ஆலயங்களெல்லாம் தெய்வத்துக்குரிய உண்மையான ஆலயங்களாகமாட்டா. பெயரளவில் மட்டுமே அவைகள் ஆலயங்களாக இலங்கி வருகின்றன. அப்படி அவைகள் இலங்குவதும் அவசியமே. அதற்கிடையில் ஆலயத் தத்துவத்தைப் பற்றிய உண்மையை மக்கள் அறிந்திருப்பது அவசியம். அகிலாண்டமும் இறைவனுக்குரிய ஆலயமாகிறது. அகிலாண்டத்தை மாந்தர் அமைக்க முடியாது. அது இறைவனுடைய சிருஷ்டி. உண்மையில் இறைவனுடைய சிருஷ்டியே இறைவனுக்குப் பொருத்தமான ஆலயமாகிறது. அதற்கு நிகரான ஆலயத்தை அமைக்க மக்களுக்கு இயலாது. இனி அண்டத்திலிருப்பது பிண்டத்திலுமிருக்கிறது. மானுட சரீரம் பிண்டம் எனப்படுகிறது. தான் படைத்துள்ள சரீரத்தைத் தேவாலயமாகக் கருத மனிதன் கற்றுக் கொள்ளுவானாகில் அது தலைசிறந்த பாடமாகிறது. ஆக, இறைவனைப் போற்றுதற்கு இயற்கை என்னும் ஆலயமும், யாக்கை என்னும் ஆலயமும் யாண்டும் மனிதனுடைய கைவசத்தில் இருக்கின்றன. அவைகள் வாயிலாக வழுத்துவதே மேலான வழிபாடு ஆகிறது. மற்று, கட்டுவிக்கப் பட்ட ஆலயங்கள் வாயிலாகவும் இறைவனை வழுத்துவது முறை. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஆன்றோர் வாக்கு.

திருவாதவூரர் திருப்பெருந்துறையில் தேவாலயம் எடுக்கத் துணிந்தார். தாம் கொண்டுவந்த பணம் பாண்டியனுக்கு உரியது என்பதை அவர் மறந்தார். பின்பு அது ஞாபகப்படுத்தப் பட்டபொழுது தம் செயலைக் குறித்து அவர் வருந்தினார். தெய்வத்திடம் அவர் விண்ணப்பித்தார். தெய்வத்தின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது. ஆயினும் சில இன்னல்களுக்கு வாதவூரர் ஆளாயினார். பின்பு இறைவன் வாதவூரரை ஆட் கொண்டதுபோன்று பாண்டியனையும் ஒருவாறு ஆட்கொண் டார். செல்வம் தனக்குரியது என்று எண்ணிய பாண்டியன் செல்வமனைத்தும் சிவனார்க்குரியது என்று அறிந்துகொண்டது பெரிய பாடமாகும். ஆதலால் பாண்டியனையும் இணைத்து ஆட்கொள்ளுதற்பொருட்டே ஆலயம் கட்டுவிப்பதற்குச் சிவனாருடைய சம்மதம் வாதவூரருக்கு வாய்த்தது.

பக்தர்கள் எல்லாருக்கும் ஒரேவிதமான ஆத்மசாதனம் வந்தமைகிறதென்று நாம் எண்ணலாகாது. சாதனங்கள் பலப்பல பாங்குடையவைகளாக இருக்கின்றன. சூழ்நிலைக்கு ஏற்ற பிரகாரம் சாதனம் மாறியமைகிறது. பக்தனுடைய பாங்குக்கு ஏற்றவாறும் சாதனம் மாறியமைகிறது.

விவேகானந்தருக்கு வாய்த்த ஆயுள் நாற்பது ஆண்டுகளே. நாற்பது ஆண்டுகள் நிறைவேறுவதற்கு முன்பே உலகெங்கும் பாரமார்த்திகப் பேரியக்கத்தைத் துவக்கி வைக்கும் பொறுப்பு தெய்வாதீனமாக விவேகானந்தருக்கு ஏற்பட்டிருந்தது. அல்லும் பகலும் ஓய்வின்றி அதன் பொருட்டே அவர் உழைத்து வந்தார். காஷ்மீரத்திலே க்ஷீரபவானி அம்பிகையின் ஆலயம் பாழடைந்து கிடந்ததை அவர் பார்த்தார். படையெடுத்து வந்திருந்த பிற மதஸ்தர்களும் ஒருவாறு அதற்குக் காரணமாயினர். அதை முன்னிட்டே விவேகானந்தர் உள்ளத்தில் அத்தகைய எழுச்சியுண்டாயிற்று. ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு படையெடுத்து வருவதும், அதைத் தோற்கடிப்பதும் உலக நிகழ்ச்சிகளாகும். இறைவனுடைய பெரிய திட்டத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கும் இடமுண்டு. மறைமுகமாக இவைகள் வாயிலாக நலன் வாய்ப்பதும் உண்டு. அதைப்பற்றிச் சுவாமி விவேகானந்தர் சிந்திக்கவில்லை. ஆலயத்தைப் புதுப்பிப்பது ஒன்றுதான் அவர் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியாகும். எதிரிகளாக வருபவர்களும் அம்பிகையின் குழந்தைகளே என்னும் எண்ணம் அவர் உள்ளத்தில் அப்பொழுது எழவில்லை. இந்து மதத்துக்கு இடையூறு செய்த எதிரிகளைப்பற்றிய எண்ணமே அவர் உள்ளத்தில் எழுந்தது. யாரை எதிரிகள் என்று சுவாமி விவேகானந்தர் எண்ணினாரோ அவர்களும் உண்மையில் அம்பிகையின் குழந்தைகளாம். அக்கோட்பாட்டை முன்னிட்டே "என்னைக் காப்பவன் நீயா? அல்லது உன்னைக் காப்பவள் நானா?" என்னும் கேள்வியை அன்னை பராசக்தி சுவாமி விவேகானந்தர் உள்ளத்தில் கிளப்பினாள். அதன் வாயிலாக அவர் கற்கவேண்டிய பெரிய பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

அருள்துறையில் வெளிப்படையாக விவேகானந்தர் தொண்டாற்றியது ஒன்பது ஆண்டுகளிலேயாம். அந்த ஒன்பது

ஆண்டுகளில் அவர் கீழ்நாடு மேல்நாடு ஆகிய பூமியில் இரு பகுதிகளிலும் தெய்வீக இயக்கத்தைத் துவக்கி வைக்கலானார். அதற்கேற்ற மக்களை ஆயத்தப்படுத்துவதே அவருக்கென்று அமைந்த பணிவிடையாயிற்று. நடமாடும் கோயில்களாகவுள்ள நன்மக்களை ஆயத்தப்படுத்துவது அவர் புரிந்த இறைபணி யாகும். ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு நிதிதிரட்டிக் கற்கோயில் எழுப்புதற்கு வந்தவர் அல்லர் சுவாமி விவேகானந்தர். நல்லார் உள்ளத்தில் தெய்வீகப் பேரியக்கத்தைக் கிளப்பி வைத்தது, தெய்வாதீனமாக அவர்க்கேற்பட்ட திருப்பணியாகும். ஆதலால் ஒரு சான்றோருடைய உலகக் கிருத்தியங்களை மற்றோர் சான்றோருடைய உலகக் கிருத்தியத்துடன் சீர்தூக்குவது எளிதன்று. அந்தந்தக் காலங்களில் நன்மக்கள் வாயிலாக இறைவன் காலத்துக்கேற்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறான்.

பக்தியின் உச்சநிலை திருவாதவூராரின் வாயிலாக உலகுக்குக் கிட்டியது. அதற்கேற்ற சூழ்நிலையும் அப்பொழுது தானாக அமைந்தது. திருக்கோயில் கட்டுவிப்பது அதற்கு முகாமையா யிற்று. தாம் செய்தது குற்றமாவென்று திருவாதவூரர் சில வேளைகளில் அஞ்சினார். அவர் செய்ததில் குற்றமொன்றும் இல்லையென்று இறைவன் அவருக்குக் காட்டியருளினார். ஆயினும் அவர் சிறைத் தண்டனைக்கு ஆளானார். தண்டனையோ அவருடைய பக்தியை மேலும் வளர்த்தது. உலகத்தவர் காட்சியில் வேதனையாகவும் சோதனையாகவும் தென்பட்ட சூழ்நிலையானது பக்தியைப் பிரேமை பக்தியாக மாற்றி யமைத்தது. "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே?" என்னும் பாரமார்த்திகப் பெருநிலையை அடைவதற்குக் கோயில் கட்டுவது முகாமையாயிற்று. அதற்கு நிகரான பேறு இல்லை.

உலகில் பல நாடுகள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளுகிற இக்காலத்தில் சுவாமி விவேகானந்தர் வந்தார். சமயங்களில் சமரசத்தைக் காட்டுவது அவருக்கு ஏற்பட்ட இறைபணியாகும். விரைவில் அவர் அதை முடிக்க வேண்டி யிருந்தது. அதிலேயே ஈடுபட்டிருக்கும்படி திருவருள் அவரைத் தூண்டியது. அவரும் அதை இனிது நிறைவேற்றி இருக்கிறார்.

இருவர்க்கு இரண்டுவித இறைபணிகள். ஆதலால் முரண்பாடு ஏதும் கடவுள் திட்டத்தில் இல்லை.

கேள்வி: *(328)* கடவுள் உயிர்வகைகளைப் படைக்கிறார்; பின்பு துடைத்துத் தள்ளுகிறார். மனிதன் கொலை செய்தால் அவனை ஏன் ஒதுக்கி வைக்கிறோம்? அருள் கூர்ந்து விளக்க வேண்டுகிறேன்.

பதில்: உயிர் வகைகளைப் படைப்பதிலும், துடைத்துத் தள்ளுவதிலும் பரமனுடைய திட்டம் இனிது நிறைவேறுகிறது. உயிர்வகைகளைப் படிப்படியாக மேல்நிலைக்குக் கொண்டு வருவது பரமனுடைய திட்டம். எந்த ஜீவனை, எந்தச் சூழ்நிலையில், எப்பொழுது பிறப்பித்தால் அந்த ஜீவனுக்கு முன்னேற்றத்துக்கு உதவி அமையுமோ, அந்தச் சூழ்நிலையிலும், காலத்திலும் அவனை அவர் தோற்றுவிக்கிறார். சில ஜீவர்கள் பிறந்த உடனே செத்துப்போவதும் உண்டு. அந்நிகழ்ச்சிகள் யாவும் அந்த ஜீவனுடைய வினைப்பயனுக்கேற்றவாறு நிகழ்கின்றன. இறைவனுடைய பெரியதிட்டமும், ஜீவனுடைய வினைப்பயனும் ஒன்றோடொன்று முரண்படுவதில்லை. ஜீவனுடைய வினைப்பயனை அப்போதைக்கப்போது விளைவிக்கின்ற பாங்கில் இறைவனுடைய படைப்பு அமைகிறது. எடுத்துள்ள ஒரு சரீரத்தின் வாயிலாக முடிக்கவேண்டிய கர்மங்கள் பூர்த்தியானால் அப்பிறவி முற்றுப்பெறுகிறது. அதை நாம் மரணம் என்கிறோம். பொருத்தமான மற்றோர் உடல் எடுக்க அந்த ஜீவன் அனுப்பப்படுகிறது. ஜீவர்களுடைய முக்கால நிலைகளையும் இறைவன் அறிகிறார். ஆதலால் ஒவ்வொரு ஜீவனுக்கும் பொருத்தமான பிறவிகளும், மரணங்களும் அமைந்துகொண்டிருக்கின்றன. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய மூன்று கிருத்தியங்களும் இறைவனுக்கு உரியவைகள். அக்கிருத்தியங்கள் ஜீவாத்மாக்களின் கர்மத்துக் கேற்றவாறே நிகழ்ந்து வருகின்றன.

மனிதனுக்குத் தன்னுடைய பூர்வ வரலாறும் எதிர்கால நிலையும் தெரியாது. நிகழ்காலத்தை ஒரு சிறிது அறிகிறான். அத்தகைய மனிதன் தனக்கு வாய்த்துள்ள வாழ்வை நன்கு பயன்படுத்த மட்டும் கடமைப்பட்டிருக்கிறான். ஜீவிதம் தனக்குப்

பயன்படுவதுபோன்று, மற்றவர்களுக்கும் பயன்படும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவனுக்கு முன்னேற்றம் விரைவில் வாய்க்கிறது. தனக்குப் புறம்பான வேறு ஜீவர்களைச் சிருஷ்டிக்கும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை. ஆதலால் மற்றவர் களைக் கொலை செய்வதற்கும் அவனுக்கு அனுமதியில்லை. கொலை செய்தால் அவனைக் கொலைபாதகன் என்று சமுதா யம் நிராகரிக்கிறது. கொலை பாபச்செயலாகக் கருதப்படுகிறது. அதன் விளைவாக ஜீவிதம் கீழ்மையடைகிறது. அமைதியான சமுதாய வாழ்க்கை நடந்துகொண்டிருக்கிறபொழுது மனிதனை மனிதன் கொலை செய்வதற்குச் சமுதாயச் சட்டதிட்டம் அனுமதி கொடுப்பதில்லை. இறைவனுடைய திட்டத்திலும் அதற்கு இடமில்லை. யுத்த நிகழ்ச்சி இக்கோட்பாட்டில் அடங்காது. ஒரு சமுதாயம், மற்றொரு சமுதாயத்தின் மீது படையெடுத்து வந்தால், நாட்டையும் சமுதாயத்தையும் பாதுகாத்தல் பொருட்டு எதிரியின் சேனைகளை வேண்டியவாறு அழித்துத்தள்ளலாம். அப்படிப் போரில் பலபேரை அழிப்பது வீரச்செயல் என அங்கீகரிக்கப்படுகிறது. உலக வாழ்க்கையில் போராட்டத்தில் பகைவனையழிக்க அனுமதியுண்டு. அமைதியான வாழ்க்கையில் ஒருவனை ஒருவன் கொலை செய்வதற்கு அனுமதி யில்லை. ஆதலால் இறைவன் புரிகிற சம்ஹாரத் தொழிலைத் தன் செயலாக மனிதன் ஏற்றுக்கொள்ளலாகாது. அப்படி ஏற்றுக்கொண்டால் அவன் கொலை பாதகன் ஆகிறான். உயிரை உண்டுபண்ண மனிதனுக்கு இயலாது. உயிரைக் கொல்ல மனிதனுக்கு முடிகிறது. ஆனால் முறைதவறி மனிதனை மனிதன் கொன்றால் அது பாபச்செயல் ஆகிறது. சமுதாயச் சட்டதிட்டமும் அதற்கேற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது. கர்மத்தின் மூலம் மனிதன் தன் வாழ்வை எடுக்கவும் கெடுக்கவும் செய்கிறான். எடுப்பதற்கேற்ற நல்ல கர்மத்தையே மனிதன் செய்யவேண்டும். கேட்டுக்கு ஏதுவாயுள்ள தீய கர்மத்தில் அவன் துணியலாகாது. துணிந்தால் அதற்கேற்ற தண்டனை அவனுக்கு வாய்க்கும். வாழ்வாங்கு வாழ மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். மற்றவர்களுக்கு உதவிபுரியவும் அவன் கடமைப்பட்டிருக்கிறான். ஆனால் மற்ற உயிர்களைத் துடைக்க அவனுக்கு அனுமதியில்லை.

கேள்வி: *(329)* இவ்வுலகமும், இவ்வுலகைச் சிருஷ்டிக்கின்ற செயலும் இறைவனுடைய விளையாட்டு என்று சொல்லப்படுகிறது. குணங்களை எல்லாம் கடந்து இருக்கின்ற இறைவன் இவ்விளையாட்டை ஏன் செய்ய வேண்டும்? இவ்வுலகைச் சிருஷ்டிப்பதும், பிறகு இதை அழிப்பதும் எதற்காக? மேலும் சிவன் யாண்டும் யோக நிஷ்டையில் இருப்பதாகக் கூறுகிறோம். அவர் அவ்வாறு இருந்திருப்பாரானால் சிருஷ்டி போன்ற அவருடைய லீலைக்கு இடம் எங்கே?

பதில்: கடலின் மேற்பரப்பு அலைகளோடு கூடியதாக இருக்கும். கடலின் ஆழ்பகுதி அமைதியோடு கூடியதாக இருக்கிறது. அலையோடு கூடிய மேற்பகுதியும் அமைதியோடு கூடிய ஆழ்பகுதியும் சேர்ந்துதான் கடலாகிறது. பரம்பொருளில் குணங்களோடு கூடிய நிலையைச் சகுணப் பிரம்மம் என்றும், குணாதீதத்தில் இருக்கின்ற பகுதியை நிர்க்குணப் பிரம்மம் என்றும் அழைக்கின்றோம். சகுணப் பிரம்மம் லீலையைச் செய்து வருகிறது. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்கின்ற ஐந்தொழில்களின் மூலம் சகுணப் பிரம்மம் தம் லீலையைச் செய்து வருகிறார். அப்படி அவர் தம் லீலையைச் செய்வதன் மூலம் உயிர்களைப் பக்குவப் படுத்திக் குணாதீதத்திலிருக்கிற நிர்க்குணப் பிரம்மத்தோடு சேர்க்கின்றார். உயிர்களைப் பக்குவப்படுத்தித் தம்மயம் ஆக்குவதற்கே கடவுள் இந்த லீலையைச் செய்துவருகிறார். இந்த லீலைக்கு ஒரு முடிவு இல்லை.

குணாதீதத்திலிருக்கின்ற நிர்க்குணப் பிரம்மம் யோகாரூட நிலையில் யாண்டும் ஆனந்தமாய் இருக்கின்றார். அது பரிபூரண நிலை. ஆங்கு லீலைக்கு இடமில்லை. கடலின் ஆழ்பகுதி அமைதியாக இருப்பதுபோன்று நிர்க்குணப் பிரம்மம் யாண்டும் யோகநிஷ்டையில் பேரானந்தப் பெருநிலையில் சாந்த சொரூபியாக இருக்கிறார். கர்மத்துக்கு வசப்பட்டிருப்பவர் களுக்குச் சகுணப் பிரம்மத்தின் லீலை அவசியமாகிறது. கர்மாதீதத்துக்குச் சென்றவர்களுக்குப் பிரம்மத்தின் லீலை அவசியமில்லை. அவர்கள் நிர்க்குணப் பிரம்மத்தில் லயமாகி விடுகின்றனர்.

கேள்வி: *(330)* நலன் செய்ய விரும்புகிறவர்களுக்குச் செய்வதற்கேற்ற வசதியில்லை. இறைவன் இந்த நெருக்கடியில் நல்லவர்களை ஏன் வைத்தார்?

பதில்: நலன் செய்ய விரும்புகின்றவர்கள் இன்னதுதான் நலன் என்று கற்பனை பண்ணிக்கொள்கிறார்கள். தங்கள் கற்பனைக்கேற்ற வாய்ப்பு அமையாவிட்டால் இறைவனுடைய திட்டத்தைக் குறை கூறுகிறார்கள். உண்மையாகப் ப்ரநலசேவைக்குப் பாடுபட முயலுகிறவர்களுக்கு எண்ணிறந்த வாய்ப்புக்கள் தினந்தோறும் வந்து அமைந்துகொண்டே இருக்கின்றன. விருப்புக்கோ, வெறுப்புக்கோ அடிமைப்பட்டிருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு விளங்குவதில்லை.

"அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்னும் கோட்பாட்டின்படி பிறர்க்குத் தேவையாயிருக்கும் பணிவிடைகளை அப்போதைக்கப்போது தொண்டன் ஒருவன் நிறைவேற்றுகிறான். சுவாசிப்பது எப்படித் தானாக நிறைவேறுகிறதோ பணிவிடையும் அவ்வளவு சுலபமாக நிறைவேறவல்லதாம். தெய்வம் இதற்குத் தடைபோடுவதில்லை. தற்பெருமையும், வீண் ஆடம்பரமும், விளம்பரமுமே பணிவிடைக்கு இடைஞ்சலாகக் குறுக்கிடுகின்றன.

தொண்டன் ஒருவனுக்குப் பணிவிடையில் பெரியது சிறியது என்றும், தன் அந்தஸ்துக்குத் தக்கது தகாதது என்றும் பாகுபாடுகள் இல்லை. கடவுளுக்குப் பக்தராக அமைகிறவர்கள் மக்களுக்குக் காயத்தாலும், வாக்காலும், எண்ணத்தாலும் யாண்டும் பணிவிடை செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். பஞ்ச பூதங்களாயிருந்து சிவனார் தோட்டி வேலை செய்வதற்கு நிகராகத் தொண்டர்களும் எல்லாவிதப் பணிவிடைகளையும் ஆண்டவனுக்குரிய ஆராதனையாகக் கருதுகிறார்கள். இத்தகைய சீரிய மனப்பான்மை வாய்க்கப்பெற்றிருக்கும் தொண்டர்கள் பணிவிடையை நாடி இங்குமங்கும் ஓடுவதில்லை. அன்னவர்களுக்குப் பணிவிடை செய்யச் சந்தர்ப்பம் வாய்ப்பதும் வாய்க்காதிருப்பதும் ஈசனுடைய திருவுளப் பாங்கை ஒட்டியவைகளாம். "நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்னும் எண்ணத்தில் நல்ல தொண்டன் ஊறி இருக்கிறான். அன்னவர்கள் மூலம் நிச்சயமாக அரும்பெரும்

செயல்கள் இறைவனருளால் நிறைவேறுகின்றன. நல்ல தொண்டனாவது தனக்கு வாய்த்த பாக்கியம் என்று பக்தன் யாண்டும் அன்பர் பணிவிடையில் ஈடுபட ஆவலோடு இருக்கிறான்.

கேள்வி: *(331)* 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதால் உலகில் நடைபெறும் தீய செயல்களுக்கும் இறைவன்தான் காரணம் அல்லவா?

பதில்: உலகிலே எல்லாவிதமான நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. அவைகளில் சில நலம் தருவனவாகவும், வேறு சில தீங்கை விளைவிப்பனவாகவும் இருக்கின்றன. அவரவர் செயலுக்கு அவரவரே பொறுப்பாளி என்னும் கோட்பாடு ஒரு பக்கம். உலகெங்கும் உள்ள செயல்களனைத்தும் ஈசனுடைய ஆணையால் நிகழ்கின்றன என்னும் கோட்பாடு மற்றொரு பக்கம். இவை இரண்டுக்குமிடையில் முரண்பாடு இல்லை. உலகெங்குமுள்ள செயல்களனைத்தும் ஈசனுடைய பெருந்திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. சிருஷ்டியில் நலனும், கேடும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. உயிர்களின் முன்னேற்றத்திற்கு நல்ல செயல்கள் ஒருவிதத்தில் உதவுகின்றன. கெட்ட செயல்கள் இன்னொரு விதத்தில் உதவுகின்றன. பாதையில் ஒருவன் நடந்துசெல்லுகிறான். ஏதேதோ பூச்சி புழுக்களைக் காலால் மிதித்துக்கொண்டு போகிறான். அவைகளில் பல மிதியுண்டு சாகின்றன. இன்னும் பல மிதியுண்டு வருந்திக்கிடந்து பிறகு தெளிவடைகின்றன. மற்றும் சில உயிர்கள் மிதியுண்டும் துன்பப்படுவதில்லை. தன் போக்கில் போகிற மனிதன் பாம்பு ஒன்றை மிதித்தான். அது அவனைத் தீண்டியது. விஷம் உடலெங்கும் பரவி அவன் மாண்டுபோனான். விஷப்பாம்பைக் கடவுள் ஏன் படைத்தார்? என்னும் கேள்வி எழுகிறது. மனிதனைக் கடவுள் ஏன் படைத்தார்? என்னும் கேள்வி எழுவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் மனிதன் தான் இன்புற்று இவ்வுலகில் வாழ்ந்திருக்க வந்தவன் என்னும் கொள்கையில் அவன் ஊறியிருக்கிறான். தான் மற்ற உயிர்களுக்குச் செய்கின்ற தீங்கைப்பற்றி அவன் எண்ணிப் பார்ப்பதில்லை. மற்ற உயிர்கள் தனக்கு ஏன் தீங்கை விளைவித்தன

என்னும் கேள்வியை அவன் கிளப்புகிறான். தனக்குத் தீங்கு செய்கிற உயிர்வகைகளைக் கடவுள் படைத்திருக்கலாகாது என்கின்ற முடிவுக்கும் அவன் வருகின்றான். இத்தகைய முடிவுக்கு அடிப்படைக் காரணம் மனிதன் படைத்துள்ள சுயநலப் பற்றாம். கடவுளுடைய சிருஷ்டியில் எல்லாவிதமான ஜீவ ஜந்துக்களும் இருக்கின்றன. பரஸ்பரம் உதவிபுரிந்துகொள்ளும் ஜந்துக்கள் இருக்கின்றன. பரஸ்பரம் தீங்கை விளைவித்துக் கொள்ளும் ஜந்துக்களும் இருக்கின்றன. ஆதலால் உயிர்வகைகளுக்கு நலன்களும் கேடுகளும் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கின்றன. சுருங்கச்சொல்லின் நலனும், கேடும் சேர்ந்தே அமையப்பெற்றது இவ்வுலக வாழ்வு. உயிர் வகைகள் நலனை நாடியும், கேட்டைத் தவிர்த்தும் வாழ்ந்து வருகின்றன. இந்த இரண்டுவிதமான பயிற்சிகளும் எல்லா உயிர்களுக்கும் தேவையானவைகளாக அமைந்திருக்கின்றன. ஆபத்துக்களினின்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதல் உயிர்களனைத்துக்கும் இன்றியமையாத பயிற்சி ஆகிறது. அப்படியிருந்தும் ஆபத்துக்களில் பல உயிர்கள் அகப்பட்டு மடிந்து போகவும் செய்கின்றன. அப்படி மடிந்து போவதும் ஒருவிதப் பயிற்சியாகிறது. அடுத்த பிறவியில் அத்தகைய ஆபத்தினின்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒவ்வோர் உயிரும் முயன்று வருகிறது. ஆகவே இறைவனுடைய சிருஷ்டியிலுள்ள நலன்களும் கேடுகளும் ஜீவாத்மாக்களைப் பண்படுத்துதற்கு நல்ல பாங்கில் பயன்பட்டு வருகின்றன. சிருஷ்டியின் அமைப்பு முழுதையும் தொகுத்து ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு உண்மை ஒன்று நன்கு விளங்குகிறது. ஜீவாத்மாக்களைப் பக்குவப்படுத்துவதற்கு நலன் ஒரு பாங்கில் பயன்படுகிறது; தீங்கு மற்றொரு பாங்கில் பயன்படுகிறது. இக்கோட்பாட்டின்படி சிருஷ்டியில் என்னென்ன பாங்குகளெல்லாம் இடம்பெற்று இருக்கின்றனவோ அவை யாவும் உயிர்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவைகளாம். இவை யாவையும் அமைத்து வைத்துள்ள ஈசன் இச்செயல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக இருக்கிறார். செயல்களில் ஈடுபட்டுள்ள ஜீவர்களோ வாழ்க்கைப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். ஆதலால் நலன் கேடு ஆகிய இரண்டும் சேர்ந்து அமைந்துள்ள ஈசனுடைய சிருஷ்டி அற்புதமானதாம்.

கேள்வி: *(332)* கடவுளின் தூண்டுதலால் செயல்கள் நிகழ்கின்றன என்றால் கடவுள் கேடுசெய்யும்படி ஏன் தூண்டுகிறார்?

பதில்: ஜட நிலையிலிருந்து சேதன நிலைக்கு உயிர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அதாவது அறிவற்ற, உணர்ச்சி யற்ற நிலையிலிருந்து நுண்ணறிவும் நுண்ணுணர்வும் உடைய நிலைக்கு உயிர்கள் பரிணமித்துக் கொண்டிருக்கின்றன. அந்தந்த நிலையில் இருக்கின்ற உயிர்களுக்கு ஏற்ற தூண்டுதலை இறைவன் செய்து கொண்டிருக்கிறார். கல்லும், மண்ணும் அசைவற்ற நிலையில் இருக்கின்றன. அசைவிப்பதன் மூலம் இறைவன் அவைகளைத் தூண்டுகின்றார். அப்பொழுது அவைகள் தாவரங்களாகப் பரிணமிக்கின்றன. பிறகு ஒவ்வோர் இந்திரியங்களாக ஏற்படுத்தி இந்திரிய உணர்ச்சியின் மூலமாக உயிர்களைத் தூண்டி வருகிறார். மானுட நிலைக்கு வரும் பொழுது மனது என்னும் இந்திரியம் தோற்றத்துக்கு வருகிறது. மனதைத் தூண்டுவதன்மூலம் மனிதனை இறைவன் இயக்கி வருகின்றார்.

மனம் முக்குணங்களுக்கு வசப்பட்டிருக்கிறது. தமோகுணத்தில் மூழ்கியிருக்கின்ற மனது செயலுக்குத் தகுதியற்றதாக இருக்கிறது. அம்மனதின் இயல்புக்கேற்ற தூண்டுதலைக் கொடுத்து இறைவன் அதைச் செயல்படுத்துகின்றார். ஆசைக்கு வசப்பட்டு மனது பல விருத்திகளைத் தன்னிடத்து அடக்கி வைத்திருக் கிறது. தூண்டுதல் வரும்பொழுது மனோவிருத்திகளுக்கேற்ப மனிதன் செயல்படுகின்றான். நல்ல விருத்திகளாக இருந்தால் நற்செயல்களில் ஈடுபடுகின்றான். கெட்ட விருத்திகளாக இருந் தால் கெட்ட செயலில் ஈடுபடுகின்றான். நல்ல செயலில் ஈடுபடுகின்றவர்களுக்குப் பேரும் புகழும் வருகின்றன. அப்பேரிலும் புகழிலும் பற்றுவைத்து மனிதன் ஆணவ அகங் காரத்தை வளர்த்துக் கொள்கின்றான். ஆணவ அகங்காரத்தின் மூலம் துன்பத்துக்கு ஆளாகின்றான். ஆணவ அகங்காரம் துன்பத்துக்குக் காரணம் என்பதை அறிந்து அவற்றை ஒழிக்க முற்படுகின்றான். ஆணவ அகங்காரம் அகன்றவரிடத்துப் பிரம் மானந்தத்தையும், பேரறிவையும் அடையவேண்டும் என்ற தூண்டுதலை இறைவன் செய்கின்றார்.

கெட்ட விருத்திகள் உடையவர்கள் கெட்ட செயலில் ஈடுபடுகின்றார்கள். அதனால் அவர்கள் துன்பத்துக்கு ஆளாகின் றார்கள். துன்பத்திலிருந்து விலகவேண்டுமென்ற தூண்டுதல் அவர்களிடத்து உண்டாகிறது. அத்தூண்டுதலால் அவர்கள் தங்களிடத்திலுள்ள கெட்ட விருத்திகள் அழிவதற்கேற்ப அவர் களுக்கு நல்லதின்கண் தூண்டுதல் வருகிறது. கெட்டதைச் செய்பவன் துன்பத்துக்கு ஆளாகித் திருந்தி அமைகின்றான். நல்லதைச் செய்கின்றவன் பேருக்கும் புகழுக்கும் அடிமையாகித் திருந்தி அமைகின்றான். எனவே இறைவனுடைய தூண்டுதல் உயிர்களைத் திருத்தி அமைப்பதற்காகவே நிகழ்ந்து வருகிறது. இறைவனுடைய தூண்டுதல் மூலம் கெட்ட வழியில் சென்றாலும் நல்ல வழியில் சென்றாலும் திருந்தி அமைதல் என்னும் செயல் நிகழ்கிறது.

செயல்புரியாது யாரும் முன்னேறமுடியாது. மாணாக்கன் ஒருவன் செயலற்றுச் சும்மா உட்கார்ந்து இருக்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அப்படிச் செயலற்று இருப்பவனுக்கு ஆசிரியர் பாடம் புகட்ட முடியாது. அவனைச் செயலில் ஈடு படுத்துவதற்கு ஆசிரியர் தவறாகவாவது கணக்குப் போடும்படி கூறுகிறார். கணக்குப் போடாதவன் கணக்கைத் தெரிந்து கொள்ள முடியாது. கணக்கைத் தவறுதலாகப் போடுபவனைத் திருத்தி அமைக்கலாம்; அவன் திருந்துவதற்கு வாய்ப்பு உண்டு.

செயலற்று ஜடம் போன்று இருந்த ஒருவனைத் திருடியாவது பழகு என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். திருடுவதன் மூலம் செயலில் இறங்கினால் அவன் திருந்தி அமைவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதியே அங்ஙனம் கூறினார். மனபரிபாகம் அடைந்திருப்பதற்கேற்ப இறைவன் தூண்டுதல் நம்மை மேலாம் செயலில் ஈடுபடுத்துகிறது. பரிபாகம் அடையாது காமத்துக்கும், காசு ஆசைக்கும் உட்பட்டுள்ள மனது இறைவன் தூண்டுதலால் கெட்டவழியில் சென்று திருந்தி அமைகிறது. எனவே இறைவன் தூண்டுதலால் செயல் நிகழ்கிறது என்பது உண்மையானாலும் நம் மனதிலுள்ள உலக ஆசை நம்மைக் கேட்டின்கண் இழுத்துச்செல்கிறது. கேடு நிகழ்வதற்கு நம்மிடத்திலுள்ள பொல்லாத ஆசையே காரணமாகும்.

கேள்வி: *(333)* உலகைக் கடவுள் படைத்தார். அப்படியானால் அவர் ஏன் தீமையையும் படைத்தார்?

பதில்: உலகம் தன்னளவில் நல்லதுமன்று; கெட்டதுமன்று. மனிதனுடைய மனப்பான்மைக்கேற்ப அது நல்லதாகவும் கெட்டதாகவும் காட்சி கொடுக்கிறது. உலகைப் படைத்த கடவுள் அதற்குத் தேவையாயிருக்கும் மழையையும் படைத்திருக்கிறார். பின்பு மழை பெய்கின்றபொழுது அதைக் குறித்து ஒரு சாரார் மகிழ்வுறுகின்றனர். மற்றொரு சாரார் தாங்கள் எடுத்துக் கொண்ட காரியத்துக்கு இடைஞ்சலாக இந்த மழை வந்து கெடுத்துவிட்டதே என்று வருந்துகின்றனர். மக்களைப் படைத்துள்ள தெய்வம் அவர்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத பசியையும் படைத்திருக்கின்றார். வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் மனிதன் பசிப்பிணிக்கு உட்பட்டவனாகின்றான். மக்களைப் படைத்த கடவுள் ஏன் இந்தப் பசியைப் படைத்தார் என்கின்ற கேள்வியைக் கிளப்புதல் பொருளற்றது. பசி இல்லாவிட்டால் மனிதனுக்கு வளர்ச்சியோ முன்னேற்றமோ இல்லை. அதே பாங்கில் தீமை எனத் தென்படுகின்றவைகளில் நலனும் ஒரு பக்கம் அமைந்திருப்பது தேற்றம். இதை எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும். எனவே, கடவுள் தோற்றுவித்துள்ள இப்பிரபஞ்சம் முற்றிலும் பொருத்தமானதே. இதை நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுதல் நம் அனைவரின் கடமையாகும்.

கேள்வி: *(334)* இறைவனை நம்பாத நாஸ்திகர்களை இறைவன் ஏன் படைத்துள்ளார்?

பதில்: இயற்கைக்குப் புறம்பாகக் கடவுள் என்னும் பொருள் ஒன்று இல்லை என்பது ஒரு கொள்கை. இயற்கையும், கடவுளின் திட்டமும் ஒன்று என்பது மற்றொரு கொள்கை. இயற்கையே அனைத்துக்கும் விளக்கம் தருகிறது; கடவுள் என்னும் பொருள் தேவையில்லை என்பது மூன்றாவது கொள்கை. இங்ஙனம் கருத்து வேறுபாடு இருப்பதுவே மக்களின் பாங்காம். கிச்சலிப்பழம் ஒன்று நன்கு சுவைக்கின்றது. மற்றொன்று மிகக் கசப்புடையதாயிருக்கின்றது. இது இயற்கையின் பாங்கு. கடவுள் ஏன் இப்படிப் படைத்தார்

என்று கேட்கலாகாது. பிறவிக் குருடனுக்குச் சூரியப் பிரகாசத்தைப் பற்றிய அனுபவமில்லை. ஆதலால் அதை மறுப்பதால் அவன் பிழை செய்தவன் ஆகமாட்டான். அதே பாங்கில் நாஸ்திகன் என்பான் மெய்ப்பொருளைப்பற்றித் தான் படைத்துள்ள அறிவைத் தன் போக்கில் வெளிப்படுத்துகின்றான். இங்ஙனம் ஆஸ்திகர்களும், நாஸ்திகர்களும் யாண்டுமே சமுதாயத்தில் இருந்து வருகிறார்கள். ஓர் உத்தியோகத்துக்குப் பொருந்தாதவனை அதில் எடுத்துக்கொள்ளுவதில்லை. கடவுள் நம்பிக்கை அத்தகையதன்று. அவரவர் அறிவுக்கேற்ப மெய்ப் பொருளுக்கு விளக்கம் கொள்ள எல்லார்க்கும் உரிமை உண்டு. அவ்வுரிமை நாஸ்திகர்களுக்கும் உண்டு. அறிவு வளர்ச்சியில் ஒருபடித்தரத்தில் இருப்பவனை நாஸ்திகன் என்கிறோம். உண்மையில் அவன் நாஸ்திகன் அல்லன்.

கேள்வி: *(335)* "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" அதாவது செயல்கள் அனைத்தும் கடவுளுக்கே உரியவை களாம். உண்மை அப்படியிருக்க, "கடவுள் இல்லை" என்று கூறும் கூட்டத்தை அவர் ஏன் படைத்தார்? பொருந்தாத செயலுக்குத் தம் பெருந்திட்டத்தில் ஏன் இடம்கொடுத்தார்?

பதில்: சிருஷ்டி முழுதும் கடவுளிடத்திருந்து வந்தவைகள். அக்கோட்பாட்டைத்தான் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று நாம் இயம்புகிறோம். எல்லாம் அவருடைய செயலாயிருக் கையில் கெட்ட செயல்கள் அவரிடத்திருந்து ஏன் உருவெடுத்து வரவேண்டும் என்பது இக்கேள்வியில் அடங்கியுள்ள கருத்து ஆகும். சிருஷ்டி என்பதற்குப் பொருள் பேதத்தை உண்டு பண்ணுவது என்பதாம். வடிவத்தில் பேதம் இருக்கவேண்டும்; செயலிலும் பேதம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சிருஷ்டி நன்கு விளக்கப்பெறுகிறது. கல்லாய், மரமாய், புழுபூச்சியாய், பறவையாய், விலங்காய், மக்களாய் இருப்பது ஜீவர்களுக்கிடை யில் உள்ள பேதமாம். கல்லில் நலன் தருபவைகள் உண்டு; விஷம் நிறைந்தவைகளாய் இருப்பதும் உண்டு. மரம், செடி, கொடிகளுள் பயன்படுத்தத் தக்கவைகள் உண்டு; உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடியவைகளும் உண்டு. அதே கோட்பாடு ஜங்கமமாயுள்ள உயிர்களிடத்திலும் இருக்கிறது.

சிருஷ்டியிலுள்ள தீமைகள் மறைமுகமாகப் பயன்படுகின்றன. தீமைகளினின்று தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவது ஒருவித வாழ்க்கைப் பயிற்சி. அப்பயிற்சி பெறாதவர்கள் வாழ்க்கையின் கோட்பாடு முழுவதையும் அறிந்தவர்கள் அல்லர். இனி, செயலில் நல்ல செயல், கெட்ட செயல் என்னும் பேதம் இருக்கிறது. கேட்டுடன் சீர்தூக்குகிறபொழுதே நலத்தின் மேன்மை நன்கு மிளிர்கிறது. அடுத்தபடியாகக் கொள்கையில் பேதம் இருக்கிறது. கடவுள் இருக்கிறார் என்று எண்ணுவது நல்ல கொள்கை. கடவுள் இல்லை என்று கருதுவது நல்லார்க்கு ஒவ்வாத கொள்கை. ஆயினும் இவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கிறபொழுதே அறிவு தெளிவடைகிறது. அறிவைத் தெளிவுபடுத்துவதற்கு ஒத்துள்ள கொள்கை, ஒவ்வாத கொள்கை ஆகிய இரண்டும் அவசியமாகின்றன. தந்தையைப் போற்றுபவன் இருக்கிறான். தந்தையைத் தூற்றுபவனும் இருக்கிறான். தூற்றுதலோடு சீர்தூக்குகிறபொழுதே, போற்றுதலின் சிறப்பு நன்கு வெளியாகிறது. கடவுள் இல்லை என்னும் கொள்கையை முறையாக நிராகரிக்கிறபொழுதே கடவுள் நம்பிக்கையில் உள்ள உறுதிப்பாடு நன்கு நிரூபிக்கப்பெறுகிறது. ஆதலால் கடவுள் இல்லை என்னும் கொள்கையும் சிருஷ்டியில் இடம் பெற்றிருப்பது பொருத்தமானது.

கேள்வி: (336) **நல்லவனாக அமைவதும், கெட்டவனாக அமைவதும் முன் வினைப்பயன் எனவும், சூழ்நிலை காரணம் எனவும் சொல்லுகிறார்கள். கடவுள் ஏன் எல்லா ரையும் நல்லவர்களாகவும், எல்லார்க்கும் பொருத்தமான சூழ்நிலையையும் உண்டுபண்ணலாகாது?**

பதில்: மக்கள் எல்லாரும் பேரறிஞர்களாகப் பிறப்பெடுப் பார்களானால் பிறகு பள்ளிக்கூடம் அமைப்பதற்கு அவசிய மில்லை. அதே விதத்தில் மக்கள் எல்லாரும் நல்லவர்களாகப் பிறப்பெடுப்பார்களானால் சிருஷ்டிக்கு அவசியம் இல்லை. ஆனால் இயற்கையின் திட்டம் அத்தகையதன்று. இயற்கையின் அமைப்போ மேலும் திருத்தியமைப்பதற்கு இடமில்லாதபடி அவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது. இதுவே இறை வனுடைய மகிமையாம். இனி, ஒரே சூழ்நிலை ஒருவிதப்

பாங்குடையவனுக்கு அனுகூலமாகவும் மற்றொருவிதப் பாங்கு டையவனுக்குப் பிரதிகூலமாகவும் அமைகிறது. அவனவன் படைத்துள்ள மனப்பான்மைக்கும் பரிபாகத்திற்கும் ஏற்பச் சூழ்நிலைகளைச் சமாளிப்பது வாழ்க்கைப் பயிற்சியாம். ஜப்பான் தேசத்தில் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு மக்களுக்கு உபத்திரவம் மிக உண்டாகிறது. அதைச் சமாளிப்பது அந்நாட்டவர்கள் பெற்றுவருகிற பயிற்சியாம். பாலைவனப் பிரதேசங்களில் மழை கிடைப்பது அரிதிலும் அரிதாம். அச்சூழ்நிலையைச் சமாளித்து வாழ்க்கையில் முன்னேற்றமடைவது அப்பிரதேசத்தவர் பெற்றுவருகிற பயிற்சியாம். எனவே, பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் நலனும் கேடும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஆங்காங்கு அமைந்துள்ள கேட்டைச் சமாளிப்பதும் நலனைப் பயன்படுத்துவதும் வாழ்க்கையின் கூறுகளாம்.

பழவினைப்பயன் எதுவாகவிருப்பினும் அதை மூலதனமாக வைத்துக்கொண்டு மனிதன் எடுத்திருக்கும் இப்பிறப்பில் சரியாக முயன்று முன்னேற்றமடையக் கடமைப்பட்டிருக்கிறான். இதுவே இறைவன் அமைத்துள்ள திட்டமாம்.

கேள்வி: *(337)* மக்கள் தவறுதல் பண்ணக் கடவுள் ஏன் இடம் கொடுத்திருக்கிறார்?

பதில்: எதை நாம் தவறுதல் என்று எண்ணுகிறோமோ அது உண்மையில் தவறுதல் அன்று. ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கு உபாயங்கள் பல உள. ஒவ்வொரு உபா யத்தையும் கையாண்டு பார்ப்பதன் வாயிலாக மனிதன் பாடங் கள் பல கற்றுக்கொள்கிறான். நாடுகிற நோக்கம் ஒன்றை இன்ன பாங்கில் நிறைவேற்றவேண்டும், இதற்கு மாறாக இன்னின்ன பாங்குகளையெல்லாம் கையாளலாகாது என்னும் முடிவுக்கு மானுடன் ஒருவன் வருவானாகில் அது அவன் செய்துள்ள பல முயற்சிகளின் விளைவாம். உண்மையில் தவறுதல் என்று சொல்லப்படும் செயல் ஒவ்வொன்றும் ஒருவித முயற்சியாம். நடந்து போவதை மானுடன் ஒருவன் நகைப் புக்குரிய முறையில் செய்வானாகில் அதை நாம் தவறுதல் என்கிறோம். ஆனால் அதே செயலைக் குழந்தையொன்று கையாளுமாகில் அப்பொழுது நாம் அதைப் பாராட்டுகிறோம்.

இங்ஙனம் ஒருவர்க்குத் தவறுதலாகத் தென்படும் செயல் ஒன்று மற்றொருவர்க்கு இன்றியமையாத முயற்சி ஆகிறது. யந்திரங்களைக் கையாளும் காலமாக நவீனம் இருக்கிறது. யந்திர அமைப்பில் இக்காலம் வேண்டியவாறு முன்னேற்றமடைந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் பயன்படுத்தி வந்த யந்திரங்களை இக்காலத்தவர் பயன்படுத்தினால் அதைத் தவறு என்பேரம். ஆனால் அக்காலத்தில் அது தவறுதலாகக் கருதப்படவில்லை. இயற்கையின் நடைமுறையில் எல்லா விதமான முயற்சிகளும் எல்லாவிதமான அமைப்புகளும் இடம் பெற்று இருக்கின்றன. மேலான அமைப்போடு கீழான அமைப்பைச் சீர்தூக்குகிறபொழுது கீழானதைத் தவறு என்கின்றோம். உண்மையில் அது தன்னளவில் தவறுதல் ஆகாது. இங்ஙனம் இயற்கையின் நடைமுறையில் எல்லாவிதமான அமைப்புகளும் இடம்பெற்றுள்ளன. எதையும் தவறுதல் என நாம் இயம்பலாகாது. ஆக, கடவுளின் சிருஷ்டியில் தவறுதல் ஏதுமில்லை.

மானுட வாழ்க்கையில் தவறுதல் எனக் கருதப்படும் செயல் ஒன்று தவறுதலா அல்லது நேர்மையானதா என முடிவுகட்டுவது கடினமானது. சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். கைகேயியின் ஆணைக்கு உட்பட்டு இராமன் காட்டுக்குச் சென்றான். அப்படி அவன் செய்தது தவறு என அயோத்திவாசிகளில் பெரும்பான்மையோர் முடிவுகட்டினர். அதற்கேற்ற காரணங்களையும் அவர்கள் எடுத்துக்காட்டினர். ஆயினும் தாயின் ஆணைப்படி அவன் வனவாசத்தை ஏற்றுக் கொண்டான். இங்ஙனம் வாழ்க்கைப் பிரச்னைகள் சிலவற்றைப் பலப்பல பாங்குகளில் மக்கள் பொருள்படுத்துகின்றனர். ஒரு சூழ்நிலையில் தவறாகக் கருதப்படுவது மற்றொரு சூழ்நிலையில் பொருத்தமானதாகப் புலப்படுகிறது. ஆக, உலகில் பலப்பல செயல்கள் இரண்டுவிதமான வியாக்கியானங்களுக்கு இடம் தருகின்றன. உலகின் போக்கு இப்படியிருப்பதால் தவறுதலுக்கு இறைவன் ஏன் இடம் கொடுத்திருக்கிறார் என்னும் ஐயம் பூணுதல் பொருந்தாது.

கேள்வி: *(338)* கடவுள் எல்லார் உள்ளத்திலும் இருக்கிறார் என்றால், மக்களில் சிலர் ஏன் கெட்டவர்களாக

இருக்கிறார்கள்? அவர்களும் என்றாவது முக்தியடை வார்களா? விளக்கம் தருவிக்க வேண்டுகிறேன்.

பதில்: முட்டைக்குள் இருக்கும் பொருள் ஒன்று. அது குஞ்சாகப் பரிணமிக்கிறபொழுது சிறகு, தோல், தசை, எலும்பு, இரத்தம் முதலியன உண்டாகின்றன. தோன்றா நிலையில் ஒன்றாயிருப்பது, தோற்றத்துக்கு வருகிறபொழுது வேற்றுமை மிக உண்டாகிறது. சிருஷ்டிக்கு அந்த வேற்றுமை அவசியம். முட்டையினின்று பாம்பு உண்டாகிறது. பாம்பின் பல்லில் விஷம் வடிவெடுக்கிறது. முட்டை நிலையில் விஷம் இல்லை. அது பாம்பாகிறபொழுது விஷம் வருகிறது. மூலப் பொருள் கடவுள். அதில் வேற்றுமையில்லை. அதனிடத்திருந்து அனந்தம் கோடி ஜீவர்கள் தோற்றத்துக்கு வருகிறார்கள். தோற்றத்துக்கு வந்துள்ள ஒரு விலங்கு பசு. மற்றொரு விலங்கு புலி. தோற்றத்துக்கு வந்துள்ள ஒரு பறவை புறா. மற்றொரு பறவை பருந்து. தோற்றத்துக்கு வந்துள்ள ஒரு மனிதன் ஆண்; மற்றொரு மனிதன் பெண். எல்லா மனிதர் களும் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருந்துவிட் டால் சிருஷ்டி நிகழ முடியாது. அபேதம் என்பது சிருஷ்டிக்கு அப்பாற்பட்ட நிலை. சிருஷ்டியில் பேதம் இருந்தே ஆக வேண்டும். பேதம் என்றால் நல்லது கெட்டது ஆகிய இரண்டும் இருந்தாக வேண்டும். தோற்றத்துக்கு வந்துள்ள ஒரு மனிதன் நல்லவன். மற்றொரு மனிதன் கெட்டவன். இதுவே சிருஷ்டியின் பாங்கு. சிருஷ்டியின் நடைமுறையில் நல்ல உயிர்களுக்கும் கெட்ட உயிர்களுக்கும் இடமுண்டு. நலம் எவ்வளவு அவசி யமோ, கேடும் அவ்வளவு அவசியமானது. வாழ்வு நலன், சாவு கேடு. பின்பு சாவு இல்லாவிட்டால் வாழ்வு கெட்டுப்போம். கெட்டவன் தன்னுடைய கேட்டின் வாயிலாக நல்லவனை விளக்கிக் காட்டுகிறான். கேடு பொல்லாதது என்பதையும், கேடு எவ்வளவு தூரம் மனிதனைக் கீழ்நிலைக்குக் கொண்டு செல்கின்றது என்பதையும், கேடு மக்களுக்கு எவ்வளவு துன்பத்தைத் தரவல்லது என்பதையும் கெட்டவன் தன் வாழ்க்கையின் மூலம் விளக்கிக் காட்டுகின்றான். நலம் ஒருவனுக்கு எவ்வளவு முன்னேற்றத்தைத் தருகிறது என்ப தையும், நலம் மக்களுக்கு எவ்வளவு இன்பத்தைத் தருகிறது

என்பதையும் நல்லான் ஒருவன் தன் வாழ்க்கையின் மூலம் விளக்கிக் காட்டுகின்றான். நலம் செய்பவன் நலத்தையும், கேடு செய்பவன் கேட்டையும் அடைகின்றான். கேடு பொல்லாதது என்பதையும், கேட்டின் மூலம் முன்னேற்றம் அடையமுடியாது என்பதையும் கெட்டவன் அறிகின்றபொழுது நாளடைவில் தன்னுடைய கேட்டைத் தானே தவிர்க்கிறான். கேட்டை முழுவதும் தவிர்த்து விடுகின்றபொழுது அவன் முக்தியடையவும் முடியும். ஆக இயற்கையின் அமைப்பில் எல்லாவிதமான இயல்புகளும் இடம்பெற்று இருக்கின்றன. அத்தனைவித இயல்புகளால் தூண்டப்பெற்று உயிர்கள் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்றன. கடைசியாக மூல நிலையை எட்டுகின்றன. மூலநிலையை எட்டுவதே முக்தியாம். ஆக, கடவுள் தானே உலகனைத்தும் ஆயிருக்கிறான். எண்ணிறந்த வேறுபாடுகளும், மாறுபாடுகளும் படைத்திருக்கிறான். அவைகளுக்கிடையிலே அமைகிற தாரதம்மியத்தை முன்னிட்டு உயிர்கள் முன்னேற்றமடைந்து வருகின்றன. முடிவில் சிருஷ்டியென்னும் விளையாட்டை முடித்துவிட்டு, மூல நிலையெய்துகின்றன; ஒரு பொருள் இப்பாங்கிலெல்லாம் இருந்து வருகிறது. அப்படி அது இருப்பதை அதனுடைய திருவிளையாடல் என்கிறோம். இவ்வுண்மையை அறியுமிடத்து அத்திருவிளையாடலில் நாம் அனைவரும் அவரவர் பகுதியை நன்கு நிறைவேற்றி முடிப்போம்.

கேள்வி: *(339)* பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற செயல்களனைத்தும் ஈசனுடைய பெரும்திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. மானுடன் ஒருவன் செய்கிற கேடும் அப்பெரும் திட்டத்தில் இடம்பெற்றாக வேண்டும். அமைப்பு அப்படியிருக்கக் கேடு செய்தவனை ஏன் தண்டிக்க வேண்டும்?

பதில்: அகிலாண்டமெங்கும் நிகழ்ந்து வருகிற நிகழ்ச்சிகள் யாவும் பரமனுடைய பெரும் திட்டத்துக்கு உட்பட்டவைகள் என்பது கோட்பாடு. அச்செயல்கள் அனைத்தையும் ஞானிகள் பரமனுடைய விளையாட்டாகக் கருதுகிறார்கள். அக்ஞான நிலையில் உள்ள ஜீவர்கள் காணும் காட்சி வேறு, அந்தந்த ஜீவனுடைய வினையும் அதன் விளைவும் நெறி பிசகாது

நிகழ்ந்து வருகின்றன. பிறகு செயல்கள் அனைத்தும் காரண காரியமாக அமைந்துள்ளன. காரணம் ஒன்றிருக்கக் காரியம் காரணத்தோடு முரண்படுகிற மற்றொன்றாக மாறமுடியாது. "தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்" என்னும் கோட்பாடு காரணகாரியத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளது. உணவைத் தேடுவதும் அதைப் பெறுவதும் உண்பதும் விதவிதமான வினைகள் ஆகின்றன. உடலை வளர்ப்பதற்கு ஏதுவானது உணவு எனப்படுகிறது. உடல் வகைகள் எண்ணிறந்தவைகள். உடலுக்கேற்ற உணவு வகைகளும் எண்ணிறந்தவைகள். ஓர் உடலுக்கு உணவாக அமைவது மற்றோர் உடலுக்குத் தீங்கு விளைவிப்பதாக அமையலாம். அந்த உண்மையை அறிந்துகொள்ளாது மானுடனொருவன் தனக்கு ஒவ்வாத உணவைப் புசிப்பானாகில் அது தீங்கு செய்யும். அத்தீங்கே தண்டனை எனப் பொருள்படுத்தப்படுகிறது. நெற்பயிர் வளர்ந்து விளைகிறது. அது அறுவடை செய்யப்படுகிறது. நெல் மானுடனுக்கு உணவு. வைக்கோல் கால்நடைகளுக்கு உணவு. கால்நடைகளின் உணவை மானுடன் அருந்தி ஜீரணக் கருவிகளைப் பாழ்படுத்தினால், வயிற்று வலி முதலிய நோய்களுக்கு அவன் ஆளாவான். நோய்வாய்ப்படுவது அவனுக்குத் தருகிற தண்டனையாகிறது. பின்பு நெல்லினின்று உமியைப் பிரித்து, அரிசியை மட்டும் உணவுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இருக்கிறபடி நெல்லை மனிதன் உணவாகக் கொள்வானாகில் துன்பத்துக்கு ஆளாவான். அது அவனுக்கு வாய்த்த தண்டனையாகிறது. அரிசியைச் சமைத்துச் சோறு ஆக்கி அதைப் புசித்தல் வேண்டும். அரிசியை ஒரு சிறிதளவு உண்ணலாம். பசியடங்குமளவு அரிசியைப் புசித்தால் அஜீரணம் வரும். அது மனிதனுக்குத் துன்பமாக முடிகிறது. சிருஷ்டியில் இது உணவைப்பற்றிய நியதி.

மானுட வாழ்க்கையில் சீலத்தைப்பற்றிய நியதியுண்டு. தன் தேவைகளை மனிதன் சமுதாய நியதிகளுக்கு ஒத்த பாங்கில் சம்பாதிக்கலாம். திருடுதல், பலாத்காரமாகப் பொருள்களை அபகரித்தல் ஆகிய செயல்கள் ஒழுக்கத்தோடு ஒவ்வா. அத்தகைய அடாத செயல்களுக்கேற்ற தண்டனைகளைச் சமுதாயம் நிர்ணயிக்கிறது. சிற்றறிவு படைத்த மனிதன் நியதியினின்று

மாறுபட்டுப் பொருளை அபகரிக்கிறான். ஈசனுடைய திட்டத்தில் அது இடம்பெறுகிறது. அப்படி அபகரித்ததற்குச் சமுதாயம் தண்டனை விதிக்கிறது. அச்செயலும் ஈசுவர சிருஷ்டியில் இடம்பெற்றுள்ளது. உணவுப் பொருளைக் கொள்ளை எடுத்துக்கொண்டு போனால் அதற்கேற்ற நடவடிக்கை. ஈசனுடைய சிருஷ்டியில் இடம்பெற்றுள்ளது. உணவுப்பொருள் தானாகவே பாழடைந்து போய்விட்டால் அதற்காக யாரும் தண்டிக்கப்படுவதில்லை. ஈசன் செயல் அத்தகையதென்று அது கருதப்படுகிறது. திருடனாக வடிவெடுத்து வருபவன் ஈசன். அத்திருடனைத் தண்டிக்கும் நியாயாதிபதியாக வடிவெடுத்து வருபவனும் ஈசனே. இங்ஙனம் ஈசனே ஈசனுக்குத் தண்டனை கொடுக்கிறான். இதுவும் சிருஷ்டியின் நியதி. இத்தகைய நியதியின் வாயிலாக நீ இன்னதைச் செய், இன்னதைச் செய்யாதே என்னும் கோட்பாடு வருகிறது. அக் கோட்பாட்டோடு கூடிய சமுதாய அமைப்பும் ஈசனுடைய சிருஷ்டியே. கெட்டதை நிராகரிப்பதும் நல்லதை ஆமோதிப்பதும் ஈசன் விளையாட்டே !. கெட்டதை ஏன் நிராகரிக்க வேண்டும் என்று தடை செய்தால் பிறகு சிருஷ்டி என்னும் விளையாட்டு நடைபெறாது.

இனி, சீலம் அல்லது நல்லொழுக்கம் என்பது உண்டு. ஐம்பொறிகளை முறையாக வரம்புக்குட்பட்ட பாங்கில் பயன் படுத்துவது ஒழுக்கம். அவைகளை வரம்புகடந்து கெட்ட வழிகளில் பயன்படுத்துவது கூடா ஒழுக்கம் அல்லது தீங்கு அல்லது பாபம். அத்தகைய தீவினை துன்பமாகப் பரிணமிக் கிறது. அச்செயலும் சிருஷ்டியின் பாங்கு ஆகிறது. ஆதலால் மனிதன் தன்னை மேன்மைப்படுத்துகிற செயல்களில் ஈடுபட லாம். கீழ்மைப்படுத்துகிற செயல்களில் ஈடுபட்டால் துன்பம் விளையும் என்பது இயற்கையின் நியதி. அதையனுசரித்து அவன் தண்டிக்கப்பட்டுள்ளான் என உலகம் பொருள்படுத்துகிறது.

ஆக, ஈசனுடைய செயலைப்பற்றிய கோட்பாடு ஒன்று உருவெடுத்துள்ளது. அதைப் புராண பூர்வமாக இங்ஙனம் பகரலாம். உலகை உருவாக்குகிற பரவஸ்துவை ஆண்பாலாகவும் கருதலாம்; பெண்பாலாகவும் கருதலாம். பெண்பாலாகக் கருதப் படுகிற பரதேவதை தன் சொரூபத்தின் வாயிலாகச் சிருஷ்டியின்

நடைமுறையை விளக்குகிறாள். அவள் காலசொரூபமாக இருப்ப தால் காளிகாதேவி எனப் பெயர் பெறுகிறாள். இடக்கரத்தில் அவள் வாளை ஓங்கிக் கொண்டிருக்கிறாள். வலக்கரத்தில் அவள் அனுக்ரஹம் பண்ணுகிற பாங்குடையவளாகப் பொலி கிறாள். இயற்கைத் தாயினிடத்திருந்தே தோன்றியுள்ள உயிர்கள் அனைத்தும் இயற்கைத் தாயை முறைதவறிப் பயன்படுத்தினால் அவ்வுயிர்களுக்கு அவள் தண்டனை கொடுத்துப் பாடம் புகட்டுகிறாள். தண்டனையானது நோயாகவும் துன்பமாகவும் மரணமாகவும் வடிவெடுக்கிறது. இயற்கைத் தாயை நல்வழியில் பயன்படுத்தினால் அவள் துன்பத்தைத் தவிர்த்து உயிர்களை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுகிறாள். அச்செயல் அனுக்ரஹம் எனப் பெயர் பெறுகிறது. ஆகப் பரம்பொருளே உயிர்கள் அனைத்துமாக வடிவெடுத்துள்ளது. கெட்ட உயிர்களுக்கு அது தண்டனை கொடுத்து அவைகளைத் திருத்தியமைக்கிறது. நல்ல உயிர்களுக்கு அது அனுகூலமான சூழ்நிலையை நல்கி அவைகளை உயர்நிலைக்கு எடுத்துச் செல்கிறது. இவையாவும் ஈசனுடைய சிருஷ்டியின் நியதிகளாம். ஆதலால் கேடுசெய் தவனை ஏன் தண்டிக்கவேண்டும் என்னும் கேள்வி பொரு ளற்றது. தண்டனை வாயிலாகக் கேட்டினின்று கேடு செய்தவன் மீட்டு எடுக்கப்படுகிறான். மீட்டு எடுப்பதற்குத் தண்டனை ஒன்றே உற்ற உபாயமாம்.

ஓர் உயிர் மற்றோர் உயிருக்கு உணவாக அமைவதும் சிருஷ்டியின் திட்டம். ஸ்தாவரங்களாய் இருப்பவைகள் ஸ்தாவ ரங்களுக்கே உணவாகின்றன; பின்பு ஜங்கமங்களுக்கும் உண வாகின்றன. ஜங்கமங்கள் ஒன்றையொன்று கொன்றுதின்று உயிர் வாழ்ந்து வருகின்றன. ஈசனுடைய சிருஷ்டியில் இந்தக் கேடு ஏன் அமைந்துள்ளது என்னும் கேள்வி எழலாம். ஒரு பாங்கில் கேடாகத் தென்படுவது மற்றொரு பாங்கில் நலனாகத் தென்படுகிறது. மானை ஏன் புலி கொன்று தின்கிறது? அத்த கைய புலியாகக் கடவுள் ஏன் வடிவெடுத்து வந்துள்ளார் என்னும் கேள்வியைக் கிளப்பலாம். புலியானது மான் என்னும் நல்லுணவு தனக்கு இயற்கையில் அமைந்திருக்கிறது என்று திருப்தியடைகிறது. மானோ புலியினின்று தப்பித்துக்கொள்ள முயலுகிறது. அப்படி முயலுவது அது வாழ்க்கையில் பெறுகிற

பயிற்சி. பின்பு ஒருநாள் அது புலிக்கு இரையாகிறது. அதன் வாயிலாக இயற்கையின் நடைமுறை ஒழுங்குபடுத்தப்படுகிறது. புலிகளே இல்லாதுபோய்விட்டால் மான் இனம் வரம்புகடந்து பெருகி வனத்தையே அழித்து விடும். வனம் அழிந்த பிறகு மான் இனமும் அழிந்துபட்டுப்போம். ஓர் உயிர் இன்னொரு உயிருக்கு உணவாவதன் வாயிலாக இயற்கையின் அழிவு என்னும் கேடு தவிர்க்கப்படுகிறது. ஆதலால் கேடாகத் தென் படுவதிலும் நலன் அடங்கியிருக்கிறது. உணவு உண்பது நல் வினையென ஆமோதிக்கப்படுகிறது. ஓர் உயிர் மற்றோர் உயிருக்கு உணவாக அழிந்து போவது கேடு என்று மறுக்கப் படுகிறது. ஆனால் நலம் கேடு ஆகிய இரண்டும் இணை பிரியாதவைகள் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப் பொழுது சன்மானமும் தண்டனையும் இணைபிரியாதவைகள் என்பது விளங்கும்.

கேள்வி: (340) **கடவுள் நல்லவர்களுக்கு அனுக்ரஹம் பண்ணுகிறார் என்பது கோட்பாடு. கெட்டவர்களுக்கும் தானே அவர் அனுக்ரஹம் பண்ணவேண்டும்? டாக்டர் நோயாளிகளைக் கண்ணும் கருத்துமாகக் காப்பது போன்று கெட்டவர்களை நல்வழிக்குத் திருப்புவதற்குக் கடவுள் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்கிறாரா?**

பதில்: நோயாளிகளுடைய நோயை நீக்குதலில் டாக்டர் முயற்சி மிக எடுத்துக்கொள்கிறார். ஆரோக்கியமாக இருக்கிற வர்களைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லை. அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. கடவுள் நல்லார்க்கு மட்டும் அனுக்ரஹம் பண்ணுகிறார்; மற்றவர்களைக் குறித்து உதாசீனராக இருக்கிறார் என்பது உண்மையன்று. நல்லார், பொல்லார் ஆகிய எல்லார்க்கும் அவர் பொது நிலையிலிருந்துகொண்டு அவரவர் தகுதிக்கேற்ற பிரகாரம் கடவுள் உதவிபுரிகிறார். அனுக்ரஹம் என்னும் சொல்லை முதலில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நிக்ரஹம் என்னும் சொல்லின் எதிரிடை அனுக்ரஹம். நிக்ரஹம் என்றால் தடை. அனுக்ரஹம் என்றால் தடையை நீக்குதல். சான்றொன்று எடுத்துக்கொள்வோம். பாதையில் போகும் வண்டிகளை

ஒழுங்காகப் போவதற்கு உதவிபுரிதற்குப் போலீஸ்காரன் அமர்த்தப்பட்டிருக்கிறான். அவன் தன் கடமையை முறையாகக் கவனித்து வருகிறான். பாதையில் போகின்ற வண்டிகள் போக்குவரத்து நியதிகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக் கின்றன. ஒழுங்காகப்போகிற வண்டிகளுக்குப் போவதற்கு அவன் அனுமதி கொடுக்கின்றான். ஒழுங்கு பிசகுகிற வண்டி களுக்கு அவன் தடைபோடுகிறான். அப்படி அவன் தடை போடுவது வண்டிக்காரனுக்கு இடைஞ்சலாக அல்ல. தடை போடுவதன் வாயிலாக வண்டிக்காரனுக்கும் நலன் பண்ணு கின்றான்; மற்றவர்களுக்கும் நலன் பண்ணுகின்றான். தடை போடுவதே அவன் பண்ணுகிற பேருபகாரமாகிறது. கடவுளின் பாங்கு மிக மேலானது. நெறி பிறழ்வதற்கு அவர் இடம் தருவதில்லை. தர்மகோப்தா என்பது கடவுளுக்கு அமைந்துள்ள பெயர். தர்மமும் தர்மவானாகிய கடவுளும் ஒன்றே. தர்மத்தினின்று பிசகுகின்றவனுக்கு எக்காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் எச்சரிக்கை வருகிறது. அந்த எச்சரிக்கையைப் பயன்படுத்திக்கொண்டால் அது அனுக்ரஹம் ஆகிறது. எச்சரிக்கையை மீறி நடந்துகொண்டால் அவன் துன்பத்திற்கு ஆளாகின்றான். துன்பத்தை விளைவிப்பது நிக்ரஹம். துன்பத்தின் வாயிலாக அவன் பாடம் கற்றுக்கொள்ளுகின்றான். கற்றுக்கொண்ட பிறகு மீண்டும் அப்பிழையை அவன் செய்யமாட்டான். எரிகிற தீபத்தைக் குழந்தையொன்று எட்டிப் பிடிக்க முயலுகிறது. தாய் அதற்குத் தடைபோடுகிறாள். தாய் கவனிக்காதபொழுது தீப்பிழம்பைக் குழந்தை தொடுகிறது. கை காந்திப் போகிறது. குழந்தை கோவென்று கதறி அழுகிறது. நிக்ரஹத்தை மீறியதின் விளைவு அது. தர்மவானாகிய தெய்வம் தர்ம அனுஷ்டானத்திற்கு அனுக்ரஹமும், அதர்ம அனுஷ்டானத் திற்கு நிக்ரஹமும் வழங்குகிறார். நிக்ரஹத்தை மீற முயன்றால் அது துன்பமாக விளையும். ஆகவே கடவுள் நல்லார் பொல்லா ராகிய எல்லார்க்கும் நலனையே வழங்குகின்றார். அவர் போடு கிற நிக்ரஹம் அல்லது தடை தங்களுடைய நலத்துக்காகவென்று அறிந்துகொள்ளாதவர்கள் தங்களுடைய தீச்செயலின் வாயிலாகத் தங்களுக்குத் தாங்களே துன்பத்தை வரவழைத்துக் கொள்ளு கிறார்கள். ஆக, நெறிபிறழுகிறவர்களைக் கடவுள் உதாசீனராகக்

கைவிட்டு விடுகிறார் என்பது உண்மையன்று. எல்லா உயிர்களின் நலத்திலும் அவர் கருத்தைச் செலுத்துகிறார். கடவுளின் திட்டப்படி அனுக்ரஹம் எவ்வளவு நலனைச் செய்கின்றதோ அவ்வளவு நலனை நிக்ரஹமும் செய்கிறது. இக்கோட்பாட்டை அறிந்துகொள்ளுகின்றவர்கள் மிகச் சிலர்.

கேள்வி: *(341)* குமரகுருபரர் கடவுள் அருளால் பெரும் புலவர் ஆனார். பக்தி செய்கின்ற நமக்குக் கடவுள் ஏன் உதவிசெய்யக் கூடாது?

பதில்: புலவர் ஆகும் வாய்ப்பு எல்லார்க்கும் அமைவதில்லை. எல்லார்க்கும் அமையவேண்டிய அவசியமும் இல்லை. அரியபெரிய நூல்களை அமைக்கும் திறமை அரிதிலும் அரிதாக யாரோ சிலர்க்குத்தான் வாய்க்கிறது. மக்கள் எல்லாருமே அரியநூல் அமைக்கும் நிபுணர்களாக வடிவெடுப்பதில்லை. எல்லாரும் நூலோர் ஆய்விட்டால், பிறகு நூல் அமைக்க வேண்டிய அவசியமே இல்லை. அரிதிலும் அரிதாக அமைகிற அருள் புலவர்களுள் ஒருவர் குமரகுருபரர். அவர் புலமை வேண்டும் என்று பிரார்த்தனை பண்ணவில்லை. அம்பிகையினிடத்துப் பக்தி வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவருக்குப் பக்தியும் வாய்த்தது; அருள் புலமையும் வாய்த்தது. அவர் பெற்ற புலமை பாரில் உள்ளோருக்கு நன்கு பயன்பட்டு வருகிறது. அதைப் பயன்படுத்தத் தெரிந்துகொண்டால் நாம் புலமை பெற்றவர்களுக்கு நிகர் ஆகிறோம். ஆன்றோர்கள் இயற்றி வைத்துள்ள அரியபெரிய காப்பியங்களை ஆராயத் துணிவோமானால் நாம் பாக்கியவான்கள் ஆகிறோம். அப்படி ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் ஆயிரம் பேரில் ஒருவர் அமைவது அரிது. கடவுள் ஏன் நம்மைப் புலவர் ஆக்கவில்லை என்று கேட்பதற்குப் பதிலாகப் புலமையை ரசிக்க நாம் முயலவேண்டும். அதை ரசிக்க வல்லவர்களாக நாம் முயன்று வருவோமானால் அதற்கு நிகரான பேறு இல்லை.

பக்தி செய்கிறவர்கள் யார் என்பதை அடுத்தபடியாக ஆராயவேண்டும். தங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டுகிறவர்கள் உண்மையான பக்தர்கள் அல்லர். அவர்களைக் காமிய பக்தர்கள்

எனப் பகரவேண்டும். காமிய பக்தர்கள் வேண்டுகின்றவைகளை எல்லாம் கடவுள் கொடுப்பதில்லை. வேண்டுகின்றவர்கள் தகுதிக் கேற்றவாறே அவர்களுக்கு வாய்ப்பு அமைகிறது. இனி உண்மை யான பக்தர்கள் உளர். அவர்கள் கடவுளிடமிருந்து எதையும் கேட்பதில்லை. தங்களுக்குப் பக்தி வாய்க்கவேண்டும் என்று கேட்கின்றனர். பக்தி வாய்க்க வாய்க்க இன்னும் அதிக பக்தி வேண்டும் என்று கேட்கின்றனர். தங்களுடைய உடல், உடைமை, ஆவியெல்லாம் பக்தர்கள் தெய்வத்துக்குக் கொடுத்து விடுகின்றனர். பக்தியிலேயே அவர்கள் திளைத்து இருக்கின்றனர். அத்தகையவர்களுள் அரிதிலும் அரிதாகப் புலமை வாய்க்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். வாய்த்த புலமையில் அவர்கள் கருத்தைச் செலுத்துவதில்லை. தங்களையறியாது கவிதை அவர்களிடத்திலிருந்து ஊற்றெடுத்து வருகிறது. தாங்கள் கவிஞர்கள் என்கின்ற உணர்ச்சியும் அவர்களிடத்தில் இல்லை. தெய்வபக்தி ஒன்றிலேயே அவர்கள் திருப்தியடைந்து இருக் கின்றனர். ஆகையால்தான் அவர்களுடைய புலமையில் தெய்வீகம் திகழ்கிறது. புலமை வேண்டுமென்று கேட்பதுடன் காமியபக்தி, தூயபக்தி ஆகியனவும் வேண்டும் என்றே கேட்கவேண்டும். ❑

16. மனப்பான்மை

கேள்வி: *(342)* தர்ம சக்கரம் இதழில் அருள் விருந்தில் சம்பளத்தை அதிகப்படுத்துவதால் வேலையாள் ஒருவனுடைய ஆற்றலை அதிகப்படுத்த முடியாது. தன் கடமையில் அவனுக்கு அன்பு அதிகரிக்குமளவு அவனுடைய ஆற்றல் அதிகரிக்கிறது என்று இருக்கிறது. ஆனால் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இல்லாமல் அவனும் அவனுடைய குடும்பமும் வறுமையால் வாடும்போது தன் கடமையில் அவனுக்கு அன்பு எப்படி அதிகரிக்க முடியும்?

பதில்: ஒரு மனிதனுக்குத் தேவையாயிருக்கிற பொருளைச் சம்பளம் என்கிற பெயர் வைத்துக்கொண்டோ அல்லது வேறு ஏதாவது பெயர் வைத்துக்கொண்டோ அவனுக்கு வழங்கியாக வேண்டும். வேண்டிய அளவு பொருளில்லாவிட்டால் உலகில் ஜீவனம் ஒழுங்காக நடைபெறாது. சுகஜீவனத்துக்கேற்ற பொருள் ஒவ்வொருவனுக்கும் அமைந்தாகவேண்டும். ஆனால் ஒரு மனிதன் படைத்திருக்கின்ற ஆற்றல் அவன் பெறுகிற மிகைபட்ட பணத்தை முன்னிட்டு அதிகரிக்காது. சேவையில் ஆர்வம் கொண்டிருந்தால் அந்த ஆற்றல் அதிகரிக்கும். சில சான்றுகள் எடுத்துக்கொள்வோம். ஆங்கில அரசாட்சி இந்தியாவினின்று பின் வாங்கியபொழுது ஆங்கிலக் கலெக்டர் ஒருவர் திருச்சிராப்பள்ளியின் தமது பொறுப்பை இந்தியக் கலெக்டரிடம் ஒப்படைத்தார். அப்படி அவர் செய்தபொழுது ஒருநாள் அதிகப்படியாக வாய்தா வாங்கிக்கொண்டு தாம் விசாரித்து வந்த வழக்கு ஒன்றை முட்டமுடிய விசாரணை செய்து அதற்குப் பொருத்தமான தீர்ப்புச் சொல்லிவிட்டுத் தமது பொறுப்பையும் இந்தியக் கலெக்டரிடம் ஒப்படைத்தார். அதை

முன்னிட்டு அவருக்கு ஒரு நாளைக்கேற்ற அதிகச் சம்பளத்தை யாரும் வழங்கவில்லை. அவரும் எதிர்பார்க்கவில்லை. தமது கடமையில் கொண்டிருந்த பொறுப்பை முன்னிட்டே அத்தகைய ஆற்றல் படைத்தவராக அவர் தனது செயல்களைச் செய்து முடித்தார். அதே ஸ்தானத்திலிருக்கின்ற பலபேர் இன்றைக்கு இடம் விட்டு இடம் மாற்றப்படுகின்றபொழுது தமது கடமை களை அரைகுறையாக விட்டுச் செல்வதைச் சர்வசாதாரணமாகக் காணலாம்.

தங்களுக்குச் சம்பளம் அதிகமாக வருவதை முன்னிட்டோ குறைந்து போவதை முன்னிட்டோ பழங்காலத்து ஆசிரியர்கள் தாம் புரிந்த தொண்டை மாற்றியமைக்கவில்லை. தமது அரும் பணியைச் சம்பளத்தோடு சம்பந்தப்படுத்தாது முழுமனதோடு தமது வேலையைச் செய்துவந்தனர். பட்டினி கிடந்துகொண்டு பாடம் புகட்டி வந்த பேராசிரியர்களும் நம் நாட்டில் இருந்து வந்தார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் பலர் பள்ளிக் கூடத்தில் சம்பளம் வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்காக என்று ஆற்றவேண்டிய வேலையை அரைகுறையாகச் செய்துவிட்டுத் தமது தனிப்பொறுப்பில் ஒருசிலர்க்குப் பாடம் புகட்டி அதற்குக் கைக்கூலி வாங்கிக் கொள்கிறவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய மனப்பான்மை படைத்திருக்கிறவர்களுக்குப் பள்ளிக்கூடத்துச் சம்பளத்தை இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு அதிகப்படுத்தினாலும் அவர்களுடைய கீழான மனப்பான்மை போய்விடாது. சேவையில் ஆர்வம் இல்லாதவர்களுக்குச் சம்பளத்தை எவ்வளவு அதிகப்படுத்தினாலும் தங்களுடைய கடமையை முறையாக அவர்கள் செய்யமாட்டார்கள். அவர் களுடைய மனப்பான்மை மாறியமைவதே நல்ல சீர்திருத்தமாகும்.

தொண்டர்கள் தெய்வத்துக்கென்றே தொண்டு புரிந்தார்கள். சம்பளத்தை எதிர்பார்த்து அவர்கள் செய்யவில்லை. அதில் கருத்து வைக்கின்றவர்களுக்குத் தெய்வீக ஆற்றல் உண்டாகாது. ஸ்ரீராமபிரானுக்கென்றே ஆஞ்சநேயர் தொண்டு புரிந்தார். இராமபக்தி அதிகரித்ததனால் அவருக்குத் தெய்வீக ஆற்றல் அதிகரித்தது. எத்தனை லக்ஷம் ரூபாய் சம்பளம் கொடுத்தாலும் அந்தச் சம்பளத்தை முன்னிட்டு அவருடைய ஆற்றல் அதிகரித்திருந்திருக்க முடியாது.

பணம் மனிதனுக்குத் தேவை. ஆனால் தான் புரியும் சீரிய கடமையை மனிதன் பணத்தோடு பிணைத்து வைத்துப் பழகலாகாது.

கேள்வி: *(343)* சிலரைப் பார்த்தவுடன் நட்புக் கொள்ளும் தன்மை ஏற்படுகிறது. வேறு சிலரைப் பார்த்த வுடன் வெறுப்பு வடிவெடுக்கிறது. இது மனதின் குறை நிலையா?

பதில்: மனதையுடையவன் மனிதன். மனது மக்கள் எல்லார்க்கும் ஒரே பாங்கில் அமைவதில்லை. உண்மையை உரைக்குங்கால் எத்தனை மனிதரோ அத்தனைவித மனது உண்டு. அவை யாவற்றையும் நல்ல இயல்பு படைத்த மனது, தீய இயல்பு படைத்த மனது என்று இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். இக்கூறுகளைத் தெய்வ சம்பத்து என்றும் அசுர சம்பத்து என்றும் சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. முன்னேற்றத் துக்கு ஏதுவாயிருப்பது தெய்வ சம்பத்து. கடவுள் நாட்டத்துக்கு ஏதுவாயிருப்பது தெய்வ சம்பத்து. மற்று அழிவுக்கு ஏதுவா யிருப்பது அசுர சம்பத்து. மன்னுயிர்களைத் துன்புறுத்த ஏதுவாயிருப்பது அசுர சம்பத்து. கடவுள் நாட்டத்துக்கு எதிரியா யிருப்பது அசுர சம்பத்து.

இனி, மக்களோடு மக்கள் உறவாட எத்தனிக்கும்பொழுது அவரவர் இயல்புக்கு ஏற்ப மற்றவர்களிடம் விருப்போ, வெறுப்போ கொள்ளுகின்றனர். நல்லார்க்கு நல்லாரிடம் விருப்பு உண்டாகிறது. பொல்லாரிடம் வெறுப்பு வருகிறது. பிறகு பொல்லார்க்கோ மற்ற பொல்லாரிடம் நெருங்கிய நட்புண்டா கிறது. நல்லாரைப் பார்த்தாலே அவர்களுக்கு வெறுப்புண்டா கிறது. குடி, கொலை, களவு செய்கிறவர்களுக்கு அதே பாங்குடையவர்கள் மீது அன்பு உண்டாகிறது. சீலம், பக்தி, ஞானம் ஆகிய தெய்வசம்பத்து படைத்திருப்பவர்களுக்கு அதே தெய்வசம்பத்து படைத்துள்ள மற்றவர்களிடம் அன்பும் அனுதாபமும் தாமாக உதயமாகின்றன.

ஆக, நாம் எத்தகையவர்கள் என்பது நாம் யாரோடு உவந்து இணக்கம் கொள்ளுகின்றோம் என்பதனின்று வெளியாகிறது. கெட்டவர்களிடத்து நமக்கு அருவருப்பு

உண்டாகுமாகில் நாம் பாக்கியவான்கள். ஆனால் அந்த அருவருப்பில் நாம் வரம்புகடந்து போய்விடலாகாது. சிற்றியல்பு படைத்தவர்கள் நமக்கு ஒவ்வாதவர்களென்று அமைதியாக அவர்களிடமிருந்து நாம் விலகிக்கொள்ள வேண்டும். பின்பு நல்லாரோடு ஆர்வத்தோடு இணக்கம் கொள்ளலாம். அந்த ஆர்வம் நம்மிடத்திலுள்ள நலனை மேலும் மேலும் வளர்க்கும்.

கேள்வி: *(344)* நல்லார் ஒருவர் கையாண்டு வந்த பொருள்களை நாம் கையாண்டு கொண்டிருந்தால், அந்த நல்லாருடைய நல்ல தன்மை நம்மை வந்து சேருமா?

பதில்: ஒரு மனிதனுக்கும் அம்மனிதன் கையாண்டு வருகின்ற பொருளுக்கும் ஒருவிதத்தில் தொடர்பு உண்டு. ஒவ்வொரு மனிதனிடத்தும் அவனுடைய இயல்பு தன் மாத்திரையாக அவனைச் சூழ்ந்திருக்கிறது. அவன் கையாண்டு வருகிற பொருளிலும் அத் தன்மாத்திரை படிகிறது. நல்லவனிடம் நல்ல தன்மாத்திரை நிறைந்திருக்கிறது. கெட்டவனிடம் தீய தன் மாத்திரை நிறைந்திருக்கிறது. இக்கோட்பாட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டே கீழோர் கைப்பட்ட உணவை மேலோர் ஏற்கலாகாது என்னும் கோட்பாடு வந்துள்ளது. ஆயினும் இக்கோட்பாட்டைச் சரியாகப் பயன்படுத்த எல்லார்க்கும் இயலாது. முற்றிலும் மனபரிபாகம் ஆகியிருக்கிறவர்களுக்கே இது விளங்குகிறது. மற்றவர்கள் ஐதீகத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, தீண்டாமை முதலிய சமுதாயப் பழக்க வழக்கங்களைத் தோற்றுவிக்கலாயினர். அப்பழக்க வழக்கங்கள் விபரீதமானவைகளாக நாளடைவில் மாறிவிட்டன. ஆதலால் ஒருவர் கைப்பட்ட பொருளை இன்னொருவர் கையாளுதலில் கருத்து மிகச் செலுத்தலாகாது. அதில் கருத்தைச் செலுத்துவது நாளடைவில் குருட்டு நம்பிக்கையாக முடிவுறும். சான்றுகள் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவோம். கோயிலில் தெய்வத்துக்குப் படைக்கப்பட்ட நல்லுணவு பிரசாதமாகிறது. கோயில் பிரசாதத்தையே ஏற்றுவந்தால் ஒருவன் நல்லவன் ஆகமுடியுமா? என்னும் கேள்வி எழுகிறது. கோயில் பிரசாதத்தையே ஏற்று வருபவர்க்கிடையில் நல்லவர்கள், கெட்டவர்கள் ஆகிய இருதரத்தாரும் இருக்கின்றனர், வாழ்நாள் முழுதும் தூய

தெய்வப் பிரசாதம் ஏற்று வந்த போதிலும் கீழ்மையினின்று சிறிதேனும் மாறியமையாத மானுடர் உலகில் இருக்கின்றனர். அறிஞர் ஒருவர் எழுதுதற்குப் பேனா ஒன்றைப் பயன்படுத்துகிறார். அந்த அறிஞனிடம் அபிமானம் வைத்துள்ள மற்றொருவன் அவர் கைப்பட்ட பேனாவைப் பயன்படுத்துகிறான். அப்படிச் செய்வதால் மற்றவனுக்கு நல்லறிவு வந்துவிடும் என்று யூகிக்கலாகாது. அறிஞர் ஒருவர் ஒரு புத்தகத்தை எடுத்து ஆராய்ச்சி பண்ணிக்கொண்டு இருக்கிறார். அதே புத்தகத்தை எடுத்து, மற்றொரு மனிதன் ஆராய்ச்சி பண்ணினால் அந்த அறிஞருடைய அறிவு மற்றவனுக்கு வந்து சேரும் என்று முடிவு கட்டலாகாது. இச்சான்றுகளினின்று உண்மையொன்று வெளியாகிறது. நல்லார் கைப்பட்ட பொருளைக் கையாளுவதால் நலன் விரைவில் மற்றவர்க்கு வந்தமையும் என்பது உண்மையன்று. நல்லார் மனப்பான்மையை வருவித்துக் கொண்டால் மற்றவர்கள் விரைவில் நல்லார் ஆகலாம். ஆக ஒருவன் மேன்மையுறுவதற்கு மேலோர் கையாளுகிற பொருள் உதவாது; மேலோர் படைத்துள்ள மனப்பான்மை உதவுகிறது. கோயில் பிரசாதத்தையே அருந்தி வந்தால் பக்தி ஓங்கும் என்பது உண்மையன்று. பக்தர்களுடன் கூடியிருந்து பக்தி பயின்றால் அது ஓங்குகிறது. கோயில் பிரசாதம் அதற்கு ஒரு சிறிதளவில் பயன்படுகிறது. படைத்துள்ள மனப்பான்மையே மனிதனை மேலோன் அல்லது கீழோன் ஆக்குகிறது. மேலோருடைய கூட்டுறவு மேன்மையுறுதற்குப் பெரிதும் உதவுகிறது. மேலோர் கைப்பட்ட பொருள் அங்ஙனம் உதவாது. மற்றொரு சான்று எடுத்துக் கொள்வோம். இராமகிருஷ்ண பரமஹம்சர் தக்ஷிணேசுவர ஆலயத்தில் பஞ்சவடியில் அமர்ந்து தியானம் பயின்றார். அந்த இடத்தில் அவருக்குச் சமாதி கூடியது. அவர் ஞானவான் ஆனார். அவர் அமர்ந்து தியானம் பண்ணிய அதே இடத்தில் தியானம் பயின்றால் மற்றவர்களுக்கும் சமாதி நிலை, அனுபூதி முதலியன வாய்க்கும் என்பது உண்மையன்று. ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த ரொமா ரோலா என்ற மேதாவி பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்தார். பரமஹம்சர் வாழ்ந்த நாட்டையோ கையாண்ட பொருளையோ பார்க்க அந்த மேல்நாட்டவர்க்கு

வாய்க்கவில்லை. ஆயினும் அப்புனித மூர்த்தியின் பாங்குகளை யெல்லாம் ரொமா ரோலா நன்கு அறிந்து கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர்களில் சிலர் அவரைப்பற்றி அறிந்து கொண்டதை விட அதிகமாகவே அந்த வெளிநாட்டு மேதாவி அறிந்து கொண்டார். ஆதலால் புறப்பொருள்களை விட அகத்தில் அமைந்துள்ள பான்மை முக்கியமானது என்பதைக் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(345)* இன்பமும் துன்பமும் இருமுனைகள் என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன என்று கூறுகின்றனர். எது உண்மை? விளக்க வேண்டுகிறேன்.

பதில்: இன்பமும், துன்பமும் புறவுலகில் இல்லை. புற வுலகம் தன் இயல்புக்கேற்ப இயங்கிக் கொண்டிருக்கிறது. புறவுலகோடு தொடர்பு வைப்பது உலக வாழ்வின் நோக்க மாகும். அப்படித் தொடர்பு வைப்பதற்குப் புறக்கரணங்கள் ஐந்தும், அகக்கரணமாகிய மனதும் பயன்படுகின்றன. புறக் கரணங்களின் துணைகொண்டு புறவுலகம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்து விதங்களில் புலப்படுகிறது. அந்த ஐந்து பொறிகளோடு மனது இணைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் புறவுலகம் புலனாகிறது. புறவுலகில் ஓசை யொன்று உண்டாகிறது. அது காதில் படுகிறது. ஆனால் மனது காதோடு சேராவிடில் ஓசை காதுக்கு எட்டியும் மனதுக்கு எட்டுவதில்லை. மனதுக்கெட்டாதது மனிதனுக்கும் புறம்பாய் விடுகிறது.

புலப்படுகிற புறவுலகு மனதுக்கொத்ததாய் இருந்தால் இன்பம் வருகிறது. அது ஒவ்வாததாயிருந்தால் துன்பம் வருகிறது. இந்த இன்பமும் துன்பமும் மனிதனால் உண்டுபண்ணப்பட்ட வைகள் ஆகும். உண்பதற்குப் பட்சணம் ஒன்று தரப்படுகிறது. இரண்டு பேர் அதைப் புசிக்கின்றனர். ஒருவனுக்கு அது இன்பம் தருகிறது; மற்றொருவனுக்கு அது துன்பம் தருகிறது. ஆக, இன்பமும், துன்பமும் புறத்திலே இருமுனைகளோடு இருப்பவைகள் அல்ல. ஒரு மனிதனுக்கு இன்பம் தருகிற பொருள் மற்றொரு மனிதனுக்குத் துன்பம் தருகிறது. மாந்தர்

அனுபவிக்கிற இன்ப துன்பங்கள் புறப்பொருள்களிடத்து இல்லை. அவரவருடைய மனப்பாங்கில் இருக்கின்றன.

இனி, இன்பமும், துன்பமும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டிருக்கின்றன. ஒரு மனிதனுக்கு ஒரு பொருள் அகப்படு கிறது. அதைக் குறித்து அவன் இன்புறுகிறான். பின்பு அப் பொருள் அவன் கைநழுவிப் போய்விடுகிறது. அப்பொழுது அவன் துன்பப்படுகிறான். முதலில் இன்பம் ஊட்டியதுதான் பின்பு துன்பம் ஊட்டுதற்குக் காரணமாயிற்று. இம்மனிதன் பொருளைப் பெற்றதையும், பிறகு அதை இழந்ததையும் வேறோர் மனிதன் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான். பொருள் அகப்படுவதைக் குறித்து அவன் இன்புறுவதில்லை, பின்பு அது கைநழுவிப் போவதைக் குறித்துத் துன்புறுவது மில்லை. ஆக, ஏதேனும் ஒன்றைக் குறித்து மனிதன் இன்புறு வானாகில் பின்பு அதைக் குறித்து அவன் துன்பப்பட்டாக வேண்டும். ஆக, இன்பமும், துன்பமும் இணைபிரியாத மனதின் கூறுகளாம். மனது விரும்புவது வாய்க்குங்கால் அது இன்புறு கிறது. அது நழுவிப் போகுங்கால் துன்புறுகிறது. எங்கு இன்பம் இருக்கிறதோ அங்குத் துன்பமும் இருக்கிறது. எப்பொருளில் இன்பம் இருக்கிறதோ, அப்பொருளில் துன்பமும் இருக்கிறது. இன்பப்படுகிற மனது துன்பப்படவும் செய்கிறது. உலகப் பொருள் களில் கட்டுண்டு கிடக்கிற மனதுக்கு இன்பமும் துன்பமும் மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன. உலகப் பொருள்களைக் குறித்து எம்மனது இன்புறாதிருக்கிறதோ அம்மனது துன்புறாதும் இருக்கிறது. ஆதலால்தான் 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்' என்னும் கோட்பாடு வந்துள்ளது. இன்பமும் துன்பமும் மனதின் இணைபிரியாத இரு கூறுகள். மனதற்ற நிலையில் இவ்வுலக சம்பந்தமான இன்ப துன்பங்களும் அகன்று போகின்றன. ஆத்மாவுக்குச் சொந்தமாயுள்ள ஆனந்தமே எஞ்சியிருக்கிறது.

கேள்வி: *(346)* நல்லவன் விரைவில் கெடுகின்றான். ஆனால் கெட்டவன் நல்லவனாக நெடுநாட்கள் ஆகின்றன. கருணாகரக் கடவுள் ஆட்சியில் இங்ஙனமிருக்கலாமா?

பதில்: இக்கேள்விக்கு விடையாக இயற்கையில் பல

சம்பவங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தூய வெள்ளை வஸ்திரத்தை அழுக்குப்படுத்துவதற்குச் சிறிதுநேரம் போதுமானது. ஆனால் அழுக்கேறிய வஸ்திரத்தைச் துவைத்துச் சுத்தப்படுத்தி வைப்பதற்கு நெடுநேரம் பிடிக்கிறது. வெடிகுண்டு போட்டு ஒரு வீட்டைச் சிறிது நேரத்தில் பாழ்படுத்தலாம். ஆனால் அந்த வீட்டைக் கட்டுவதற்கு நெடுங்காலம் அவசியமாகிறது. பயனற்ற ஒரு பூமியைத் திருத்தியமைத்துக் கிருஷிக்குத் தகுதி யுடையதாகச் செய்தற்கு நெடுங்காலம் பிடிக்கிறது. ஆனால் அதைச் தரிசாக்குவதற்கு ஒரு பருவம் போதுமானது. இது இயற்கையைப் பற்றிய நியதி. இனி, மானுட அமைப்பை ஆராய்வோம். உயிர் வாழ்ந்திருப்பது கடினமானது. உயிரை ஒடுங்கிப் போகும்படி விட்டுவிடுவது ஒரு வினாடியில் நிகழு கிறது. கல்வி கற்பதற்கு மனிதன் நெடுநாள் எடுத்துக் கொள் கிறான். கற்ற கல்வியை நிரூபிப்பதற்குச் சிறிது நேரம் போது மானது. மனிதன் உடல் திட்பத்தைப் பெற நாள்தோறும் உடற்பயிற்சி பண்ணவேண்டும். தான் பெற்றுள்ள திட்பத்தைப் பிறர்க்குக் காட்டித் தருதற்குச் சிறிது நேரம் போதுமானது. இனி, ஒழுக்கம் என்னும் விழுப்பம் அலாதியான பாங்குடைய தாக இருக்கிறது. மானுடன் ஒருவன் ஒழுக்கத்தில் சிறந்தவன் என்பதை நிரூபிப்பதற்கு ஒவ்வொரு நாளும் அவன் ஒழுக்கத்தில் நிலைநின்று வரவேண்டும். தன்னை ஒழுக்கம் கெட்டவனாகச் செய்து கொள்ளுவதற்குச் சிறிது நேரம் போதுமானது. தன் செயலே தன் பாங்கை எடுத்துக்காட்டுகிறது. கருணாகரக் கடவுள் சந்நிதியில் மனிதன் நல்லவனாவதற்கும் வாய்ப்பிருக் கிறது. அவன் கெட்டுப் போவதற்கும் வாய்ப்பிருக்கிறது. நல்லவனைக் கெட்டுப் போகும்படி கருணாகரனாகிய கடவுள் ஏன் விட்டுவிட்டார் என்னும் கேள்விக்கு இடமில்லை. தீபத்தின் வெளிச்சத்தைக் கொண்டு ஒருவன் தெய்வீக நூல்களைப் படித்து வருகிறான். அதே தீபத்தின் வெளிச்சத்தைக் கொண்டு மற்றொருவன் புல்லிய விஷயங்களை வேறு ஒரு புஸ்தகத் தினின்று படிக்கின்றான். தீப வெளிச்சமோ இரண்டு செயல் களுக்கும் பொது நிலையிலிருந்து கொண்டு பயன்படுகிறது. மானுட வாழ்வு அந்தத் தீப வெளிச்சத்திற்கு நிகரானது. படிப் படியாக மேல்நிலைக்கு வருவதற்கு வாழ்வைப் பயன்படுத்தலாம்.

சிறிது நேரத்தில் அதே வாழ்வைக் கெட்டதாகவும் செய்து கொள்ள மனிதனுக்கு இயலுகிறது. கெட்ட புஸ்தகத்தைப் படிக்கத் தீபம் ஏன் வெளிச்சம் தருகிறது என்னும் கேள்வியைக் கேட்பது பொருந்தாது. மனிதன் கெட்டுப்போகக் கருணாகர னாகிய கடவுள் ஏன் இடம் கொடுத்தார் என்கின்ற கேள்விக்கும் இடமில்லை. கருணைக்கு இருப்பிடமாகக் கடவுள் இருக்கிறார் என்பது கோட்பாடு. இங்குக் கருணை என்பதற்குப் பொருள் வசதிகளனைத்தையும் உயிர் வகைகளுக்கு இறைவன் செய்து வைத்திருக்கிறார் என்பதாம். இந்த வசதிகளை மனிதன் தன்னு டைய முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தலாம்; தனக்குக் கேடு சூழ்ந்து கொள்ளுவதற்கும் பயன்படுத்தலாம்; இதுவே இயற்கையின் நியதி. சூரிய வெளிச்சத்தை நலன் செய்வதற்கும் பயன்படுத்தலாம். கேடு செய்வதற்கும் பயன்படுத்தலாம். சூரிய வெளிச்சம் வாய்த்திருப்பது கடவுளின் கருணை. அதை யார் எந்தக் காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது அவரவர் பரிபாகத்தையும் பொறுப்பையும் பொறுத்ததாகிறது. குழந்தையொன்று திண்ணையினின்று கீழே விழாதிருக்கும்படி பெற்ற தாய் பார்த்துக் கொள்ளுகிறாள். அதே விதத்தில் நல்லவர்கள் கெட்டவர்களாகப் போகும்படி கடவுள் இடந்தர லாகாது என்று சொல்லுவது பொருந்தாது. நலத்தின் விளை வையும், கேட்டின் விளைவையும் கடவுள் சதா காட்டிக் கொண்டிருக்கிறார். கேட்டைத் தவிர்த்து நலத்தில் நிலைபெற் றிருப்பது நம்முடைய பொறுப்பாகும். நல்லவனொருவன் கேட் டினுள் பிரவேசிக்கின்றபொழுது அப்படிச் செய்ய வேண்டாம் என்று மனச்சாட்சியாக இருந்துகொண்டு கடவுள் எச்சரிக்கை செய்கிறார். அந்த எச்சரிக்கையை ஏற்றுக்கொள்கிறவன் கேட்டி னின்று விலகிக்கொள்கிறான். அந்த எச்சரிக்கையைக் கேட்டுக் கொள்ளாதவன் தீச்செயலைச் செய்து அதன் விளைவை அனுபவித்துப் பிறகு பாடம் கற்றுக்கொள்கிறான். ஆனால் கெட்டுப் போகிறவனும் நல்வழிக்கு வருவதற்குச் சந்தர்ப்பமிருக் கிறது. அத்தகைய சந்தர்ப்பத்தைக் கொடுத்து அவனைத் திருத்தியமைப்பது கடவுளின் கருணை எனலாம்.

சுருங்கச் சொல்லின் கருணை எனப்படும் இயற்கையின் வசதிகளை நல்வழிக்கு ஒருசிலரே பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அத்தகையவர்களே மேலே வருகின்றனர். மற்றவர்கள் வசதிகளை முறைதவறிப் பயன்படுத்தித் துன்பத்தில் இடர்ப்பட்டு பிறகு நல்வழிக்குத் திரும்புகின்றனர். இடர்ப்படுதல் அன்னவர்களுக்குத் தேவையாயிருக்கிறது. அங்ஙனம் துன்பத்தின் வாயிலாகவும் அவர்களை நல்வழிக்குத் திருப்புவது கடவுளின் கருணை எனலாம். ஆதலால் கருணாகரனுடைய கருணைச் செயல் யாண்டும் வேலை செய்து கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துபவர்களுக்கு இடையில் பரிபாக வேறுபாடு உண்டு. ❑

17. மனபரிபாகம்

கேள்வி: *(347)* இறக்கும் தறுவாயில் ஆண்டவனுடைய திருநாமங்களை உச்சரிப்பவர்கள் நற்கதியடைகிறார்கள் என்று அநேக பெரியார்கள் சொல்கிறார்கள். சதா காலமும் கடவுள் சிந்தனையிலிருப்பவர்கள் இறக்கும் தறுவாயில் ஆண்டவனுடைய திருநாமத்தைச் சொல்லுவதற்கு முடியாமல் போய்விடுகிறது. ஆனால் சிலர் தங்கள் வாழ்க்கையில் மோசமாகவும், கெட்ட செய்கையே செய்பவர்களாகவும் இருந்து பின்பு இறக்கும் தறுவாயில் ஆண்டவனுடைய திருநாமத்தை உச்சரித்துவிடுகிறார்கள். இது ஏன்?

பதில்: சாகும் தறுவாயில் ஒரு மனிதன் தெய்வத்தினுடைய பெயரைச் சொல்லச் சக்தியுடையவனாக இருக்கலாம் அல்லது சக்தியற்றவனாகப் போய்விடலாம். வாய்விட்டு நாமத்தைச் சொல்லுவது முக்கியமானதல்ல; அந்தச் சொல்லுக்கு அடிப்படையாக மனதில் உண்டாகும் எண்ணம் அல்லது பாவனையே மிகமிக முக்கியமானது. ஒவ்வொரு மனிதனும் தன் இயல்புக்கு ஏற்பக் கனவு காண்கின்றான். கனவு காண்கின்ற வேளையில் அதை மாற்றியமைக்கும் வல்லமை அம்மனிதனுக்குக் கிடையாது. கனவில் வசப்பட்டவனாகவே அவன் இருந்து விடுகின்றான். அதேபோன்று சாகும் தறுவாயில் ஒரு மனிதனுடைய இயல்பு அவனுடைய மனப்பான்மையாகச் சூக்ஷ்ம நிலையை அடைகிறது. அந்த வேளையில் அதை மாற்றியமைக்க அவனுக்கு ஒருபொழுதும் இயலாது. ஒரு மரத்தினுடைய இயல்பெல்லாம் அதனிடத்திருந்து உண்டாகிய விதையில் போய் அடங்குவது போன்று வாழ்நாளில் ஒரு மனிதன் செய்துள்ள வினைகள் அனைத்தின் பயன் சூக்ஷ்மமாக அவனுடைய மனத்தகத்தில் ஒடுங்கி

நிற்கிறது. அந்த இயல்பைத் திரும்பவும் விளக்குவதே அடுத்த பிறவியின் செயல் ஆகும். ஆதலால்தான் ஒரு மனிதன் சாகும்பொழுது சங்கரா என்று சொல்லித் தெய்வ நிலையை நொடிப்பொழுதில் பெற்றுவிட முடியாது என்னும் கோட்பாடு வந்துள்ளது. காலமெல்லாம் ஒரு மனிதன் செய்துவரும் செயலுக்கு ஏற்ப அவனுடைய தன்மை மாறியமைகிறது. உடலை மாற்றியமைக்கும் செயலைச் சாவு என்கின்றோம். சட்டையை மாற்றுவதால் மனிதன் மாறிவிடுவதில்லை. அங்ஙனம் உடலை மாற்றுவதாலும் மனிதன் திடீரென்று மாறியமைந்து விடுவதில்லை. படிப்படியாகத் தன் இயல்பை மேலான இயல்பாக மாற்றியமைக்கும் செயலை மனிதன் முறையாகச் செய்து வந்தால் போதுமானது. அதன் மூலம் அவன் மேன்மையடைவது திண்ணம். சாகும்பொழுது எந்தச் சொல் அல்லது சிந்தனை முன்னணியில் வந்து நிற்கப்போகிறது என்பதைப் பற்றிச் சாதகன் ஒருவன் கவலைப்பட வேண்டியதில்லை. எல்லா நிலையிலும் தன் இயல்பு ஒன்றே தனக்குச் சொந்தமாய் இருக்கிறது. சாகும்பொழுது கடவுளுடைய பெயரை வாயால் சொல்லுவதால் எல்லா நலனும் வந்துவிடாது. அந்தச் சொல்லுக்கு அடிப்படையாயுள்ள இயல்புக்கு ஏற்ப நலனோ கேடோ வந்தமைகின்றது.

கேள்வி: *(348)* ஒரு நாளைக்குக் கணக்கற்ற எண்ணங்களை எண்ணுகிறது மனது. மனது எங்கே இருக்கிறது? மனதுக்கும் கடவுளுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகக் கூறுகிறார்களே, அது என்ன? விளக்கம் தேவை.

பதில்: ஸ்தூலப் பொருள் ஒன்றை இன்ன இடத்தில் இருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் ஒரு நுண்பொருளோ இடம் என்னும் எல்லையில் அடங்குவதில்லை. வானொலி ஆகாயத்தில் பரவுகிறது. சுவர்களையும், மலைகளையும், கடலையும் கடந்து வானொலி இன்னொரு இடத்துக்குப் போக முடியும். அத்தகைய வானொலி எங்கே இருக்கிறது என்கின்ற கேள்வி கேட்பது பொருந்தாது. அது சூக்ஷ்மமானதாதலால் எங்கு வேண்டுமென்றாலும் வியாபிக்கவல்லது. மனதோ வானொலியை விடச் சூக்ஷ்மமானது. மனிதனுடைய

உள்ளத்தில் அது உதிக்கிறது. ஆனால் இன்ன இடத்தில் இருக்கிறதென்று அதற்கு இருப்பிடம் குறிக்கமுடியாது. அல்ப உலகப்பொருள்களிடத்தும் அது செல்லவல்லது. இறைவனுடைய திருவடிக்கும் அது போகக்கூடும். ஒவ்வொரு மனிதனுடைய மனதுக்குப் பிறப்பிடம் அவனுடைய நெஞ்சம். இந்த மனதைக் கொண்டுதான் மனிதன் உலகை அறிகின்றான். கெட்ட மன முடையவனுக்கு உலகமெல்லாம் கேடுடையதாகத் தென்படும். நல்ல மனமுடையவனுக்கு உலகம் நல்லதாகவே தென்படும். ஆகவே மனது என்பது ஒரு கண்ணாடி. பச்சைக்கண்ணாடி போட்டிருப்பவனுக்கு உலகமெல்லாம் பச்சையாகத் தென்படுவது போன்று மனநிலைக்கு ஏற்ற காட்சி புறவுலகில் தென்படுகிறது. இந்த மனதை முற்றிலும் தூயதாக்கிவிட்டால் உள்ளும் புறமும் எங்கும் கடவுளே நிறைந்திருப்பது தென்படும்.

கேள்வி: *(349)* பட்டினத்தார் துறவு பூணுதற்கு முகாமை யாயிருந்த 'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே' என்ற உறுதிமொழிக்கு விளக்கம் வேண்டுகிறேன்.

பதில்: பட்டினத்தடிகள் வீட்டிலிருந்து எங்கேயோ வெளியே போயிருந்தபொழுது யாரோ ஒருவன் ஒரு பெட்டகத்தைக் கொண்டு வந்து வீட்டில் கொடுத்துவிட்டுப் போனான். பட்டினத்தார் அதைத் திறந்து பார்த்தார். அதனுள் காது ஒடிந்த ஊசி ஒன்றிருந்தது. அதைக் கண்டதும் உலகம் நிலையற்றது என்கின்ற விவேகம் அவருக்கு உதித்தது. வாணிகம் செய்து ஏராளமாகப் பொருளைத்திரட்டி வந்த அவர் இறுதியில் தாம் ஒரு காதற்ற ஊசியையும் தம்முடன் எடுத்துச் செல்ல முடியாது என்பதை உணர்ந்தார். உடனே உலக சம்பத்து அனைத்தையும் முற்றத்துறந்தார். பரத்தை நாடும் பாங்குடைய வராகத் துறவறம் பூண்டு அக்கணமே அவர் வெளியேகிவிட்டார். ஏற்கனவே அவருக்கு மனபரிபாகம் அமைந்திருந்ததினால் இந்தச் சிறு நிகழ்ச்சி அவர் உலகப்பற்றை நீத்து விடுதற்கு முகாமையாக வந்தமைந்தது.

கேள்வி: *(350)* எனது நண்பர் ஒருவர் பக்தி நெறியில் இருக்கிறார். அவருடைய பெற்றோர்கள் அவருக்குக்

கல்யாணம் செய்வதாகத் தினம் தினம் வற்புறுத்துகிறார்கள். நண்பருக்கோ கல்யாணத்தின்மேல் விருப்பமே இல்லை. பெரியவர்கள் இப்படி வற்புறுத்துவதால் அவர் தாய் தந்தை யரை விட்டு ஒரு மடத்திற்கு ஓடிவிடுவதாகச் சொல்கிறார். தாய் தந்தையரோ கல்யாணம் செய்து வைத்தால்தான் எங்கள் கடமை பூர்த்தியாகும் என்பதாகச் சொல்கிறார்கள். இதற்குப் பதில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பதில்: இதற்கு விடை ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மொழி களில் எண் 1101 ஆகும். அது வருமாறு:

மனிதனுக்கு எப்படி வைராக்கியம் வரும்? ஒருவனிடம் அவனுடைய மனைவி வந்து, "நாதா! எனக்கு என் சகோதர னைப் பற்றி அதிகக் கவலையாக இருக்கிறது. சென்ற ஒரு வருஷமாக அவன் சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் போவதாகச் சொல்லிக்கொண்டு அதற்கு வேண்டிய பிரயத்தனங்களையும் செய்து கொண்டிருக்கிறான். அவன் தனது ஆசைகளையும் தேவைகளையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண் டிருக்கிறான்' என்றாள். இதைக் கேட்ட அம்மனிதன், "அன்புடை யாய்! உன் சகோதரனைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். அவன் ஒருநாளும் சந்நியாசி ஆகமாட்டான். அப்படி ஒருவரும் சந்நியாசம் பெற்றதில்லை" என்றான்.

மனைவி "பிறகு எப்படித்தான் ஒருவர் சந்நியாசி ஆவார்?' என்றாள்.

புருஷன் "இப்படித்தான்!' என்று சொல்லிக்கொண்டே தான் கட்டியிருந்த வஸ்திரத்தைத் துண்டுகளாய்க் கிழித்து அவற்றில் ஒன்றை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, தன் மனைவியைப் பார்த்து அந்த க்ஷணமுதற்கொண்டு அவளும் அவளைப் போன்ற பெண்பாலார் அனைவரும் தனக்குத் தாய்மாருக்குச் சமானம் என்று கூறி வெளியே போய்விட்டான். அப்பால் அவன் வீட்டுக்குத் திரும்பவே இல்லை.

கேள்வி: (351) **கடவுளைத் தினமும் தியானம், ஜெபம், பூஜை, விரதம் முதலியவைகளைச் செய்து கொண்டிருப் பவர்களுக்குக் குடும்பத்தில் மனதிற்கு நிம்மதி இல்லாத வகையில் மனக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மேலும்**

இவர்கள் உலக விவகாரங்களில் ரொம்பவும் நேர்மை யாகவும் நடந்து வருகிறார்கள். இதற்கு மாறாகக் கடவுளை நினைக்காமல் வஞ்சகம், நம்பிக்கைத் துரோகம், துர்நடத்தை இது போன்ற கெட்ட குணங்களையுடைவர்கள் குடும்பத்தில் பலன் திருப்திகரமாக நடந்து வருகின்றது. காரியங்கள் கைகூடி வருகின்றன. இதற்குக் காரணங்கள் என்ன?

பதில்: இக்கேள்வியை வேறொரு பாங்கில் சொல்லுமிடத்து நன்னெறியில் செல்லுகின்றவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவ தில்லை. நெறிதவறிப் போகின்றவர்கள் வாழ்க்கையில் வெற்றி யடைந்து வருகிறார்கள் எனப் பொருள்படுகிறது. கடவுள் வழிபாடு செய்கின்றவர்கள் தங்களுக்குத் தேவையானவைகளை யெல்லாம் கடவுள் தந்தருள்வார் என்று எதிர்பார்த்திருக்க லாகாது. வாழ்க்கைக்குத் தங்களுக்குத் தேவையாயிருக்கும் பொருள், உணவு, உடை முதலியவைகளைத் தாங்களே முறையாகப் பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டும். கடவுள் அவைகளையெல்லாம் தந்தருள்வாரென்று முயற்சியற்றிருக்கின்ற வர்கள் வழிபாட்டுத் தத்துவத்தை அறிந்தவர்களுமல்லர்; வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவர்களுமல்லர். முறையாகப் பாடுபட்டுப் பொருளைச் சம்பாதிப்பதே ஒருவிதத்தில் கடவுள் வழிபாடு ஆகிறது. அப்படி நேர்மையாக ஒருவன் சம்பாதிக்கி றான். மற்றொருவன் பொய், பித்தலாட்டம் முதலிய பொருந் தாத முறைகளைக் கையாண்டு பொருளைச் சேகரிக்கிறான். ஒருவேளை அவனுக்குப் பொருளும் ஏராளமாகச் சேர்ந்துவிட லாம். பல வசதிகளுடன் சுகஜீவனம் பண்ணுவதும் அவனுக்குச் சாத்தியமாகலாம். ஆனால் அத்தகைய வசதிகள் நிறைந்த வாழ்க்கையை வெற்றிகரமான வாழ்க்கையென்று பகரலாகாது. விதவிதமான வசதிகளையும், சௌகரியங்களையும், சுகஜீவனத் தையும் பெறுவது வாழ்க்கையின் மேலான குறிக்கோளாகாது. மனபரிபாகம் அடைந்து வருவதே மானுட வாழ்க்கையின் மேலான குறிக்கோளாகும். எப்பொழுது ஒருவன் முறைதவறிப் பொருள் சம்பாதிக்கிறானோ அப்பொழுதே அவனுடைய மனது முற்றிலும் கெட்டுப் போனதாகிறது. கெட்ட மனமுடையவனை வாழ்க்கையில் வெற்றி பெற்றவனென்று பகர்வதெங்ஙனம்? நல்ல மனப்பான்மையுடையவனுக்கு ஒருவேளை செல்வம்

அதிகமாகச் - சேராது போய்விடலாம். செல்வத்தை ஏராளமாகச் சேகரிப்பது வேறு. மனபரிபாகமடைந்து வருவது வேறு. நேரான வழியில் பாடுபடுவதன் மூலம் தனக்கு அகப்படுகின்ற செல்வத்தைக் கொண்டு திருப்தியடைந்தவனாய் நல்வாழ்க்கை வாழ்ந்து வருபவனே உண்மையான கடவுள் பக்தன் ஆகிறான். அத்தகையவன் தியானம், பூஜை முதலியவைகளைச் செய்வதன் மூலம் மனபரிபாகமடைகிறான். விவேகமும் பக்தியும் அவனுக்கு அதிகரிக்கிறது. தன்னுடைய மனபரிபாகத்தால்தான் அவன் நிரந்தரமான ஆனந்தத்தை அடைகிறான். பொருள் வருவதையும் போவதையும் பற்றி அவனுக்குக் கவலையில்லை. உண்மையான பக்தனுடைய போக்கு அத்தகையதாம். தோன்றிய முறைகளை யெல்லாம் கையாண்டு பொருளைப் பெருமிதமாகத் திரட்டிச் சுகஜீவனம் பண்ணுகிறவனுக்கு நல்ல மனநிலையும் உறுதிப் பாடான வாழ்வும் அமைவதில்லை. எப்பொழுது வேண்டுமானா லும் அவனுடைய பொருள் தட்டழிந்து போய்விடும். பொருள் போய்விடுகின்றபொழுது அம்மனிதன் ஒன்றுக்கும் உதவாதவன் ஆகின்றான். ஆனால் அருளையே நாடியிருக்கும் பக்தனுக்கு வாழ்க்கையில் அத்தகைய தடுமாற்றங்கள் வந்தமைவதில்லை. அவன் அமைதியாக ஒரே பாங்கில் அருள்நாட்டத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றான். வெளித் தோற்றத்துக்கு அவனுடைய வாழ்வு மிக எளியது எனினும் எல்லா நலன்களும் மெய்யன்பு பூண்டுள்ள அந்தப் பக்தனுக்கே வந்தமைகின்றன. அருளையும், பொருளையும் பிரித்து ஆராய்ந்து பார்க்கின்ற வர்களுக்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். கடவுளுடைய பக்தனுக்கு ஒரு நொடிப்பொழுது கீழ்மை உண்டாவதில்லை. உலகத்தவருடைய காட்சியில் தென்படுகிற உடைமைக்கும் வறுமைக்குமிடையில் அவன் படிப்படியாக மேலோன் ஆய்க்கொண்டு வருகிறான். இதுவே நல்வாழ்க்கையின் விளைவு. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் ஒருவிதத்தில் இக் கோட்பாட்டுக்கு விளக்கமாக வந்தமைகிறது. அதாவது மனம் திருந்தியமையுமளவு ஒருவனுடைய வாழ்வு நல்வாழ்வு ஆகிறது.

கேள்வி: *(352)* பள்ளிகளில் நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்கினாலும் தேறியவன்; நூற்றுக்கு நாற்பது மார்க்குகள்

வாங்கினாலும் தேறியவன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அது போன்று ஒழுக்கம், உண்மை, அஹிம்சை, சத்தியம், பிரம்மச்சரியம் ஆகிய குணங்களில் ஒவ்வொன்றிலும் எந்த அளவுக்குத் தேர்ந்தவர்களைத் தேறினார்கள் என்று கூற முடியும்?

பதில்: அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரகம் ஆகிய பஞ்ச சீலங்களை ஆத்மசாதகன் யாண்டும் பழகி வரவேண்டும். நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்குகிற பாங்கில் இத்தகைய ஒழுக்கங்களிலும் மனிதன் முற்றிலும் மனபரிபாகம் அடைந்திருக்கின்றபொழுதே பரஞானத்துக்குத் தகுதியுடையவனாகின்றான். பள்ளிக்கூடத்துப் பரீக்ஷையோடு கடவுளை அடைதற்கான நெறியை ஒப்பிடுவது பொருந்தாது. பரஞானத்தைப் பெற்றதும் அவன் முக்தியடைந்து விடுகிறான். கடலைப் போய்ச்சேரும் வரையில் நதி ஓயாது ஓடிக் கொண்டிருப்பது போன்று மனிதன் கடவுளில் இரண்டறக் கலக்கும் பரியந்தம் இந்த ஒழுக்கங்களையெல்லாம் அவன் ஒழுங்காகப் பழகிவர வேண்டும். ஒழுக்கம் பூர்த்தியாகுமிடத்துக் கடவுளில் கலத்தல் தானாக நிகழ்ந்துவிடுகிறது. கடவுளை அடையும் பரியந்தம் மனிதன் நல்லொழுக்கத்தில் இருந்தாகவேண்டும். அதன்பிறகு அவன் மனிதநிலையைத் தாண்டிவிடுகிறபடியால் ஒழுக்கத்தில் தவறிவிடுதல் என்பது அவனுக்கு உண்டாவதில்லை.

பள்ளிக்கூடத்துப்பிள்ளை ஒருவன் ஏதேனும் ஒரு பாடத்தில் சிறிதளவாவது கற்றிருக்கிறானா என்பதைச் சோதித்துக் கண்டு கொள்வதற்காக அவன் நூற்றுக்கு நாற்பது மார்க்கு வாங்கினால் போதுமென்கிற நியதி ஏற்பட்டிருக்கிறது. அவன் பாலர் வகுப்பிலிருந்து கல்லூரிப் படிப்பை முடிக்கும் பரியந்தம் ஒவ்வொரு பாடத்திலும் நூற்றுக்கு நாற்பது மார்க்கு வீதம் பெற்றுப் படிப்பைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அத்தகையவன் படிப்பாளி என்றே கருதப்படுகிறான். வாழ்க்கைக்கும் ஓரளவு அது போதுமானது. ஆனால் ஒழுக்கமோ மண்ணுலக வாழ்க்கை முறையாக நடைபெறுவதற்கென்று மட்டும் அமைந்ததல்ல. மனிதன் முற்றிலும் பரிபக்குவம் அடைந்து கடவுளை அடைவதே குறிக்கோள். மனத்துக்கண் உள்ள மாசு அனைத்தும் நீங்கப் பெறுகின்றபொழுதே மனிதன் கடவுளை அடையத்

தகுதியுடையவனாகின்றான். சிறிதளவாவது குறைபாடு இருந்தால் அதை ஒழுங்குப்படுத்துதற்பொருட்டுத் திரும்பவும் அவன் பிறந்தாக வேண்டும். கடவுளோ கேடு ஒன்றும் இல்லான், நலன் அனைத்தும் உடையான். அத்தகைய கடவுளை அடைகின்ற மனிதனும் கேடு ஒன்றும் இல்லான், நலன் அனைத்தும் உடையவன் ஆகவேண்டும். சிறிதேனும் குற்றமில்லாத பொன்னே சிறந்த பொன்னாகக் கருதப்படுவது போன்று குற்றம் சிறிதேனும் இல்லாத மனிதனே கடவுளை அடைதற்குத் தகுதியுடையவனாகிறான். எனவே சீலத்தில் அவன் நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்குகிற பரிபக்குவம் அடைந்தாக வேண்டும்.

கேள்வி: *(353)* உலகில் யாரும் கற்றுக் கொடுக்காமலேயே மீன், மீனைப்போல நடந்து கொள்கின்றது. பறவை, பறவையைப் போல நடந்து கொள்கின்றது. ஆனால் மனிதர்கள் எவ்வளவோ கற்றும் மனிதர்களாகப் பெரும்பாலோர் நடந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் யாது?

பதில்: உயிர்வகைகளுள் உயர்ந்த நிலைக்கு வந்தவன் மனிதன். விதவிதமான முயற்சிகள் எடுத்துக்கொள்ள மனிதன் ஒருவனுக்கே இயலுகிறது. மற்ற உயிர்கள் தங்கள் பாதுகாப்புக்குரிய ஏதேனும் ஒருவித ஆயுதத்துடன் பிறக்கின்றன. மனிதனுக்கோ பிறவியில் ஆயுதம் ஒன்றும் கிடையாது. கணக்கற்ற ஆயுதங்களை அமைத்து அவைகளைக் கையாளும் அறிவுத் திறன் மனிதனுக்கு இருக்கிறது. மீனும் மற்ற உயிர்வகைகளும் நீரில் நீந்தக்கூடியவைகளாய் இருக்கின்றன. ஆனால் மனிதனோ பழகிய பின்பே நீரில் நீந்தவல்லவனாகிறான். பறவை வானத்தில் பறக்க வல்லதாயிருக்கிறது. மனிதனோ பறவைபோன்ற விமானம் ஒன்றை அமைத்து அதை இயக்குவதன் மூலம் வானத்தில் சஞ்சரிக்கமுடியும். தன் அறிவுத்திறனை எப்படியெல்லாம் மனிதன் பயன்படுத்துகிறானோ அதற்கேற்றவாறு அவன் மேன்மையடைய முடியும்; கீழ்மைக்கும் போகமுடியும். எனவே மானுட வாழ்க்கை அலாதியானது. அதில் அவனுக்கு வாய்ப்புகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. மற்ற உயிர்களுக்கு அத்தனைவிதமான வாய்ப்புகள் வந்தமைவதில்லை. இப்படித் தனக்குக்

கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்புகளை முறையாகப் பயன் படுத்துவது மனிதனுடைய கடமையாகும். மனிதன், மனிதன் போன்று நடந்துகொள்ள இயலாதிருப்பது முயற்சியின் குறைவு. முயற்சியின் மூலம் மனிதன் மனிதனாக நடந்து கொள்ளலாம்; ஒரு தேவனாகவும் நடந்துகொள்ளலாம்.

கேள்வி: *(354)* கடவுள் எங்கும் நிறைந்த கருணாகரன் என்றும், சர்வவியாபி என்றும் வேதம் பகர்கின்றது. மேலும் பல பெரியோர்களின் சரித்திரத்தில் பலவிதக் கடும்பிணிகள் வருவானேன்? பிணி உடலுக்கு அல்லாமல் ஆத்மாவுக்கு இல்லை என்றால் உடல் நல்ல நிலைமையில் இல்லாவிடில் ஆத்மசாதனம் செய்வதெப்படி? உதாரணமாக ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் கடும் பிணியால் வருந்தி ஒரு கிண்ணம் கஞ்சி குடிப்பதற்குக்கூட முடியாமல் வருந்தினார் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீரமண மஹரிஷிகள் தீராத புற்றுநோயால் வருந்தினார்கள். மேலும் தர்ம சக்கரத்தில் வந்துள்ள 'வினை வாழ்வை வகைப்படுத்துகிறது' என்ற தலைப்பில் பகவான் - புத்தர் - ஏசு கிறிஸ்து இவர்கள் பல ஜென்மங்களில் நல்வினையாற்றினதின் பயனாக உயர்ந்த நிலை அடைந்தார்கள் என்று இருக்கிறது. ஆனால் அவர் களுடைய சரித்திரத்திலும் கடும் பிணிகளில் வருந்தினார்கள் என்று இருக்கிறது. கடவுள் தன்னை நாடி வருகிறவர்களுக்கு இவ்வித இன்னல்களைக் கொடுப்பதேன்?

பதில்: உடலுக்குக் காயம் என்பது மற்றொரு பெயர். நோய்வாய்ப்பட்டதென அது பொருள்படுகிறது. உடலின் அமைப்பை மருத்துவ நூல்கள் ஆழ்ந்து ஆராய்ச்சி பண்ணு கின்றன. அது எங்ஙனம் வாழ்ந்திருக்கிறது என்பதையும் அந்நூல் கள் விளக்கிக்கொண்டு போகின்றன. மருத்துவ நூல்களை ஆழ்ந்து படித்துப் பார்த்தான பிறகு மனிதன் மாண்டுபோய் விடுவதைப் பற்றி அவ்வாராய்ச்சிக்காரர்கள் வியப்படையமாட் டார்கள். இயற்கையிலுள்ள இத்தனைவிதமான இடைஞ்சல் களுக்கிடையில் மனிதன் உயிர்வாழ்க்கையை நிலைபெற்றிருக்கச் செய்து விடுகிறானே என்றுதான் அவர்கள் ஆச்சரியப்படு கிறார்கள். எத்தனையோ இடையூறுகளுக்கு இடையில் உடல்

வாழ்வு நிலைபெற்று வருகிறது. அந்த இடையூறுகளின் வெளிப்படையான விளக்கங்களே நோய் வகைகள் எனப் பெயர் பெற்றிருக்கின்றன. நோய்வாய்ப்படாத உடல் உலகில் இல்லவேயில்லை. ஒரு வீட்டில் குடியிருக்கிறவன் அதற்குக் குடிக்கூலி கொடுத்தாக வேண்டும். உடல் என்னும் வீட்டில் குடியிருக்கிற மனிதன் நோய்வாய்ப்படுவதே அவன் கொடுக்கிற குடிக்கூலி ஆகிறதென்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந் துள்ளார். உடல் நோய்வாய்ப்படாவிட்டால் மனிதன் முன்னேற்ற மடைய முடியாது. மழையில் நனைந்தும், வெய்யிலில் காய்ந்தும், குளிரில் நடுங்கியும் உடல் துன்பப்படுகிறது. அக்குறைகளினின்று விடுபடுவதற்கு மனிதன் வீடு கட்டுகிறான். அதற்குள் பல வசதிகளைச் செய்து அமைக்கிறான். இந்த இடுக்கண்கள் உடலுக்கு ஏற்படாவிட்டால் வசதியான வீடுகட்டுதல் என்கின்ற முன்னேற்றம் மனிதனுக்கு உண்டாகாது. குளிர், வெப்பத் தினின்று உடலைப் பாதுகாப்பதற்கான உடை வகைகளை மனிதன் உண்டுபண்ணி இருக்கிறான். கல் ஒன்று குளிரிலும் வெப்பத்திலும் பாதிக்கப்படாது இருப்பது போன்று மானுட உடலும் இருந்துவிடுமாகில் விதவிதமான உடைவகைகளை ஆயத்தப்படுத்துதல் என்னும் முன்னேற்றம் மனிதனுக்கு இல்லாது போய்விடும்.

இனி, உடலுக்குள்ளிருக்கும் உறுப்புக்களனைத்தும் எப் பொழுதுமே திட்பம் வாய்ந்தவைகளாக இருப்பதில்லை. இடை யிடையே அவைகள் தளர்வுறவும், பழுது பட்டுப்போகவும் செய்கின்றன. அவ்வேளைகளில் உடல் நோய்வாய்ப்பட்டதாகிறது. எப்பொழுதெல்லாம் உடல் நோய்வாய்ப்படுகிறதோ அப்பொழுது உடலைப்பற்றிய உணர்ச்சி தானாக வந்துவிடுகிறது. அதற்கு இரண்டொரு சான்று எடுத்துக் கொள்வோம். காலிலுள்ள சிறுவிரலை நாம் நாள்தோறும் நினைப்பதில்லை. ஆனால் அது காயப்பட்டுவிட்டால் இடையறாது அதைப்பற்றி நினைக் கிறோம். தலையைப்பற்றி நாம் அதிகம் நினைப்பதில்லை. ஆனால் தலைவலி வந்துவிட்டால் அதையே ஓயாது நினைக்கிறோம். பசியும் ஒருவிதமான நோய். பசி வரும்பொழுது உடல் ஞாபகம் வருகிறது. பசியில்லாதபொழுது மனிதன் உடலைப் பெரிதும் மறந்திருக்கிறான். இத்தனை விதங்களில்

மனிதனுக்கு உடல் உணர்வு வருகிறது. ஒருவிதத்தில் அந்த உணர்வைத் துன்பம் என்றே சொல்லவேண்டும். துன்பப்படாத வர்களுக்கு முன்னேற்றமில்லை. துன்பம் குறைகிற அளவு முன்னேற்றத்துக்கான முயற்சி குறைந்துவிடுகிறது. துன்பம் அதிகரிக்குமளவு முன்னேற்றத்துக்கான முயற்சியும் அதிகரிக்கிறது. சாதாரண மக்களாகிய நாம் நோய் என்னும் துன்பத்தின் மூலமாக அதைக் கடப்பதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறோம்.

பெரியோர்கள் பிறவியைப் பிணியாகக் கருதுகின்றனர். பிறவிப் பிணியைப் போக்குதற்கு அவர்கள் பெரும்பாடு படுகின்றனர். உடலில் உண்டாகின்ற நோய்களை அமைதியாகப் பொறுத்துப் பழகுதலும் ஒருவிதமான முன்னேற்றமாகும். ஆத்ம சாதனங்களில் ஒன்று உடலுக்கு உண்டாகும் நோயைப் பொறுத் துப் பழகுதலாம். சாதனத்தில் மேலே போயிருக்கிறவர்கள் உடல் பெரும்பிணிக்கு உட்பட்டிருப்பதற்கிடையில் அதைப் பொருட் படுத்தாது இருக்கின்றனர். கிழிந்துபோன உடையைப் பற்றிக் கவலையற்றிருப்பது மக்களில் சிலருக்குச் சாத்தியம். நோய்வாய்ப் பட்டிருக்கிற உடலைப்பற்றிக் கவலையற்றிருப்பது சான்றோர் களுக்குச் சாத்தியம். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும், ஸ்ரீ ரமண மஹரிஷியும் அதற்கு நல்ல சான்றுகளாக இக்காலத்தில் வாழ்ந்துள்ளவர்களாகிறார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து உடலில் உண்டாகின்ற நோயே மனிதனை முன்னேற்றத்தில் தூண்டுகிறது என்பது வெளியாகிறது. நோய் முற்றிலும் அவசியமாய் இருப்பதால் கடவுள் ஏன் அதற்கு இடந்தந்தார் என்னும் கேள்வியை நாம் கிளப்பலாகாது.

கேள்வி: *(355)* "ஏழைகளுக்காக எவன் இதயம் ரத்தம் வடிக்கிறதோ அவனே மகாத்மா" என்று சுவாமிஜி கூறி யுள்ளார். இச்செயல் உலகக் காட்சிகளுக்கு வசப்பட்ட செயல் அன்றோ? முக்குணங்களையும் கடந்தவனுக்கு இது பொருந்துமா? செயலின்மையிலும் பற்றுவிட்டவன் ஆகின்றானா?

பதில்: மக்களுள் மேலோர் ஆகின்றவர்கள் பலதரப் பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களெல்லாருக்கும் ஒரே

விதமான விளக்கம் கொடுக்க முடியாது. கல்வி நிபுணர்களைச் சான்றாக எடுத்துக் கொள்வோம். ஒருவன் இன்ஜினியரிங் கல்வியில் உயர்நிலைக்குப் போயிருக்கலாம். மற்றொருவன் மருத்துவ சாஸ்திரத்தில் முன்னணிக்கு வந்திருக்கலாம். இன்னொருவன் சட்டங்களைப் பற்றிய விஷயத்தில் மேன்மையடைந்திருக்கலாம். இவர்களெல்லாரும் கல்விமான்கள் எனினும் இவர்களுள் ஒருவனுக்குக் கொடுக்கிற விளக்கம் இன்னொருவனுக்குப் பொருந்தாது. சான்றோர்களுடைய பாங்கும் அத்தகையதே, ஏழைகளுக்காகவென்று தன் சொந்த இதயத்திலிருந்து ரத்தத்தைச் சிந்த ஆயத்தமாயிருப்பது ஒரு உயர்ந்த மனநிலை. அது எல்லாருக்கும் கிட்டுவதில்லை. பிறர் நலத்துக்காகவென்று எத்தனை விதமான துன்பத்துக்கு ஆளாகவும் தன் உயிரையே வழங்கி விடவும் ஆயத்தமாயிருப்பவன் மனபரிபாகம் மிக அடையப் பெற்றவனாகிறான். மனபரிபாகம் வந்துவிட்டால் பிறகு ஜீவன் முக்திநிலையை அடைவது மிக எளியது ஆகிறது. ஆனால் பிறர் நலத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றபொழுது அம்மனிதனை ஜீவன்முக்தன் என்று பகரலாகாது. மகாத்மா ஒருவன் எத்தகைய பாங்குடையவன் என்பதை விவேகானந்த சுவாமிகள் விளக்குகிறார். அந்த விளக்கத்தை ஜீவன் முக்தன் ஒருவனுக்கோ, முக்குணங்களையெல்லாம் கடந்திருக்கிற ஒருவனுக்கோ, நைஷ்காமிய சித்தி அடைந்திருக்கிற ஒருவனுக்கோ நாம் வழங்கலாகாது. பிறர் நலத்தில் சுய நலத்தை மறந்திருப்பவனுடைய பெருமையை விவேகானந்த சுவாமிகள் விளக்குகிறார். அதற்குமேல் வேறு விதமான பரிபூரண நிலைகளை அந்த விளக்கத்தினுள் நாம் திணிக்கலாகாது. உலக நடைமுறைகளுக்கு வசப்பட்டிருப்பவன் போன்று உலகத்தவர்களுக்காக இரங்குபவன் தென்படலாம். ஆனால் பந்தபாசம் எதுவும் அவனுக்கில்லை. பிறர்மீது இரக்கம் கொள்ளுதல் மூலமாக உலகம் உண்டுபண்ணுகிற தளைகளினின்று அவன் விடுபடுகின்றான். முக்குணங்களுக்கு இன்னும் உட்பட்டு வாழ்ந்திருப்பவனைக் குறித்தே இவ்விளக்கம் வந்துள்ளது. முக்குணங்களுக்கு அப்பால் இருப்பவனுக்கு உலகக் காட்சியே கிடையாது. பிறகு அதனுள் துன்பத்தில் வருந்திக் கொண்டிருப்பவர்களைப் பற்றிய பேச்சு எழுதற்கோ

இடமில்லை. செயல்களனைத்தும் பிரபஞ்சத்தோடு சம்பந்தப் பட்டவைகள். பிரபஞ்சத்தின் நடைமுறையில் ஈடுபட்டிருப்பவர் களுக்குச் செயல் உண்டு. நல்லார்கள் நல்ல கர்மங்களையே செய்து பிறகு செயலுக்கப்பாலுள்ள நிலைக்குப் போய்விடுகின் றனர். செயல்களைக் கடந்த நிலையும் முக்குணங்களைக் கடந்த நிலையும் ஒன்றேயாம். முறையாகச் செயல்புரிவதும் முறையாக முக்குணங்களைப் பயன்படுத்துவதும் செயலைத் தாண்டிச் செல்லுதற்கும் முக்குணங்களைத் தாண்டிச் செல்லுதற்கும் பயன்படுகின்றன. உலகத்தவர்களுக்காக இரங்கி அவர்கள் பொருட்டே உழைப்பது, குணாதீத நிலைக்குப் போவதற்கும் நைஷ்காமிய சித்தியைப் பெறுவதற்கும் உற்ற உபாயமாகிறது.

கேள்வி: *(356)* பிறர் நம்மைத் துன்புறுத்தும் பொழுது திருப்பி அவரை நாம் துன்புறுத்தலாமா?

பதில்: மனபரிபாகத்தில் பல படித்தரங்கள் இருக்கின்றன. மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு நாம் நடந்து கொள்ளுதல் வேண்டும். கோழைத்தனத்துக்கோ பலஹீனத்துக்கோ இடம் தந்துவிடக்கூடாது. எதிர்த்துப் போராட வேண்டிய நிலையில் எதிர்த்துப் போராடித்தான் ஆகவேண்டும். பிறர் நம்மைத் துன்புறுத்தும்பொழுது அச்சத்தினாலோ பலஹீனத்தினாலோ அவரைத் திருப்பித் துன்புறுத்தாதிருப்பது நமக்கு எவ்வித முன்னேற்றத்தையும் தந்துவிடாது. முதலில் நாம் நம்மைப் பலவானாக்கி நம் உள்ளத்திலுள்ள அச்சத்தைப் போக்க வேண்டும். சுவாமி விவேகானந்தர் காசியில் தெருவழியாகப் போய்க்கொண்டிருந்தபொழுது குரங்குக் கூட்டமொன்று அவரைப் பின்தொடர்ந்து வந்தது. அவர் சற்று வேகமாக நடந்தார். குரங்குக் கூட்டமும் வேகமாக அவரைப் பின் தொடர்ந்தது. 'விலங்கை எதிர்த்து நில். அதற்கு அஞ்சாதே' என்ற குரலோசை அவர் காதில் வீழ்ந்தது. விவேகானந்தர் தைரியமாக எதிர்த்து நின்றார். குரங்குக் கூட்டம் பின்வாங்கியது. அப்பொழுது விவேகானந்தர் தீர்மானித்ததாவது: "குரங்குக் கூட்டத்தை மட்டுமன்று. மிருகத் தன்மை படைத்த மனிதர் களையும் மிருக இயல்புகளையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும். அவைகளைக் கண்டு அஞ்சக்கூடாது."

உடல் உறுதியையும் உள்ள உறுதியையும் பெற்றுக் கேட்டை எதிர்த்துப் போராடவேண்டும். கேடு செய்கிறவர்களைச் சில சமயம் துன்புறுத்தியுமாகவேண்டும். அப்படித் துன்புறுத்துவது அவர்களுடைய நன்மையை முன்னிட்டு அமையவேண்டும். நம்முடைய விருப்பு வெறுப்புக்கு உட்பட்டுப் பிறரைத் துன்புறுத்தலாகாது. பிறருடைய நன்மையை முன்னிட்டுப் பிறரைத் துன்புறுத்தவேண்டி வந்தால் அதைச் செய்தாகவேண்டும். குழந்தை மண்ணை அள்ளி வாயில் போட்டுக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது தாய் குழந்தையின் கன்னத்தில் இரண்டு அறை கொடுத்து மண்ணைக் தின்னாதே என்று எச்சரிக்கின்றாள். தாயின் அடிக்குப் பயந்து குழந்தை மண்ணைத் தின்பதை நிறுத்திவிடுகிறது. தாய் குழந்தையைத் துன்புறுத்தியது தவறாகாது. வைத்தியர் ஒருவர் நோயாளியினுடைய உடலிலுள்ள நோயைப் போக்குவதற்கு உடலில் ஊசியைக் குத்துகிறார். அது நோயாளிக்குத் துன்பத்தைத் தருவதெனினும் அதைச் செய்துதான் ஆகவேண்டும். மாணாக்கன் ஒருவன் தண்டனைக்குப் பயந்து கொண்டு தப்புச் செய்யாதிருக்கின்றான். அவன் தண்டனைக்குப் பயந்து தப்புச் செய்யாமலிருப்பானாகில் தப்பு செய்தவனைத் தண்டனைக்கு உள்ளாக்கித் துன்புறுத்துவது வேண்டப்படுவது. ஸ்ரீசாரதா தேவியார் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி. சாரதா தேவியார் அன்பே உருவானவர். யாரையும் கடிந்து கொள்ள மாட்டார். ஹரீசன் என்பவன் காமநோய் பிடித்தவனாக இருந்தான். அவன் தன்னிடத்து ஸ்ரீராமகிருஷ்ணர் ஆவிர்ப்பவித்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு, அன்னை சாரதாதேவியாரை ஆசீர்வதிப்பதாகக் கூறிக்கொண்டு கெட்ட நோக்கத்துடன் சாரதாதேவியாரைத் தீண்டச் சென்றான். அவனுடைய பிடியிலிருந்து சாரதாதேவியார் தப்புவதற்கு வேகமாக நடந்தார். அவனும் சாரதாதேவியாரைப் பின் தொடர்ந்து வேகமாக நடந்தான். இனி அவன் பிடியிலிருந்து தப்புவதற்கு உக்கிர சொரூபம் எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அறிந்த சாரதாதேவியார் வீராவேசத்துடன் அவனைக் காலால் ஓர் உதை உதைத்தார். அவன் திருகிக் கொண்டு கீழே வீழ்ந்தான். அவன் நெஞ்சின் மீது முழங்காலை ஊன்றிக்

கொண்டு கன்னத்தில் பலமான அறைகொடுத்தார். அடியின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் விட்டால் ஓடிப்போய்விடலாம் என்ற எண்ணம் அவனுக்கு வரும் வரையிலும் சாரதாதேவியார் அறைந்து கொண்டே இருந்தார். அதன் பின் அறைவதை நிறுத்தி எழுந்து திரும்பிப் பார்க்காமல் ஓடு என்றார். அவனும் எழுந்து ஓடினான். திரும்ப அந்தப்பக்கம் அவன் வரவே இல்லை. சாரதாதேவியார் இந்நிகழ்ச்சியின் மூலம் பிறருக்குத் துன்பம் செய்யவேண்டிய சந்தர்ப்பத்தில் துன்பம் செய்தேயாக வேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டித்தந்துள்ளார்.

அன்புடன் சொல்லித் திருத்தவேண்டிய இடத்தில் அன்பைத்தான் கையாளவேண்டும். அறியாமல் பிறர் நமக்குத் தீங்குசெய்துவிட்டால் அதை அப்பொழுதே மறந்துவிடவேண்டும். நம்முடைய உதட்டை நம்முடைய பல் கடித்துவிடுமானால் பல்லின்மீது நாம் நடவடிக்கை எடுப்பதில்லை. உதட்டிலுள்ள புண்ணைக் குணப்படுத்த முயல்கின்றோம். பல்லும் நம்முடைய சொரூபம். உதடும் நம்முடைய சொரூபம். உயிர்கள் அனைத்தும் நம்முடைய சொரூபம் என்ற உணர்வு உண்டாகும்பொழுது எந்த உயிர்க்கும் நம்மால் தீங்கு செய்ய முடியாது. அப்பொழுது மற்ற உயிர்களுக்குச் செய்கின்ற துன்பம் நமக்குச் செய்கின்ற துன்பமாகும். ஆகவே நம்முடைய மன பரிபாகத்துக்கேற்ப நாம் பிறரிடம் நடந்து கொள்ளுதல் வேண்டும். சுயநலத்தை முன்னிட்டோ, ஆணவ அகங்காரத்தை முன்னிட்டோ பிறருக்குத் துன்பம் இழைத்தல் கூடாது. தற்பாதுகாப்புக்காகவும், பிறருடைய நடத்தையைத் திருத்தியமைப்பதை முன்னிட்டும் பிறருக்குத் துன்பம் செய்யவேண்டிய நிலை ஏற்படுமானால் அதைச் செய்துதான் ஆகவேண்டும்.

கேள்வி: *(357)* மாணிக்கவாசகர் ஏன் தம்மை 'நாயேன்' என்று சிறுமைப்படுத்திக்கொண்டார்.

பதில்: ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவன் ஒருவன் தன்னை ஒருபொழுதும் ஒன்றுக்கும் உதவாதவன் என்று சிறுமைப்படுத்திக் கொள்ளலாகாது. சர்வகாலமும் ஒருவன் தன்னைப் பாபி என்றோ, ஒன்றுக்கும் உதவாதவன் என்றோ, பிறர்க்குத் தலைச் சுமை என்றோ சிறுமைப்படுத்திக்கொண்டிருப்பவன் ஒருநாளும்

முன்னேற்றமடைய முடியாது. மேலும் மேலும் க்ஷீணதசை அடைவதே அவனுடைய போக்கு ஆகும். மாணிக்கவாசகர் தம்மை நாயேன் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டது தம்மிடத்திருந்த அகங்காரத்தை அகற்றுதல் பொருட்டேயாம். ஆத்மசாதகன் ஒருவன் தான் சாதனம் புரிவதை முன்னிட்டு மற்றவர்களுக்கெல்லாம் தான் மேலானவன் என்று செருக்குக் கொள்ளுவானாகில் அந்தச் செருக்கே அவனைக் கீழ்மையில் ஆழ்த்திவிடும். ஆக ஆத்ம சாதகன் ஒருவனுக்குத் தற்பெரு மையும் இருக்கலாகாது; ஊக்கத்தையும், முயற்சியையும் ஒதுக்கி வைத்துவிட்டுத் தன்னை நொந்துகொள்வதும் உதவாது.

மாணிக்கவாசகர் தம்மை நாயேன் என்று சொல்லிக் கொண்டதில் பெரிய கருத்து ஒன்று அடங்கியிருக்கிறது. இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகாதிருக்கும் பரியந்தம் தமக்கு மதிப்பு ஒன்றுமில்லை என்னும் கருத்தை இந்தச் சொல்லின் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறார். பிறகு நாயினி டத்துச் சிறப்பு ஒன்று உண்டு. அது வைத்துள்ள எஜமான விசுவாசத்தை அது மாற்றிக்கொள்ளாது. எஜமானன் அத னிடத்துப் பூரண கருணை வைக்காவிட்டாலும் அது எஜமான னையே சார்ந்திருக்கும். அந்தப்போக்கில் இறைவனுடைய அருள் வருவதற்குக் காலதாமதம் ஆனாலும் தாம் இறைவ னையே சார்ந்திருக்கும் மேலான பாங்கை இந்தச் சொல் லின் மூலம் அவர் தெரிவித்து இருக்கிறார்.

கேள்வி: *(358)* பெண்பாலர் தியானம் பண்ணக்கூடாது என்று சிலர் சொல்லுகின்றனர். அதற்குக் காரணம் யாது?

பதில்: கடவுள் வழிபாட்டில் பெண்பாலர் இன்னதைச் செய்யலாம். இன்னதைச் செய்யலாகாது என்ற பாகுபாடு வந் ததைத் துருவி ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆடு முதலிய வற்றை உயிர்ப்பலியிட்டு யாகம் பண்ணுவது ஒரு பழைய ஐதிகமாக இருந்து வந்தது. அது அநாகரிகமானதென்று கருதி இன்று அது பின்னணிக்குப் போயிருக்கிறது. அத்தகைய யாகத்தைப் பெண்ணொருத்தி பண்ணலாகாது என்று தடை செய்தால் அதில் பொருள் இருக்கிறது. பெண்ணொருத்தி தன்னந்தனியளாகத் தீர்த்தயாத்திரை போகலாகாது என்றால்

அதில் பொருள் இருக்கிறது. பெண்ணொருத்தி உயர்குலத்தில் பிறந்தவளாக இருந்தாலும் அவள் வேதம் கற்கலாகாது என்பது இடைக்காலத்தில் வந்திருந்த கோட்பாடு ஆகும். வேதகாலத்தில் வேதம் கற்பதில் ஆண்களுக்கு இருந்த உரிமை பெண்களுக்கும் இருந்தது. இடைக்காலத்தில் அவ்வுரிமைக்குத் தடையுண்டாயிற்று. இக்காலத்தில் வேதம் கற்பார் ஆண்களுக்குமிடையிலும் இல்லை. பெண்களுக்குமிடையிலும் இல்லை. விரும்புகிறவர்கள் யாராயிருந்தாலும் இக்காலத்திய சர்வகலாசாலைச் சட்டப்படி வேதம் கற்கலாம். இங்ஙனம் இன்னதைச் செய், இன்னதைச் செய்யாதே என்னும் கட்டுமானங்கள் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு ஒருகாலத்தில் வந்தவைகள் மற்றொரு காலத்துக்கு உதவமாட்டா. பெண்பாலர்களுக்குப் பர்ஞானமில்லை என்னும் நம்பிக்கை இடைக்காலத்தில் வந்தது. அதைப் பொருளற்றது என ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ சாரதாதேவியார் வாயிலாக உலகுக்கு விளக்கியுள்ளார். தியானம் பண்ணிப் பழகும்படி ஆண்பாலரைத் தூண்டியது போன்று பெண் பாலரையும் அவர் தூண்டியுள்ளார். அவருடைய கோட் பாட்டைப் பின்பற்றும் பெண்பாலர்கள் இன்று தீவிரமாகத் தியானப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அன்னை பராசக்தி தானே சிறப்பாகப் பெண்பாலர் மய மாக இலங்குகின்றாள் என்பது சாக்த சம்பிரதாயத்தின் கோட் பாடு ஆகும். பெண்பாலர் தியானம் பண்ணக்கூடாது என்னும் கட்டுப்பாடு அம்பிகையின் பெருந்திட்டத்தையே நிராகரிப்ப தற்கு ஒப்பாகும். எத்தனையெத்தனையோ குருட்டு நம்பிக்கை களுள் பெண்பாலர் தியானம் பண்ணக்கூடாது என்பதுவும் ஒன்றாகும். மறுமலர்ச்சி பெற்று முன்னேற்றமடைந்துவரும் பெருமக்கள் இக்கட்டுமானத்தைப் பொருள்படுத்தமாட்டார்கள். பால்வேற்றுமை என்பது உடல் அமைப்போடு நின்றுவிடுகிறது. மன அமைப்பில் மேலோராகும் மக்கள் எல்லாரும் தீவிரமாக ஆத்மசாதனங்களில் ஈடுபடலாம். அந்தச் சாதன வகைகளுள் தலைசிறந்ததாயிருப்பது தியானப்பயிற்சி.

கேள்வி: *(359)* பாபம் செய்தவர்கள்தாம் பெண்ணாகப் பிறக்கிறார்களா? அவர்கள் முக்தி அடைய இயலுமா?

பதில்: பாபம் என்றால் என்ன? புண்ணியம் என்றால் என்ன? இவ்விரு கோட்பாடுகளையும் முதலில் நாம் ஆராய வேண்டும். நல்லது புண்ணியம் என்றும், மற்றது பாபம் என்றும் கருதப்படுகின்றன. தெய்வீகம் வாய்ந்தது புண்ணியம் என்றும், துஷ்டத்தனம் வாய்ந்தது பாபம் என்றும் கருதப்படு கின்றன. முற்றிலும் பண்பாடு அடைந்தது புண்ணியம் என்றும், பண்பாட்டில் குறைநிலை பாபம் என்றும் கருதப்படுகின்றன. அவன் பாபம் ஒன்றும் அறியாதவன் எனப்பகருவது வழக்கம். ஈண்டு பாபம் என்பது தீங்குமல்ல, துஷ்டத்தனமும் அல்ல; அனுதாபத்துக்குரியது எனப் பொருள்படுகிறது. ஆக, பாபம் என்னும் சொல்லுக்குப் பொருள் பல படித்தரங்களில் அமைந் திருக்கிறது. மக்களுடைய பிறப்பைப் பாகுபடுத்துவது பகவத் கீதையில் அமைந்திருக்கிறது. பாபப்பிறப்பை எய்தியுள்ள பெண் பாலர், வைசியர், சூத்திரர் ஆகிய எல்லாருமே பக்தி பண்ணி னால் பரமனை அடைவார்கள். பின்பு புண்ணியப் பிறப்பெய்தி யுள்ள பிராம்மணர், க்ஷத்திரியர் பற்றிப் பகர்வானேன்? பாபப் பிறப்பு, புண்ணியப் பிறப்பு ஆகிய கோட்பாடுகள் ஈண்டு நல்லது, கெட்டது என்னும் கோட்பாடுகளில் அமைந்தவைகள் ஆகா. பரிபக்குவத்தை எட்டியநிலை, அதை எட்டாதநிலை என்றே அச்சொற்கள் பொருள்படுகின்றன. பெண் பிறவி, ஆண் பிறவியைவிட ஒருபடித்தரம் கீழானது என்பதை இயற்கை நிரூபிக்கிறது. மேனியமைப்பை ஆராய்ந்து பார்ப்போம். பறவை களுள் சேவல்களாயிருப்பவைகள் உறுதியும், அழகும் வாய்ந்த உடல்களைப் படைத்திருக்கின்றன. பின்பு பெட்டைகளோ, இரண்டாம் தரமான உடல்களைப் படைத்திருக்கின்றன. விலங்கு இனத்தில் காளைகளாக இருப்பவைகள் திண்ணிய உடல் களைப் படைத்திருக்கின்றன. கடாரிகளாக இருப்பவைகள் மெல்லிய உடல்களைப் படைத்தவைகளாக இருக்கின்றன. இக்கோட்பாடு மானுட உலகுக்கும் ஒவ்வும். ஆண்பாலர் படைத்துள்ள திட்பம் வாய்ந்த மேனிகளைப் பெண்பாலர் படைப்பதில்லை. அடுத்தபடியாகக் கடினமானவைகளும், ஆபத்து நிறைந்தவைகளுமான செயல்கள் ஆண்பாலர்க்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. பொறுமையோடு நிகழ்த்தப் பெறுகிற மெல்லிய செயல்கள் பெண்பாலருக்கு உரியவைகள்

ஆகின்றன. மேலும் மனபரிபாகத்தில் ஆண்பாலர்களுக்கு அடுத்தபடியில் பெண்பாலர் இருக்கின்றனர். சிந்தனை நிறைந்த மனம் படைத்தவர்கள் ஆண்பாலர். உணர்ச்சி ததும்பும் உள்ளம் படைத்தவர்கள் பெண்பாலர். சோதனை ஏற்படுங்கால் தன் கருத்தை மறைத்து வைத்துக்கொண்டு அதைச் சமாளிப்பது ஆண் இயல்பு. தன் உணர்ச்சியைச் சொல்லால் விளக்கிக் கொண்டு கண்ணீர் சிந்துவது பெண் இயல்பு. இத்தகைய பாகுபாடுகளை எல்லாச் சமுதாயங்களிலும் காண்கிறோம்.

கீதையில் பெண்பாலரையும், வைசியர்களையும், சூத்திரர்க ளையும், பாபப் பிறப்பு எடுத்தவர்களென்று கிருஷ்ண பர மாத்மா பகர்வது கெட்டவர்கள் என்றோ, தீங்குடையவர்கள் என்றோ பொருள்படுத்துகிற விதத்தில் அல்ல. அன்னவர்கள் பரிபாகத்தில் இன்னும் நிறைநிலை எட்டவில்லை என்னும் கருத்தில்தான் அவர் இங்ஙனம் பகர்ந்திருக்கிறார். எனினும் ஆத்ம சாதனங்கள் பண்ணுவதற்கோ, முக்தி அடைவதற்கோ இரண்டாம் தரமான பிறப்புக்கள் இடைஞ்சல் ஆகமாட்டா.

ஆணாகப் பிறந்தவன் தன்னந்தனியனாக எங்கு வேண்டு மென்றாலும் செல்லலாம். எந்தச் சூழ்நிலையில் வேண்டுமென் றாலும் வசித்திருக்கலாம். ஆனால் பெண்பாலர்கள் அப்படிச் செய்யலாகாது. அவர்களுடைய உடல்நிலை பொருந்தாத இடத்தில் வசித்திருப்பதற்கு இடம் தராது. பெண் உலகுக்குத் தனிப் பாதுகாப்புத் தேவையாயிருக்கிறது. இக்கோட்பாட் டின்படியே பெண்பிறப்பு இரண்டாந்தரமானது. அது தீங்குடைய தன்று; கேடுடையதுமன்று. முக்தி ஈறாக எத்தகைய பரிபாகத்தை வேண்டுமானலும் பெண்பாலர் பெறலாம். அவர்கள் பெற்று வருகிறார்கள் என்பது வெளிப்படை. ❑

18. யோகஸித்தி

கேள்வி: *(360)* பிறப்பிலேயே ஒருவன் யோகி ஆக முடியுமா?

பதில்: பிறக்கும் குழந்தைகளனைத்தும் ஒரே பாங்குடன் பிறப்பெடுப்பதில்லை. அவர்களுடைய ஜீவிதமே அதற்குச் சான்று ஆகிறது. பிறந்தது முதற்கொண்டு சில குழந்தைகள் அழுதுகொண்டே இருக்கின்றன. பசியோ, பிணியோ, ஏற் பட்டால் மட்டும் அழுகிற குழந்தைகள் இருக்கின்றன. பசி யையும், பிணியையும் சகித்துக்கொண்டு நெடுநேரம் அழா திருக்கும் குழந்தைகளும் இருக்கின்றன. விளையாட்டுப் பரு வத்தில் நன்கு ஓடியாடி விளையாடும் குழந்தைகள் இருக் கின்றன. ஆற்றல் சிறிதுமில்லாது விளையாடவும் தெரியாது வெறுமனே கிடக்கும் குழந்தைகளும் இருக்கின்றன. பிறகு பள்ளிக்குப் போகும் பருவம் வருகிறபொழுது மகிழ்வுடன் அச்செயலில் ஈடுபடும் சிறுவர்கள் இருக்கிறார்கள். தயங்கிக் கொண்டு பள்ளிக்குப் போகிறவர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்குப் போக அறவே மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள். பள்ளியில் விரைவில் ஊக்கத்துடன் கல்வி கற்கும் சிறார்கள் இருக்கிறார்கள். சிரமப்பட்டுக் கற்கும் சிறுவர்களும் இருக்கி றார்கள். கல்வி சிறிதேனும் கற்க முடியாத கடைமாணாக் கர்களும் இருக்கிறார்கள். மக்களாகப் பிறந்திருக்கிறவர்களுக் கிடையில் இத்தனைவித வித்தியாசங்கள் எங்கிருந்து எப்படி வந்தன? பூர்வ ஜன்மத்தின் தொடர்பாக இப்பொழுது எடுத் துள்ள ஜன்மம் வந்தமைகிறது. இந்த ஜன்மத்தில் முந்தியநாளின் பயிற்சியே அடுத்த நாளுக்குப் பயன்படுவதற்கு நிகராகப் பூர்வ ஜன்மத்தில் பெற்றுள்ள பயிற்சியானது தொடர்ந்து அடுத்த

ஜன்மத்திலும் வருகிறது. இதை விட்ட குறை தொட்ட குறை என்பார்கள்.

இதே கோட்பாடு யோகிக்கும் உரியதாகிறது. யோகசாதனத்தைப் பூர்த்தி பண்ணாது மரணமடைபவனை யோகப் பிரஷ்டன் என்கின்றனர். ஒரு ஜன்மத்தில் பெற்ற யோகசாதனப் பயிற்சி அடுத்த ஜன்மத்தில் பயன்படுகிறது. அங்ஙனம் சின்னஞ் சிறு வயதிலிருந்தே யோக சாதனத்தில் ஈடுபடும் சிறுவர்களும் இடையிடையே இம்மண்ணுலகில் வந்து பிறக்கின்றனர். ஞான சம்பந்தர் பிறப்பிலேயே யோகியாக இருந்தார்.

விவேகானந்த சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் நரேந்திரன் என்பதாம். நரேந்திரனைப் பிறப்பிலேயே யோகியாக வாழ்ந்தவர் எனலாம். சிறுபிள்ளைகள் பூர்வ ஜன்ம வாசனைகளைத் தங்கள் விளையாட்டின் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். தியானம் பண்ணுவது நரேந்திரனுக்கு விளையாட்டாக அமைந்தது. அவர் விளையாட்டாகப் பண்ணிய தியானத்தைப் பல யோகிகள் மிகச் சிரமப்பட்டும், பண்ண முடியாதவர்களாகவும் இருந்தார்கள். நெடுநேரம் நரேந்திரன் உடல் உணர்வைத் தாண்டி ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். நரேந்திரனின் நித்திரை மற்ற சிறுவர்களுடைய நித்திரை போன்றது அன்று. அவர் ஒரு ஜோதியில் மூழ்கி யோக நித்திரையில் திளைத்திருந்தார். பிறவியிலிருந்தே அவர் ஒரு யோகி என்பதற்கு இச்செயல்கள் சான்றுகளாக வந்தமைகின்றன.

கேள்வி: *(361)* யோக சக்தியால் இயற்கைச் சக்தியைக் கட்டுப்படுத்த இயலுமா?

பதில்: யோக சக்தி வேறு, இயற்கைச் சக்தி வேறு அன்று. பிரபஞ்சம் முழுதிலும் ஒரே சக்திதான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஒரே சக்திக்கு வெவ்வேறு வடிவெடுக்கும் வல்லமை உண்டு. சான்றொன்று எடுத்துக்கொள்வோம். காற்றைவிட இலேசானதாக நீராவி வடிவெடுக்குங்கால், அது வானத்தில் மேலே போகிறது. அங்கே உறைந்து கனமாகி மழையாக நிலத்தில் பொழிகிறது. மழை நீர் மலையினின்று அருவியாகக் கீழே பொழிகிறது. குழாய் வழியாக அதைக் கீழே கொண்டு வருகிறபொழுது உயரத்தை முன்னிட்டு அதன்

ஈர்ப்புச் சக்தி அதிகமாகிறது. அதைக்கொண்டு சக்கரம் ஒன்றைச் சுழற்றலாம். சுழலுகின்ற சக்கரம் மின்சக்தியை உண்டுபண்ண வல்லதாகிறது. அந்த மின் சக்தியோ வெளிச்சம் தருவதற்கும் ஓசையைக் கிளப்புவதற்கும் வெப்பத்தை உண்டுபண்ணு வதற்கும் எந்திரத்தை இயக்குவதற்கும் வல்லதாகிறது.

இனி, இயற்கையில் உள்ள ஜடசக்தி சித்சக்தியாக மாற வல்லதாகிறது. சூரியனின் வெப்பமும், வெளிச்சமும் ஜடசக்தியின் கூறுகள். அவை இரண்டும் உயிரைப் பேணுகின்றன. அச்செய லின் வாயிலாக அது சித் சக்தியாக மாறுகிறது. உயிர்வகை களிடத்துச் சித்சக்தியானது விருப்பு வெறுப்பாகவும், இன்பதுன்ப மாகவும், காமகுரோதமாகவும் மாறியமைகிறது.

மக்களிடத்துத் தென்படும் காமக் குரோதம், இன்ப துன்பம் ஆகியவைகள் இயற்கைச் சக்தியின் கூறுகளாம். ஐம்பொறி களைத் தம்போக்கில் செயல்புரிய விட்டுவிடுவது போகம். ஐம்பொறிகளைக் கட்டியாளுதல் யோகம் என்னும் பெயர் பெறுகிறது. யோக சாதனத்தால் மனிதன் காமம், குரோதம், துயரம், பொறாமை ஆகிய கீழ்த்தரமான சக்திகளை அடக்கி அமைதி, பேரன்பு ஆகிய தெய்வீக சக்திகளாக மாற்றியமைக்க முடியும்.

"உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து"

என்பது பொய்யாமொழி. யோகசாதனத்தின் வாயிலாகவே கீழான பாங்குடைய மனிதன் தெய்வீகப் பெற்றி வாய்ந்த மனிதனாகத் திருந்தியமைய முடியும்.

பௌதிக விஞ்ஞானம் ஒரு நிலையிலுள்ள ஜடசக்தியை மற்றொருவித ஜடசக்தியாக மாற்றியமைக்கிறது. சான்றொன்று எடுத்துக்கொள்ளுவோம். வெப்பம் என்னும் சக்தியைக்கொண்டு நீரைக் கொதிகலனில் ஆவியாக மாற்றி அதைப்பிடித்து அடைத்து வைக்கலாம். அப்படி அடைத்து வைத்த ஆவி சக்கரத்தை இயக்க வல்லதாகிறது. அதன் விளைவாக இருப்புப் பாதையில் வண்டித் தொடர் ஓடுகிறது. இது பௌதிக விஞ்ஞானத்தின் சிறப்பு. இதேவிதத்தில் மனிதனிடத்து இயல்பாக அமைந்துள்ள ஆசை, சினம், வெறுப்பு, பொறாமை

ஆகிய கீழான சக்திகளை யோகசாதனத்தின் வாயிலாகத் தெய்வ சம்பத்தாக மாற்றமுடியும். எனவே, கீழ்நிலையில் உள்ள மனிதன் மேல்நிலை அடைவதற்கு யோகசாதனம் ஒன்றே உற்ற உபாயமாம்.

கேள்வி: *(362)* யோகத்தால் நோயைக் குணப்படுத்த முடியுமா?

பதில்: யோகத்தில் பல தரங்கள் இருக்கின்றன. சுயநலம் கருதாது பிறர்க்குப் பணிவிடை பண்ணுவது கர்மயோகம். ஒழுக்கத்தின் வாயிலாக மனதையும் இந்திரியங்களையும் பண் படுத்துவது ராஜயோகம் அல்லது அஷ்டாங்கயோகம். இறைவ னிடத்தும் உயிர்களிடத்தும் பூணுகிற பேரன்புக்குப் பக்தியோகம் என்னும் பெயர் வந்துள்ளது. ஆத்மாவானது உடலின் கூறு களுக்கு அப்பாற்பட்டது என்பதைப் பழக்கத்தால் நிலைநாட் டுவது ஞானயோகமாகும். இந்த ஞானயோகத்தின்படி உடலைத் தாக்குகிற நோயைச் சகித்துப் பழகுதல் ஓர் ஆத்மசாதனமாகிறது. இந்தச் சாதனம் திதிக்ஷை எனப் பெயர் பெறுகிறது. உடலை வாட்டுகிற நோயை மனதில் வாங்காது இருந்தால் அன்னவன் மன அமைப்பில் நோயற்றவன் ஆகிறான்.

இராஜயோகத்துக்கு முன்னோடியாயிருப்பது ஹடயோகம். உடலை யாண்டும் நோயற்றதாக வைத்திருப்பதே இந்த யோகத் தின் குறிக்கோளாகும். உண்பதிலே, உழைப்பதிலே, உறங்கு வதிலே, ஓய்வு எடுத்துக்கொள்ளுதலிலே யாண்டும் ஒழுங்குப் பாட்டோடு இருப்பவனைப் பெரிதும் நோய்வந்து தாக்குவ தில்லை. கடினமான நோய் ஏதாவது வந்தால் அது பிராரப் தத்தின் விளைவாம். சிறிய நோய்கள் காலத்தையும் இடத்தையும் சீத உஷ்ணத்தையும் அடிப்படையாகக் கொண்டவைகள். உணவை மாற்றியமைப்பதன் வாயிலாகவும், யோகாசனங்கள் வாயிலாகவும், பிராணாயாமத்தின் வாயிலாகவும் நோய் வாராது தடுக்கலாம் என்றும், வந்த நோயை நீக்கலாம் என்றும் ஹட யோக சாஸ்திரம் விரிவாக விளக்குகிறது. ஆனால் ஹடயோக நிபுணன் யாரையும் இக்காலத்தில் காண்பது அரிது. வெறும் நூலறிவைக்கொண்டு பொருந்தாத சிகிச்சை முறைகளை மானுடன் ஒருவன் கையாள முயன்றால் அதன் விளைவாக

நோய் பெரிதும் வலுத்துவிடும். ஆதலால் விஷயம் தெரியாது ஹடயோக சிகிச்சை முறைகளை யாரும் கையாளலாகாது. சான்று ஒன்று எடுத்துச் சொல்லலாம். பொருந்தாத பாங்கில் பிராணாயாமம் பண்ணி மண்டையிடியையும், நரம்புத் தளர்ச்சியையும் தேடிக்கொண்டவர்கள் பலபேர் இருக்கின்றனர். அன்னவர்களைப் பார்த்து மற்றவர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்களாக.

கேள்வி: *(363)* சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் இறந்த பிறகும் அவரோடு பேசினார் என்று எழுதக் காரணம் யாது?

பதில்: பரமஹம்ச தேவர் தாமே அம்பிகையோடு ஒட்டி உறவாடினார். அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அம்பிகை பதில் அளித்தாள். நாம் ஒருவரோடு ஒருவர் பேசுவது போன்று கடவுளோடு பேசலாம் என்றும் பரமஹம்சர் பகர்ந்துள்ளார். இக்கோட்பாடுகளை அனுசரித்து அவரிடம் கேள்வி ஒன்று பிறந்தது. "தாங்கள் அம்பிகையோடு பேசுவதன் பொருள் யாது? தாங்கள் தெய்வத்தைக்கண்டு பேசுவது என்பது தங்களுடைய மனதின் கூறு அல்லவா?" அதற்கு அவர் கொடுத்த விடையாவது: "ஆம்! தெய்வக் காட்சி என்பதும், தெய்வத்தோடு நாம் பேசுவது என்பதும் மனதின் கூறுகளேயாம்." பின்பு மனது சுத்தியடைவதற்கேற்ப அது காண்கின்ற காட்சியெல்லாம் தெய்வக் காட்சிகளாம். அவை யாவும் உண்மைக்கு ஒத்திருக்கின்றன. ஆதலால் மனது சுத்தி அடைந்தவர்களுடைய கருத்துக்கள் அனைத்தும் தத்துவத்துக்கு ஒத்திருக்கின்றன. உலகத்தவர்கள் கருத்தோ பிழைபோகக்கூடியது. தத்துவ ஞானியின் கருத்துக்கள் பிழை போகமாட்டா.

கேள்வி: *(364)* மாயையிலிருந்து விடுபடுபவன் சமாதி நிலையை அடைகின்றான். அந்த நிலையில் இருபத்தொரு நாட்களுக்கு மேல் இருப்பதில்லை. ஏன் இருபத்தொரு நாட்கள் என்று பரமஹம்சதேவர் பகர்கின்றார்?

பதில்: மாயைக்கு உட்பட்டிருப்பதும் நான் என்னும் அகங்காரத்தை உடைத்திருப்பதும் ஒன்றேயாம். தான் அல்லாத

உடலைத் தான் எனக் கருதுவது அகங்காரம். அகங்காரம் அறவே அகலுவதும் சமாதி நிலை எய்துவதும் ஒன்றேயாம். அக்ஞானத்திலிருக்கும் நாம் உடலைப் பேணுவதால் அதைப் பாதுகாத்து வருகிறோம். அகங்காரத்தை அறவே துடைக்கின்றவர்கள் உடலை நினைப்பதில்லை. அதைப் பேணுவதுமில்லை. ஆதலால் அது அழிந்துபட்டுப் போவது இயல்பு. சமாதிநிலை எய்துகிறவர்கள் திரும்பவும் உடல் ஞாபகத்துக்கோ உலக ஞாபகத்துக்கோ வருவதில்லை. புறக்கணிக்கப்பட்ட உடல் பிராணனுடைய வேகம் இருக்கும் வரையில் தாக்குப் பிடிக்கிறது. பிராணனின் வேகம் ஒடுங்குமிடத்து உடல் தானாக அழிந்துபட்டுப் போகிறது. 'வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க' என்னும் கோட்பாடு இதையொட்டி வந்துள்ளது. உடல்களுள் சில ஒரே நாளில் கெட்டுத் துர்நாற்றம் எய்துகின்றன. வேறு சில பலநாட்களுக்குப் பிறகு கெட்டுப்போகின்றன. இருபத்தொரு நாள்களுக்கு மேல் அவைகள் தாக்குப் பிடிப்பதில்லை என்பது ஆன்றோர் கூற்று. ஆயினும் கணக்காக அவைகள் இருபத்தொரு நாட்களுக்குக் கெடாது இருக்கின்றன என்று நாம் முடிவு கட்டலாகாது. பின்பு சரீர பரிபாகத்தை அனுசரித்துப் பிராணன் பலநாட்களுக்கு அல்லது சிலநாட்களுக்கு அதில் தங்கியிருக்கிறது. பிராணன் அறவே அகலுமிடத்து உடல் சவமாக மாறுகிறது. சராசரி இருபத்தொரு நாட்களுக்கு மேல் பிராணன் உடலில் இருப்பதில்லை என்பது கோட்பாடு.

கேள்வி: *(365)* சமாதிநிலை எத்தகையது? அந்நிலையில் பரம்பொருளோடு நாம் ஒன்றுபட்டு இருக்கிறோமா?

பதில்: சமாதி நிலைக்கும், சுழுத்தி நிலைக்கும் பொது இயல்புகள் சில உள. சுழுத்தி நிலை என்பது கனவற்ற உறக்கம். சமாதிநிலை என்பது தெளிவடைந்துள்ள விழிப்பு நிலை. சமாதியிலும் சுழுத்தியிலும் உலகத்தைப் பற்றிய உணர்வு மறைந்துபோகிறது. அந்த இரண்டு நிலைகளும் காலத்துக்கு அப்பாற்பட்டவை. தேசம் அல்லது இடம் எனப் பகரப்படும் நிலப்பிரதேசமும் ஆங்கு இல்லை. செயல்களனைத்தும் ஆங்கு ஒடுங்கிப் போகின்றன. பின்பு சமாதி நிலையில் பண்பட்டுள்ள

சாதகனுடைய அறிவு பேரறிவாகவும், அன்பு பேரானந்த மாகவும் மிளிர்கின்றன. யான், எனது என்னும் செருக்கு சமாதி நிலையில் இல்லை. அயர்ந்த உறக்கத்திலோ மானுடன் ஒருவன் தன்னையும் அறிவதில்லை; உலகையும் அறிவதில்லை; பரமனையும் அறிவதில்லை. அக்ஞானத்தில் மூழ்கி அவன் ஜடம் போன்று இருக்கிறான். சமாதி நிலையிலோ பரம்பொருள் உணர்வில் தன்னுடைய ஜீவபோதத்தை ஒடுக்கிய பேரானந்தப் பெருநிலையில் இருக்கிறான். இத்தகைய சமாதி நிலை எய்து வதே வாழ்க்கையின் மேலான் குறிக்கோள் ஆகிறது. ஆத்ம சாதனங்களை முறையாக அனுஷ்டிக்கிறவன் மனபரிபாகம் அடைந்து பரமனிடத்து இரண்டற இணைந்து இருக்கிறான். இதுவே சமாதி நிலைக்கும் சுழுத்தி நிலைக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளாம். சமாதி நிலையை இறைவன் அருளால் இறைவனை வழிபாடு செய்கிறவன் அடையப் பெறுகிறான்.

கேள்வி: *(366)* ஆந்திரத்தில் பாலயோகி முப்பத்தைந்து ஆண்டுகளாக உணவில்லாமல் இருக்கிறாரே, அதனால் பயன் என்ன?

பதில்: இயற்கையின் கூறுகள் பல. சில உயிர் வகைகள் உணவு அகப்படாவிட்டாலும் நெடுநாள் வாழ்ந்திருக்கின்றன. வேறு சில உயிர் வகைகள் உணவு அகப்படாவிட்டால் அதி விரைவில் அழிந்துபட்டுப்போகின்றன. மானுட வர்க்கத்தில் இயற்கையில் உள்ள எல்லாப் பாங்குகளையும் காணலாம். யோக சாதனம் செய்தும் செய்யாமலும் சில ஸித்திகள் மனிதனுக்கு வந்து வாய்க்கின்றன. யோக சாஸ்திரப்படி ஏழாவது ஞான பூமியாகிய உச்சந்தலையில் உள்ள ஸஹஸ்ராரம் என்னும் ஆதாரத்தினின்று அமிர்ததாரையை ஒரு சொட்டாவது புசிக்கும் வாய்ப்பு மனிதனுக்கு அமையுமாகில் பிறகு உணவு உண்ணா மலேயே அவன் நெடுங்காலம் வாழ்ந்திருக்கலாம். பின்பு நெடுங்காலம் வாழ்ந்திருக்கிற கோட்பாடு வேறு; ஆன்ம பரி பாகம் அடைந்திருக்கும் கோட்பாடு வேறு. ஆந்திரப் பிரதே சத்தில் இருக்கும் இந்தப் பாலயோகியைத் தூக்கி வந்து ஆண்டுக்கு ஒருதடவை மஹாசிவராத்திரி சமயத்தில் மக்கள்

தரிசனத்துக்காக வெளியே வைக்கிறார்கள். அந்த மூர்த்தியின் சரீரம் வளர்ந்து வருவது வெளிப்படை. ஆனால் ஆத்ம பரிபாகத்தைப் பற்றி இன்னும் யாரும் ஆராய்ச்சி செய்யவில்லை. பக்தியுடனும் விசுவாசத்துடனும் அந்த மூர்த்தியைத் தரிசித்து வந்தால் மட்டும் போதாது. சரீர வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆத்ம பரிபாகம் அடையாவிட்டால் அதனால் தனக்கோ உலகுக்கோ நலன் ஏதும் வாய்க்காது. சரீரம் மட்டும் வாழ்ந்திருந் தால் போதாது. உடல் வளர்ச்சி உயிர்களனைத்துக்கும் பொது வானது. ஆனால் உயிர்களனைத்தும் அதற்கு ஏற்ற உணவைப் புற உலகினின்று உட்கொள்கின்றன. நிச்சயமாக இந்த யோகி சுவாசிக்கிறார். சுவாசத்தின் மூலமாக வருகிற உணவு அமிர்த தாரையினின்று வருகிற சக்திக்குத் துணைபுரிகிறது. அந்த மட்டில் யோகி ஒருவன் நெடுநாள் உடல் தாங்கி இருந்தால் போதாது. வாழ்க்கைத் தத்துவங்களை அன்னவன் சரியாக அறிதல் வேண்டும். அறிந்த அறிவை வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். இதுகாறும் இத்தகைய நிகழ்ச்சி ஏதும் இந்த மூர்த்தியினின்று வெளியாகவில்லை. ஆகையினால் இது வெறும் உடல் வளர்ச்சியே ஒழிய ஆத்ம பரிபாகத்தின் அறிகுறி ஏதும் இங்குத் தென்படவில்லை. மக்களிடத்து விசுவாசத்தை ஊட்டுதற்கு மட்டும் இது பயன்படுகிறது. ஆனால் இது போதாது. இந்த மூர்த்தியின் வாழ்க்கையைப் பரிசீலனை பண்ணுவது உசிதம்.

கேள்வி: *(367)* தர்ம சக்கர இதழில் உள்ள "நாரதர் கலகம்" என்ற கதையில் ஓர் சந்தேகம் ஏற்படுகிறது. சித்திர லேகா யோகசித்திகள் பெற்றவள். இருப்பினும் அனிருத் தனைப் பார்க்காமல் அவனுடைய உருவத்தை வரைந் தவளுக்கு அவன் யார்? எங்கிருக்கிறான் என்பது எப்படித் தெரியாமல் போயிற்று?

பதில்: யோகஸித்தியில் படித்தரங்கள் பல இருக்கின்றன. ஒரே மனிதனுக்கு ஸித்திகள் அனைத்தும் ஒன்றுகூடி அமைந்து விடுவதில்லை. கற்றவர்களுக்கிடையில் ஏதோ சிறிதளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்; கல்விக்கடலாக இருப் பவர்களும் உண்டு. யோகஸித்தியைப் பற்றியதும் அத்தகையது.

அக்காலத்தில் உலகில் வாழ்ந்திருந்த சில புருஷர்களின் வடிவங்களை மனதில் வாங்கிக் கொள்ளுகிற யோகஸித்தி சித்ரலேகாவுக்கும் இருந்தது. ஆனால் அந்தப் புருஷர்களின் வரலாறுகளையோ, இருப்பிடங்களையோ தெரிந்து கொள்கின்ற வல்லமை அவளுக்கு உண்டாகவில்லை. இதற்கு நிகராகச் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தை ஈண்டு நாம் குறிப்பிடலாம். அமெரிக்காவில் பிரசித்தி பெற்றிருந்த ஓவியக்காரர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டொரு தடவை கனவில் ஒரு சான்றோர் தென்பட்டார். கனவில் எனினும் அந்த ஓவியக்காரருடைய மனதைத் கனவில் தென்பட்டவர் முற்றிலும் கவர்ந்துவிட்டார். தாம் கண்ட காட்சியை அவர் ஓர் ஓவியமாக வரைந்தார். அதைப் பிரியத்துடன் நெடுநாள் வைத்திருந்தார். அதன்பிறகு மற்றொரு சம்பவம் நேர்ந்தது. அபேதானந்த சுவாமிகள் அக்காலத்தில் அமெரிக்காவில் இருந்தார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்கு இந்த ஓவியக்காரர் சென்றிருந்தார். பிரசங்கத்தில் வெளியான சீரிய கருத்துக்கள் ஓவியக்காரருக்கு மிகவும் பிடித்தமாய் இருந்தது. ஆதலால் அவர் அபேதானந்த சுவாமி களிடம் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டார். தம் வீட்டுக்கு ஒருநாள் விருந்தினராக வரவேண்டுமென்று சுவாமிகளை அழைத்தார். அபேதானந்த சுவாமிகளும் அதற்கு இசைந்து அவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அவர் வரைந்து வைத்திருந்த ஓவியத்தைப் பார்த்தார். உடனே சுவாமிகளுக்கு மட்டில்லா மகிழ்ச்சி உண்டாயிற்று. அந்தப்படம் அவருக்கு எப்படி வாய்த்தது என்று கேட்டார். ஓவியக்காரர் தாம் கனவில் கண்டதையும் வரைந்து வைத்ததையும் விளக்கிச் சொன்னார். "இவர் யார் என்று உமக்குத் தெரியுமா" என்று அபேதானந்த சுவாமிகள் கேட்டார். தமக்கு அதொன்றும் தெரியாதென்று ஓவியக்காரர் விடை கொடுத்தார். அபேதானந்த சுவாமிகள் தமது சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு படத்தை எடுத்துக் காட்டினார். அது தமது குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய படம். ஓவியக்காரர் வரைந்திருந்ததும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய படமே. இவர் யார், இவருடைய வரலாறு முழுதும் தெரிய வேண்டுமென்று ஓவியக்காரர் அபேதானந்த சுவாமிகளிடம்

கேட்டார். தமது குருநாதருடைய வாழ்க்கை வரலாறுகளை யெல்லாம் அபேதானந்த சுவாமிகள் விளக்கியபொழுது ஓவியக்காரருக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. ஸ்ரீ ராம கிருஷ்ணரிடம் அன்று முதல் அவர் புதிய பக்தி கொள்ள ஆரம்பித்தார். ஆனால் தாம் வரைந்த படத்தை அபேதானந்த சுவாமிகளின் விருப்பத்துக்கு ஒப்ப சுவாமிகளிடம் கொடுத்து விட்டார். அது இப்பொழுதும் கல்கத்தாவில் இருக்கிறது. அந்தச் சித்திரக்காரருக்கு ஓரளவு யோகஸித்தி உண்டாயிருந்தது. ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணரை முற்றிலும் தெரிந்து கொள்ளுதற்கு அபேதானந்த சுவாமிகளின் துணை தேவையாய் இருந்தது. சித்திரலேகாவும் அந்த நிலையில்தான் இருந்தாள்.

கேள்வி: *(368)* கணவனுக்கும் மனைவிக்கும் தொடர் பின்றியே தெய்வ சங்கல்பத்தால் கருத்தரித்தல் நிகழ்ந் திருப்பதாகக் (Immaculate conception) கிறிஸ்தவத்திலும் வேறு சில மஹான்களுடைய ஜீவிய வரலாற்றிலும் காணப் படுகின்றது. இதை அழகியதொரு கற்பனையாகக் கொள்ளுவதா அல்லது பௌதிக உண்மையாக ஏற்பதா?

பதில்: உயிர்களின் பிறப்பைப்பற்றிய பொதுவிதி சந்தேகத் துக்கு இடமில்லாதிருக்கிறது. ஆணும் பெண்ணும் சேர்வதா லேயே அது நிகழ்கிறது. ஜங்கமங்கள் அனைத்துக்கும் இது பொதுவானது. ஸ்தாவரத்திலும் இவ்வமைப்பின் அறிகுறி உரு வெடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஸ்தாவரத்தில் மிகக் கீழான நிலையில் ஆண் என்றும் பெண் என்றும் பால் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. சரீரம் எடுப்பதில் மானுட நிலையைத் தாண்டி அதைவிட உயர்ந்த நிலைக்குப் போகும் பொழுது ஆண் பெண் என்ற பால் வேற்றுமையைக் கடந்து போகக்கூடும் என்பதற்குச் சான்றுகள் சில கிடைக்கின்றன.

பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த பிரம்மா தமது மானச புத்திரர் களாகச் சிலரைச் சிருஷ்டித்தார் என்னும் வரலாற்றை நூல் களில் காண்கிறோம். யோகத்தில் முதிர்ச்சியடைந்த சித்தர்கள் தங்களுடைய மனோசங்கல்பத்தால் தங்களைப் பல ஜீவர்களாக ஏககாலத்தில் பிரித்துவைத்துக் கொள்ளக்கூடும். அப்படித் தங்களை பல ஜீவர்களாக்கி அத்தனை சரீரங்கள் வாயிலாகத்

தங்கள் வினையைச் செய்து முடித்துக்கொள்ளக்கூடும் என்று யோகசாஸ்திரம் பகர்கின்றது. கிருஷ்ண பகவான், ஏசுநாதர் போன்றவர்கள் தெய்வ சங்கல்பத்தால் மாதாவின் கர்ப்பத்தில் தோன்றினார்கள் என்று அவர்களைப்பற்றிய வரலாறுகள் பகர்கின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் சாதாரணமாக அடிக்கடி நிகழ்பவைகள் அல்ல. ஆகையால் ஆராய்ச்சிக்கு அவைகள் எட்டுவதில்லை. ஆயினும் ஒரு தத்துவத்துக்கு விளக்கமாகவே இவை யாவும் வந்தமைகின்றன. எண்ணத்தின் ஸ்தூலத் தோற்றமே பௌதிகப் பொருள்கள் என்பது அத் தத்துவம். பிரம்மா எண்ணினார், அந்த எண்ணத்தின் ஸ்தூல வடிவம் இப்பிரபஞ்சமாகும். உயிர்கள் எண்ணுகின்றன. அவ்வெண்ணங் களுக்கு ஏற்ப விதவிதமான வடிவங்களைத் தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக் கொள்கின்றன. அப்படி உண்டு பண்ணிக் கொள்ளுதலில் சாதாரண ஜீவர்கள் தாய் தந்தையரிட மிருந்து தங்களின் சரீரங்களுக்கு ஏற்ற பிண்டங்களை வாங்கிக் கொள்கின்றனர். சாதாரண ஜீவர்களின் எண்ணம் வலிவு மிக வாய்க்கப்பெற்றதல்ல. தெய்வ சங்கல்பம் என்பதும், பிரம்மதேவனுடைய மானசிக சிருஷ்டி என்பதும், யோகியர் களுடைய யோக பலத்தால் தங்களைத் தாங்களே பல ஜீவர்களாகப் பிரித்தெடுப்பதும் எண்ணத்தின் வலிவைக் காட்டு கின்றன. ஆகவே, மனோ சங்கல்பத்தால் ஆண் பெண்களுடைய சேர்க்கையின்றியே உயிர்கள் தோன்றுவது சாத்தியம். அப்படித் தோன்றுகிற உயிர்கள் தாயின் கர்ப்பத்திலிருந்து சிசுக்களாகப் பிறந்து, வளர்ந்து வருவதும் இயற்கையின் இயல்பு. யோகியர்கள் தம்மை வயது முதிர்ந்த பல ஜீவர்களாக நொடிப்பொழுதில் அமைத்துக்கொள்ளமுடியும். பிருந்தாவன லீலையில் கணக்கற்ற கோபாலர்களுக்கும் கோபிகளுக்கும் பரமானந்தத்தை ஊட்டு தற்பொருட்டுக் கண்ணன் நொடிப்பொழுதில் கணக்கற்ற வடிவங் களை எடுத்துக்கொண்டான். யோகேசுவரனுக்கு அத்தகைய செயல் சாத்தியமாகிறது. இவைகளையெல்லாம் தொகுத்தெடுத்து நாம் ஒரு முடிவுக்கு வரக்கூடும். மிகக் கீழ்நிலையில் இருக்கின்ற உயிர்கள் ஆண் பெண் என்ற பேதம் அறியாமலேயே உரு வெடுக்க முடியும். சாதாரண மனிதநிலையைக் கடந்து மேல் நிலைக்குப்போன ஜீவர்கள் சங்கல்பத்தால் தங்களுக்குப் பல

வடிவங்களைத் தரமுடியும். தெய்வம் தனது சங்கல்பத்தால் தூய்மையே வடிவெடுத்த மானுடனாக மண்ணுலகில் பிறக்க முடியும். அப்படிப் பிறப்பதற்கு ஆண் பெண்களுடைய சேர்க்கை முற்றிலும் அவசியமானதல்ல. ஆண் பெண்களுடைய சேர்க்கை வாயிலாகவும் அவன் அவதரிக்கின்றான்; அத்தகைய சேர்க்கை இல்லாமலும் அவன் அவதரிக்கின்றான். அவனுடைய சங்கல்பத்துக்கு ஆற்றல் மிக உண்டு. அந்த ஆற்றலுக்கு ஏற்ப உருவங்கள் தாமாகத் தோன்றுவதும் உண்டு.

பௌதிக உண்மை என்பது ஒரு நிலையிலுள்ள ஏகதேச உண்மையாகும். எல்லா நிலைகளுக்கும் அது பொருந்தாது. எண்ணத்துக்கு அந்நியமாகப் பூதமே இல்லையென்றால் எண் ணத்தைக் கடந்த நிலையிலும் பூதம் இல்லை என்பது வெளிப்படை. பெரியோர் சங்கல்பமும் தெய்வ சங்கல்பமும் பூதத்தையே உண்டுபண்ணக்கூடும்; உயிர்களையும் உண்டு பண்ணக்கூடும். ஆகவே இந்நிகழ்ச்சி சாதாரண கற்பனையையும் சாதாரண பௌதிக நிகழ்ச்சியையும் கடந்ததாகும்.

கேள்வி: *(369)* இல்லாத பொருளைத் தோற்றுவிக்கும் ஸித்தி உண்மையா?

பதில்: இல்லாத பொருளை இருப்பது போன்று காண் பிக்கும் திறமை இயற்கைக்கு உண்டு. அதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். சிறிது சிறிதாக வானத்தில் மேகங் கட்டியுள்ள நாட்களில் வெட்ட வெளியில் வானவில் காண் கின்றோம். உண்மையில் அப்படி வானவில் ஏதும் இல்லை. ஹிமாசலம் போன்ற மலைப்பிரதேசத்தில் இதை நமக்கு நாமே நன்கு நிரூபித்துக்கொள்ள முடியும். மேகங்கட்டியுள்ள வேளையில் சற்றுத் தூரத்தில் வானவில் தரையில் ஒட்டிக் கொண்டிருப்பதை அங்குக் காணலாம். காண்பவர்களுள் ஒரு மனிதனை அந்த வானவில் இருக்கும் இடத்துக்கு அனுப்பி வைத்தால் ஆங்கு அவன் அந்த வில்லைக் காணமாட்டான். பழைய இடத்தில் நிற்கின்றவன் அந்த வில் ஆங்குச் சென்ற மனிதன் மீதும் படிந்திருப்பதைக் காண்கின்றான். எனவே இந்திர தனுசு என இயம்பப்பெறும் வானவில் வெறும் தோற்றமேயொழிய அத்தகைய வில் ஏதுமில்லை. ஜால

வித்தைக்காரன் மாங்கொட்டை ஒன்றைத் தரையில் போட்டுக் கூடையால் மூடுகிறான். கூடையை நீக்கியவுடனே ஆங்கு மாஞ்செடியை மற்றவர்கள் பார்க்கிறார்கள். அச்செடியை மறு படியும் கூடையால் மூடித் திறக்கிறான். கனிந்த மாம்பழம் அச்செடியில் ஒட்டியிருப்பதை மற்றவர்கள் காண்கிறார்கள். இந்த விதத்தில் ஸித்தி என்பது வெறும் மதிமயக்கம். அது காரியத்துக்கு உதவாது. இதேவிதத்தில் நாம் கனவில் காணும் தோற்றங்களும் வெறும் மனவிகாரங்களாம். விகாரத்துக்குப் புறம்பாகப் பொருள் ஏதும் கனவில் இல்லை. இதே கோட்பாட்டை நனவில் கொண்டுவருகிறபொழுது அது ஜாலம் எனப்படுகிறது. ஸித்திகளால் நமக்குப் பயன் ஒன்றுமில்லை. சாதனத்தில் மேலே செல்லுதற்குச் ஸித்திகள் தடையாகவிருக் கின்றன. ஸித்திகளைக் கண்டு மதிமயக்கம் அடையக்கூடாது. கனவை ஒதுக்குவது போன்று ஸித்திகளையும் ஒதுக்கவேண்டும்.

***கேள்வி: (370)* புத்தர் இறந்தவரை உயிர்ப்பிக்கவில்லை. ஆனால் சைவ சமய இலக்கியங்களில் இச்செயலைப் போற்றுகின்றனரே? இந்த முரண்பாட்டைச் சமரசப் படுத்துவது எப்படி?**

பதில்: உலகிலே தோன்றியுள்ள சான்றோர்களுள் புத்தர் பெம்மான் அலாதியான இடம் பெறுகிறார். அறிந்தோ அறியா மலோ மற்ற சமயாச்சாரியர்கள் செய்துள்ள அதிசயச் செயல் களை அவர் அறவே ஒதுக்கி வைத்தார். பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற செயல்களை அமைதியாக ஏற்றுக்கொள்ளுதல் என்னும் கோட்பாடு அலாதியாகப் புத்தர் பெருமானுக்கு உரியதாம். செத்தவர்களை எழுப்புதல் போன்ற செயல்களை ஏனைய மதாச்சாரியர்கள் இறைவனுடைய அருளை நாடிச் செய்தார்கள். அப்படிச் செய்தவர்கள் தாங்களே பிறகு மடிந்து போனார்கள். சாவினின்று உயிர்பெற்று எழுந்தவர்களும் பிறகு மடிந்து போனார்கள். ஆதலால் பிறப்பெடுத்துள்ள உயிர் களனைத்தும் காலக்கிரமத்தில் மடிந்துபோகும். இத்தகைய இயற்கையின் செயலில் மனிதன் தலையிடலாகாது என்பது புத்தர் பெருமானுடைய கொள்கை. அவருடைய கொள்கைதான் தத்துவத்துக்கு ஒத்தது. ஏனைய மதாச்சாரியர்கள் செய்தவை

அனைத்தும் தாற்காலிகமாக மனிதனுக்குத் திருப்தியை அளித்தன. ஆனால் மரணம் குறைந்துபட்டுப் போகவில்லை. ஆகவே புத்தர் பெருமானுடைய முடிவுதான் பொருத்தமானது.

கேள்வி: *(371)* கூடுவிட்டுக் கூடுபாய்தல் உண்மையா? திருமூலர் இடையனுடைய உடலில் புகுந்தார் என்றும் அருணகிரிநாதருக்குக் கூடுவிட்டுக் கூடுபாயும் சக்தி இருந்ததாகவும் நவீனப் பேச்சாளர் ஒருவர் கூறுகிறார். இது உண்மையா? சாத்தியமா.

பதில்: கூடுவிட்டுக் கூடுபாய்தல் யோக ஸித்திகளுள் ஒன்று. பரகாயப் பிரவேசம் என்னும் பெயர் பெற்றுள்ளது இந்த ஸித்தி. யோக சாதனம் புரிந்து யோகி அடைகின்ற ஸித்திகளுள் பரகாயப் பிரவேசம் ஒன்று. 'வேறு ஒரு சரீரத் திலும் புகுதலாம்' என்கின்றார் தாயுமானவர். பின்பு இந்தப் பரகாயப் பிரவேசத்தைப் பற்றிய கோட்பாடு ஒன்று ஆராய்ச்சிக் குரியதாம். ஒருவன் ஒரு சட்டையைத் தொடர்ந்து மூன்று நான்கு நாட்கள் அணிந்திருப்பானாகில் அவனுடைய வியர்வை நாற்றம் அந்தச் சட்டையினுள் கமழ்கிறது. அதன் அருகில் செல்லுவதே அருவருப்புக்குரியதாம். சட்டையைப்பற்றிய உண்மை இதுவென்றால் மலம், மூத்திரம் நிறைந்துள்ள பிறர் உடலில் புகுதற்கான கீழானபான்மையை யோகி ஒருவன் எதற்காகக் கையாளவேண்டும்? கூடுவிட்டுக் கூடுபாய்தல் சாத்தியம் என்றாலும் விவேகிகள் அசுசியான இந்தச் செய லில் கருத்தைச் செலுத்தமாட்டார்கள். தனக்குச் சாத்தியமானவை களிலெல்லாம் மனிதன் தன் வாழ்நாளைச் செலுத்தி வீண் போக்கலாகாது. உலகில் மனிதன் வாழ்ந்திருப்பது சிறிது காலத்துக்கே; அத்தகைய அற்ப ஆயுள் பூர்த்தியாவதற்கு முன்பே பரமனுடைய அருளைத் தீவிரமாக நாடிப்பெறுவது சான்றோர் செயல். புலால் நாற்றம் செறிந்த பரகாயப் பிரவேசத்தைப்பற்றிச் சான்றோர் கனவிலும் கருதார். இதுவே உண்மை. ❑

19. ஈசன் அருளும் முயற்சியும்

கேள்வி: *(372)* **இறைவனுடைய ஆணைப்படியே பிரபஞ்சத்தில் அனைத்தும் நிகழ்கின்றன. அவனுடைய ஆணையை மீறி ஓர் அணுவும் அசையாது என்பது ஒரு கோட்பாடு. மனிதன் தான் விரும்பியதையெல்லாம் செய்து சாதிப்பதும் அடையப்பெறுவதும் சாத்தியம் என்பது மற்றொரு கோட்பாடு. முரண்படுகிற இவ்விரண்டு கோட்பாடுகளுள் எது உண்மை? அருள்கூர்ந்து தெளிவிக்க வேண்டுகிறேன்.**

பதில்: பிரபஞ்சத்தின் அமைப்பையும் மனிதன் படைத்துள்ள இச்சா சுதந்திரத்தையும் சரியாக அறிந்துகொள்ளாதவனுக்கு முரண்பாடு உண்டு. மற்று இவை இரண்டையும் சரியாக அறிந்துகொள்கிறவனுக்கு இவைகளுக்கிடையில் முரண்பாடுகள் இல்லை.

நடைமுறையிலுள்ள அரசாங்கம் ஒன்றுக்கு அது வகுத்து வைத்துள்ள சட்டதிட்டங்கள் பல உள. அந்த அரசாங்கத்தில் வாழ்ந்திருப்பவன் அரசாங்கச் சட்டதிட்டத்துக்கு உட்படத் தான் விரும்பியதையெல்லாம் சாதிக்கலாம். சட்டத்தை மீறி எதையும் சாதிக்க அவனுக்கு இயலாது. கிருஷிகன் ஒருவன் மைதானத்தில் பசு ஒன்றை மேய்ப்பதற்கு முளை அடித்து அதில் பசுவைக் கயிறுகொண்டு கட்டிவைக்கிறான். அந்தக் கயிற்றின் நீளத்துக்கு உட்பட்ட எந்த இடத்தில் போய் வேண்டுமானாலும் பசு மேயலாம். கயிற்றின் நீளத்தைக் கடந்து தூரப்போய் மேய்தற்கு அந்தப் பசுவுக்கு இச்சாசுதந்திரம் இல்லை. அதே விதத்தில் கடவுள் அந்தந்த ஜீவனுடைய பரிபாகத்துக்கேற்றவாறு இச்சா சுதந்திரம் எனும் கயிற்றைக் கொடுத்திருக்கிறார். இந்த

அடிப்படைக் கோட்பாடுகளை நாம் நன்கு ஓர்ந்து ஆராய்ந்து கருத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

கேள்வி: *(373)* 'அவனன்றி ஓரணுவும் அசையாது'. 'முயற்சி திருவினையாக்கும்' - இரு கருத்துக்களும் முரண் படுகின்றன அல்லவா?

பதில்: இந்த இரண்டு கருத்துக்களுக்கும் இடையில் சிறிதேனும் முரண்பாடு இல்லை. அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் கோட்பாடு அண்டங்கள் அனைத்துக்கும் பொதுவாய் அமைந்தது. ஆட்சிமுறை முழுதும் அரசாங்கத்துக்கு உரியது என்று சிறிய அளவில் ஒரு நாட்டைக் குறித்து நாம் பகர்வதற்கு நிகராக அகிலாண்டத்துக்கும் பொதுவாக இருப்பது அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் கோட்பாடு. ஒரு நாட்டின் ஆட்சி முறைக்கு உட்பட்டு மனிதன் மேன்மையடைய லாம். அவன் மேன்மை அடைதற்கும் நாட்டின் ஆட்சி முறைக்கும் இடையில் எங்ஙனம் முரண்பாடு இல்லையோ அங்ஙனம் இறைவனுடைய பெரிய திட்டத்துக்கும் அந்தந்த ஜீவன் அடைகிற முன்னேற்றத்துக்கும் இடையில் முரண்பாடு இல்லை. திட்டத்துக்கு உட்பட்டு முயல்கின்றவர்கள் முன் னேற்றம் அடைகின்றனர். திட்டத்துக்கு மாறி நடப்பவர்கள் தோல்வி அடைகின்றனர்; துன்பத்துக்கும் ஆளாகின்றனர். பிறகு அவர்கள் தங்களைத் தாங்களே திருத்தி அமைத்துக் கொள்ளுதற்கும் இறைவனுடைய பெரிய திட்டத்தில் இடம் உண்டு. இக்கோட்பாடே அண்டம் முழுதிலும் நடைமுறையில் இருந்து வருகிறது. அந்தப் பெரிய திட்டத்தினுள் ஒவ்வொரு ஜீவனுடைய முயற்சியும் இடம் பெற்றுள்ளது. முயற்சியானது இறைவன் திட்டத்துக்கு ஒத்ததாயிருக்குமாகில் அந்த முயற்சி வெற்றிகரமாக நிறைவேறுகிறது. இறைவனுடைய பெரிய திட்டத்தினோடு ஜீவனுடைய சிறிய முயற்சி முரண்படுமானால் அது தோல்வியுறும். தோல்வியுறும் என்று எண்ணி ஜீவன் தன்னுடைய முயற்சியை நிறுத்திவிடலாகாது. தன்னுடைய பூரண ஆற்றலைப் பயன்படுத்தி எடுத்துக்கொண்ட கர்மத்தை நன்கு நிறைவேற்றப் பாடுபடவேண்டும். தொடுத்த கர்மம் நிறைவேறாது போய்விடுமாகில் பெருந்திட்டத்தோடு அது

முரண்படுகிறது என்னும் விவேகம் வருகிறது. அந்த அளவில் முயற்சி பயன்தருகிறது. முயற்சியின் வாயிலாகவே எல்லா உயிர்களும் பாடம் கற்று வருகின்றன. பாடம் புகட்டுதற்கு வெற்றி பயன்படுவது போன்று தோல்வியும் பயன்படுகிறது. ஆதலால் முரண்பாடு ஏதுமில்லை

இதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்வோம். மஹாபாரத யுத்தத்தைத் தனக்கு வெற்றிகரமாக முடிப்பதற்குத் துரியோதனன் அரியபெரிய முயற்சிகள் எடுத்துக்கொண்டான். தான் வெற்றி யடைவது திண்ணம் என்கின்ற உறுதிப்பாடும் அவனிடத் திருந்தது. பாட்டனாராகிய பீஷ்மாச்சாரியரைத் தனக்குச் சேனாதி பதியாக இருக்கவேண்டுமென்று எண்ணினான். ஒருவன் கேட்ட தைத் தருவது தன்னுடைய கடமை எனக் கருதியிருந்த பாட் டனார் பேரனுடைய வேண்டுதலுக்கு இசைவு கொடுத்தார். ஆனால் அவன் போரில் ஒழிந்துபட்டுப்போவது திண்ணம் என்று எச்சரிக்கை செய்தார். அந்த எச்சரிக்கையைத் துரியோ தனன் ஏற்றுக்கொள்ளவில்லை. வஞ்சகமில்லாது பாட்டனார் தனக்காகப் போர்புரிந்தால் தான் வெற்றியடைவது திண்ணம் என்று துரியோதனன் உறுதி கூறினான். பாட்டனாரும் அங் ஙனமே தமது முழு ஆற்றலைத் துரியோதனனுக்காகப் பயன் படுத்தினார். துரியோதனன் கட்சியிலிருந்த அனைவரும் மடிந்தனர். பாட்டனாரும் வீழ்ந்தார். இறைவனுடைய பெரிய திட்டத்தைப் பாட்டனார் அறிந்திருந்தார். துரியோதனன் அறிய வில்லை. பீஷ்மர் துணைபுரிந்தாலும் கேடு வெல்லாது என்னும் பாடத்தை அவர் புகட்டினார். புல்லிய உயிர்கள் அனைத்தையும் துடைத்துத் தள்ளுவது இறைவனுடைய பெரிய திட்டம் என்பதையும் அவருடைய செயலின் வாயிலாக விளக்கிக் காட்டினார். ஈண்டு இரண்டு செயல்களுக்கிடையில் முரண்பாடு இல்லை.

கேள்வி: *(374)* சுயப்பிரயத்தனம் எதுவும் இல்லாது இரு. உதிர்ந்த சருகு காற்றடித்த பக்கம் எடுத்துச் செல்லப்படுவது போன்று யதிருச்சையாக அமையும் சூழ்நிலையில் நீ இரு என்னும் கோட்பாடு சாஸ்திரத்தில் இருக்கிறது. பெரு முயற்சி எடுத்துக்கொள்; ஓயாது உழைத்து வா, என்னும்

கோட்பாடும் சாஸ்திரத்தில் இருக்கிறது. ஈசுவரப் பரா தீனமாக இருத்தலும் சுய முயற்சியும் முரண்படுகின்றனவே? அகங்காரம் தலையெடுக்காவிடில் முயற்சியே சாத்ய மில்லையே? முரண்படும் இவ்விரு கோட்பாடுகளுக் கிடையில் சாதகன் என் செய்வது?

பதில்: பிரபஞ்சத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் யாவும் உண்மை யில் ஈசன் செயலே. கேடு நிறைந்தவைகளாகத் தென்படும் செயல்களிலும் அவனுடைய திட்டம்தான் நிறைவேறுகிறது. ஓர் அணுவும் அவனுடைய ஆணையின்றி அசைவதில்லை. இதுவே இயற்கையைப் பற்றிய முடிவான உண்மை. ஆனால் அக்ஞானத்திலிருக்கும் நமக்கு இவ்வுண்மை விளங்காது. அக் ஞானமும் அகங்காரமும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. அக்ஞானம் உள்ள இடத்தில் அகங்காரமும் இருக்கிறது. அகங்காரம் உருவெடுத்திருப்பது அக்ஞானத்தை அடிப்படை யாகக் கொண்டு. அகங்காரம் பிடித்துள்ள ஜீவனுக்குத் தனது முயற்சியே முதல் காரணமாகத் தோன்றுகிறது. அப்படி அவ னுக்குச் சுயமுயற்சி முக்கியமானதாகத் தோன்றிக் கொண் டிருக்கும்பொழுது முயற்சியைக் குறைத்துவிடலாகாது. பெருமுயற்சி உடையவனாகவே இருந்து வரவேண்டும். தான் விரும்பும் அரும்பெரும் செயல்களையும் சாதித்தல் பொருட்டு ஊக்கம் எடுத்துக்கொள்ளுதல் அவசியம்.

செய்கின்ற எல்லாச்செயல்களும் தனக்குப் பயன்படுபவை போன்று பிறர்க்கும் பயன்படவேண்டும் என்னும் உணர்ச்சி இருப்பது முற்றிலும் அவசியம். ஏனென்றால் பலர்க்குப் பயன் படும் செயலே நல்வினையாகிறது. நீடித்த நலனை அளிக்க வல்லதும் அதுவே. தன் அகங்காரத்தை முதன்மையாகக் கொண்டிருப்பதற்கிடையில் பலபேர் நலம் என்னும் எண்ணம் வலுத்து வருகின்றவளவு அம்மனிதனுடைய உள்ளம் தூய தாகிறது. தூய கண்ணாடியில் பிம்பம் நன்றாகத் தென்படுவது போன்று தூய உள்ளத்தில் உண்மை நன்கு புலப்படுகிறது. இயற்கையின் நடைமுறையைப் பற்றிய உண்மையை அறியவல்ல மனதுக்கு அகங்காரத்தைப் பற்றிய உண்மையும் விளங்குகிறது. ஒவ்வோர் உயிரும் ஒவ்வோர் அகங்காரத்தின் ஸ்தூல தோற்ற மாகும். பிறகு அகங்காரங்களின் தொகையைப் பேரகங்காரம்

எனலாம். கடலில் உள்ள அலைகளின் தொகையைக் கடல் என்று சொல்லுதற்கு இது ஒப்பாகும். கடலுக்கு அந்நியமாக அலைகள் இருக்க முடியாது. பேரகங்காரமாகிய படைப்புக் கடவுளுக்கு அந்நியமாக உயிர்கள் இருக்க முடியாது. இவ் வுயிர்கள் ஒன்றை ஒன்று தாக்குகிற கிருத்தியங்களைச் செய் தாலும் பேரமைப்பில் அவை யாவும் தக்க இடம் பெற்றிருக் கின்றன. அரசாங்கத்தின் நடைமுறையில் குற்றவாளிகளைத் துன்புறுத்துகின்ற கூட்டத்தார் இருக்கின்றனர். நோயாளிகளுக்குத் துன்பம் தருவது போன்று நலம் தரும் கூட்டத்தார் இருக்கின் றனர். கல்வி பயிலுகிறவர்களுக்கு உபத்திரவம் தருவது போன்று நல்லுணர்வை ஊட்டுபவர் இருக்கின்றனர். இத்தனைவிதச் செயல்களும் அரசாங்கம் என்பதில் அடங்கியிருக்கின்றன. இறைவனுடைய ஆட்சியிலும் இங்ஙனம் எல்லா உயிர்களும் இடம் பெற்றிருக்கின்றன.

அரசாங்க அலுவல்களில் நன்கு தேர்ச்சி பெற்ற ஒருவன் தனக்காகவென்று தனி உத்தியோகம் எதையும் வைத்துக் கொள்ளுதல் இல்லை. அப்போதைக்கப்போது அவனுக்கு இடப்படும் வெவ்வேறு அலுவல்களை அவன் திறம்படச் செய்து சாதிக்கிறான். அனுபவத்தின் முதிர்ச்சியால் அத்தகைய ஆற்றல் வருகிறது. இறைவனுடைய பேரமைப்பை அறிகிற ஆத்மசாதகன் அத்தகையவன். உதிர்ந்து கிடக்கும் சருகு போன்று அவன் ஆணவ அகங்காரமற்று இருக்கிறான். காற்று அடித்த பக்கம் சருகு தூக்கிச்செல்லப்படுகிறது. அகங்காரமற்ற அறிஞன் இறைவன் கையில் தகுந்த கருவியாய் விடுகின்றான். தனக்கென ஒரு செயலும் அவன் வைத்துக்கொள்ளுதல் இல்லை. ஆயினும் அவன் மூலம் நிகழ்கின்ற செயல்கள் யாவும் இறைவனுடைய செயல்களாம்.

இங்ஙனம், அகங்காரம் இருக்கும் பரியந்தம் தன் முயற்சிவேண்டும். தன் முயற்சியில் பொதுநலத்துக்குரிய செயல்க ளையே செய்யவேண்டும். அப்படிச் செய்பவர் மனது தெளி வடைகிறது. தெளிந்த மனமுடையவன் எல்லா உயிர்களையும் பேருயிர் ஒன்று ஆட்டி வருகிறதென்று உணருகிறான். இங்ஙனம் ஆத்ம வளர்ச்சியிலுள்ள படித்தரங்களை ஓர்ந்து உணர்ந்தவர்க்கு முரண்பாடு ஏதுமில்லை என்பது புலப்படும்.

கேள்வி: *(375)* இறைவனை நம்பிச் செயலில் ஈடுபடுகிறவர்கள் தோல்வியடைவதையும், தன்னம்பிக்கை கொண்டு செயலில் ஈடுபடுகிறவர்கள் வெற்றியடைவதையும் காண்கிறோம். எனவே எல்லாம் ஈசன் செயல் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? செயல்கள் நடைபெறுவது ஈசனாலா? அல்லது தன்னம்பிக்கையாலா?

பதில்: கடவுள் நம்பிக்கை கொள்ளுவதாகக் கருதுகிற பலர் உண்மையில் கடவுள் நம்பிக்கை கொள்ளுவதில்லை. அவர்களிடத்துக் கடவுள் நம்பிக்கையுமில்லை, தன்னம்பிக்கையுமில்லை. அன்னவரிடம் திண்மையுமில்லை. ஏனோதானோ வென்று அவர்கள் செயலில் ஈடுபடுகின்றனர். கடவுள் தங்களுக்கு உதவி செய்வார் என்று மனக்கோட்டை கட்டுதற்கிடையில் அவர்கள் சரியானபடி முயற்சி எடுத்துக் கொள்ளுவதில்லை. ஆதலால்தான் அவர்கள் தோல்வியடைகின்றனர். வெற்றியையும் தோல்வியையும் முயற்சியோடு இணைக்க வேண்டும். பொருத்தமான முயற்சி வெற்றியைத் தருகிறது. பொருந்தாத முயற்சியோ தோல்வியாக மாறுகிறது.

சரியாக ஆராய்ந்து பார்க்குமிடத்து இறைவனது நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் இணைபிரியாது அமைந்திருக்கின்றன என்பது புலனாகும். ஏனென்றால் உயிர்கள் அனைத்தும் இறைவனிடமிருந்து வந்தவைகள். இறைவனிடத்திலேயே அவைகள் நிலைபெற்றிருக்கின்றன. முடிவில் இறைவனிடத்திலேயே அவைகள் ஒடுங்குகின்றன.

மானுட உலகில் அரசாங்கம் ஒன்று சில சட்டதிட்டங்களை நிறுவுகிறது. அந்த அரசாங்கத்தில் வாழ்ந்திருப்பவன் தன்னுடைய முயற்சிகளை அரசாங்கத்தின் நியதிகளுக்கு உட்படுத்தவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவனுடைய முயற்சி பயன்படாது போய்விடும். அதுபோன்று அகிலாண்டத்தின் நடைமுறை ஈசனுடைய திட்டத்தில் அடங்கியிருக்கிறது. தன்னம்பிக்கையோடு செயல்புரிகிறவன் ஈசனுடைய திட்டத்தை அறிந்திருக்கலாம் அல்லது அறியாதிருக்கலாம். அறியாமல் செய்தாலும் அவனுடைய முயற்சி ஈசுவரத் திட்டத்துக்கு ஒத்திருக்கிறபொழுது அவன் வெற்றியடைகிறான். முரண்படுகிறபொழுது அவனுக்குத் தோல்வியுண்டாகிறது. ஆதலால் தன்னம்பிக்கை படைத்திருக்கிற

எல்லார்க்கும் எப்பொழுதுமே வெற்றி வாய்க்கிறது என்று கூறமுடியாது. கடவுளைப்பற்றி வெறும் வாய்ப்பேச்சுப் பேசிக் கொண்டு அரைகுறையான முயற்சி செய்கிறவர்களும் சிற்சில வேளைகளில் வெற்றியடைகின்றனர்.

இனி, அடிப்படை நியதிக்கு வருவோம். ஈசனுடைய திட்டத்தினின்று யாரும் பிசகமுடியாது. பிசகுகிறபொழுது துக்கம் தோன்றி எச்சரிக்கையை உண்டுபண்ணுகிறது: அல்லது மடமை தோன்றி அவனுடைய நல்லறிவு பாழ்படுகிறது. ஆக ஈசனுடைய திட்டத்துக்கு மாறாக முயன்று முன்னேற்றம் அடைந்தவர் யாருமில்லை. அறிந்தோ அறியாமலோ ஈசனுடைய திட்டத்துக்கு உட்பட்டு நடந்து கெட்டுப்போனவர் யாருமில்லை.

சரியாக உண்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து ஈசன் செயலுக்கும், சுயப் பிரயத்தனத்திற்கும் இடையில் மாறாத இணக்கம் இருக்கிறது. இந்த இணக்கத்தை யோகம் என்று சொல்வதும் பொருந்தும். ஆதலால் ஈசுவரத் திட்டத்துக்கு ஒத்த பாங்கில் தன்னம்பிக்கை பூண்டு செயலில் ஈடுபடுகிற வர்கள் வெற்றியடைகின்றனர். ஈசனுடைய பெரிய திட்டத்தில் ஜீவாத்மாவின் முயற்சி அடங்கியிருக்கிறது. ஜீவாத்மாவினுடைய நேர்மையான முயற்சியானது கடவுள் வழிபாட்டுக்கு ஒப்பானது என்பது ஆன்றோர் துணிபு. ஆக, இயற்கையின் நடைமுறையாக இலங்குகின்ற ஈசனுடைய திட்டத்துக்கு உட்பட்டு ஒவ்வொரு ஜீவனும் தன் சுயப்பிரயத்தனத்தைத் தீவிரமாகக் கையாள அவன் கடமைப்பட்டிருக்கிறான்.

கேள்வி: *(376)* ஒரு காரியம் நிறைவேறக் கடவுளைப் பிரார்த்தனை செய்கிறோம்; முயல்கிறோம். நிறைவேறிய பின்னர் கடவுள் அருளா, நமது முயற்சியா என்பதனை எப்படி அறிவது?

பதில்: கடவுள் அருள் யாண்டும் எல்லார்க்கும் பொதுவாய் இருக்கிறது. அவர் அருள் இல்லாவிட்டால் எந்த உயிரும் வாழ்ந்திருக்கமுடியாது. மீன்கள் நீர் வாழ்வன எனவும், மக்கள் நிலத்திலே நடமாடுபவர்கள் எனவும் இயற்கை அமைந்திருக்கி றது. இத்தகைய அந்தந்த உயிருக்குப் பொருத்தமான அமைப்பே இறைவன் அருள் எனப்படுகிறது. நீரில் வாழும் மச்சம்

செம்படவன் வலை வீசிய உடனே அந்த வலையில் அகப் படாது தூரமாக நீந்திப் போய்விடுகிறது. அது மச்சம் எடுத்துக் கொள்கிற முயற்சியாகிறது. மனிதன் நிலத்தில் நடந்து போகும் பொழுது நச்சுப் பாம்பு போன்ற ஆபத்தான ஜந்துக்களை அணுகாது ஜாக்கிரதையாகப் போகிறான். அப்படி எச்சரிக்கை யோடு நடப்பது மனிதன் எடுத்துக்கொள்ளுகிற முயற்சியாகிறது. இவைகள் வாழ்க்கையை ஒட்டிய சாமானியமான நிகழ்ச்சிகளாம்.

பள்ளிக்கூடம் ஒன்று துவக்குவது, தொழிற்சாலை ஒன்று அமைப்பது-இவை போன்றவைகள் அசாதாரணமான செயல்கள். பள்ளிக்கூடம் துவக்குவது அவசியமா? என்னும் கேள்வியை மனிதன் முதலிலே ஆராயவேண்டும். அவசியமென்றால் அதற்கேற்ற இடம், பொருள், ஏவல் முதலியன அமைந்திருக் கின்றனவா? என ஆராய்தல் வேண்டும். அவை யாவும் முறையாக அமைந்திருந்தால் துவக்கிய கர்மம் வெற்றி பெறுகிறது. இதில் ஈசன் அருள் பின்னணியிலும், மனிதனுடைய முயற்சி முன்னணியிலும் வந்து நிற்கின்றன. மற்றோரிடத்தில் பள்ளிக்கூடம் ஒன்று நன்கு அமைக்கப்பட்டு இருக்கிறது. நடாத்துதற்கேற்ற மூர்த்தி இன்னார் என்று ஒருவனைத் தேடி வருகிறார்கள். அவன் உண்மையில் தகுதி வாய்ந்தவன். அவனை மற்றவர்கள் தேடிவந்தது ஈசன் அருள். தகுதி வாய்ந்தவன் அவ்வேண்டுதலை மறுக்கலாகாது. மறுத்தால் ஈசனுடைய ஆணையை அவன் புறக்கணித்தவனாகின்றான்.

ஈசன் அருள், மானுடப் பிரயத்தனம் ஆகிய இரண்டும் எங்கே ஒன்று சேர்ந்து இருக்கின்றனவோ ஆங்கு வெற்றியும், விரிவும், நல்வாழ்வும் சேர்ந்து அமைந்திருக்கின்றன என்று சஞ்சயன் பகவத்கீதைக்கு முடிவுரை மொழிகின்றான்.

ஆதலால் மனிதன் செய்கிற ஒவ்வொரு செயலும் ஈசனுடைய திட்டத்தை அனுசரித்து இருத்தல் வேண்டும்.

வெற்றியானாலும் சரி, தோல்வியானாலும் சரி அனைத்தும் ஈசன் செயலே. இதை அறிந்துகொள்ளுகிற ஆத்மசாதகன் இறைவன் அருளால் நிறைவேறியது என்று மேலும் இறைவனையே சார்ந்திருக்கின்றான். பந்த பாசத்தில் உழலும் மனிதனோ தோல்வியடைந்தால் கடவுள் தனக்கு அனுக்ரஹம் பண்ணவில்லை என்றும், வெற்றியடைந்தால் அவனுடைய

முயற்சியால் நிகழ்ந்தவை என்றும் எண்ணித் துன்பத்துக்கும் இன்பத்துக்கும் ஆளாகிறான்.

கேள்வி: *(377)* "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று கூறப்படுகிறது. கடவுளை வணங்குவோர் சிலர். வணங்காதவர்கள் பலர். வணங்குவது அவன் அருள் ஆதலால், இந்நிலை பட்சபாதம் அல்லவா? கடவுளுக்கு இது பொருந்துமா?

பதில்: 'அவனருளால் அவன்தாள் வணங்கி' என்னும் கோட்பாட்டுக்கு நாம் முதலில் விளக்கம் காணவேண்டும். சூரியன் எங்கேயிருக்கிறான் என்பதைச் சூரிய வெளிச்சத்தைக் கொண்டு கண்டுபிடிக்கிறோம். அதே விதத்தில் சந்திரன் எங்கே இருக்கிறான் என்பதைச் சந்திர வெளிச்சத்தைக்கொண்டு கண்டுபிடிக்கிறோம். நள்ளிருளில் சூரியன் எங்கேயிருக்கிறான் என்று கண்டுபிடிக்கமுடியாது. இரவு ஆனாலும் சரி, பகல் ஆனாலும் சரி, அமாவாசை நாளன்று சந்திரன் எங்கேயிருக்கிறான் என்று கண்டுபிடிக்க நமக்கு இயலாது. சந்திர சூரியர்களுடைய வெளிச்சத்தைத் துணையாகக் கொண்டே அவர்கள் இருக்குமிடத்தைக் காண்கிறோம்; வழிபடவும் செய்கிறோம். அன்னவர்களைப் பொறுத்தவரையில் அவனருளாலே அவன் தாள் வணங்கி என்னும் கோட்பாடு பொருத்தமானதாயிருக்கிறது. பக்ஷபாதம் ஆங்கு இல்லை. கழனியில் உழைத்துப் பாடுபடுபவர்கள் உணவுப்பொருளை ஏராளமாக உண்டுபண்ணுகின்றனர். கழனியிலே உழைக்கப்போவதற்கு முன்பு வேண்டியவளவு உணவு உண்டுவிட்டு உழவர் உழைக்கப்போகின்றனர். உணவின் துணைகொண்டே உழவர் உணவை வளர்க்கின்றனர் என்னும் கோட்பாடு பொருத்தமானதாயிருக்கிறது. பக்ஷபாதத்தைப் பற்றிய கேள்வி எழ ஈண்டு இடமில்லை. மாணாக்கன் ஒருவன் கணக்குப் போட்டுப் பழகுகிறான். முதலில் கூட்டல் போட்டுப் பழகுகிறான். பிறகு அதன் துணைகொண்டு கழித்தல் போட்டுப் பழகுகிறான். கூட்டலை இன்னொரு பாங்கில் பயன்படுத்திப் பெருக்கல் பழகுகிறான். கழித்தலை வேறொரு பாங்கில் பயன்படுத்தி வகுத்தல் பழகுகிறான். இவையாவையும் கருத்தில் வைத்துக்கொண்டு கணித அறிவைக்கொண்டே மனிதன்

கணிதம் பயிலுகிறான் என்னும் கோட்பாடு வருகிறது. ஈண்டும் பக்ஷபாதம் இல்லை. சம்பாதித்த பணத்தை முதலாக வைத்துக் கொண்டு மேலும் மனிதன் பணம் சம்பாதிக்கிறான். பணத்தின் துணைகொண்டே பணத்தைப் பெருக்குதல் என்னும் கோட்பாடு வருகிறது. பக்ஷபாதம் என்னும் குற்றம் சாட்டுதற்கு ஈண்டு இடமில்லை. தவமும் தவமுடையார்க்கு என்னும் கோட்பாடு வந்துள்ளது. இது பொய்யாமொழி. யார் ஒருவன் தவத்தில் இறங்கி அதை வளர்க்கிறானோ அவனுக்கு மேலும் தவம் ஓங்குகிறது.

சூரிய வெளிச்சம் எல்லார்க்கும் பொதுவாகப் பூமியில் படுகிறது. ஒரு சிலர் சூரிய வெளிச்சத்தைத் தங்கள் மேனியின் மீது படும்படி செய்து மேனிக்குப் புதிய திட்பத்தைத் தேடுகின்றனர். சூரிய வெளிச்சம் அறைக்குள் வரும்படி செய்து அறையினுள் உள்ள நச்சு நிலையை மாற்றுகின்றனர். சூரிய வெளிச்சத்தின் துணைகொண்டு ஒரு சிலர் தங்களையும், தாங்கள் வாழுமிடத்தையும் மேன்மைப்படுத்துகின்றனர். ஒரு சிலர் சூரிய வெளிச்சத்தை நன்கு பயன்படுத்தியது சூரியனுடைய பக்ஷபாதம் ஆகாது. காற்று எல்லார்க்கும் பொதுவாக அடிக்கிறது. கப்பலைச் செலுத்துகிற மாலுமி பாயை விரித்துக்கட்டி, அடிக்கிற காற்றைப் பயன்படுத்திக் கப்பலை மேல்நோக்கிச் செலுத்துகிறான். மாலுமிக்குக் காற்று ஓரம் சார்ந்திருந்து உதவிபுரிந்தது என்னும் குற்றத்தைக் காற்றின்மீது நாம் சாற்றலாகாது. மனிதன் நல்லவனாக விரும்புகிறான். அத்தகைய விருப்பம் இறைவனுடைய அருள். நல்லவனாவதற்கு ஒரு மனிதன் கடவுள் நாட்டம் கொள்ளுகிறான். நல்லவனாவதற்கு மற்றொரு மனிதன் கெட்டவர்களின் இணக்கத்தை நாடுகிறான். அத்தகைய இணக்கத்தால் தனக்கு நலன் வரும் என்று அவன் எண்ணியது அருளை முறைதவறிப் பொருள்படுத்தியதின் விளைவாம். அருளை ஒரு சிலர் முறையாகப் பயன்படுத்திக் கடவுள் தன்மையை எய்துகின்றனர். அருளை வேறு சிலர் முறைதவறிப் பயன்படுத்திக் கீழ்மையுறுகின்றனர். அது கடவுளின் பக்ஷபாதம் எனலாகாது. மனிதனிடத்துள்ள அறிவின்மையே அதற்குக் காரணமாகும். அவனருளால் அவன் தாள் வணங்குகிறவர்கள் மேலும் மேலும் அவனையே சார்ந்து இருக்கின்றனர். அவனை

அடைவதற்கான வழிகளைக் காட்டியருள வேண்டும் என்று அவனிடம் விண்ணப்பிக்கின்றனர். நல்லறிவை வளர்க்கின்றனர். கடவுளின் அருளை நன்கு சார்ந்து இருந்து மேலும் மேலும் மேலோராகின்றனர். அப்படி ஒரு சிலர் அருளைச் சார்ந்திருந்து மேலோர் ஆவதும், மற்றொரு சிலர் அருளைச் சார்ந்திராது கீழோர் ஆவதும் அவரவர் படைத்துள்ள அறிவையும், அனுப வத்தையும் ஒட்டியதாம். கடவுள் யாரிடத்திலும் பக்ஷபாதமாக நடந்துகொள்ளுவதில்லை. நல்லார், பொல்லாராகிய எல்லார்க்கும் அவர் அருள் பொதுவானது. அந்த அருளைப் பயன்படுத்தத் தெரிகிறவர்கள் பாக்கியவான்கள் என்பது இக்கோட்பாட்டின் உட்பொருளாகும்.

கேள்வி: *(378)* புருஷாகாரம் அல்லது மானுடப் பிரயத் தனம் முன்னேற்றத்துக்கு முற்றிலும் இன்றியமையாதது என்பது ஒரு கோட்பாடு. மனிதன் கடவுளைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுதலே வாழ்க்கையின் முடிவான லக்ஷியம் என்பது மற்றொரு கோட்பாடு. இவ்விரண்டு கோட்பாடு களும் ஒன்றோடொன்று முரண்படுபவைகள் அல்லவா?

பதில்: இரண்டு கோட்பாடுகளையும் தனித்தனியே ஆராய்ந்து பார்ப்போம். பிரயத்தனமில்லாது எவ்வுயிர்க்கும் முன்னேற்றமில்லை. எல்லா உயிர்களும் ஓயாது முயன்று வருகின்றன. முயற்சியின் வலிவுக்கு ஏற்ப முன்னேற்றம் விரைவில் வந்தமைகிறது. மற்ற உயிர்களின் முயற்சியைவிட மனிதனுடைய முயற்சி பன்மடங்கு மேலானது. உலகில் நாம் கண்டுவரும் மாறுபாடுகளனைத்தும், முன்னேற்றங்களனைத்தும் முயற்சியின் பயனேயாம். ஒரு மனிதனுடைய முயற்சி அல்லது சிரத்தை எவ்வளவு பெரியதோ அவ்வளவுக்கவ்வளவு அவன் முன்னேறுகிறான் என்று கீதா சாஸ்திரம் பகர்கிறது:

“மனிதன் சிரத்தை மயமானவன், சிரத்தை
யெதுவோ அதுவே அவனுமாம்”

இந்த முயற்சியே புருஷாகாரம் எனப்படுகிறது.

சிரத்தை உடையவனாக வாழ்கின்ற மனிதன் உலகிலே தனித்து வாழ்பவன் அல்லன். சமூகத்தோடு அவன் சம்பந்தப்

பட்டவனாக இருக்கிறான். சமூகத்தோடு அவன் வைக்கும் இணக்கமும் அவனுடைய முயற்சியை விளக்குகிறது. மற்றவர் களோடு நல்லிணக்கம் வைப்பது மேலான முயற்சி. மற்றவர் களைப் புறக்கணிப்பது அல்லது அவர்களுக்கு இடைஞ்சல் செய்வது கீழான முயற்சி. மற்றவர்களுக்குத் தடை செய்யுமளவு ஒருவனுடைய வாழ்வு தானே தடைபட்டுப் போய்விடுகிறது. மற்றவர்களுக்குத் துணைபுரியுமளவு தனது சொந்த வாழ்வு எங்கிருந்தோ துணையைப் பெறுகிறது. இப்பெரிய பாடத்தைக் கற்றுக்கொள்ள மனிதன் நெடுங்காலம் எடுத்துக்கொள்கிறான். இதைக் கற்றான பிறகு மனிதனுடைய புருஷாகாரம் புதியதொரு வடிவு எடுக்கிறது. பிறர்க்குப் பணிவிடை செய்தலிலேயே அவன் தன்னை மறந்து விடுகிறான். பிறர் பொருட்டு உழைத்து அவன் பிறர்மயம் ஆய்விடுகிறான். அதாவது தான்வேறு பிறர் வேறு என்ற வேற்றுமை போய்விடுகிறது. உயிரனைத்தும் ஒரே பேருயிராக அவனுக்குக் காட்சி கொடுக்கிறது. ஆக, மனிதனுடைய பிரயத்தனத்தின் முடிவான நிலை மானுடச் சிறுமையை இழந்து தெய்வீகப் பெருநிலையைப் பெறுதலாம். அனைத்தையும் ஒரே பரமபுருஷனாக காண்கின்ற பெருநிலைக்கு மனிதனைப் புருஷாகாரம் அழைத்துச் செல்கிறது.

இனி, கடவுளைச் சார்ந்திருத்தல் என்னும் கோட்பாட்டை ஆராய்ந்து பார்ப்போம். இது ஆத்ம சமர்ப்பணம் என்று பெயர் பெறுகிறது. பிரபத்தி அல்லது சரணாகதி என்றும் இது அழைக்கப்படுகிறது. அடைக்கலம் புகுதல் என்று ஆன்றோர் இக்கோட்பாட்டைப் பகர்கின்றனர்:

> **"தர்மங்களை யெல்லாம் அறவே தியஜித்து**
> **விட்டு என்னையே சரணடைக"**

என்று பகவான் கீதையில் பகர்ந்திருக்கிறார். சுயப்பிரயத்தனம் பண்ணுகின்றவர்களுக்கு ஆத்ம சமர்ப்பணம் இல்லையென்றும், ஆத்ம சமர்ப்பணம் பண்ணுகின்றவர்களுக்குச் சுயப்பிரயத்தனம் இல்லையென்றும் வெளித்தோற்றத்துக்குத் தென்படுகிறது. உண்மையில் ஆத்ம சமர்ப்பணம் அல்லது சரணாகதி சுயப் பிரயத்தனத்தின் உச்சநிலையாகும்.

சுயப்பிரயத்தனம் பண்ணுகின்றவன் கடவுளுடைய

துணையைப் புறக்கணிப்பவன் அல்லன். தன் யத்தனத்துக்குக் கடவுள் சகாயம் வேண்டும் என்று அவன் எண்ணுகிறான். மற்ற உயிர்களின் ஆதரவும் வேண்டுமென்று அவன் நினைக்கிறான்.

இத்தகைய எண்ணத்துடன் பிரயத்தனம் பண்ணுகின்றவன் நாளடைவில் தன்னுடைய சொந்த ஆசாபாசங்களையெல்லாம் ஒதுக்கி விடுகிறான். ஈசுவர சங்கல்பத்துக்கு ஒப்ப முயலுதல் தன் கடமையென்று உணர்கின்றான். பிறகு தன் முயற்சியும் கடவுளிடத்திருந்தே வருகிறது என்று அறிகிறான். கடவுள் ஆட்டுபவர், ஜீவன் ஆடுபவன்: கடவுள் கர்த்தா, ஜீவன் கருவி. கடைசியில் தான் கருவி என்கிற எண்ணமும் அவனை விட்டுப் போய்விடுகிறது. கர்த்தாவாக இருப்பவரும் கருவியாக இருப்பவரும் அவரே என்ற எண்ணம் வந்துவிடுகிறது. அந்த எண்ணம் ஓங்குமளவு ஜீவனுடைய செயல்களெல்லாம் செயற்கரிய பெருஞ்செயல்களாய் விடுகின்றன. உண்மையில் அவன் வாயிலாக ஈசுவரக் கிருத்தியமே நடைபெறுகிறது.

தோற்றத்தளவில் முரண்படுகின்ற சுயப்பிரயத்தனமும் ஆத்ம சமர்ப்பணமும் ஆதிமுதல் அந்தம் வரையில் ஜீவபோதத்தை அழித்துவிடுவதற்கென்றே அமைந்தவைகளாய் விடுகின்றன. தன் முயற்சியில் மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தான் தனது என்பனவற்றை மற்றவைகளுக்காகவென்று ஒப்புவிக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் முன்னேறுகிறான். அதாவது அவனது ஜீவபோதம் தேய்கிறது; பரபோதம் வளர்கிறது. ஆத்ம சமர்ப்பணத்தின் வாயிலாக எல்லாம் ஈசன் செயல் என்று கர்மம் செய்வதின் வாயிலாகவும் ஜீவபோதம் தேய்கிறது; பரபோதம் வளர்கிறது. உண்மையில் இருப்பது பரமபுருஷன் ஒருவனே. இத்தனை உயிர்களும் அவனுடைய எண்ணிறந்த தோற்றங்கள். உயிர்கள் தம் முயற்சியில் தம்மை அனைத்துமாய்க் காண முயலுவது புருஷாகாரம். அனைத்தையும் அவன் மயமாய்க் காணுவது ஆத்ம சமர்ப்பணம். ஆகப் பெயரளவில் இவை முரண்படுபவைகளாகத் தென்படுகின்றன. புருஷாகாரத்தை ஞானசாதனம் என்றும், ஆத்ம சமர்ப்பணத்தைப் பக்தி சாதனம் என்றும் சௌகரியத்துக்காகச் சொல்லலாம். உண்மையில் ஞானசாதனம் வேறு, பக்திசாதனம் வேறு அல்ல.

ஜீவப் பிரயத்தனத்தில் பெரிய பிரயத்தனம் தன்னைப் பரமாத்மாவிடத்தில் கொடுத்து விடுதலாம். ஆக, புருஷாகாரமே ஆத்ம சமர்ப்பணம் ஆய்விடுகிறது. செயற்கரிய செயல் என்று இதைப் பகரவேண்டும்.

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்." ❑

20. ஹிந்து சாஸ்திரம்

கேள்வி: *(379)* அத்வைதிகளுக்குச் சர்வ காலத்துக்கும் ஆதிசங்கர பகவத்பாதாளே குரு. வேதங்களை நிந்திக்கிறவன் அத்வைதி ஆகமாட்டான். வாழ்க்கையின் நெறி வேதங்கள்; குறி வேதாந்தம். இவ்விதமாக இதற்குமுன் கூறியிருக்கின்றீர்கள். அப்படியானால் வேத ஆக்ஞைகளை மீறி நடப்பது வேத நிந்தனையா, அல்லவா?

வாழ்க்கையின் நெறி ஆகிய வேதங்கள், சூத்திராள் வேதங்களைப் படிக்கக்கூடாது, கேட்கக்கூடாது, சொல்லக் கூடாது என்று ஆக்ஞையிடுகின்றன. குறி ஆகிய வேதாந்தம் எனப்படும் உபநிஷத்துகளோ, முறையாகச் சிரோ விரதத்தை அனுஷ்டிக்காதவர் உபநிஷத்துக்களை அத்யயனம் செய்யக்கூடாது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஆச்சாரியர்கள் சொல்லிவைக்கவும் கூடாது என்று ஆக்ஞையிடுகின்றன. இவ்விதமாகக் குரு, சாஸ்திர ஆக்ஞைகளைச் சிறிதும் மதியாமல் வேத ருக்குகளையும் உபநிஷத் மந்திரங்களையும் வியவஸ்தையன்னியில் எல்லாருக்கும் பிரசாரம் செய்வது வேத நிந்தனை அல்லவா? இப்படிச் செய்கிற ஒருவன் தன்னை அத்வைதி என்று சொல்லிக் கொள்ளலாமா?

பதில்: சங்கரர் தோன்றுதற்கு முன்பே எண்ணிறந்த அத்வைதிகள் உலகில் இருந்திருக்கின்றனர். முஸ்லீம் பெரியார்களுக்கிடையிலும் அத்வைதிகள் இருந்திருக்கின்றனர். அடையும் நிலையை முன்னிட்டு ஒரு மனிதனை அத்வைதி என்கின்றோம். கடலிலிருந்து புறப்பட்ட நீர் திரும்பிக் கடலுக்குப்போய்ச் சேர்கின்றபொழுது தன்னுடைய யதாஸ்தானத்தோடு

இரண்டற்ற நிலையை அது அடைந்து விடுகிறது. அத்வைதம் என்னும் சொல்லுக்குப் பொருள் அதுவே.

சராசரங்கள் அனைத்தும் பிரம்மத்திலிருந்து வந்தவைகள், பிரம்மத்திலேயே அவைகள் நிலைபெற்றிருக்கின்றன, பிரம்மத்திலேயே அவைகள் ஒடுங்குகின்றன. வேதம் என்பது பிரபஞ்சத்தைப் பற்றிய அறிவு. பிரபஞ்சத்தைப் பற்றிய அறிவை அறிந்துகொள்ள விரும்புகின்றவர்களுக்கெல்லாம் அதைப் புகட்டலாம். எந்த மொழியில் வேண்டுமென்றாலும் உலக நடைமுறையைப் பற்றிய ஞானத்தை ஞாலத்தில் உள்ள அனைவர்க்கும் எடுத்து விளக்கலாம். பலர் அறியாமையினால் சம்ஸ்கிருதத்தில் அமைந்துள்ள ரிக், யஜுர், சாமம், அதர்வம் ஆகிய இவைகள்தாம் வேதம் என்று எண்ணுகிறார்கள். இவைகளில் பலபகுதி ஏற்கனவே மறைந்துபோய்விட்டன. இன்னும் பல பகுதிகள் இப்பொழுதும் மறைந்து வருகின்றன. இதற்குக் காரணங்கள் இரண்டு இருக்கின்றன. வேதங்களுக்கு அதிகாரிகள் எனக் கருதப்படும் அந்தணர்களுக்கே இப்பொழுது அவைகளில் நம்பிக்கையில்லை. அவர்கள் அவைகளை அறவே புறக்கணித்து விட்டனர் என்று சொல்லலாம். இது முதல் காரணம். இரண்டாவதாக இந்த வேதங்களின் மூலம் இக் காலத்து வாழ்க்கை முறையில் செல்வம் ஒன்றும் அகப்படாது. இவைகளுக்குப் பதிலாக ஆங்கில மொழியில் பௌதிக விஞ்ஞானம் என்னும் வேதங்களைப் பயின்றால் நல்ல ஊதியம் கிடைக்கும். ஜாதி வித்தியாசம், மொழி வித்தியாசம் முதலிய கொடுமைகளைப் பௌதிக விஞ்ஞானத்தில் யாரும் புகுத்தி விடவில்லை. விஞ்ஞானம் வளர்ந்து வருவதற்கு இது பொது உடைமையாக வைக்கப்பட்டதே காரணமாகிறது. பழைய வேதங்கள் மறைந்து போவதற்கு அவைகளைத் தனியுடைமை யாக்கியதே காரணமாயிற்று. நலம் ஒன்றை மக்களுக்கிடையில் எடுத்து வழங்குகின்ற அளவு அது விருத்தியடைகிறது. அதை மறைத்து வைக்குமளவு அது அழிந்துபட்டுப் போகிறது.

தத்துவார்த்தமாகப் பார்க்குமிடத்துப் பிரபஞ்சத்தைப் பற்றிய ஞானமெல்லாம் வேதம். அது எந்த மொழியில் வேண்டுமென்றாலும் இருக்கலாம். பிரபஞ்சத்தின் நடைமுறையை அறிகின்றவர்களெல்லாம் வேத வித்துக்கள். இந்தக்

கோட்பாட்டின் பிரகாரம் வேதத்துக்கு ஒருநாளும் அழிவில்லை. அதை அறிகின்றவர்கள் உலகில் பல நாடுகளில் பல மொழிகள் பேசுகின்றவர்கள் என்றென்றும் இருந்து வருகிறார்கள்.

இப்பிரபஞ்சத்துக்கு ஆதாரமாயுள்ள பிரக்ஞானம் பிரம்மம் எனப்படுகிறது. பிரக்ஞான சொரூபமாக ஜீவகோடிகள் அனைத்தும் இருக்கின்றன. பிரக்ஞானத்தை யாரிடத்திருந்து யார் தடைசெய்ய முடியும்? எல்லாம் பிரக்ஞானம் என்று அறிகின்றவன் அத்வைதி. இந்த ஞானத்தைப் பெறுதற்குச் சம்ஸ்கிருதம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை; சம்ஸ்கிருதத்தில் அமைந்துள்ள வேதங்களை ஓத வேண்டும் என்கிற அவசியமும் இல்லை.

இக்காலத்தில் தோன்றியுள்ள முனிவர்களாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ ரமண மஹரிஷி முதலாயினோர் வேதத்தை ஓதாது பிரம்ம ஞானிகள் ஆயிருக்கிறார்கள். பிரம்ம ஞானத்தை அவர்கள் எல்லா உயிர்களுக்கும் சொந்தமானதென்றே எடுத்துப் புகட்டியிருக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் அத்துடன் நின்றுவிடவில்லை. பிறவியில் பிராமணன் என்று பெயர் படையாத நரேந்திரனைத் தமது பிரதம சிஷ்யராக்கினார். இக்காலத்திய ஜகத் குருவாகவும் அந்த விவேகானந்தரை அமைத்து வைத்தார். அத்தகைய விவேகானந்தர் இல்லாது போயிருந்திருப்பாராகில் இப்போது தாண்டவமாடும் நாஸ்திகமும், புறமதங்களும் இந்நாட்டை அடியோடு விழுங்கியிருந்திருக்கும். ஆகவே குலநலம் என்னும் பிராந்தியை மறந்துவிட்டு உலகனைத்தையும் ஒரு குடும்பமாகப் பாராட்டும் உத்தமர் கூட்டம் இன்று உலகில் அதிகரித்துவர வேண்டும். சிறப்பொன்றுமில்லாது வெறுமனே தனி உரிமையும், பெருமையும் நாடுகின்றவர்கள் கீழ்மையடைந்து விடுவார்கள். இன்றைய உலகப்போக்கு இத்தகைய பெரிய பாடத்தைப் புகட்டி வருகிறது. அறிவுடையோர் இதை அறிந்து தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்வார்களாக.

கேள்வி: *(380)* கிறிஸ்துவ சமயத்துக்குப் பைபிள் பிரமாணமாகிறது. இஸ்லாமிய சமயத்துக்குக் குர்ஆன் பிரமாணமாகிறது. நம் ஹிந்து மதத்துக்குப் பிரமாணம் எது?

மத சம்பந்தமான கேள்விகள் அனைத்துக்கும் அவர்கள் தங்கள் சாஸ்திரங்களை அனுசரித்துப் பதில் சொல்லு கின்றனர். ஹிந்து மதத்துக்கு அப்படிப் பொதுவான நூல் எது?

பதில்: கிறிஸ்தவர்களுக்குப் பைபிள் ஒன்றே பிரமாணம். முஸ்லீம்களுக்குக் குர்ஆன் ஒன்றே பிரமாணம். ஆனால் ஹிந்துக் களுக்கோ கணக்கற்ற நூல்கள் இருக்கின்றன. அவையாவையும் ஹிந்து சமூகத்தார் அறிந்தது கிடையாது. அறியவேண்டிய அவசியமுமில்லை. அவரவர்க்குத் தேவையான சிறு பகுதிகளை அதற்கேற்ற நூல்களிலிருந்து கற்றுக்கொள்கின்றனர். கிறிஸ்தவர் களும் முஸ்லீம்களும் தங்கள் சாஸ்திரங்களில் இல்லாத கோட்பாடுகளை அங்கீகரிப்பதும் இல்லை, ஆராய்ச்சி செய்வது மில்லை. அவர்கள் நூல்களில் இல்லாத கணக்கற்ற பகுதிகள் ஹிந்து மதத்தில் இருக்கின்றன. அத்தனை பகுதிகளையும் ஒரே சாஸ்திரத்தில் அடக்கிவிட முடியாது. ஆகையினால்தான் வெவ்வேறு பிரிவுகளாக நம்மிடத்துக் கணக்கற்ற சாஸ்திரங்கள் இருக்கின்றன. மனபரிபாகத்துக்கு ஏற்பச் சிலர் ஆழ்ந்த தத்துவங் களை ஆராய்ச்சி பண்ணுகின்றனர். வேறு சிலர் ஒழுக்கமான வாழ்க்கைக்குத் தேவையான பகுதியை மட்டும் கற்றுக்கொள் கின்றனர். நம்மிடத்துள்ள ராஜயோகம் என்னும் சாஸ்திரம் கிறிஸ்தவ மதத்திலும் இல்லை, இஸ்லாமிய மதத்திலும் இல்லை. இந்த யோக சாஸ்திரத்திலும் பல பகுதிகள் இருக் கின்றன. சாதனத்தில் முன்னேற்றம் அமைந்திருப்பதற்கு ஏற்ப அவரவர்க்குற்ற பகுதிகளை நம்மவர் ஆராய்ச்சி பண்ணுகின்றனர். பாமரர்க்கு அவைகளைப் பற்றிப் போதிப்பதில் பயன் ஏதும் இல்லை. பரிபாகத்துக்கு ஏற்ற போதனை என்பது நம் மதக் கோட்பாடு. எல்லார்க்கும் ஒரே விதமான போதனை என்பது மற்றவர்களுடைய ஏற்பாடு. பரிபாக வேற்றுமையை முன்னிட்டு அனைவர்க்கும் ஒரே சாஸ்திரத்தை நாம் வழங்குவதில்லை.

பிரஸ்தானத்திரயம் என்னும் மூன்று முக்கியமான நூல் களில் மத சம்பந்தமான தத்துவங்களெல்லாம் அடங்கிவிடுகின்றன. உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத்கீதை ஆகிய மூன்றும் பிரஸ்தானத்திரயம் எனப்படும். இவைகளில் அடங்காத பார மார்த்திகக் கோட்பாடுகள் உலகில் எந்த மதத்திலும் இல்லை.

கேள்வி: *(381)* சங்கரருடைய அவதாரமென்று சொல்லப்படும் சங்கராச்சாரியாரின் சங்கர பாஷியம், விஷ்ணுவின் அவதாரமாகிய கபில பகவான் உபதேசித்த ஸாங்கிய மதத்தைக் கண்டிக்கிறதே. அதனால் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மத விஷயமான அபிப்பிராய பேதமுண்டா?

விஷ்ணுவின் அம்சமான வியாசரே விஷ்ணுவின் அம்சமான கபிலர் உபதேசித்த சாங்கியத்தைக் கண்டித்தால், கிருஷ்ணன் கீதையில் சாங்கிய யோகமே ஞானயோகம் என்றும், அதே கர்மயோகம் என்றும், அவ்விரண்டில் ஒன்றைக் கைப்பற்றியவன் இரண்டின் பயனை அடைகிறான் என்றும் சொல்லியிருப்பதற்குப் பதிலென்ன?

ஆதிசேஷ அவதாரமான பதஞ்சலியால் உபதேசிக்கப் பட்ட யோக சாஸ்திரத்தைச் சங்கர பாஷ்யம் கண்டிக்கிறது. தன் பக்தர்களில் சிரேஷ்டமாய் விளங்கிய அவருக்கு ஆனந்த நடனம் செய்த பரமசிவன் பொய்யான மதத்தை உபதேசித்திருப்பாரா? இதில் எது சரி ? எது தப்பு ? வியாசருடைய முக்கிய சிஷ்யரான ஜைமினி மஹரிஷி உபதேசித்த மீமாம்ஸா சாஸ்திரத்தை வியாசர் ஏன் கண்டிக்கிறார்? இவர் தன் சிஷ்யனுக்கு உண்மையைச் சொல்லிக் கொடுக்கவில்லையா?

பதில்: பல கடவுள்கள் இல்லை. மெய்ப்பொருள் ஒருவரே உள்ளார். நம் வசதிக்காக அவரை நாம் பல தெய்வங்களாகக் கற்பித்துக் கொள்கிறோம். பரந்த நீர்ப்பரப்பை ஓரிடத்தில் இந்துமஹா சமுத்திரம் என்றும், மற்றோரிடத்தில் பசிபிக் மஹா சமுத்திர என்றும் சொல்லுவதற்கு இது ஒப்பாகும். ஞான சொரூபத்தை முன்னணியில் வைத்துப் பகரும்பொழுது அதே தெய்வத்தைச் சிவம் என்கின்றோம். அன்பு சொரூபத்தை முன்னணியில் வைத்து இயம்பும்பொழுது அதே தெய்வத்தை விஷ்ணு என்கின்றோம். சங்கரனும் நாராயணனும் ஒரே பொருளுக்கு அமைந்துள்ள இரண்டு பெயர்கள். உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் கடவுளின் அவதாரங்களே. ஜென்மம் எடுத்தவர்களுள் பகவத் சம்பத் ஆகிய ஞானம், வைராக்கியம், அன்பு, சீலம் ஆகியவை பரிபூரணமாக அமையப்பெற்றுள்ள

புருஷர்களைக் கடவுளின் அவதாரங்கள் என்று சிறப்பித்துச் சொல்லுகின்றோம். ஆன்றோர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆறு சாஸ்திரங்களுள் சாங்கியம், யோகம், உத்தர மீமாம்ஸம் அல்லது வேதாந்தம் முக்கியமான இடம் பெறுகின்றன. மனித னுடைய வளர்ச்சியில் குழந்தைப் பருவம், யௌவனம், முதுமை முதலியன ஒன்றன்பின் ஒன்றாக வருவது போன்று தத்துவ ஞானத்துக்குச் சாங்கியம், யோகம், வேதாந்தம் ஆகிய தர்சனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. சாங்கியம் யோகமாக வடிவெடுக்கிறது; யோகம் பிறகு ஞானத்தில் பூர்த்தியாய் விடுகிறது. மனிதன் குழந்தையாகவே இருப்பது வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல. அதே பாங்கில் ஆறு தர்சனங்களுள் முதல் ஐந்தும் வழிகளாக இருக்கின்றன; ஆறாவது தர்சனம் முடிந்த ஞானநிலையாய் விடுகிறது. கீதையில் சொல்லியுள்ள சாங்கியம் கபிலர் பகரும் சாங்கியமல்ல. கீதையின் கோட்பாட் டின்படி சாங்கியம் என்னும் சொல் ஞானத்தைக் குறிக்கிறது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் ஒருவர் கொள்கையை இன்னொருவர் என்ன கருத்துடன் கண்டிக்கிறார் என்பது நமக்கே விளங்கும். ஆகையால் பாஷ்யக்காரர்களுக்கிடையில் முரண்பாடு இல்லை.

கேள்வி: *(382)* நம் மதம் எல்லா சமயங்களின் தாய் மதம் என்று பகரப்பட்டுள்ளது ஏன்? நம் மதத்திற்குச் சாஸ்திரம் நான்கு வேதங்கள் என்று சொல்லியிருக்கத் தாங்கள் எழுதிய கீதை விளக்கவுரையில் நம் மதத்திற்குச் சாஸ்திரம், பிரஸ்தானத்திரயம் என்று பகர்ந்திருக்கிறீர்கள். இதற்கும் நம் பழைய ரிக், சாம, யஜுர், அதர்வணத்திற்கும் என்ன தொடர்பு?

பதில்: எல்லா மதங்களின் கோட்பாடும் நம் மதத்தில் அடங்கியிருப்பதால் அது தாய் மதம் என்று அழைக்கப்படு கிறது. கீதையின் முகவுரையை ஒருவர் சரியாக அறிந்து கொண்டால் சாஸ்திரத்தைப் பற்றிய இக்கேள்வியை அவர் கிளப்பமாட்டார். உபநிஷதங்கள் எல்லாம் நான்கு வேதங்களில் அடங்கியுள்ள ஞானப்பகுதிகள் ஆகின்றன. அந்த உபநிஷதங் களின் கருத்துக்களை முறையாகப் பாகுபடுத்துகிற பாங்கில்

பிரம்ம சூத்திரம் அமைந்திருக்கிறது. உபநிஷதங்களின் கருத்துக் களைத் தெளிவுபடுத்துகிற பாங்கில் பகவத்கீதை அமைந்திருக் கிறது. எனவே, வேதங்கள்தாம் ஹிந்து மதத்துக்கு முடிவான சாஸ்திரப் பிரமாணங்கள் ஆகின்றன. அவைகளின் சாரம்தான் பிரஸ்தானத்திரயம்.

கேள்வி: *(383)* மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் வேதாந்தக் கருத்துக்கள் வற்புறுத்தப்படுகின்றனவா? அன்றேல் தேவாரங்களில் உண்டா? அங்ஙனமாயின் உதாரணங்கள் தந்து விளக்க வேண்டுகிறேன்.

பதில்: ஹிந்து மதத்தில் ஆறு சமயங்கள் இருக்கின்றன. அவைகள் முறையே சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் எனப்படுகின்றன. இந்த ஆறு சமயங் களும் வேதத்தைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்கின்றன. வேதத்தைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளாத சமயம் அகச் சமயம் எனக் கருதப்படமாட்டாது. புறச்சமயமென்று அது விலக்கி வைக்கப்படுகிறது. அகச் சமயங்களாகிய இந்த ஆறும் தங்களுடைய கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் ஆதரவை வேதங்களினின்று எடுக்கின்றன. நான்கு வேதங்களில் இல்லாத கொள்கையோ கோட்பாடோ இந்தச் சமயங்களுள் நுழையுமாகில் அவைகள் தத்துவத்துக்கு ஒவ்வாதவைகள் எனப் புறக்கணிக்கப்படும். சைவ சமயத்தில் உள்ள கொள்கைகளும், கோட்பாடுகளும், போதனைகளும் முற்றிலும் நான்கு வேதங் களில் அடங்கியுள்ளவைகளாம்.

வேதாந்தம் எனப் பகரப்படுவது வேதத்தில் அடங்கிவிடு கிறது. வேதத்தின் அந்தம் வேதாந்தமாகிறது. இந்த வேதாந் தத்தை மறைமுடி என்றும் மொழிகிறோம். உபநிஷதங்களே வேதாந்தம் என்னும் பெயர் பெற்றுள்ளன. மரத்திலிருந்து கனி வருகிறது. அக்கனி மரத்துக்கு அந்நியமானதன்று. வேதத்தினின்று வேதாந்தம் வருகிறது. ஆதலால் வேதாந்தம் வேதத்துக்கு அந்நியமானதன்று. வேதாந்தமாகிய உபநிஷதங் களை வேதத்தின் 'ஞானகாண்டம்' என்று கூறுவதுண்டு. உபநிஷதங்கள் ஆறு சமயங்களுக்கும் பிரமாணமாகின்றன. சமயங்கள் அனுஷ்டானத்துக்கு உரியவைகளாக விரிவடையும்

பொழுது அவைகளுள் வேறுபாடு உண்டாவதும் இயல்பு. ஆனால் அவைகள் உபநிஷதங்களினின்று மாறுபடமாட்டா. ஒவ்வொரு சமயமும் தனது தெய்வத்தையே முழுமுதல் பொருள் என்று கூறும். ஆனால் வேதாந்தமோ முழுமுதல் பொருள் ஒன்று; அதற்குச் சமயங்கள் வேண்டியவாறு பெயர்கள் கொடுத்திருக்கின்றன என்று இயம்புகிறது. சிவ உபாசனையின் மூலம் குறியை அடையலாம் என்னும் முடிவுக்குச் சைவ சித்தாந்தம் என்று பெயர். அதே விதத்தில் ஆறு சமயங்களுக்கும் ஆறு சித்தாந்தங்கள் உண்டு. இந்த ஆறு முடிவுகளின் தொகை வேதாந்தம் எனப்படுகிறது. ஆதலால் வேதாந்தம் எல்லாச் சமயங்களுக்கும் தாய் மதம் ஆகும். உபநிஷதங்களில் அடங்கியுள்ள தத்துவங்களும் கோட்பாடுகளும் தேவாரங் களிலோ திருவாசகத்திலோ இல்லாது போய்விடுமாயின் இத்திரு முறைகள் வைதிகத்துக்குப் புறம்பானவைகள் ஆய்விடும். ஆனால் உண்மையில் சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் வைதிகத்துக்கு உட்பட்டவைகளேயாம்.

வேதாந்தக் கோட்பாடுகளே திருவாசகம் முழுதிலும் பொதிந்து கிடக்கின்றன. எந்தச் சீரிய கோட்பாட்டைத் திருவாச கத்தினின்று பொறுக்கியெடுத்துப் பகர்ந்தாலும் அதற்கேற்ற பிரமாணத்தை உபநிஷதங்களில் காணலாம். திருவாசகத்தையும், உபநிஷதங்களின் தத்துவங்களையும் சீர்தூக்கிப் படிக்கும் பொழுது இவ்வுண்மை விளங்கும். ஈண்டுச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க' எனத் திருவாசகம் துவங்குகிறது. நமச்சிவாய என்னும் பஞ்சாட்சரம் அல்லது இறைவனைப் பற்றிய ஐந்தெழுத்து வேதத்துக்கு ஹிருதயம் ஆகிறது. உயிருடன் இலங்குகிற உடலில் நடுநாயகம் வகிப்பது ஹிருதயம். அது வாழ்வுக்கு இன்றியமையாதது. உடல் வாழ்க்கையில் ஹிருதயம் பெற்றுள்ள பெருநிலையில் பாரமார்த்திக வாழ்க்கையில் பஞ்சாட்சரம் பெற்றிருக்கிறது.

யஜுர் வேதத்துக்கு நடுநாயகம் வகிப்பது ஸ்ரீருத்திரம். இந்த ஸ்ரீருத்திரத்தில் நடுநாயகம் வகிப்பது 'நமசிவாய' என்னும் மந்திரம். சிவனாருடைய ஆளுகைக்கு அண்டமனைத்தும் உட் பட்டிருப்பதால் அவர் நாதன் அல்லது தலைவன் எனக்

கூறப்படுகிறார். ஜகத்தில் அனைத்துமாய் அதில் ஊடுருவியிருந்து அதை ஆளுகிற ஈசனைப் போற்றுகிறேன் என்பது திருவாசகத்தின் முதல் அடியின் பொருளாகும். இனி, இதற்கு நிகரான பொருள் விளக்கத்தை உபநிஷத் மந்த்ரம் - 2 ஐப் பார்த்துத் தெரிந்து கொள்க.

சைவ சித்தாந்தம் வேறு, வேதாந்தம் வேறு என்னும் கொள்கை பலர்க்கிடையில் இருந்து வருகிறது. ஆனால் அக்கொள்கை உண்மைக்கு ஒத்ததன்று. உபநிஷதங்களையும், திருமுறைகளையும் சரியாகச் சீர்தூக்கி நடுநிலையில் நின்று ஆராய்ச்சி பண்ணுகின்றவர்களுக்கு இவையிரண்டும் ஒன்றே என்னும் உண்மை விளங்கும்.

கேள்வி: *(384)* ஞானபூமி என்ற மாதப் பத்திரிகையில் காயத்ரீ மந்திரத்தைப் பூணூல் போட்ட பிராமணன் மாத்திரம் சொல்லலாம் என்று காஞ்சி இளைய சங்கராச்சாரியர் சொல்லி இருக்கிறார். இது முறையா? விளக்கம் தாருங்கள்.

பதில்: சமுதாய அமைப்பில் நான்கு வருணங்கள் உள. அவைகள் முறையே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்ரன் எனப் பாகுபடுத்தப்படுகின்றன. இந்த நான்கு வருணங்களுள் முதல் மூன்று வருணங்களைச் சேர்ந்தவர்கள் துவிஜர் அல்லது இரு பிறப்பாளர் என இயம்பப் பெறுகின்றனர் அதற்கு அறிகுறியாக இந்த மூன்று வருணத்தாரும் பூணூல் அணிந்திருக்கின்றனர். இந்த மூன்று வருணத்தாரும் காயத்ரீ ஜபத்துக்குத் தகுதி வாய்ந்தவர்களே. மூன்று வருணத்தாரில் ஒரு வருணத்தார் மட்டும் இதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் எனப் பகருவது பிழை.

பழையன கழிதல் புதியன புகுதல் இயற்கையின் பாங்கு ஆகும். பழங்காலத்தில் பூணூல் அணிதல் பண்புக்கு அறிகுறியாயிருந்தது. இன்றைக்கோ பூணூல் அணியும் பண்பு மக்களுக்கிடையில் அதிவேகம் மறைந்து வருகிறது. காலப்போக்கை அனுசரித்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவரே தம்முடைய சாதனத்தின் ஒரு படித்தரத்தில் பூணூலை நீக்கிவிட்டார். அதற்குக் காரணம் யாது என்று மற்றவர்கள் கேட்டபொழுது

"நான் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்கிற அகங்காரம் எனக்கு வேண்டாம்" என்று பதில் விடுத்தார்.

சென்னையில் நிகழ்ந்த அந்தர்யோகம் ஒன்றில் "அருகதை யில்லாதவர்கள் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கலாகாது" என்னும் ஆக்ஷேபம் ஒரு கேள்வியாக வடிவெடுத்து வந்தது. அதற்குக் கொடுத்த விடையாவது: "வைதிக சம்ஸ்காரம் பெறாத சூத்தி ரர்கள் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கலாகாது என்பது ஐதிகமாக வந்துள்ள தடை. இன்றைக்குச் சமுதாயம் படைத்துள்ள பண்பாட்டின்படி இந்தத் தடையே புதிய வடிவெடுத்தாக வேண்டும். இந்தப் புதிய வடிவமாவது காயத்ரீ மந்திரத்தை ஜபித்துச் சாமானிய நிலையிலுள்ள மக்கள் மேன்மக்களாகத் திருந்தியமைய வேண்டும். திருந்தியமையும் தகுதி வாய்ந்தவர் களைத் திருந்த வேண்டாம் என்று தடை பண்ணுபவன் தானே கீழோன் ஆகிறான். காயத்ரீ மந்திரத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் எல்லாரும் சூத்திரர்கள். நாளடைவில் பண்பட்டு மேல்நிலைக்கு வருகின்றபொழுது அவர்கள் தாமே காயத்ரீ மந்திரத்தை ஆர்வத்துடன் எடுத்துக் கொள்ளுவார்கள். மனிதனுக்குப் பண்பாடு முக்கியமானது. பிறப்பு முக்கிய மானதன்று. ❑

21. உபநிஷத்

கேள்வி: *(385)* புத்த மதத்தின் முதற்கோட்பாடு ஸர்வம் துக்கம் என்பது. ஆனால் உபநிஷத்தில் "ஆனந்தாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே" - ஜீவன்கள் யாவும் ஆனந்தத்திலேயேவன்றோ பிறக்கின்றன - என்று உரைக் கப்பட்டுள்ளது. Doctors differ - பண்டிதர்களே பேதமுரைக்கின்றனர் என்பதாகவன்றோ உள்ளது இது. இதில் எது சரியான வாதம் ஆகும்?

பதில்: உண்மையில் ஆத்மன் ஆனந்த சொரூபி. உலக வாழ்க்கையில் கட்டுண்டு கிடப்பதால் அவன் தனது ஆனந்த நிலையை மறந்து இருக்கிறான். அக்ஞானத்தால்தான் அவன் துன்பம் துய்க்கிறான். தன்னிடத்துள்ள ஆனந்தத்தைப் புறவுலகில் இருக்கிறதென்று அவன் தேடியலைகிறான். புறவுலகில் கட்டுண்டு கிடக்கும் வாழ்வு துக்கம் நிறைந்ததென்று புத்தர் பெருமான் தெளிவுபட எடுத்துக் காட்டியிருக்கிறார். புறவுலகிலே பற்று வைத்துள்ள வாழ்வில் துக்கமே நிறைந்திருக்கிறது என்பதை வேதாந்த சாஸ்திரமும் வற்புறுத்திக் காட்டி இருக்கிறது.

'அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்'

என்பது கிருஷ்ண பரமாத்மாவின் வாக்கு. நிலையற்றதும் துன்பம் நிறைந்ததுமாகிய இவ்வுலகில் பிறந்துள்ள நீ இறைவனையே வழுத்து. அது ஒன்றே ஆனந்தத்தைத் திரும்பவும் பெறுதற்கு உற்ற உபாயம் என்பது அதன் கருத்து. எனவே இவ்வுலக வாழ்வு துன்பம் நிறைந்தது என்றும், இதினின்று விலகியிருப்பதே இன்பம் எய்துதற்கு உற்ற உபாயம் என்றும் ஆன்றோர்கள் அனைவரும் பகர்ந்திருக்கின்றனர். புத்தர்

பெம்மானும் அதே கூற்றைத்தான் பகர்ந்திருக்கிறார். இது விஷயத்தில் ஆன்றோர்களுக்கிடையில் கருத்து வேற்றுமை இல்லை.

கேள்வி: *(386)* கடோப நிஷதத்தின். 3-வது அத்தியாயம் முதல் சுலோகத்தின் கருத்தை விளக்கவேண்டுகிறேன்.

பதில்: கடோபநிஷத்தின் மூன்றாவதும் அத்தியாயம் முதல் சுலோகத்தின் கருத்து வருமாறு: "ஹிருதய குகையில், அறிவு வெளியில் புகுந்துள்ள இருவர் உலகின்கண் இருக்கின்றனர். நல்வினைப்பயனை அவர்கள் அனுபவிக்கின்றனர். பிரம்ம ஞானிகள் அவர்களை வெளிச்சமும் நிழலும் என்று இயம்புகின்றனர். ஐவகை வேள்வி வேட்கின்றவர்களும், நசிகேத யாகத்தை மும்முறை செய்கின்றவர்களும் அங்ஙனமே இயம்புகின்றனர்.' இருவரும் என்பது ஜீவாத்மன், பரமாத்மன் ஆகியவர்களைக் குறிக்கிறது. இவ்விருவருக்கும் இருப்பிடமாயிருப்பது அறிவுவெளி. உண்மையில் அறிவு வெளியும் பரமாத்மனும் ஒன்றே. சௌகர்யத்துக்காக அறிவு வெளியினின்று பரமாத்மன் ஈண்டு பிரித்து இயம்பப் பெறுகிறார். இவ்விருவரும் நல்வினைப் பயனை அனுபவிக்கின்றார்கள் என்றும் சொல்லப்படுகிறது. உண்மையில் வினைப்பயனை அனுபவிப்பவன் ஜீவாத்மனே. ஜீவாத்மனுக்கும் அந்தர்யாமியாய் இருப்பவர் பரமாத்மாவாதலால் அவரும் வினைப்பயனை் அனுபவிக்கிறார் என்று உபசாரத்துக்கு இயம்பப்படுகிறது. இவ்விருவரும் வெளிச்சத்தோடும் நிழலோடும் ஒப்பிடப்படுகின்றனர். நிழல் வெளிச்சத்தைச் சார்ந்திருக்கிறது. ஆனால் வெளிச்சம் நிழலைச் சார்ந்திருப்பதில்லை. அங்ஙனம் ஜீவாத்மன் பரமாத்மனைச் சார்ந்திருக்கிறான். ஆனால் பரமாத்மன் ஜீவாத்மனைச் சார்ந்திருப்பதில்லை. வெளிச்சமும் நிழலும் என்கின்ற கோட்பாடு இன்னொரு பாங்கில் பார்க்குமிடத்து வஸ்துவும் அதனுடைய நிழலும் எனப் பொருள்படுகிறது. அந்நிலையிலும் நிழல் வஸ்துவை சார்ந்திருக்கிறது. அதே பாங்கில் ஜீவாத்மன் சர்வகாலமும் பரமாத்மனைச் சார்ந்திருக்கிறான். இவ்வுண்மை ஞானமார்க்கத்தில் செல்லுகிற பிரம்ம ஞானிகளுக்கு மட்டும் விளங்குவதல்ல, கர்ம மார்க்கத்தில் செல்லுகிற கிரஹஸ்தர்களுக்கும் இவ்வுண்மை நாளடைவில் விளங்குகிறது. பஞ்சாக்னி என்பது கர்ம மார்க்கத்தில் செல்லு

கிறவர்கள் புரிகின்ற ஐம்பெரு வேள்விகளாம். நசிகேத யக்ஞம் என்பது பேரூக்கத்துடன் செய்யப்படும் சத்கர்மம் அல்லது வேள்வியைக் குறிக்கிறது.

கேள்வி: *(387)* கடோபநிஷதத்தில் 2 - 23வது சுலோகத்தில் ஆத்மன் ஒன்றையே பிரார்த்திப்பவனால் இந்த ஆத்மன் அடையப்படுகிறது என யமன் நசிகேதனுக்கு கூறுகின்றான். இதை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: இந்த ஆத்மா வேதம் ஓதுவதால் அடையப்படுவதன்று. நுண்ணறிவு படைத்திருப்பதால் இவ்வாத்மா அடையப்படுவதன்று. சாஸ்திர விசாரத்தை ஏராளமாகச் செய்வதாலும் இவ்வாத்மா அடையப்படுவதன்று. ஆத்ம சொரூபத்தை எவன் ஒருவன் நாடுகின்றானோ அவனாலேயே இந்த ஆத்மா அடையப்படுகிறது. ஆத்ம சொரூபம் உள்ளபடி அவனுக்கே விளங்குகிறது. இது மூலத்துக்கு அமைந்துள்ள மொழிபெயர்ப்பு ஆகும். ஆத்ம சொரூபத்தை நாடுவதும் ஆத்மாவைப் பிரார்த்திப்பதும் ஒன்றே. இராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ள ஒரு உபமானக் கதையை இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்வோம். "நண்பர் ஒரு சிலர் ஒரு தோட்டத்துக்குள் சென்றார்கள். அந்த தோட்டத்திலுள்ள மரம் செடி கொடிகளை மதிப்புப் போடுவதில் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டனர். எனினும் அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவன் மட்டும் நேர் தோட்டக்காரனிடம் சென்று அவனுடைய அனுமதியைப் பெற்று கனிகள் சிலவற்றை ஏற்று அருந்தினான். மானுடா, நீ இவ்வுலகில் கனியுண்ண வந்திருக்கின்றாய். இலைகளை எண்ணி வீண்காலம் போக்காதே. கடவுளை அடைய நீ மானுடனாகப் பிறந்திருக்கின்றாய். மற்றவைகளில் நீ வீண்காலம் போக்கவேண்டாம்" என்பது அவருடைய போதனை. அந்தப் போதனையை இந்த உபநிஷதக் கோட்பாட்டோடு இணைக்கலாம். உபநிஷதத்தில் சொல்லியுள்ள ஆத்மா மெய்ப்பொருளைக் குறிக்கிறது. ஆர்வத்துடன் மெய்ப்பொருளை நாடு, அதைப்பற்றி வீணாக விவாதித்து ஆயுளை விரயம் செய்யாதே. அன்புடனும் ஆர்வத்துடனும் மெய்ப்பொருளை நாடுகின்றவர்களுக்கு மெய்ப்பொருள் தன் சொரூபத்தைக் காட்டியருள்கிறது. இதுவே உபநிஷதத்தின் கோட்பாடாகும். ☐

22. பகவத்கீதை

கேள்வி: *(388)* **பகவத்கீதை போதிப்பது யாது?**

பதில்: "பகவத்கீதை என்ன போதிக்கிறது என்பதை அதற்கு அமைந்த பெயரே விளக்குகிறது" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். "கீதா, கீதா, கீதா..." என்று கூறிக்கொண்டேயிருந்தால் "தாகி, தாகி" என்று அமையும். அதாவது தியாகம் செய், தியாகம் செய் என்று கீதை புகட்டுகிறது. முதல் ஆறு அத்தியாயங்கள் கர்மபலத் தியாகத்தையும், மனதிலுள்ள சிறுமைகளையும் தியாகம் செய்ய வேண்டும் எனப் புகட்டுகின்றன. அடுத்த ஆறு அத்தியாயங்கள் கீழான உணர்ச்சிகளைத் தியாகம் செய்யவேண்டும் எனப் புகட்டுகின்றன. கடைசி ஆறு அத்தியாயங்கள் அக்ஞானத்துக்கு ஏதுவான இயல்புகளைத் தியாகம் செய்ய வேண்டுமெனப் புகட்டுகின்றன. தியாகத்தின் மூலம்தான் அழியாப் பேரின்பத்தைப் பெறமுடியும் என்ற உபநிஷதக் கருத்தைத் தெளிவாக்குவது பகவத்கீதையாகும். மனதைப் பலஹீனப்படுத்தும் மோகத்தைக் கொன்றுவிட்டு ஆன்ம விழிப்புடையவனாய்ச் செயலாற்ற வேண்டுமென்பதைப் பகவான் எடுத்த எடுப்பிலேயே அர்ஜுனனுக்குப் புகட்டுகின்றார். பலவீனத்தை பகவத்கீதை அடியோடு நிராகரிக்கிறது.

'நாயமாத்மா பலஹீனேன லப்ய:'

இந்த ஆத்மா பலஹீனனால் அடையப்படுவதன்று என்னும் உபநிஷத வாக்கியம் பகவத்கீதையின் போதனைக்கு மூலமந்திரமாகிறது. வலிவும் ஆத்மபோதமும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஆத்மபோதம் பெற்று எழுந்திருப்பவனுக்குப் புதிய பெருவாழ்வு துவங்குகிறது; பலம் மேலிடுகிறது. இதுவே கீதையின் போதனையாகும்.

கேள்வி: *(389)* "ஸ்வபாவத்தினால் நீ போர் புரிந்தாக வேண்டும்" என்று கீதையில் அர்ஜுனனுக்குக் கூறப்படுகின்றது. ஸ்வபாவத்தை அறிந்துகொள்வது எப்படி?

பதில்: அந்தந்த மனிதனுக்குரிய இயல்பு ஸ்வபாவம் எனப்படுகிறது. ஸ்வபாவத்தை அனுசரித்தே ஸ்வகர்மம் அல்லது ஸ்வதர்மம் மனிதனுக்கு வந்து அமைகிறது. ஸ்வபாவத்திற்கும் ஸ்வகர்மத்திற்கும் இரண்டொரு சான்றுகள் எடுத்துக் கொள்வோம். பரம்பரையாக நெசவுத் தொழில் செய்து வந்த மனிதனுக்கு மகனாகப் பிறப்பவனிடத்து அமைகிற ஸ்வபாவம் நெசவுத் தொழில் சம்பந்தமானது ஆகிறது. அதே விதத்தில் கிருஷி பண்ணுகிற ஒரு குடும்பத்தில் பிறந்திருப்பவனுக்குக் கிருஷி ஸ்வதர்மம் ஆகிறது. அவனவனுக்கு அமைந்துள்ள ஸ்வதர்மத்தை ஒவ்வொருவனும் எளிதில் செய்கிறான். அப்படிச் செய்வதன் மூலம் சமுதாயத்துக்கு அவன் புரியவேண்டிய கடமை நன்கு நிறைவேறுகிறது. அதற்கிடையில் ஆத்ம சாதனம் பழக முயன்றால் அவனுடைய கருத்தை எளிதில் அதில் செலுத்துதல் சாத்தியமாகிறது. தன் ஸ்வபாவத்தை அனுசரித்து அர்ஜுனனுக்கு அமைந்திருந்த ஸ்வகர்மம் அறப்போர் புரிதலாம். பாட்டனாரையும், ஆச்சாரியரையும், எதிர்த்துப் போர்புரிய அவனுக்கு விருப்பமில்லை. ஆகையினால் அதை முன்னிட்டுக் காட்டில் தவம் புரியப் போதல் உசிதம் என்று அவன் கருதினான். அந்த மனநிலையில் அதை முன்னிட்டு அவன் செய்யத் துணிந்த புதிய கர்மமும் அவனுக்கு ஒவ்வாது என்று கிருஷ்ண பரமாத்மா அவனுக்கு எடுத்துக் காட்டினார். விருப்பையோ வெறுப்பையோ முன்னிட்டு எந்த மனிதனும் தன் ஸ்வதர்மத்தைப் புறக்கணிக்கக் கூடாது. ஈசுவர அர்ப்பணமாக அதைச் செய்தல் பொருத்தமாகிறது. அதன் மூலம் மனிதகுலத்துக்கு அவன் புரிகிற கடமை நன்கு நிறைவேறுகிறது. அதே வேளையில் அவன் புரிகிற அந்தக் கர்மத்தின் வாயிலாகப் பரத்தை அடைய அவன் தகுதி உடையவனாகிறான். இதுவே அர்ஜுனன் மூலம் உலகத்தவர் அனைவருக்கும் கிருஷ்ண பரமாத்மா கொடுத்துள்ள சீரிய செய்தியாம்.

விதி என்பது எது என்பதை நாம் முதலில் ஆராய வேண்டும். இயற்கையின் நியதியே விதி எனப்படுகிறது.

எந்த மனிதன் தன்னை எதற்குத் தகுதி வாய்ந்தவனாகச் செய்துகொள்கின்றானோ அது தற்செயலாக அவனுக்கு வந்தமை கிறது. கூலி வேலை செய்து பிழைப்பதற்குத் தகுதி உடைய வனாக ஒருவன் தன்னைச் செய்திருக்கிறான். அத்தகையவன் எங்குச் சென்றாலும் அவனுக்குக் கூலி வேலை கிடைக்கும். அதற்கிடையில் அவன் தன்னை ஆத்ம சாதனத்துக்குத் தகுதி யுடையவனாக அமைத்துக்கொள்ளுதல் சாத்தியம். அத்துடன் ஈசுவர கிருபையும் தற்செயலாக அவனுக்கு வந்து வாய்க்கு மாகில் கூலி வேலை செய்து பிழைக்கும் விதியைத் தாண்டி அவன் மேல்நிலைக்குப் போகக்கூடும். இதற்கு நல்ல சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். லாட்டு என்னும் இளைஞன் ஒருவன் கூலிவேலை செய்து பிழைப்பதற்காகச் சென்ற நூற் றாண்டில் பீகார் மாகாணத்தில் இருந்து கல்கத்தா வந்து சேர்ந்தான். நல்ல குடும்பத்தில் அவனுக்கு வேலை கிடைத்தது. தன் கடமையை அவன் நன்கு நிறைவேற்றி வந்தான். அந்தக் குடும்பத்தாருடன் தொடர்பு வைத்திருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரோடு இந்த இளைஞனுக்கும் தொடர்பு கிட்டியது. இவ்விளைஞனுடைய நல்ல மனப்பான்மையை அறிந்துகொண்ட பரமஹம்சதேவர் அவனை ஆட்கொண்டார். அப்படி ஆட் கொண்டதன் விளைவாக அவன் அவருடைய சிஷ்யனானான். பரமஹம்சருடைய திருக்கூட்டத்தில் அவனும் முக்கியமான இடம் பெற்றான். பகவான் அருள் வரும்போது அதை விதி தடுக்காது என்பதற்கு இச்செயல் சான்றாகிறது.

கேள்வி: *(390)* போர்க்களத்துக்குப் போய்ப் போர்புரிய வேண்டுமென்று துடித்துக்கொண்டு வந்த அர்ஜுனன் எதிரிகளின் ஏற்பாட்டைப் பார்த்துப் பயந்துபோய் விட்டான் என்கின்றனர் ஒருசாரார். அவன் பொய்வேஷக்காரன் ஆய்விட்டான் என்கின்றனர் இன்னொரு சாரார். அவன் துயருற்றுக் கிடந்ததை யோகம் என்கின்றது யோக சாஸ்திரமாகிய பகவத்கீதை. இந்த முரண்பாடுகளுக்கு விளக்கம் யாது?

பதில்: பயம் என்பது ஒரு மட்டமான மனப்பான்மை. புதியது எதைப் பார்த்தாலும் குழந்தை ஒன்று பயம்

கொள்ளுகிறது. பகலில் தைரியமாக இருக்கின்றவர்கள் இருளில் தனியாக இருட்டறை ஒன்றுக்குள் போகப் பயம் கொள்ளு கின்றனர். புதிய இடம் அல்லது சூழ்நிலைக்குள் போனால் சிலர் பயப்படுகின்றனர். நோயைக் குறித்துப் பலர் பயப் படுகின்றனர். மரணம் என்றால் உயிர்கள் அனைத்தும் அஞ்சு கின்றன. ஆக, பயப்படுதல் என்னும் மனநிலை அசாதாரண மானது. அது அறியாமையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் சில இடங்களில் அறியாமை துணிச்சலை ஊட்டுகிறது. சிறு குழந்தையொன்று எரிகிற தீபத்தைத் தொட முந்துகிறது. அத்தகைய துணிச்சல் அறியாமையினின்று வந்தது. ஒருதடவை தீபத்தைத் தொட்டுப் பார்த்தால் பிறகு அதன் அருகில் செல்ல குழந்தை அஞ்சும். பொதுவாக உயிர் வகைகளனைத்தும் ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு பயப்படும் பாங்குடை யவைகளாக இருக்கின்றன.

ஆனால் அர்ஜுனனுடைய அமைப்பு அலாதியானது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் கோட்பாட் டுக்கு ஒப்ப அர்ஜுனன் யாண்டும் திண்ணியனாக இருந்து வந்தான். அவனுடைய மன அமைப்புக்கும் பயங்கொள்ளித் தனத்துக்கும் வெகுதூரம். தமையன்மார் யுதிஷ்டிரனிடத்திலும், பீமனிடத்திலும் அவன் மிக மரியாதையாக நடந்து கொண்டான். ஆனால் அவர்களுடைய முன்னிலையில் எக்காரணத்தை முன் னிட்டாவது அவன் அஞ்சியது கிடையாது. முதியோர்கள் எல்லாரிடத்திலும் அவன் மிக மரியாதையாக நடந்து கொண் டான். யாரைக் குறித்தாவது அவன் அஞ்சியது கிடையாது. வனவாசம் பண்ணியபொழுது அவன் தன்னந்தனியாக இருந்து கொண்டு கடுந்தவம் பண்ணினான். ஒரு காட்டுப் பன்றியை அர்ஜுனனும் வேடன் ஒருவனும் ஏக காலத்தில் அடித்தார்கள். அந்தப் பன்றி யாருக்குரியது என்பதை முன்னிட்டு இருவருக்கு மிடையில் கடும்போர் நிகழ்ந்தது. போரில் அர்ஜுனன் தோல்வி யடைந்தான். அப்பொழுதும் அவன் அஞ்சவில்லை. அடுத்த நாள் யுத்தத்துக்கு வரும்படி அவன் வேடனிடம் அறை கூவினான். பூமாலை தொடுத்து சிவலிங்கத்துக்கு அதைச் சாத்தி சிவபூஜை செய்த பிறகு அவன் வேடனோடு யுத்தத் துக்குப் போனான். சிவனுக்கு அவன் சாத்திய மாலையை

வேடன் அணிந்திருப்பதை அவன் பார்த்தான். சிவன் தாமே அந்த வேடனாக வந்திருப்பதாக அர்ஜுனன் அறிந்துகொண்டான். உடனே காலில் வீழ்ந்து வணங்கினான். ஆயினும் அவன் அஞ்சவில்லை. அவனுடைய தைரியத்தைச் சிவனார் பாராட்டினார். தைரியசாலி ஒருவன்தான் சிவனாருடை பாசுபத அஸ்திரத்தைச் சரியாகக் கையாள முடியும் என்பதற்கு அறிகுறியாகச் சிவனார் அந்த அஸ்திரத்தை அர்ஜுனனுக்குச் சன்மானமாகக் கொடுத்தார். அர்ஜுனன் எதற்கும் அஞ்சமாட்டான் என்பது சிவனார் துணிபு. அர்ஜுனனுடைய அனுக்ரஹ மூர்த்தியாகிய இந்திரனுடைய கருத்தும் அதுவே. வெளிச்சத்தில் எங்ஙனம் இருளுக்கு இடமில்லையோ அங்ஙனம் மனபரிபாகம் அடைந்திருக்கிறவனுக்கும் அச்சத்துக்கும் வெகுதூரம். அர்ஜுன னுடைய மனபரிபாகத்துக்கு வேண்டிய சான்றுகள் மேலும் இருக்கின்றன. அவன் இந்திரலோகத்தில் தெய்வீக அஸ்திர சஸ்திரங்களில் பயிற்சி பெற்றுவந்தான். அப்பொழுது ஊர்வசி என்னும் பெயர் படைத்துள்ள தேவலோக மாது ஒருத்தி அவனுக்கு மையல் ஊட்டினாள். அவன் அதற்கு விடையாக "உன்னை நான் என் மாதாவாகக் கருதுகிறேன். ஆதலால் இந்த எண்ணத்தை ஒழித்துவிடு" என்றான். இது சாமான்யமான மனபரிபாகமன்று. ஆனால் தன் எண்ணம் நிறைவேறாததால் அந்த மடந்தை அவனை அலியாகப் போகும்படி சபித்தாள். அவனிடத்து உண்டாகிய அந்த மாறுதல் வெட்ககரமானது. ஆனால் அர்ஜுனனோ சிறிதேனும் மனத்தளர்ச்சியுறாது தனக்கு நிகழ்ந்த விபத்தை இந்திரனைக் கொண்டு வேறு ஒரு பாங்கில் அமைத்துக்கொண்டான். அத்தகைய அர்ஜுனன் போர்க் களத்துக்கு வந்தவுடனே பயங்கொள்ளியாக மாறிவிட்டான் என்பது பொருந்தாது.

எக்காரணத்தை முன்னிட்டும் அர்ஜுனன் பொய் வேஷக் காரன் ஆகமாட்டான். ஒழுக்கங்கெட்டவன் ஒழுக்கமுடையவனாக நடிப்பது பொய்வேஷம். கல்லாதவன் கற்றவன் போன்று நடிப்பது பொய்வேஷம். ஏழை ஒருவன் பணக்காரன் போன்று நடிப்பது பொய்வேஷம். பயங்கொள்ளி ஒருவன் தைரியசாலி போன்று பாசாங்கு பண்ணுவது பொய்வேஷம். அர்ஜுனனோ எக்காரணத்தைக் கொண்டாவது எந்தச் சூழ்நிலையிலாவது

பொய்வேஷம் பூண்டது கிடையாது. ஆதலால் இந்தக் குற்றச்சாட்டு அவனுக்குப் பொருந்தாது. போர்க்களத்துக்கு வந்தவுடனே அவனுக்கு மனம் மாறியது உண்மை. அந்த மாற்றத்தைக் கிருஷ்ண பரமாத்மா எங்ஙனம் பொருள்படுத்துகிறார் என்பதைப் பார்க்கவேண்டும். அர்ஜுனனை அவர் பயங்கொள்ளி என்றோ, பொய்வேஷக்காரன் என்றோ பகரவில்லை. இந்த நெருக்கடியில் இத்தகைய மனக்குழப்பம் உனக்கு எப்படி வந்தது? என்று கிருஷ்ண பரமாத்மா கேட்கின்றார். யாருக்காக விசனப்படக்கூடாதோ அவர்களைக் குறித்து நீ விசனப்படுகின்றாய் என்று அவர் குற்றம் சாட்டுகின்றார். நீ பயந்துபோய்விட்டாய் என்று அவர் சொல்லவில்லை. இந்தக் கசுமலம் உனக்கு எங்கிருந்து வந்தது? என்று அவர் ஆட்சேபம் பண்ணுகின்றார். கசுமலம் என்னும் பதம் மனக்குழப்பம் எனப் பொருள்படுகிறது.

அர்ஜுனனுக்கு மனக்குழப்பம் வந்ததற்குக் காரணம் உண்டு. பீஷ்மரும் துரோணரும் அர்ஜுனனுக்கு எதிரிகளாகப் போர்புரிவார்கள் என்பது அவன் அறிந்த விஷயம். அதற்கு அவன் ஆயத்தமாய் இருந்தான். ஆனால் போர்க்களத்தில் யுத்தத்துக்கு ஆயத்தமாயிருக்கிற அந்த மேலோர் இருவரையும் நேரில் பார்த்தபொழுது அவனுக்கு மனக்கலக்கம் உண்டாயிற்று. போற்றுதற்குரிய இப்பெரியோர்களை எதிர்த்துப் போர்புரிவது தனக்குப் பொருந்துமா என்னும் சந்தேகம் வந்ததும், தன் கடமை யாது என்னும் சந்தேகம் வந்தது. ஆனால் அவன் பயந்துபோகவில்லை. பீஷ்மருக்கும் துரோணருக்கும் வரப்போகிற முடிவை அவர்கள் தாமே அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்களைக் கொல்லுவது தனக்குப் பொருந்தாது என்று அர்ஜுனன் குழம்பியிருந்தது அவனுக்குப் பொருந்தாது என்பதைக் கிருஷ்ண பரமாத்மா எடுத்துக் காட்டினார். அறம் காத்தல் பொருட்டுப் பெரியோரையும் எதிர்த்துப் போர்புரியலாம் என அறியவந்த பிறகு அர்ஜுனனுக்கு மனத்தெளிவு உண்டாயிற்று. தன் கடமை எது என்று தனக்கு வந்த சந்தேகத்தைப் பயங்கொள்ளித்தனம் எனப் பொருள்படுத்தலாகாது. கீதையில் பதினெட்டு அத்தியாயங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அத்தியாயமும் ஒரு யோகம் எனப் பெயர் பெறுகிறது. முதல் அத்தியாயம்

அர்ஜுனன் விசனப்பட்ட யோகம் என்னும் பெயர்பெறுகிறது. விசனப்படுவது யோகமாகாது. அர்ஜுனன் விசனப்பட்டதை ஒரு யோகம் என்று யோக சாஸ்திரமாகிய பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. அர்ஜுனனுக்கு வந்த விசனம் உலகத்தவர்கள் படும் விசனத்தோடு சேர்ந்ததன்று. மேலோரைக் கொல்லுவது தர்மமாகுமா என்பது அவன் உள்ளத்தில் வந்த ஐயம். அந்த ஐயமானது அறநெறி விளக்கத்துக்குத் தூண்டுதல் போடுகிறது. அப்படித் தூண்டுதல் போடுவதை முன்னிட்டு அது யோகம் எனப் பாராட்டப்படுகிறது. அழுகைக்கும் யோகத் திற்கும் வெகுதூரம். ஆனால் "வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்கிறார் மாணிக்கவாசகர். அந்த அழுகை உலக அழுகையோடு சேராது. அந்த அழுகை தெய் வத்தைக் குறித்த அழுகையாகையால் அது தெய்வீக உணர்வை வளர்க்கிறது. அங்ஙனம் அர்ஜுனனுக்கு வந்த குழப்பம் எது தர்மம் என்பதைப் பற்றியதாகும். ஆதலால் அது அர்ஜுன விஷாத யோகம் எனப்படுகிறது.

கேள்வி: *(391)* கண்ணபிரான் பாண்டவர்கள் ஐவரையும் சமமாக நேசித்தார். ஆயினும் அவர் பகவத்கீதையை அர்ஜுனனுக்கு மட்டும் ஏன் உபதேசித்தார்?

பதில்: பாண்டவர்கள் அனைவருக்கும் கண்ணபிரான் யாண்டும் சகாயம் புரிந்துவந்தார். நல்லவர்களாகவும், தர்மத்தில் நிலைபெற்றவர்களாகவும் இருந்து வந்த அந்த ஐவருக்கும் கிருஷ்ணனுடைய ஆதரவும், அருளும் யாண்டும் சொந்தமா யிருந்தன. சூழ்நிலையை முன்னிட்டு அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியாகவிருக்க கிருஷ்ண பரமாத்மா ஒத்துக்கொண்டார். போர்க்களத்தில் தேர்த்தட்டில் அமர்ந்திருந்த அர்ஜுனனுக்குப் போர்புரிவது முறையா, புறங்காட்டிப் பின்வாங்குவது முறையா என்னும் ஐயம் எழுந்தது. அந்த ஐயத்தை அவ்வேளையில் தேர் ஓட்டியாகவிருந்த கிருஷ்ணன் அகற்றி வைக்கக் கடமைப் பட்டிருந்தார். சூழ்நிலையை முன்னிட்டு அந்த சம்பாஷணை யானது தனியாக அவர்கள் இருவருக்கிடையிலேயே நிகழ்வது ஆயிற்று. பாக்கி நால்வரை ஒதுக்கி வைக்க நிகழ்ந்த நிகழ்ச்சி அன்று அது. ஆயினும் அந்தச் சம்பாஷணை உலகுக்கே

பயன்படுவதாயிருந்தது. அத்தகைய பேருண்மைகள் எல்லாம் மறைந்து பட்டுப்போகாது இறைவனுடைய பேரருள் காத்து வருகிறது. அந்தச் சம்பாஷணையை வியாசபகவான் தம்முடைய ஞானத் திறமையினால் முற்றும் அறியவந்தார். அவர் அறிந்ததை நூலாகவும் அமைத்து வைத்தார். ஆதலால் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு வழங்கிய ஞானப்பொக்கிஷம் அர்ஜுனனோடு நின்றுவிடவில்லை. அர்ஜுனனுடைய் சகோதரர்களுக்கு மட்டு மின்றி, உலகுக்கே பயன்படுகின்ற யோகசாஸ்திரமாக அது இருந்து வருகிறது. அப்படி அது அமைந்திருப்பதும் கண்ண பிரானுடைய அருளுக்குச் சான்றாகிறது. ஆகவே நெருக்கடியான சூழ்நிலையில் கிருஷ்ண பரமாத்மா பகர்ந்தருளியது அர்ஜுனன் என்னும் போர்வீரனுக்கு எனினும் அது மக்கள் அனைவருக்கும் பயன்படுவதாக வாய்த்திருப்பது திருவருளின் திட்டமாம்.

போர்புரிவதற்குப் பொருந்தியவன் பீமன். தர்மத்தை உணரத்தகுந்தவன் தர்மராஜா. இவ்விருவரையும் விட்டுவிட்டு கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் பகவத்கீதையைப் புகட்டியதில் பொருளுண்டு. பீமனிடத்திலிருந்த முரட்டுத்தனம் விலங்கின் பாங்காகும். எனவே அவனுக்கு யோகசாஸ்திரம் உதவாது. தர்மராஜா தெய்வத்தன்மையில் நிலைபெற்றிருந்ததால் அவருக்கு யோகசாஸ்திரம் தேவையில்லை. இவ்விருவருக்கும் இடை நிலையிலிருந்த அர்ஜுனனுக்கே கீதோபதேசம் தேவைப்பட்டது. எனவே கண்ணன் அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசித்தார்.

கேள்வி: *(392)* கண்ணன் புகட்டிய கீதையைக் கேட்டு அர்ஜுனன் ஐயத்தை அகற்றினான். நல்லவீரன் ஆனான். அவனுடைய சந்தேகங்களும் அகன்றன. அதே கீதையை நாம் படிக்கிறோம்; கேட்கிறோம். அதற்கு வியாக்கியானங் களும் பல செய்கிறோம். ஆனால் அர்ஜுனன் அடைந்த பெருநிலையை நாம் ஏன் அடைவதில்லை?

பதில்: அர்ஜுனன் கீதையை ஒரே தடவை கேட்டான். தன்து மனக்குழப்பம் போய்விட்டது என்றான். பாரமார்த்திக விஷயத்தைப் பற்றிய ஞானம் வந்துவிட்டது என்று இயம்பி னான். அருளுக்குப் பாத்திரமாகி உறுதிபெற்றவன் ஆனான். கண்ணன் சொற்படி செயல்புரியவும் ஆயத்தமாயிருந்தான்.

நாமோ காலமெல்லாம் கீதை பாராயணம் செய்கிறோம். வியாக்கியானங்களையும் விவரிக்கிறோம். ஆனால் ஒரு நன்மையையும் அடையப் பெறாதவர்களாயிருக்கிறோம். அப்படி ஒன்றும் அடையாததற்குக் காரணமும் உண்டு. ஒரு நிகழ்ச்சியை இங்கு நினைவுக்கு கொண்டு வருவோம். பெரிய க்ஷேத்திரம் ஒன்றில் சில பண்டிதர்கள் கூடியிருந்து பகவத்கீதைக்கு விதவிதமான வியாக்கியானங்கள் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஆங்கு பாமரன் ஒருவன் ஆனந்த பரவசம் அடைந்தவனாக அமர்ந்திருந்தான். அக்காட்சியைக் காணலுற்ற பண்டிதர்கள் வியப்படைந்தனர். "படிப்பு வாசனையில்லாத உனக்கு நாங்கள் பகர்வதில் என்ன புலப்படுகிறது?" என்று வினவினார்கள். "எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆனால், கண்ணன் பெயரைக் கேட்டமாத்திரத்தில் அவனுடைய கருணாகர முகவிலாசம் என் மனதில் ஆழ்ந்து பிரகாசிக்கிறது. அதினின்று ஊற்றெடுக்கும் ஆனந்தத்தை என்னால் அடக்க முடியவில்லை" என்றான். கல்வியில்லாத அந்தப் பாமரன்போன்ற பக்தர்களுக்குக் கீதையை ஒருதடவை படித்தால் அல்லது கேட்டால் போதுமானது. கீதையின் கோட்பாடுகளே விளங்கா விட்டாலும் குறையில்லை. வெறும் வாசாஞானத்தில் மகிழ்வடைபவர்கள் பல ஜன்மங்களில் முயன்றும் அருளுக்குப் பாத்திரமாக மாட்டார்கள். நல்ல ஆத்ம சாதகர்களைக் காண்பது அரிது. அத்தகைய சாதகர்களுக்கே கீதை முழுதும் பயன்படும்.

கேள்வி: *(393)* கண்ணன் கீதையில் "நானே உலகனைத்தும்" என்று கூறுகிறார். அப்படியானால் நம்மை ஏன் ஜீவாத்மா என்று சொல்ல வேண்டும்?

பதில்: ஒரு சரீரத்தில் கட்டுண்டிருப்பவன் ஜீவாத்மன். பிரபஞ்சம் முழுதையும் தன் சரீரமாகக் கட்டியாளுதற்கிடையில் அதில் தானே கட்டுண்டு போகாது இருப்பவன் ஈசன். ஜீவாத்மன் ஒருவனுக்கு நிகழ்காலம் ஒன்றுதான் சுமாராக விளங்குகிறது. ஆனால் உலகனைத்துக்கும் ஈசனாக இருப்பவன் கிருஷ்ண பரமாத்மாவாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தபொழுது அண்டங்கள் அனைத்தினுடைய, ஜீவர்கள் அனைவருடைய முக்கால நிலையையும் அவன்

அறிந்து வந்தான். கண்ணன் படைத்திருந்த இறைமை நிலையை ஜீவர்களாகிய நாம் அடையப்பெறவில்லை. ஆகையினால் நம்மை நாம் ஜீவாத்மன் என்று சொல்கின்றோம்.

கேள்வி: *(394)* புத்தர்பிரான் உலகம் துன்பம் நிறைந்தது. அத்துன்பத்தினின்றும் விடுபடவேண்டும் என்று உணர்ந்து உலக வாழ்க்கையை வெறுத்து துறவுநிலை மேற் கொண்டார். ஆனால் கண்ணபிரான் கீதையில் "கர்மம் செய். ஆனால் செய்கிற கர்மத்தில் பற்று வைக்காதே. இயற்கை விதிக்கு மாறாக தொழில் செய்யாதவன் பாபம் செய்தவன் ஆவான். உலகமெல்லாம் கடவுள் மயம். எதைச் செய்தாலும் பகவானுக்கு அர்ப்பணமாகக் கடமையைச் செய்" என்று பார்த்தனுக்கு உபதேசிக்கிறார். புத்தருடைய கொள்கைக்கும் பகவத் கீதையின் கோட்பாட்டுக்கும் வித்தியாசம் உண்டா?

பதில்: கண்ணபிரானுடைய போதனை வேதாந்தம் என்னும் பெயர் பெற்றுள்ளது. இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்களின் தொகைக்கு வேதாந்தம் என்று பெயர். உலகத்திலுள்ள நல்ல சமயங்கள் அனைத்தையும் தன்னகத்து அடக்கவல்லது வேதாந்தம். மனிதன் படிப்படியாக தன்னைத் திருத்தி அமைத்துக்கொண்டு நல்வழிக்கு வருகிறான் என்று வேதாந்தம் புகட்டுகிறது. உலகத்திலுள்ள ஒவ்வொரு சமயத் தையும் அலசி ஆராய்ச்சிசெய்து அதனுடைய அடிப்படைக் கோட்பாடுகளில் பெருநெறிக்கு ஏற்புடைய பகுதி இது, ஏலத்தகாத பகுதி இது என்று சந்தேகத்துக்கு இடமில்லாது வகைப்படுத்தவல்லது. வேதாந்தம்.

புத்தமதம் என்பது ஹிந்துமதத்தின் ஒரு பகுதியேயாம். சில கோட்பாடுகளில் ஹிந்து மதத்துக்கும் புத்த மதத்துக்கும் வித்தியாசம் உண்டு. பிரத்தியக்ஷப் பிரமாணம், யுக்திப் பிரமா ணம், சாஸ்திரப் பிரமாணம் என்று மூன்று பிரமாணங்களை வேதாந்தம் அங்கீகரித்திருக்கிறது. புத்த மதம் சாஸ்திரப் பிரமாணத்தை ஒதுக்கி வைத்துவிட்டது. ஆதலால் அது வேதாந்தத்துக்குப் புறம்பான மதமாய்விட்டது. ஆனால் அது யுக்திக்கும் அனுபவத்துக்கும் புறம்பானதல்ல. யுக்தி அனுபவம் ஆகிய இரண்டு நிலைகளில் அது வேதாந்தத்தைப் பெரிதும்

அனுசரித்திருக்கிறது. சாதன வகைகளில் பல பகுதிகள் வேதாந்தத்துக்கும் புத்தமதத்துக்கும் பொதுவானவைகளாக வந்தமைந்திருக்கின்றன.

உலகமும் உலக வாழ்க்கையும் துக்கம் நிறைந்தது; ஆதலால் இவ்வுலகினின்று துக்க நிவர்த்தியைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பது புத்தமதத்தின் முக்கியமான கோட்பாடு. இக்கோட்பாட்டை ஸ்ரீ கிருஷ்ணபகவான் புறக்கணித்து விடவில்லை.

"அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்" (9-33)

என்பது அவருடைய போதனை. இம்மண்ணுலக வாழ்க்கை நிலையற்றது. இதில் நிலைத்த சுகம் அல்லது இன்பம் ஒன்றுமில்லை என்பதைக் கிருஷ்ணபகவானும் ஆமோதிக்கின்றார். ஆனால் இந்த ஒரு கோட்பாட்டையே சர்வகாலமும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் புகட்டவில்லை. உலகம் துக்கம் நிறைந்தது என்பதையே திரும்பத்திரும்ப ஞாபகத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்று புத்தமதம் வற்புறுத்துகிறது. இவ்வுலகம் துக்கம் நிறைந்ததுதான் எனினும் அந்தத் துக்கத்தைப்பற்றி ஓயாது கருத்தில் வைத்துக் கொள்ளவேண்டாம் என்பது பகவானுடைய கோட்பாடு. உலகிலுள்ள துக்கத்தைப் புத்தமதம் பெருமிதப்படுத்துகிறது. உலகிலுள்ள துக்கத்தையும் சுகத்தையும் கருத்தில் வாங்கிக் கொள்ளாதே; நீ இருக்கவேண்டிய நிலையில் உறுதிபெற்றிரு என்று வேதாந்தம் அல்லது பகவத்கீதை புகட்டுகிறது. துக்கம் நிறைந்துள்ள இவ்வுலகினின்று விடுதலை அடைதற்குத் துறவறம் ஒன்றே உற்ற உபாயம் என்று புத்தமதம் வற்புறுத்துகிறது. பகவத்கீதை அல்லது ஹிந்துமதம் இவ்வுலக வாழ்க்கையில் பற்றற்றிருப்பதே துறவு என்றும், அந்தப் பற்றற்ற நிலையிலும் உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்பட்டுள்ள கடமைகளைத் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் வற்புறுத்துகிறார். புத்தமதத்தில் இருப்பது போன்று ஹிந்துமதத்திலும் துறவறம் இடம் பெற்றிருக்கிறது. துறவறத்தை ஏற்றுக்கொண்டிருப்பவர்களுக்கும் சரீரம் இருக்கும் பரியந்தம் கடமைகள் பல இருக்கின்றன. அக்கடமைகளை ஈசுவர ஆராதனையாகச் செய்துவரவேண்டும் என்பது கீதையின் கோட்பாடு. கடமையைப்பற்றிய பேச்சு புத்த மதத்திலும்

இடம்பெற்றிருக்கிறது. ஆனால் ஈசுவர ஆராதனையைப் பற்றிய கோட்பாட்டுக்கு ஆங்கு இடமில்லை. இங்ஙனம் இவ்விரண்டு மதங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் புத்த மதம் என்பது ஹிந்து மதத்தின் ஒரு சிறு பகுதி என்பது விளங்கும். பெற வேண்டிய நல்ல மனப்பான்மையைப் பெற்றுவிட்டால் இகலோக வாழ்க்கையே பாரமார்த்திக வாழ்க்கை ஆய்விடுகிறது என்பது வேதாந்தத்தின் கோட்பாடு. துக்கம் நிறைந்த இகலோக வாழ்க்கையில் கருத்தைச் செலுத்த வேண்டாம் என்பது புத்த மதத்தின் கோட்பாடு. வாழ்க்கைக்கு நிறைந்த நல்ல விளக்கம் பகவத்கீதையில் இருப்பது போன்று புத்த மதத்தில் இல்லை என்று உறுதிகூறலாம். வாழ்க்கையின் ஒருபகுதியை வற்புறுத்திக் கூறுகிறது புத்த மதம். வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் பகவத்கீதையின் மூலம் ஹிந்து மதம் வற்புறுத்திக் கூறுகிறது.

கேள்வி: *(395)* உயிரினும் உயர்வாக மானத்தைக் காக்க வள்ளுவர் வழி வகுக்கையில், மான அவமானத்தைச் சமமாகக் கருத ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்கின்றார். மானுடன் ஒருவன் வள்ளுவர் வழி நடப்பதா அல்லது கண்ணன் வாய்மொழியினைக் கைக்கொள்வதா? நீதி நூல்கள் அனைத்தும் இருவித நீதிகளைப் போதிக்க முடியாது. அப்படியாயின் குறள், கீதை ஆகியவற்றுள் முரணாகத் தென்படும் நீதிகள் உண்மையில் முரண்பாடுள்ளவைகளா? முரண்பாடில்லையெனின் சாதாரணமான ஒருவன் எந்த விதத்தில் அவைகளைக் கருத்தில் கொள்வது?

பதில்:

*"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின்"*

என்பது திருவள்ளுவர் வாக்கு. கவரிமான் தன் உடலிலுள்ள மயிரை இழக்க நேரின் தன் உயிரையே விட்டுவிடும். அதே பாங்கில் நல்லார் தங்களுடைய மானத்திற்கு பங்கம் வருகிற பொழுது மானத்தை இழப்பதைவிட உயிரையே இழந்து விடுவர் என்பது இதன் கருத்து. ஒரு மனிதன் எவ்விதத்திலும் தன் மானத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான். எனவே

நல்வழியினின்று வழுவுகின்றவன் மானத்தை இழக்கின்றான். அப்படித் தன் மானம் போவதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லையென்றால் நல்வாழ்க்கையில் அவனுக்கு நம்பிக்கையில்லை என்பதாகிறது. நல்வாழ்க்கை வாழாதவன் செத்தவனுக்கு ஒப்பாகிறான். மேலோர் சிறுநெறி சென்று சிறுவாழ்வு வாழமாட்டார்கள். பெருநெறி கடைப்பிடித்து பெருவாழ்வே வாழ்ந்திருப்பர். அதனால் அவர்களுடைய மானம் தானாகக் காப்பாற்றப்படுகிறது. மனிதன் உலகில் எத்தகைய வாழ்வு வாழ்ந்திருக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் இக்குறளின் மூலம் விளக்குகிறார்.

இனி, கிருஷ்ண பரமாத்மா மனிதன் மானம், அவமானம் ஆகிய இரண்டையும் சமனாகப் பாராட்டவேண்டும் என்னும் கோட்பாட்டை பகவத்கீதையில் மூன்று இடங்களில் பகர்ந்திருக்கிறார். திருக்குறளை நீதி சாஸ்திரம் என்றும், பகவத்கீதையை யோக சாஸ்திரம் என்றும் பகர்வது வழக்கம். உலகில் மனிதன் எப்படி வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை நீதிசாஸ்திரம் புகட்டுகிறது. உலக வாழ்க்கையைக் கடந்து அதற்கப்பால் இருக்கும் பாரமார்த்திகப் பெருநிலைக்குப் போவதற்கு மனிதன் என்ன செய்யவேண்டும் என்று புகட்டுவது யோக சாஸ்திரம். இவ்விரண்டுக்குமிடையில் முரண்பாடு இல்லை. அர்ஜுனன் தன்னுடைய கடமையைச் சரியாகச் செய்யாவிட்டால் நல்ல கீர்த்தியை இழந்துவிடுவான் என்று கிருஷ்ண பகவான் எச்சரிக்கை செய்தார். கீர்த்தியை இழப்பதும் மானத்தை இழப்பதும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள். அக்கோட்பாட்டை அவர் புகட்டியபொழுது இவ்வுலக வாழ்க்கைக்குரிய நீதி சாஸ்திரத்தை கிருஷ்ணபகவான் புகட்டினார். அதற்குமேல் யோகி ஆவதற்கான வழியையும் அவர் காட்டியருளினார். மானத்தையும், கீர்த்தியையும் பாதுகாப்பதற்கான நல்வாழ்வைத்தான் மனிதன் வாழவேண்டும். நல்வாழ்வினின்று வருகிற மானத்திலும் அவன் பற்றுதல் வைக்கலாகாது. ஒருவன் எவ்வளவுதான் நல்வாழ்வு வாழ்ந்தாலும் அவனை அவமானப்படுத்துகிற பாங்கில் இழிந்து பேசுகிற கூட்டம் ஒன்று எக்காலத்திலும், எல்லாச் சமுதாயங்களிலும் உண்டு. அவர்கள் மூலம் வருகிற அவமானத்தை யோகி ஒருவன் பொருட்படுத்தலாகாது. புகழுக்குரிய வாழ்க்கை வாழ்வதற்கிடையில் புகழ்ச்சி

இகழ்ச்சி இரண்டையும் பொருள்படுத்தாது வாழ்பவன் யோகத்துக்குத் தன்னைப் பக்குவப்படுத்துகிறான். மானத்தை யாண்டும் காப்பாற்றுகிற நல்வாழ்வு வாழ்வதற்கிடையில் அந்த மானத்தில் பற்று வைக்காது இருக்கவும், காரணமின்றித் தற்செயலாய் வந்தமைகின்ற அவமானத்தைப் பொருள்படுத்தாது இருக்கவும் பழகுகின்றவனே யோகத்துக்குத் தகுதியுடையவன் ஆகின்றான். சிவபெருமான் நன்றுடையான் தீதிலான் ஆகின்றார். அத்தகையவரைச் சுடுகாட்டில் வசிக்கிறவர் என்றும் இரந் துண்ணி என்றும் அவமானப்படுத்தப் பலர் முயன்றிருக்கின்றனர். அந்த அவமானத்தை அவர் அவமானமாக எடுத்துக்கொள்ள வில்லை. யோகி அப்பாங்கில் இருந்து பழகவேண்டும் என்பது கோட்பாடு. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறவர்களுக்குக் குறளுக்கும் கீதைக்குமிடையில் முரண்பாடு தென்படாது. மானத்தைக் காப்பாற்றி நல்வாழ்வு வாழ்ந்து பழகுபவன் பிறகு அதற்கும் அப்பால் இருக்கிற பெருவாழ்வுக்குப் போகிறான்.

_கேள்வி: (396)_ தார்மிக ஹிந்து என்னும் பத்திரிகையில் “பகவத்கீதை படும் பாடு - மொழி பெயர்ப்புக்களால் ஏற்படும் விபரீதங்கள்” என்னும் தலைப்புத் தாங்கி ஒரு கட்டுரை வெளியாய் இருக்கிறது. மொழி பெயர்ப்பாளர்கள் மூல கருத்தை சிதைவு செய்து விடுகிறார்கள் என்பது அக்கட்டுரையில் அடங்கியுள்ள கருத்தாகும். மூல கருத்தை விட்டு மொழிபெயர்ப்புகள் பிறழ்ந்து போய்விட்டன என்று மூல மொழியாகிய சம்ஸ்கிருதம் தெரியாதவர்கள் எப்படிக் கண்டுபிடிப்பது?

பதில்: பகவத்கீதைக்கு இப்பொழுது வந்து கொண்டிருக் கின்ற மொழிபெயர்ப்புகளை விட எண்ணிக்கையில் அதிகமான வியாக்கியானங்களும், பாஷியங்களும், குறிப்புகளும் தொன்று தொட்டு வந்திருக்கின்றன. பாஷியக்காரர்கள் மூலத்தைச் சிதைவுபடுத்தியது போன்று மொழிபெயர்ப்புக்காரர்கள் சிதைவு படுத்தவில்லை என்று சொல்லலாம். பாஷியக்காரர்கள் ஒவ்வொரு வரும் தமது கோட்பாடுதான் கீதையில் அடங்கியிருக்கிறது என்று விளக்கிக்காட்ட முயற்சி செய்திருக்கின்றனர். உண்மையில் பகவத்

கீதை பாஷியக்காரர்கள் கையில் பெரும்பாடுபட்டிருக்கிறது. அப்படி பகவத்கீதையைப் பாடுபடுத்துவது பொருந்துமா என்பது கேள்வி. பகவத் கீதையை பாஷியக்காரர்களும், மொழி பெயர்ப் பாளர்களும், விரிவுரையாளர்களும், பிரவசனம் பண்ணுகின்ற வர்களும் வேண்டியவாறு பாடுபடுத்தலாம். அதை அப்படிப் பாகுபடுத்துதலில் குற்றம் ஒன்றும் இல்லை. தத்துவம் ஒன்றை விதவிதமான மனப்பான்மை உடையவர்கள் விதவிதமாகப் பொருள்படுத்தலாம் என்பதற்கு பகவத்கீதையே நல்ல சான்று ஆகிறது. நமக்கு இருப்பிடமாகிய இயற்கை எல்லார்க்கும் பொதுவாய் இருக்கிறது. இந்த இயற்கையை விதவிதமான கலைஞானமுடையவர்கள் விதவிதமாகப் பொருள்படுத்து கிறார்கள். வானசாஸ்திரிக்கு இது ஒருபோக்கில் பொருள் படுகிறது. விஞ்ஞானிக்கு இன்னொரு போக்கில் பொருள் படுகிறது. மருத்துவ ஞானம் படைத்தவனுக்கு மற்றொரு விதத்தில் அது விளங்குகிறது. கவிஞனுக்கு ஒருபோக்கில் அது பொருள்படுகிறது. மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்காரனுக்கு இன்னொரு விதத்தில் அது காட்சிகொடுக்கிறது. இத்தனைவித் அறிஞர்களுடைய கையில் இயற்கை படாத பாடுபடுகிறது என்று நாம் ஏன் இயம்பலாகாது? அத்தனைவிதமான விளக்கங் களுக்கு அது இடந்தருவதே இயற்கையின்கண் அமைந்துள்ள மகிமையாகும். இறைவனுடைய நிறைமொழியும் அத்தகையது. வெவ்வேறுவித சமயவாதிகள் அவரவர் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பகவத்கீதையில் காண்கின்றார்கள். சான்றாக கர்மம், யக்ஞம், சந்நியாசம் ஆகிய சொற்களை எடுத்துக்கொள்ள லாம். அவரவர் கொள்கைக்கும் மனபரிபாகத்துக்கும் சூழ் நிலைக்கும் ஏற்ப இந்த சொற்களுக்கு விதவிதமான விளக் கங்கள் சொல்லலாம். எந்த விளக்கத்தை எடுத்து இயம்பினாலும் அதை அனுபவத்தில் கொண்டுவருகிறபொழுது மனிதன் மேன்மகனாக மாறி அமைவானாகில் அந்த விளக்கம் சான் றோர்க்கு ஏற்புடையதாகும். எண்ணிறந்த விளக்கங்கள் வந்திருக்கின்றன; இன்னும் எண்ணிறந்த விளக்கங்கள் வரப் போகின்றன. இத்தனைவிதமான விளக்கங்களும் மனிதனைத் தெய்வப்பெற்றி உடையவனாக மாற்றியமைப்பதற்கு வந்து கொண்டிருக்குமாகில் அவை யாவையும் மகிழ்வோடு நாம்

வரவேற்கின்றோம். கணக்கற்ற விளக்கங்களுக்கு பகவத்கீதை இடம் தருகிறது என்பதை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படை உண்மையை அறிந்து கொள்கிறவர்கள் பகவத்கீதை மொழிபெயர்ப்பாளர் கையிலோ, விரிவுரையாளர் கையிலோ படாதபாடுபடுகிறது என்று பகரமாட்டார்கள். பகவத்கீதையின் பெருமை பலவிதங்களில் வெளியாகிறது என்றே பாராட்டுவார்கள். பகவத்கீதைக்கு மூல மொழியாகிய சம்ஸ்கிருதம் தெரிந்தவர்கள்தான் பகவத்கீதையை நன்கு தெரிந்துகொள்ள முடியும் என்பது உண்மையல்ல. ஆங்கிலம் தெரியாத ஒருவர்க்கு ஆங்கில பாஷையில் தந்தி தபால் வருகிறது. வேறு ஒருவர் அதை மொழிபெயர்த்து விளக்குகின்றார். கருத்து முழுதும் விளங்கிவிடுகிறது. பகவத்கீதையை நன்கு அறிந்து கொள்ளுதற்கு ஆத்ம சாதனம் முற்றிலும் அவசியமானது. மொழியில் பாண்டித்தியத்தைவிட ஆத்ம சாதனத்தில் ஆர்வம் மிகமேலானது. எனவே ஆத்ம சாதகனுக்குக் கீதா தத்துவங்கள் மிக எளிதில் விளங்கிவிடும்.

கேள்வி: *(397)* பகவத்கீதையில் இரண்டாவது அத்தியாயம் 37-வது சுலோகத்தில் "கொல்லப்பட்டால் நீ சொர்க்கம் அடைகின்றாய். வென்றால் உலக போகத்தை அனுபவிக்கின்றாய், ஆதலால் போருக்கு எழுந்திரு" என்கிறது. நக்சலைட்டு என்னும் கொள்ளைக்காரர்களுடைய கொள்கையும் இதுவே. அவர்களுடைய போக்குக்குப் பகவத்கீதை ஆதரவு தருகிறது அல்லவா?

பதில்: பகவத்கீதையினுடைய போதனையும், நக்சலைட்டினுடைய கொள்கையும் ஒன்றோடொன்று ஒத்திருப்பதாகத் தென்படுகின்றன. ஆனால் மலைக்கும், மடுவுக்கும் இடையிலுள்ள வேற்றுமை இவை இரண்டுக்குமிடையில் அமைந்திருக்கின்றது. நக்சலைட் என்பார் சமூக வாழ்க்கைக்குச் சத்துருக்களாகத் தோன்றி இருக்கின்றனர். அசுர இயல்பு அவர்களுக்குச் சொந்தம். நேர்மையாகப் பாடுபட அவர்கள் ஆயத்தமாயில்லை. பாடுபட்டுப் பிறர் சம்பாதித்துள்ள பொருளைச் சூறையாடுதலில் அவர்கள் கருத்தைச் செலுத்துகின்றனர். மக்களுக்கிடையில் நயவஞ்சகக்காரர்களாக அவர்கள்

வாழ்ந்திருக்கின்றனர். தங்களுடைய கீழான பான்மையை அவர்கள் இரகசியமாகப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். நேர்மைக்கும் அவர்களுக்கும் வெகுதூரம். அதர்மமே வடிவெடுத்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். சமுதாயத்துக்கு நலன் தருகிற சேவைசெய்யாது நச்சுப்பாம்புகள் போன்று பதுங்கியிருந்து பாதகத்தில் ஈடுபடுகின்றனர்.

கீதையில் இரண்டாவது அத்தியாயம் 37-வது சுலோகம் புகட்டுகிற கொள்கை உலகப் பற்றோடு வாழ்ந்திருக்கின்ற பேர்ர் வீரன் ஒருவனுக்கு உரியதாகும். முறையாக நாடாளுகிறவன் அதர்மத்துக்கு எக்காரணத்தைக் கொண்டும் இடம் தரலாகாது. எங்கெல்லாம் அதர்மம் தலையெடுக்கிறதோ அதை அறவே அகற்றித் தள்ளுவது சமுதாய நண்பன் ஒருவனுடைய செயலாகும். துரியோதனனுடைய கூட்டம் அதர்மத்தின் உச்ச நிலையை எட்டியது. எந்த விதத்திலும் அதை எதிர்த்துப் போராட அர்ஜுனன் கடமைப்பட்டிருந்தான். பஞ்சமகா பாதகத்தில் மூழ்கியிருந்த எதிரிகளை ஒழித்துத் தள்ளினால் ராஜ்யசுகம் அவனுக்குச் சொந்தமாகிறது. சிறுமையை எதிர்த்துப் போராடி உயிர் துறந்தால் அவன் வீரியத்திற்கேற்ப வீரசொர்க்கத்திற்கு உரியவனாகிறான். ஆதலால் தீமையை எதிர்க்க அவன் கடமைப்பட்டிருந்தான் என்பது அந்தச் சுலோகத்தின் உட்கருத்து. அதற்குமேல் கர்மயோகத்தில் நிலைத்திருந்து அதே கர்மத்தைச் செய்தால் அவன் ஆத்மவான் ஆகிறான் என்னும் கோட்பாடு அதைத் தொடர்ந்து வருகிறது. ஆதலால் கீதையின் போதனையும் நக்சலைட்டினுடைய கீழ்மையும் ஒருபொழுதும் ஒவ்வா.

சாஸ்திரப் பிரமாணத்தைப் பொருத்தமாகக் கையாளுதல் எல்லார்க்கும் சாத்தியமன்று. சில வேளைகளில் முரண்படுகிற கருத்துக்களே சாஸ்திரப் பிரமாணங்களாகத் தென்படுகின்றன. எந்தச் சூழ்நிலையில் யாருக்காகச் சாஸ்திரக் கோட்பாடு ஒன்று வடிவெடுத்தது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். பகவத் கீதையில் ஈண்டு ஆராய்ச்சிக்காகக் கிளம்பியுள்ள கோட்பாடு முக்கியமாக உலகப்பற்று உடையவனுக்கு உரியதாகிறது. உலகப்பற்று உடைத்திருப்பவனும் தர்மத்தினின்று பிசகலாகாது. ஆட்சிபுரிகிறவர்கள் தர்ம யுத்தத்தினின்று

எக்காரணத்தை முன்னிட்டும் பின்வாங்கலாகாது. தர்மத்தை நிலைநாட்டுவதற்காகப் போர்புரிகிறவன் வெற்றியைப் பற்றியோ, தோல்வியைப் பற்றியோ கவலைகொள்வதில்லை. தீவிரமாகத் தர்மயுத்தத்தில் ஈடுபடுவதே அவனுடைய கடமை ஆகிறது.

நக்சலைட் என்று சொல்லப்படுகிற கொள்ளைக் கூட்டத்தாருக்கும் தர்மத்திற்கும் வெகுதூரம். கல்வி கற்கின்ற ஒருவனுக்குச் சமுதாயம் பொருள் உதவி செய்கிறது; கல்வியையும் வழங்குகிறது. ஆகையால் முறையாகக் கல்வி கற்கிறவன் தன்னைச் சமுதாயத்தின் தொண்டனாக வைத்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய தனி நலனைப்பற்றிச் சிந்திக்காது தன் ஜீவிதத்தைச் சமுதாய சேவைக்காகவென்றே ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்வது தர்மமாகும். அதற்கு நேர்மாறாகச் சமுதாயம் எப்பொழுதுமே தங்களை ஆதரிக்கவேண்டுமென்று நக்சலைட் கூட்டத்தார் எண்ணுகின்றனர். தக்க போக்கில் தங்களை ஆதரிக்காவிட்டால் பணம் படைத்தவர்களை முறை தவறிய பாங்கில் மாய்த்துவிட அவர்கள் திட்டம் போட்டு அதை நடைமுறைக்கும் கொண்டு வருகின்றனர். அன்னவர்கள்மீது தீவிரமாக நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் கடமை.

கேள்வி: *(398)* தேவர்களுக்குப் படையாது உண்பவன் திருடன் ஆகிறான் என்று கீதையில் மூன்றாவது அத்தியாயம் பன்னிரண்டாம் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தனக்காகவென்று நெற்றி வியர்வையை நிலத்தில் விழப் பாடுபட்டுச் சம்பாதித்து உண்பவன் எப்படித் திருடனாவான்?

பதில்: மக்களுள் மூன்று தரத்தார் இருக்கின்றனர். கடைத்தரத்தில் உள்ள மனிதன் சுயநலமே வடிவெடுத்தவன். தனக்காகவென்றே அவன் பாடுபடுகின்றான், சம்பாதிக்கின்றான். சம்பாதித்த செல்வத்தைத் தானே வைத்து அனுபவிக்கின்றான். பிறருக்குப் பங்கிட்டுக் கொடுக்க அவன் ஒருபொழுதும் இசைபவன் அல்லன். அவனுடைய பண்பாட்டுக்கேற்ற நீதி அது. அதில் தீங்கு ஒன்றுமில்லை. ஆயினும் அவனுடைய முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டே இருக்கும். அவனுக்கு மேல் இடைத்தரத்திலிருக்கும் மனிதன் சுயநலமே வடிவெடுத்து

இருந்தாலும் தன்னுடைய சுகபோகத்துக்குப் பங்கம் வராது ஏதோ ஒரு சிறிதளவு பிறர்க்கு உபகாரம் செய்கிறான். இந்த இரண்டாம் தர மனிதன், மூன்றாம் தர மனிதனைவிட மேலானவன். அதற்கேற்றவாறு அவனுடைய முன்னேற்றமும் வந்தமையும். பின்பு தலைத்தரமான மனிதனோ தனக்கென வாழாது பிறர்க்கென்றே வாழும் பாங்குடையவனாகின்றான். "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும்" என்னும் கோட்பாட்டுக்கு அவன் இலக் காகின்றான். அவன் உயிர் வாழ்ந்திருப்பது தனக்காகவென்று அன்று. அன்னவன் உழைப்பதும் சுயநலத்தால் தூண்டப்பட்டு அன்று. தன்னுடைய ஜீவிதத்தையே தெய்வத்துக்கும் உயிர் களுக்கும் அர்ப்பணமாக அவன் படைக்கிறான். தன்னைப்பற்றி நினைக்க அவனுக்கு நேரமில்லை. அதனால் அவன் அடைகின்ற ஊதியம் ஒப்புயர்வு அற்றது. தெய்வாதீனமாக அவன் ஆதரிக்கப் பெறுகிறான், காப்பாற்றப் பெறுகிறான். அவன் படைத்துள்ள பரந்த மனப்பான்மையின் விளைவாகப் பரம்பொருளில் ஒன்றுபட அவன் தகுதியுடையவன் ஆகின்றான். எவ்வளவுக் கெவ்வளவு ஒரு மனிதன் தனது ஜீவிதத்தையும், உழைப்பையும் பொதுநலனுக்காக ஒப்படைக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு மேன்மையுறுகிறான் என்பது வாழ்க்கையின் மேலாம் கோட்பாடு. நசிகேதன் என்னும் ரிஷிபுத்திரன் ஒருவன் இருந்தான். அவனுடைய ஜீவிதம் ஆரம்பதசையில் தந்தைக்காகவென்று தியாகம் பண்ணுகிற பாங்கில் துவங்குகிறது. அவனுடைய தியாக புத்தி படிப்படியாக மேல்நிலைக்குப் போய்த் தன்னுடைய ஜீவிதத்தையே பரத்துக்கு உரியதாக ஒப்படைக்கிறான். விசுவஜித் யக்ஞம் பண்ண முயன்ற தந்தையிடம் சிறிது சுயநலப்பற்று இருந்தது. தம்மிடம் இருந்த செல்வம் அனைத்தை யும் பிறர்க்காக எடுத்து வழங்க அவர் கடமைப்பட்டிருந்தார். ஆனால் நல்லவைகளையெல்லாம் அவர் தமக்காகவென்று வைத்துக்கொண்டு பயனற்றவைகளை எல்லாம் பிறர்க்கெடுத்து வழங்க ஆரம்பித்தார். அவர் செயலில் இருந்த பிசகை மைந்தன் நசிகேதன் அறிந்துகொண்டான். தன்னை யாருக்குத் தானமாக எடுத்து வழங்கப் போகிறார் என்று தந்தையிடம் கேட்டான். தந்தையிடமிருந்த குறை நிலையை நிறைநிலை

ஆக்குவது அவனுடைய நோக்கம். அவனிடம் கோபித்துக் கொண்ட தந்தை "உன்னை எமனுக்குப் பிடித்துத் தருவேன்" என்று விரட்டினார். தந்தையைச் சத்திய சங்கல்பன் ஆக்குதல் பொருட்டு மைந்தன் யமலோகத்துக்குப் போனான். யமதர்ம ராஜனைக் காண்பதற்காக அவன் ஆங்கு மூன்று நாள் பட்டினி கிடந்தான். அதற்கு ஈடாக மூன்று வரம்தர எமதர்ம ராஜன் முன்வந்தான். நசிகேதன் கேட்ட மூன்று வரத்திலும் சுயநலத்தின் அறிகுறி சிறிதேனும் தென்படவில்லை. தன்னைக் கோபித்துக் கொண்ட தந்தை அமைதியுற்றிருந்து தன்னை மீண்டும் மகிழ்ச்சியோடு எற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவன் கேட்ட முதல் வரம். எத்தகைய யாகம் அல்லது முயற்சியைக் கையாண்டால் மானுடனொருவன் இம்மை மறுமையாகிய இருமையிலும் விரும்பியதையெல்லாம் பெறலாம் என்பது அவன் கேட்ட இரண்டாம் வரம். ஆத்ம தத்துவத்தைப் பற்றி வினவியது அவனுடைய மூன்றாவது வரம். ஆத்ம தத்துவத்தைப் புகட்டுதற்குப் பதிலாக ஏதேதோ சம்பத்துக் களைத் தருவதாக யமதர்ம ராஜன் ஆசையூட்டினான். சுய முயற்சியால்தான் அவைகளைப் பெறமுடியும். ஆனால் அவைகளில் அவனுக்கு ஆசையில்லை என்றும், பரதத்துவம் ஒன்றே உலகுக்குப் பயன்படும் என்றும் நசிகேதன் சொன்னது யமதர்மராஜனுக்குப் பெருவியப்பு ஊட்டியது. தியாக மூர்த்தியா யிருந்து நசிகேதன் மனிதன் பெறவேண்டிய பேறுகளனைத் தையும் பெறலானான். சுயநலம் வாழ்க்கையின் குறிக்கோளன்று; தியாகமே வாழ்க்கையின் குறிக்கோள்.

கேள்வி: *(399)* உபதேச மொழிகளில் 368-வது உபதேசத்தில் இல்லற வாழ்க்கை நடாத்திப் பின் சந்நியாசம் பெறுதலினால் அக்கர்மகுணம் முழுதும் அகலாது, அதன் வாசனை பக்தியைக் கெடுக்கும் என்று பரமஹம்சர் கூறுகின்றார். அவர் தமது வாழ்க்கையையும் அதற்கு அனுசரணையாகவே நடாத்தியிருக்கின்றார். ஆனால் பகவத்கீதையில் மூன்றாவது அத்தியாயம் நான்காவது சுலோகத்தில் ஒருவன் கர்மத்தை அனுஷ்டித்தாலொழிய அதிலிருந்து விடுபடமுடியாது என்று தாங்களே உரையில்

கூறியிருக்கிறீர்கள். இவை ஒன்றிற்கொன்று முரண்பாடா யிருக்கின்றன. இதற்குத் தக்க விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: இந்த இரண்டுவிதக் கூற்றுக்களுள் முரண்பாடு ஒன்றுமில்லை. இக்காலத்திய மனிதனுடைய வாழ்க்கையின் தரத்தை பரமஹம்சர் எடுத்துக் காட்டுகிறார். குடும்ப வாழ்க் கைக்குள் செல்லாது நேர் சந்நியாச ஆச்ரமத்துக்கு வந்து விடுகின்றவனே தலைத்தரமானவன் என்பது அவருடைய கருத்து. குடும்ப வாழ்க்கை வாழ்ந்த பிறகு சந்நியாச ஆச்ர மத்துக்கு வருகின்றவர்கள் காக்கை, குருவிகளால் கொத்தப்பட்ட கனிகள் போன்று கொஞ்சம் குறைபாடு உடையவர்களாகவே தென்படுவார்கள். சந்நியாச ஆச்ரமத்தில் இருக்கின்றவர்களுக் குத்தான் இக்கூற்றின் உட்கருத்து முழுதும் விளங்கும். அதனுள் பிரவேசியாதிருப்பவர்கள் இந்தப் பாகுபாட்டைப்பற்றி மனக் குழப்பம் கொள்ள வேண்டியதில்லை. பரமஹம்சர் தாமே விவாகம் செய்து கொண்டார் எனினும் அது உலக மக்களு ண்டய விவாகத்தோடு ஒத்ததன்று. அவரும் அன்னை சாரதா தேவியாரும் ஆரம்பத்திலிருந்து துறவறத்தையே உறுதியாகக் கடைப்பிடித்தவர்கள் என்று சொல்லலாம். எனவே குடும்பி களிடத்துத் தென்படும் குறைபாட்டை இம்மியளவும் அவரி டத்துக் காணமுடியாது.

பரமஹம்சர் சந்நியாசம் என்று குறிப்பிட்டிருப்பது சந்நியாச ஆச்ரம வாழ்க்கையைப் பற்றியது. பகவத்கீதை மூன்றாவது அத்தியாயம் நான்காவது சுலோகத்தில் சந்நியாசம் என்று சொல்லப்பட்டிருப்பது சந்நியாச ஆச்ரம வாழ்க்கையை அல்ல, பிரபஞ்ச வாழ்க்கையையெல்லாம் கடந்த அதீத நிலை. அந்த அதீத நிலைக்குப் போவதற்கு முன்பு கர்மயோகத்தின் மூலமாக ஒரு மனிதன் தன்னைப் பண்படுத்தவேண்டும் என்பது கோட் பாடு. இல்வாழ்வு வாழவேண்டும் என்பதல்ல அதன் கருத்து. அந்தச் சுலோகத்தையும் அதற்கு வியாக்கியானத்தையும் அதை அனுசரித்திருக்கும் பரமஹம்சருடைய உபதேச மொழியையும் ஆராய்ந்து பார்த்தால் முரண்பாடு இல்லை என்பது விளங்கும்.

கேள்வி: *(400)* ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையின் மூலம் அர்ஜுனனுக்குப் பிரம்மஞானத்தை உபதேசித்தருளினாரா?

ஆம் என்றால் நான்காவது அத்தியாயம் முப்பத்து நான்காவது சுலோகத்தில் "பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் நீ பிரம்ம ஞானத்தை அறிக. உண்மையுணர்ந்த ஞானிகள் உனக்கு அதை உபதேசிப்பார்கள்" என்று இயம்பி யிருப்பதால் பகவான், வேறு ஒரு மெய்ஞ்ஞானியை அடைந்து ஞானத்தை அவரிடத்திலிருந்து பெறும்படி யல்லவோ அர்ஜுனனுக்குச் சொன்னதாக ஏற்படுகிறது? பிரம்ம ஞானத்தைப் பகவான், அர்ஜுனனுக்கு உபதேசிக்க வில்லையென்றால்; ஏன் என்ற கேள்வி எழுகிறது. கீதை பிரம்ம ஞானத்தை உபதேசிக்கும் நூல் அல்லவா? பிரம்ம ஞானத்தை குரு முகமாகவல்லாது பெறவே முடியாதா?

பதில்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குப் பிரம்ம ஞானத்தைத்தான் புகட்டினார். "ஞானிகளிடமிருந்து பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் நீ பிரம்மஞானத்தை அறிக" என்னும் கோட்பாடு அந்த இடத்தில் மிகவும் பொருத்தமானது. அர்ஜுனன் இதுபரியந்தம் அந்த மனப்பான்மையைப் பெறா திருந்தான். கிருஷ்ணனையே தன் தோழன் என்று கருதி வந்தான். குரு சிஷ்ய மனப்பான்மை முற்றிலும் அவசிய மென்பதை இப்பொழுது தக்க சந்தர்ப்பத்தில் அவர் புகட்டு கின்றார். எங்கெல்லாம் குருசிஷ்ய இணக்கம் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் இத்தகைய மனநிலை அவசியமாகிறது என்பது எல்லார்க்கும் பொதுவாக இங்கு புகட்டப்படுகிறது. அர்ஜுனன் கிருஷ்ணனிடத்தில் அப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற கருத்தும் அதில் அடங்கியிருக்கிறது.

தீவிர பரிபாகம் அடைந்துள்ள ஆத்ம சாதகர்கள் குருவின் துணையின்றி ஆத்ம ஞானத்தைப் பெற்றுவிட முடியும். இக்காலத்தில் தோன்றியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும், ஸ்ரீரமண மஹரிஷியும் அதற்குச் சான்று ஆவார்கள். பிரம்ம ஞானத்தைப் பெற்றான பிறகு ஐதிகத்தை அனுசரித்து அந்தந்தச் சமய அனுஷ்டானத்திற்கேற்பக் குருமார்களை ஸ்ரீராமகிருஷ்ணர் ஏற்றுக்கொண்டார். ஐதிகத்தை மக்கள் பின்பற்றவேண்டும் என்பதே அதன் கருத்து. அதைப் பின்பற்றாது குருவின் துணையில்லாது ஞானத்தைப் பெற்றுள்ள மேன்மக்களும் இப்பூவுலகில் இருந்துள்ளார்கள்.

கேள்வி: *(401)* நல்லதையும் கெட்டதையும் பாகு படுத்துவது அறிவுடையோர் செயல். மற்றுக் கீதையில் ஐந்தாவது அத்தியாயம் பதினெட்டாவது சுலோகத்தில் உயர்ந்தவன் - தாழ்ந்தவன், நல்ல விலங்கு - கெட்ட விலங்கு ஆகியவைகளைப் பாகுபடுத்தாதவன் ஞானி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பாமரனும், நலம் கேடு ஆகியவைகளைப் பாகுபடுத்துவதில்லை. அப்படியானால் பாமரனுக்கும், பண்டிதனுக்கும் வித்தியாசம் எது?

பதில்: சில செயல்கள் வெளித்தோற்றத்தில் ஒரே பாங்கு டையவைகளாகத் தென்படுகின்றன. ஆனால் அவைகளுக்கு முகாமையாயிருக்கிற அடிப்படைக் கோட்பாடுகள் ஒன்றோ டொன்று சம்பந்தப்படாதவைகளாம். சான்றுகள் சில எடுத்துக்கொள்ளுவோம். புத்தர் பெம்மான் பிக்ஷை ஏற்று உண்டு வாழ்ந்து வந்தார். அதே காலத்தில் கிட்டத்தட்ட அவருக்கு அருகிலேயே வறியன் ஒருவன் ஐயம் ஏற்று வாழ்ந்து வந்தான். வெளித்தோற்றத்தில் செயல்கள் ஒரே தரத்தில் இருக்கின்றன. மன அமைப்பில் வேற்றுமை இருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் தனக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை என்பதைத் தெளிந்த ஞானத்தைக்கொண்டு புத்தர் வெளிப் படுத்தினார். வறியனோ இவ்வுலகில் தனக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை என்பதை அறியாமையைக் கொண்டு வெளிப் படுத்தினான். இவ்விரு மன அமைப்புகள் ஒன்றோடொன்று ஒன்றுபடமாட்டா.

சிறு குழந்தையொன்று நாகசர்ப்பத்தோடு விளையாடுகிற சம்பவங்கள் ஏதோ சிலசமயங்களில் நேருகின்றன. மகாத்மா காந்தி தமது ஆஸ்ரமத்தில் பாடம் நடத்திக்கொண்டிருந்த பொழுது பாம்பு ஒன்று அவர் மீது ஊர்ந்து சென்றது. அதன் போக்கில் அவர் அதை விட்டுவிட்டார். வெளித் தோற்றத்தில் இச் செயல்கள் ஒரே பாங்குடையவைகளாகத் தென்படுகின்றன. ஆனால் குழந்தையொன்று பெரியதான பிறகு பாம்போடு விளையாடாது பயந்துகொண்டு எட்டப் போய்விடும். குழந்தையினிடத்துத் தாற்காலிகமாக அபேத மனநிலை இருந்தது. அதனால் பாம்பு அதனோடு விளை யாடிற்று. ஆனால் ஞானத்தை எட்டிய மகாத்மா அபேதத்தில்

ஆழ்ந்து ஊறியிருந்தார். ஆதலால் பாம்புக்கும் அவருக்கும் பிணக்கு ஏற்படவில்லை. பண்பில் அவர் முதிர்ச்சியடைந்திருந்தார். பண்பு இன்னது என்று அறியாத நிலையில் குழந்தை இருந்தது. பண்பட்டு அபேத நிலையை எட்டுவது அக்குழந்தைக்கும் குறிக்கோளாகிறது.

கொலை பாதகனொருவன் புற மதத்தைச் சார்ந்த குழந்தையொன்றைத் தூக்கி மேலே வீசி வாளால் வெட்ட ஓடிவருகிறான். அவனது நோக்கத்தை அறியாத குழந்தை சிரித்துக்கொண்டு அவன் அருகில் செல்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்தின்பொழுது சாது ஒருவரை முரடன் ஒருவன் கத்தியால் ஓங்கிக் குத்தினான். கீழே வீழ்வதற்கு முன்பு "குத்துபவனும், குத்தப்படுபவனும் ஒன்றே" என இயம்பிக்கொண்டு அவர் உயிர்விட்டார். மனநிலையில் உச்சநிலையில் இருப்பவர்களும் விவேகமே ஒன்றும் இல்லாதவர்களும் ஒரே பாங்குடையவர்கள் போன்று தென்படுகிறார்கள். வடதுருவத்துக்கும் தென்துருவத்துக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் அவர்களுக்கிடையில் மனபரிபாகமிருக்கிறது. உலக நடைமுறையில் வைத்துப் பார்க்கிறவிடத்துப் பண்பும் பணிவும் நிறைந்துள்ள பிராமணன் ஒருவனை மேலோனாகப் போற்றியாகவேண்டும். சீலமறியாத புலையனைக் கீழோனாகக் கருதியே ஆகவேண்டும். பசுவைக் கோமாதாவாகவும், யானையைக் கணநாதனுக்கு நிகராகவும் கருத நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மலத்தைத் தின்று வாழும் நாயை அருகில் வரவொட்டாது விரட்டி ஓட்டவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். வேற்றுமை நிறைந்துள்ள இவ்வுயிர் வகைகளுள் வேற்றுமை காணாத மேல்நிலையை நிறைஞானி எட்டியிருக்கிறான். ஆதலால் நிறை ஞானியின் முன்னிலையில் வெவ்வேறு வகைப்பட்ட உயிர் வகைகளும் தங்களிடத்துள்ள கீழ்மைகளை மறந்துவிடுகின்றன. தாற்காலிகமாக ஞானியின் முன்னிலையில் அவைகளுக்கிடையிலும் அபேத புத்தி அமைகிறது. அபேதத்தை எட்டுவது நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள். ஆனால் அபேதத்தை எட்டுவதற்கு முன்பு அதை எட்டியிருப்பதாக நாம் பாசாங்கு பண்ணலாகாது. உலகத்தவர்கள் உலக நடைமுறையை அனுஷ்டித்து வருவதற்கிடையில் அவை

யாவையும் கடந்து அபேத நிலையை எட்டுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதுவே இந்தச் சுலோகத்தின் உட்கருத்தாம்.

கேள்வி: *(402)* மான்தோல், புலித்தோல். தர்ப்பாசனம் ஆகியவைகளின் மேல் வடக்கு நோக்கி அமர்ந்து மூக்கு நுனியைப் பார்த்தவண்ணம் தியானம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீமத் பகவத்கீதை, வாசிட்டம் முதலிய நூல்களில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் சிலர் "மான்தோல், புலித்தோல் ஆகியவற்றை உபயோகிப்பது பாபம் ஆகாதா, பெரியோர்கள் இவ்வித ஜீவகாருண்யமற்ற செயல்களைச் செய்யலாமா?". இதற்குத் தகுந்த விடை யாது?

பதில்: தீபம் எரியும்பொழுது எண்ணெய்க்கு நஷ்டம் உண்டாகிறது. எண்ணெயை ஈடு கொடுக்காது தீபத்தை எரிக்க முடியாது. உயிர்களுக்குச் சரீர வாழ்க்கை அத்தகையது. பிரபஞ்சம் முழுவதிலும் ஒருயிர் மற்றோர் உயிருக்குரிய உடலை எடுத்து உண்டு வாழ்ந்து வருகிறது. இந்த விதிக்கு விலக்காகச் சரீரம் எடுத்துள்ளவன் யாரும் ஆக முடியாது. வெறும் காற்றையே புசித்துக் கொண்டிருப்பவனும் காற்றிலிருக்கும் அணுமயமான உயிர்களுக்கு அழிவை உண்டுபண்ணுகிறான். ஆதலால் உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கலாகாது என்னும் கோட்பாட்டை முற்றிலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வர யாருக்கும் முடியாது. கூடிய வரையில் பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருந்து பழகவேண்டும் என்பதைத்தான் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். கொல்லப்பட்ட ஆடு மாடுகளின் தோல்கள் பாதரக்ஷைக்கும், நீர் இறைப்பதற்கும், புத்தகங்களுக்கு அட்டை அமைப்பதற்கும் நன்கு உதவுகின்றன. கொல்லப்பட்ட புலி, மான் முதலியவைகளின் தோல் அமர்ந்திருப்பதற்கு நன்கு உதவுகின்றன. தங்குதடையின்றி நாம் அவைகளைப் பயன்படுத்தலாம். அதனால் நமது நல்வாழ்வுக்கு இழுக்கு ஒன்றும் வந்துவிடாது.

கேள்வி: *(403)* பகவத்கீதையில் தியானயோகம் ஒன்பதாவது சுலோகத்தில் "நல்லெண்ணமுடையவர், நண்பர்,

பகைவர், உதாசீனர், மத்யஸ்தர், வெறுப்பவர், சுற்றத்தார், சத்புருஷர், பாபிகள் ஆகியவர்களிடத்து ஒரே மனமுடையவன் மேலோன்" என்று சொல்லி இருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் நாற்பதாவது உபதேசமொழியில் "புலியினிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மையே. ஆனால் அக்காரணத்தைக் கொண்டு நாம் அதன் முன்னர் போய் நிற்கக்கூடாது. கெட்டவர்களிடத்தும் ஈசுவரன் இருப்பது வாஸ்தவம். ஆயினும் நாம் அவர்களுடன் சகவாசம் செய்வது சரியன்று" என்று கூறியுள்ளார். இரண்டுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: இரண்டு கோட்பாடுகளுக்குமிடையில் வித்தியாசம் இல்லை. நாம் ஞானிகள் அல்ல. சிலர் மேலோராகவும், சிலர் கீழோராகவும் நமக்குத் தென்படுகின்றனர். பிராணிகளில் சில மேன்மை பொருந்தியவைகளாகவும், வேறு சில துஷ்டத் தன்மை நிறைந்தவைகளாகவும் நமக்குத் தென்படுகின்றன. கெட்டவர்களிடத்திருந்து விலகியிருப்பது நம் கடமை. நல்லவர்களிடத்தும் நல்ல உயிர்களிடத்தும் தொடர்பு கொள்வதால் நமக்கு நலனே உண்டாகும். ஆனால் நிறைஞானத்தை அடைந்தவர்களுடைய காட்சியில் இந்த வேற்றுமைகள் எல்லாம் தென்படுவதில்லை. எல்லாம் ஒரே பரம்பொருள் சொரூபமாக அவர்கள் காண்கிறார்கள். அந்தக் காட்சிக்கு ஏற்றவாறு அவர்கள் உயிர்கள் அனைத்திடத்தும் சமதிருஷ்டி கொண்டு இணக்கம் வைக்கிறார்கள். ஞானி ஒருவன் புலியைப் பரம்பொருள் சொரூபமாகக் காண்பதால் புலியும் அந்த ஞானிக்குத் தீங்கு செய்யாது. ஞானியர் முன்னிலையில் புலியின் இயல்பு சாந்தமானது ஆய்விடும். நமக்கு நிறைஞானம் வரும்வரையில் கெட்ட உயிர்களிடத்திருந்து நாம் விலகியிருந்து பழகவேண்டும்.

கேள்வி: *(404)* ஆத்ம சாதனத்தில் முறையாக முன்னேற்றம் அடைந்து வருகிறவர்கள் எத்தகைய மறுபிறப்பு எடுக்கிறார்கள்?

பதில்: இக்கேள்விக்கு விடை பகவத்கீதை ஆறாவது அத்தியாயம் நாற்பத்தொன்று, நாற்பத்திரண்டாவது சுலோகங்களில் வருகிறது. அவர்கள் நற்குடியிற் பிறந்து விட்ட குறையை

நிறைவேற்றுவதற்குத் தீவிரமாக ஆத்மசாதனத்தில் ஈடுபடு கிறார்கள். இறைவனையடைந்த பிறகு அவர்களுக்குப் பிறப்பு ஏற்படுவதில்லை.

கேள்வி: *(405)* "தேவர்களையும் தேவதைகளையும் வழிபடுவோர் தேவலோகத்தை அடைவர். முன்னோர்களை வழிபடுவோர் பிதிர்லோகத்தைச் சேருவர். பூதங்களையும் பிரேதங்களையும் பூஜிப்பவர் அவைகளின் உலகங்களை அடைவார்கள். என்னை வழிபடுவோர் என்னையே சேருவார்கள்" என்று கீதா வாக்கியம் உள்ளது. திருமாலான கண்ணன் இவ்வாறு கூறியதால் அவனையே, விஷ்ணு வையே வழிபடல் வேண்டும் என்றும், இதர சிவன், மாரியம்மன், விநாயகர் போன்றவர்களை வழிபடலாகாது என்றும் வைணவர்கள் கூறுகிறார்கள். இக்கூற்று சரியா, தவறா? மேலும் "பிரம்மலோகம், சொர்க்கலோகத்தில் இருப்பவர்கள் அனைவரும் திரும்பத்திரும்பப் பிறப் பவர்கள். ஆனால் என்னை அடைந்தபின் மனிதன் புனர் ஜன்மம் எடுக்கான்" என்று பகவான் பகர்கிறார். மேற்படி இரண்டு லோகங்களின் தத்துவத்தையும் "என்னை அடைந்தபின்" என்று பகவான் கூறுவதின் கருத்தென்ன என்பதையும் விளக்கவேண்டுகிறேன்.

பதில்: மெய்ப்பொருள் ஒன்றுதான் உள்ளது. யாண்டும் அழிந்துபட்டுப் போகாது இருக்கும் அவ்வொரு பொருள் பல வடிவங்கள் எடுக்கவல்லது. ஆறாகவும் ஏரியாகவும் குளமாகவும் குட்டையாகவும் கடலாகவும் வடிவெடுக்க வல்லது நீர். இன்னும் அதை எத்தனை பாத்திரங்களில் போடுகிறோமோ அத்தனை வித வடிவெடுக்கவும் அது வல்லது. வடிவங்கள் அப்போதைக்கப்போது அப்பொருளின் மீது சுமத்தப்பட்ட புறத்தோற்றங்களாகும். தோற்றங்கள் மாறுவதால் பொருள் மாறிப் போய்விடுவதில்லை. இக்கோட்பாடு தெய்வத்துக்கும் பொருந்தும். இத்தனைவித நீர்களுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவித காரியத்துக்குப் பயன்படுத்தலாம். கப்பலைச் செலுத்துதற்குக் கடல் நீர் உதவுகிறது. பூமிக்குப் பாய்ச்சுவதற்குக் குளம் குட்டைகளில் உள்ள நீர் உதவுகிறது. அருந்துதற்குத்

தூய நீர் ஒன்றைத்தான் நாம் தேடவேண்டும்.

பூதங்கள் எனப்படுபவைகளும் சிறு தெய்வங்கள் எனப்படு பவைகளும் பரமாத்மாவின் வெவ்வேறு சிறு தோற்றங்களாம். உலகனைத்தும் ஆனவன் அவன் ஒருவனே. உலகப் பொருளில் நாம் பற்றுவைத்து அவைகளை நாடித் திரிகின்ற பொழுதும் நாம் மறைமுகமாகப் பரமாத்மனையே நாடுகின்றோம். பரமாத்மனே இவ்வடிவில் இருக்கின்றான் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளாது இவ்வடிவத்தை நாடுகின்றோம். அவ் வடிவம் நமக்கு ஏகதேசம் லௌகிக காரியங்களுக்கு உதவுகிறது. வெவ்வேறு பூதங்களாய், சிறு தெய்வங்களாய் அம் மெய்ப் பொருளைக் கருதி நாம் வணங்குங்கால் அதற்கேற்ற நலனை அடைகின்றோம். இத்தனையும் ஆனவன் அவனே, இதற்கப் பாலும் இருப்பவன் அவனே என்று அறிகின்றவர்கள் அவனை இன்னும் உயர்ந்த பாங்கில் மதிப்பிடுகின்றனர். அவனுடைய உயர்ந்த பாங்கை அறிகின்றவர் உயர்நிலை அடைகின்றனர். அவனுடைய இடைத்தரமான பாங்கை அறிகின்றவர் இடைத்தரமான நலனை அடைகின்றனர். கீதா வாக்கியத்திலே 'நான்' என்னும் சொல் முழுமுதற்பொருளுக்கு இலக்காக இருக்கிறது. முழுமுதற்பொருள் என்று கருதுங்கால் சிவன், விஷ்ணு, கணபதி ஆகிய எல்லாத் தெய்வங்களும் ஒன்றுபட்டு விடுகின்றன. அவனுடைய ஒரு சிறு விபூதியை மட்டும் கருத்தில் வாங்கிக் கொள்கிறபொழுது அது ஒரு சிறு தெய்வ மாகவே இருந்து சிறிய காரியங்களுக்குப் பயன்படுகிறது.

சாதகர்களாகிய நாம் பாவிப்பதற்கேற்ற நிஜ சொரூபத்தை அந்த ஒரு பொருள் நமக்குக் காட்டி அருள்கிறது. சராசரம் அனைத்தும் அந்த ஒரு பொருளின் பல்வேறு தோற்றங்கள் என்று உணர்பவர் மேலும் பிறப்பெடுக்காத பெருநிலையடை கின்றனர். அப்படியல்லாது அதை உலகம் என்றும், பூதங்கள் என்றும், சிறு தெய்வங்கள் என்றும் கருதி அதை நாடுபவர் தம் கருத்துக்கேற்ற நலனைப் பெறுகின்றனர். அதை முழுமுதற் பொருளாக உணர்வதுதான் முறையான வழிபாடாகும். ஏனையவை கருதுபவர் கருத்துக்கேற்ப இரண்டாம் தரம், மூன்றாம் தரம் ஆகிய வழிபாடுகளாக வடிவெடுத்து விடுகின்றன. யாவுமாகிய நிறைபொருளாகவே அவனைப் போற்றிப்

பழகுதல்தான் தலைத்தரமான வழிபாடு ஆகும்.

அவனை நிறைபொருளாக உணராது அவனுடைய ஏதேனும் ஒரு சொரூபத்தை மட்டும் உணர்பவர் அதற்கேற்ற மனநிலையில் நின்று விடுகின்றனர். அந்த மனநிலைதான் சொர்க்கம் என்றும், நரகம் என்றும், பிரம்மலோகம் என்றும் விதவிதமான பெயரெடுத்து வருகிறது. இத்தகைய மனநிலைகளெல்லாம் மேன்மேலும் பிறப்பெடுப்பதற்கு ஏதுவானவைகள். அகண்டாகாரப் பெருநிலையில் மனது லயம் அடையும்படி செய்து விடுபவர் பிறப்பில்லாத பரிபூரண நிலையைப் பெறுகின்றனர். 'என்னை அடைகிறார்கள்' என்று பகவான் சொல்லுவதின் கோட்பாடு இதுவேயாகும்.

கேள்வி: *(406)* "இரகசியங்களுள் நான் மௌனம்" என்று ஸ்ரீமத் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கூறுகிறார். கடவுள் நாதப்பிரம்மம் என்றும் பகரப்படுகிறது. ஒரு பொருளே நாதவடிவாகவும், மௌன சொரூபமாகவும் எப்படி இருக்கமுடியும்?

பதில்: இறைவன் ஓசைவடிவினனாக இருக்கிறார். அப்பொழுது அவருக்கு நாதப்பிரம்மம் என்று பெயர். ஓசை அல்லது நாதம் பிரபஞ்சத்துக்கே வித்து ஆகிறது. நாதத்தினுடைய ஸ்தூலத் தோற்றம் இப்பிரபஞ்சமாகிறது. பிரபஞ்சத்துக்கு இயற்கை அல்லது ஜகத் என்று பெயர். எது இயங்குகிறதோ அது இயற்கை. இயங்குகின்ற ஒவ்வொரு பொருளும் ஓசையை உண்டுபண்ணுகிறது. ஓசையைக் காரணமாகக் கொண்டு பிரபஞ்சம் உண்டாயிற்று. அதைக் காரியப் பிரம்மம் எனலாம். பிரபஞ்சமே மேலும் ஓசையை உண்டுபண்ணுதலால் காரணமாகவும் அது இருக்கிறது. ஆக, நாதப் பிரம்மத்தினிடத்து காரணமும் காரியமும் மாறிமாறி அமைந்துகொண்டே இருக்கின்றன. நாதப்பிரம்மமும் இந்த ஜகத்தும் ஒன்றே. ஆனால் அக்ஞான நிலையிலிருக்கும் நமக்கு அது ஜகத்தாகத் தோன்றுகிறது; பிரம்மமாகத் தோன்றுவதில்லை. ஞானம் வரும்பொழுது ஜகத் என்னும் காட்சி தெய்வக் காட்சியாக மாறிவிடுகிறது. இப்படி ஓசை வடிவமாயிருக்கும் தெய்வம் மௌன சொரூபமாக இருப்பது எப்படி என்னும் கேள்வி பொருத்தமானதே.

தெய்வத்திடத்து எல்லா முரண்பாடுகளும் சந்திக்கின்றன. தெய்வம் சாந்த சொரூபமாக இருப்பது போன்று கோர சொரூபமாகவும் இருக்கிறது. சிவன் சாந்த சொரூபம். அதே பொருள் ருத்திரன் எனப்படும் பொழுது உக்கிர சொரூப மாகிறது. விஷ்ணு சாந்த சொரூபம். அப்பொருள் நரசிம்ம மாகும் பொழுது பயங்கர வடிவினன். உமாதேவி சாந்த சொரூபம். காளி அல்லது துர்க்கை அச்சத்தை விளைவிக்கும் பயங்கர வடிவினள். இப்படி ஒரே பொருளிடத்து முரண்படும் இரண்டு அம்சங்களையும் காண்கின்றோம். நமக்குப் புலனாகும் பிரபஞ்சமும் இவ்வுண்மையை நிரூபிக்கிறது. கடல் அமைதியுற் றிருப்பதும் உண்டு; கொந்தளித்துக்கொண்டிருப்பதும் உண்டு. காற்று, தீ, நிலம் ஆகிய மற்ற பூதங்களிடத்தும் இந்த இரண்டு இயல்புகளையும் மாறிமாறிக் காணலாம். தெய்வம் பிரபஞ்ச சொரூபமாகவும் இருக்கிறார். பிரபஞ்சத்துக்கு அப்பாற் பட்டவராகவும் இருக்கிறார். ஆகையினால்தான் அவருக்குக் கடவுள் என்ற பெயர் வந்தது. இயற்கையைக் கடந்தும், இயற்கை யினுள்ளும் இருக்கிறார் என்பது கட + வுள் = கடவுள் என்பதன் பொருளாகும். இயற்கை மயமாயிருக்கும் அவர் நாதப்பிரம்மம். ஏனென்றால் ஓசைக்கு அந்நியமாக இயற்கை இல்லை. ஓசையும் இயற்கையும் ஒன்றே.

இயற்கைக்கு அப்பால் இயக்கம் இல்லை. எங்கு அசைவு இல்லையோ அங்கு ஓசை உண்டாவதில்லை. மேலும், ஓசை இல்லாத இடத்துப் பேச்சும் இல்லை. பேச்சற்ற நிலையே மௌனநிலை. சொல்லைக்கடந்த பொருளைச் சொல்லால் விளக்க முடியாது. ஆதலால் அது என்றைக்கும் பேச்சு உலகுக்கு இரகசியமாக இருக்கிறது. பேச்சு உலகுக்கு எட்டாதது என்பது அதன் கருத்து. நாதப்பிரம்மம் என்னும் தோற்றத்தை உடைய தெய்வமும், மௌனம் என்னும் அதீத நிலையில் உள்ள தெய்வமும் ஒன்றேயாகும். எல்லா முரண்பாடுகளும் தெய்வத்தினிடத்துச் சந்திப்பது போன்று இயற்கையில் அந்தர்யாமியாய் இருக்கின்ற நிலையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையும் அம்மெய்ப்பொருளினுடைய சொரூபங்களேயாம். ஓசை வடிவினனும் அவரே, மௌன நிலையும் அவரே.

கேள்வி: *(407)* பகவத்கீதையில் அத்தியாயம் பதினொன்று சுலோகம் எட்டில் "ஊனக்கண்ணால் என்னைக் காண்பது முடியாது. திவ்ய பார்வையை அளிக்கிறேன். என் விசுவரூபத்தைக் காண்பாய்" என்று பகவான் பகர்கின்றார். பின்பு இருபதாவது சுலோகத்தில் "மூன்று உலகும் உம்மைக் கண்டு நடுங்கிற்று" என்று சொல்லப்படுவதால் மற்றவர்கள் எப்படிக் கண்டார்கள்? அவர்களுக்குத் திவ்ய திருஷ்டி அருளப்படவில்லையே?

பதில்: அர்ஜுனனுக்குத் தன்னுடைய விசுவரூபத்தைக் காட்டியபொழுதுதான் அவ்வடிவத்தை எடுத்தார், பிறகு கரந்து விட்டார் என்று நாம் பொருள்படுத்தலாகாது. சர்வகாலமும் அவர் விசுவரூபத்தில் இருக்கின்றார். அகிலாண்டங்களும் அடங்கியது விசுவம். அகிலாண்ட சொரூபமாக அவர் யாண்டும் இருப்பதால் அவருடைய விசுவரூபம் நிலையாயது. அதைக் கண்டுகொள்ளுதற்கு நமது ஊனக்கண் தகுதியற்றது. ஞானக்கண்கொண்டு காணுமிடத்து அவ்வுண்மை விளங்குகிறது. தூரத்திலுள்ள மலையைக் காண்பதற்குத் தூரதிருஷ்டிக் கண்ணாடியை நாம் பயன்படுத்துவது போன்று அகிலாண்ட சொரூபமாக இருக்கின்ற பெரிய பொருளைத் தொகுத்து அறிந்து கொள்ளுதற்கு ஞானக்கண் தேவையாய் இருக்கிறது. யோகேசுவரனாகிய கிருஷ்ணனுடைய அருளால் அர்ஜுனனுக்கு இப்பொழுது தாற்காலிகமாக அந்த ஞானக்கண் வந்து அமைந் திருக்கிறது. அந்த ஞானக்கண் கொண்டு பார்க்கின்றபொழுது பரம்பொருளைப் பற்றிய பல புதிய உண்மைகள் அர்ஜுனனுக்கு விளங்குகின்றன. "அண்டமெங்கும் இறைவா நீதான் வியாபித் திருக்கின்றாய்" என்பதை அவன் இப்பொழுது இயம்புகிறான். உயிர்கள் அனைத்துமாய்த் தோன்றிக் கொண்டிருப்பதும் அதே இறைவன்தான் என்பதையும் அர்ஜுனன் இப்பொழுது தெரிந்து கொள்கிறான். ஆனால் மூவுலகெங்கும் உள்ள உயிர்கள் அந்த ஞானத்தை இன்னும் பெறவில்லை. வெவ்வேறு காரணங்களை முன்னிட்டு அஞ்சுகிற உயிர்கள் ஆங்காங்கு இருந்துவருகின்றன. மின்னலையும் இடியையும் கண்டு அஞ்சும் கூட்டத்தார் இருக்கிறார்கள். புயலையும் பெரும் தீயையும் கண்டு நடுங்குபவர் இருக்கிறார்கள். யுத்தத்தையும் கொள்ளை நோயையும் கண்டு

நடுங்குபவர்கள் இருக்கிறார்கள். பூகம்பத்துக்கு அஞ்சி நடுங்கு கிறவர்கள் இருக்கிறார்கள். பூமி போன்ற ஒரு கோளம் மற்றொரு கோளத்தோடு மோதிச் சுக்கலாகின்ற நிகழ்ச்சியும் இறைவனுடைய அமைப்பில் உண்டு. ஒவ்வொரு ஜீவனும் தனக்கு ஒவ்வாத ஏதேனும் ஒரு காட்சியைக்கண்டு அஞ்சுகிறான். அப்படி அஞ்சுகிற கூட்டத்தார் மூவுலகங்களிலும் இருக்கிறார்கள் என்பது இப்பொழுது அர்ஜுனனுக்கு விளங்குகிறது. எனவே இறைவனுடைய விசுவரூபத்தில் இனிய பகுதி, பயங்கரமான பகுதி ஆகிய எல்லாவித பகுதிகளும் இருக்கின்றன. பயங்கர மான பகுதியைக் கண்டு நடுங்குகிறவர்கள் எல்லா உலகிலும் இருப்பது அர்ஜுனனுக்கு வெளியாகிறது. போரைக்குறித்துத் தான் தயங்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; தயங்குகின்ற நிலையில் எண்ணறிய உயிர்கள் ஆங்காங்கு இருக்கின்றன என்பதை அறிந்துகொண்ட பிறகே இறைவனுடைய இயற்கை மயமான பெருந்திட்டம் அவனுக்கு விளங்குகிறது. விளங்குவதை அவன் உள்ளபடி வெளியிடுகிறான். இக்கோட்பாடுதான் எட்டாவது சுலோகத்திலும் இருபதாவது சுலோகத்திலும் விளக்கப்படுகிறது.

கேள்வி: *(408)* கீதை பதினொன்றாவது அத்தியாயம் 33, 34-வது சுலோகங்களில் பகவான் தன்னாலேயே துரோணரும், பீஷ்மரும், ஜயத்ரதனும், கர்ணனும் கொல்லப் பட்டிருப்பதாகச் சொல்லியிருப்பது விளங்கவில்லை. பகவானால் கொல்லப்பட்டிருப்பதால் அர்ஜுனன் யுத்தம் செய்யவேண்டிய காரியம் இல்லையே? இந்த இடத்தில் என்ன தத்துவம் விளக்கப்படுகிறது?

பதில்: துரோணரையும், பீஷ்மரையும் கொல்லமாட்டேன் என்று அர்ஜுனன் துவக்கத்திலேயே சொல்லிவிட்டான். ஆனால் கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் நீண்ட பகை இருந்தது. கர்ணனைக் கொல்லுதலில் அர்ஜுனனுக்கு ஆக்ஷேபனை இல்லை. போற்றுதற்குரிய பெரியார்களாகிய ஆசாரியரையும் பாட்டனாரையும் கொல்லவோ, வெல்லவோ அவன் துணியவில்லை. அவனுடைய மனது அத்தகைய செயலுக்கு மறுதலித்தது.

கிருஷ்ணபகவான் விஸ்வரூப தர்சனத்தைக் காட்டியருளினார். அதன்மூலம் இயற்கையின் நடைமுறையே அர்ஜுனனுக்கு

விளக்கப்பட்டது. உலகில் அரும்பெரும் செயல்களைச் சாதிக்க வந்துள்ள பெருமக்களுக்கும் அழிவுக்காலம் என்ற ஒன்று உண்டு. அவர்கள் ஒடுங்குதற்கேற்ற ஊழிக்காலம் வந்துவிடும்பொழுது ஏதேனும் ஒரு செயல் அவர்களுடைய அழிவுக்குக் காரணமாகத் தென்படுகிறது. ஏதேனும் சில மக்களும் அத்தகைய அழிவுச் செயலைச் செய்வதற்கு முகாமையாக வந்தமைகின்றனர். முகாமையாக ஏதேனும் ஒரு மனிதன் வராவிட்டால் மற்றொரு மனிதன் வந்து அமைவது திண்ணம். அந்த அழிவுச் செயல் மனிதனை முன்னிட்டு நின்றுவிடாது. இது இயற்கையின் நடைமுறையைப்பற்றிய உண்மை.

அறப்போர் புரியவேண்டியது அர்ஜுனனுக்கு அவசிய மாயிற்று. உலக நன்மையின் பொருட்டும் தன்னுடைய சுதர்மத்தை முன்னிட்டும் அவன் போர்புரிவது அவசியமாயிற்று. பீஷ்மரும் துரோணரும் துரியோதனனுக்கு ஒரு எச்சரிக்கை செய்துவிட்டு அவனுக்காகப் போர் புரிந்தார்கள். தாங்கள் முழுமனதோடு அவனுக்குத் துணை புரிந்தாலும் அவனுக்கு வெற்றி கிடையாது என்பதை அவர்கள் எச்சரிக்கை செய் தார்கள். ஆனால் அவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தன் ஆசைக்கு வசப்பட்டு அழிவை நோக்கி அவன் போய்க் கொண்டிருந்தான். ஆசையற்ற ஆசாரியரும் பாட்டனாரும் அத்தகையவனுக்குத் துணைபுரிவதன்மூலம் தங்களுடைய பிராரப்த கர்மத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர். பெரியோர் துணைபுரிந்தாலும் தர்மமும் கடவுளுடைய அருளும் இல்லாத மனிதனுக்கு, அல்லது கட்சிக்கு வெற்றி இல்லை என்னும் பேருண்மை நிரூபிக்கப் பெற்றாகவேண்டும். அதற்கென்றே அப்பெரியார் இருவரும் அறம் பிறண்டவனுக்குத் துணை புரிந்தார்கள். தங்கள் அழிவைக் குறித்து அவர்கள் வருந்தவில்லை. ஏதேனும் ஒருவிதத்தில் உடல் அழிந்தே ஆகவேண்டும். பற்றற்ற நிலையில் அறநெறி பிறண்டவனுக்கு உழைத்து உடலை ஒடுக்கிவிட அந்த ஞானியர்கள் தீர்மானம் செய்திருந்தனர். கர்ணனோ தனக்குப் பெருந்துணை செய்த தோழனுக்காக உயிர் கொடுத்தே ஆகவேண்டும் என்று தீர்மானித்திருந்தவன். காலகதியோ இவர்கள் அனைவரையும் துடைத்துவிடும் நிலையில் இருந்தது.

இதை அறிந்தான பிறகு அர்ஜுனனுக்குச் சஞ்சலம் வேண்டியதில்லை. இச்செயலுக்கு நான் கர்த்தா என்கின்ற அகங்காரம் வேண்டியதில்லை. அந்த அகங்காரம் போய்விட்டால் பெரியோரை நான் கொன்றேன் என்னும் குற்றம் அவனைச் சாராது. ஜென்ம சத்துருவாயிருந்த கர்ணனை ஒழித்துவிட்டேன் என்கின்ற ஆணவமும் அவனிடம் தலையெடுக்காது. தான் போர்புரிந்ததும் தெய்வச் செயல்; தன்னை எதிர்த்து வந்தவர்கள் மடிந்ததும் தெய்வச் செயல் என்னும் எண்ணத்தில் அர்ஜுனன் நிலைபெற்றுவிட்டால் கர்மபந்தம் அவனை வந்து பாதிக்காது. இந்தக் கோட்பாட்டைப் புகட்டுதற்கு, "நீ வெறும் கருவியாக இரு" என்று பகவான் வற்புறுத்துகிறார். கருவியாக இருப்பதன் வாயிலாகக் குந்தியின் மகனுடைய கர்மமும் ஒய்ந்து விடுகிறது. அவன் முக்திக்கு அருகதை உடையவன் ஆய்விடுகின்றான். ஆகவே அவனிடத்து நேர்மையான மனப்பான்மையை உண்டு பண்ணுதற் பொருட்டே இனி நிகழப்போகும் செயல்களை இப்பொழுதே பகவான் அர்ஜுனனுக்கு எடுத்து ஓதுகிறார். வேடன் கையில் கருவியாயிருக்கும் அம்புக்குக் கெட்டதை அழித்தல் என்கின்ற புண்ணியம் இல்லை; நல்லதை அழித்தல் என்கின்ற பாபமும் இல்லை. அங்ஙனம் அர்ஜுனன் பகவானிடத்து வெறும் கருவியாக அமைந்து தன் கர்மத்தை முடித்துக் கொள்ளட்டும் என்பது ஸ்ரீ கிருஷ்ணனுடைய நோக்கம். இந்த அர்ஜுனன் இல்லாவிட்டாலும் மாயவேண்டிய காலம் வரும்பொழுது மாய வேண்டியவர்கள் மாய்ந்தே போய்விடுவார்கள் என்னும் இயற்கையின் அடிப்படை உண்மையை அர்ஜுனனுக்கு எடுத்துக்காட்டியான பின்பு அவனுடைய கர்மத்தில் அவனைக் கிருஷ்ணன் ஏவுகின்றார். ❑

23. திருக்குறள்

கேள்வி: *(409)* திருவள்ளுவரின் தாய், தந்தை, சமயம், ஜாதி பெயர் இவைகளைப் பற்றிப் பலவித மான அபிப்பிராயங்கள் இருக்கின்றனவே. இதன் உண்மை யாது?

பதில்: ரிஷிமூலம், நதிமூலம் ஆகிய இரண்டையும் கண்டுபிடிப்பது அரிது என்பது கோட்பாடு. அப்படிக் கண்டு பிடித்துவிட்டால் பலதடவைகளில் வியப்பும் உண்டாகக்கூடும். ஏனென்றால் மலையுச்சியிலே ஏதோ ஒரு சேற்றுக்குழி ஒரு நதிக்கு மூலமாக இருக்கலாம். இச் சேற்றுக் குழியிலிருந்தா அத்தகைய புனிதம் நிறைந்த பேராறு பெருகி வந்திருக்கிறது என்கின்ற வியப்பு உண்டாகும். அதே விதத்தில் ரிஷி ஒருவர் யாரோ சாமான்யமானவருக்கு மகவாகப் பிறப்பதும் உண்டு. அவர் யாருக்குப் பிள்ளையாக இருந்தால்தான் என்ன? எக்குடியில், எக்குலத்தில் தோன்றியவராக இருந்தால்தான் என்ன? நதியின் பெருமையை நதியே விளக்குவது போன்று ரிஷியின் பெருமையை ரிஷியே விளக்குகிறார்.

அத்தகைய ரிஷிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர் திருவள் ளுவர். அவர் பெருமையை அவரே விளக்கிக் கொண்டிருக்கிறார். மானுடர்கள் அனைவர்க்கும் அருள் விருந்தை ஓயாது வழங்கும் பெருமகன் ஆகின்றார் அவர். அவருடைய நூலை ஓர்ந்து ஆராயுமளவு நாம் அவரையே அறிகின்றோம். இன்றைக்கு அவர் நூல் மயமாக அவர் நம்மிடம் உள்ளார். நமக்கு அதுவே போதுமானது. மற்றக் கேள்விகள் எல்லாம் பயனற்ற கேள்விகள் ஆகின்றன. அவர் நூலைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்வோமாக.

**கேள்வி: *(410)* "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."
உலகத்தோடு ஒட்ட ஒழுகல்-இவ்விரு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. எதை மேற்கொள்வது?**

பதில்: உலக வாழ்வு வேறு, பாரமார்த்திக வாழ்வு வேறு என்னும் கருத்து பலர்க்கிடையில் இருந்து வருகிறது. வாழ்க்கைத் தத்துவம் முழுதையும் அறிந்து கொள்ளாதவர்கள் இவ்விரண்டையும் பிரித்துவைக்கின்றனர். ஆனால் தத்துவத்தை உள்ளபடி அறிகின்றவர்கள் இவ்விரண்டுக்குமிடையில் முரண்பாடு காண்பதில்லை. வாழ்க்கைக்கு இன்றியமையாத சில செயல்களைச் சான்றாக எடுத்துக் கொள்ளுவோம். உணவு உண்பது உயிர்களனைத்துக்கும் பொதுவானது. உண்ணாது உறங்காது யாரும் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. உலகப் பற்றுடையவர்கள் உணவு உண்கின்றனர். கடவுள் பற்றுடையவர்கள் உணவு உண்கின்றனர். உலகையும் உடலையும் மறந்து அதீதத்தில் திளைத்திருப்பவர்களும் "உணவு உண்கிறேன்" என்னும் உணர்ச்சியில்லாது அதை ஏற்கின்றனர். ஆக உணவேற்பது எல்லார்க்கும் பொதுவானது. என்னுடைய சுகஜீவனத்துக்காக உணவேற்கிறேன் என்கின்றான் உலகப்பற்று உடையவன். கடவுள் வழிபாட்டுக்காக உணவேற்கிறேன் என்கிறான் தெய்வப் பற்றுடையவன். உண்பதைப் பற்றிய உணர்வில்லாது அதை ஏற்கிறான் அதீதத்திலுள்ளவன். இந்த மூன்றுவிதச் செயல்களிடையே முரண்பாடு இல்லை. மனநிலையில் வேறுபாடு உண்டு; முரண்பாடு இல்லை. மனநிலையை உயர்த்துதற்கு ஏற்ப மனிதன் மேன்மையுறுகிறான்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலில் வெவ்வேறு மனநிலைகள் உண்டு. உலகத்தைத் தன் காரியத்திற்காகப் பயன்படுத்துதல் பொருட்டு ஒருவன் உலகத்தோடு ஒட்டி வாழ்கிறான். தன் காரியத்திற்கு உலகம் பயன்படாவிட்டால் அதனோடு அவன் முரண்படுவான்; சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடுவான். பொது நலனை முன்னிட்டு உலகத்தோடு ஒட்டியொழுகுதல் அதைவிடச் சிறந்தது. தனி நலனைப் புறக்கணித்துவிட்டுப் பொது நலனிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பது மேலானது. இதில்

மற்றவர்களோடு முரண்பாடோ, பிணக்கோ, சண்டை சச்சரவோ வந்துவிட்டாலும் பொது நலனில் கருத்தைச் செலுத்து கின்றவன் கீழ்மையுறான். அவன் புரிகிற சண்டை சச்சரவு நியாயமானது என்று உலகத்தவர் ஏற்பர். ஆக, உலகத்தோடு ஒட்டி வாழுதலிலும் தாரதம்மியம் உண்டு.

இனி, வாழ்வாங்கு வாழுதல் என்பது யாது என்று ஆராய்வோம். விலங்குபோன்று வாழ்பவர்கள் உளர். மக்கள் போன்று வாழ்பவர்கள் உளர். தெய்வீக வாழ்வு வாழ்கிறவர் களும் உலகில் இருக்கின்றனர். உடல் பற்றுவைத்து இந்திரிய சுகத்தில் ஈடுபட்டிருப்பது விலங்குகளின் வாழ்வு. விலங்கு போன்ற மக்களும் உலகில் இருக்கின்றனர். சமுதாய நலனை முன்னிட்டு அற்பசுகங்கள் ஒதுக்கப்படுகின்றன. அப்படிச் செய்வது பண்பட்ட மக்களின் போக்கு. உலகில் வாழ்ந்திருப் பதற்கிடையில் உலகப்பற்று ஒன்றுமில்லை. தாமரை இலை தண்ணீரில் தோன்றி, அதில் வளர்ந்து, நிலைபெற்றிருக்கிறது. ஆனால் ஒரு துளி நீர் கூடத் தன்மீது ஒட்ட அது இடம் தருவதில்லை. அங்ஙனம் வாழ்வாங்கு வாழ்கிறவர்கள் அடக் கமே வடிவெடுத்திருக்கின்றனர். சுயநலப்பற்று அவர்களுக்கு இல்லை; பொதுநலனில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். சலிப் படையாது பிறர் நலனுக்காகவே அவர்கள் உழைக்கின்றனர். மன்னுயிர்களோடு அவர்கள் மேலான இணக்கம் வைக்கின்றனர். பரமனே இத்தனைவித உயிர்களாக வடிவெடுத்து விளையாடு கிறான் என்னும் பேருணர்வில் அவர்கள் நிலைபெற்றிருக் கின்றனர். உயிர்களோடு வைக்கிற இணக்கத்தை இறைவனோடு வைக்கிற இணக்கமாக அவர்கள் கருதுகின்றனர். ஆதலால் அந்த இணக்கத்தில் பொல்லாங்கு ஒன்றும் நேர்வதில்லை. இனிமையே யாண்டும் நிலவுகிறது. இத்தகைய பெருநிலையே வாழ்வாங்கு வாழ்தல் என்னும் பெருநிலையாகிறது. ஈண்டு முரண்பாடு அடிபட்டுப் போகிறது. தெய்வீகம் கமழுகிறது.

கேள்வி: *(411)* கோபம் உள்ள இடத்தில் குணம் இருக்கும். கோபம் குடியைக் கெடுக்கும். அதே நேரத்தில் "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு; நிலத்தறைந்தான் கை பிழையாதற்று" என்றெல்லாம் சினத்தைப் பற்றிப்

பலப்பலவாறு கூறுகிறார்கள். இவற்றில் நாம் எவற்றினை அனுமானித்து ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும்?

பதில்: கோபம் அல்லது சினத்தில் இரண்டு பாங்குகள் இருக்கின்றன. அடக்கம் உடையவன் வேண்டுமென்றே சினத்தை வரவழைத்துக் கொள்ளுகிறான். அப்படிச் செய்வதில் பண்பு உண்டு. மற்றொருவன் சினத்திற்கு அடிமைப்பட்டவனாக இருக்கிறான். சினத்திற்கு அடிமைப்பட்டிருப்பவன் மனதைக் கட்டி ஆளாதவன். அன்னவன் மனம் போகிற போக்குக்கு அடிமைப் பட்டவனாக இருக்கிறான். அவனிடத்து எழும் சீற்றம் அவனுக்கே கேடாக வந்து முடியும். சினத்துக்கு அடிமைப் பட்டிருப்பவன் தாற்காலிகமாகப் பைத்தியம் பிடித்தவன் போன்று நடந்துகொள்ளுகிறான். செய்யத் தக்கது எது, தகாதது எது எனப் பாகுபடுத்த அவனுக்கு இயலாது. அத்தகையவன் சினத்தால் தூண்டப்பெற்றுச் செய்கிற செயல் அனைத்தும் தனக்கும் பிறர்க்கும் தீங்காக வடிவெடுக்கும். மற்று, வேண்டு மென்றே சினத்தை வரவழைத்துக் கொள்ளுகிறவன் பிறர்மீது ஆணைசெலுத்த வல்லவனாகிறான். தாய், தந்தையர் சினத்தைக் கையாண்டு தங்கள் செல்வர்கள், செல்விகளைத் திருத்தியமைக் கலாம். ஆசிரியர் ஒருவர் மாணாக்கன்மீது சினந்துகொண்டு அவனைப் படிப்பில் தூண்டலாம். ஆட்சிபுரிகிறவர்கள் சினந்து கொண்டவர்கள் போன்று தங்கள் அதிகாரத்தைச் செலுத்திப் பிழைபோனவர்களை நல்வழிக்குக் கொண்டுவரலாம். ஆகவே கட்டுக்கடங்கிய சினம் நலம் செய்யவல்லது. வரம்பில் அடங்காத சினம் எத்தகைய பெருங்கேட்டை வேண்டுமென்றாலும் விளைவிக்கும்.

கேள்வி: (412) **"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்னும் கோட்பாட்டின்படி சிஷ்யன் என்னும் எச்சத்தினின்று குருவின் தகைமையைத் தெரிந்துகொள்ளலாமென்பது இக்குறளுக்கு அமைந்துள்ள வியாக்கியானங்களில் ஒன்றாகிறது. இனி இராமலிங்க வள்ளலாருக்கு எச்சமாகச் சிஷ்யர்கள் அமையவில்லை. ஆதலால் அவர் தக்கார் அல்லர் என்று கூறலாமா?**

பதில்: இராமலிங்க வள்ளலார் போன்று பாரமார்த்திகப்

பெருநிலையில் மேன்மையடைந்துள்ள பெருமக்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் எல்லார்க்கும் சிஷ்யர்கள் என்னும் எச்சம் வாய்க்கவில்லை. மாணிக்கவாசகரைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். அவருக்குச் சிஷ்யர் யாராவது வாய்த்திருப்பதாக அவருடைய வரலாற்றில் நாம் காண்பதில்லை. சான்றோர்களுக்குச் சிஷ்யர்கள் வாய்ப்பதும் வாய்க்காதிருப்பதும் திருவருளின் திட்டமாகிறது. ஆதலால் திருக்குறளில் பகரப் பெற்றுள்ள இப்பொய்யாமொழியைப் பெருமக்கள் எல்லார் விஷயத்திலும் நாம் கையாளலாகாது. திருவருளின் திட்டம் முழுவதையும் அறிந்துகொள்ளும் தகைமை நமக்கு இல்லை. மேலும் உலக நடைமுறையில் பலதுறைகளில் இக்குறளில் அடங்கியுள்ள கூற்று உண்மையென யாண்டும் நிரூபிக்கப் படுகிறது.

கேள்வி: *(413)* "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"
என்று பொறையுடைமையில் சொன்ன வள்ளுவர் பிரான்
"தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு"
என்று அடக்கமுடைமையில் சொல்லுவது முதல் குறளுக்குச் சற்று விலகி நிற்பதாகத் தோன்றுவதால் சாதகன் எங்ஙனம் கர்மம் ஆற்றுவது?

பதில்: முரண்படுவன போன்று தென்படும் இவ்விரண்டு குறள்களின் கோட்பாடுகளுக்கு நிகராக ஔவையார் இயற்றியுள்ள ஆத்திசூடியில் "ஏற்பது இகழ்ச்சி" "ஐயம் இட்டு உண்" என்று இரண்டு கோட்பாடுகள் இருக்கின்றன.. ஐயம் ஏற்றுக்கொள்ளுவது இகழ்ச்சிக்குரிய செயலென்று கருதி அதை ஏலாது எல்லாரும் விட்டுவிட்டால் பிறகு ஐயம் இடுவது எப்படி? ஆக இவ்விரண்டுக்குமிடையில் முரண்பாடு இருக்கிறதல்லவா என்னும் கேள்வியைப் பலர் அடிக்கடி கிளப்பிக் கொண்டே இருக்கின்றனர். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இவ்விரண்டு மேலாம் உரைகளில் உள்ள உட்பொருள் நன்கு விளங்கும். மானுடன் ஒருவன் எப்பொழுதும் கொடையாளியாக

இருந்து பழகவேண்டும். பிறரிடமிருந்து யாசகம் ஏற்று உயிர் வாழும் மனப்பான்மை அவனுக்கு வரலாகாது என்பதுவே இவைகளின் உட்பொருளாம். "ஐயம் இட்டு உண்" என்று ஆன்றோர்கள் சொல்லியிருப்பதனாலேயே உலகத்தவர்கள் எல்லாரும் கொடையாளிகள் ஆய்விடமாட்டார்கள். கொடை வள்ளலாக இருப்பவர்கள் உலகில் மிகச் சிலர். உலோபிகளாக இருப்பவர்கள் உலகில் பலபேர். அடுத்தபடியாக "ஏற்பது இகழ்ச்சி" என்னும் ஆணைக்கு உட்பட்டுப் பிறரிடமிருந்து ஐயம் ஏலாது தங்களைத் தாங்களே சார்ந்திருந்து தாங்களே நேர்மையாக உழைத்துப் பொருள் சம்பாதித்து வாழ்பவர்கள் உலகில் மிகச் சிலர். சமுதாயத்தில் எப்பொழுதுமே வறியவர் களாக இருந்துகொண்டு ஐயம் ஏற்று உண்ணும் கூட்டம் ஒன்று இருந்துவரும். திருடிப் பிழைக்கும் கூட்டம் ஒன்று இருந்துவரும். பிறரை ஏமாற்றிப் பொருள் திரட்டும் கூட்டம் ஒன்று இருந்துவரும். சிறிய பணிவிடைக்கு ஏராளமாகப் பிரதிபலன் கேட்கும் கூட்டமும் உலகத்தில் இருந்துவருகிறது. இத்தகைய உலகில் நேர்மையாக வாழ விரும்புகிற மனிதன் பிறரிடமிருந்து யாசகம் எதையும் தேடலாகாது. தன் தரத்துக் கேற்றவாறு தன்னை நாடுபவர்க்குப் பொருளை வழங்க வேண்டும் என்பது கோட்பாடு. இதைச் சரியாக அறிந்து கொள்பவர்களுக்கு இக்கூற்றுக்களில் முரண்பாடு இல்லை.

இதே விதத்தில் பொறுமை பழகுகிறவர்கள் தமக்குத் தீங்கு செய்கிறவர்களை நொந்து கொள்ளாது அன்னவர்களுக்கு நலன் புரிவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். ஆனால் உலகத்தில் இருக்கிறவர்கள் எல்லாரும் அத்தகைய மனம் படைத்தவர்கள் அல்லர். சிலர்க்குச் செய்த தீங்கை அவர்கள் ஒருபொழுதும் மறக்க முடியாது. அந்தத் தீங்கை எண்ணி எண்ணி வருந்திக்கொண்டே இருப்பார்கள் என்னும் உலகத்தவர்களுடைய இயல்பை

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்ற குறள் மூலம் வெளிப்படுத்துகின்றார். இதற்குச் சான்றாகப் பாண்டவர்களை எடுத்துக் கொள்ளலாம்.

துரியோதனன் பாண்டவர்களைச் சபையில் வைத்து அவமானப் படுத்தியதைத் தர்மராஜாவாகிய யுதிஷ்டிரன் அவமானமாக எடுத்துக் கொள்ளவில்லை. துரியோதனனை நொந்து கொள்ளவுமில்லை.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

ஆனால் அவர் தம்பி பீமன் துரியோதனன் செய்த தீங்கைச் சதா ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்து தக்க சந்தர்ப்பம் கிடைத்தபோது துரியோதனனைத் தொடையில் அடித்துக் கொன்று பழிக்குப் பழி வாங்கினான்.

உலகத்தில் பலப்பல இயல்பு படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கிடையில் சாஸ்திரங்கள் புகட்டுகின்ற கோட்பாடுகளுள் யாருக்கு எது பொருந்தும் என்பதைக் காணுதல் கற்றவர்களுடைய கடமையாம்.

கேள்வி: *(414)* தோன்றிற் புகழொடு தோன்றுக... விளக்கம் யாது?

பதில்: முறைப்படி வாழ மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். யாரொருவன் அறநெறி பிறழாதிருக்கின்றானோ அன்னவன் முறைப்படி வாழ்பவனாகிறான். நெறி பிறழாது நல்வாழ்வு வாழ்கின்றவனை உலகம் போற்றுகிறது. ஆகவே, மானுடனாகப் பிறந்திருப்பவன் நெறியான வாழ்க்கை வாழ்வானாகில் அவன் புகழொடு தோன்றியவனாகிறான். ஆகவே, நல்வாழ்வு காரணமாகவும் புகழ் அதன் விளைவு அல்லது காரியமாகவும் அமைந்திருக்கிறது. காரணத்துக்கேற்ற காரியம் இயற்கையின் மாறாத கோட்பாடாகும். ஆனால் இக்காலத்தவர் பலபேர் புகழுக்கேற்ற பெருவாழ்வு வாழ்வதற்குப் பதிலாக நேர் புகழைப் பெற விரும்புகின்றனர். அப்படி முயலுவது வண்டியை முன்னுக்கும் காளையைப் பின்னுக்கும் இணைப்பதற்கு ஒப்பாகிறது. சுலபத்தில் கீர்த்தி பெறுவதற்கு இக்காலத்தில் முறைகள் சில இருக்கின்றன. சமாசாரப் பத்திரிகைகளைச் சரிக்கட்டி விளம்பரத்தின் வாயிலாகக் கீர்த்தி பெறுவது ஒரு முறை. அரசியல் துறையில் இறங்கிப் பகட்டான பல காரியம்

பண்ணித் தன்னை விளம்பரப்படுத்திக்கொள்வது மற்றொரு முறை. சமுதாயத்துக்குப் பயன்படாதிருந்தாலும் ஏதேனும் ஒரு செயலில் இறங்கி அச்செயலைப் பாராட்டுதற்கான கூட்டுறவுகளை அமைத்துக்கொள்வது மற்றொரு முறை. இவை யாவும் விலைக்கு வாங்கிய கீர்த்தியாகும். இவை நெடுநாள் நிலைத்திருக்கமாட்டா. வாணவேடிக்கை போன்று அதிவிரைவில் மறைந்துபட்டுப் போகும். தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதன் உட்பொருள் மானுடனாகப் பிறந்துள்ள ஒருவன் தன் பிறப்புக்கேற்ற பெருவாழ்வில் உறுதியாக ஈடுபடுதல் வேண்டும் என்பதாம். அங்ஙனம் நல்வாழ்வு வாழ்பவனை உலகம் தானே போற்றுகிறது.

கேள்வி: *(415)* "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"
மழைக்கும் மனைவியின் தர்மத்துக்கும் என்ன தொடர்பு?

பதில்: மனைவி என்பாள் சமுதாயத்தின் ஓர் அங்கமாக அமைந்திருக்கிறாள். சமூகத்திலிருக்கும் மக்களின் மனப்பான்மைக்கும் மழை பெய்தற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மக்களிடத்துள்ள நல்ல மனப்பான்மையே அறச்செயலுக்கு ஏதுவாகிறது. அந்த அறச்செயலே வேள்வி எனப் பெயர் பெறுகிறது. மக்கள் முறையாக வேள்வியும் கடவுள் வழிபாடும் செய்து வருவார்களானால் தக்க பருவத்தில் நல்ல மழை பெய்கிறது. இக்கோட்பாடு "தானம் சுருங்கின் வானம் சுருங்கும்" என்னும் நீதிமொழியாக வடிவெடுத்துள்ளது. தாங்கள் சம்பாதிக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை நல்லவர்கள் சிலரோடு பங்கிட்டுக் கொள்ளும் செயலே தானம் என்னும் பெயர் பெறுகிறது. ஆகவே மக்களுக்கிடையிலே உள்ள சீரிய மனப்பான்மையும் அதனின்று வரும் ஸத்கர்மங்களும் முறையாக மழை பெய்வதற்கு முதற்காரணங்களாகின்றன. மாதம் மும்மாரி பெய்வதற்கு மக்களுள் மூன்று கூட்டத்தார் முதற்காரணமாக அமைகின்றனர். வேதநெறி வழுவாத வேதியர் ஒரு கூட்டத்தார். அறநெறி வழுவாத அரசன் அல்லது அரசாங்கம் மற்றொன்று. மூன்றாவதாக அமைவது கற்புடைய மாதர். இதற்கு மாறாகச்

சுயநலமும் கீழான மனப்பான்மையும் மக்களுக்கிடையில் தலையெடுக்குமாகில் மழை பொய்த்துவிடும் அல்லது பருவம் தவறிப் பெய்யும்.

கேள்வி: (416) "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்"

இக்குறளிலுள்ள முரண்பாட்டுக்குத் தெளிவு வேண்டும்.

பதில்: பொறாமை நெஞ்சம் உடையவனுக்கு ஆக்கமும், பொறாமை இல்லாத நல்லவனுக்குக் கேடும் வருவது ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும் என்பது இக்குறளின் பொருள்.

புறச்செயல்கள்தாம் நம் கண்ணுக்குப் புலப்படுகின்றன. அகச்செயல்கள் நம் கண்ணுக்குத் தென்படுவதில்லை. புறத்தில் ஒருவன் வசதியுடனும், புகழ்ச்சியுடனும் வாழ்வதைப் பார்த்து அவனை ஆக்கமுடையவன் என்று எண்ணுகின்றோம். புறத்தில் எளிமையும் தூய்மையுமாக வாழ்பவனை ஆக்கத்துடன் வாழ்பவன் அல்லன் என்று சொல்லமுடியாது.

துரியோதனன் பொறாமைக்காரன். அவன் படைபலங்களுடனும், இராஜ்ஜியத்துடனும் விளங்கினான். பாண்டவர்கள் நல்லவர்கள். அவர்கள் இராஜ்ஜியத்தை இழந்து தவ வாழ்வில் சான்றோர்களுடன் வாழ்ந்து வந்தார்கள். புறத்தில் பார்ப்பதற்குத் துரியோதனன் ஆக்கம் உடையவனாகவும், பாண்டவர்கள் ஆக்கம் அற்றவர்களாகவும் தென்பட்டார்கள். ஆனால் அக வாழ்வில் துரியோதனன் துன்பத்தையும் கேட்டையும் அனுபவித்து வந்தான். சான்றோர்கள் பழிப்பதற்குரிய இழிய செயல்களைச் செய்துவந்தான். நாளுக்கு நாள் அவனுடைய மனப்பான்மை அறவே கெட்டுவந்தது.

பாண்டவர்கள் வனத்தில் அக்ஷய பாத்திரத்தின் துணைகொண்டு தங்கள் ஆச்ரமத்துக்கு வந்தவர்களுக்கெல்லாம் விருந்து வைத்துப் பெருமகிழ்ச்சி அடைந்திருந்தார்கள். பாண்டவர்களுடைய ஆச்ரமத்துக்குப் போனவர்களுள் சிலர் துரியோதனனுடைய அரண்மனைக்கும் போனார்கள். துரியோதனன் அவர்களைப் பார்த்துப் பாண்டவர்கள் வனத்தில் எவ்வாறு வாழ்ந்து வருகிறார்கள் என்று கேட்பான். அவர்கள்

"பாண்டவர்கள் ஆனந்தமாகவும் வந்தவர்களுக்கெல்லாம் விருந்து அளித்து அவர்களுடைய பாராட்டுதலையும் பெற்றுப் பேரின்ப வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்" என்று கூறுவார்கள். பாண்டவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதைக் கேட்டதும் துரியோதனனுடைய மனம் சொல்லொணாத வேதனையை அடையும். எனவே மனத்தளவில் துரியோதனன் பெரும் வேதனைக்கு உள்ளாகி இருந்தான்.

பொறாமைப்படுபவர்கள் ஒருநாளும் பூரிப்பு அடைய முடியாது. பொறாமை அற்றவர்கள் மனம் யாண்டும் சாந்தத்தில் இருக்கும். இன்பமும் துன்பமும் மனதைப் பொறுத்திருக்கிறதேயன்றிப் புறத்திலுள்ள செல்வத்தையோ, புகழ்ச்சியையோ பொறுத்திருப்பவை அல்ல. மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை விளங்காது. சிந்தித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் இவ்வுண்மை விளங்கும்.

உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வந்து அமையும். உழைப்பினால் ஒருவர் ஆக்கத்தை அடையலாம். ஆனால் அவர் பொறாமைக்கு இடம் கொடுத்தால் துன்பத்தை அனுபவித்தாக வேண்டும். "நலம் செய்பவன் நலம் அடைவான். கேடு செய்பவன் கேடு அடைவான்." இந்த விதிக்கு விலக்கு இல்லை.

**கேள்வி: *(417)* "அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"**

அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையால் உணர்த்த வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடை காட்சியளவு தன்னாலே உணரப்படும்–என்பது இக் குறளுக்குப் பரிமேலழகர் உரையாகும். பொருள் படைத்தவர்களும் சிவிகை ஏறிச் செல்லும் வாய்ப்புப் பெறுகின்றனர். பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள - என்று வள்ளுவர் கூறியிருக்கின்றார். பரிமேலழகர் உரைப்படி இக்குறளுக்குச் சரியான விளக்கம் அமைய வில்லைபோல் தோன்றுகிறது. இதற்கு சரியான விளக்கம் யாது?

பதில்: வள்ளுவர் காலத்தில் அரசர்கள் மக்களின் நலத்திலேயே கருத்து வைத்திருந்தார்கள். குடிமக்களின் இன்ப

துன்பங்களைத் தங்களுடையதாகப் பாவித்து ஆட்சிபுரிந்து வந்தனர். எனவே மன்னனை மக்கள் தெய்வமாகக் கொண்டாடினர். ஔவைப் பிராட்டியின் பெருமையை உணர்ந்த அதியமான் தனக்குக் கிடைத்த அருநெல்லிக்கனியை அவருக்கு ஈந்தான். படர்கொடி ஒன்றுக்குப் பாரி தன் தேரைத் தந்து உதவினான். இத்தகைய செந்தண்மை வாய்ந்த அந்தணர்களாக விளங்கினர் அரசர்கள். இத்தகைய செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்களைத்தான் அறவோர் என்று வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

இறை உணர்விலே தோய்ந்திருந்த ஞானிகள் பக்தர்களால் பெரிதும் போற்றுதற்குரியவர்களாய் இருந்தனர். அத்தகைய ஆத்ம ஞானிகளுக்குத் தொண்டுபுரிவது இறைத் தொண்டைவிட மேலானது என்று பக்தர்கள் கருதினர். திருவிழாக்காலத்தில் தெய்வத்தை சிவிகையில் வைத்துத் தூக்கிச் செல்வது பெரிய பாக்கியம் என்று மக்கள் கருதுவது போன்று அக்காலத்திலிருந்த மன்னர்களையும், ஞானிகளையும் சிவிகையில் வைத்துத் தூக்கிச் செல்வது பாக்கியம் என்று கருதினர். இத்தகைய சூழ்நிலையில் வைத்துத்தான் சிவிகையில் ஊர்ந்து செல்வோரையும் சிவிகையைத் தூக்கிச் செல்வோரையும் சுட்டிக் காட்டி அறத்தின் பயன் இது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பொருளுக்காகச் சிவிகையைச் சுமப்பவர்கள் அடிமைப்புத்தி உடையவர்கள். பொருள் கொடுத்துத் தன்னைத் தூக்கிச் செல்லுமாறு ஏவுபவனும் அற்பனாவான். அவனிடம் மக்கள்பால் இரக்கம் எங்கே இருக்கும்! செந்தண்மையில்லாதவன் அறவோன் ஆகமாட்டான். அறத்தின் பயனைக் காட்டப் பக்தி மேலீட்டாலும், கடவுளுக்குத் தொண்டு செய்கிறேன் என்ற உணர்ச்சி மேலீட்டாலும் சிவிகையைத் தூக்கிச் சென்ற காட்சியை வள்ளுவர் எடுத்துக் காட்டினாரே தவிர பொருளுக்காகச் சுமந்து செல்லும் காட்சியை அறத்தின் பயனைவிளக்க அவர் எடுத்துக் காட்டவில்லை.

அறச்செயலாளர்கள் தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மக்களால் போற்றப்படுகிறார்கள். ஸத்கர்மம் செய்பவர்கள் நல்லதை அனுபவித்தாக வேண்டும். தீய கர்மம் புரிபவர்கள் தீயதை அனுபவித்தாக வேண்டும். இதற்கு

விதிவிலக்கு இல்லை. யாருக்காகத் தொண்டு புரிகின்றோமோ அவருடைய இயல்பு தொண்டுபுரியும் நமக்கு வந்து சேருகிறது. கடவுளுக்குத் தொண்டு புரிந்தால் கடவுளுடைய இயல்பு நமக்கு வருகிறது; அறவோர்க்குத் தொண்டுபுரிந்தால் அவ் அறவோருடைய இயல்பு நமக்கு வருகிறது. அறம் இன்னது என்று தெரியாதவர்கள் மேன்மக்கள் என்று கருதுகிறவர் களுக்குத் தொண்டு புரிந்து பழகட்டும். அப்படி அவர்கள் தொண்டுபுரிந்தால் நாளடைவில் அறம் இன்னது என்று அவர்களுக்கு விளங்கிவிடுகிறது. அறத்தின் பயனும் அவர்களுக்கு வந்து வாய்க்கிறது. அறத்தின் பயன் எது என்றால் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதலாம். இச்சீரிய பண்பைப் பெறு தற்கு நாம் யாண்டும் முயன்று வரவேண்டும். இவ்வடிப்படைக் கருத்தைத்தான் இக்குறள் விளக்குகிறது.

கேள்வி: *(418)* "முதிர்தருதவமொடு முனிவராயினும், விதியினையாவரே வெல்லும் நீர்மையர்?" என்பது ஒரு பழைய பாடல்.

> **"ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று**
> **சூழினுந் தான் முந்துறும்"**

என்பது குறள். ஊழையும் உப்பக்கங் காண்பர். என்பதும் குறள்தான். முரண்படும் இம்மொழிகளை விளக்கவும்.

பதில்: ஊழ் என்பது தோற்றத்துக்குவர ஆரம்பித்துவிட்ட பழைய வினைப்பயன். இதைப் பிராரப்த கர்மம் என்று சொல்லுவது முறை. வினைப்பயன் காரணகாரியமாக அமைகிறது. காரணம் ஒன்றிருக்கக் காரியம் மற்றொன்று ஆகாது. ஒரு எளிய உபமானத்தைக்கொண்டு இதை விளக்குமிடத்து அவரை விதைத்துத் துவரை அறுவடை செய்யமுடியாது. விதை அவரையாயிருக்குமிடத்து விளைவும் அவரையாக அமையும். அவரவர் செய்த வினைப்பயன் செய்தவனை வந்து சார்கிறது. நல்வினை தீவினை ஆகிய இரண்டும் ஊழ் அல்லது பிராரப்த கர்மத்தில் அடங்கிவிடும். பழவினைப்பயன் எப்பொழுதும் முற்பிறப்பில் செய்த வினைப்பயனாக இருக்கவேண்டுமென்பது உண்மையல்ல. சில வினையில் நேற்று செய்ததற்கு இன்று பலன் கிட்ட ஆரம்பித்துவிடும். முந்திய நாள் ஒருவகைப்

பொருந்தாத உணவை உண்ண, பிந்திய நாள் அது வயிற்றுப் போக்கை உண்டுபண்ணிவிடக்கூடும். அத்தகைய வினையையும், ஊழ் அல்லது பழவினையென்றே பகரவேண்டும். அதன் விளைவாக வயிற்றில் ஏற்படும் கோளாறு விலக்க முடியாதது. முற்பிறப்பில் செய்த வினைகளும் இப்பிறப்பில் இன்றுவரையில் செய்த வினைக்குத் தகுந்த வேளைகளில் பயன் தந்துகொண்டே இருக்கின்றன. அப்படி வந்தமையும் வினைப்பயன்கள் யாவையும் ஊழ் என்று இயம்புகிறோம். அவைகளை வராது தடுக்க யாருக்குமே இயலாது. ஞானியர்கள் ஆனாலும் சரி, யோகியர்கள் ஆனாலும் சரி, சித்த புருஷர்கள் ஆனாலும் சரி, பாமரர் ஆனாலும் சரி யாவர்க்கும் ஊழ் விலக்கமுடியாத தாக அப்போதைக்கப்போது வாய்க்கிறது. அப்படி வாய்த்த வினைப்பயனை ஏற்கும் முறையில் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறான். வினைப்பயனாக வயிற்றுப்போக்கு ஆரம்பித்து விட்டது என்று வைத்துக்கொள்வோம். தக்க மருந்து கொடுத்து அவ்வயிற்றுப் போக்கின் வேகத்தைப் பெரிதும் மாற்றிவிட மனிதனுக்கு முடியும். நோய் எவ்வளவு கொடியதாக இருந் தாலும் அதன் கொடுமையை நல்ல சிகிச்சை முறையின் வாயிலாகப் பெரிதும் குறைத்துவிடலாம். அப்படி அதைக் குறைக்குமளவுக்கு ஊழ் என்னும் விதியை மனிதன் தன்னுடைய மதியால், அல்லது அறிவுத்திறனால் புதிய முயற்சி யெடுத்து மாற்றியமைக்கிறான். மருந்தின் துணைகொண்டு நோயின் வேகத்தைத் தடுப்பது ஒருபுறமிருக்க உடலுக்கு வரும் துன்பத்தை மனதில் வாங்கிக் கொள்ளாது இருக்க நல்ல மனப்பான்மை படைத்திருப்பவனுக்கு இயலும். உடலைப் பிடித்த நோயையும் பொருள்படுத்தாதிருக்கும் பக்குவம் சிலர்க்குண்டு. அன்னவர் அறிவுத்திறனால் ஊழை வென்றவரா கின்றனர்.

எத்தகைய பிரதிகூலமான சூழ்நிலையிலும் ஒருசிலர்க்கு நோய் வருவதில்லை. அப்படி உடல் திட்பம் பெற்றிருப்பதும் ஊழின் வலிவு என்பதை யாரும் கணக்கில் எடுத்துக்கொள்வ தில்லை. துன்பமாக வாய்க்கும் வினையையே ஊழ் என்கின் றனர். இன்பமாக வாய்க்கும் வினைப்பயனும் ஊழ் என்பதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஊழின் விளைவாக ஒரு மனிதனுடைய வாழ்வு ஒரு போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. கெட்டவர்களுடைய சகவாசம், கூடாவொழுக்கம் முதலியன பழவினையின் காரணமாக வாய்க்கலாம். அவ்வாறு நெறிபிறண்டு ஒழுகுகிற ஒருவன் நல்லார் ஒருவரைத் தற்செயலாய்ச் சந்தித்து நல்லொழுக்கம், நல்வாழ்வு முதலியவைகளின் சிறப்புக்களை அறிந்து கொள்ளுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்படி அறிந்து கொண்ட ஒரு நொடிப்பொழுதில் தனது வாழ்வையே புதியதாக மாற்றிவிட அம்மனிதனுக்கு முடியும். கெட்ட கனவு கண்டுகொண்டிருப்பவன் விழித்தெழுந்து கொண்டால் அக்கனவினின்று விடுதலையடைகிறான். விவேகம் என்னும் விழிப்பு ஒருவனுக்கு எந்த வேளையில் வேண்டுமானாலும் வாய்க்கக்கூடும். அப்படி விவேகம் உதயமானதும் அந்த நொடிப் பொழுதிலிருந்து மனிதன் தன் வாழ்வையே புதுப்பித்துக் கொள்ள முடியும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர்"

என மேலோர் மொழிந்திருக்கின்றனர்.

கேள்வி: *(419)* "தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்;
வானம் வழங்கா தெனின்"

தானம், தவம் இரண்டுக்கும் மழை அவசியம் என்று இக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. தானத்திற்கும் மழை அவசியம் என்பது சரி. ஆனால் உலக இன்ப துன்பங்களை நீக்கி இறைவனை அடையப் புரியும் தவத்திற்கு மழை இன்றியமையாதது என்பது எப்படி?

பதில்: இவ்வுலகில் ஒருவர்க்கொருவர் துணைபுரிந்து கொள்வதற்குத் தானம் என்று பெயர். பரஸ்பர உதவியின்றி இவ்வுலக வாழ்க்கை நடைபெறாது. மழைபெய்யாது போய் விட்டால் எல்லா உயிர்களின் வாழ்க்கை அப்படியப்படியே நின்றுவிடும். இன்றைக்கு அதற்கு நல்ல உபமானம் ஒன்று எடுத்துக்கொள்ளலாம். கோடையில் பல ரயில்வே

ஜங்ஷன்களில் நீர் போதவில்லை. ரயில்வே இன்ஜின்களுக்குப் போதிய அளவு நீர் கிடைக்கவில்லை. ஆதலால் எல்லாப் பிரயாணிகளின் பயணங்களும் தடைபட்டுவிட்டன. வியாபாரி வர்த்தகத்துக்குப் போகமுடியவில்லை. யாத்திரிகர்கள் கோயிலுக்குப் போகமுடியவில்லை. வழக்கறிஞன் நீதிமன்றத் துக்குப் போகமுடியவில்லை. உலக வாழ்க்கையே தடைப்பட்டு விட்டது. மழை இல்லாது போய்விட்டால் இவ்வுலக வாழ்க்கை நடைபெறாது.

உடலின் துணைகொண்டு உடலுக்குள்ளிருக்கும் உத்தமனை அறிய நல்லார் முயலுகின்றனர். அந்த முயற்சிக்குத் தபசு என்று பெயர். இந்த உடல் பசியிலும் தாகத்திலும் வாடிக் கிடக்கின்றபொழுது அருள்நாட்டம் என்னும் தவத்தைச் செய்வதும் சாத்தியமல்லாது போய்விடுகிறது. கடவுளை அடை வது மிக சீரிய செயல். உடல் வாழ்க்கை மிக அற்பமானது. ஆனால் இந்த உடல் வாழ்க்கையின் துணைகொண்டே கடவுளை அறிகிறோம். மழையில்லாவிட்டால் உடல் வாழ்க்கை நடைபெறாது. அதனால் கடவுளை அறிவதும். சாத்தியமல்லாது போய்விடுகிறது. சிறுவாழ்வு பெருவாழ்வு ஆகிய எல்லாவித வாழ்வுக்கும் உடல் கருவி. உடலை ஓம்புவது மழை. மழையில்லாது போய்விட்டால் இருவித வாழ்வும் இல்லை.

**கேள்வி: *(420)*"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"**

என்பது "உலகத்தோடு ஒத்து வாழ்" எனக் கருத்துப் படுகிறது. உலகத்தோடு ஒத்து வாழ்வதெப்படி? புலால் உண்ணும் பெரும்பாலோர் கூட்டத்தில் சிறுபான்மையோர் புலால் உண்ணாதவர்கள் இருந்தால் அப்பெரும் பான்மையரோடு இச்சிறுபான்மையர் பொருந்தி வாழ்வது எப்படி?

பதில்: உலகத்தோடு ஒத்து வாழ்வது உணவு உண்பதில் அடங்கிவிடுவதில்லை. அவரவர் உடலுக்கும் இயல்புக்கும் ஒத்த படி உணவை மாற்றியமைத்துக் கொள்ளலாம். புலால் உண்பது அவரவர் விருப்பப்பட்ட தனிச் செயல். அது பொதுச் செயல் ஆகாது. புலால் உண்பவர்கள் எல்லாம் சிறுநெறி செல்பவர்கள்

என்று பலர் கருதிவருகின்றனர். அப்படிக் கருதுதற்கு இயற்கையின் நடைமுறையில் ஆதாரமில்லை.

வாழ்க்கை முறையில் உலகத்தோடு ஒத்துப்போக வேண்டு மென்பதே இக்குறளின் கருத்து ஆகும். ஊரிலுள்ள ஆடவர்கள் எல்லாம் வேஷ்டி கட்டுகிறார்கள். மகளிர்கள் எல்லாம் சேலை கட்டுகிறார்கள். ஆடவன் ஒருவன் "நான் வேஷ்டி கட்ட மாட்டேன்; சேலைதான் கட்டுவேன்" என்றால் அது ஊருடன் ஒத்துப் போவதல்ல. ஊரார் எல்லாம் இந்தியர் போன்று உடை அணிகையில் தனி மனிதன் ஒருவன் பொருந்தாத அந்த இடத்தில் ஆங்கிலேயன் போன்று உடை அணிந்து கொள்வது சமுதாயத்துக்கு ஒத்த செயலாகாது. ஊரெல்லாம் கூடி ஒரு விழாவைக் கொண்டாட வேண்டும் அல்லது கொண்டாடக்கூடாது என்று முடிவு கட்டுகிறார்கள். இது விஷயத்தில் ஊரார் நிலைமையை அனுசரித்து நடப்பதே அறிவுடையவனுடைய செயலாகும். ஊரெல்லாம் கூடி ஏதேனும் ஒரு மனிதனை வரவழைக்கவேண்டும் அல்லது வரவழைக் கக்கூடாது என்று முடிவு கட்டுகிறார்கள், அந்த இடத்தில் தேவையானால் நமது கருத்தையும் தெரிவிக்கலாம். எனவே பெரும்பாலோர் செய்த முடிவை அனுசரித்துப் போவதே அறிவு படைத்திருப்பதற்கு அறிகுறியாகும். ஊரை ஒத்துப் போதல் பெரும்பான்மையோருடைய வசதியையும், இயல்பையும், செயலையும் அனுசரித்துப் பொதுக்காரியத்தில் ஈடுபடுதலாம்.

கேள்வி: ***(421)*** "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு"

தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பை எழுவகைப் பிறப்பிலும் நினைப்பார் நல்லோர் என்பது இதன் பொருள். அங்ஙனமாயின் பூர்வக்ஞானம் ஏற்பட வேண்டுமே? மக்களுக்கு முற்பிறப்பின் உணர்ச்சி இல்லாமையால் எங்ஙனம் அவ்வாறு நினைக்கக்கூடும்?

பதில்: நல்லார் ஒருவர்க்குச் செய்த நன்றி வாழ்நாள் முழுதிலும் அவர் மனதில் குடிகொண்டிருக்கிறது. அதனால் நன்றியுணர்தல் என்னும் நல்லியல்பு அவருக்குச் சொந்தமாய்

விடுகிறது. ஒரு பிறவியில் உண்டாயிருக்கிற இயல்பு அப்பிறவி யோடு நின்றுவிடுவதில்லை. ஏனைய பிறவிகளிலும் அது தொடர்ந்து செல்லுகிறது. ஆதலால் எழுபிறப்பிலும் அதை அவர் மறவாது வைத்திருக்கிறார் என்று உபசாரத்துக்காகச் சொல்லப்படுகிறது. முற்பிறப்பில் ஏற்பட்ட இணக்கங்களை மறப்பதற்கு இயற்கைத் தாய் பிற்பிறப்புகளை நல்குகின்றாள். ஆதலால் முற்பிறப்பிலே யார் உதவி செய்தார் என்பது ஞாபகத்தில் இராது. செய்யும் உதவியைப் பாராட்டும் பரிபாகமே பின்வரும் பிறவிகளில் தொடர்ந்து வருகிறது.

24. இராமாயணம்

கேள்வி: *(422)* **இராமன் காடுசென்ற நிகழ்ச்சிக்குக் காரணம் 'விதியே' என்பது கம்பர் கருத்து. வால்மீகியின் கருத்து யாது? இவ்விரண்டுக்குமுள்ள வேறுபாடுகளை விளக்க வேண்டுகிறேன்.**

பதில்: 'விதி' என்னும் சொல்லைப் பெரும்பாலர் தவறுதலாகப் பொருள்படுத்துகின்றனர். மனிதன் செய்கின்ற நலம் கேடுகளுக்கு அவன் தானே கர்த்தா ஆவதில்லை. படைத்தவன் வகுத்துவைத்த திட்டப்படியே அவன் நடந்தாக வேண்டும். அத்திட்டத்தினின்று விலக அவனுக்கு ஒருபொழுதும் இயலாது எனப் பலர் பொருள்படுத்துகின்றனர். "விதி யாரைத் தான் விடுகிறது?" நல்லவன் ஒருகாலத்தில் தன்னையறியாது கெட்டவனாகி விடுகிறான். அது அவன் தலைவிதி. சுக ஜீவனத்துக்குரியவன் யாது காரணத்தாலேயோ துன்பப்பட்டுக் கொண்டேயிருக்கிறான். அதுவும் அவன் தலைவிதி. இப்படி யெல்லாம் பெரும்பாலர் விதியைப் பொருள்படுத்துகின்றனர். இராமன் காட்டுக்குச் சென்றதற்குக் காரணம் கைகேயியும் அல்ல; கூனியும் அல்ல. விதியின் போக்கு அத்தகையது. இப்படிக் கம்பர் பொருள்படுத்தியிருப்பதாகத் தொனிக்கிறது. ஆனால் இக்கருத்து தத்துவத்துக்கு ஏற்புடையதன்று.

'விதி' என்னும் சொல்லுக்குச் சரியான பொருளை நாம் காணவேண்டும். நம்முடைய விருப்பத்துக்கு மாறாக நம்மீது கேடு ஒன்றைத் தெய்வமோ, வேறு யாரோ திணித்துள்ளார்கள். அதை யாராலும் மீறமுடியாது. இப்படிப் பொருள்படுத்துவது பிசகு. தலைவிதியை ஆங்கிலத்தில் பேடலிஸம் (Fatalism) எனப்

பகருவார்கள். இக்கொள்கையைத் தத்துவ தர்சனம் ஏற்றுக் கொள்வதில்லை. இயற்கையின் நடைமுறையே விதி எனப்படுகிறது. படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனுக்கு விதி என்பது மற்றொரு பெயர். பிரபஞ்சத்தின் பாங்கு விதி எனப்படுகிறது. காரணத்துக்கேற்ற காரியம் - இதுவே விதி. காரணம் ஒன்றிருக்கக் காரியம் அதினின்று முரண்படுகிற மற்றொன்றாக மாறுவதில்லை; இது விதி. இயற்கையின் நடைமுறை ஒழுங்குப்பாடுடையது. தாறுமாறாக ஏதும் அதன்பால் நிகழ்வதில்லை. இது விதி. தீ சுடுகிறது. இது விதி. தீயில் கையை வைத்தால் துன்பம் வருகிறது. இது விதி. தீயைச் சரியாகப் பயன்படுத்தினால் குளிரைப் போக்கலாம்; உணவைச் சமைக்கலாம். இது விதி. இயற்கையை முறையாகப் பயன்படுத்தினால் இன்பமுறலாம்; மேன்மையுறலாம். இது விதி. இயற்கையை முறைதவறிக் கையாண்டால் துன்பத்துக்கு ஆளாவோம். இது விதி. ஒழுங்குபாட்டைவிட்டு இயற்கை பிசகுவதில்லை. இது விதி. இயற்கையின் பாங்கை சரியாக அறிந்து அதைத் தன்னுடைய நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வது அறிவுடையோன் செயல். ஆக அறிவுடையவன் விதியை மதியால் வெல்லுகிறான். ஆக, நல்லறிவு படைத்திருப் பவனுக்குத் தலைவிதி என்பதில்லை. எல்லாச் சூழ்நிலைகளையும் அறிவாளன் தனக்குப் பயன்படுமாறு செய்து கொள்கிறான். எந்தச் சூழ்நிலையோ, எச்செயலோ அறிவாளனைத் துன்புறுத்த மாட்டா. சந்தர்ப்பங்கள் அனைத்தையும் அறிவாளன் தன்னைப் பரிபக்குவப்படுத்துதற்குப் பயன்படுத்திக் கொள்கிறான். நாட்டை ஆளும்படி இராமனுக்கு முதலில் தந்தையிடமிருந்து ஆணை பிறந்தது. அதன்படி நடப்பது தன் பொறுப்பு என அவன் உணர்ந்தான். பின்பு காடு ஏகும்படி பெற்றோரிடமிருந்து ஆணை பிறந்தது. அதையும் தன் பொறுப்பு என ஏற்றுக்கொண்டான். மேலும் இரண்டாவது ஆணைக்கு அவன் தனி விளக்கம் ஒன்று கொடுத்தான். தாய் கைகேயிக்குத் தந்தை தசரதர் கொடுத்திருந்த உறுதிமொழியைச் சத்திய சங்கல்பமாக்க மைந்தனாகிய இராமன் கடமைப்பட்டிருந்தான். கொடுத்த வாக்கினின்று யாரும் பிசகலாகாது. வாழ்க்கையைப் பரிபக்குவம் வாய்ந்த மேலான வாழ்க்கையாகத் திருத்தியமைப்பதற்கு

வனவாசம் தகுந்த வாய்ப்பு ஆனது என இராமன் மகிழ்வுடன் அதை ஏற்றுக்கொண்டான். அதை முற்றிலும் நிறைவேற்றி வைத்தான். அதன் மூலம் தன்னைப் பன்மடங்கு மேலோனாக்கி னான். இங்கு விதியென்னும் கோட்பாட்டுக்கு இம்மியளவும் இடமில்லை. சான்றோர்க்கும், வீரர்களுக்கும் வாழ்க்கை ஒரு நல்ல வாய்ப்பு. விதியென்னும் எதிர்மறைக் கருத்துக்கு ஆங்கு இடமில்லை.

கேள்வி: *(423)* வால்மீகி இராமாயணத்திற்கும், கம்பராமாயணத்திற்கும் இடையே சில முரண்பாடுகள் காணப்படுகின்றன. எதை ஏற்பது?

பதில்: வால்மீகி இராமாயணப் பிரகாரம் இராமனும், சீதையும் மணந்து கொண்டபொழுது இராமனுக்கு வயது பதினாறு, சீதைக்கு வயது ஆறு. கம்பராமாயணப்படி சீதை மணம் புரிந்தபொழுது அவள் மங்கைப் பருவத்தைத் தாண்டி இருந்தாள். இது ஒரு முரண்பாடு.

மணந்துகொண்ட பிறகு வால்மீகி இராமாயணப் பிரகாரம், இராமனும், சீதையும் அயோத்யாபுரியில் பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மச்சரிய ஆச்ரமப் பயிற்சிபெற்று வந்தார்கள். இப்பயிற்சி பெறுவதற்குச் சீதை சிறுமியாக இருப்பதே பொருத்தமானதாகிறது. ஆதலால் இந்த நிகழ்ச்சியில் வால்மீகி இராமாயணமே நமக்கு ஏற்புடையதாகிறது.

கம்பராமாயணப் பிரகாரம் விபீஷணன் இராமனிடம் சரணடைந்த பிறகு போர்க்களத்தில் வைத்துத் தன் தமையன் கும்பகர்ணனைச் சந்திக்கிறான். தான் பெற்ற இராஜ்ஜியத்தைக் கும்பகர்ணனுக்குத் தருவதாகப் பணிவுடன் பேசுகிறான். கும்பகர்ணனோ அச்செயலைச் செய்யவேண்டாமென்றும், இராமனிடத்தே விபீஷணன் விசுவாசத்துடன் இருக்கவேண்டும் என்றும் அரக்கர் குலம் அனைத்தும் அழிந்துபட்டுப்போன பிறகு அவர்களுக்கு ஈமக்கர்மத்தைச் செய்வதற்கு விபீஷணன் ஒருவன் பாக்கியிருக்கவேண்டும் என்றும் எடுத்துரைக்கிறான். அந்தச் சந்திப்பும், சம்பாஷணையும் தத்துவத்துக்கு ஒவ்வா.

வால்மீகி இராமாயணப் பிரகாரம் விபீஷணனும், கும்பகர்ணனும் இலங்கையிலிருந்து பிரிந்த பிறகு ஒருவரை

ஒருவர் சந்திக்கவில்லை. இதுதான் தத்துவத்துக்கு ஒத்தது. விபீஷண - கும்பகர்ண சம்பாஷணை கவிதைரசம் பொருந்தியது. ஆனால் தத்துவத்திற்கு ஒவ்வாதது. தத்துவத்திற்கு முதலிடம் கொடுத்துக் கவிதை இனிமைக்கு அடுத்தபடி இடம் தருவதே பொருத்தமானதாகும்.

கேள்வி: *(424)* இராமன் பதினான்கு வருஷங்கள் காட்டில் வாழவேண்டும் என்றாள் கைகேயி. இதன் காரணம் என்ன? நிரந்தரமாக அவனைக் காட்டுக்கு அனுப்பி யிருக்கலாம் அல்லவா?

பதில்: கைகேயியின் புதல்வன் பரதன். தனக்குப் பிள்ளை யாகப் பிறந்த பரதனை நேசிப்பதைவிட அதிகமாக அவள் இராமனை நேசித்து வந்தாள். தன் மகன் பரதன் பல ஆண்டு களாகத் தன்னுடைய பிறப்பகமாகிய கேகய நாட்டில் தன் தந்தையோடும் தமையனோடும் வாழ்ந்து வந்தான். அப்படிப் பிரிந்து இருந்தது அவளுக்குச் சிரமமாகத் தோன்றவில்லை. ஏனென்றால் உண்மையாகவே அவள் இராமனிடம் அதிக அன்பு வைத்திருந்தாள். அதேவிதத்தில் இராமனும் கைகேயி யினிடம் அத்யந்த அன்பு வைத்திருந்தான். பெற்ற தாய் வேறு, மாற்றாந்தாய் வேறு என்ற பேதம் இராமனிடம் இல்லை. தாய்மார் மூவரையும் அவன் ஒரேபாங்கில் நேசித்து வந்தான். தனக்கு அந்தியகாலம் அணுகிவிட்டது என்று தசரதன் ஒருநாள் திடீரென்று உணர்ந்தான். தான் மடிந்துபோவதற்கு முன்பு இராமனுக்கு முடிசூட்டவேண்டும் என்று அவன் விரும்பினான். அதற்கேற்ற நல்ல நாளும் அமைந்திருந்தது. அவசர அவசரமாக இராமனுடைய இளவரசுப் பட்டாபிஷேகத்துக்கு ஏற்பாடாயிற்று.

இளம் வயதிலிருந்தே கைகேயிக்கு வேலைக்காரியாயிருந்த கூனி மந்தரைக்கு இராமனுடைய இளவரசுப் பட்டாபிஷேகம் பிடிக்கவில்லை. அவள் துர்புத்தியுடையவள். கைகேயினிடம் வந்து அந்த இளவரசுப் பட்டாபிஷேகத்தில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று துர்போதனை பண்ணினாள். கைகேயிக்கோ இராமனுடைய இளவரசுப் பட்டாபிஷேகம் முற்றிலும் சம்மத மாயிருந்தது. பிரியத்தோடு அச்செய்தியை வரவேற்றாள். அவள் மனதில் கல்மஷம் ஏதுமில்லை என்பதற்கு அவள் அடைந்த

மகிழ்ச்சியே அத்தாட்சியாகிறது. ஆனால் கூனி அவளை விடவில்லை. ஏதேதோ கற்பனைக் காரணங்கள் சொல்லிக் கைகேயியின் நல்ல மனதைக் கெட்ட மனதாக மாற்றிவிட்டாள். தனக்கு இயல்பாயிருந்த விவேகத்தைத் தாற்காலிகமாகக் கைகேயி இழந்துவிட்டாள். மந்தரையின் போதனைப்படி நடந்து கொள்ள அவள் முற்றிலும் ஆயத்தமாயிருந்தாள். கைகேயிக்கு ஏதேனும் இரண்டு வரங்கள் தருவதாகத் தசரதன் நெடு நாளைக்கு முன்பு வாக்குக் கொடுத்திருந்தான். அந்த உடன் படிக்கையைப் பயன்படுத்தக் கைகேயி ஒருநாளும் நினைக்க வில்லை. இப்பொழுது அதை மந்தரை அவளுக்கு ஞாபக மூட்டினாள். இராமனைப் பதினான்கு வருஷம் காட்டுக்கு அனுப்பவும், பரதனைப் பதினான்கு வருஷம் அயோத்தி மன்னனாக அமைக்க வேண்டுமென்றும் மந்தரை தூண்டினாள். இவையிரண்டையும் இரண்டு வரங்களாகக் கேட்கவேண்டு மென்றும் வேலைக்காரி போதித்தாள். இதை நிரந்தரமான வரமாகக் கேட்டிருந்தால், ஒருவேளை கைகேயியே அதற்கு உடந்தையாகமாட்டாள் என்று கூனி கருதினாள் போலும். அவள் சொற்படி நடக்கும் கீழான பான்மையைக் கைகேயி எப்படியோ பெற்றுவிட்டாள். ஆகப் பதினான்கு வருஷகாலம் இராமனுக்கு வனவாசம் வந்தது. அது எப்படி வந்தது என்ப தற்கு யாரும் காரணம் கண்டுபிடிக்க இயலாது. ஒருவிதத்தில் அதைத் தெய்வ சங்கல்பம் என்று சொல்ல வேண்டும்.

மானுடனொருவன் தன்னுடைய சொரூபத்தை அடியோடு மாற்றியமைப்பதற்குப் பதினான்கு வருஷங்கள் தேவை. தன் சொரூபத்தைத் தவத்தால் மனிதன் மாற்றியமைக்கலாம். அதற்குப் பொருத்தமான சூழ்நிலையும் தேவையான காலமும் அமைந்துவிட்டால் மனிதன் தன்னை வேண்டியவாறு மேலோனாக் மாற்றிக்கொள்ளலாம். தீமைபோன்று தென்படுகிற கைகேயி கேட்ட வரத்தின் வாயிலாக இராமனுக்குப் பெறுதற் கரிய இப்பெரிய வாய்ப்பு வாய்த்தது. வனவாசம் தவத்துக்குப் பொருத்தமான சூழ்நிலை. ஆங்கு முனிவர்களுடைய சத்சங்கம் பெறுதற்கரிய பேறு, இத்தகைய வாய்ப்பை நன்கு பயன்படுத்த முயலுகிறவர்களுக்கெல்லாம் பெருவாழ்வு வாய்க்கும். வாழ்க்கை யிலே மனிதன் தன்னை மேலோனாகப் பக்குவப்படுத்துவது

மிகமுக்கியமானது. பெரிய பதவியைப் பெறுவது முக்கியமான தன்று. விவேகமே வடிவெடுத்திருந்த இராமனுக்கு வனவாசத்தின் சிறப்பு நன்கு விளங்கியிருந்தது. ஆத்ம பரிபாகத்துக்கு அவன் அதை முற்றிலும் பயன்படுத்திக் கொண்டான். மக்கள் எல்லார்க்குமே இதில் பெரிய பாடம் ஒன்று அமைந்திருக்கிறது. "ஓ, மானுடா, பதவியில் நீ நாட்டம் கொள்ளாதே. உன்னைப் பக்குவப்படுத்துவதில் யாண்டும் கண்ணும் கருத்துமாயிரு. நீ அடைகிற பரிபாகத்துக்கேற்ற பேறு தானாக உனக்கு வந்து வாய்க்கிறது". இது வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடு. இராமன் வாயிலாக உலகுக்கு இது புகட்டப்படுகிறது. கூனி ஏதோ தீங்கை இராமனுக்கு விளைவிப்பதாக எண்ணினாள். உண்மையில் அவள் இராமனுக்கு நலனையே மறைமுகமாக வரவழைத்தாள். நல்லவர்களுக்குத் தீங்கு செய்ய யாராவது நினைத்தால் அந்தத் தீங்கும் அவர்களுக்கு ஏற்ற நலமாகவே அமைந்து விடுகிறது.

நிரந்தரமாக இராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி கூனி தூண்டியிருப்பாளாகில் ஒருவேள்ள கைகேயியே அதற்குச் சம்மதம் கொடுத்திருக்கமாட்டாள். இதை அறிந்திருந்த கூனி குருட்டுப் போக்காகப் பதினான்கு வருஷம் கேட்டாள். அக்கால வரையறை ஒரு வாழ்க்கைத் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்தது. இப்படித்தான் சில வேளைகளில் பொருந்தாத முயற்சிகளில் ஏதேதோ வாழ்க்கைக்குரிய பேருண்மைகள் பொலிவதைக் காணலாம். ஈசனுடைய பெருந்திட்டத்துக்குச் சில வேளைகளில் அற்பர்களும் முகாமையாகின்றனர் என்பது இந்நிகழ்ச்சியினின்று வெளியாகிறது.

கேள்வி: *(425)* இராமாயணத்தில் கைகேயி ஸ்ரீராமனுக்கு மாற்றாந் தாயாராய் இருந்தபோதிலும் தாயின் வார்த்தையை மீறி நடப்பது கூடாது என்ற பெரியோர்கள் ஆணைப்படி ஸ்ரீராகவன் கைகேயியின் வார்த்தையைத் தட்டாமல் கானகம் சென்றார். ஆனால் பரதன் மாத்திரம் கைகேயிக்குச் சொந்தப் புத்திரனாய் இருந்தும் தாயின் சொல்லை மீறி இராஜ்ஜியத்தை வெறுத்தார். தாயாரையும் கீழ்த்தரமான சொற்களால் நிந்தித்தார். பெற்ற தாயாரை அப்படி நிந்திக்கலாமா? எதற்காக நிந்தித்தார்?

பதில்: ஸ்ரீராமனுடைய ஒவ்வொரு செயலும் அறத்துக்கு விளக்கமாகிறது. பிறர் ஆணைக்கு உட்படவேண்டிய இடத்தில் உட்பட்டு இராமன் நடக்கின்றான். உட்படவேண்டிய அவசிய மில்லாதபொழுது அவர்கள் சொல்லை அவன் கேட்பதில்லை. உண்மையில் தந்தைக்கு இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்கிற எண்ணம் கிடையவே கிடையாது. இராமன் போனால் தமது உயிரே போய்விடுமென்று அவர் உணர்ந்திருந்தார். ஒருவிதத்தில் இராமனுக்கும் அவ்விஷயம் தெரியும். தசரதருக்கு உயிர்போய் விடலாம்; ஆனால் அவர் சொன்னசொல் பொய் போய்விடலாகாது. அங்ஙனம் அறத்தைக் காக்க இராமன் காட்டுக்குச் சென்றான்.

இராமனுக்கு இட்ட பணி தியாகத்தை மேற்கொள்ளும் படியானது. ஆக, மூத்தவனுக்கு அது முடிந்தது. பதவியையும் போகத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி இளையவனுக்கு ஆணை பிறந்தது. பரதன் தாய் சொல்லைக் கேட்டு ராஜ்ய பரிபாலனம் செய்தால் அது அறத்துக்கு விரோதமாகும். அறத்தில் வைத்த பற்றுதலைவிட இராஜ்ஜியத்தில் அதிகப் பற்றுதல் அவனுக்கு இருந்தது என்னும் கோட்பாட்டில் அவனை அச்செயல் கொண்டு சேர்க்கும். தமயனைக் கடவுள் சொரூபமாகப் பரதன் கருதினான். தாயை அவன் அங்ஙனம் கருதவில்லை. கடவுளிடத்துச் சரணாகதி அடைவதே பக்தனுடைய இயல்பு. கடவுளைச் சார்ந்திருக்கும் பக்தன் ஒருவனுக்கு இடைஞ்சலாகப் பெற்றோர்கள் நடந்து கொண்டால் கடவுள் விஷயத்தை முன்னிட்டு மைந்தன் பெற்றோரை மீறி நடந்துகொள்ள இடமுண்டு. லௌகீக விஷயங்களில் பெற்றோரை மீறி மைந்தன் நடந்து கொள்ளலாகாது. இங்குப் பரதனுக்கு ஏற்பட்ட நெருக்கடி முற்றிலும் லௌகிக விஷய மல்ல. அவன் இராமனையே சார்ந்திருந்தவன். இராமனுடைய ஆணை தாய் தந்தையருடைய ஆணையை விட அவனுக்குப் பெரியது. இராமரை முன்னிட்டே அவன் தாயை மீறி நடந்து கொண்டான். தந்தை உயிரோடு இருந்து அவனை இராஜ்ஜியம் ஏற்றுக்கொள்ளும்படி தூண்டியிருந்தாலும் அவன் அதற்கு உட்பட மாட்டான். இராமபக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பரதன் அமைந்திருந்தான். இக்கோட்பாட்டை அறிந்துகொண்டால் பரதன் செய்தது நியாயமென்பது நமக்கும் விளங்கும்.

கேள்வி: *(426)* "இராமா, என்னைச் சத்தியசங்கல்பன் ஆக்குதற்பொருட்டு நீ கானகம் ஏகத் தீர்மானித்திருக்கிறாய். உன் செயலைத் தடுப்பது எனக்குத் தகாது ஆயினும் ஒரு வேண்டுகோள். எனக்கு அந்தியகாலம் அணுகிவிட்டது. நீ இப்பொழுதே புறப்பட்டுப் போகவேண்டாம். இன்று இரவு மட்டும் இங்கே என்னுடன் தங்கி இரு. கடைசியாக நான் உன்னை மனமாரப் பார்த்து மகிழவேண்டும். அது ஒன்றே என் கடைசி அவா. நாளை அதிகாலையில் நீ புறப்பட்டுப் போகலாம்'' என்று தந்தை தசரதர் வேண்டினார். மைந்தனோ, "பிரிவினால் வரும் ஏமாற்றத்தை ஒத்தி வைப்பதால் நீக்கமுடியாது. ஆதலால் நான் இப்பொழுதே புறப்பட்டுப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு இராமன் வாகனத்தில் ஏறினான். அதை ஓட்ட வேண்டாம் என்று தசரதனும் பொதுமக்களும் வேண்டினார்கள். "ஓட்டு, ஓட்டு" என்று தேரோட்டியாகிய சுமந்திரனை இராமன் ஏவினான். அனைவருக்கும் ஏமாற்றத்தை உண்டுபண்ணும்படி இராமன் அயோத்தியிலிருந்து புறப்பட்டுப்போய் மறைந்தான். இராமன் இப்படிச் செய்தது நியாயமா?

பதில்: ஸ்ரீராமன் புத்ரோத்தமன், தாய் தந்தையரைத் திருப்திப்படுத்துவதும் அவர்களுக்கு நலனை உண்டுபண்ணுவதும் அவனுடைய குறிகோள்களாக இருந்துவந்தன.

பெற்றோர் சாகப்போகும் தறுவாயில் மைந்தர் எவ்விதத்திலாவது அவர்கள் அருகிலிருக்க முயலுவது முறை. சாகும் தறுவாயில் இருப்பவருடைய ஆசையை நிறைவேற்றி வைப்பது சத்புத்திரன் ஒருவனுடைய கடமையாகும். ஸ்ரீராமனோ இந்த இரண்டு செயல்களினின்றும் மாறுபட்டவனாக நடந்து கொண்டான். எனவே அவன் செய்தது பிழை என்றே பெரும்பாலோர்க்குத் தென்படுகிறது.

அவன் செய்தது பிழையா அல்லது பொருத்தமானதா என்பதை ஆராய்ந்து பார்ப்போம். ஸ்ரீராமன் - புத்ரோத்தமன், எந்தத் தந்தையாவது அவனுக்கு நிகரான மைந்தனைக் காண்பது அரிதிலும் அரிதாம். இனி, இராமன் தர்ம கோப்தா, தர்மத்தைக் காப்பதற்கென்றே இந்நிலவுலகில் அவதரித்தவன்.

தன் தந்தைக்கு அந்தியகாலம் அணுகிவிட்டது என்பதை

இராமன் நன்கு அறிந்திருந்தான். தன் தந்தை சொன்ன சொற்படி நடந்துகொண்டார் என்பதை நிரூபிப்பது மைந்தனாகிய இராமனுடைய கடமையாக இருந்தது. அவன் அயோத்தியிலிருக்கின்றபொழுது தந்தை மடிந்துபட்டுப் போனால் அவர் சொன்னபடி நடந்துகொள்ளவில்லை என்னும் குற்றம் அவரை வந்து சாரும். சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியாது மனம் உடைந்து மாண்டுபோனார் என்னும் குற்றமும் அவரை வந்து சாரும். ஆகவே, தந்தையைத் திருப்திப்படுத்துதல் பொருட்டுத் தான் அயோத்தியில் மேலும் காலதாமதம் பண்ணிக்கொண்டிருப்பது தனக்குப் பொருந்தாது. அத்தகைய பழிக்கு ஆளாக இராமன் விரும்பவில்லை. எனவே, தந்தைக்குப் பெரிய ஏமாற்றத்தை உண்டுபண்ணிய குற்றத்தைத் தன்னுடையதாக ஏற்றுக்கொண்டு அக்கணமே அவன் அயோத்தியை விட்டு வெளியேகினான். சில நெருக்கடிகளில் மாந்தர்க்குச் சங்கடம் ஏற்படுகிறது. எதைச் செய்வது, எதைத் தவிர்ப்பது என்பதைத் தெரிந்துகொள்ளாது பலர் தயங்குகின்றனர். ஸ்ரீராமனோ புருஷோத்தமன். நெருக்கடி ஒன்று வந்து நேருமிடத்துப் பெரும்பிழையினின்று தன்னை விடுவித்தல் பொருட்டுச் சிறு பிழை ஒன்றை மானுடன் செய்வது தர்மத்தோடு முரண்படாது. இச்செயலை இராமன் இந்த நெருக்கடியில் தானே செய்து காட்டி இருக்கிறான்.

சாகும் தறுவாயில் இருப்பவர்களுடைய ஆசையை நிறைவேற்றி வைப்பது சத்புத்திரன் ஒருவனுடைய கடமையாகும். ஸ்ரீராமன் நடந்துகொண்டது அதற்கு நேர்மாறானது. சில வேளைகளில் சாகும் தறுவாயில் இருப்பவனுடைய ஆசையை நிறைவேற்றி வைப்பதற்கு மாறாகப் பெரிய ஏமாற்றத்தையும் அதன் விளைவாக வருகின்ற துன்பத்தையும் விளைவிப்பது ஸத் கர்மமாகிறது. இது shock treatment - ஏமாற்றத்தின் வாயிலாகப் பெருநலனை உண்டுபண்ணுவதாகும். இந்த முறையைத் தர்ம கோப்தாவாகிய இராமன் தன் தந்தையின் விஷயத்தில் கையாண்டிருக்கிறான். தசரதச் சக்கரவர்த்தி திருப்தியுடன் உடலை விட்டு நீங்குதற்கு மாறாக ஆழ்ந்து ராம சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார். இராமனைக் குறித்து வருந்தினார். அத்தகைய பேறு எல்லார்க்கும் வாய்க்காது.

ஸ்ரீராமன் தன் தந்தைக்கு மைந்தனாய் இருந்தது முக்கியமான தன்று. அவன் பரமாத்ம சொரூபம். மக்களை உய்விக்க உலகத்திற்கு வந்தவன். அவனுடைய நாமம் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தும். அவனுடைய ஆத்ம சொரூபம் அந்திய காலத்தில் சிந்திப்பவருடைய ஜீவ வியக்தியை அகற்றிப் பரத்தில் ஒன்றுபடுத்தவல்லது. தசரதன் பட்ட வியாகுலம் இராமனைப் பற்றியது. ஆகையினால் அது பரநாட்டத்துக்கு நிகராகிறது. தம் மைந்தன் என்று அவர் மனதில் எண்ணியது அவர் செய்த தவத்தின் விளைவு. உண்மையில் பரமாத்ம சிந்தனையில் ஆழ்ந்து மூழ்கியிருக்கும் பெரிய வாய்ப்பினால் அந்தச் சக்கரவர்த்திக்குத் தம் திருக்குமாரன் வாயிலாகப் பரத்தில் லயமாதல் என்னும் பெரிய பேறு வந்தமைந்தது.

எனவே, அறநெறியினின்று இம்மியளவும் பிசகாத இராமன் தன் தந்தையின் விஷயத்திலும் அறநெறி பிசகாது நடந்து கொண்டான். கல்நெஞ்சம் படைத்தவன் போன்று தன் தந்தையின் இறுதிக் காலத்தில் இராமன் காட்சி கொடுத்தான். உண்மையில் அவன் கருணாகரனே.

கேள்வி: *(427)* "ஆ ராமா, ஏ சீதே, லக்ஷ்மணா, என் வாழ்வின் இறுதிப்பகுதியில் உங்கள் மூவரையும் இந்தக் கோலத்தில் காண்பதற்காகவா நான் இத்தனை நாள் வாழ்ந்தேன்? ஆ தெய்வமே, நான் யாருக்கு என்ன பாபம் செய்தேன்?" என்று தசரதர் ராம லக்ஷ்மணர்கள் வனவாசத் துக்குப் புறப்படுகிற கோலத்தைப் பார்த்துப் பிரலாபிக்கிற காட்சி பாதுகாபட்டாபிஷேகத்தில் வெளிவந்துள்ளது. நாம் தெய்வமாக வணங்கும் ஸ்ரீராமனைக் காட்டிலும் அவரது தந்தைக்குத் தெய்வம் ஒன்று உள்ளதா? அல்லது தனது குமாரன் மேல் உள்ள அன்பு என்னும் பாசத்தால் அங்ஙனம் மெய்ம்மறந்து சொல்லுகிறாரா? அல்லது தன் மகன் தெய்வம் என்று அறியாது சொல்லுகிறாரா?

பதில்: தமது மகன் திருமாலின் அவதாரம் என்பதைத் தசரத மன்னர் அறிந்திலர். அவன் பண்பிற் சிறந்த புத்திரன் என்பதை அவர் அறிந்திருந்தார். தந்தை ஒருவன் மைந்தனிடம் வைக்கும் பந்தபாசத்தை அவர் பெருமிதமாக இராமனிடம்

வைத்திருந்தார். தமது உயிர்க்குயிராகத் தமது மகனை அவர் கருதி வந்தார். அறிந்தோ அறியாமலோ நாம் எந்த ஆத்மாவிடம் பற்று வைக்கின்றோமோ அந்த ஆத்ம சொரூபமாக நாம் மாறிவிடுகின்றோம். கீழ்மையே வடிவெடுத்துள்ள ஒரு மனிதனிடத்துப் பற்றுதல் வைத்தால் நம்மையறியாமல் நாம் கீழ்மையடைந்து வருகின்றோம். மேன்மை எல்லாம் அமையப் பெற்றுள்ள ஒரு மனிதனிடத்துப் பற்றுதல் வைத்தால் நம்மை அறியாது அம்மனிதனுடைய மேன்மை நமக்கும் வந்தமைகிறது.

உலகத்தவர் நிலையிலிருந்து தசரத சக்கரவர்த்தி தவவேடம் பூண்டு காட்டுக்குச் செல்லும் தன் மைந்தர் இருவரையும் மணாட்டுப்பெண் சீதையையும் குறித்து மனம் நொந்தார்; பிறகு மனம் உடைந்தார்; பிறகு தாமே மாண்டு போனார். மேலாம் மூர்த்தி இராமனிடம் அவர் வைத்த பற்றின் விளைவாக அவர் மேன்மையடைந்தார். சொர்க்கப்பதவி எளிதில் அவருக்குக் கிட்டிற்று.

ஸ்ரீராமன் அவதார மூர்த்தி என்பது அவர் வாழ்ந்திருந்த காலத்தில் இருந்த சில ரிஷிகளுக்கு மட்டும் தெரியும். மற்றவர்கள் எல்லாம் ஸ்ரீ ராமனை ஓர் உத்தமமான மனிதன் என்றே கருதிவந்தார்கள். ஸ்ரீராமனைக் கடவுளாகக் கருதும் ஐதிகம் நாளடைவில் வலுத்தது. இன்றைக்கு நாம் இராமனைப் பரமாத்ம சொரூபமாக போற்றிப் பாராட்டுவது நமக்கு எளிது. ஏனென்றால் அவர் அவதார மூர்த்தி என்னும் எண்ணம் நமது மனதில் ஆழ்ந்து படிந்துவிட்டது. அன்றைக்குத் தசரதர் தமது அருமைப்புதல்வன் என்று கருதியதுதான் அன்றைய சூழ்நிலைக்கும் தசரதருடைய மனபரிபாகத்துக்கும் ஒத்ததாகும். இராமனைத் தன் அன்புக்குரிய மகனாக்க் கருதிய தசரதருக்குத் தன்னிலும், இராமனிலும் மிக்கதொரு தெய்வம் இருந்தது. ஆனால் ஸ்ரீராமனையே பரமாத்ம சொரூபமாகக் கருதிய ரிஷிகளுக்கு இராமனே பரம்பொருள் ஆனான்.

உலகனைத்தையும் கடவுள் சொரூபமாகக் கருதுவது நிறை ஞானிகளின் செயல். அவதார மூர்த்தி இராமனை மட்டும் கடவுள் சொரூபமாகக் கருதுவது பரிபக்குவம் அடைய முயலுபவர்களுடைய செயல். அவதார மூர்த்தியையே அல்ப மனிதனாகக் கருதுவது ராவணாகாரம் படைத்தவர்களுடைய

செயல். இத்தனைவித மனபரிபாகம் உடையவர்கள் அன்றைக்கும் இருந்தார்கள்; இன்றைக்கும் இருக்கின்றார்கள். நமது எண்ணத்துக்கு ஏற்றவாறு நமக்கு முன்னேற்றம் அமைகிறது.

கேள்வி: *(428)* குஹனோடு நட்புக்கொண்ட பிறகு "குஹனொடும் ஐவரானோம்" என்று கூறிய இராமன் குஹன் கொடுத்த உணவை ஏற்றுக்கொள்ளவில்லை. இக்குறை நிலை இராமனிடத்து இருக்கலாமா?

பதில்: இராமனும் தம்பிமார்களும் சேர்ந்து சகோதரர்கள் நான்கு பேர் ஆகின்றனர். காட்டுக்குச் செல்லும்பொழுது கங்கை நதிக்கரையில் படகோட்டித் தலைவனாகிய குஹனோடு நட்பு ஏற்பட்டது. அது என்றும் மாறாத நெருங்கிய நட்பு. அதற்கு விளக்கமாகக் குஹனொடும் ஐவரானோம் என்று இராமன் பகர்ந்தான். குஹனைத் தன் சகோதரனாகவே அன்று முதல் அவன் பாராட்டி வந்தான். கங்கைக்கரையில் தங்கியிருந்த அன்று இரவு குஹன் அறுசுவையோடுகூடிய அரிய உணவு வகைகளை ஆயத்தப்படுத்தி இராமனுக்குப் படைப்பதற்காகக் கொண்டு வந்தான். அப்பொழுது இராமன் தான் பூண்டிருந்த விரதத்தை எடுத்து குஹனுக்கு விளக்கினான். தனக்கு வனவாசம் ஆரம்பித்துவிட்டது என்றும் அது முடியும் பரியந்தம் எந்த ஊருக்குள்ளும் புகுவதில்லையென்றும், ஊருக்குள் வசித்து வருகிற உலக மக்கள் சமைத்த உணவை ஏற்பதில்லை என்றும் இயம்பினான். குஹனைச் சகோதரனாகக் கருதிய இராமன் அதற்கு மாறாக எந்த விதத்திலும் நடந்து கொள்ளவில்லை. இராமன் வசித்து வந்த காலத்தில் ஒரு ஜாதியானிடமிருந்து இன்னொரு ஜாதியான் உணவு ஏற்றுக் கொள்ளலாகாது என்ற குருட்டு நம்பிக்கை இல்லை. அது இடைக்காலத்தில் இந்நாட்டினுள் புகுந்துள்ள ஒருவித மனநோய் ஆகும். உணவைப் பற்றி இராமன் கொண்டிருந்த நியதிகளை நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. சுமார் பத்து வருடகாலம் வனவாசத்தின் பொழுது அவன் ரிஷிகளின் ஆஸ்ரமத்தில் இருந்தான். ஆங்கு அவனுக்குப் படைக்கப்பட்ட உணவு வகைகளைத் தங்குதடையின்றி ஏற்றுக் கொண்டான். ஏனென்றால் ரிஷிகள் ஆரண்யத்தில் வசித்தவர்கள். தவத்தில்

ஈடுபட்டவர்கள் வாழ்க்கை முறையிலும், கொள்கையிலும் ரிஷி கூட்டத்தாருக்கும் இராமனுக்கும் வேற்றுமையில்லை. உலகத்தவர்கள் உணவு சமைப்பது தங்கள் போஜனத்துக்காக. தபஸ்விகள் உணவு சமைப்பது ஆத்ம நிவேதனத்துக்காக. ஆத்ம நிவேதனத்துக்காக உணவு எங்கு சமைக்கப்பட்டிருந் தாலும் அதைத் தபஸ்விகள் ஏற்றுக்கொள்ளலாம். குஹனை இராமன் அடியோடு புறக்கணித்துவிடவில்லை. சமைத்த உணவுக்குப் பதிலாகக் காய், கனி, கிழங்கு ஆகியவைகளைத் தனக்கும், லக்ஷ்மணனுக்கும், சீதைக்கும் தரும்படி இராமன் வேண்டினான். குஹனும் மகிழ்ச்சியோடு அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைத்தான்.

கிஷ்கிந்தையின் எல்லைப்புறத்தில் மதங்க மகரிஷி ஆஸ்ரமத்தில் சபரி என்னும் கீழ்க்குல மாது ஒருத்தி வசித்து வந்தாள். இராமனுடைய வருகை வரையில் மதங்க மகரிஷிக்குத் தமது சரீரத்தைக் காத்து வைக்க இயலவில்லை. அவருடைய ஆஸ்ரமவாசியாகிய சபரி, இராமன் வரும்வரையில் சரீரத்தோடு இருக்கவேண்டும் என்றும் இராமனுக்கு அதிதி ஸத்காரம் செய்த பிறகே அவள் உடலை உகுக்கவேண்டும் என்றும் மகரிஷி இயம்பிவிட்டு மறைந்தார். சபரி உலர்ந்துபோன கனிகளைச் சேகரித்து வைத்திருந்தாள். தக்க பருவத்தில் இராமன் வந்தால் புதிதாக அகப்படக்கூடிய கனிகளை அவனுக்குப் படைக்கமுடியும். பருவம் தவறி வந்தால் பாதுகாத்து வைக்கப் பட்ட உலர்ந்த பழங்களைத்தான் தரமுடியும். இராமன் பருவம் தவறித்தான் வந்து சேர்ந்தான். சபரி உலர்ந்து போன கனியை ஒவ்வொன்றாகத் தானே கொரித்துப்பார்த்துவிட்டு நல்லவை களைப் பொறுக்கி எடுத்து இராமனுக்கும் தம்பிக்கும் ஊட்டி னாள். எச்சில்பட்டதைச் சகோதரர்கள் கருத்தில் வாங்கவில்லை. சபரியின் பக்தியே அவர்களுடைய உள்ளத்தைத் தொட்டது.

இலங்கையில் இராவண ஸம்ஹாரத்துக்குப் பிறகு விபீஷ ணன் இராமனைக் குளிப்பாட்டி அலங்கரித்துப் பெரிய விருந்து வைக்க விரும்பினான். அப்பொழுது இராமன் தனக்கு வனவாச விரதம் இன்னும் முடியவில்லை என்றும், பரதன் தவவேடத் துடன் அயோத்திக்கருகில் காய், கனி, கிழங்கு அருந்திக்கொண்டு தவத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது தான் விருந்தேற்பது ஒவ்வாது

என்றும் மறுத்துவிட்டான். விபீஷணனை ஏழாவது சகோதரனாக இராமன் ஏற்றுக்கொண்டான். குஹனுக்குக் கொடுத்த விடையே விபீஷணனுக்கும் வந்தது. அன்பில் அவர்களுக்கிடையில் எந்தவிதமான குறையுமில்லை.

கேள்வி: *(429)* தவவேடத்தில் காட்டிற்குச் சென்ற சீதையிடம் நகைகள் ஏன் இருந்தன?

பதில்: இராமனும் லட்சுமணனும் மரவுரி தரித்துத் தவவேடத்தில் இருந்தனர். ஆனால் சீதைக்கு அத்தகைய தவவேடம் அவசியம் இல்லை என்று தசரதரே பகர்ந்தார். ஆகையினால் பெண்பாலர்க்கு இன்றியமையாத ஆபரணங்கள் சிலவற்றை அவள் அணிந்திருந்தாள். அத்துடன் தவத்தின் சின்னமாக அவள் அணிந்திருந்தது மஞ்சள் புடவையேயாம். தற்செயலாக அமைந்திருந்த இக்கோலம் ஒரு நெருக்கடியில் அவளுக்கு நன்கு பயன்பட்டது. இராவணன் அவளைப் புஷ்பக விமானத்தில் வைத்து வானவெளியில் தூக்கிக்கொண்டு போனபொழுது தான் அணிந்திருந்த நகைகளை ஒரு துணியில் முடிந்து தரையின்மீது அமர்ந்திருந்த சுக்ரீவன் முதலிய சில வானரங்களை நோக்கி அம்முடிச்சைக் கீழே போட்டாள். ஆதலால் அவளைப் பற்றிய துப்பு அறிதற்கு அம்முடிச்சு நன்கு பயன்பட்டது.

கேள்வி: *(430)* சீதாதேவி மரவுரி தரித்துக் காட்டிற்குச் சென்றாள். அணிகலன் எதையும் அவள் படைத்திருந்தனள் அல்லள். அப்படியிருக்க ஆஞ்சனேயன் மூலம் சூடாமணி கொடுத்தனுப்பியது எங்ஙனம்?

பதில்: இராமனும் லட்சுமணனும் காட்டிற்குச் செல்ல ஆயத்தப்படுத்திய பொழுது அவர்கள் இராஜகுமார வேஷத்தைத் துறந்து மரவுரி தரித்துத் துறவியர் கோலம் பூண்டனர். சீதாபிராட்டியும் அங்ஙனமே செய்யத் துணிந்தாள். ஆனால் துயரத்தில் மூழ்கிக்கிடந்த தசரத மன்னன் அதற்குச் சம்மதம் கொடுக்கவில்லை. சீதாபிராட்டி எப்பொழுதும் போன்று ஆடை அணிந்திருக்க வேண்டும் என்றும் அணிகலன்கள் பூண்டிருக்க வேண்டும் என்றும் தசரத சக்கரவர்த்தி வேண்டிக் கொள்வது

போன்று ஆணையிட்டார். அந்த ஆணை நிறைவேற்றப்பட்டது. ஆதலால் பதினான்கு வருடகாலம் வனவாசம் செய்து கொண்டிருந்தபொழுதும் சீதாதேவி மரவுரி அணியவில்லை. ஆபரணங்கள் சிலவற்றை அணிந்திருந்தாள். அவளை இராவணன் தூக்கிச் சென்றபொழுது ஆபரணங்கள் சிலவற்றைத் தான் அணிந்திருந்த பட்டு மேலாடையின் ஒரு சிறு துண்டில் கட்டிச் சுக்ரீவன் முதலாயினோர் அமர்ந்திருந்த மலைப்பிர தேசத்தில் போட்டாள். அந்த ஆடைத் துண்டையும், நகை களையும் பார்த்த ஸ்ரீராமன் அவையாவும் சீதாதேவிக்கு உரியவைகளென்று அடையாளம் கண்டு கொண்டான். தன்னிடம் வைத்திருந்த சூடாமணியைப் பிறகு ஆஞ்சனேயன் மூலம் அனுப்பி வைத்தாள். இதுவே வால்மீகி இராமாயண வரலாறு.

கேள்வி: *(431)* தசரதராமன் தர்மநெறி பிறழாதவன் என்பது கோட்பாடு. தையல் சொல் கேளேல் என்பது ஓர் அறக்கோட்பாடாகும். இராமன் கைகேயி சொற்கேட்டு அயோத்திவாசிகளுக்கு ஏமாற்றத்தையும், துன்பத்தையும் விளைவித்தான். மாரீச மானைப் பிடித்துத் தரும்படி சீதை கேட்டதற்கிணங்கித் தனக்குத் துன்பத்தையும் சீதைக்குத் கேட்டையும் விளைவித்தான். மானாக வந்தது மாரீச னுடைய சூழ்ச்சி என்று அறிந்திருந்த லட்சுமணன் சீதையின் சொற்கேட்டு அவளுக்குப் பாதுகாப்பில்லாது விட்டுவிட்டுப் போனது சரியன்று. தசரத குமாரர்கள் நடத்தை தர்மத்தினின்று பிசகியவைகள் அல்லவா?

பதில்: 'தையல் சொல் கேளேல்' என்னும் கோட்பாட்டை உலகுக்குக் கொடுத்தது ஔவை என்னும் ஒரு தையல். பெண்பாலை நம்பவேண்டாம் என்று ஔவையாகிய பெண்பால் ஒருத்தி ஏன் பகர்ந்தாள் என்பதை ஆராயவேண்டும். இக் கோட்பாட்டைப் புகட்டியபொழுது ஔவை அறிவில் தெளிந் திருந்த முதுமையை அடைந்திருந்தபொழுதாம். மங்கையருள் பலர் இளமையில் அறிவுத்துறையில் முன்னேற்றமடையாது இருக்கின்றனர். கிட்டத்தட்ட பாலர் நிலையில் அவர்களிருக் கிறார்கள். ஆதலால் அவர் சொற்கேட்பதற்கு முன்பு அவர்கள்

விரும்புவது பொருத்தமானதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இராமன் அப்படி ஆராய்ச்சி பண்ணவில்லை. மாற்றான் தாயாகிய கைகேயியிடம் அவன் முற்றிலும் அடக்கம் பழகிய மகனாக நடந்துகொண்டான். "தாயே, தீயில் குதி என்றால் குதிப்பேன். சமுத்திரத்தில் மூழ்கு என்றால் அங்ஙனம் செய்வேன். விஷத்தைக் குடி என்றால் அந்த ஆணையையும் நிறைவேற்றுவேன்" என்று அவன் இயம்பினான். தையல் சொல் கேளேல் என்ற கோட்பாட்டுக்கு இங்கு இடமில்லை. புத்ரோத்தமன் பெற்றோர்களிடம் எப்படி நடந்துகொள்ளுகிறான் என்பதற்கு இராமன் எடுத்துக்காட்டு. தாய் வேறு, மாற்றாந்தாய் வேறு என்கின்ற வேற்றுமையும் அவனிடத்தில்லை. பின்பு வனவாசம் பண்ணியபொழுது மாரீச மானைப் பிடித்துத் தரும்படி சீதை வேண்டியபொழுது இராமன் அதற்கு இசைந்தான். மானைத் துரத்திக்கொண்டு ஓடினான். இங்குத் தையல் சொல் கேளேல் என்னும் கோட்பாட்டினின்று பிசகி யவன் போன்று இராமன் தென்படுகிறான். சீதை அந்த மானின் மீது வாஞ்சை வைத்ததும் பிழை. கணவன், மனைவி யாகிய இருவரும் பிழை போனதைக் குறித்து லட்சுமணன் எச்சரிக்கை செய்தான். பின்பு இராமனைக் காப்பாற்றுவதற்காக லட்சுமணனைச் சீதை விரட்டியோட்டினாள். இராமனுக்கு ஆபத்து ஏதும் நேராது என்று அறிந்திருந்த தம்பி தையல் சொல் கேட்டு அதன்படி ஓடியதும் பிழை. ஆக சீதை, இராமன், லட்சுமணன் ஆகிய மூவரும் பஞ்சவடியில் வசித்திருந்தபொழுது மாரீச மானினால் ஏமாற்றப்பட்டுப் பிழை போயினர். இப்படிப் பிழைபோனவர்கள் உலகுக்கு எங்ஙனம் அறநெறியில் முன்மாதிரியாவார்கள் என்பது கேள்வி.

உலக மக்களில் பலபேர்க்குத் துன்பத்தை விளைவித்தவன் ராவணன். இராவணன் என்னும் சொல்லே அழச்செய்பவன் எனப்பொருள்படுகிறது. பெண்பாலர் பலரை நெறிவழுவிப்போய் அழும்படி செய்தவன். நெறிவழுவாது வாழ்ந்துவந்த மற்றவர்கள் பலரை அழச் செய்தவன் அவன். அத்தகையக் கொடியவனை அழிப்பதற்கென்றே தோன்றிவந்தவன் இராமன். வம்புச் சண்டைக்குப் போய் அவனை அழிப்பது முறையன்று. அதற்கேற்ற குற்றத்தை இராவணன் செய்தால்தான் அவன்மீது

ஆக்கிரமிப்பது இராமனுக்குப் பொருந்தும். அதற்கேற்ற சூழ்நிலையை இயற்கை தானே செய்து கொடுத்தது, தண்ட காரண்யத்தில் ரிஷிகளோடு வசித்துவந்த இராமனைப் பஞ்சவடிக்கு அனுப்பிவைத்தவர் அகஸ்தியர். ஆக அகஸ்தியரை முகாமையாகக்கொண்டு இராவணனுடைய ஜனஸ்தானத்தின் எல்லைப்புறமாகிய பஞ்சவடியில் இராமன் கொண்டுவந்து வைக்கப்படுகிறான். அங்கு சூர்ப்பனகை வந்து நடந்துகொண்ட போக்கும் சீதையைக் கொல்ல முயன்றதும் முறையன்று. அதற் கேற்ற நடவடிக்கை எடுக்கச் சகோதரர்கள் கடமைப்பட்டிருந் தனர். சூர்ப்பனகையின் மூக்கை அறுத்துவிட்டனர். அவள் ராவணனுடைய தங்கை. பழிக்குப் பழி வாங்குகிற போக்கில் ராவணன் சீதையைத் திருடிக் கொண்டுபோகத் திட்டமிட்டான். அத்திட்டத்தை மாரீசன் மூலமாக நிறைவேற்றினான்.

பெரும் கொடுமை ஒன்றை உலகினின்று அகற்றுதற்கென உலகில் வந்துள்ள வீரன் ஒருவன் குற்றமற்ற ஒரு சிறிய பாங்கில் நெறி வழுவவேண்டும். அப்பிசகைப் பெரிய குற்றவாளி பயன்படுத்தித் தன்னுடைய பொல்லாங்கில் தீவிரமாக ஈடுபடுகி றான். அதன் விளைவாக அவனுக்குரிய தண்டனை வந்து வாய்க்கிறது. இது இயற்கையின் நியதி. இந்த நியதி நிறை வேறுதல் பொருட்டே சீதை என்னும் தையல் சொல் கேட்டு இராமன் மாரீச மானின் பின் ஓடினான். பிறகு சீதையினால் விரட்டி ஓட்டப்பட்டு லட்சுமணன் காவலினின்று அப்பால் சென்றான். சீதையை அபகரித்துக்கொண்டு போவதற்கு இராவணனுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அதைப் பயன் படுத்தினான். அதன் விளைவாகத் தன்னுடைய மரணத்துக்கு அவன் தானே வழிவகுத்து வைத்தான்.

ஆக, ஒரு பெரிய தீங்கை அகற்றுதற்கு முகாமையாகக் குற்றமற்ற ஒரு சிறிய பிழை சான்றோரிடத்து நிகழுமானால் அதைக் குற்றமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சீதையும், இராமனும் லட்சுமணனும் ஏமாற்றமடைந்தது ராவணனுடைய அழிவுக்காகவேயாம்.

கேள்வி: *(432)* ஸ்ரீராமர் திரிகால ஞானபுருஷராய் இருந்தும், மாரீசன் பொய்மான் என்பதைத் தெரிந்து

சீதைக்குத் தெரிவித்தும் மீண்டும் ஏன் அதைப் பின் தொடர்ந்தார்? சீதை கணவன் சொல்லைத்தட்டி ஏன் மான் வேண்டுமென்று வற்புறுத்தினாள்? இது பதிவிரதைகளுக்கு ஒவ்வாது அல்லவா? இராமர் பாணத்தால் வதையுண்ட மாரீசன் லக்ஷ்மணா என்று கதறிக்கொண்டு உயிர் நீத்தான். ஸ்ரீராமருக்கு எவ்வித ஆபத்தும் வராது என்று அறிந்திருந்தும், லக்ஷ்மணன் சொல்லியும் கேளாமல் சீதை ஏன் லக்ஷ்மணனை வற்புறுத்தி அனுப்பி வைக்கிறாள்? பதிவிரதைகள் யாவும் அறியும் வல்லமை உள்ளவர்கள் அல்லவா? ஸ்ரீராமர் சகல வல்லமை வாய்ந்தவரும், யாவும் உணர்ந்தவரும் அல்லவா? சீதையை ராவணன் தூக்கிச் சென்றான் என்பது தெரியுமல்லவா? அவர் ஏன் பிறர் உதவியை நாடினார்?

பதில்: ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் சீதையும் தீர்க்கதரிசிகளாகச் சர்வகாலமும் நடந்து கொள்ளவில்லை. ஒழுக்கம் நிறைந்த மானுடராக அவர்கள் நடந்துகொண்டார்கள். இக்கேள்வியில் அடங்கியுள்ள நிறைஞானமும், வல்லமையும் உண்மையில் அவர்களிடத்து அமைந்திருந்தால்; அதற்கேற்ற முன்னெச்சரிக்கையாக அவர்கள் நடந்து கொண்டிருந்தால் இராமாயணமே நிகழ்ந்திராது. காட்டுக்குப் போகாமலிருப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை அவர்கள், உண்டுபண்ணியிருக்க முடியும். விரைவில் பரதனை அவர்கள் அயோத்திக்குக் கொண்டு வந்துவிட்டால் இவர்கள் காடு ஏகுதற்கு அவசியமில்லாது போய்விடும். அப்போதும் இராமாயணம் நிறைவேறாது. ஆக, எல்லா சந்தர்ப்பங்களிலும் சாதாரண மாந்தர் போன்றுதான் இவர்கள் நடந்துகொண்டார்கள். தங்கள் கடமையை நிறைவேற்றுகின்ற பாங்கில் துஷ்டனாகிய ராவண ஸம்ஹாரம் நிகழ்கின்றது. குறி கேட்பவர்களுடைய மனப்பான்மைக்கு ஒத்ததாக இருக்கிறது இங்கு எழுந்துள்ள கேள்வி. நேர்மையாக வாழும் மனிதன் நாளைக்கு நமக்கு என்ன நிகழப்போகிறது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யாது சூழ்நிலைக்கு ஏற்ற பிரகாரம் தன் கடமையைச் செய்துகொண்டே போகவேண்டும். இது இராமாயணத்தினின்று நாம் கற்கும் சிறந்ததொரு பாடமாகும்.

கேள்வி: *(433)* காகாசுரனாக வந்தவன் யார் என்பதை அறிந்துகொண்ட இராமனும் சீதையும் மாரீசனாக வந்தது யார் என்று ஏன் அறியவில்லை?

பதில்: இராமன் சர்வக்ஞன். முக்கால நிலையையும் அந்தந்த மூர்த்திகளின் நிலையையும் உள்ளபடி அறிந்துகொள்ள வல்லவன். அத்தகைய ஞானத்தைப் பயன்படுத்திக் காகாசுரனை அறிந்துகொண்டு அதற்கேற்ற அம்பு எய்தான். அந்த அஸ்திர மானது அவனைத் தேடிப்பிடித்து இராமன் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தியது. இந்தச் செயல் சீதை, இராமனுடைய சொந்த வாழ்வோடு சம்பந்தப்பட்டது. உலகிலுள்ள மற்ற உயிர்வகைகள் இந்தச் செயலோடு எவ்விதத்திலும் இணைக்கப் படவில்லை. அதே இராமனுக்கு மாரீச மான் சம்பந்தமாக மோகம் வந்து மூடிக்கொண்டது. மோகம் அல்லது மயக்கத்துக்கு அவதார மூர்த்தியும் இலக்காகவேண்டிய நெருக்கடி வந்தமைகிறது. மாரீசமானை இன்னான் என்று அறிந்துகொண்டு இருந்த இடத்திலேயே இராமன் கொன்றிருந்தால் அல்லது அவன் பிழைத்துப் போகட்டும் என்று விட்டிருந்தால் நிகழ வேண்டிய இராமாயண நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கமாட்டா. இராவண ஸம்ஹாரத்துக்கென்றே இராமன் மண்ணுலகில் மானுடனாக அவதரித்து வந்தான். அதன் பொருட்டு அவனும் சீதாதேவியும் ஓர் இக்கட்டில் அகப்பட்டுக்கொள்ளுவது அவசியமாகிறது. நெருக்கடி நேரும்பொழுதே சாதிக்கவேண்டிய காரியத்தில் மனிதன் தீவிரமாக இறங்குகிறான். அத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் இராமன் அகப்பட்டுக்கொள்ளுதல் பொருட்டு மோகனா சக்தி தெய்வீகமாக அவனை வந்து மூடிக்கொண்டது. அதன் விளைவாகக் கிஷ்கிந்தையிலும், இலங்கையிலும் ஆட்சிமுறைகள் மாறியமைந்தன. தீமைகள் ஒழித்துத் தள்ளப்பட்டன. நலன்கள் நிலைநாட்டப்பட்டன. இவை யாவும் நடந்தேறவேண்டிய அவசியத்தை முன்னிட்டு இராமன் மாரீச மான் விஷயத்தில் ஏமாற்றமடைந்தது பொருத்தமானதே.

கேள்வி: *(434)* சீதாதேவி சக்தியின் அம்சம். மாயைக்கு அதிபதியாகிய அவள் ஏன் மாயைக்கு அடிமைப்பட்டாள்?

பதில்: சீதாபிராட்டி ஆதிபராசக்தியின் அம்சமாகின்றாள்.

தசரத ராமன் பரமாத்மாவின் அம்சமாகின்றான். நிஜ நிலையில் சீதைக்கோ, இராமனுக்கோ மாயையின் ஆதிக்கம் கிடையாது. மாயை பண்ணுகின்ற மயக்கங்களெல்லாம் மாயைக்கு அடிமையாய் இருக்கின்ற ஜீவாத்மாக்களுக்கே உரியனவாகின்றன. மாயையை ஆளும் நிலைமையில் இருந்த சீதாபிராட்டி ஏன் மயங்கினாள் என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. சீதாபிராட்டி மட்டுமல்ல ஸ்ரீ ராமனும் மாயைக்கு வசப்பட்டவனாயிருந்து சீதையை இழந்தபொழுது கதறிப் பதறி அழுது கொண்டிருந் தான். சீதாபிராட்டியாரோ இராவணனுடைய சிறையில் அகப்பட்டுக்கொண்டவளைப் போல் இருந்து கதறிப் பதறி அழுது வந்தாள். இவர்களிருவரும் இங்ஙனம் ஏன் மாயையின் ஆதிக்கத்துக்கு ஆளானார்கள் என்பது கேள்வி.

உலக வாழ்க்கையை உள்ளபடி படம்பிடித்துக் காட்டச் சீதையும் இராமனும் சாதாரண ஜீவர்கள் போன்று உலகில் அவதரித்து வந்தார்கள். உலக வாழ்க்கையை உள்ளபடி நடத்திக் காட்ட அவர்கள் இருவரும் கடமைப்பட்டிருந்தனர். கண் படைத்துள்ள ஒருவன் நாடக மேடையின் மீது குருடனாக நடிக்க முன்வரும்பொழுது குருடனாகவே நடிப்பதுதான் முறை. அதேபாங்கில் உலகத்தவர்களுக்கு உலக வாழ்க்கையில் உள்ள நலம் கேடுகளை உள்ளபடி விளக்கிக்காட்ட வந்த சீதையும் இராமனும் சாதாரணமான ஜீவாத்மாக்கள் போன்றே நடந்து கொண்டனர். அதற்கிடையில் கேட்டினின்று தங்களை எப்படி விடுவித்துக்கொள்ள வேண்டுமென்னும் கோட்பாட்டையும் அவர்கள் தங்கள் வாழ்க்கையின் மூலமாக விளக்கிக் காட்டி னார்கள். இராவணனால் சிறைதூக்கிச் செல்லப்பட்ட சீதை தன்னுடைய கற்பின் சிறப்பினால் அந்த அரக்கனைச் சாம்பலாக்கி யிருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. அவளு டைய தெய்வீகத் திறமையை அவள் கையாளாது அடக்கம் படைத்தவளாக நடந்துகொண்டதில் அவளுடைய மகிமை வெளியாகிறது. இராவணன் மீது உண்மையாக அவள் சீற்றம் கொண்டிருந்தால் அவனை அழிப்பதற்கு அந்தச் சீற்றம் ஒன்றே போதுமானது. அத்தகைய செயலிலும் அவள் ஈடுபட வில்லை. அரக்கனிடத்து இரக்கம் காட்டுகிற முறையில் லோக மாதாவாகிய அவள் நடந்துகொண்டாள். இனி, இராமன்

படைத்திருந்த அஸ்திரசஸ்திரங்களில் ஏதேனும் ஒன்றைப் பிரயோகித்திருந்தால் அது இராவணனைக் கட்டிப்பிடித்துத் தூக்கிக்கொண்டு வந்திருக்கும். அந்தப்பாங்கில் தன்னுடைய ஆயுதத்தை இராமன் கையாளாதிருந்தது அவன் படைத்திருந்த அடக்கத்திற்கு அறிகுறியாயிருந்தது. தெய்வீக சம்பத்தோடு கூடிய அவதார மூர்த்திகள் மானுடராக நடிக்கின்றபொழுது வரம்பிற்குட்பட்டே நடந்து கொள்ளுகின்றனர். உலகத்தவர்களுக்குப் பாடம் புகட்ட வந்த இவ்விரு மூர்த்திகளும் உலகத்தவர்கள் போன்றே நடந்து கொண்டதில்தான் சீரும் சிறப்பும் அடங்கியிருக்கின்றன.

கேள்வி: *(435)* ஆரண்ய காண்டத்தில் பரதன் இராமனைக் காணவரும் சமயம் லக்ஷ்மணன், "பரதன் படையெடுத்து வருகிறான். அனுமதியளியுங்கள். சின்னாபின்னப்படுத்தி விடுகிறேன்" எனப் பகர்ந்தான். ஆனால் அதே ராம காரியத்திற்காக, சீதா "ராமனது அலறல்" என்ற நினைவில் லக்ஷ்மணனை உதவிக்குப் போகும்படிக் கூறுகிறாள். அப்பொழுது அவன் மறுத்தது ஏன்?

பதில்: இலக்ஷ்மணன் எப்பொழுதும் இராமனுக்காக என்றே வாழ்ந்திருந்தான். இராமனுடைய நலத்தைத் தவிர வாழ்க்கையில் அவனுக்கு வேறு லக்ஷியம் ஒன்றுமில்லை. தமையன் மீது வைத்த பற்றுதலால் பரதனுடைய வருகையை அவன் முறைதவறிப் பொருள்படுத்தினான். அப்படித் தவறுதலாக நினைத்ததற்கு இடையில் ராமபக்தியே அவனிடத்து மிளிர்கிறது.

இராமன் அழகிய மானைப் பிடிக்கப்போன பொழுது சீதைக்குக் காவல் இருக்கவேண்டும் என்று லக்ஷ்மணனிடம் அவர் உத்தரவு இட்டார். தமையன் சொற்படி நடக்க அவன் முற்றிலும் கடமைப்பட்டிருந்தான். இராமனுடைய குரலோசை கேட்டபொழுதும் அவருக்கு ஆபத்து வந்துவிட்டது என்று லக்ஷ்மணன் சந்தேகப்படவில்லை. ஆனால் சீதைக்குச் சந்தேகம் வந்துவிட்டது. இராமனுக்கு உதவிபுரியப் போகவேண்டுமென்று சீதை உத்தரவு பிறப்பிக்கிறாள். அப்பொழுது இராமனுடைய சொற்படி நடப்பதா, அல்லது சீதையினுடைய சொற்படி நடப்பதா என்னும் நெருக்கடி அவனுக்கு உண்டாயிற்று.

இராமனுடைய சொற்படி நடக்க அவன் ஆயத்தமாயிருந்தான். சீதைக்கு ஆறுதலும் சொன்னான். ஆனால் அவள் கேட்கவில்லை. அவளுடைய கடுஞ்சொல்லுக்கு இலக்காகி மனவாட்டத்துடன் அவன் இராமரைத் தேடிச் சென்றான். இவ்வாறு தேடிவந்ததைக் குறித்து அவர் சீற்றம் கொண்டார். இருவர் மன்வருத்தத்தையும் லக்ஷ்மணன் அமைதியாக ஏற்றுக் கொண்டான். அத்தகைய தர்மசங்கடத்தில் அவனுடைய பண்பு உச்சநிலைக்குப் போகிறது.

கேள்வி: *(436)* ஸ்ரீ ராமபிரான் இலங்கைக்குச் செல்ல வானரர் உதவியை நாடிச் சீதையை மீட்டார். அவர் அயோத்திக்கு விஷயம் சொல்லி அரசாங்க உதவியை நாடித் தேவியை லகுவில் மீட்டிருக்கலாமே? சீதாதேவி காணாமல்போன சங்கதி அயோத்திக்கும் மிதிலைக்கும் தெரிந்திருக்காதா? அப்படித் தெரிந்திருந்தால் அவர்கள் ஏன் இந்த விஷயத்தில் கலந்து கொள்ளவில்லை? விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: இந்தக் காலத்தில் வாழ்ந்துவரும் ராஜா ஒருவர் வெளியூருக்குப் போகும்பொழுது சொந்த ஊருடன் பல்வேறு விதங்களில் தொடர்பு வைத்துக்கொள்கிறார். இராமபிரான் அந்தப்பாங்கில் வன்வாசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்ரீராமன் மீது வனவாசம் விதிக்கப்பட்டபொழுது அது ஒரு விரதத்துக்கு ஒப்பானதாயிற்று. பதினான்கு வருஷகாலத்துக்கு அவன் உற்றார் உறவினரையும் சொந்த நாட்டையும் அறவே மறந்துவிடவேண்டும். அதை வேறொரு பாங்கில் சொல்லுமிடத்து அவன் தியாகமூர்த்தி ஆய்விடவேண்டும். தியாகம் பண்ணிய ஒருவன் தான் தியாகம் பண்ணியதைத் திரும்பத் திரும்ப நினைத்துக்கொண்டிருத்தல் ஆகாது. தியாகத்துக்கு விளக்கத்தை ஸ்ரீராமனிடம் நாம் காண்கின்றோம். ஆதலால் அயோத்தியுடனும் மிதிலையுடனும் அவன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. சித்திரகூடத்தில் அவன் வசித்திருந்தபொழுது அவனைக் காணப் பரதன் முதலாயினோர் புறப்பட்டு வந்தனர். திரும்பவும் தன்னை அவர்கள் தேடலாகாது என்று உத்தரவு கொடுத்துவிட்டுத் தண்டகாரண்யத்துக்குள்

அவன் மறைந்துவிட்டான். ஆதலால் அயோத்தியினின்று உதவி பெறுகின்ற பேச்சு எழ ஈண்டு இடமில்லை.

ஸ்ரீ ராமன் தன்னுடைய வாழ்க்கையின் மூலம் மற்றொரு பெரிய பாடத்தை உலகமக்களுக்குப் புகட்டுகின்றான். ஒரு மனிதன் எந்தச் சூழ்நிலையில் வசித்திருக்கின்றானோ அந்தச் சூழ்நிலையில் அகப்படுகின்ற வசதிகளையும் உதவிகளையும் கொண்டே தன் வாழ்க்கையை நன்கு நடத்தவேண்டும். யுத்தம் போன்ற ஒரு நெருக்கடி வந்து அமைகின்ற இடத்தும் தான் வாழ்ந்துவரும் சூழ்நிலையில் அகப்படுகின்ற உதவியைக் கொண்டே ஒருவன் யுத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி விடுவானாகில் அவன் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவ னாகின்றான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது பழ மொழி. இத்தகைய மனப்பான்மை ஒவ்வொரு மனிதனுக்கும் வந்தமையவேண்டும். வானரசேனையின் உதவியைக் கொண்டே ஸ்ரீராமன் இலங்கைவேந்தனை வீழ்த்தியதினின்று நமக்கு மற்றொரு பாடம் கிடைக்கின்றது. இலங்கையிலிருந்த சேனை; யுத்த தளவாடங்கள், யுத்தப் பயிற்சி, ஆள் திறன் முதலியன அயோத்தியில் இருந்த படையைவிடப் பன்மடங்கு வலிவு வாய்ந்தது என்று சொல்லலாம். வானரசேனையோ அயோத்தி யின் படையைவிட மட்டமானது என்று சொல்லலாம். இராமன் அறம் வளர்த்த நம்பி. அறநெறி பிறழாதவன் அவன். தர்மத்தை நிலைநாட்டுதற்கென்றே அவன் வாழ்ந்திருந்தான். தர்மத்துக் கென்றே அவன் வாழ்ந்திருந்ததனால் தர்மம் அவனுக்கு யாண்டும் துணைபுரிந்து வந்தது. தர்மத்தினுடைய சகாயம் ஏனைய சகாயங்களை எல்லாம்விடச் சிறந்தது. தர்மம் இராமன் பக்கம் இருந்ததினால் குரங்குகள் போன்ற சாமான்யமானவர் களின் உதவி அவனுக்குப் போதுமானது ஆயிற்று. ஆனால் யார் பக்கம் தர்மத்தின் துணை இல்லையோ அவர்களுக்கு பக்கபலம் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அது வியர்த்தமாய்ப் போய்விடும். இலங்கை வேந்தனே அதற்குச் சான்று ஆகின்றான்.

எனவே வனவாசம் செய்த ஸ்ரீ ராமன் தன்னைப் பதினான்கு வருஷ காலத்துக்கு உற்றார் உறவினர் மறந்துவிட வேண்டுமென்கிற விஷயத்தையும், தான் அவர்களை மறந்து விடவேண்டுமென்கிற விரதத்தையும் நிறைவேற்றினான்.

தர்மத்தைச் சார்ந்திருக்கிறவர்களுக்கு எந்த இடத்தில் எந்தத் துணை அகப்படுகின்றதோ அது அவர்களுக்குப் பெருந்துணை ஆகிறது என்பதையும் நிரூபித்தான். துணைகளிலெல்லாம் தர்மத்துக்கு நிகரான துணை ஒன்றுமில்லை என்பதையும் தன் வாழ்க்கையில் நிரூபித்தான்.

கேள்வி: *(437)* ஒருவரின் எச்சிலை மற்றவர் சாப்பிடலாகாது என்று சொல்லப்படுகிறது. ஆனால் சபரி எச்சில் செய்து கொடுத்த பழங்களை ஸ்ரீ ராமன் எப்படி அங்கீகரித்தான்?

பதில்: ஒருவர் எச்சில் பட்டதை மற்றொருவர் சாப்பிட லாகாது என்னும் கோட்பாடு ஆரோக்கிய முறையை அடிப் படையாகக் கொண்டது. வாயிலிருந்து எச்சில் வெளியில் வந்த சிறிது நேரத்திற்குள் விஷமாக மாறுகிறது. ஆதலால் அந்த எச்சிலை உண்டுபண்ணியவர்க்கே அது உதவாது. மற்ற வர்களுக்கு அது இன்னும் அதிகக் கேட்டை உண்டுபண்ணு கிறது. அக்காரணத்தை முன்னிட்டே ஒருவர் எச்சில்பட்டதை இன்னொருவர் உண்ணலாகாது என்னும் நியமம் வந்துள்ளது. ஆனால் இந்த நியதிக்கு விலக்கு உண்டு. ஒரு குழந்தையின் எச்சில் பட்டதை அதன் தாய் தந்தையர் அருந்துதலில் தோஷமில்லை. அதற்குக் காரணம் குழந்தை ஒன்றின் எச்சி லில் விஷமில்லை. வயது வரவர விஷத்தை உண்டுபண்ணும் பாங்கும் அதற்கு வருகிறது.

இனி ஸ்ரீராமன் சபரி எச்சில்படுத்திக் கொடுத்த பழங்களை மகிழ்வுடன் அருந்தினான். எச்சில்படுத்திய சபரி பேரன்பு வடிவினளாய் இருந்தாள். பேரன்பு விஷத்தை அமிர்தம் ஆக்கவல்லது. பிரஹலாதன் தன் தந்தை கொடுத்த விஷத்தை மஹாவிஷ்ணுவின் பிரசாதமாகக் கருதிக் குடித்தான். அவன் படைத்திருந்த பக்தியானது விஷத்தை அமிர்தமாக மாற்றியது. பேரன்புக்கு அத்தகைய பேராற்றல் உண்டு. அதனோடு சீர்தூக்குமிடத்துச் சபரியும் ஸ்ரீராமனும் பூண்டிருந்த பரஸ்பர அன்பு சாமானியமானது. அந்தச் சாமானியமான அன்பே எச்சிலை அமிர்தமாக மாற்றவல்லதாயிருந்தது. இதுவே அச்செயலின் அடிப்படைக் கோட்பாடாம்.

கேள்வி: (438) அனுமனை ஒரு தூதுவன் என்று அழைக்கலாமா?

பதில்: காணாமல் போன சீதாபிராட்டியாரைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி அனுமன் இராமனால் அனுப்பப்பட்டான். அத்தகைய நோக்கத்தோடு செல்லுகிற ஒருவனைத் தூதுவன் என்று அழைக்கலாகாது. காணாமல் போனவளைத் தேடிக் கண்டுபிடிக்கச் சென்றவன் என்று சொல்லுவதுதான் பொருந்தும். அப்பொறுப்பை அவன் இனிது நிறைவேற்றினான். பிறகு அவன் தனக்குத்தானே ஒரு தூதுவனுடைய கடமையை ஏற்றுக்கொண்டு இராவணனுடைய முன்னிலையை எட்டுவதற்கான உபாயத்தைக் கையாண்டான். தூதுவன் ஒருவன் செய்ய வேண்டிய செயலையும் அவன் முறையாக நிறைவேற்றினான். இராவணனுடைய நலத்துக்காக என்று அவன் சில உண்மைகளை எடுத்து ஓதினான்; அறிவு புகட்டினான். ஆனால் அவன் போதித்தது அரக்க மன்னன் மனதில் ஏறவில்லை.

கேள்வி: (439) இராமன் மறைந்திருந்து வாலிமீது அம்புயெய்தது தர்மத்தைவிட்டு விலகிய தன்மையன்றோ? அவரை நாம் தெய்வம் எனப் பாராட்டலாமா?

பதில்: இராமனுடைய செயல்கள் அனைத்தும் தர்மத்துக்கு விளக்கங்கள் ஆகின்றன. எது தர்மம், எது அதர்மம் என்பனவற்றைப் பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளமாட்டார்கள். இராமன் போன்ற அவதாரமூர்த்திகளின் மூலமாகவே தர்மம் விளக்கப்பெறுகிறது. இராமன் தர்மத்தின் சொரூபம். அவன் எண்ணுவதும், இயம்புவதும், இயற்றுவதும் தர்மமாகவே இருக்கும்.

வாலி ஒரு வரம் வாங்கியிருந்தான். அந்த வரம் மிக விசித்திரமானது. எதிரியாக யார் வாலியை எதிர்த்து வந்து தாக்கினாலும் அப்படித் தாக்கியவனுடைய பலத்தில் செம்பாதி வாலிக்குச் சொந்தமாகிறது. எதிரியாக வருபவன் நர கணத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம், ராக்ஷஸ கணத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம், தேவ கணத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம்-எந்தக் கணத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, வாலியை எதிர்த்துப் போர்புரிந்து அவன் வெற்றியடைய

முடியாது. தோல்வியே அவனுடைய கதியாகும்.

பெறுதற்கரிய இந்த வரத்தைப் பெற்றதன் விளைவாக வாலிக்கு வரம்பு கடந்த கர்வம் வந்துவிட்டது. யாரையும் அவன் மதிப்பதில்லை. பின்பு தன் தம்பி சுக்ரீவனுக்கே பெரும் தீங்கு ஒன்றை விளைவித்தான். தன் தம்பிக்குத் தன்னிடம் அன்பு இல்லையென்று தவறுதலாக யூகித்தான். தம்பியை அடித்துப் புடைத்துத் துரத்தியோட்டிவிட்டுத் தம்பி யின் மனைவியைத் தனக்கு மனைவியாக வைத்துக்கொண்டான். தம்பி சுக்ரீவனோ ருஷ்யமுக மலையில் மறைந்திருந்து காலம் கழித்துவந்தான். இடையிடையே வாலியினிடமிருந்து அவனுக்கு உபத்திரவம் வந்து கொண்டேயிருந்தது. அப்படிக் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்த சுக்ரீவன் தற்செயலாய் இராமனைச் சந்தித்தான். தனக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையெல்லாம் இராமனிடம் முறையிட்டான். தன் குறையை நீக்கிவைக்க வேண்டுமென்றும் பிரார்த்தனை பண்ணினான். அவனுடைய பிரார்த்தனைக்கு இராமன் செவிசாய்த்தான். வாலியைக் கொல்லுவதாகவும் மனைவியை மீட்டெடுத்துத் தருவதாகவும் அவன் வாக்குக் கொடுத்தான்.

இராமன் வாலியைச் சந்தித்து அவன் வழக்கைக் கேட்டிருந்தால் இராமன் ஓர் இக்கட்டில் அகப்பட்டுக் கொள் வான். மேலும் மறைந்திருந்து வாலியின் மீது அம்பு தொடுப் பதும் குற்றமாகும். ஆதலால்தான் அவனைச் சந்திக்காமலேயே, அவனோடு தொடர்பு கொள்ளாமலேயே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. வாலியைச் சந்தித்தபின் மறைந்திருந்து அம்பு போடலாகாது. நேருக்கு நேர் அம்பு போட்டால் தன் பலத்தில் பாதி வாலிக்குப் போய்ச்சேரும். அப்பொழுது இராமன் தோல்வியடைவான். அப்படித் தோல்வி அடைவது அவனுடைய நோக்கமன்று. வாலி பெற்றிருந்த வரத்தைப் பாழ்படுத்துவதே இராமனுடைய நோக்கம். அதற்கேற்றபடி அவன் நடந்துகொண்டான்.

இனி, சமாதானம் செய்துவைக்க இராமன் சென்றால் சமாதானத்துக்கு வாலி ஒத்துக்கொள்ளாவிட்டால் இராமன் அவனுக்கு எதிரியாக வேண்டும். எதிரியாகப் போர்புரிந்தால் தன் பலத்தில் பாதி வாலிக்குப் போய்விடும். அதனால்

தனக்குத் தோல்வியுண்டாகும். வாலி சமாதானத்துக்கு உடன் படமாட்டான் என்பதை இராமன் யூகித்து அறிந்துகொண்டான். மறைந்திருந்து ஒரே ஒரு அம்பு எய்தான். அது வாலியின் மார்பில் பாய்ந்தது. அது யாருடைய அம்பு என்று வாலி கையில் பிடித்துப் பார்த்தான். அது இராமபாணம் என்பதைக் கண்டுகொண்டான். இராமன் தர்மம் வழுவியவன் என்றும், கோழை என்றும் வாலி உரக்கக் கத்தினான். அப்பொழுது இராமன் எதிரில்போய் நின்றான். அப்படி நின்றது எதிரியாக அல்ல. வாலிக்கு நல்லறிவு புகட்டும் நண்பனாக முன்னே வந்து நின்றான். இருவருக்குமிடையில் விவாதம் விரிந்து கொண்டே போனது. வாலி விடுத்த தடைகளுக்கு எல்லாம் பொருத்தமான விடைகளை இராமன் வழங்கினான். கடைசியில் வாலி தான் செய்தது குற்றம் என்பதை அறிந்து கொண்டான். தனக்கு நல்லறிவு ஊட்டியதை முன்னிட்டு இராமனுக்கு நன்றி செலுத்தினான். இப்பொழுது இராமன் சகோதரர்களாகிய வாலிக்கும் சுக்ரீவனுக்கும் இடையில் நல்லிணக்கத்தை நிலைநாட்டினான். வாலிக்கு ஞானோதயம் வந்தது. தன்னை ஆட்கொள்ள வந்த அண்ணல் என்று இராமனைப் போற்றினான். மறச்செயல் போன்று தென்பட்ட அறச் செயலையே இராமன் செய்தான் என்பதை அறிந்துகொண்டான். அதாவது கேடுபோன்று தென்பட்ட நலத்தையே தனக்கு வழங்கியதை வாலிபோற்றிப் புகழ்ந்தான். இராமனோ வாலிக்கு முக்தி கொடுத்தான். தான் முக்தியடைவதை வாலியும் உணர்ந்தான். இப்படி இராம வாலி தொடர்பு மங்களகரமாக முற்றுப்பெற்றது. ஆதலால் இராமன்மீது குற்றம் சாட்டுவது பொருந்தாது. வாதியாயிருந்த வாலியே இராமபக்தனாக மாறினான். இராமன் வாலிக்கு முக்தி கொடுத்ததனால் அவன் கடவுளின் அவதாரம் என நாம் அறிய வருகிறோம். சண்டையில் சம்பந்தபட்ட இருவரும் இப்படிப் பேரிணக்கம் கொண்டது அவர்களுக்கிடையில் சண்டை நீங்கிற்று என்பதற்குப் பிரமாணமாயிற்று.

கேள்வி: *(440)* தெய்வீகம் வாய்ந்த இராமன் அருள் நிலையில் இருந்துகொண்டு வாலியைத் திருத்தியமைத்து

இருக்கலாமே; அப்படிச் செய்யாமல் அவன் ஏன் தண்டிக்கும் செயலில் இறங்கினான்?

பதில்: இக்கேள்வியை வேறொரு பாங்கில் கிளப்புமிடத்து உலகத்தைக் கடவுள் ஏன் நலம், கேடு இரண்டும் நிறைந்ததாகச் சிருஷ்டித்தார்? நலமே நிறைந்ததாக அவர் அதைச் சிருஷ்டித்திருந்தால் எல்லாம் மங்களமாக இருந்திருக்குமே. இப்படி நாம் மனோ இராஜ்ஜியம் பண்ணலாம். முற்றிலும் நலமே நிறைந்துள்ள உலகம் வாழ்க்கைக்குத் தகுதியற்றதாகும். இக்கோட்பாட்டை ஓர் உபமானத்தின் மூலம் மேலும் ஆராய்வோம். பசியைக் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்? பசியின் கொடுமையால் உயிர்களனைத்தும் கஷ்டப்படும்படி கடவுள் ஏன் செய்தார்? பசியை அவர் படைத்தது ஒரு குறைபாடு போன்று தென்படுகிறது. ஆனால் உண்மை என்ன? பசியை அறியாத ஒருவன் உணவைச் சுவைத்து உண்ண முடியாது. உணவில் அவன் இனிமை காணமாட்டான். ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு பசிப்பிணியால் வருந்துகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு உணவைச் சுவைத்து உண்ணும் இன்பத்தைப் பெறுகிறான். ஆக, இவ்வுலகில் பசிப்பிணியே இல்லாது போய்விடுமாகில் உண்ணும் இன்பம் இல்லாது போய்விடும்.

உலகில் கேடு இல்லாவிட்டால் நலன் பொருளற்றதாகும். கேட்டோடு சீர்தூக்குவதாலேயே நலனுக்குச் சிறப்புண்டாகிறது.

உலகில் கெட்டவர்கள் இருப்பதாலேயே நல்லவர்களின் மேன்மை சிறப்புற்று மிளிர்கிறது. நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்குமிடையில் உண்டாகிற பிணக்கே உலக வாழ்வு என்னும் பெயர் பெறுகிறது. பிணக்கு இல்லாதவிடத்து உலக வாழ்வும் பொருளற்றதாகிறது. கெட்டவனிடமிருக்கும் கேட்டுக்குத் தண்டனை விதிப்பதன் வாயிலாகக் கெட்டவனுடைய சிந்தனாசக்தி தூண்டப்படுகிறது. "எனக்கு ஏன் இந்தத் தண்டனை வந்தது" என்று கெட்டவன் எண்ணிப் பார்க்கிறபொழுது அவன் தன்னைத் திருத்தி அமைக்கத் தீர்மானிக்கிறான். கெட்டவனைத் தண்டனையின் வாயிலாக நல்லெண்ணத்துக்குத் தூண்டுவது அவனுக்குச் செய்கிற பெரிய உபகாரமாகும். முதலில் கேடு செய்து அதினின்று விளையும் துன்பத்தை மனிதன் அனுபவிக்க

வேண்டும். அத்துன்பத்திற்குப் பிறகு அவன் நிவிருத்தி தேட வேண்டும். நிவிருத்தி தேடுவதன் வாயிலாகவே உலக வாழ்வின் அனுபவம் ஒருவனுக்கு நன்கு உண்டாகிறது. கேடே செய்யாது அதன் விளைவை அனுபவியாது உலகிலிருப்பவன் செயலற்றுச் சும்மாகிடக்கும் கல்லுக்குச் சமமாகிறான். அனுபவங்கள் பல அடையப்பட்டவனல்லன்.

கேடு செய்வதன் மூலம் வாலி தன் ஆண்மையை விளக்கினான். கேடு செய்வதன் மூலம் பிற உயிர்களுக்கு அவன் துன்பத்தை விளைவித்தான். அவனுடைய செயலுக்கேற்ற தண்டனை இராமபாணத்தின் மூலம் வந்தது. இராமன் தன்னைத் தண்டித்தது தப்பு என்று முதலில் உணர்ந்தான். பிறகு ஆராய்ந்து பார்த்தபொழுது தான் செய்தது தப்பு என்றும் அதற்கேற்ற தண்டனை வந்தது என்றும் உணர்ந்தான். அவன் தன்னைத் திருத்தியமைத்தான்.

வாலியின் பாங்கு வாலியோடு நின்றுவிடவில்லை. வாலி போன்ற மக்கள் இன்றைக்கும் உலகிலிருக்கின்றனர். அத்தகைய வர்கள் உலகுக்கு நலம் செய்வதுபோன்று எண்ணிக்கொண்டு கேட்டை வளர்க்கின்றனர். இயற்கைத் தாய் அதற்குத் தண்டனை விதிக்கின்றாள். தண்டனையின் வாயிலாக அன்னவர் கள் திருந்தியமைகின்றனர். இயற்கைத் தாய் விதிக்கிற தண்டனை இராமாயணத்தில் இராமபாணம் என்னும் பெயர் பெறுகிறது. இராமபாணத்தின் செயல் இயற்கையில் எப்பொழுதுமே நிகழ்ந்து வருகிறது.

பூமியில் வெட்டியெடுத்த பொன்கட்டியைத் தீயிலிட்டு உருக்கித் தூய தங்கமாக்குகிறோம். அங்ஙனம் கேட்டுக்கு ஏற்ற தண்டனையைக் கொடுத்து இயற்கைத் தாய் உயிர் வகைகளைப் பண்படுத்தி வருகிறாள். இயற்கைத் தாயின் செயலும் இராமன் செயலும் ஒன்றேயாம்.

கேள்வி: *(441)* வாலி மரணமடைந்ததைக் கண்டு துக்கப்படும் தாரைக்கு ஸ்ரீராமபிரான் "மூன்று உலகங்களிலு முள்ள எவரும் விதியின் போக்கை மீற முடியாது. ஆற்றலும் வசதிகளும் இருந்தாலும் விதியின் செயலுக்கு மாறாக நாம் எதையும் செய்ய முடியாது. இனிமேல் நடக்க

வேண்டியதைக் கவனி" என்று தேற்றுகிறார். அப்படியானால் உலகத்தில் மக்களுக்கு நிகழும் இன்பம் துன்பம், நலம் கேடு, சிறுமை பெருமை ஆகிய இவையெல்லாம் அவரவர் செயலுக்கேற்றபடி வந்து அமைகின்றதா அல்லது விதியின் செயலால் வந்து அமைகின்றதா?

பதில்: வினைப்பயன் வேறு, விதி வேறு என்று பலர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். வினைப்பயனுக்கு மனிதன் பொறுப்பாளன் என்றும் விதிக்கு வேறு யாரோ ஏவலாளன் என்றும் அன்னவர் நம்புகின்றனர். அத்தகைய நம்பிக்கை ஆதாரமற்றது. அது தத்துவத்துக்குப் பொருந்தாது. வினைக் கேற்றது வினைப்பயன். வினை ஒன்றிருக்க வினைப்பயன் வேறு ஒன்று ஆகாது. முறைபிறழாதிருக்கின்ற வினைப் பயனுக்கே விதி என்று பெயர். வினைப்பயனை இயற்கை இங்ஙனம் விதித்து வைத்திருக்கிறது என்பதுதான் கோட்பாடு. அவரவர் புரிகின்ற வினைக்கேற்ற வினைப்பயன் அண்மையில் அல்லது நாளடைவில் வந்து சேருகிறது. விளைந்த வினைப் பயனைக் குறித்து வருந்திக்கொண்டிருப்பதில் பயனில்லை. தீவினையின் விளைவாக வந்துள்ள கேட்டைக் குறித்து ஓயாது வருந்திக்கொண்டிருக்கலாகாது. மனதை விரைவில் சமாதானப் படுத்திக்கொண்டு மேலும் ஆகவேண்டிய நல்வினை களில் ஈடுபடுவதே அறிவுடையோர்களின் செயலாகும். அங்ஙனம் மேலும் ஆகவேண்டிய நல்வினையில் மனதைச் செலுத்தும்படி தாரைக்கு ஸ்ரீராமர் அறிவுறுத்துகிறார்.

கேள்வி: *(442)* பதினான்கு ஆண்டுகள் வனவாசம் பண்ணவேண்டும் என்பது தசரதராமனுக்கு ஏற்பட்டுள்ள கட்டளையாகும். இந்தப் பதினான்கு ஆண்டுகளுள் கடைசி ஆண்டில் சீதை ராவணனால் கவர்ந்தெடுக்கப்படுகிறாள். புதிய வாழ்வு வாழ்வதற்குப் புதிய இடம் ஒன்றுக்குப் போனால் இதுபோன்ற விபத்து துவக்கத்திலேயே நேர்வது தானே முறை. ஓரிடத்துக்குப் புதியதாக வருபவனைக் கீழோர் ஏமாற்றப் பார்க்கின்றனர். ஓரிடத்தில் முற்றிலும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டவனுக்கு மற்றவர்கள் இடுக்கண் செய்ய முன்வருவதில்லை. இப்போக்குக்கு

மாறாக வனவாசத்தில் கடைசிப் பகுதியில் இராவணன் சீதையை அபகரித்துக் கொண்டு போனது அசம்பாவித மாகத் தோன்றுகிறது. இதற்குச் சமாதானம் காண்பது எங்ஙனம்?

பதில்: புதியதாக ஓரிடத்தில் குடியேற வருகிறவர்களைச் சிற்றியல்பு படைத்தவர்கள் ஏமாற்றப்பார்ப்பது உலகின் போக்கு. ஆனால் இராமாயண அமைப்பு அக்கோட்பாட்டில் அடங்காது. இராமாவதாரத்தில் அரியபெரிய செயல்கள் பல ஆரம்பத்தில் இருந்து கடைசி வரையில் இருக்கின்றன. இராமனுடைய வனவாசத்தில் பெரும்பகுதி ரிஷிகளுடைய கூட்டுறவுக்காக அமைகிறது. அக்கூட்டுறவோ மிக அமைதியாக நிகழ்கிறது. பனிக்காலத்தில் பனிபெய்வது காட்சிக்கு எட்டாத செயலாகும். அதில் ஆடம்பரம் ஒன்றுமில்லை. கட்புலனாகாது அமைதியாக நிகழ்கிற பனியோ மரம் செடி கொடிகளுக்கு அலாதியான வலிவைத் தருகிறது. இராமனுடைய வனவாசத்தில் முற்பகுதியாக அமைந்த ரிஷிகளுடைய கூட்டுறவு பனியின் செயலுக்கு ஒப்பானது. இராமனுடைய தொடர்பால் ரிஷிகள் நிறை ஞானிகள் ஆகிறார்கள். ரிஷிகளுடைய அனுக்ரஹத்தால் இராமனுடைய ஆற்றல் திண்ணியதாகிறது. இராமனுடைய ஜீவிதத்தில் இராவண வதை நடுநாயகம் பெறுகிறது. அதற்காக வென்று இராமன் ஆயத்தமாகிறான். தான் ஆயத்தமாவது இராமனுக்கே தெரியாது. தெய்வாதீனமாக அத்தகுதி அவனிடத்து வளர்ந்துகொண்டு வருகிறது.

ரிஷிகளுள் அகஸ்திய முனிவர் அரியபெரிய அஸ்திரசஸ் திரங்களை உடைத்திருந்தார். அவர் சரீரத்தை உகுப்பதற்கு முன்பு அந்த அற்புதமான ஆயுதங்களைத் தக்க பாத்திரம் ஒருவரிடம் ஒப்படைக்கக் கடமைப்பட்டிருந்தார். நல்லது ஒன்றை நல்லானைத் தேடி அவனிடம் ஒப்படைப்பது வாழ்க் கைத் தத்துவம். அகஸ்தியருக்கு இராமனுடைய சந்திப்பு அமைந்தது பெரிய வாய்ப்பு ஆகும். தாம் பூலோகத்தில் தோன்றி அரியபெரிய தவங்கள் புரிந்ததும் அரியபெரிய அஸ்திர சஸ்திரங்களைப் பெற்றதும் இராமனுடைய சந்திப்பில் நிறைநிலை எய்துகின்றன. அந்த அஸ்திர சஸ்திரங்களை ஏற்பதன் வாயிலாக இராமன் ராவண சம்ஹாரத்துக்கு முற்றிலும்

தகுதியுடையவனாகிறான். வனவாசத்தின் ஆரம்பத்திலேயே இராமராவணப் பிணக்கு நிகழ்ந்திருந்தால் இராமன் ராவணனைச் சமாளிப்பதற்கான வல்லமையைப் பெற்றிருக்கமாட்டான்.

இனி, சீதாபிராட்டியாரின் வாழ்வில் ஒரு கோட்பாடு அமைந்திருக்கிறது. வனவாசத்தின் துவக்கத்தில் அவளுக்கு வயது பதினெட்டு. இராவணன் அவளை அபகரித்துக்கொண்டு போனபோது அவளுக்கு வயது முப்பதொன்று. மேனியழகிலும் மனபரிபாகத்திலும் தவப்பொலிவிலும் சீதாபிராட்டி உச்சநிலை எய்தியிருந்தது வனவாசத்தின் கடைசிப் பகுதியில். இராவணனுடைய காமநோயைக் கிளப்பிவிடுவதற்கான தகுதிகள் அனைத்தும் வனவாசத்தின் பிற்பகுதியில் சீதைக்கு வாய்த்திருந்தன. தனக்குக் கஷ்டதசை வந்து வாய்த்த காலை அதைச் சமாளிப்பதற்கான மனத்திட்பம் சீதைக்கு வாய்த்ததும் வனவாசத்தின் பிற்பகுதியில். ஆக வரப்போகிற நெருக்கடியைச் சமாளிப்பதற்கான திட்பத்தைச் சீதை பெற்றான பிறகே அவளுக்கு ஆபத்து வந்து வாய்க்கிறது. இயற்கையின் பேரமைப்பில் அவளுக்கு அத்திட்பம் வாய்ப்பது முற்றிலும் பொருத்தமானது.

ரிஷிகள் ஆஸ்ரமத்திலேயே அமைதியாக வாழ்ந்து வந்த இராமனுக்குப் பஞ்சவடியில் சென்று ஆஸ்ரமம் ஒன்று நிறுவ அகஸ்தியரிடமிருந்து உத்தரவு வருகிறது. பஞ்சவடியோ ராவணனுடைய ஜனஸ்தானத்தின் எல்லைப் புறத்தில் இருக்கிறது. அந்த எல்லைப் புறத்துக்கு வந்ததால்தான் ராவணனுக்குச் சீதையைப் பற்றிய செய்தி எட்டியது. இராமனும் சீதையும் வரப்போகிற நெருக்கடிக்குத் தங்களை ஆயத்தப் படுத்தியது ஒருபுறம். அது தெய்வாதீனமாக நிகழ்கிறது. இராவணனுக்கு அழிவுகாலம் அணுகியது மற்றொரு புறம். அச்செயலும் தெய்வாதீனமாக நிகழ்கிறது. அது நிகழ்ந்தே ஆகவேண்டும் என்பதைத் தீர்க்கதரிசியாகிய அகஸ்தியர் அறிந்திருந்தார். ஆதலால்தான் அதற்கேற்ற ஆயுதங்களை அவர் இராமனிடம் ஒப்படைத்துப் பஞ்சவடியில் போய் வசிக்கும்படி உத்தரவிட்டார். ஆக இராவணவதைக்குத் தக்க தருணம் வனவாசத்தின் கடைசி வருஷமேயொழிய அதற்கு முன்பு அல்ல. அச்செயலுக்கு இராமன் முற்றிலும் ஆயத்தமானான்.

அதைத் தொடர்ந்து இராவணனுடைய துணிச்சல் செயலாக வடிவெடுக்கிறது. இராமபாணத்தின் மூலமாக அழிவுக்கு இராவணன் அடிகோலியவன் ஆனான். வாழ்க்கைத் திட்டமும் இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது. முற்றிலும் பரிபக்குவம் அடைந்துள்ள மனிதன்தான் கேட்டை நிராகரிக்க வல்லவன் ஆகிறான். வனவாசத்தின் வாயிலாக இராமன் தன்னைப் பதின்மூன்று வருஷகாலம் பக்குவப்படுத்தியதின் வாயிலாக இக்கோட்பாடு விளக்கப்படுகிறது.

கேள்வி: *(443)* இராவணனை அயோக்கியனென்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அவன் சீதையை அசோக வனத்தில் முறையாகச் சிறை வைத்திருந்தான். அப்படிப் பட்டவனை அயோக்கியன் என்று கூறலாமா?

பதில்: ஒருசிலர் இராவணனை அயோக்கியன் என்று கூறுவதற்குக் காரணம் இருக்கிறது. அவன் காமநோய் படைத்தவன். அழகியர்கள் எங்கு அகப்பட்டாலும் அவர்களைப் பலாத்காரமாக அபகரித்துச் செல்லுதல் அவனுடைய சர்வ சாதாரணமான செயலாய் இருந்தது. அதை முன்னிட்டே சீற்றம் படைத்தவர்கள் அவனை அயோக்கியன் என்று இயம்புகின்றனர். அவன் கைக்கு அகப்பட்ட பெண்பாலர்களைத் தனக்குரியவர்களாகச் செய்து கொண்டான். பின்பு அவர்களி டத்து அவன் கண்ணியமாகவே நடந்து வந்தான்.

சீதையினிடத்து அவன் கண்ணியமாக நடந்துகொண்ட தற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முன்பு அபகரித்த பெண்பாலர்களை அவன் பலாத்காரமாகக் கூடியது போன்று சீதையினிடத்து நடந்துகொள்ள அவனுக்கு முடியவில்லை. ஏனென்றால் அதற்குச் சற்று முன்புதான் அவனுக்குச் சாபம் ஒன்று நேருவதாயிற்று. பெண்பால் ஒருத்தியின் சம்மதமில்லாது அவளோடு அவன் புணர்வானாகில் அவன் தலை சுக்கல் சுக்கலாய் வெடித்துவிடும். அந்தச் சாபத்துக்கு அஞ்சி அவன் கண்ணியமாக நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருந்தான். சீதையை முன்னிட்டு அவனிடத்துக் கிளம்பிய காமநோய் மிகக் கொடியது. அக்காம நோயைக் களைதற்குச் சீதையின் சம்மதம் ஒன்றே உற்ற உபாயமாயிருந்தது. ஆதலால் அவன்

கெஞ்சினான். தனது முறைக்கு மாறாகக் காலில் வீழ்ந்து வணங்கினான். சீதைக்கு என்னென்ன இகலோக சௌபாக்யங்கள் இலங்கையில் அமைந்திருந்தன என்று மையல் ஊட்டி விண்ணப்பித்தான். ஆக, அவனுக்குத் சீதையினிடம் கண்ணியமாக நடந்துகொள்ளுதலைத் தவிர வேறு கதியில்லை. காமநோய் பிடித்திருந்ததற்கிடையில் கண்ணியமாய் நடந்து கொண்டதை அவனிடத்திருந்த சிறப்பு என்றே சொல்லலாம். ஆயினும் அவனை வாட்டிய காமநோய்க்கு நல்லார் யாருமே ஆமோதிப்புத் தரமாட்டார்கள்.

கேள்வி: *(444)* இராவணன் கற்றவனாயிருந்தும் பிறன் மனையாளான சீதையைப் பலாத்கரிக்க சிறைவைத்தான். ஹனுமான் அசோகவனம் அழித்த பிற்பாடு, அக்ஷன் இறந்த பிற்பாடு தன் மகன் இந்திரஜித்தை ஹனுமானைக் கட்டிவர அனுப்புகிறான். அறிவாளியான இந்திரஜித்து தன் தகப்பன் பிறன் மனையாளைப் பெண்டாள உதவியாயிருக்கக் கூடுமா? தன் தாய்க்குச் சக்களத்தியாக மற்றொருத்தியைத் தகப்பன் பெண்டாள சம்மதிப்பானா? இது மனித இயற்கைக்கு விரோதமில்லையா?

பதில்: இராவண இயல்புடைய மாந்தர்களையும் இந்திரஜித்தின் இயல்புடைய மாந்தர்களையும் எக்காலத்திலும் வெவ்வேறு ஜனசமூகங்களில் நாம் காணக்கூடும். கற்றறிந்தவன் என்பதற்கு விளக்கம் தருவது மிகக் கடினமானது. ஒரு துறையில் பெரிதும் கற்றறிந்தவனாக இருக்கிற ஒரு மனிதன் மற்றொரு துறையில் ஒன்றுமறியாத அறிவிலி போன்றோ அல்லது துஷ்டத்தனமோ நிறைந்துள்ள கயவன் போன்றோ நடந்துகொள்கிறான்.

இராவணன் சிறையெடுத்த பெண்களுள் சீதையே கடைசியானவள். அதற்கு முன்பு அவன் சிறையெடுத்த பெண்கள் பலர் இருந்தனர். அதைக் குறித்து அவன் யாரிடமும் ஆலோசனை கேட்டது கிடையாது. ஆட்சிமுறை போன்ற துறைகளில் இராவணன் தேர்ச்சிமிகப் பெற்றிருந்தான். ஆனால் காமநோய்க்கு அவன் முற்றிலும் வசப்பட்டவன். அவனுடைய காமநோயைக் களைய விபீஷணன் ஒருவன்தான் முயன்றான். ஏனையவர்கள் அத்துறையில் அவன் விஷயத்தில்

தலையிடவில்லை. இதுதான் லங்கேசனுடைய வாழ்க்கை வரலாறு. இதேபாங்கில் இக்காலத்தில் பலர் நடந்து கொள்வதையும் காணலாம்.

தந்தை போன்றே இந்திரஜித்தும் அசுர இயல்பு படைத்தவன். பராக்கிரமும், துணிவும் இருந்தன. ஆனால் காமநோய் கொடியது என்கின்ற விசாரம் செய்தவன் அல்லன் அவன். காமநோயில் ஈடுபட்டுள்ள தந்தைக்கு மற்றத் துறைகளில் வேண்டியவாறு துணைபுரியும் மைந்தர்களை இக்காலத்திலும் காணலாம். ஆக இந்திரஜித்தினுடைய செயல் அலாதியானது என்று சொல்லுதற்கில்லை. மானுட இயல்புகள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். விதவிதமான பாங்குடைய மக்கள் உலகில் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்து வருகின்றனர். அத்தகையவர்களுக்கு எடுத்துக்காட்டாக இராவணனும் இந்திரஜித்தும் இலங்குகின்றனர். இவர்கள் எவ்வளவுதூரம் கற்று அறிந்து அடங்கியவர்கள் என்பதை இவர்களுடைய செயல்களே நன்கு விளக்குகின்றன.

கேள்வி: (445) **பிறர் மனம் புகாத நிலையே கற்பு என்றால் சீதாபிராட்டி இராவணன் மனதில் புகுந்ததால் அவள் கற்பு பாதிக்கப்படவில்லையா?**

பதில்: சீதாபிராட்டியாரைப் பற்றிய காம நுகர்ச்சி இராவணனுடைய மனதில் புகுந்தது. ஆனால் சீதாப்பிராட்டி தானே இராவணனைத் தன் கருத்தில் காதலோடு வாங்கியவள் அல்லள். அவளுடைய மனது யாண்டும் இராமனையே சார்ந்திருந்தது. இராவணன் அவளை இராமனிடமிருந்து சிறிது காலம் பிரித்து வைத்ததன் விளைவாக இராமபக்தி அவளிடத்துப் பன்மடங்கு ஓங்கியது. அவளுடைய தவ வலிவும் மேன்மையுறுவதாயிற்று. இராவணன் மீது அவள் சீற்றம் கொண்டிருந்தாள். அவளுடைய கற்பின் வேகத்தால் இராவணன் அழிந்துபட்டுப் போயிருந்திருப்பான். காதல் கண்கொண்டு அவளைப் பார்த்த இராவணனை அவள் கருணாகர மூர்த்தியாயிருந்து, தாய் ஒருத்தியின் உளம்பூண்டு புத்திமதி புகட்டினாள். அப்படிப் புகட்டியதற்கிடையில் அவனை அவள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஏராளமான மின்சக்தியை எடுத்துச் செல்லுகிற

கம்பி ஒன்று பீங்கான் கோப்பையினால் தாங்கப்பெறுகிறது. ஆயினும் கம்பியில் உள்ள மின்சக்தி பீங்கான் கோப்பையினால் பாதிக்கப்படுவதில்லை. அக்கம்பியானது தண்ணீரின் வழியாக எடுத்துச் செல்லப்பட வேண்டியிருந்தால் அதற்கு இன்சுலேட்டர் (Insulator) என்னும் கவசம் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கவசம் கம்பியிலுள்ள மின்சக்தியை எந்த விதத்திலும் பாழ்படுத்துவதில்லை. இலங்காபுரியில் சிறைகிடந்த சீதாபிராட்டி அந்த மின்கம்பிக்கு நிகராக இலங்கினாள். இராவணனுடைய தொடர்பு என்னும் பீங்கான் கோப்பை அவளுடைய கற்பு என்னும் மின்சக்தியைச் சிறிதேனும் சிதறடையச் செய்யவில்லை. சிறை வாசம் என்னும் பொருந்தாத சூழ்நிலை மின்கம்பிக்குப் போடப் பட்டிருக்கும் கவசத்துக்கு நிகராகச் சீதாபிராட்டியாருடைய கற்புக்கு எந்தவிதமான தீங்கும் செய்ய அதற்கு இயலவில்லை. எனவே கற்பு என்பது அவரவர் சொந்தமான நிலையாகிறது. கற்பரசி ஒருத்தியைப் பிறர் காமக்கண்கொண்டு பார்ப்பதால் அவளுடைய கற்பு எந்த விதத்திலும் கலைவதில்லை. ஆகவே பிறருடைய காமக்கண்ணில் படுகிற பெண்பாலர்களெல்லாரும் கற்பை இழக்கிறார்கள் என்கிற கோட்பாடு உண்மையன்று. உமாதேவி உலகெங்குமுள்ள மாதர்கள் வடிவத்தில் இலங்கிக் கொண்டிருக்கிறாள். உலக மாதர்களில் பலர் காமக்கண்ணுக்கு இலக்காகின்றனர். அதை முன்னிட்டு உமாதேவியாரைக் கற்பரசி அல்லளென்று பொருள்படுத்தினால் அது பெரும்பிழையாகும். தன்னுடைய நிறைமனதை எக்காரணத்தை முன்னிட்டும் சிதறடைந்து போகாது காப்பாற்றுபவள் கற்பரசியாம். பூரணி யாயுள்ள உமாதேவி யாண்டும் நிறைமனது படைத்தவள். அவளுடைய சொரூபமாக இலங்குகின்ற சீதாபிராட்டியாரும் நிறைமனது படைத்தவள். அவளுடைய நிறைவு இராவண னுடைய இருபது கண்களால் சிறிதளவும் பாதிக்கப்பட மாட்டாது. இதுவே கற்பு என்னும் நிறைவுக்குச் சிறந்த விளக்கமாம்.

கேள்வி: *(446)* கடுந்தவம் புரிந்து பேராற்றல் பெற்றவன் இராவணன். அவனே அக்கிரமக்காரனாக மாறியதால் இராமன் தோன்றி அவனை அழிக்கவேண்டி இருந்தது.

இராவணனுக்கு வலிவு கொடுத்த சிவன் ஏன் அவனுக்கு நல்லறிவு கொடுக்கவில்லை?

பதில்: உலகம் முழுதும் இறைவனிடத்திலிருந்து தோன்றியவைகள். உலகில் தோன்றியுள்ள சேதன அசேதனப் பொருள்கள் யாவும் ஒரே பாங்குடையவைகள் ஆகமாட்டா. அசேதனமாயிருக்கும் கல் வகைகளுள் நஞ்சு நிறைந்த கற்களும் உண்டு; நலனை உண்டுபண்ணும் கற்களும் இருக்கின்றன. உயிர் வகைகளுள் நலன் நிறைந்த உயிர்கள் உண்டு. கேடு நிறைந்த உயிர்களும் இருக்கின்றன. நலன் கேடு ஆகிய இரண்டுக்கும் இடையிலுள்ள போராட்டமே பிரபஞ்ச வாழ்வு என்னும் பெயர் பெறுகிறது. கடுந்தவம் புரிந்து இராவணனாக வந்துள்ள மூர்த்திக்கு மூலப்பொருள் இறைவன். தெய்வீகப் பண்புடன் தோன்றித் தீமையைத் துடைக்க வந்த இராமனுக்கும் மூலப்பொருள் பரம். ஆகையினால் பரப்பிரம்ம சொரூபம் என இராமன் போற்றப்படுகிறான். காமத்துக்கு உறைவிடம் இராவணன். தெய்வீக இயல்புக்கு உறைவிடம் இராமன். தெய்வீக இயல்பும் காமமும் ஒன்று சேர்ந்து இருக்கமாட்டா. காமத்தில் ஊறிய இராவணன் தன் பாங்குக்கேற்ற செயலில் ஈடுபட்டான். அவன் செயல் தெய்வீக முன்னேற்றத்துக்கு உதவி புரியாது. மக்களாக வடிவெடுத்துள்ள நம்மிடத்து இராவணாகார இயல்பு ஒருபக்கம் புதைந்து இருக்கிறது. இராம மகிமை மற்றோர் இடத்தில் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. நம்மிடத்து உருவெடுக்கிற கெட்ட இயல்பை அடக்கியாளவும் நல்லியல்பை வளர்க்கவும் செய்வது நம் கடமையாகிறது. இக்கோட்பாட்டுக்குப் புறவுலகில் எடுத்துக்காட்டு மூர்த்திகளாக இராவணனும் இராமனும் தோன்றி வந்தார்கள்.

கேள்வி: *(447)* சீதை கர்ப்பிணியாக இருந்தபோது ஒரு வண்ணானின் பேச்சைக்கேட்டு அவளை இராமன் காட்டுக்குத் துரத்தியது அவளுக்குச் செய்த அநீதி அல்லவா?

பதில்: கேள்வி ஒன்றைக் கிளப்புபவனை முன்னிட்டு அக்கேள்வியைப் பெரியது அல்லது சிறியது ஆக்கலாகாது. கேள்வியைக் கிளப்பியது யாராக இருந்தாலும் அக்கேள்வியின்

தரத்தைத் தன் அளவைக்கொண்டே மதிப்புப் போடவேண்டும். கிளம்பிய கேள்வியானது ஒரு குடும்பத்தில் நிகழ்ந்த கணவன் மனைவி ஆகியவர்களின் பிணக்கைப் பற்றியதாம். "நம்மோடு பிணங்கிக்கொண்டு வேற்றான் வீட்டிற்குப் போய்த் தங்கியிருந்த மனைவியை நாம் மீண்டும் எடுத்துக்கொள்ளலாகாது. அச் செயலில் இராமன் மக்களுக்கு முன்மாதிரியாக இல்லாமல் தன் போக்கில் நடந்துகொண்டான். நான் அப்படி நடக்க மாட்டேன்" என்று பொதுமகன் ஒருவன் இயம்பினான். அது இராமனின் காதுக்கு எட்டியது.

அரசன் யாண்டும் பொதுமக்களுக்குச் சீலத்தின் முன் மாதிரியாக அமைந்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறான். குடும்ப நலன், இராஜ்ய நலன் இரண்டிற்குமிடையில் பிணக்கு ஏற்படுமாகில் இராஜ்ய நலனை முன்னிட்டுக் குடும்ப நலனைப் பின்னணிக்குத் தள்ளுவது நெறிபிறழாத அரசனுடைய கடமையாகிறது. அத்தகைய கடமையை நிறைவேற்ற இராமன் தீர்மானம் செய்தான். உண்மையில் அதைவிடப் பெரிய கடமை ஒன்று இராமனுடைய மனதில் இருந்தது. அதை வெளிப் படுத்தாமல் சிறிய கடமையாகிய பொதுமக்களுக்கு முன்மாதிரி யாக வேண்டும் என்னும் கோட்பாட்டிற்கிணங்க இராமன் கொடியதாகத் தென்பட்ட அச்செயலில் இறங்கினான்.

கர்ப்பிணியாயிருந்த சீதைக்கு அரண்மனை வாசத்தைவிடச் சாலச் சிறந்தது ஆரண்யத்தில் ஆசிரம வாழ்க்கை. அதன்மூலம் உண்டாகின்ற நலன் ஒப்புயர்வற்றதாம். ஆனால் அதை ஒரு முகாமையாகச் சொல்லி அனுப்புவதில் சுவாரஸ்யம் ஏதுமில்லை. ஒரு மூர்த்தியினுடைய பரிபாகத்தை வெளிப்படுத்துதற் பொருட்டு முன்னெச்சரிக்கை ஏதும் இல்லாமல் திடீரென்று அம்மூர்த்தியைக் கஷ்டதசைக்கு ஆளாக்குதல் சான்றோர் போக்கு. (Take a man by surprise and you will know what he is made of) நாட்டின் கடமையை முன்னணியில் வைத்துக்கொண்டு இத்தகைய சோதனையை இராமன் சீதையின்மீது திணித்தான். அவளுடைய தரம் அதன் வாயிலாக வெளியானது. பிறகு ஆசிரம வாழ்க்கையின் வாயிலாக அவள் கர்ப்பத்திலிருந்த சிசு ஆத்ம பரிபாகம் அடைவதற்கு ஏற்ற சூழ்நிலை அமைந்தது. அதற்கெல்லாம் மேலாக அவள் தான் செய்த தவத்தின்

வாயிலாக ஆத்மஞானம் அடையப்பெற்றாள்.

எனவே, கொடூரச் செயல்போன்று தென்பட்ட இராமனுடைய செயலில் மூன்று நலன்கள் வந்தமைகின்றன. (1) அரசன் ஒருவன் நாட்டின் நலனை முன்னிட்டுக் குடும்ப வாழ்க்கையில் எத்தகைய தியாகத்தை வேண்டுமென்றாலும் செய்ய ஆயத்தமாய் இருக்கவேண்டும். (2) முன்னெச்சரிக்கை இல்லாமல் சீதையானவள் வெளியே அனுப்பப்பட்டதன் வாயிலாக அவளுடைய திண்மை வெளியாயிற்று. மக்களாகப் பிறந்த ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் சூழ்நிலையைச் சமாளித்துப் பழகுவது வாழ்க்கைப் பயிற்சியாகும். (3) கேடு போன்று தென்பட்ட சூழ்நிலையில் பரஞானம் அடையப் பெற்றதும் அவள் கர்ப்பத்திலிருந்த சிசுக்களுக்குச் சீதாபிராட்டி தவத்தின் வாயிலாக நல்ல சம்ஸ்காரங்களை வழங்கியதும் ஒப்பற்ற சேவையாகும்.

இராமன் ஒருபொழுதும் அறநெறியினின்று பிசகியவன் அல்லன். அறம் காக்க வந்த நம்பியாகிய அவன் புரிந்த செயல்கள் அனைத்திலும் நன்மையே நிறைந்திருக்கிறது என்பது வெளிப்படை. இவ்வுண்மையை மேற்கூறிய செயல் மூலம் இராமன் விளக்கிக் காட்டியுள்ளான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

கேள்வி:*(448)* அயோத்தியில் இருந்த இராமனால் காட்டுக்கு அனுப்பப்பட்ட சீதை வால்மீகி ஆசிரமத்தில் வசித்து வந்தாள். அப்பொழுது ஸ்ரீராமனை ஆத்ம ராமனாக அவள் வரித்துக்கொண்டாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் உட்கருத்தை விளக்கும்படி வேண்டுகிறேன்.

பதில்: உயிர்களெல்லாம் அறிந்தோ அறியாமலோ கடவுளை நோக்கிப் பிரயாணம் போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்பிரயாணத்தை அறிந்து செய்தால் அது சமய அனுஷ்டானம் என்னும் பெயர் பெறுகிறது. கடவுளை நோக்கிப் பிரயாணம் போகிற மனிதன் தனது பிரயாணத்தின் ஆரம்ப தசையில் கடவுள் பரலோகத்தில் எங்கேயோ ஓரிடத்தில் இருக்கிறார் என்று எண்ணுகிறான். பிறகு அவர் எங்கும் நிறைபொருள், பார்க்குமிடமெல்லாம் பல வடிவங்களில் இலங்குபவர் அவரே

என்னும் உணர்வு வருகிறது. அதற்குமேல் அவர் "இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்" என்னும் பேருணர்வு வருகிறது. அப்பேருணர்வுக்குத்தான் ஞானோதயம் என்னும் பெயர் தரப்பட்டிருக்கிறது. சீதாபிராட்டியின் வாழ்வு முழுவதையும் ஒரு சீரிய ஆத்மசாதனம் என்று வைத்துக் கொள்ள அது இடம் தருகிறது. அந்தச் சாதனத்தின் நிறைவு அவளுக்கு வால்மீகி ஆசிரமத்தில் உண்டாகிறது. ஸ்ரீராமன் என்னும் பரமாத்மா தனது உள்ளத்திலேயே யாண்டும் ஒளிர்ந்து கொண்டிருந்ததை ஞான அனுபவத்தில் அவள் கண்டு கொண்டாள். அதன் பிறகு தன் சரீரம் ஓரிடத்திலும், ஸ்ரீராம னுடைய சரீரம் இன்னோரிடத்திலும் இருக்கலாயினவெனினும் ஆத்ம சொரூபத்தில் தனக்கும் தன் தலைவனுக்கும் இடையில் பிளவு ஏற்படவில்லையென்றும் அது ஒருபொழுதும் ஏற்படாது என்றும் அவள் அறிந்து கொண்டாள். அதை அறிந்த பின் அயோத்திராமன் என்பவனும், சீதாராமன் என்பவனும் உண்மை யில் ஆத்மராமனே என்னும் ஞானத்தை அவள் அடையப் பெற்றாள். ஜீவர்களாகிய நாம் நம் அனைவர் உள்ளத்திலும் ஒளிர்ந்து கொண்டிருப்பவர் பரமாத்மா ஒருவரே என்பதை அனுபூதியில் அறிந்தால் நம் சாதனம் பூர்த்தியாகிறது. ஆக, வால்மீகி ஆசிரமத்தில் சீதையடைந்த பரிபூரண நிலையை நாம் அனைவரும் அடைந்தாக வேண்டும். ஆத்மராமன் என்னும் கோட்பாடு இதுவேயாம்.

கேள்வி: *(449)* விபீஷணர் போன்ற சிலரைச் சிரஞ்சீவிகள் என்று இராமாயணம் முதலிய நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த ஊன் உடலிலேயே சிரஞ்சீவிகளாக இருக்கிறார்களா? அல்லது எந்த நிலையில் இருக்கிறார்கள்?

பதில்: இறைவனைச் சார்ந்திருந்து அவருடைய அருளுக்குப் பாத்திரமான ஒருசிலர் சிரஞ்சீவிகளாக இருக் கிறார்கள் என்பது கோட்பாடு. அவர்களுள் ஒரு சிலரை ஈண்டுச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். சிரஞ்சீவிகளுள் விபீஷணர் ஒருவர். ஆஞ்சனேயர் இன்னொருவர். மார்க்கண் டேயன் மற்றொருவன். சிரஞ்சீவி என்பதனுடைய பொருள்

எக்காலத்திலும் ஜீவித்திருப்பது என்பதாம். அவர்கள் அப்பொழுது எடுத்திருந்த ஊனுடலிலேயே இன்னும் வாழ்ந்திருக்கிறார்களா என்பது கேள்வி. முக்தி அடைந்தவர்களுக்குப் பிறகு ஊன் உடம்புக்குத் தேவையில்லை. ஜீவபோதம் பெற்றிருந்த அவர்கள் ஜீவபோதத்தினின்று முக்தி அடைந்து விட்டார்கள். ஆனால் சிரஞ்சீவிகள் ஆகிய அவர்கள் சில தத்துவங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக அக்காலத்தில் இலங்கினார்கள், இக்காலத்தில் இலங்குகிறார்கள், எக்காலத்திலும் இலங்குவார்கள். அதை முன்னிட்டே அவர்கள் சிரஞ்சீவிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். விபீஷணாழ்வார் சத்வ குணத்தின் பிரதிநிதி எனலாம். உடன் பிறந்தவர்களாகிய இராவணனும் கும்பகர்ணனும் ரஜோ குணத்துக்கும் தமோ குணத்துக்கும் பிரதிநிதிகள். இந்த இரண்டு குணங்களும் ஜீவனைப் பந்தப்படுத்துகின்றன. சத்வ குணமோ ஜீவாத்மனைப் பரமாத்னோடு சேர்வதற்குத் துணைபுரிகிறது. ஆகவே என்றைக்கும் சத்வகுணம் ஒன்றே ஆத்ம சாதகர்களால் பாராட்டப்படுகிறது. பாராட்டப்படுகிற நிலையில் சத்வகுணம் இருக்கிறது என்னும் கோட்பாடு விபீஷணர் சிரஞ்சீவியாய் இருக்கிறார் என்று மற்றொரு பாங்கில் பகரப்பெறுகிறது. இதுவே விபீஷணரைப் பற்றிய உண்மை. ஆனால் அன்று விபீஷணராகப் பிறந்த ஜீவாத்மன் பரமாத்மாவினிடத்து சரணாகதி அடைந்து பரமாத்மாவை அடைந்தாய் விட்டது. அவர் ஊனுடலுடன் இருக்கிறாரா என்னும் கேள்விக்கு இனி இடமில்லை. ஆஞ்சனேயர் குரு தத்துவத்தின் பிரதிநிதி. குரு எக்காலத்திலும் இருந்தாக வேண்டும். எனவே ஆஞ்சனேயர் சிரஞ்சீவி என்று அழைக்கப்படுகிறார். மார்க்கண்டேயன் நிறைஞானியின் பிரதிநிதி. எக்காலத்திலும் நிறைஞானிகளாக யாரோ சிலராவது ஆவார்கள். அவற்றில் மார்க்கண்டேயன் என்றைக்கும் சிரஞ்சீவி என்று புராணம் பகர்கிறது.

கேள்வி: *(450) சீதை* ஜனகருடைய புதல்வியா அல்லது வளர்ப்புப் புதல்வியா? வளர்ப்புப் புதல்வியாயிருந்தால் தாய் தந்தையர் யாவர்?

பதில்: சீதாதேவி ஜனகருடைய வளர்ப்புப் புதல்வியே

ஆவாள். ஜனகமன்னன் ஒருசமயம் வேள்விபுரியும் நிலத்தைத் தானே கலப்பையால் உழுதார். அது வேள்வி முறைகளில் ஒன்று. கலப்பை கீறிய பாதையில் ஓர் சிசு தென்பட்டது. அதன் உடல் முழுதும் புழுதி மண்டியிருந்தது. அதைக்கண்ட ஜனக மன்னன். புழுதியைக் கைகளால் தள்ளிவிட்டுச் சிசுவை எடுத்து வியப்புடன் தன்மடியில் வைத்துக்கொண்டார். அப்பொழுது ஜனகர் ஸந்தானப் பேறு பெற்றிருக்கவில்லை. ஆதலால் அதிகமான அன்பை அக்குழந்தையின்மீது செலுத்தினார். இவள் என் புதல்வி என்று சொன்னார். அதே நேரத்தில் அசரீரி "அரசே, நீ நினைத்தது முற்றிலும் ஒழுங்கானது. இப்பெண்மணி உன்னுடைய முறைப்பெண் ஆவாள்" என்று கூறியது. கலப்பை கீறிய கோடு 'ஸீதா' எனப்படும். ஆகவே சீதை என்றே பெயரிட்டு அழைத்தார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு ஊர்மிளா என்ற புதல்வியை ஜனகரின் மனைவி பெற்றாள். ஆயினும் சீதையையே மூத்த புதல்வியாகக் கருதி வளர்த்து வந்தார் வேந்தர். மக்கள் அவளை ஜானகி என்றழைத்தனர். திரௌபதி முதலியவர்களைப்போலவே சீதை தாய் வயிற்றினின்று தோன்றாத பெண்மணி ஆவாள். 'அயோனிஜா' என்று அவளைக் கூறுவர். அவள் பூமியின் புதல்வி என்றும் அழைக்கப்படுவது உண்டு. இவ்வரலாற்றை வால்மீகி முனிவர் சீதை அனசூயாதேவியிடம் தன் பிறவிக் கதையைக் கூறியதாக விவரித்திருக்கின்றார்.

கேள்வி: *(451)* சுவாமி விவேகானந்தர், பண்டித ஜவஹர்லால் நேரு முதலியோர் இராமாயணத்தை ஆரிய திராவிடப்போர் என்று குறிப்பிடுகிறார்கள். இதன் கருத்தென்ன?

பதில்: ஜவஹர்லால் நேருவுடைய புத்தகங்களையும் பிரசங்கங்களையும் நாம் முழுதும் படித்தவர்களோ கேட்டவர்களோ அல்ல. எந்த இடத்தில் எந்தச் சந்தர்ப்பத்தில் இராமாயணத்தை ஆரிய திராவிடப் போராட்டம் என்று சொன்னார் என்று யூகிக்கவும் நமக்கு முடியாது. அவர் அங்ஙனம், பகர்ந்திருப்பாராகில் அவர் [illegible]த்தையோ, சாஸ்திரத்தையோ ஆழ்ந்து ஆராய்ந்தவர் அல்லர் என்றே நாம் உறுதி கூறுவோம்.

சுவாமி விவேகானந்தருடைய நூல்கள் ஆங்கிலத்தில் எட்டுத்தொகுதிகளும் நம் கைவசமிருக்கின்றன. இராமாயணத்தை அவர் பெரிதும் பாராட்டுகிறார். இந்துக்களின் நாகரிகமும் பண்பாடும் இராமாயணத்தில் புதைந்துகிடக்கின்றன என்று போற்றுகிறார். அவர் அதை ஆரிய திராவிடப் போராட்டமென்று கனவிலும் கருதக் கிடையாது. அத்தகைய போராட்டம் அவருடைய மனதில் எழுந்ததும் இல்லை. யாருடைய மனதில் போராட்டமும் குழப்பமும் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் இத்தகைய குயுக்திகளும் மனதிலே தோன்றுவன ஆகும். மானுடவர்க்கம் முழுதையும் ஒரு குடும்பமாக விவேகானந்தர் எடுத்துக் கொண்டார். மாகாணப் பிணக்கையோ, மொழிப் பிணக்கையோ, ஜாதிப் பிணக்கையோ உண்டுபண்ணுகின்ற பாங்கை அவர் கனவிலும் கருதக் கிடையாது.

வால்மீகி இயற்றி வைத்திருக்கிற பிரகாரம் இராமாயணம் இப்பொழுது நம் கைவசத்திலிருக்கிறது. இந்தியாவில் எல்லா மாகாணங்களிலும் அது ஒரு சிறந்த இதிகாசமாகப் பாராட்டப் பட்டு வருகிறது. மக்கள் பல்லாயிரம் பேருக்கு அது ஒரு சிறந்த வழிகாட்டியாகப் பல்லாண்டு இருந்து வந்திருக்கிறது. இனியும் அப்படியே அது இருக்கப்போகிறது; யார் முயன்றாலும் அதை அழித்துவிட முடியாது. அத்தகைய இதிகாசத்தினுள் இன்றைக்குக் கற்பனையாகக் கிளம்பியிருக்கும் ஆரிய திராவிடப் போராட்டத்துக்குச் சான்று ஏதேனும் இருக்கிறதா என்று ஆய்ந்து பார்ப்போம்.

ஆரியன் யார், திராவிடன் யார் என்பது முதல் கேள்வி. இராமாயணம் போன்ற நூல்களில் ஆரியன் என்பவன் ஒரு அலாதியான ஜாதியைச் சேர்ந்தவன் என்று பொருள்படும் விளக்கம் எவ்விடத்திலும் இல்லை. ஆரியன் என்னும் பதத் துக்குப் பொருள் பண்பட்டவன் அல்லது மேன்மகன் என்பதா கிறது. அனாரியன் என்று சொன்னால் கீழோன் அல்லது கயவன் என்று பொருள்படுகிறது. வரம் கேட்ட கைகேயியைத் திட்டிய தசரதன் 'அனாரியே' என்று அவளை திரஸ்கரிக்கின்றார். கானகத்தில் தன் உயிரைக்கொடுத்துச் சீதையைக் காக்க முயன்ற ஜடாயுவைச் சீதை 'ஆரியா' என்று அழைக்கின்றாள். ஆரியன் என்னும் சொல் ஒரு ஜாதியைக் குறிக்கிறதென்றால் ஜடாயு

இராமாயணத்தின் படி ஆரியன் ஆய்விடுகிறான். கைகேயி ஆரிய ஜாதியைச் சேராதவள் ஆய்விடுகிறாள். இது எவ்வளவு பொருத்தமற்ற பிரச்னை என்பது இராமாயணத்தினின்றே நமக்குக் கிடைக்கிறது. ஆனால் இராமாயணம் அமைந்தது எந்த ஜாதியினுடைய பெருமைக்காகவோ அல்லது சிறுமைக் காகவோ அல்ல.

நான்கு வேதம் ஆரியர்களுடையவை என்பது ஐதீகம். வேதம் யாருக்குச் சொந்தமோ அவர்கள் ஆரியர்கள் என்னும் கோட்பாட்டை இன்றைக்கு யாரும் மறுப்பது கிடையாது. வால்மீகி இராமாயணப்படி இராவணன் நான்கு வேதங்களை நன்றாக ஓதி ஆராய்ந்தவன். சாமவேதகானம் பண்ணுவதில் அவன் பெரிய நிபுணன். வேதசாஸ்திரத்தை அவன் கற்றறிந் திருந்த அவ்வளவு தூரம் ஸ்ரீராமன் கற்றிருந்தான் என்று சொல்லுதற்கு வால்மீகி இராமாயணத்தில் போதிய ஆதாரம் இல்லை. மேலும் இராவணன் பிராமணன் என்றும் அதே இராமாயணம் பகர்கிறது. பிராமணர்கள் எல்லோரையும் ஆரியர் என்று இப்பிணக்கைக் கிளப்புபவர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். இக்கோட்பாட்டின்படி தென் இலங்கையிலிருந்த இராவணன் ஆரியன் ஆகின்றான். வடக்கே அயோத்தியில் இருந்த பிராமணன் அல்லாத க்ஷத்திரியனாயிருந்த தசரத ராமனை இவர்கள் கொள்கையின்படி திராவிடன் என்று யூகிக்க இடமிருக்கிறது. ஆக, இராமாயணத்தை ஆரிய திராவிடப் போராட்டமென்றால் தங்களைச் சிறுமைப்படுத்துதற்கென்றே ஆரியர் வடக்கேயிருந்து தோன்றி வந்திருக்கின்றனர் என்று கூக்குரலிடும் கூட்டத்தார் ஸ்ரீராமனுடைய செயலைப்பற்றி அவமானமடைவதற்கு இடமில்லை. திராவிடன் ஒருவன் ஆரியனைத் தகர்த்துவிட்டான் என்று அவர்கள் பெருமை பாராட்டிக்கொள்ளலாம். ஆனால் இத்தகைய கொள்கையே உண்மையோடு ஒட்டியதன்று. பயனற்ற வீண் விவாதத்தை இது கிளப்புவதாகும்.

ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் ஹனுமானைப் பம்பாசரசுக்குப் பக்கத்தில் சந்தித்தார்கள். சிறிது நேரம் பேச்சுவார்த்தை நடந்ததற்குள்ளேயே ஹனுமான் சாஸ்திரங்களை முறையாகக் கற்றறிந்த மேன்மகன் என்று ஸ்ரீராமர் அறிந்து கொள்கிறார்.

எக்காலத்திலும் ஜீவித்திருப்பது என்பதாம். அவர்கள் அப்பொழுது எடுத்திருந்த ஊனுடலிலேயே இன்னும் வாழ்ந்திருக்கிறார்களா என்பது கேள்வி. முக்தி அடைந்தவர்களுக்குப் பிறகு ஜீவன் உடம்புக்குத் தேவையில்லை. ஜீவபோதம் பெற்றிருந்த அவர்கள் ஜீவபோதத்தினின்று முக்தி அடைந்து விட்டார்கள். ஆனால் சிரஞ்சீவிகள் ஆகிய அவர்கள் சில தத்துவங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக அக்காலத்தில் இலங்கினார்கள், இக்காலத்தில் இலங்குகிறார்கள், எக்காலத்திலும் இலங்குவார்கள். அதை முன்னிட்டே அவர்கள் சிரஞ்சீவிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். விபீஷணாழ்வார் சத்வ குணத்தின் பிரதிநிதி எனலாம். உடன் பிறந்தவர்களாகிய இராவணனும் கும்பகர்ணனும் ரஜோ குணத்துக்கும் தமோ குணத்துக்கும் பிரதிநிதிகள். இந்த இரண்டு குணங்களும் ஜீவனைப் பந்தப்படுத்துகின்றன. சத்வ குணமோ ஜீவாத்மனைப் பரமாத்னோடு சேர்வதற்குத் துணைபுரிகிறது. ஆகவே என்றைக்கும் சத்வகுணம் ஒன்றே ஆத்ம சாதகர்களால் பாராட்டப்படுகிறது. பாராட்டப்படுகிற நிலையில் சத்வகுணம் இருக்கிறது என்னும் கோட்பாடு விபீஷணர் சிரஞ்சீவியாய் இருக்கிறார் என்று மற்றொரு பாங்கில் பகரப்பெறுகிறது. இதுவே விபீஷணரைப் பற்றிய உண்மை. ஆனால் அன்று விபீஷணராகப் பிறந்த ஜீவாத்மன் பரமாத்மாவினிடத்து சரணாகதி அடைந்து பரமாத்மாவை அடைந்தாய் விட்டது. அவர் ஊனுடலுடன் இருக்கிறாரா என்னும் கேள்விக்கு இனி இடமில்லை. ஆஞ்சனேயர் குரு தத்துவத்தின் பிரதிநிதி. குரு எக்காலத்திலும் இருந்தாக வேண்டும். எனவே ஆஞ்சனேயர் சிரஞ்சீவி என்று அழைக்கப்படுகிறார். மார்க்கண்டேயன் நிறைஞானியின் பிரதிநிதி. எக்காலத்திலும் நிறைஞானிகளாக யாரோ சிலராவது ஆவார்கள். அவற்றில் மார்க்கண்டேயன் என்றைக்கும் சிரஞ்சீவி என்று புராணம் பகர்கிறது.

கேள்வி: *(450)* சீதை ஜனகருடைய புதல்வியா அல்லது வளர்ப்புப் புதல்வியா? வளர்ப்புப் புதல்வியாயிருந்தால் தாய் தந்தையர் யாவர்?

பதில்: சீதாதேவி ஜனகருடைய வளர்ப்புப் புதல்வியே

ஆவாள். ஜனகமன்னன் ஒருசமயம் வேள்விபுரியும் நிலத்தைத் தானே கலப்பையால் உழுதார். அது வேள்வி முறைகளில் ஒன்று. கலப்பை கீறிய பாதையில் ஓர் சிசு தென்பட்டது. அதன் உடல் முழுதும் புழுதி மண்டியிருந்தது. அதைக்கண்ட ஜனக மன்னன் புழுதியைக் கைகளால் தள்ளிவிட்டுச் சிசுவை எடுத்து வியப்புடன் தன்மடியில் வைத்துக்கொண்டார். அப்பொழுது ஜனகர் ஸந்தானப் பேறு பெற்றிருக்கவில்லை. ஆதலால் அதிகமான அன்பை அக்குழந்தையின்மீது செலுத்தினார். இவள் என் புதல்வி என்று சொன்னார். அதே நேரத்தில் அசரீரி "அரசே, நீ நினைத்தது முற்றிலும் ஒழுங்கானது. இப்பெண்மணி உன்னுடைய முறைப்பெண் ஆவாள்" என்று கூறியது. கலப்பை கீறிய கோடு 'ஸீதா' எனப்படும். ஆகவே சீதை என்றே பெயரிட்டு அழைத்தார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு ஊர்மிளா என்ற புதல்வியை ஜனகரின் மனைவி பெற்றாள். ஆயினும் சீதையையே மூத்த புதல்வியாகக் கருதி வளர்த்து வந்தார் வேந்தர். மக்கள் அவளை ஜானகி என்றழைத்தனர். திரௌபதி முதலியவர்களைப்போலவே சீதை தாய் வயிற்றினின்று தோன்றாத பெண்மணி ஆவாள். 'அயோனிஜா' என்று அவளைக் கூறுவர். அவள் பூமியின் புதல்வி என்றும் அழைக்கப்படுவது உண்டு. இவ்வரலாற்றை வால்மீகி முனிவர் சீதை அனசூயாதேவியிடம் தன் பிறவிக் கதையைக் கூறியதாக விவரித்திருக்கின்றார்.

கேள்வி: *(451)* சுவாமி விவேகானந்தர், பண்டித ஜவஹர்லால் நேரு முதலியோர் இராமாயணத்தை ஆரிய திராவிடப்போர் என்று குறிப்பிடுகிறார்கள். இதன் கருத்தென்ன?

பதில்: ஜவஹர்லால் நேருவுடைய புத்தகங்களையும் பிரசங்கங்களையும் நாம் முழுதும் படித்தவர்களோ கேட்டவர்களோ அல்ல. எந்த இடத்தில் எந்தச் சந்தர்ப்பத்தில் இராமாயணத்தை ஆரிய திராவிடப் போராட்டம் என்று சொன்னார் என்று யூகிக்கவும் நமக்கு முடியாது. அவர் அங்ஙனம், பகர்ந்திருப்பாராகில் அவர் சரித்திரத்தையோ, சாஸ்திரத்தையோ ஆழ்ந்து ஆராய்ந்தவர் அல்லர் என்றே நாம் உறுதி கூறலாம்.

சுவாமி விவேகானந்தருடைய நூல்கள் ஆங்கிலத்தில் எட்டுத்தொகுதிகளும் நம் கைவசமிருக்கின்றன. இராமாயணத்தை அவர் பெரிதும் பாராட்டுகிறார். இந்துக்களின் நாகரிகமும் பண்பாடும் இராமாயணத்தில் புதைந்துகிடக்கின்றன என்று போற்றுகிறார். அவர் அதை ஆரிய திராவிடப் போராட்டமென்று கனவிலும் கருதக் கிடையாது. அத்தகைய போராட்டம் அவருடைய மனதில் எழுந்ததும் இல்லை. யாருடைய மனதில் போராட்டமும் குழப்பமும் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் இத்தகைய குயுக்திகளும் மனதிலே தோன்றுவன ஆகும். மானுடவர்க்கம் முழுதையும் ஒரு குடும்பமாக விவேகானந்தர் எடுத்துக் கொண்டார். மாகாணப் பிணக்கையோ, மொழிப் பிணக்கையோ, ஜாதிப் பிணக்கையோ உண்டுபண்ணுகின்ற பாங்கை அவர் கனவிலும் கருதக் கிடையாது.

வால்மீகி இயற்றி வைத்திருக்கிற பிரகாரம் இராமாயணம் இப்பொழுது நம் கைவசத்திலிருக்கிறது. இந்தியாவில் எல்லா மாகாணங்களிலும் அது ஒரு சிறந்த இதிகாசமாகப் பாராட்டப் பட்டு வருகிறது. மக்கள் பல்லாயிரம் பேருக்கு அது ஒரு சிறந்த வழிகாட்டியாகப் பல்லாண்டு இருந்து வந்திருக்கிறது. இனியும் அப்படியே அது இருக்கப்போகிறது; யார் முயன்றாலும் அதை அழித்துவிட முடியாது. அத்தகைய இதிகாசத்தினுள் இன்றைக்குக் கற்பனையாகக் கிளம்பியிருக்கும் ஆரிய திராவிடப் போராட்டத்துக்குச் சான்று ஏதேனும் இருக்கிறதா என்று ஆய்ந்து பார்ப்போம்.

ஆரியன் யார், திராவிடன் யார் என்பது முதல் கேள்வி. இராமாயணம் போன்ற நூல்களில் ஆரியன் என்பவன் ஒரு அலாதியான ஜாதியைச் சேர்ந்தவன் என்று பொருள்படும் விளக்கம் எவ்விடத்திலும் இல்லை. ஆரியன் என்னும் பதத்துக்குப் பொருள் பண்பட்டவன் அல்லது மேன்மகன் என்பதாகிறது. அனாரியன் என்று சொன்னால் கீழோன் அல்லது கயவன் என்று பொருள்படுகிறது. வரம் கேட்ட கைகேயியைத் திட்டிய தசரதன் 'அனாரியே' என்று அவளை திரஸ்கரிக்கின்றார். கானகத்தில் தன் உயிரைக்கொடுத்துச் சீதையைக் காக்க முயன்ற ஜடாயுவைச் சீதை 'ஆரியா' என்று அழைக்கின்றாள். ஆரியன் என்னும் சொல் ஒரு ஜாதியைக் குறிக்கிறதென்றால் ஜடாயு

இராமாயணத்தின் படி ஆரியன் ஆய்விடுகிறான். கைகேயி ஆரிய ஜாதியைச் சேராதவள் ஆய்விடுகிறாள். இது எவ்வளவு பொருத்தமற்ற பிரச்னை என்பது இராமாயணத்தினின்றே நமக்குக் கிடைக்கிறது. ஆனால் இராமாயணம் அமைந்தது எந்த ஜாதியினுடைய பெருமைக்காகவோ அல்லது சிறுமைக் காகவோ அல்ல.

நான்கு வேதம் ஆரியர்களுடையவை என்பது ஐதீகம். வேதம் யாருக்குச் சொந்தமோ அவர்கள் ஆரியர்கள் என்னும் கோட்பாட்டை இன்றைக்கு யாரும் மறுப்பது கிடையாது. வால்மீகி இராமாயணப்படி இராவணன் நான்கு வேதங்களை நன்றாக ஓதி ஆராய்ந்தவன். சாமவேதகானம் பண்ணுவதில் அவன் பெரிய நிபுணன். வேதசாஸ்திரத்தை அவன் கற்றறிந் திருந்த அவ்வளவு தூரம் ஸ்ரீராமன் கற்றிருந்தான் என்று சொல்லுதற்கு வால்மீகி இராமாயணத்தில் போதிய ஆதாரம் இல்லை. மேலும் இராவணன் பிராமணன் என்றும் அதே இராமாயணம் பகர்கிறது. பிராமணர்கள் எல்லோரையும் ஆரியர் என்று இப்பிணக்கைக் கிளப்புபவர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். இக்கோட்பாட்டின்படி தென் இலங்கையிலிருந்த இராவணன் ஆரியன் ஆகின்றான். வடக்கே அயோத்தியில் இருந்த பிராமணன் அல்லாத க்ஷத்திரியனாயிருந்த தசரத ராமனை இவர்கள் கொள்கையின்படி திராவிடன் என்று யூகிக்க இடமிருக்கிறது. ஆக, இராமாயணத்தை ஆரிய திராவிடப் போராட்டமென்றால் தங்களைச் சிறுமைப்படுத்துதற்கென்றே ஆரியர் வடக்கேயிருந்து தோன்றி வந்திருக்கின்றனர் என்று கூக்குரலிடும் கூட்டத்தார் ஸ்ரீராமனுடைய செயலைப்பற்றி அவமானமடைவதற்கு இடமில்லை. திராவிடன் ஒருவன் ஆரியனைத் தகர்த்துவிட்டான் என்று அவர்கள் பெருமை பாராட்டிக்கொள்ளலாம். ஆனால் இத்தகைய கொள்கையே உண்மையோடு ஒட்டியதன்று. பயனற்ற வீண் விவாதத்தை இது கிளப்புவதாகும்.

ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் ஹனுமானைப் பம்பாசரசுக்குப் பக்கத்தில் சந்தித்தார்கள். சிறிது நேரம் பேச்சுவார்த்தை நடந்ததற்குள்ளேயே ஹனுமான் சாஸ்திரங்களை முறையாகக் கற்றறிந்த மேன்மகன் என்று ஸ்ரீராமர் அறிந்து கொள்கிறார்.

அங்கு ஜாதியைப்பற்றிய பேச்சு இல்லை பண்பாட்டைப் பற்றிய பாராட்டுதலே முன்னணியில் வந்து நிற்கிறது.

அடுத்தபடியாக இராமாயணத்துக்குத் தக்க அரங்கங்களாக அமைந்த அயோத்தி, கிஷ்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று ராஜதானிகளை ஆராய்ந்து பார்ப்போம். மூன்று ராஜதானி களிலும் நலம் கேடு ஆகிய இரண்டு சக்திகளுக்கிடையிலே போராட்டம். இராமன் தீமைக்கு எந்த இடத்திலும் ஆதரவு கொடுக்கவில்லை. நலத்தை நிலைநாட்டுதற்கே பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். தந்தை பொய் பகர்பவர் அல்ல என்பதை நிரூபிப்பதற்காக நீண்ட வனவாசத்தை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் மாற்றாந்தாயின் போக்கு பாராட்டத்தக்கதன்று என் பதை இராமனுடைய இளையவன் சொல்லிலும் செயலிலும் நிரூபிக்கின்றான். கிஷ்கிந்தையில் எதையும் இராமன் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. அடாத செயல்புரிந்த மூத்த வனை ஒழித்துவிட்டு நேர்மை நிறைந்த இளையவனை அரசாள நியமிக்கிறார். கிஷ்கிந்தையிலிருந்து அவர் ஒரு பொருளையும் அயோத்திக்கு எடுத்துச் செல்லவில்லை. அயோத்திக்கு அழைத்துச் சென்ற சுக்ரீவனுக்கு அங்கிருந்து சம்மானம் கொடுத்து அனுப்பு கிறார். லங்காபுரியில் பெரும் போர்புரிந்தது தீமையைத் தகர்த்தற் பொருட்டேயாம். ஜாதிப்பிணக்குக்கு ஆங்கு இடமில்லை. அரக்க இயல்பு படைத்த அண்ணனை மண்ணுலகினின்று அகற்றி விட்டு, நேர்மை பிறழாத இளையவனை நாட்டுக்கு அரசனாக நியமிக்கின்றார் அறம் வளர்த்த நம்பி. இளையவனாகிய விபீஷணனையும் அவர் பிறகு அயோத்திக்கு அழைத்துச் சென்றிருந்தார். விபீஷணனுக்கும் விலையுயர்ந்த ரத்தினம் முதலியவைகளை அயோத்தியினின்று சம்மானமாகக் கொடுத்துத் தென் இலங்கைக்கு அனுப்பினார். வெற்றி கொண்ட வேந்தன் தோல்வியடைந்தவர்களைச் சூறையாடுவது சிற்றியல்பு படைத்த உலகத்தவர் போக்கு. ஆனால் இவ்வுலகில் யாரையும், எந்நாட் டையும் இராமன் சூறையாடவில்லை. கேட்டைக் களைந்தார்; நலத்தை நிலைநாட்டினார். அதற்காகவென்றே அவர் வாழ்ந் திருந்தார். பிற ஆட்சியிலிருந்து பொருளைப் பறிப்பதற்குப் பதிலாகத் தாமே தம் சொந்த நாட்டிலிருந்து பொருளை வெகுமதியாக வழங்கினார்.

ஆக இராமாயணம் நலம் கேடு ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள போராட்டத்துக்கு விளக்கமாக அமைகிறதே ஒழிய ஜாதிப் பிணக்கையோ, மாகாணப் பிணக்கையோ உண்டு பண்ணுவதற்காக அமைந்ததல்ல. பக்தியுடன் இராமாயணம் படிப்பவரும், கேட்பவரும் இத்தகைய வேற்றுமைகளை யெல்லாம் மறந்துவிட்டு, கேட்டை நிராகரித்து, நலத்திலே நாட்டமுடையவர் ஆகின்றனர். இத்தகைய நன்மையை மக்கள் எல்லார்க்கிடையிலும் பரப்புதற்கென்றே இராமாயணம் அமைந்தது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(452)* ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் வால்மீகி மஹரிஷியால், ஸ்ரீராமர் காலத்திலேயே எழுதிக் குசலவர் களால் இராமபிரான் முன்னிலையில் பாடியதாக எழுதப் பட்டிருக்கிறது. வால்மீகி, இராமர் காலத்தில் வடமொழிச் சுலோகங்களும் பேச்சு வார்த்தைகளும் இப்போது உள்ளதைப் போல்தான் இருந்திருக்குமா? பின்னால் வந்தவர்கள் மறுபடி அதைத் திருத்தி வால்மீகி பெயரால் விரிவாய் எழுதியிருப்பார்களா? அக்காலத்திய வடமொழி இலக்கணத்துக்கும் இப்போதுள்ளதற்கும் வித்தியாசம் தெரியுமே. இராமாயண சுலோகங்கள் வாய்ச்சொல்லளவில் இருந்து பிற்காலத்தில் வால்மீகியின் பெயரால் எழுதியதா? இராமர் தென்னாட்டில் உள்ளவர்களோடும் வானர ராட்சசர் களோடும் பேசியது என்ன பாஷை? வானரங்கள் என்றால் குரங்குகளா அல்லது மலை ஜாதியினர் போன்ற வகையினரா?

பதில்: அவதார புருஷர் ஒருவர் உலகில் வரும்பொழுது அவருடைய பெருமைகளையெல்லாம் உலகத்தவர்களுக்கு எடுத்து விளக்குதற்பொருட்டு மஹரிஷி ஒருவரும் அதே காலத்தில் மண்ணுலகில் தோன்றுகிறார். ஸ்ரீ தசரத ராமனுடைய வரலாற்றை உலகுக்கு எடுத்து வழங்கவந்தவர் வால்மீகி மஹரிஷி. அவர் நெடுங்காலத்துக்கு இராமநாம ஜபம்செய்து இராமர் மகிமைகளையெல்லாம் ஞானக்கண் கொண்டு கண்ட றிந்தவர். அப்படி அவர் ஞானத்தைப் பெற்றபொழுது சம்ஸ் கிருத பாஷா ஞானமும் அவருக்கு ஓதாது அமைந்துவிட்டது.

அவர் அமைத்துள்ள காவியத்தின் நடை மிக எளியது. சம்ஸ்கிருத பாஷைக்கு இலக்கணம் வேதகாலத்தில் இருந்ததை விட எளியதாகிறது இதிகாசகாலத்தில். இராமாயண காலத்தை இதிகாசகாலம் என்கிறோம். மொழி ஒன்றை நாளடைவில் எளியதாக மாற்றியமைப்பது மக்கள் இயல்பு. உலகிலுள்ள எல்லாமொழிகளும் இந்த மாறுதலுக்கு இலக்காயிருக்கின்றன. சம்ஸ்கிருத மொழியும் அப்படி நாளடைவில் எளியதாகத் திருத்தி அமைக்கப்பெற்றிருக்கிறது. வால்மீகி இராமாயணத்தை ஒரு சிறந்த இலக்கியமாக எடுத்துக் கொள்ளலாம். எதிர்கால இந்தியா இம்மொழியை இன்னும் எளியதாக மாற்றியமைக்கும். அதன் அறிகுறியை இக்காலத்திலும் கண்டுவருகிறோம். காலக்கிரமத்தில் இம்மகா காவியத்தினுள் ஆங்காங்குச் சிறிது இடைச்செருகல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நுட்பமாக ஆராய்கின்ற வர்களுக்கு அது விளங்கும். ஆனால் அக்காவியம் முழுதும் இராமர் காலத்திலேயே வால்மீகி மஹரிஷியினால் இயற்றப் பட்டது என்பதுதான் ஐதிகம்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இந்து தேச சரித்திரத்தை இப்பொழுது படிக்கிறோம். ஆங்கிலேயர்கள் ஹைதர்அலி, திப்புசுல்தான் முதலியவர்களோடு என்ன பாஷையில் பேசினார் கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவர்களுக்கு இடையில் நிகழ்ந்த வர்த்தமானங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா முழுதுக்கும் எந்தக் காலத்திலாவது ஒரு பொதுப்பாஷை இருந்தது கிடையாது. வெவ்வேறு பாஷைகளில் கல்விமான்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்திருக்கின்றனர். கிஷ்கிந்தையில் ஆஞ்சநேயர் கல்விமானாக இருந்தார். இலங்கையில் இராவணன் கல்விமிகக் கற்றவன். நான்கு வேதங்களையும் அவன் சம்ஸ்கிருதத்தில் கற்றவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சாமவேதத்தை இசையுடன் ஓத அவன் வல்லவனாயிருந் தான். ஒருவேளை ஆஞ்சநேயருக்கும் சம்ஸ்கிருதப் பாண்டித்யம் இருந்திருக்கலாம். சம்ஸ்கிருதப் பண்டிதர்கள் இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்திருக்கின்றனர். தாம் சந்தித்த எல்லாரோடும் ஸ்ரீ ராமன் சம்ஸ்கிருதத்தில் பேசினார் என்று உறுதி கூறமுடியாது.

பல முறைகளைக் கையாண்டு கருத்துக்களை ஒருவர்க்கொருவர் பரிமாறிக்கொண்டார்கள். அதையெல்லாம் வால்மீகி விஸ்தரித்துத் தமது சொந்தமொழியில் அவர் வெளியிட்டிருக்கிறார். அவருடைய கற்பனையும் அதில் கொஞ்சம் கலந்திருந்தால் வியப்பொன்றுமில்லை.

கிஷ்கிந்தையில் வசித்தவர்கள் எல்லாம் நாகரிகத்தில் சிறந்தவர்கள். அவர்களை வானரர் இனமாகக் கருதியது கவியின் கற்பனை. அப்படிக் கருதுதலில் இழுக்கு ஒன்றுமில்லை. நம்மவர்களில் பலர் ஆங்கிலேயரைக் குரங்கு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகிறோம். மக்களை வகைப்படுத்தும்பொழுது விலங்கு இனம், பறவை இனம், மீன் இனம் இப்படியெல்லாம் பிரிக்கலாம். இந்த வழக்கத்துக்கு ஒப்ப கிஷ்கிந்தையில் வசித்தவர்களையெல்லாம் மஹாகவி வால்மீகி வானர இனத்தில் சேர்த்து வைத்தார். கவியின் கற்பனைகொண்டு நாம் அதைப் பொருள் படுத்த வேண்டும். குரு தத்துவத்துக்குப் பிரதிநிதியாயிருக்கிற ஆஞ்சநேயர் அந்த இனத்தில் வைக்கப்படுகிற இடத்துக்கு அந்த இனத்தவரைச் சிறுமைப்படுத்திய செயலாக அது அமையாது. பண்பாட்டில் இராமபிரானுக்கு அடுத்த நிலையிலிருக்கிறார் ஆஞ்சநேயர். கல்வியிலும் அவர் கரைகண்டவர். அவருடைய ஆற்றலோ அளப்பரியது.

கேள்வி: *(453)* கற்பில் சிறந்தவள் சீதையா? அல்லது பாஞ்சாலியா?

பதில்: கற்புடையவர்கள் யார் என்பதற்கு முதலில் விளக்கம் தருதல்வேண்டும். கணவனிடத்திலேயே தன்னுடைய காதல் முழுதையும் யார் ஒருத்தி செலுத்தியிருக்கிறாளோ அவள் கற்புடைய மாது ஆகிறாள். தந்தையிடத்தும், சகோதரர்களிடத்தும் அவள் வைத்திருக்கிற வாஞ்சை வேறு. கணவனிடம் பூண்டுள்ள இணக்கம் வேறு. கணவன் வாழ்க்கைத் துணைவன் ஆகிறான். தூய, இனிய இல்வாழ்க்கைக்கு அவ்விருவரும் விரதம் பூண்டிருக்கின்றனர். அவ்விரதத்தினின்று இம்மியளவும் பிசகாது இருப்பவள் கற்புடைய மாது ஆகிறாள். கணவனிடம் கொண்டுள்ள தூய இணக்கத்துக்குத் தடையாக அவள் வேறு ஓர் ஆடவனை மனம், மொழி, மெய்யால் காதலிப்பாளாகில்

அவள் விபச்சாரம் வாய்க்கப்பெற்றவளாகிறாள். பங்கிடப்பட்ட காதல் என விபச்சாரம் பொருள்படுகிறது. விபச்சாரி ஒருத்தி தூய இல்வாழ்க்கைக்கு உதவமாட்டாள். கற்புக்கும் அவளுக்கும் வெகுதூரம். கணவனைத் தவிர வேறு யாரையும் கனவிலும் காதல் கொள்ளாதிருப்பவளே கற்புடைய மாது ஆகிறாள். கணவனுக்கு வாய்க்கிற இன்பம் மட்டும் அல்ல, துன்பத்தையும் தன்னுடையதாகவே முழு மனதோடு ஏற்றுக்கொள்பவள் கற்புடைய மாது ஆகிறாள். கணவனுக்கு அவள் மனைவி, தோழி, தாய் ஆகவும் இலங்குகிறாள்.

தசரத இராமனுக்கு வாழ்க்கைத் துணையாய் இருந்தவள் சீதை. மாதரசிகள் அனைவருக்கும் அவளே முன்மாதிரியாகிறாள். கற்புடைய மாதர்களனைவரும் சீதை போன்று ஆக முயலு கிறார்கள். அவள் அடைந்துள்ள நிலைக்கு மேலான நிலை யில்லை. கற்பின் சிகரம் சீதை. அவளிடம் புதிதாகப் பண்பு எதையும் சேர்க்க முடியாது. மானுடவடிவம் எடுத்துள்ள கற்பரசிகளுள் சீதையே பரிபூரண நிலையை எட்டியவள் ஆகிறாள். ஆதலால் அவளை வேறு எந்த மாதரசியோடும் சீர்தூக்கலாகாது. மற்ற மாதரசிகள் சீதையின் பண்புக்கு எவ்வளவு பக்கத்தில் வந்திருக்கிறார்கள் என்று ஆராய்வதே முறையாகும்.

பாஞ்சாலி என்பது திரௌபதிக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர் ஆகும். துருபத மன்னனின் புதல்வி திரௌபதியாம். பாஞ்சால நாட்டு ராஜகுமாரியாதலால் பாஞ்சாலி என அழைக் கப்படுகிறாள். அவள் ஒரு நெருக்கடியான சூழ்நிலையை முன்னிட்டுப் பாண்டவர்கள் ஐந்து பேருக்கு மனைவியானாள். இரண்டு ஆடவர்களை மனதால் தீண்டும்பொழுதே மாது ஒருத்தி தன் கற்பை இழக்கிறாள். இது மாறாத பொதுவிதி. ஆயினும் இவ்விதிக்குத் தனி விலக்கு ஆயினாள் பாஞ்சாலி. அதற்கிடையில் கற்பையும் அவள் இழக்கவில்லை. இது ஒரு முரண்பாடாகத் தென்படும். உண்மையில் திரௌபதியின் தூய வாழ்க்கையில் கற்பையொட்டிய முரண்பாடு இல்லை.

முதலில் கணவன்மார் ஐவரின் பாங்கை ஆராய்வோம். எண்ணிக்கையில் அவர்கள் ஐவர் எனினும் மன ஒற்றுமையில் ஒருவர் போன்று ஐவர் இருந்தனர். இது ஓர் அலாதி

எடுத்துக்காட்டு. இவ்ஐவருக்கும் பாஞ்சாலி பதிவிரதையானதற்கு அவளுடைய பழவினைதான் முதற்காரணம். பூர்வஜன்மத்தில் பெண்ணாய்ப் பிறந்திருந்த அவள் மறு ஜன்மத்தில் தனக்கு நல்ல கணவன் வாய்க்கவேண்டுமென்று சிவனாரைக் குறித்துத் தவமிருந்தாள். தவம் பூர்த்தியான நிலையில் பண்பட்ட கணவன் வேண்டுமென்று ஐந்து தடவை பிரார்த்தனை பண்ணினாள். அப்படிச் செய்தது தவமகிமைக்குப் பொருந்தாது. ஆனால் எண்ணியதை எண்ணியாங்கு எய்துவது தவத்தின் விளைவாம். தவத்தின் விளைவும் மேலான வினையின் விளைவும் ஒன்றேயாம். பாஞ்சாலியாக அவள் பிறப்பெடுத்தபொழுது அத்தகைய பழவினை அவளை வந்து சூழ்வதாயிற்று.

சுயம்வரத்தில் அர்ஜுனன் பாஞ்சாலியை வென்றான். சகோதரர்கள் ஐவரும் கூடிப் பரிசாகிய பாஞ்சாலியைத் தாய் குந்திதேவியிடம் கொண்டுவந்தனர். வரும்பொழுதே "அம்மா! நூதனமான பரிசொன்று பெற்றிருக்கிறோம்" என்று உரக்கக் கூவினர். பரிசு என்ன என்பதை அறியாமலேயே அனுபவி யுங்கள் என்று அன்னை இயம்பினாள். பரிசைப் பார்த்ததும் அன்னைக்குத் திகில் உண்டாயிற்று. அவள் சொன்ன சொல் ஒன்றுமே அதுவரையில் பொய்யாகப் போனது கிடையாது. இந்த விபரீதச் சொல்லை எப்படி மெய்யாக்குவது என்று குந்திதேவி மனங்குழம்பினாள். மக்கள் ஐவரும் அதை மெய்யாக்குவோம் என்று முடிவு கட்டினர். ஐவரும் ஒருமை மனத்துடன் அதை மெய்யாக்கினர். திரௌபதியும் மனம் கோணாது அதற்கு உடன்பட்டாள். ஆதலால் வடிவத்தில் மனைவியும் கணவன் மாரும் சேர்ந்து ஆறுபேர். மன அமைப்பிலோ ஒரே பாங்கு. ஆதலால் கற்புக்கு விளக்கமாகப் பாஞ்சாலியும் பாண்டவர் ஐவரும் சேர்ந்து அமைகின்றனர். இது உலகம் காணாத தனிச் செயல் என்று வியாசர் அனுமதி கொடுத்தார். ஆனால் இவர்களைப் போன்று வேறு எந்தச் சகோதரர்களோ அல்லது பெண்பாலோ நடந்து கொள்ளலாகாது என்று வியாசர் எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆக, பாஞ்சாலி ஐவருக்கு மனைவி என்றாலும் அவள் கற்பரசியே. ஏனென்றால் ஆறு பேருடைய மனது ஒரே மனதாக மிளிர்வது அரிதிலும் அரிதாம். கற்பரசியின் பண்பினின்று அவள் பிசகவில்லை.

மகாபாரதத்தில் வந்துள்ள பாத்திரங்கள் பிரபஞ்சத்தில் அமைந்துள்ள பலப்பல தத்துவங்களுக்கு உருவகம் ஆகின்றனர். பண்பட்டுள்ள நல்ல மனோதத்துவத்துக்கு உருவகமாக அமைந்திருப்பவள் பாஞ்சாலி. பஞ்சபாண்டவர்களுக்கு அவள் பதிவிரதையாயிருந்தது பஞ்சேந்திரியங்களுக்கு நல்ல மனது யாண்டும் பதிவிரதையென்னும் கோட்பாட்டைத் தெளிவுற விளக்குகிறது. பாண்டவர்கள் ஐவர்க்கிடையில் அபிப்பிராய வித்தியாசம் கிடையாது. அது பஞ்சேந்திரியங்களுக்கிடையில் முரண்பாடு இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகிறது. ஐம்பொறிகளும் ஒன்றையொன்று அனுசரித்து இருக்கின்றன. பாண்டவர்கள் ஐவரும் ஒருவரையொருவர் அனுசரித்து இருந்தனர். ஐம்பொறிகளுக்கும் ஆற்றல் தருவது மனம். ஒரு பொறி மனதோடு கூடியிருக்கிறபொழுது ஏனைய நான்கு பொறிகளும் இனிது விலகியிருக்கின்றன. அப்படி விலகியிருப் பதால் ஒரு பொறி தன் கிருத்தியத்தை நன்கு நிறைவேற்றுகிறது. இச்செயல் யாண்டும் நிரூபிக்கப் பெற்று வருகிறது. பாண்ட வர்கள் பாஞ்சாலியோடு சேர்ந்திருந்தது இதற்குப் புறவிளக்க மாகிறது. அவள் தர்மனோடு ஒரு வருஷம் வாழ்ந்திருக்கிறாள். அப்பொழுது ஏனைய நான்கு சகோதரர்களும் அவ்விணக் கத்துக்கு இடுக்கண் ஆகாது ஒதுங்கியிருக்கின்றனர். அடுத்தபடி பீமன் அவளோடு வாழ்ந்திருக்கிறான். அப்பொழுதும் அதே நியமனம் அமுலுக்கு வருகிறது. அந்தப் பாங்கில் அர்ஜுனன், நகுலன், சகதேவன் ஆகியவர்கள் முறையே கணவன்மார்களாக இருந்தார்கள். ஒரு கணவனோடு சேர்ந்து வாழ்ந்திருக்கையில் ஏனைய நால்வர் திரௌபதியின் உள்ளத்தில் இடம்பெறுவ தில்லை. ஒரு நாயகனையே உறுதியாகப் பிடித்தவள் ஆனாள். பின்பு ஐவரும் அபேதத்தில் நிலைபெற்றவர்கள். ஆதலால் ஒரே மூர்த்தியின் ஐந்து அம்சங்களில் முறைபிறழாது பாஞ்சாலி ஒன்றித்திருந்தாள் என்பது வெளியாகிறது. இது கற்புக்கு அழகு. மனம் செய்கிற செயலைப் பாஞ்சாலி நிரூபிக்கிறாள். கண்ணோடு மனது சேர்ந்திருக்கிறபொழுது அது கண்ணுக்கே உரியதாகிறது. ஏனைய நான்கு பொறிகளும் ஒதுங்கி நிற்கின்றன. இப்படி ஐந்து பொறிகளுக்கும் மாறி மாறி ஆதரவு தந்து கொண்டிருப்பது மனது. அதனால் மனதின் முழுமை அல்லது

கற்பு அழிந்துபட்டுப் போவதில்லை. அதன் தூய்மைக்கும் பங்கம் வருவதில்லை. இத்தத்துவத்தை உள்ளபடி அறிகிறவர்களே பாஞ்சாலியின் பண்பை உள்ளபடி அறிய வல்லவர் ஆகின்றனர். அவள் ஐவர்க்கும் பத்தினி; கற்புத் தேவதை, தன்னுடைய நிறையினின்று பிறழாதவள், மனதுக்கு எப்படி இந்த நிறைநிலை சாத்தியமாகிறதோ அப்படியே பாஞ்சாலிக்கும் சாத்தியமாயிற்று. ஆதலால் தன்னுடைய அலாதியான கடமையில் அவள் கற்புத் தேவதையாகவே இலங்கினாள். ❑

25. மஹாபாரதம்

கேள்வி: *(454)* மஹாபாரத வரலாறு இல்லாது பகவத்கீதை தன்போக்கில் வடிவெடுத்திருந்தால் அது வெறும் ஆகாயக்கோட்டையாகப் போயிருந்திருக்கும். பகவத்கீதையில்லாது வெறும் மஹாபாரத வரலாறு மட்டும் அமைந்திருந்தால் அது பொழுதுபோக்குக்கான கதையாக முடிந்திருக்கும். ஆனால் கீதையும் பாரதப் போரும் சேர்ந்தே அமைந்திருப்பதால் இரண்டுக்கும் மதிப்பு வந்துள்ளது எனச்சிலர் கருதுகின்றனர். இக்கொள்கை சரிதானா?

பதில்: இக்கொள்கை சரியன்று. ஓர் உபமானத்தின் மூலம் விஷயத்திற்கு வருவோம். வாழை, பலா, மா ஆகிய முக்கனிகள் இருக்கின்றன. ஐதிகமாக இம் முக்கனிகள் மதிப்பு மிகப் பெறுகின்றன. கடவுள் நைவேத்தியத்திற்கும் மக்கள் உணவுக்கும் இம் மூன்று கனிகள் நன்கு பயன்படுகின்றன. கனிகளைத் தோற்றுவித்துள்ள மரங்களுள் மாமரமும், பலா மரமும் கட்டடங்கள் அமைப்பதற்கும், தட்டு முட்டுச் சாமான்கள் செய்வதற்கும் நன்கு பயன்படுகின்றன. வாழை மரமோ உண்பதற்கு இலையும், வேறுபல காரியங்களுக்கு மட்டைகளும் தந்து உதவுகிறது. வாழை மரத்தில் எப்பகுதியும் வீண் போவதில்லை. பழம் தராத வாழைமரம் அமைந்திருந் தாலும் அதில் பிரயோஜனம் ஏராளமாக உண்டு. அதேவிதத்தில் பழங்கள் தராத பலாவும், மாமரமும் நிழலுக்கு உதவுகின்றன. கடைசியில் மரச்சாமான்களாக வடிவெடுக்கின்றன. ஆக, பழங்கள் ஒருபோக்கில் பயன்படுகின்றன. அவைகளை உண்டுபண்ணிய

மரங்கள் மற்றொரு போக்கில் பயன்படுகின்றன. மரங்களில்லாது இப்பழங்கள் ஏதோ ஒருவிதத்தில் வந்து வாய்த்தன என்று வைத்துக்கொண்டாலும் அவைகளின் பயனுக்குப் பழுது ஏதும் வராது. ஆனால் இயற்கையின் அமைப்போ மரங்களும் அவை களினின்று உண்டாகிற பழங்களும் இணைபிரியாது இருக் கின்றன. தத்தம் போக்கில் அவைகள் நன்கு பயன்பட்டும் வருகின்றன.

மஹாபாரத வரலாற்றை அறிந்து கொள்ளாமலேயே மேல் நாட்டவர்கள் பலர் கைகளுக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பு பகவத்கீதை எட்டியிருக்கிறது. அதை ஆராய்ந்த அறிஞர்கள் தங்களுடைய வாழ்க்கையையே இனிது திருத்தியமைத்துக் கொண்டனர். மஹாபாரத நூலின் ஒரு சிறுபகுதி பகவத்கீதை என்னும் உண்மையை அவ்வறிஞர் அறிந்திலர். ஆயினும் அவர்களுடைய வாழ்க்கையைப் பெருவாழ்க்கையாக மாற்றி அமைப்பதற்குப் பகவத்கீதை உறுதுணையாயிற்று.

இந்தியாவில் மயக்கம் நிறைந்த இந்நாளிலும் மஹாபாரத வரலாற்றைப் பக்தியுடன் படிக்கிறவர்கள் பலபேர் இருக்கின் றனர். அன்னவர்களில் பலர் பகவத்கீதையைப் பற்றி ஒன்றுமே அறிந்திலர். ஆயினும் மஹாபாரதக் கதை அவர்களை நன்மக் களாகத் திருத்தியமைப்பதற்குப் பேருதவி புரிந்து வருகிறது. பரதகண்டம் முழுதிலும் பாரதக் கதை படிப்பதின் வாயிலாக அறநெறியைச் சார்பவர்கள் எண்ணிறந்த பேர் இருக்கின்றனர்.

மஹாபாரதம் என்னும் கனியினின்று பிழிந்தெடுத்த சாறு போன்றது பகவத்கீதை. பகவத்கீதை என்னும் வாழ்க்கைத் தத்துவ நூலுக்குப் பரந்த வியாக்கியானமாக அமைந்திருப்பது மஹாபாரத வரலாறு. பகவத்கீதை சாஸ்திரத்தையும் மஹாபாரத இதிகாசத்தையும் இணைத்துப் படித்து ஆராய்ச்சி செய்வது ஒப்புயர்வற்ற படிப்பு முறை என்பது சொல்லாமலே விளங்கு கிறது. ஆயினும் பகவத்கீதை என்னும் சாஸ்திரத்திலிருந்து மஹாபாரதம் என்னும் இதிகாசத்தைப் பிரித்தெடுத்தால் இரண்டும் பொருளற்றவைகளாகப் போய்விடுகின்றன என்பது உண்மையன்று. மனிதனுக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன. ஒரு காலை ஒடித்துவிட்டால் மற்ற கால் பயன்படாது போகிறது. அந்தப்பாங்கில் அமைந்தவைகள் அல்ல மஹாபாரதக் கதையும்,

பகவத்கீதையும். சர்க்கரை தன் போக்கில் பயன்படுகிறது. தேன் தன் போக்கில் பயன்படுகிறது. ஒன்றன் பயன் மற்றொன்றைச் சார்ந்ததன்று. ஆயினும் சர்க்கரையையும், தேனையும் இணைத்துப் பெருமைப்படுத்துகின்றபொழுது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் இருக்கிறது என்று இயம்புவர் உலகத்தவர். சர்க்கரைப் பந்தலுக்கு நிகராகப் பரந்த பாங்கில் அமைந்திருக்கிறது மஹாபாரதம். அதில் தேன்மாரி சொட்டுவது போன்று அமைந்திருக்கிறது பகவத்கீதை. இரண்டு பகுதிகளும் தத்தம் போக்கில் மக்களுக்கு இனிது பயன்பட்டு வருகின்றன. அவைகளிரண்டும் இயல்பாகவே இணைந்திருப்பதால் அவைகள் இரண்டையும் இணைத்து வைத்து ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் பெரும்பயன் அடைவார்கள் என்பது திண்ணம். தனித்திருந்தும், இணைந்திருந்தும் அவ்விரண்டு நூல்கள் மக்களுக்கு எக்காலத்திலும் பயன்படும். அவைகளைப் பிரித்து வைத்தால் இரண்டும் வெறுமனே பயன்படாது போய்விடும் என்பது உண்மையன்று.

கேள்வி: *(455)* இராஜாஜியின் வியாசர் விருந்திலும் அ.லெ.நடராசனின் மொழிபெயர்ப்பிலும் கிருஷ்ணனிடம் உதவிபெறத் துரியோதனன் முதலிலும் அர்ஜுனன் பின்னாலும் சென்றதாக உள்ளது. தங்களின் கீதைக்கான வியாக்கியானத்தில் முகவுரையில் அர்ஜுனன் முதலில் வந்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த முரண்பாட்டிற்கு விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: இந்த முரண்பாடுகள் மஹாபாரத நடைமுறைக்கு எந்த விதத்திலும் ஊறு செய்யமாட்டா. வியாசர் இயற்றிய மஹாபாரதத்தில் துரியோதனன் முதலில் வந்ததாக அமைந்திருக்கிறது. ஆகவே, அதைத்தான் பிரமாணமாக ஏற்றுக் கொள்வது முறை. அதனின்று மாறுபட்டதாகத் தபோவனம் கீதையின் முன்னுரையில் எழுதியிருப்பது அர்ஜுனனுடைய மனப்பான்மையை வெளிப்படுத்துதற்பொருட்டேயாம். கிருஷ்ண பரமாத்மா சயனித்துக் கொண்டிருந்த கூடத்தினுள் ஒரே ஓர் ஆசனம்தான் போட்டு வைக்கப்பட்டிருந்தது. முதலில் வந்த அர்ஜுனன் அதைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் அந்த ஆசனம் அமைந்த இடமோ கிருஷ்ணனுடைய தலைமாட்டின்

பின்புறம். கிருஷ்ணன் விழித்து எழுந்தவுடன் தன்கால் பக்கம் இருப்பதைத்தான் முதலில் காண்பான். உறங்குபவனை எழுப்புவது பொருந்தாது. விழித்துக் கொண்டவுடன் சிரமமின்றி அவனுடைய பார்வையில் படுவது கால் பக்கம் இருக்கும் பிரமுகனேயாம். இக்கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு முதலில் வந்த அர்ஜுனன் வேண்டுமென்றே பக்தி பூர்வமாகக் கிருஷ்ணனுடைய பாதத்தின் பக்கம் நின்று கொண்டிருந்தான் என்பது நம் கற்பனை. நல்ல கருத்துக்களை விளக்குதற் பொருட்டுச் சிறிய மாறுதல் பண்ணுவது பெரிய திட்டத்துக்கு இழுக்காகாது.

கேள்வி: *(456)* சூதும் வாதும் வேதனை செய்யும் என அறிந்தும் தர்மர் சூதாட்டத்தில் ஈடுபட்டது கௌரவர்களின் சூழ்ச்சியை அறியாமலா? உலக ஆசையினாலா?

பதில்: சூதும் வாதும் வேதனை செய்யும் என்னும் கோட்பாட்டைப் பாண்டவர்களுள் மூத்தவனாகிய யுதிஷ்டிரன் நன்கு அறிந்திருந்தான். அது பொல்லாதது என்பதை அதில் ஈடுபட்டதன் விளைவாக அவன் நன்கு அறிந்திருந்தான். ஆயினும் பாண்டவர்கள் தங்களுக்காக என்று தாங்களே முயற்சிபண்ணித் தேடிக்கொண்ட இந்திரப்பிரஸ்தம் எனும் நகரத்தையும் அதில் அமைந்திருந்த அழகிய அற்புதமான சபா மண்டபத்தையும் கைப்பற்றக் கௌரவர்கள் தீர்மானித்தார்கள். அதற்கேற்ற சூழ்ச்சியை அவர்கள் கையாண்டார்கள். தர்மபுத்திரனாகிய யுதிஷ்டிரனைக் கௌரவ சகோதரர்கள் தங்களின் தந்தையாகிய திருதராஷ்டிரன் வாயிலாக ஹஸ்தினா புரத்துக்கு அழைத்தார்கள். பெரியப்பாவாகிய திருதராஷ் டிரனுடைய ஆணையை யுதிஷ்டிரன் ஒருபொழுதும் மீறி நடக்கமாட்டான். ஹஸ்தினாபுரத்துக்கு அழைத்த பிறகு பொழுது போக்குக்காகச் சூதாடும்படி சகுனியும் துரியோதனனும் யுதிஷ் டிரனிடம் வேண்டினார்கள். அவர்களுடைய வேண்டுதலைப் புறக்கணிக்க யுதிஷ்டிரனால் முடியவில்லை. சூதாட்டம் பொல் லாதது என்று சொல்லிக்கொண்டே அவன் அதில் ஈடுபட்டான். அதன் விளைவு விளையாட்டாகச் செய்தது வினையாக வந்து முடிந்தது. அவ்வினையையும் அவன் அமைதியாக

ஏற்றுக்கொண்டது அவனுடைய பண்பாட்டிற்கு அறிகுறியாகும். உயிர்வகைகளுக்கிடையில் விவேகம் படைத்தவர்கள் யாரும் சூதாட்டத்திற்குப் பக்கத்தில் போகலாகாது என்னும் பெரிய பாடத்தை யுதிஷ்டிரன் நன்கு புகட்டியிருக்கின்றான். பெரியப் பாவின் சொற்படி தர்மன் நடந்துகொண்டான். அதன் விளை வாக வந்த வனவாச வாழ்க்கையை அவன் அமைதியோடு ஏற்றுக் கொண்டான். தீவினையில் இறங்கலாகாது என்ற பாடத்தைத் தர்மன் வாழ்க்கையில் இருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

கேள்வி: *(457)* சூதாட்டம் வேண்டாம் என்று பீஷ்மர் ஏன் தடுக்கவில்லை?

பதில்: பீஷ்மர் ஒரு நிறைஞானி. தெய்வீகப் பேராற்றல் மிக வாய்க்கப்பெற்றவர். யோக சாதனங்களின் உச்ச நிலையை எட்டியவர். அன்னவர் பீஷ்மாச்சாரியர் என்று பாராட்டப் பெறுகின்றார். அத்தகையவர் சூதாட்டத்தை மிக எளிதில் தடுத்திருக்கலாம். அது மட்டுமன்று. சூதாடியதன் விளைவாகப் பாண்டவர்களுக்கு வந்த அவமானத்தையும் தடுத்திருக்கலாம். அதற்கெல்லாம் மேலாகத் திரௌபதியின் மீது சுமத்தப் பட்டிருந்த மானபங்கத்தைத் தடுத்திருக்கலாம். மற்று அவரோ இத்தகைய பொருந்தாத நிகழ்ச்சிகளுக்கிடையில் ஒரு வேற்றார் போன்று, உதாசீனர் போன்று இருந்து விட்டார்.

குரு வம்சத்துக்குரிய சிம்மாசனத்தின் மீது பொருத்தமான மூர்த்தியை அமர்த்தும் வரையில் தம்முடைய குடும்பக் கடமை களை அவர் புறக்கணிக்கலாகாதென்று அன்னை சத்தியவதி அவருக்கு ஆணையிட்டிருந்தாள். அந்த ஆணையின்படி அவர் ராஜகுமாரனாகிய யுதிஷ்டிரனை யுவராஜாவாக சிம்மாசனத்தின் மீது அமர்த்தினார். அதன் பொருட்டு அவர் துரோணாச்சாரியர், கிருபாச்சாரியர், விதுரர் முதலியவர்களோடும் கலந்து பேசினார். அவர்கள் எல்லாரும் அதை முற்றிலும் பொருத்தமான செயல் எனப் பாராட்டினர். ஆனால் திருதராஷ்டிரனுக்கு மட்டும் அச்செயலில் திருப்தி உண்டாகவில்லை. நல்ல செயல் ஒன்றில் ஈடுபடும்பொழுது உலகத்தவர் எல்லாரையும் திருப்திபடுத்த முடியாது என்பது பீஷ்மருக்குத் தெரியும். அதன் பிறகு பீஷ்மர் குடும்பக்காரியங்களில் தலையிடவில்லை. அன்னையின்

ஆணையை நிறைவேற்றிவிட்டதாக அவர் தமக்குள் திருப்தி அடைந்திருந்தார். ஒரு நிறைஞானியின் பாங்கில் உலக நிகழ்ச்சி களுக்கு அவர் சாட்சி மாத்திரமாக இருந்தார். தாயாதிகளாகிய பாண்டவ இளைஞர்களும் கௌரவ இளைஞர்களும் அவரவர் மனபரிபாகத்திற்கேற்றபடியே வாழ்க்கையில் பிரவேசித்தனர். அவையாவையும் பீஷ்மாச்சாரியர் சாக்ஷி மாத்திரமாயிருந்து கொண்டு பார்வையிட்டு வந்தார். திரௌபதிக்கு மானபங்கம் வந்தபொழுது அது தம் குடும்ப கௌரவத்துக்குப் பொருந்தாதது என அவர் பொருள்படுத்தவில்லை, அதில் தலையிடவுமில்லை. வேற்றான் போன்று அந்நிலையில் அவர் நடந்துகொண்டார். அதற்கிடையில் "குரு வம்சத்துக்கு அழிவு வந்துவிட்டது" என்னும் ஒரு கருத்தை மட்டும் அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் அனைவரின் காதில் விழும்படித் தெரிவித்தார். தர்மத்தைக் கடைப்பிடிக்கின்றவன் பல சோதனைகளுக்கிடையில் வெற்றி யடைவான், அதர்மத்தில் ஈடுபடுகிறவன் ஆரம்பதசையில் படாடோபத்தோடு மேல்நிலைக்கு வந்து பிறகு அறவே அழிந்து பட்டுப் போவான் என்னும் பேருண்மை பாரதப் போரின் மூலம் வெளியாயிற்று. பீஷ்மர் தம்முடைய ஆதிக்கத்தைப் பயன்படுத்தா திருந்தது அவருடைய பெருமைக்குச் சான்றாகிறது. எவ்விதத் திலும் தீமை வெல்லாது; எவ்விதத்திலும் தர்மம் அழிந்துபட்டுப் போகாது என்பது இறைவனுடைய நியதி. குடும்பக் காரியங்களில் சம்பந்தப்படாதவர் போன்றிருந்து இப்பேருண்மை வெளியாவதற்குப் பீஷ்மருடைய அமைதி உதவியது.

கேள்வி: *(458)* இன்றைய பழக்கத்தில் சூது விளையாடு பவர்களை நல்ல தரம் உடையவர்களாக உலகம் கருதுவ தில்லை. தர்ம புத்திரர் சூது விளையாடினது ஒரு தவறு. அதிலும் மனைவியை வைத்துச் சூது விளையாடியது மற்றொரு தவறு, இங்ஙனம் சூது ஆடித் தோற்று, பிறகு ஒரு ஊராவது கொடுக்கவில்லை என்று ஜெயித்தவர்களை யும் உறவினர்களையும் போரில் மடியச் செய்தது தர்மமா? அவரைத் தர்மர் என்று சொல்லுவது பொருந்துமா?

பதில்: தர்மத்தினின்று சிறிதேனும் பிசகாமையினால் பாண்டவர்களில் மூத்தவராகிய யுதிஷ்டிரருக்குத் தர்மராஜன்

என்கின்ற பெயர் வந்தது. சூதாடுதல் என்னும் அதர்மம் ஒன்றை அவர் வாழ்க்கையில் ஒருதடவை செய்தார். அது என்னென்ன கேடுகளையெல்லாம் விளைவிக்கக் கூடியது என்பதையும் அவருடைய வாழ்க்கையிலேயே அவர் அனுபவித்துள்ளார். அந்தச் சூதாட்டத்தின் விளைவாக நாடு நகரத்தையும் மனைவியையும் இழந்தார். அவருக்கு முற்றிலும் கட்டுப்பட்டிருந்த நிலையில் அவருடைய உடன் பிறந்தவர்களும் மனைவியும் அதனால் வந்த நஷ்டத்துக்கும் அவமானத்துக்கும் உடன்பட்டார்கள். தமக்கு விளைந்த அந்தத் தீய வினைப் பயனை அமைதியோடு ஏற்றுக்கொண்டது தர்மபுத்திரரிடம் நாம் காணும் தர்ம மனப்பான்மையாகும். தீவினைப்பயன் யாரையும் விட்டுவிடாது என்பதற்குத் தர்மராஜாவே சான்று ஆகிறார். மனிதனிலும் மேலானது தர்மம். தர்மத்தைக் கடைப்பிடிப்பதாலேயே மனிதன் மேன்மையடைகின்றான். தீவினைப்பயனை அமைதியாக ஏற்றுக்கொள்ளுவதும் ஒருவித தர்மமாகிறது. யுதிஷ்டிரரும் அவருடைய உற்றாரும் தங்களுக்கு நேர்ந்த தீவினைப்பயனை முழுமனதோடு ஏற்றுக்கொண்டனர். அந்தப் பெரிய பாடத்தை அவருடைய வாழ்க்கையினின்று நாம் கற்றுக்கொள்கிறோம். பிறகு நாட்டைச் சூதாட்டத்தில் வென்ற கௌரவர்களோடு அவர் ஏன் சண்டைக்குப் போனார் என்ற கேள்வி எழுந்திருக்கிறது. உடன்படிக்கைப் பிரகாரம் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் யார் கண்ணுக்கும் தென்படாத அக்ஞாத வாசமும் செய்துவிட்டு வந்தால் நாட்டைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். அந்த உடன்படிக்கைப்படி கௌரவர்கள் நாட்டைத் திருப்பிக் கொடுக்கவில்லை. போர்புரிந்து அதைப் பெறவேண்டிய அவசியம் வந்தது. எனவே அவர் போர் புரிந்ததும் அறச்செயல் ஆகும்.

கேள்வி: *(459)* பீஷ்மர் ஏன் துரியோதனனைத் திருத்தவில்லை?

பதில்: பாட்டனார் என்கின்ற முறையில் பீஷ்மர் தம்முடைய அதிகாரத்தைத் துரியோதனன் மீது செலுத்தி அவனைத் திருத்த முயலவில்லை. ஆனால் ஒரு தத்துவஞானியினுடைய ஸ்தானத்திலிருந்துகொண்டு அவனுடைய போக்கு

அவனுக்குக் கேடு விளைவிக்கும் என்பதைத் தெரிவித்தார். அப்படித் தெரிவித்தும் துரியோதனன் நல்வழிக்குத் திரும்பவில்லை. அங்ஙனம் திருந்தாதவனை உதாசீனனாக இருந்து பீஷ்மர் புறக்கணித்திருக்கலாம். அப்படிச் செய்யாது அவனுக்குச் சேனாதிபதியாக இருக்க ஏன் சம்மதம் கொடுத்தார் என்னும் கேள்வி அடுத்தபடியாக எழக்கூடும்? கெட்டவனாகிய துரியோதனனுக்குப் பீஷ்மாச்சாரியர் சேனாதிபதியாக இருந்ததிலும் கோட்பாடு ஒன்று உளது. தம்மிடத்திலிருக்கும் தகைமையை யார் கேட்டாலும் தடையின்றி அதை எடுத்துக் கொடுப்பது அவர் கொள்கையாயிருந்தது. அதைத் துரியோதனனுக்கு அவர் எடுத்து இயம்பினார். "நீ கேட்பது என்னிடத்து இருப்பதினால் நான் பூண்டுள்ள கொள்கைப்படி அதை உனக்கு எடுத்துக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீ விரும்பிய பிரகாரம் உனக்குச் சேனாதிபதியாக இருந்து செயல்புரிகிறேன். ஆனால் யுத்தத்தில் நீ தோற்றுப் போவாய்" என்று அவர் இயம்பினார். அப்படிச் சொன்னது அவனுக்குப் பேருபகாரம். ஆனால் துரியோதனன் அதைக் கேட்டுக்கொள்ளவில்லை. பீஷ்மர் துணைபுரிந்தாலும் கேடு வெல்லாது என்பது பீஷ்மர் உலகுக்கு வழங்கியுள்ள பெரிய கோட்பாடு ஆகும்.

கேள்வி: *(460)* கர்ணனுக்கு மறு பிறவி உண்டா?

பதில்: கர்ணன் ஓர் அலாதியான பண்புடையவன். சுயநலமற்ற ஒரு வீரன். கேட்டிற்கு உதவிபுரிந்தும் அதில் தன்னைச் சம்பந்தப்படாதவாறு வைத்துக் கொண்டவன். கேட்டுக்கு உதவிபுரிந்து அதில் தன்னைச் சம்பந்தப்படாதவாறு வைத்துக்கொண்டவர்கள் பீஷ்மரும் கர்ணனும் ஆவார்கள். மனிதன் எதைச் செய்கின்றான் என்பது முக்கியமானதன்று. எத்தகைய மனப்பான்மையுடன் செய்கிறான் என்பதையே கருத்தில் கொள்ளவேண்டும்.

பாரதப் போரில் கர்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் நிகழ்ந்த கடைசி நாள் போரில் கர்ணன் ஆயுதங்களையெல்லாம் இழந்தான். தேர்ச்சக்கரம் பூமியில் புதைந்துவிட்டது. அர்ச்சுனன் கர்ணன்மீது அம்புகளைச் சரமாரியாகப் பொழிகின்றான். கர்ணன்மீது அவ்வம்புகள் பாயவில்லை. அர்ச்சுனன் வியப்பு

அடைகின்றான். கண்ணன் தேரிலிருந்து இறங்கி யாசகன் வேடம் பூண்டு கர்ணனிடம் செல்கின்றார். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் நிலையில் தன்னிடம் யாசகன் வருவதைப் பார்த்துக் கர்ணன் வருத்தப்படுகின்றான். "இந்த நிலையிலா நீ என்னிடம் வரவேண்டும்? நீ கேட்பதை எப்படி இல்லை என்று கூறுவேன்! இதுவரைக்கும் நான் யாருக்கும் இல்லை என்று சொன்னதில்லை. இப்போது அந்த நிலையை நீ உருவாக்கிவிட்டாய்" என்று கூறிக் கர்ணன் வருந்தினான். யாசகனாக வந்த கண்ணன் கூறியதாவது: "கர்ணா! உன்னிடம் இருப்பதைத்தான் கேட்க வந்துள்ளேன்" என்றான். "என்னிடம் ஏதாவது ஒன்று இருக்குமானால் அது இப்போதே உனக்கு உரியதாகும்" என்றான் கர்ணன். "நீ இதுவரை செய்த தானத்தின் பலன்களை எல்லாம் எனக்குத் தாரை வார்த்துக்கொடு!" என்று கண்ணன் கேட்டார். "தானம் நான் செய்துள்ளேனா? அதன் பலன் என்னிடத்தில் இருக்கிறதா? அப்படி இருக்குமானால் அதை இப்போதே உனக்குத் தாரை வார்த்துத் தருகிறேன்" என்று கூறி அம்பை எடுத்துத் தொடையைக் குத்தி இரத் தத்தைக் கையில் எடுத்துத் தான பலன்களையெல்லாம் கண்ணனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தான். கண்ணன் தமது விசுவரூபத்தைக் காட்டிக் கர்ணனுக்கு முக்தி எனும் பேற்றினை நல்கினார்.

கர்ணன் தன்னலமற்றுக் கர்மம் செய்து கர்மத்தின் பலன்களையெல்லாம் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டான். ஆகையால் மீண்டும் பிறப்பு எடுப்பதற்கு அவனுக்கு அவசியம் இல்லை. கர்மம்தான் பிறப்புக்குக் காரணம். கர்மபலன்களை எல்லாம் கடவுளுக்குப் படைத்த பிறகு பிறப்பு இல்லை.

கேள்வி: *(461)* கர்ணன் பாண்டவர்களுக்கு மூத்தவன் என்பதைத் தாய் குந்திதேவி போர் துவங்குவதற்கு முன்பு அவனிடம் போய்த் தெரிவித்தாள். அவ்வுண்மையைப் பயன்படுத்தி அவன் நாட்டைப் பெற்றுத் துரியோதனனுக்குக் கொடுத்திருக்கலாமல்லவா?

பதில்: கர்ணன் பிறந்து வளர்ந்து வந்த காலமெல்லாம் தனக்குத் தாய் தந்தையர்கள் யார் என்பதை அறிந்திலன்.

தேர்ப்பாகனும் அவனுடைய மனைவியும் தனக்கு வளர்ப்புத் தந்தை தாய் என்பதை யூகத்தால் அவன் அறிந்திருந்தான். தன்னுடைய பரிதாபகரமான நிலையைக் குறித்து அவன் வருந்தியது கிடையாது. தன்போக்கில் தன்னுடைய வாழ்வை மேலானதாக மாற்றியமைத்து வந்தான். தற்செயலாய்த் துரியோதனனுக்கு உற்ற பெரிய நண்பனானான். அந்த நட்பில் அவன் ஆழ்ந்து ஊறியிருந்தான். துரியோதனனுக்காகப் போர்புரிந்து அர்ஜுனனை வெல்லுவது அல்லது போரில் மடிவது என அவன் தீர்மானித்திருந்தான். அத்தகைய நெருக்கடியின்பொழுது தான் குந்திதேவி வந்து அவனைப்பற்றிய வரலாற்றை அவனுக்குத் தெரிவித்தாள். அதைப்பற்றி அவன் மகிழ்ச்சியடைய வில்லை. தனக்காகவென்றோ, தன்னுடைய தோழனாகிய துரியோதனனுக்காக வென்றோ அவ்வுண்மையைப் பயன்படுத்த அவன் விரும்பவில்லை. துரியோதனனுக்காகவென்று போர் புரிவதையே அவன் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். பெரிய பதவி ஒன்றைப் பெறுவதைவிடத் தன் நண்பனுக்கு உயிரைக் கொடுப்பதை உயர்ந்ததாக அவன் எண்ணியிருந்தான். எண்ணிய படியே செயல்புரிந்தான். துக்கத்துக்கேதுவான சூழ்நிலையிலும், துக்கப்படாதிருந்து தோழனாகிய துரியோதனனுக்குத் தொண்டு புரிந்து உயிரைக் கொடுத்தது அவனுடைய வீரச்செயலாகும்.

கேள்வி: *(462)* மஹாபாரத யுத்தத்திலே கண்ணன், கர்ணனிடம் இறுதிக்கட்டத்தில் அவனைக் காத்து நின்ற தர்ம தேவதையை (புண்ணியத்தின் பலன்களை) யாசித்துப் பெற்றான் என்று கூறப்படுகிறது. புண்ணியம் பாபம் என்று சொல்லப்படுவது ஒருவனின் செய்கைகளின் விளைவு. அதேபோல் கர்ணனின் கொடைத் தன்மையின் விளைவு தர்ம தேவதையாக அவனைக் காத்து நிற்கின்றது கடைசி நேரத்தில். அது அவன் சக்திக்கு உட்படாதது. அதைத் தானமாக அளிக்க அவனுக்குச் சாத்தியப்படுமா? நற்காரியங்களைச் செய்துகொண்டே அதன் பலாபலன்களை இழக்கமுடியுமா? பாபம் செய்தால் ஒருவேளை நற்பலன்களை இழக்கலாம். எந்த நற்செயலின் விளைவாக இந்தப் புண்ணியங்கள் தர்ம தேவதையாக அதன் கடன் உணர்ந்து

அதுவாக நியதிப்படி அவனை அடைந்ததோ அதே நற்செய்கை தானமளிப்பது காரணமாக அந்தப் புண்ணி யங்கள் அவனை விட்டு நீங்குவது என்பது நியதிக்கு மாறு பட்ட செயல் அல்லவா? அப்படியே அந்தப் புண்ணியங்கள் அவனைவிட்டு அகன்றுவிட்டது என்றாலும் இப்போது கண்ணனுக்கு மகத்தான தானம் செய்கிறானே அதற்குரிய தேவதை இத்தனைநேரம் இவனைக் காத்து நின்றதைவிட அதிக வலிவுடையது ஒன்று இவனுக்கு பாதுகாப்பளிக்க வேண்டியது நியாயமல்லவா? அப்படியில்லாமல் அர்ஜுன னால் கர்ணன் கொல்லப்படுவது முறையா? இது எல்லோரு டைய செயலுக்கும் அப்பாற்பட்டது எனக் கீதையின் சாரம் அதற்குக் காரணமானால் இம்மாதிரி யாசிப்பது போன்ற சூழ்ச்சி நாடகங்கள் அவசியமில்லை அல்லவா!

பதில்: எது பாபம், எது புண்ணியம் என்பதைத் தெளிவு படத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு மனிதன் எந்நிலையில் இருக்கின்றானோ அந்நிலையினின்று அவனை மேலே உயர்த்தும் செயல் எதுவோ அது அவனுக்குப் புண்ணியமாகும். அவன் இருக்கும் நிலையிலிருந்து அவனைக் கீழ்மைக்குக் கொண்டு வரும் செயல் பாபம் ஆகும். சான்று ஒன்று எடுத்துக்கொள் வோம். ஒரு மாணாக்கன் நான்காவது வகுப்பிலும் மற்றொருவன் ஆறாவது வகுப்பிலும் வாசிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். நான்காவது வகுப்பு மாணாக்கன் ஐந்தாவது வகுப்புக்குப் போவது புண்ணியச் செயல். ஆறாம் வகுப்பில் வாசிக்கும் மாணாக்கன் அவ்வகுப்புக்குத் தகுதியற்றவனென்று ஐந்தாம் வகுப்புக்குக் கடத்தப்படுவானாகில் அவனுக்கு அது பாபச் செயல். இருவரும் வந்தது ஐந்தாவது வகுப்புக்கு எனினும் ஒருவனுக்குப் புண்ணியம் ஆகிறது. மற்றொருவனுக்கு அது பாபம் ஆகிறது. பாப புண்ணியத்தை அளப்பதற்கு இதை மாதிரியாக வைத்துக்கொள்ளலாம்.

வினைப்பயன் மனிதனுக்குப் பிறவியை வளர்த்துக் கொண்டே போகிறது. கெட்ட வினையில் பற்றுதல் வைத் திருப்பவனுக்குப் பாபம் வளர்ந்து கீழான பிறவி அமைகிறது. நல்ல வினையில் பற்றுதல் வைத்து அதைத் தீவிரமாக செய்கிறவனுக்குப் புண்ணியம் வளர்ந்து நல்ல பிறவி கிட்டுகிறது.

நல்வினையில் பற்றுதல் வைப்பது ஒன்றே தீவினையை அகற்று தற்கு உற்ற உபாயம். நல்வினையில் ஊறி வளர்ந்த பிறகு அந்த வினையையும் பற்றற்றுச் செய்து பழகவேண்டும். பற்றற்ற செயல் என்றால் பொருள் என்ன என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். டாக்டர் ஒருவர் நேர்மையாக வைத்தியம் பண்ணுகிறார். அது நல்வினை. தனக்கு ஏராளமாகப் பணம் சேரவேண்டுமென்று எண்ணி நோயாளிகளிடமிருந்து கண்டிப் பாகப் பணம் வாங்கித் தன் கடமையைச் செய்வது பற்றுடைய நல்வினையாகும். பணத்தைப் பற்றி ஒன்றும் நினையாது தன் கடமையை மகிழ்வுடன் செய்துகொண்டு போவது நிஷ்காமிய கர்மமாகும்; அதாவது அதுவே பற்றற்ற வினை. பணமுடையவர் பணமில்லாதார் ஆகிய எல்லாருக்கும் ஒரே விதமான சிகிச்சை, பிறகு யார் எதைக் கட்டணமாகக் கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளுதல், ஏற்றுக்கொண்ட செல்வத்தையும் நல்ல காரியத்திலேயே செலவிட்டுக் கொண்டிருத்தல் - இதுவே பற்றற்ற வினையாகும். பற்றற்ற வினை மனதைத் தூயதாக்குகிறது. தூயமனத்தில் நல்ல ஞானம் உதயமாகிறது.

கர்மயோகி ஒருவன் கடவுள் பொருட்டே வாழ்ந்திருக்க வேண்டும். கடவுள் பொருட்டே கர்மம் செய்ய வேண்டும். அவன் தனக்குக் கிடைக்கும் பணத்தைத் தெய்வம் தந்தது என்று கருதுகிறான். அதைச் செலவிடுவதை அவன் தேவ ஆராதனையாகக் கருதுகிறான். நாள்தோறும் தனது ஜீவிதத்தை அவன் இறைவனுக்கே ஒப்படைத்துப் பழகுகிறான். ஆத்ம சாதகன் ஒருவன் தான் பயிலுகின்ற பக்தி, தியானம், பணிவிடை ஆகிய எல்லாவற்றையும் அன்றன்று இறைவனுக்குச் சமர்ப்பணம் பண்ணிவிடுகிறான். அப்பொழுதுதான் அவன் முக்திக்குத் தகுதி உடையவன் ஆகின்றான்.

"இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பது மறைமொழி.

நல்வினை தீவினை ஆகிய இருவினைகளும் இருள் சேர்ந்தவைகள் என்று கருதப்படுகின்றன. அவைகள் பிறவியைப்

பெருக்குவதே அதற்குக் காரணமாகும். ஆகவே நல்வினையும் ஒருவகைப் பந்த பாசமாகிறது. கொடை ஆகிய நல்வினையைக் கர்ணன் ஓயாது செய்து வந்தான். ஆனால் தனக்குச் சொர்க்கமோ உயர்ந்த பதவியோ கிட்டவேண்டும் என்ற ஆசை அவனுக்குக் கிடையாது. அந்த அளவில் அது நிஷ்காமிய கர்மமாகும். கர்ணன் நல்ல கர்மயோகி. கர்மயோகிக்குச் சொந்தமானது என்பது ஒன்றும் இல்லை. எண்ணத்தைப் பொறுத்தே உடைமையும், வறுமையும் வந்து அமைகின்றன. கர்ணனுடைய எண்ணம் உயர்ந்தது. ஆக, அவனுக்கு வறுமை கிடையாது. செல்வம் படைத்த மற்ற பேரரசர்கள் அவனுக்கு ஒப்பாகார். ஏனென்றால் எண்ணத்தில் தாராளமாக எடுத்து வழங்கும் பாங்கில் அவர்கள் கர்ணனுக்கு நிகர் ஆகார்கள். இந்த உயர்ந்த எண்ணமே கர்ணனை மோக்ஷ சாம்ராஜ்யத்துக்குத் தகுதியுடையவனாகச் செய்து வந்தது. மேலும் பிறப்பு எடுப்பது அவனுக்கு அவசியமில்லை. அவன் நிறைவேற்ற வேண்டிய ஆசையும் ஒன்றும் பாக்கியில்லை. தான் வாழ்ந்திருக்கும் வரையில் தன்னிடத்திருந்தது அனைத்தும் பொது உடைமையாகப் போகவேண்டும் என்பது ஒன்றே அவனது விருப்பம். அதை ஆசை என்று நாம் பொருள்படுத்தலாகாது. ஆசையைக் கடந்த உயர்ந்த நிலை ஆகும் அது.

கண்ணபிரான் கர்ணனுடைய மகிமையை உலகுக்குக் காட்ட எண்ணங்கொண்டான். வினைத்தளைகள் அனைத்தினின்றும் அவன் விடுபட்டவன் என்பதை நிரூபிக்க நாராயணன் திருவுளம் கொண்டான். கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஏற்பட்ட யுத்தம் பிராரப்த கர்மபலன் ஆகும். ஏதேனும் ஒரு வினையாற்றி உடலை உகுத்துவிடவே அவர்கள் உலகில் வாழ்ந்திருந்தனர். வினை எது ஆனாலும் அதனை இறைவனுக்கு ஒப்படைத்து; இறைவனுடைய பிரபஞ்ச நிர்வாகம் என்பதில் சேர்த்துவிடுகின்ற சான்றோர் போர்புரிதல் போன்ற வினையின் வாயிலாகவும் முக்தியடைகின்றனர். பிரபஞ்ச நடைமுறையில் எல்லா வினைகளுக்கும் இடமுண்டு. எனவே, அர்ஜுனனும் கர்ணனும் தங்களுக்குக் கடைசியாக எஞ்சியிருக்கும் ஊழ்வினையை அப்படி ஒழித்துவிடுவதே முறையாகும்.

இந்தச் சூழ்நிலையைக் கிருஷ்ணன் நன்கு பயன்படுத்திக் கொண்டான். கர்ணனுடைய பெருமையை விளக்குதற்கு அவன் முன்வந்தான். போர்க்களத்தில் யாசகத்துக்குப் போனான். கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே என்று கர்ணன் வருந்தினான். நல்வினைப்பயனில் அவன் பற்று வைக்கவில்லை என்பதை அந்த வருத்தமே விளக்குகிறது. "கொடுப்பதற்கு உன்னிடம் ஒன்று உண்டு" என்று யாசகன் ஞாபகமூட்டினான். "அப்படி இருக்குமாகில் அது உன்னுடையதே" என்று கர்ணன் உடனே உடன்படிக்கை செய்து விடுகின்றான். "கொடையின் விளைவு ஆகிய புண்ணியத்தைத் தா" என்று யாசகன் கேட்டான். "அத்தகையது ஒன்று எனக்கு சொந்தமாக இருக்குமாகில் இப்பொழுதே அது உமக்கு உரியதாகட்டும்" என்கின்றான் கர்ணன். அவனுடைய மனபரிபாகத்தின் உச்சநிலை அது. அப்படி எல்லாம் கொடுத்துவிட்டதின் விளைவாக அவனுக்கு முக்தி கிட்டுகிறது. ஆக, கிருஷ்ணன் கர்ணனை ஆட்கொண் டான். வினைத் தளையினின்று விடுவித்தான். முக்தியை நல்கினான். சூழ்ச்சி போன்று மதுசூதனன் பண்ணியது கர்ணன் போன்ற உத்தம ஆத்மா ஒருவனை ஆட்கொள்ளுதல் பொருட்டே யாம். பின்பு, போரில் அவனுடைய உடலம் வீழ்ந்தது சான் றோரால் கணக்கில் எடுத்துக்கொள்ள தகுதியற்ற செயலாம். முட்டையினின்று மேலே பறந்து செல்லும் பறவைக்கு முட்டையின் மேல் ஓடு எப்படி உடைந்து எங்கு விழுந்தால் தான் என்ன? உடல் அழிவதைச் சான்றோர் இங்ஙனம் பொருள் படுத்தாது விட்டுவிடுகின்றனர். ஜீவாத்மா பரமாத்மாவில் கலப்பதே அவர்கள் காட்சியில் படும் சிறந்த செயல் ஆகும். அத்தகைய முக்தியை முதலில் கர்ணன் பெற்றான். தன் வினைப்பயன் முடிந்த பிறகு அர்ஜுனன் பெறப் போகின்றான்.

கேள்வி: *(463)* மஹாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா நல்லவர்களாகிய பாண்டவர்கள் பக்கம் சேர்ந்துகொண்டு கெட்டவர்களாகிய கௌரவர்களை அழிக்க உதவினார் எனக் கூறப்படுகிறது. ஆனால் அவர் எல்லாச் சக்தியும் படைத்தவராய் இருந்தும் ஏன் கௌரவர்களின் தீய மனதை நல்வழிப்படுத்திப்

பாண்டவர்களின் இராஜ்ஜியத்தை யுத்தமின்றி அஹிம்சா தர்மப்படி திருப்பிக்கொடுக்கும்படி செய்திருக்கலாகாது? மஹாத்மா காந்திகூட நம் நாட்டை அந்நியரிடமிருந்து அவர்கள் மனதை மாற்றி வாங்க முடிந்ததே!

பதில்: கேள்வியை மற்றொரு பாங்கில் பகருமிடத்துச் சிருஷ்டி என்னும் விளையாட்டு நடைபெறுவதற்குப் பகவான் ஏன் இடம் கொடுத்தார்? படைப்பு என்பது இல்லாது போய்விட்டால் எல்லாம் அதீதநிலையில் ஒரே ஆனந்தமாய் இருந்திருக்குமே! என்பதாகிறது. ஆனால் சிருஷ்டிக்கு இடம் கொடுத்திருப்பதுதான் கடவுளின் திட்டம். சிருஷ்டியில் நலம் கேடு ஆகிய இரண்டும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. இவ்வுலகில் கேடு இல்லாது போய்விட்டால் உலக வாழ்க்கையே நடைபெறாது. பசி என்பது ஒரு குறைபாடு. அது இல்லாது போய்விட்டால் உயிர்கள் வாழ்க்கையில் முயற்சி எதையும் எடுத்துக் கொள்ளமாட்டா. பசி என்னும் கேடு இருந்தே ஆகவேண்டும் என்னும் கோட்பாடு சிருஷ்டியின் நடைமுறையை எண்ணிப் பார்ப்பவருக்கு விளங்கும். கெட்டவர்கள் உலகத்தில் இருந்தே ஆகவேண்டும். அவர்கள் இல்லாவிட்டால் உலக நடைமுறையும் நின்றுவிடும். எக்காலத்திலும் உலகில் கெட்டவர்கள் இருக்கிறார்கள். நல்லவர்கள் கெட்டவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கிக் காட்டு தற்குக் கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்கு சகாயம் செய்ப வராகவும், கௌரவர்களுக்கு எச்சரிக்கை செய்பவராகவும் நடந்து கொண்டார். அக்காலத்தில் கிருஷ்ண பரமாத்மாவாக வந்து கேடு நிறைந்திருந்த கௌரவர்களுக்கு எச்சரிக்கை செய்தது போன்று சர்வகாலமும் எல்லாருடைய உள்ளத்திலும் மனச்சாக்ஷியாகத் தெய்வம் அமர்ந்திருந்து நலம் கேடு ஆகிய வைகளை விளக்கிக் காட்டுகிறார். ஆனால் கெட்டவர்கள் அந்தப் போதனையை ஏற்றுக்கொள்வதில்லை. தாங்கள் புரிகின்ற தீய செய்லுக்கு ஏற்ற பலனை அவர்கள் அனுபவிக்கவும் செய்கின்றனர். இதுதான் உலக நடைமுறை. கிருஷ்ண பகவான் புகட்டியதும் இதுவே.

மஹாத்மா காந்தி ஆங்கில அரசாட்சியினுடைய மனப்பான் மையை மாற்றிவிட்டார் என்பது உண்மையல்ல. அவருடைய

இயக்கத்தின் மூலம் இந்தியர்களைச் சுய ஆட்சிக்கு ஒருவிதத்தில் பக்குவப்படுத்தினார். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குச் சாம்ராஜ்யத்தைப் பற்றிய உண்மை ஒன்று அனுபவபூர்வமாக விளங்கிற்று. அதாவது பிறரைப் பலவந்தமாகக் கட்டி ஆண்டு வருவது யுத்த நெருக்கடியின் பொழுது அளவுக்கு மிஞ்சிய செலவை உண்டுபண்ணுகிறது. சமாதான காலத்தில் சம்பாதித்ததைவிட அதிகமாக யுத்தத்தில் கையை விட்டுச் செல்வம் கரைந்து போய்விடுகிறது என்பதைக் கண்கூடாகக் கண்டுகொண்டார்கள். சாம்ராஜ்யம் அதிகமாக இருக்கும் பரியந்தம் எதிரிகளும் பலபேர் தோன்றிவருகிறார்கள் என்பதையும் கண்டுகொண்டார்கள். அதனால் அவர்களே வலிய இலங்கைக்கும், பர்மாவுக்கும், இந்தியாவுக்கும் சுதந்தரம் கொடுத்துவிட்டார்கள். ஆங்கிலேயர்களுடைய மனதை மஹாத்மா மாற்றிவிட்டது உண்மையென்றால் இந்தியாவை இந்துஸ்தான் என்றும், ராஜஸ்தான் என்றும், பாகிஸ்தான் என்றும் மூன்று கூறுகளாக ஆங்கில ஏகாதிபத்தியம் பிரிவு படுத்தியிருக்காது. அப்படி நாட்டை மூன்று கூறுகளாகப் பிரித்ததே இவர்களுக்கிடையில் சண்டையை வளர்த்துவிட்டுத் தாங்கள் வெளியேக வேண்டும் என்னும் எண்ணத்துடனேயாம். மீண்டும் தங்களுடைய உதவியை நாடினால் அதை வேறொரு போக்கில் தங்களுடைய வசதிக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் அனைவரும் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஒன்று நினைக்க இந்தியா பக்குவமடைந்த நிலை வேறு ஒரு சூழ்நிலையை உண்டு பண்ணிவிட்டது.

உலகத்தில் எப்பொழுதுமே நலம் கேடு ஆகிய இரண்டுக்கு மிடையில் போராட்டம் இருந்துகொண்டே வரும் என்பதற்கு இக்காலத்திய நம் தேச சரித்திரமே ஒரு சான்று ஆகிறது. உலகம் என்ன பாங்கில் இருக்கவேண்டுமென்று நம் அறிவுக்கு எட்டிய பிரகாரம் நாம் மனக்கோட்டை கட்டுகிறோம். ஆனால் எப்பொழுதும் உலகம் தன் போக்கில்தான் போய்க்கொண்டிருக்கிறது. உலகத்தின் போக்கே தெய்வத்தின் திட்டம். அதை உள்ளபடி அறிந்துகொண்டால் கடவுளுடைய பெருந்திட்டத்தை நாம் அறிந்துகொண்டவர் ஆகின்றோம்.

கேள்வி: *(464)* பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகியோர் அதர்மத்திற்கு உதவி செய்தது சரியா? அதர்மத்திற்காக உழைத்து முக்தி பெறமுடியுமா?

பதில்: பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகிய மூவரிடத்தும் பாராட்டுதற்குரிய ஒரு சிறப்புப் பயிற்சி உண்டு. மூவரும் பரசுராமரிடமிருந்து வில்வித்தை பயின்றவர்கள். அத்தகைய பயிற்சி எல்லார்க்கும் வாய்க்காது. இம்மூவரும் அதர்மமே வடிவெடுத்திருந்த துரியோதனனுக்காகப் போர்புரிந்தார்கள். சூழ்நிலை அப்படி வந்து அமைந்தது. அதைக் குறித்துத் துரியோதனன் இறுமாப்பு மிகப் படைத்திருந்தான். வெற்றி தனக்கே வாய்க்குமென்று அவன் மனக்கோட்டை கட்டியிருந் தான். இனி மூவரும் மூன்றுவிதமான மனப்பான்மைகளுடன் அதர்ம வடிவினனாகிய துரியோதனனுக்காகப் போர் புரிந்தார்கள். மூவருள் பீஷ்மருடைய மனப்பான்மை மகோன்னத மானது. அவரிடம் பேரப்பிள்ளையாகிய துரியோதனன் சென்று தனக்குச் சேனாதிபதியாக இருந்து போர்புரிய வேண்டுமென்று விண்ணப்பித்தான். "யார் என்னிடமிருக்கின்ற எதை வேண்டு மென்று கோருகிறார்களோ அதைக் கொடுக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். கொடுக்க மறுத்தால் அந்த வாய்ப்பு மறைந்து போம். உனக்காகப் போர் புரிகிறேன். ஆனால் நீ வெற்றியடைய மாட்டாய்" என்று எச்சரிக்கை பண்ணினார். துரியோதனனுக்கு அந்த எச்சரிக்கை மனதில் ஏறவில்லை. யான், எனது என்னும் அகங்காரமும், மமகாரமும் பீஷ்மரிடத்தில் இல்லை. ஆதலால் அவர் அதர்மத்துக்கு உதவி புரிந்ததை முன்னிட்டு எந்தப் பாபமும் அவரை வந்து சாரவில்லை. பீஷ்மரே உதவிபுரிந்தாலும் கேடு வெல்லாது என்னும் கோட்பாட்டை அவர் உலகுக்குப் புகட்டினார். உடல் எடுத்திருந்ததற்கிடையில் அவர் முக்த புருஷன். ஆதலால் அவர் முக்திபெறமுடியுமா என்னும் கேள்விக்கு இடமில்லை. கர்மயோகம் அவர் மூலம் வியாக்கி யானம் பெறுகிறது.

கர்ணன் சோகரஸம் பொருந்திய கர்மவீரன். தாய் தந்தையர் யாரென்று அவன் தெரியாதிருந்தது அவனுக்குப் பேரிடைஞ்சலாய்ப் போயிற்று. ஆனால் அதைக்குறித்து அவன் வருந்தியது கிடையாது. இரண்டு பெரிய இலட்சியங்கள்

கர்ணன் வாயிலாக உலகத்தவர்களுக்கு விளக்கப்பெறுகின்றன. தன்னிடத்தில் இருந்தவைகளையெல்லாம் கரவாது கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தது முதல் லட்சியமாகும். கொடையாளி ஒருநாளும் கேடுறுவதில்லை என்பது கர்ணன் மூலமாக வெளியாகிறது. இரண்டாவதாக தோழமைக்குக் கர்ணன் பெரிய எடுத்துக்காட்டு ஆகிறான். துரியோதனனோடு அவன் தோழமை பூண்டான். தோழமைக்காகவென்று அவன் பெரிய தியாகம் பண்ணினான். தர்மத்தினின்று பிசகி அவன் போர்புரிந்தது தோழமைக்குப் பணிவிடை பண்ணுதல் பொருட்டேயாம். பாரதப் போர் துவங்குதற்கு முன்பு ஸ்ரீ கிருஷ்ணன் கர்ணனை அணுகி அவன் குந்தியின் மைந்தன் என்பதை வெளிப்படுத்தினார். கர்ணன் அதை ஒத்துக்கொண்டால் போர் நின்றுவிடும் என்றும், கர்ணனே சக்கரவர்த்தி யாவானென்றும் எதிரிகளாயிருந்த இரு கூட்டத்தாரும் அதற்குச் சம்மதம் கொடுப்பார்களென்றும் ஸ்ரீகிருஷ்ணன் விளக்கினார். தனக்கு இராஜ்ஜியம் வேண்டா மென்றும் தன்னுடைய ஜீவிதத்தைத் துரியோதனனுக்காக என்றே அர்ப்பணம் பண்ணுவதாகத் தான் தீர்மானித்திருப்பதை ஸ்ரீகிருஷ்ணனிடம் தெரிவித்தான். கிருஷ்ண பரமாத்மா அதைப் பாராட்டினார். கேட்டுக்கு அவன் உதவி புரிந்தான் எனினும் சுயநலப்பற்று இம்மியளவும் அவனிடத்து இல்லாதிருந்ததை முன்னிட்டு அவன் முக்திக்கு அருகதையுடையவன் ஆனான்.

துரோணர் பெரிய ஆச்சாரியர். கௌரவர்கள் வெற்றி யடையமாட்டார்கள் என்று எச்சரிக்கை செய்துவிட்டுக் கௌரவர்களுக்கே அவர் போர் புரிந்தார். ஆனால் துரியோதனனைத் திருப்திபண்ண அவரால் முடியவில்லை. ஏனென்றால் பாண்டவர்களிடம் அவர் பற்று வைத்திருந்தார். இறுதியில் இருதரத்தாருக்கும் அவரிடத்து அதிருப்தி. அவர் சொர்க்கத்திற்குச் சென்றார்; முக்தியடையவில்லை.

கேள்வி: *(465)* தர்மயுத்தத்தில் பீஷ்மர், துரோணர், கர்ணன் முதலியோர் அதர்ம வழியில் கொல்லப்பட்டது சரியா?

பதில்: அதர்மமே வடிவெடுத்திருந்த துரியோதனனுக்காகப் பெரிய பிரமுகர்கள் பலபேர் போர் புரிந்தார்கள். அவர்களுள்

யாரும் அதர்ம வழியில் கொல்லப்பட்டவர் ஆகார். ஒன்பது நாள் யுத்தத்தில் பீஷ்மர் பாண்டவர் சேனையில் பெரும் பகுதியை அழித்துவிட்டார். அத்தகையவரைக் கொல்லுவது எங்ஙனமென்று பாண்டவர்கள் அவரிடமே கேட்டுக் கொண்டனர். யார் அவரிடம் வந்து எதைக் கேட்டாலும், அதைக் கரவாது கொடுத்தது அவருடைய பேரியல்பாகும். தனக்குச் சேனாதிபதியாக இருக்கவேண்டுமென்று துரியோதனன் கேட்டான். அவன் கேட்டதைப் பாட்டனார் கொடுத்தார். ஆனால் அவன் பக்கம் உள்ள அனைவரும் அழிந்துபோவார்கள் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார். தமக்கு வரும் அழிவையும் அதில் அடக்கி வைத்து இயம்பினார். ஒன்பது நாளைக்குப் பிறகு அவரைத் தோற்கடிப்பதற்கு உகந்த உபாயம் யாது என்று அவரிடமே பாண்டவர்கள் கேட்டார்கள். அவர்கள் கேட்ட உபாயத்தைப் பீஷ்மர் கரவாது அவர்களுக்குக் கொடுத்துதவினார். அலி அல்லது பெண்ணொருத்தி ஆயுதமெடுத்துத் தம்மோடு போருக்கு வந்தால் தம்முடைய ஆயுதங்கள் செயலற்றுப்போம் என்னும் ரகசியத்தைப் பாண்டவர்களுக்குத் தெரிவித்தார். அதன்படி சிகண்டி ஆயுதம் தாங்கி வந்து பீஷ்மரை எதிர்க்க, அவருடைய ஆயுதங்களெல்லாம் செயலற்றுப் போயின. பிறகு அர்ஜுனன் அவரை வீழ்த்தினான். அது தர்மயுத்தம்.

துரோணரை ஒரு போக்கில் பாண்டவர்கள் ஏமாற்றினார்கள். ஸ்ரீகிருஷ்ணனுடைய தூண்டுதலின்படி "அஸ்வத்தாமன் என்னும் யானை செத்தான்" என்று யுதிஷ்டிரன் உரக்கக் கத்தினான். யுதிஷ்டிரன் சொன்னது உண்மை. ஆனால் துரோணர் காதில் யானை செத்தது என்பது சரியாக விழவில்லை. தம் புதல்வன் அஸ்வத்தாமன் செத்தான் என்று அவர் பொருள் படுத்திக் கொண்டார். அப்படி அவர் பொருள்படுத்தியதற்குப் பொறுப்பாளிகள் பாண்டவர்கள் ஆகமாட்டார்கள். கெட்டவர்களுக்கு உதவிபுரிந்தவர் தமக்குத் தாமே கேடு சூழ்ந்து கொண்டார். மகன் போனதைக் கேட்டு அவர் திகைத்து நின்றார். அவருடைய ஆயுதங்கள் வீழ்ந்தன. அத்தருணத்தில் திருஷ்டத்யும்னன் தன்னுடைய திட்டத்துக்கேற்பத் துரோணரை ஒழித்துவிட்டான். ஆதலால் அது அதர்மம் போன்று தென்பட்ட தர்மமாம்.

கர்ணன் அபிமன்யுவை அதர்ம முறைகளைக் கையாண்டு கொன்றான்; அவன் செய்த குற்றத்துக்கு மன்னிப்பே கிடையாது. கர்ணனுடைய் தேர்ச்சக்கரம் தரையில் புதைந்து போனது. அந்த நெருக்கடியில் அவன் சரியாகப் போர்புரிய முடியவில்லை. அத்தருணத்தில் அர்ஜுனன் தயங்காது அவனை ஒழித்துத் தள்ளினான். ஆதலால் அது அதர்மம் ஆகாது. கர்ணன் முறைதவறிப் போனது சுயநலத்துக்காகவன்று. துரியோதனனைத் திருப்திப்படுத்துவதற்கே நெறிபிறழ்ந்து அவன் அபிமன்யுவை வீழ்த்தினான். அத்தகையவனுக்கு இரக்கம் காட்டாது அர்ஜுனன் தொடர்ந்து யுத்தத்தை நடாத்தி அவனைக் கொன்றான். ஆதலால் அது தர்ம யுத்தமாகவே அங்கீகரிக்கப்படுகிறது.

கடைசியாகத் துரியோதனன் கொல்லப்பட்டது முறை வழுவிய பாங்கு போன்று தென்படுகிறது. துரியோதனனும், பீமனும் கதையுத்தம் நடாத்தினார்கள். அது நெடுநேரம் நிகழ்ந்தது. திறமையில் வல்லவன் துரியோதனன். பலத்தில் நிகரற்றவன் பீமன். இருவரும் அற்புதமாகப் போர்புரிந்தனர். போர் முடிவுக்கு வரும் அறிகுறி தென்படவில்லை. அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு படித்தரத்தில், "மிக நன்று, மிக நன்று" என்று சொல்லிக்கொண்டு தம் தொடையைத் தட்டினார். அதன் மூலம் பீமனுக்குச் சபதம் ஒன்று ஞாபகமூட்டப்பட்டது. துரியோதனன் ஒரு கதையடியைத் தவிர்ப்பதற்காக உயரக் குதித்தான். யாரையும் இடுப்புக்குக் கீழ் அடிக்கக்கூடாது என்பது யுத்த சட்டம். ஆனால் அந்தச் சட்டத்துக்கு மாறாகப் பீமன் துரியோதனனுடைய இரு தொடை-களையும் தன் கதையால் அடித்து அவைகளை உடைத்தான். போர் நெறி வழுவியது வெட்கம் என்று கத்திக்கொண்டே துரியோதனன் கீழே விழுந்தான். அப்பொழுது கிருஷ்ணன் தாமே வந்து துரியோதனனுக்கு விளக்கம் அளித்தார்: "நீ பீமனுக்கு விஷம் கலந்த உணவைக் கொடுத்தாய். அது உனக்குத் தர்மமாகத் தோன்றுகிறது. அவன் மயங்கிக் கிடந்த போது காட்டுக்கொடியைக் கொண்டு கட்டி அவனை நதிக்குள் தள்ளிவிட்டாய். அது உனக்குத் தர்மமாகத் தோன்றுகிறது. அரக்கு மாளிகையில் பாண்டவர்களைக் கொளுத்த முயன்றாய். அது உனக்குத் தர்மமாகத் தோன்றுகிறது. சூதாடி அவர்களுடைய

இராஜ்ஜியத்தை அபகரித்துக்கொண்டாய். அது உனக்குத் தர்மமாகத் தோன்றுகிறது. உடன்படிக்கைபடி பதின்மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவர்களுடைய இராஜ்ஜியத்தைத் திருப்பிக் கொடுக்க நீ மறுத்துவிட்டாய். அது உனக்குத் தர்மமாகத் தோன்றுகிறது. நீங்கள் அதிரதர்கள் ஆறுபேர் கூடிக்கொண்டு ஆயுதமில்லாதிருந்த அபிமன்யுவை அடித்துக் கொன்றீர்கள். அது உனக்குத் தர்மமாகத் தோன்றுகிறது. சபையிலே உன் தொடையைக் காட்டி, திரௌபதியை அவமானப்படுத்தினாய். தக்க காலம் வரும்பொழுது அந்தத் தொடையை உடைத்து உன்னைக் கொல்லுவதாகப் பீமன் அறை கூவினான். கூறியபடி இப்பொழுது உன் தொடையை அவன் உடைத்து, உன்னை வீழ்த்தியிருக்கிறான். இந்தச் செயல் ஒன்று மட்டும் உனக்கு அதர்மமாகத் தென்படுகிறது. நீ செய்த அடாத செயல்களெல்லாம் உனக்குத் தர்மமாகத் தென்படுகின்றன". இங்ஙனம் கிருஷ்ணன் விளக்கம் கொடுத்தபொழுது அதற்குப் பதில் சொல்ல துரியோதனனுக்கு இயலவில்லை. துரியோதனன் தொடை ஒடிக்கப்பட்டு வீழ்த்தப்பட்டது தர்மமே. பாண்டவர்கள் யுத்தத்தில் தர்மத்தைவிட்டுப் பிசகவில்லை.

கேள்வி: *(466)* பீஷ்மரை நாம் ஏன் கிருஷ்ணனுக்குச் சமமாகக் கூறக்கூடாது?

பதில்: பீஷ்மரைக் கிருஷ்ணனுக்குச் சமனாகக் கூறுவதில் தோஷம் ஏதும் இல்லை. சாதாரண ஒரு ஜீவனாகப் பிறந்து பண்பாட்டில் மேலே வந்தவர் பீஷ்மர். ஸ்ரீ கிருஷ்ணனோ பிறந்தது முதற்கொண்டு சரீரத்தை உகுக்கும் வரையில் நிறைநிலையிலேயே இருந்த அவதாரமூர்த்தி. அத்தகைய மூர்த்தியைப் பீஷ்மர் தாமே உபாசித்தார். ஆனால் பீஷ்மரை உபாசிக்க வேண்டிய அவசியம் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வரவில்லை.

கேள்வி: *(467)* மஹாபாரதப் போரில் கண்ணபிரான் அர்ஜுனன் தேரைக் கீழே அழுத்தியது சரியா?

பதில்: ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாய் அமர்ந்தான். அதன் விளைவாக அர்ஜுனன் பெற்ற உதவி சாமான்யமானதன்று. தேரிலிருந்து கொண்டு போர்புரிகிறவனுக்கு

எல்லாவிதமான உதவிகளையும் பாதுகாப்பையும் தரத் தேரோட்டி கடமைப்பட்டிருக்கிறான். யாருக்காகச் சாரதி தேரோட்டுகிறானோ அவனை ஆபத்தினின்று காப்பாற்றுவது சாரதியின் முதல் கடமையாகும்.

இக்காலத்திலே மலைப் பிரதேசங்களில் ஆபத்தான வழிகளில் முரட்டுத்தனமாக மோட்டார் கார் டிரைவர் ஒருவர் கார் ஓட்டுவாராகில் அந்த வாகனத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறவர்கள் ஏறலாகாது.

கிருஷ்ணன் பரமாத்மா. உயிர்களைத் தீமைகளினின்று காப்பாற்றுபவன். அர்ஜுனனும் கர்ணனும் ஒருவரையொருவர் போராடிக் கொல்லத் தீர்மானித்திருந்தனர். அர்ஜுனனுக்கு வாய்த்த சாரதிக்கு நிகராகத் தனக்கு ஒரு தேரோட்டி வாய்க்க வில்லையே என்னும் மனக்குறைவு கர்ணனுக்கு இருந்தது. ஆயினும் அவன் படைத்திருந்த ஆயுதங்களோ அற்புதமான வைகள். அவைகளைச் சமாளிக்க யாருக்குமே முடியாது. அப்படி யிருந்தும் அவைகளில் பெரும்பான்மை பயனற்றுப் போகும்படி கிருஷ்ணன் ஏற்கனவே ஏற்ற முறைகளைக் கையாண்டு விட்டான். அதுவே அவன் அர்ஜுனனுக்குச் செய்த பெரிய பாதுகாப்பாம். தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பாற்றி வைப்பது கண்ணன் கடமையாயிருந்தது. கர்ணன் கைவசத்தில் ஆபத்தான ஒரே அஸ்திரம்தான் பாக்கியிருந்தது. அந்த ஒன்றைக் கொண்டே அர்ஜுனனை எப்படியாவது மாய்த்துவிடமுடியும் என்ற உறுதி கர்ணனுக்கு இருந்தது. "அர்ஜுனா, இவ்வுலகினின்று விடைபெற்றுப் போ" என்று இயம்பிக்கொண்டு நாகாஸ் திரத்தை அவன் எய்தான். அது அர்ஜுனனுடைய கழுத்தைத் துண்டித்துவிடும் என்பதை அறிய வந்த கிருஷ்ணன் தேர்த் தட்டைக் கீழே அமுக்கினான். தேரும் கீழே புதைந்து போனதின் விளைவாக நாகாஸ்திரம் அர்ஜுனனுடைய கழுத்தை வெட்டு வதற்குப் பதிலாக அவனுடைய கிரீடத்தை உருட்டிக்கொண்டு போனது. தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு முற்றுப் பெற்றது. இது கிருஷ்ணன் செய்த சூழ்ச்சி. அவன் அப்படிச் செய்யாதிருந்தால் அர்ஜுனன் போர்க்களத்தில் மடிந்து போயிருப் பான். ஆகையினால் அவன் தேரை அந்த நெருக்கடியில் கீழே அமுக்கியதே தலைசிறந்த யுத்த சூழ்ச்சியாம்.

கேள்வி: (468) துரோணாச்சாரியர் தம்முடைய புதல்வனாகிய அசுவத்தாமனுக்கு அகன்ற வாயுள்ள பாத்திரத்தைக் கொடுத்து நீர் கொண்டுவரச் செய்தார். மற்ற சிஷ்யர்களுக்கு ஒடுங்கிய வாயுள்ள பாத்திரங்களைக் கொடுத்தார். நீர் மொள்ளுதற்கு அவர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ளும்படி நேர்ந்தது. நீர் மொண்டு கொண்டு முதலில் தனியாக வந்த தம்முடைய புதல்வனுக்கு இரகசிய மாகச் சில அஸ்திரசஸ்திரங்களைக் கற்பித்தார் என்று சொல்லப்படுகிறது. துரோணாச்சாரியர் இப்படி நடந்து கொண்டது முறையா?

பதில்: மஹாபாரதத்தில் இடைச்செருகல்கள் ஏராளமாக வந்துள்ளன. எது மூலம், எது இடைச்செருகல் என்று கண்டு பிடிப்பது மிகக் கடினம். சிஷ்யனுடைய தகுதிக்கு ஏற்பக் கலைகள் புகட்டுவது நல்லாசிரியர்களுடைய போக்கு ஆயிற்று. துரோணாச்சாரியர் ஏகலைவ்யனுக்குப் பாடம் புகட்ட மறுத்து விட்டார். அவர் புகட்டிய கலைக்கேற்ற பாத்திரம் ஏகலைவ்யன் அல்லன் என்பது அவர் கருத்து. அச்செயலை அவர் பகிரங்க மாகச் செய்தார். மேலும் தமது சிஷ்யர்களுள் அர்ஜுனனிடத்து அவருக்கு அலாதியான அபிமானம் இருந்தது. அர்ஜுனன் தலைமாணாக்கனாயிருந்தது ஒரு காரணம். நிகழப்போகிற் யுத்தத்தில் அர்ஜுனன் கிருஷ்ண பரமாத்மாவிடம் கருவியா யிருந்து அரியபெரிய செயல்களை நிகழ்த்தப்போவது இரண் டாவது காரணம். இந்த இரண்டு காரணங்களை முன்னிட்டு அர்ஜுனனுக்கு அவர் வழங்கிய பயிற்சி அலாதியானது. அர்ஜுன னுக்குக் கொடுத்த பயிற்சிகளில் சிலவற்றைத் தம்முடைய சொந்த செல்வனாகிய அசுவத்தாமனுக்குப் புகட்டவில்லை. ஏனென்றால் அர்ஜுனனுக்குத் தேவையாயிருந்த அஸ்திரசஸ் திரங்கள் வேறு, அசுவத்தாமனுக்குத் தேவையாயிருந்த அஸ்திர சஸ்திரங்கள் வேறு. எந்தப் பாத்திரம் எந்த ஆயுதத்தைக் கொண்டு எத்தகைய செயலை நிறைவேற்றப் போகிறானோ அத்தகைய பயிற்சியை அன்னவனுக்கு அவர் ஒழுங்காக வழங்கி வந்தார். மேலும் அசுவத்தாமனுக்குக் கொடுத்த ஓர் ஆயுதத்தின் மர்மத்தை அர்ஜுனனுக்குக் கொடுக்கவில்லை. நெருக்கடியான வேளை வருகின்றபொழுது நாராயண அஸ்திரத்தைக்

கையாண்டு எதிரிகள் அனைவரையும் ஒழித்து விடுவதற் கேதுவான நாராயண அஸ்திரத்தை அசுவத்தாமனுக்கு மட்டும் புகட்டியிருந்தார். அதை முறியடிக்கும் மர்மம் அர்ஜுனனுக்கும் தெரியாது. மிகப் பிரியமான சிஷ்யனாக அர்ஜுனன் இருந்தும் இந்த மர்மத்தை அவனுக்கு ஆசாரியர் வழங்கவில்லை. யுத்தத்தின் கடைசிப் பகுதியில் அசுவத்தாமன் நாராயண அஸ்திரத்தைக் கையாண்டு எதிரிகளைத் துடைத்துத்தள்ள முயன்றான். அப்பொழுது கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்கள் பக்கமிருந்த சேனைகள் அத்தனையும் நமஸ்காரம் பண்ணும் முறையில் தரையில் படுக்கும்படி ஆணையிட்டார். நாராயண அஸ்திரத்துக்கு மரியாதை காட்டுபவர்களை அது அழித்துவிடாது. அந்த மர்மம் கிருஷ்ணபரமாத்மாவுக்கு மட்டும் தெரிந்திருந்தது. நாராயண அஸ்திரம் ஸம்ஹாரம் பண்ணுவதற்குப் பதிலாகக் கிருஷ்ணனிடம் போய் ஒடுங்கியது. அத்தகைய செயலைச் செய்வதற்கென்றே அசுவத்தாமனை அவர் ஆயத்தப்படுத்தினார். ஆயினும் அது பயன்படாது போய்விடும் என்பதும் துரோண ருக்குத் தெரியும். யார் யார் மஹாபாரதப் போரில் என்னென்ன செயலைச் செய்யத் தகுதி வாய்ந்தவர்களாக இருந்தார்களோ அந்தந்தச் செயலுக்குத் தக்க கர்த்தாக்களாக தம் சிஷ்யர்களை அவர் ஆயத்தப்படுத்தினார். அசுவத்தாமனுடைய ஆயுதம் வீண் போனது. ஆனால் அர்ஜுனனுடைய ஆயுதம் எதுவும் வீண் போகவில்லை. ஏனென்றால் கிருஷ்ணன் கைவசம் உள்ள கருவி அவன். இதை முன்கூட்டியே அறிந்திருந்த துரோணாச் சாரியர் பட்சபாதமின்றி அந்தந்தப் பாத்திரத்துக்கேற்ற தகை மையை வழங்கி வந்தார்.

அசுவத்தாமனை அலாதியாக நதியினின்று முதலில் வரவழைத்து அவனுக்குச் சில இரகசியங்களைத் துரோணாச் சாரியர் புகட்டி வைத்தார் என்பது பொருளற்ற இடைச் செருகல். இந்த இடைச்செருகலை வரலாற்றில் இணைத்து வைத்த மானுடன் இதன் மூலம் தன்னுடைய சிற்றியல்பை விளம்பரம் பண்ணுகிறான். ஒருவனுக்கு ஒரு இரகசியத்தை புகட்டுவதற்கு அசாதாரண சூழ்நிலையொன்றை அமைக்க வேண்டிய அவசியமில்லை. பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பது கோட்பாடு. இக்கோட்பாட்டை “ஸம்விதா தேயம்”

என்று சாஸ்திரம் சொல்லுகிறது. யார் எக்கலைக்குத் தகுதியோ அக்கலையை அவனுக்கு வழங்கு என்பது கோட்பாடு. துரோணர் துரியோதனனுக்காகப் போர் புரிந்தார் என்றாலும் எதிர்க்கட்சியிலிருந்த அர்ஜுனனுக்குக் கொடுத்த பயிற்சியை வேறு யாருக்கும் தரவில்லை. போரில் அர்ஜுனன் தம்மை எதிர்த்துச் சண்டையிட வேண்டும் என்றும் அவனிடம் துரோணர் வேண்டிக் கொண்டார். அவர் நாடிய குரு தக்ஷிணை தம்மை எதிர்த்துப் போர் புரிதல் என்பதையும் அர்ஜுனனுக்கு அவர் இயம்பிவிட்டார். இதினின்று உண்மையொன்று வெளியாகிறது. பெருநிலையிலிருந்த துரோணாச்சாரியரிடம் பட்சபாதம் ஏதும் இல்லை. அந்தந்தப் போர்வீரன் தனக்கமைந்திருந்த பிராரப்த கர்மத்தை முடித்துக் கொள்ளுதற்கும் மஹாபாரத யுத்தத்தில் பரஸ்பரம், ஒருவரையொருவர் ஒழித்துக் கொள்ளுவதற்கும் ஏற்ற பயிற்சிகளைக் கௌரவர்கள் கூட்டத்துக்கும் பாண்டவர்கள் கூட்டத்துக்கும் வழங்கி வந்தார். இறைவனுடைய திட்டம் அந்தப் பாங்கில் முடிவடைய வேண்டியிருந்தது. அதற்கு வேண்டிய பயிற்சிகளை சிஷ்யர் கூட்டங்களுக்கு துரோணர் கொடுத்தார். அப்படிக் கொடுத்ததை கிருஷ்ணனுடைய வழிபாடாக அவர் வைத்துக்கொண்டார். ஆதலால் துரோணாச் சாரியரிடம் பட்சபாதம் ஏதும் இல்லை. தன் மகனுக்கு ஒரு விதமாக நடந்துகொள்ளுவது மற்ற சிஷ்யர்களிடம் இன்னொரு விதமாக நடந்து கொள்ளுவது என்னும் சிற்றியல்பும் அவரிடத்தில் இல்லை. நாராயண அஸ்திரத்தைத் தன் மகனுக்கு மட்டும் புகட்டியது அச்செயலுக்கு அவன் கருவியாய் இருந்தான் என்னும் தெய்வீகத் திட்டத்துக்கு உட்பட்டேயாம்.

கேள்வி: ***(469)*** **கல்கத்தா நகரிலே கவனிப்பாரற்றுத் திரிந்து கொண்டிருந்த சிறுவன் ஒருவனைப் பக்தர் ஒருவர் தம் வீட்டுக்கு அழைத்துவந்து வேலைக்காரனாக வைத் திருந்தார். அச்சிறுவனிடமிருந்த நல்ல இயல்புகளை ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் கவனித்தார். அவனைத் தம்மிடம் தந்துவிடும்படி பக்தரை அவர் கேட்டார். பக்தரும் அதற்கு இசைந்தார். அதன் விளைவாக அச்சிறுவன் நாளடைவில்**

பரமஹம்சர் தெள்ளியெடுத்த துறவியர் கூட்டத்தில் அத்புதானந்தர் என்னும் நிறை ஞானியானார்.

இச்செயலுக்கு நேர்மாறாகத் துரோணாச்சாரியரிடம் வந்த ஏகலைவ்யன் என்னும் இளைஞன் ஒருவனை அவர் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ள மறுத்தார். பிறகு குரு பக்தியின் வாயிலாக அவன் பெற்றிருந்த வில்வித்தைத் திறமையை வலக்கைக் கட்டை விரலை வெட்டிப் பாழ்படுத்தினார். துரோணாச்சாரியர் இப்படிச் செய்தது நியாயமா?

பதில்: ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் தம்போக்கில் பண்படுத்திய மக்கள் கூட்டத்தில் துறவியர்கள் தலைசிறந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அக்கூட்டத்தில் ஒருவர் சுவாமி அத்புதானந்தர். பரமஹம்சதேவரோடு தொடர்பு ஏற்படாதிருந்திருந்தால் அவருடைய வாழ்வு அனர்த்தமாய்ப் போயிருந்திருக்கும். தெய்வாதீனமாக அவர் உய்வடைந்தார். பரமஹம்சதேவரை அணுகியவர்களெல்லாரும் அவரவர் தரத்திற்கேற்ப நல்வாழ்வு எய்தினர். ஆதலால் நரயக்ஞத்தில் இக்காலத்திய சான்றோர்களுக்கிடையில் பரமஹம்சதேவர் தலைசிறந்தவராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார் என்று நாம் பகரலாம்.

இனி, துரோணாச்சாரியரின் செயலை ஆராய்ந்து பார்ப்போம். அவருடைய சிஷ்யனாக விரும்பிய ஏகலைவ்யனிடம் துரோணாச்சாரியர் பகர்ந்ததாவது: "தனுர் வேதம் அல்லது வில்வித்தையில் யுத்த சம்பந்தமான பகுதியில் நான் சிறிது தீவிரப்பயிற்சி பெற்றவன். அக்கலையை ராஜகுமாரர்களுக்கிடையில் நான் எடுத்து வழங்கி வருகிறேன். யுத்தம் ஒன்று நேரிட்டால் என் மாணாக்கராயிருக்கும் சிஷ்யர்கள் அதில் ஈடுபடுவார்கள். ஆனால் வேடனாயிருந்து வரும் உனக்கும் யுத்தத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. ஆகையினால் ஏகலைவ்யா! உன்னை நான் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள மாட்டேன்."

ஏகலைவ்யன்: "ஐயனே! அப்படி இருந்தாலும் நான் தங்களைக் குருவாக வைத்துக்கொண்டு என்போக்கில் வில்வித்தையில் பயிற்சி பெற்று வந்தால் அதில் தங்களுக்கு ஆட்சேபம் ஏதேனும் உள்ளதா?"

துரோணாச்சாரியர்: "ஆட்சேபம் இல்லை." இந்த

சம்பாஷணை முதல் சந்திப்பில் ஏற்பட்டது. ஏகலைவ்யன் துரோணாச்சாரியரைப் போன்று விக்ரஹம் ஒன்றைச் செய்து அமைத்துக்கொண்டு அதன் வாயிலாகக் குருபக்தி பழகினான். அதன் விளைவாக வில்வித்தையில் அவன் நிபுணன் ஆனான். ஒரு போக்கில் அர்ஜுனனுடைய வில்வித்தைத் திறமையை அவன் மீறியவனானான். இதையறிந்த துரோணர் ஏகலைவ்யனைச் சந்தித்து நடந்தது யாது? என்று வினவினார். தான் பூண்டிருந்த குருபக்தியை அவன் எடுத்து விளக்கினான். "நான் கேட்கும் குருதட்சணையைத் தருவாயா?" என்றார் துரோணர்.

"என் உயிரையே தாங்கள் கேட்டாலும் தட்சணையாக மகிழ்வுடன் எடுத்துத் தருவேன். என்னை நீங்கள் சிஷ்யனாக அங்கீகரித்தது ஒன்றே வாழ்வில் நான் பெற்றுள்ள பெரும் பேறாகும்" என்றான் ஏகலைவ்யன்.

துரோணாச்சாரியர்: "உன் உயிரை நான் விரும்பவில்லை. உன் வலக்கையிலுள்ள கட்டைவிரலைத் துண்டித்துக் குருதட்சணையாக எனக்குக் கொடுப்பாயாக."

ஏகலைவ்யன்: "குருதேவா, இதோ தந்து விடுகிறேன்." அம்பு ஒன்றை வானத்தில் அவன் எய்தான். அது வளைந்து வந்து அவன் கட்டைவிரலைத் துண்டித்தது. அர்ஜுனனாலும் கூட இத்தகைய செயலைச் செய்யமுடியாது. ஆனால் இச் செயலின் விளைவாக மேற்கொண்டு இதுபோன்ற செயற்கரிய செயலை செய்து சாதிக்கும் திறமையை இழந்தான் அந்த இளைஞன்.

அர்ஜுனன்: "குருதேவா, தங்கள் செயல் மூலம் அவன் பெற்றுள்ள கலை முழுதையும் பாழ்படுத்திவிட்டீர்கள்.

துரோணர்: "அர்ஜுனா, அதுவன்று விஷயம். ஏகலைவ்யன் பெற்றுள்ள வில்வித்தைத் திறமை எவ்விதத்திலும் இனி வரப்போகும் பாரதப்போருக்கு உதவாது. ஏனென்றால் ஏகலைவ்யனுக்கும் அந்த யுத்தத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. தன் தொழிலுக்கேற்ற அளவு வில்வித்தைத் திறமை அவனிடத்து எஞ்சி நிற்கிறது. அவனுக்கு அது போதுமானது. அவனுடைய கட்டைவிரலை வாங்கியதன் விளைவாக உலகுக்கு நான் ஓர் அரிய பாடத்தைப் புகட்டியுள்ளேன். ஏகலைவ்யன்

படைத்துள்ள குருபக்தி இருக்குமானால் குருவின் துணை யின்றியே எக்கலையிலும் எந்தச் சிஷ்யனும் மேலோங்கலாம்.

இந்தச் சம்பவத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்துத் துரோ ணாச்சரியர் பண்ணியது துரோகம் அன்று. ஏகலைவ்யனை அவர் குருபக்திக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாக வைத்தது அவனுக்குச் செய்துள்ள பெரிய உபகாரமாகும். மேற்கொண்டு அச்செயலின் வாயிலாகக் குருபக்தியின் சிறப்பையும் சத்தியத் தையும் அவர் உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

குருபக்தியில் ஏகலைவ்யன் அடைந்துள்ள பெருநிலையை அடைகிறவர்கள் எல்லார்க்கும் அவரவர் விரும்புகிற கலை ஞானம் தானாக வந்து வாய்க்கிறது என்பதை விளக்கிக் காட்டுதற்கே கொடியசெயல் போன்று தென்படுகிற இச் செயலைத் துரோணாச்சாரியர் செய்தார்.

கேள்வி: *(470)* பாரத யுத்தத்தில் பராக்கிரமமே வடிவெடுத்திருந்த அர்ஜுனன் கடைசியில் ஆதரவற்ற பெண்களைக்கூடக் காப்பாற்ற இயலாதவனாகி விட்டான். அர்ஜுனன் அடைந்த இக்கீழ்நிலைக்குக் காரணம் என்ன?

பதில்: எத்தகைய பராக்கிரமம் படைத்தவர்களும் இவ்வுலக வாழ்வை விட்டுப் பிரிந்தாகவேண்டும். கண்ணனுடைய இறுதிக் காலம் நெருங்கும்பொழுது வேடனுடைய அம்பு அவர் உடலில் பாய்ந்ததும் அவருடைய பூலோக வாழ்வு முடிவுற்றது. அர்ஜுனனுக்குப் பூலோக வாழ்வு முடியும் காலம் வந்துவிட்டது. அவன் இனி பூலோகத்தில் செய்யவேண்டிய காரியம் ஒன்றும் இல்லை. எனவே அவன் படைத்திருந்த அஸ்திரசஸ்திரங்களெல் லாம் அவனிடமிருந்து மறைந்துபட்டுப் போயின. சாதாரண மக்கள் இறுதிக் காலத்தில் உடல் தளர்ச்சியடைகிறார்கள். அர்ஜுனன் போன்றவர்களுக்குத் தேவையில்லாதவைகள் அவர் களிடத்திலிருந்து மறைகின்றன. ஒருவரிடத்துள்ள ஈசுவர விபூதிக ளெல்லாம் உலகுக்குப் பயன்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். உலகுக்குப் பயன்படுத்தாதபொழுதோ, உலகுக்குப் பயன்படுத்த முடியாத நிலை வருகின்றபொழுதோ அவை அவர்களை விட்டு மறைந்து போய்விடும். அர்ஜுனன் தான் பெற்றிருந்த அஸ்திரசஸ்திரங்களை இனி இவ்வுலகுக்குப்

பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டபொழுது அவை அவனை விட்டு விலகிப் போயின.

அர்ஜூனனைக் கருவியாகக் கொண்டு மஹாபாரத யுத்தத்தை முடிக்கக் கண்ணன் தீர்மானித்திருந்தார். போர்புரிய மாட்டேன் என்ற அர்ஜூனனுக்குப் போர்புரிவதற்கு வேண்டிய மனநிலையை உண்டாக்கியவர் கண்ணன். மஹாபாரதப் போரில் வெற்றியடைவதற்குரிய வழிமுறைகளையெல்லாம் உடனிருந்து காட்டித் தந்தவர் கண்ணன். அப்போர் முடிந்தவுடன் அர்ச்சுன னுக்கு அவசியம் இல்லாதவற்றை எல்லாம் அவனிடமிருந்து கண்ணன் கறந்தெடுத்துவிட்டார்.

சரீரபலம், மனோபலம், ஆன்மபலம் என மூன்றுவித பலம் உண்டு. உடலை அழிப்பதற்குச் சரீரபலம் வேண்டும். மனதை வசியப்படுத்துவதற்கு மனோபலம் வேண்டும். அக் ஞானத்தை அழிப்பதற்கு ஆன்மபலம் வேண்டும். ஆன்மபலம் உடையவர்கள் பிறருடைய அக்ஞானத்தைப் போக்கவே முயல்கின்றார்கள். சரீர பலத்தையோ, மனோ பலத்தையோ பயன்படுத்திப் பிறரை அழிக்க அவர்கள் முயல்வதில்லை. ஆன்ம பலமுடையவர்கள் பிறருடைய உடல் அழியவேண்டிய காலத்தில் அதைக் காப்பாற்ற முயலமாட்டார்கள். ஆனால் உடல் அழியவேண்டிய காலம் வரும்பொழுது அவருடைய உள்ளத்தை உயர்நிலைக்கு எடுத்துச்செல்ல உதவுவார்கள். உடலைக் காப்பாற்றுவது பராக்கிரமமன்று. உள்ளத்தை உயர்த்து வதுதான் பராக்கிரமம். ஆத்மபோதம் அடையப்பெற்றவர்கள் தங்களுடைய உடல் அழியும்காலம் வரும்பொழுது அதைக் காப்பாற்றமாட்டார்கள்; தாங்களாகவே அதை அழிக்கவும் செய்யமாட்டார்கள். உடலைப்பற்றிய சிந்தனையையோ, உடல் பராக்கிரமத்தையோ ஆத்ம ஞானிகள் பொருள்படுத்துவதில்லை.

லௌகீகத்துறையில் வைத்துப் பார்க்கும்பொழுது மஹா பாரதப் போர் முடிந்து இராஜ்ஜியத்தையெல்லாம் பரீக்ஷித்திடம் ஒப்படைக்க வேண்டிய நிலையிலிருந்த அர்ஜுனனுக்கு அஸ்திரசஸ்திரங்கள் தேவையில்லை. எனவே அஸ்திரசஸ் திரங்கள் யாவும் தங்களுக்கேற்ற யதாஸ்தானங்களுக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்துவிட்டன. அர்ஜுனனும் இம்மண் ணுலகை விட்டுப் போகவேண்டிய நிலையில் இருந்தான்.

தத்துவார்த்த ரீதியில் ஆராய்ந்தால் மனிதன் பரபோத முடையவன் ஆகும்பொழுது அவனிடத்திலுள்ள சரீர சக்தி, மனோசக்திகளெல்லாம் ஆன்மசக்தியாக் மாறுகின்றன. ஆன்ம சக்திக்கு முன் எச்சக்தியும் நிற்க முடியாதென்பதை வசிஷ்டரிட மிருந்து விசுவாமித்திரர் கற்றுக்கொண்டார். ஆன்ம சக்தியுடைய வர்கள் எல்லா நலன்களும் ஓங்கப்பெற்றவர்களாகிறார்கள். உயர்கோட்பாடுகள் மனத்தூய்மையடையப் பெறாதவர்களுக்கு விளங்கா.

அர்ஜுனன் அடைந்துள்ள நிலை கீழ்நிலையன்று. அவனுக்கு ஏற்பட்ட நிலையைப் பற்றி வியாசர் விளக்கிய தாவது: "மண்ணுலகுக்கு நீங்கள் வந்ததன் நோக்கம் நிறைவேறியாகிவிட்டது. இனி மண்ணுலகில் உங்களுக்கு வேலை இல்லை. கிருஷ்ணன் இம்மண்ணுலகுக்கு வந்த காரியமும் முடிவுற்றது. எனவே அவருடைய உடல் இம்மண் ணுலகை விட்டு மறைந்துவிட்டது. அஸ்திரசஸ்திரங்கள் எல்லாம் தங்களுக்கேற்ற யதாஸ்தானங்களுக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்துவிட்டன. அர்ஜுனா! இனி நீயும் உன் சகோதரர்களும் இந்நிலவுலகைவிட்டுப் புறப்படுங்கள்." அர்ஜுனனுக்கு இம்மண் ணுலகில் இனி வேலை இல்லை என்பதை அவனுடைய பராக்கிரமமற்ற நிலை விளக்குகிறது.

கேள்வி: *(471)* பஞ்ச பாண்டவருக்கு மனைவியான பாஞ்சாலியைக் கற்புக்கு அரசி என்று கூறுவது இழுக்கு என்று இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இதன் உண்மையை விளக்க வேண்டுகிறேன்.

பதில்: உலகில் பலதரப்பட்ட சமுதாயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒழுக்கம் ஒரு போக்கில் வடி வெடுக்கிறது. அவைகளுள் ஒரு சமுதாயத்துக்கு எது ஒழுக்கம் என்று தென்படுகிறதோ அது மற்றொரு சமுதாயத்துக்கு ஒழுக்கம் அல்லாதது ஆய்விடக்கூடும். உலகிலுள்ள விதவிதமான சமுதாயப் பழக்கவழக்கங்கள் எல்லாம் மஹாபாரதத்தில் இடம் பெறுகின்றன. ஒரு கணவனுக்குப் பல மனைவிகள் இருப்பது ஆடவனுக்கு ஒழுக்கம் தவறிய நிலை என்று கருதுகிற சமுதாயங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. ஒரு மனைவிக்குப்

பல கணவர்கள் இருப்பதை ஒழுக்கக்கேடு என்று கருதும் பழக்கம் நமக்கு அமைந்துவிட்டது. நம் நாட்டிலேயே மலை வாசிகள் சிலருக்கிடையில் ஒரு மனைவிக்குச் சில கணவர்கள் இருப்பது நடைமுறையில் இருந்து வருகிறது. திபேத்து நாட்டில் இது சர்வ சாதாரணமானது. அதற்கும் காரணம் ஒன்று உண்டு. ஜனத்தொகையில் ஆங்கு ஆடவர்களைவிட மகளிர் எண்ணிக்கையில் மிகக் குறைவு. சண்டை சச்சரவின்றி, போட்டி பொறாமையின்றி ஒரு மனைவிக்குச் சில கணவர்கள் இருப் பதை ஆங்குக் காணலாம்.

ஒரு நெருக்கடியான நிலையில் திரௌபதிக்கு அத்தகைய வாழ்க்கை முறை அமைந்தது. அது உலகத்தவர் பின்பற்றுதற் குரிய நெறி அன்று என்று மஹாபாரதத்தை இயற்றிய வியாசரே தெரிவித்திருக்கின்றார். திரௌபதியின் கற்பையும் அவர் பாராட்டியிருக்கின்றார். திரௌபதியை முன்னிட்டுப் பாண்டவர் ஐவர்க்கிடையில் எந்தவிதமான வழக்கும் நிகழ்ந்தது கிடையாது. இனி, திரௌபதியோ எப்பொழுது யாருக்கு மனைவியாக இருக்கவேண்டிய முறை ஏற்பட்டதோ அப்பொழுது அவள் தனக்கு ஏற்பட்ட நியமனத்தை முறையாக நிறைவேற்றி வைத்தாள். இதை ஆழ்ந்து ஆராய்கின்ற இடத்து கற்பு என்பது மனநிலையை ஒட்டியது என்பது புலப்படும். உடலின் மூலம் நிகழ்கின்ற பல செயல்களைவிட மிக உயர்ந்தது மனதின் கற்பு நிலை. இது ஆடவர் மகளிர் ஆகிய இரு தரத்தாருக்கும் பொதுவானது. ஆடவன் ஒருவன் பல மனைவிகளை உடைத்திருப்பதற்கிடையில் நெறியில் நிலை நிற்க முடியும். ஆடவன் ஒருவன் ஒரு மனைவிக்குப் பிறகு மற்றொரு மனைவியைத் தொடர்ந்து சில தடவைகளில் மணக்க வேண்டி நேரிடினும் அவன் நெறி பிறழாதவனாக இருப்பது சாத்தியம். இக்கோட்பாடு பெண்பாலர்க்கும் பொருந்து கிறது. பெண் ஒருத்தி ஏக காலத்தில் பல கணவர்களை உடைத் திருப்பதற்கிடையில் நெறிபிறழாதவளாக இருக்க முடியும். பெண் ஒருத்தி ஒரு கணவனுக்குப் பிறகு இன்னொரு கணவனைத் தொடர்ந்து பலதடவை மணந்து கொள்ளுதற்கு இடையிலும் நெறி வழுவாதவளாக இருக்கமுடியும். ஆனால் இத்தகைய கற்புநிலை அரிதிலும் அரிதாக யாரோ சிலர்க்குத்தான்

வாய்க்கிறது. திரௌபதியின் வாழ்க்கை முழுதையும் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கின்றவர்களுக்கு அவள் ஒருவிதத்தில் நெறியில் உறுதியாக நிலை நின்றவள் என்பது விளங்கும். ஆயினும் உலக நடைமுறைக்குத் திரௌபதி விலக்காக இருக்கின்றாளே ஒழிய அவளைப் பின்பற்றுவது மற்ற கற்பரசிகளுக்குச் சாத்திய மல்ல என்பதையும் உலகத்தவர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதில் மற்றொரு கோட்பாடும் அடங்கியிருக்கிறது. பாண்டவர்களும் கௌரவர்களும் மானுட வாழ்க்கைத் தத்துவங் களுக்கு விளக்கமாகின்றார்கள். அதில் பாண்டவர் ஐவருக்கும் திரௌபதி மனைவியாய் இருந்ததில் தத்துவம் ஒன்று அடங்கி யிருக்கிறது. ஐம்பொறிகளுக்கும் மனது மனைவியின் நிலையை உடைத்திருக்கிறது. ஐம்பொறிகளுள் ஒரு பொறி மனதோடு பொருந்தியிருக்கின்றபொழுது அது ஏனைய நான்கு பொறி களோடு சேர்வதில்லை. எப்பொழுது எப்பொறி செயல்புரிய முன்வருகிறதோ அப்பொழுது மனது அதோடு பொருந்தி யிருந்தாக வேண்டும். மனது மாறி மாறி ஐம்பொறிகளிடத்துப் பொருந்துவதால் மனது தனது கற்பை இழந்துவிடுவதில்லை. இக்கோட்பாடு யோகியர்கள் அனைவர்க்கும் சம்மதம். இதை அறிந்து கொள்கிறவர்கள் இத்தகைய மனோதத்துவத்துக்குப் புறச்சின்னமாக வந்தவள் திரௌபதி என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது திரௌபதியின் கற்புநிலை ஓரளவு ஆராய்ச்சிக்காரர் அறிவுக்கு எட்டும்.

கேள்வி: *(472)* பாரத யுத்தத்தில் அபிமன்யு இறந்து போனதைக் குறித்து அர்ஜுனன் அளவில்லாத மனக் கலக்கம் அடைகிறான். "பாரதா, பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் பிறப்பதும் உறுதியெனில் விலக்கமுடியாத இவ்விஷயத்தில் நீ வருந்துவது பொருந்தாது. உயிர்கள் துவக்கத்தில் தோன்றாமலும், இடையில் தோன்றியும், இறுதியில் தோன்றாமலும் இருக்கின்றன. இதைக்குறித்து நீ வருந்துவானேன்" என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே நேரில் உபதேசம் செய்து மனம் தெளிவடைந்த விஜயன் நிலை யற்ற ஓர் உயிருக்காக ஏன் சாதாரண மக்களைப்போல்

மனம் கலங்கவேண்டும்? இதற்குத் தக்க விடைபகர வேண்டுகிறேன்.

பதில்: மஹாபாரத யுத்தம் நிகழ்வதற்குச் சற்று முன்பு ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே அர்ஜுனனுக்கு வாழ்க்கைத் தத்துவங் களையெல்லாம் பற்றிப் புகட்டினார். அந்த போதனைக்குத்தான் பகவத்கீதை என்னும் பெயர் வந்துள்ளது. இக்கேள்வியில் சொல்லப்பட்டுள்ள கோட்பாடு பகவத்கீதையில் இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனுடைய போதனையை எல்லாம் கேட்டான பிறகு தனக்கு மனத்தெளிவு உண்டாய்விட்டது என்றும், சந்தேகங்கள் எல்லாம் அகன்றுவிட்டன என்றும், மேலும் தனக்கு சோகமும் மோகமும் ஏற்படமாட்டா என்றும் அர்ஜுனன் பகர்ந்தான். அதன்பிறகு அப்பெரும்போர் நிகழ்ந்தது. அதில் அபிமன்யு அழிந்துபட்டுப் போனான். அதைக்குறித்துப் பாண்டவர்கள் எல்லாருமே கலங்கினர். அர்ஜுனனுக்கு அடங்கவொண்ணாத் துயரம் வந்துவிட்டது. அப்படி அவன் துயரப்பட்டது ஞானி ஒருவனுக்குப் பொருந்துமா என்பது ஈண்டு எழுந்துள்ள கேள்வி.

வாழ்க்கைத் தத்துவங்களை அறிந்தான பிறகும் ஞானிகள் சிலர் சில சூழ்நிலைகளில் வாழ்ந்து வருகின்றனர். யாரோ ஒரு சிலரிடத்து அலாதியான தொடர்பு உடையவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். உலக வாழ்க்கை சம்பந்தமான இன்ப துன்பங்களில் கட்டுப்படாதவர்களாகவே அவர்கள் பரிபக்குவம் அடைந்திருக்கவேண்டியது முறை. ஆயினும் இவ்வுலக சம்பந்த மான இன்பதுன்பங்களில் கட்டுப்பட்டவர்கள் போன்று சில வேளைகளில் தென்படுகின்றனர். அவர்கள் பெற்றுள்ள ஞானத்தின் விளைவாகத் துன்பத்தினின்று அதிவிரைவில் தெளிந்துகொள்கின்றனர். அறிவிலிகள் மாண்டவர்களைக் குறித்து ஆண்டுகள் பலவற்றிற்கு வருந்திக்கொண்டிருப்பார்கள். ஞானிகளுக்கோ நீர் மேல் எழுதுகிற எழுத்துப்போன்று துன்பம் தோன்றுகிறது. தோன்றத்தோன்ற அது மறைந்துபோய் விடுகிறது. வருத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இல்லாத பீஷ்மரே சிறிது வருந்தினார். அவதார மூர்த்தியாகிய ஸ்ரீராமன் தசரதருடைய மரணத்தைக் குறித்துச் சாதாரண மக்கள் போன்று வருந்தினார். அப்படி அவர் வருத்தப்பட்டதுதான் உலக

இயல்புக்கு முற்றிலும் பொருந்தும். அபிமன்யுவின் அழிவைப் பற்றி மஹாபாரதத்தில் படிக்கின்ற யாருக்குமே துயரம் வந்து விடும். ஸ்ரீகிருஷ்ண பகவானிடமிருந்து ஞானத்தைப் பெற்றிருந்த அர்ஜுனன் தன் மகனைக் குறித்து வருந்தியது முற்றிலும் இயல்பே. ஆனால் அதினின்று அதிவிரைவில் அர்ஜுனனுக்குத் தெளிவு வந்துவிட்டது. விரைவில் தெளிவைப் பெறுவதுதான் ஞானத்தின் விளைவு.

இக்காலத்தில் தோன்றியுள்ள நிறைஞானி ஆகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய வாழ்க்கையிலிருந்து இதற்கு மற்றொரு சான்று காட்டலாம். ஸ்ரீராமகிருஷ்ணருடைய தமையனார்களில் ராம்குமார் என்பவர் ஒருவர். அவருடைய பிள்ளை அக்ஷயன். அந்த அக்ஷயனிடத்து ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சிறிது அபிமானம் இருந்தது. இளம் பிராயத்திலேயே அக்ஷயன் மாண்டுபோனான். அது பரமஹம்சருக்குச் சிறிது நேரத்துக்குத் துயரமூட்டியது. தமக்கு ஏற்பட்ட துயரத்தைக் குறித்து அவர் இங்ஙனம் பகரலானார்: "வாழ்க்கைத் தத்துவத்தை முற்றிலும் அறிந்துள்ள எனக்கே அக்ஷயனின் மறைவானது ஈரத்துணியைக் கசக்கிப் பிழிவது போன்று உள்ளம் வேதனையுற்றது. என்னுடைய நிலையே இப்படி இருக்கின்றபொழுது உலகப்பற்றுடையவர்களுக்கு மாண்டவர்களைக் குறித்து உண்டாகிற துயரத்தை யார்தான் அளந்தெடுக்க முடியும்!" நெருங்கிப் பழகியவர்கள் மறைந்துபோய்விட்டால் அதைக்குறித்து அப்படிப் பழகியுள்ளவர்கள் அனைவருக்கும் துயரம் வந்துவிடுகிறது. அவர்களுள் விவேகத்தையும் ஞானத்தையும் பெற்றுள்ளவர்களுக்குத் துயரம் உடனே அகன்றுபோய் விடுகிறது. இவ்வளவுதான் வித்தியாசம். ஆகவே மக்களின் மறைவைக் குறித்து மனம் வருந்துவது உடல் எடுத்தவர்கள் அனைவருக்கும் பொதுவானது.

கேள்வி: *(473)* ஆத்மா அழியாதது என்று உபதேசம் பெற்றுப் போரிட்ட அர்ஜுனன் அபிமன்யு இறந்தபோது ஏன் வருந்தினான்?

பதில்: அழியும் பாங்குடையது எது, அழியாதது எது என்பதை யுக்திபூர்வமாக அறிந்து கொள்ளுதல் விவேகமாகும்.

ஆத்மா அழியாதது, உடல் அழிந்துபோகக்கூடியது. இவ்வுண்மையைத் தெளிவுற அறிந்திருப்பவர்கள் எத்தனையோ துயரங்களினின்று தங்களை விடுவித்துக்கொள்ள முடியும். ஆயினும் துயரங்கள் அனைத்திடத்தினின்றும் தங்களை அறவே விடுவித்துக் கொள்ள முடியாது.

நெடுநாள் வாழ்ந்திருந்த பாட்டனார் உடலை உகுத்து விட்டுப் பரகதி அடைகிறார். பேரன்மார்கள் எதிர்பார்த்திருந்தபடியே அவர் மடிந்துபோனார். ஆயினும் அவர் மரணத்தைக் குறித்து அவர்கள் கண்ணீர் சிந்தியது மானுட இயல்பு; அழாது இருப்பது விபரீதமாகும்.

உடல் எடுத்தவர்கள் எல்லாரும் ஏதேனும் ஒரு நாளில் உடலை உகுத்தாக வேண்டும். உலக நியதியை முன்னிட்டு அபிமன்யு உலகில் தனக்குப் பின்னும் வாழ்ந்திருந்து நாட்டை ஆளுவான் என்று அர்ஜுனன் எதிர்பார்த்திருந்தான். மக்கள்மீது பந்தபாசம் இருக்கலாகாதென்பதையும் அர்ஜுனன் அறிந்திருந்தான். பேராற்றல் மிகப் படைத்திருந்த அபிமன்யுவின் மீது அர்ஜுனன் புத்திர வாஞ்சை மிகப் படைத்திருந்தான். இளம் அபிமன்யுவுக்கு நாளடைவில் போர்த்திறன் ஏராளமாக வாய்க்குமென்றும் தந்தை அர்ஜுனன் எதிர்பார்த்திருந்தான். ஆனால் அவனுடைய இளம் மைந்தன் முறைதவறி மூர்க்கத்தனமாகப் போர்க்களத்தில் கொல்லப்பட்டான். அத்தகைய நெருக்கடியில் வருந்தி அழுவதுதான் மானுட இயல்பு. முன்னெச்சரிக்கை எடுத்திருந்தால் அபிமன்யுவுக்கு இந்த விபத்து வராது தடுத்திருக்கலாம். எச்சரிக்கை எடுக்காததைக் குறித்து அர்ஜுனன் வருந்தியது முறையே. அழாதிருப்பது அறிவுடைமைக்கு அறிகுறியாகாது. அர்ஜுனன் அழுதான்; பிறகு ஒரே நாளில் மனதைத் தேற்றிக் கொண்டான். வருந்தவேண்டிய சூழ்நிலையில் வருந்துவது ஞானிக்கு ஒவ்வும். ஞானவான்கள் உடனுக்குடனே துயரத்தைத் துடைத்துத் தள்ளுகிறார்கள். ஞானம் பெற்று வந்த அர்ஜுனனும் அதைத்தான் செய்தான். ஆதலால் அவன் அழுதது முறையே.

கேள்வி: *(474)* நாளைக்குச் செய்யவேண்டிய வேலையை இன்று செய்துவிட வேண்டும். மாலையில்

செய்ய வேண்டியதைக் காலையில் செய்ய வேண்டும் என்று மஹாபாரதம் கூறுகிறது. இதன் உட்பொருள் யாது?

பதில்: 'Be with time and ahead of time' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. காலத்துடன் ஒத்து இரு, காலத்துக்கு முந்திக்கொள் என்பது அதன் பொருள். இயற்கையில் அமைந்துள்ள சொரூபங்களிலெல்லாம் அரிதிலும் அரிதாய் இருப்பது காலம். இதன் மகிமையை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. நம் அனைவர்க்கும் ஓயாது அது சொந்தமாய் இருக்கிறது. ஆனால் கடந்து போனது பின்பு யாருக்குமே திரும்பி வராது. வீணே கழித்த ஒரு கணப்பொழுது வீண்போனதே. திரும்பவும் அது நமக்குக் கிடைக்கப்போவதில்லை. செல்வத்தை இன்றைக்கு நாம் சம்பாதிக்காவிட்டால் அதற்கு ஈடு சேர்த்து பின்பு ஒருநாள் அதிகமான செல்வத்தைச் சம்பாதிக்க நமக்கு முடியும். வீண்போன காலத்துக்கு எந்த விதத்திலும் ஈடு எடுக்க முடியாது. ஆகையால்தான் காலம் அரிதிலும் அரிது.

காலத்தை நன்கு பயன்படுத்துபவர் அந்தந்த வேளையில் செய்து முடிக்கவேண்டிய அலுவல்களைச் சுறுசுறுப்புடன் செய்து முடித்துக்கொண்டு, அதற்குமேல் நாளைக்குச் செய்யவேண்டிய அலுவல்களில் ஒரு பகுதியை இன்றைக்கே முடித்துவிட்டால் காலம் என்னும் பொக்கிஷம் நமக்கு ஆதாயமாகிறது. விரைந்து வினையாற்றுகின்றவர் காலத்தினின்று பெரிய லாபத்தைப் பெற்றுக்கொண்டு வருகின்றனர். இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நாளைக்குச் செய்யவேண்டிய வேலையை இன்றைக்குச் செய்துவிட வேண்டும் என்றும், மாலையில் செய்யவேண்டியதைக் காலையில் செய்யவேண்டும் என்றும் மேலோர் பகர்கின்றனர்.

கடவுளுக்குப் பல சொரூபங்கள் இருக்கின்றன. அவர் கால சொரூபமாகவும் இருக்கிறார். காலத்தை நன்கு அறிந்து கொள்ளுதல் கடவுளின் மகிமையை அறிந்து கொள்ளுதற்குச் சமனாகிறது. காலத்தை நன்கு பயன்படுத்துவது ஒருவிதத்தில் கடவுள் வழிபாடு ஆகும். உண்மையான வழிபாட்டில் முன்னேற்றம் இருப்பதுபோன்று காலத்தை நன்கு பயன் படுத்துதலில் முன்னேற்றமிருப்பது நமக்குக் கண்கூடாக விளங்குகிறது. ❑

26. புராண தத்துவம்

கேள்வி: *(475)* சூரபத்மன், ஹிரண்யாக்ஷன், இராவணன் போன்ற அசுரர்களுக்கு நீண்ட ஆயுளையும் தந்து கொடுமைகள் செய்ய அனுமதித்துப் பிறகு அவர்களைச் சம்ஹாரம் செய்வதன் பொருள் என்ன?

பதில்: உலகத்தில் நலம் கேடு ஆகிய இரண்டும் உண்டு. சில சமயம் நலம் முன்னணியில் நிற்கும்; சில சமயம் கேடு முன்னணியில் நிற்கும். உலக நடைமுறையில் இது மாறி மாறி அமைந்துகொண்டே இருக்கும். நலத்தை வளர்ப்பவர்கள் நல்லவர்களாகிறார்கள். கேட்டை வளர்ப்பவர்கள் அசுரர்களாவார்கள். கேடு முன்னணிக்கு வரும்பொழுது அசுரர்களுடைய ஆதிக்கம் இருக்கும். ஏன் கேடு முன்னணிக்கு வரவேண்டும் என்ற கேள்வி பிறக்கிறது. பசி இருந்தால்தான் புசிப்பதில் இன்பம் ஏற்படும். நிழலினுடைய அருமை வெயிலில் போனால் தான் தெரியும். அங்ஙனம் நலத்தின் பெருமை கேடு இருந்தால் தான் விளங்கும். கேடு அதிகரிக்கின்றவளவு நலத்தின் அவசியம் நன்கு விளங்கும்.

விலங்குகள் வாழ்கின்ற காட்டுக்குப் போய் இங்கு ஏன் விலங்குகள் இருக்கின்றன என்று கேட்கக் கூடாது. அங்கு விலங்குகளினுடைய சாம்ராஜ்யம்தான் நிகழும். கேடு முன்னணியில் நிற்கும் காலத்தில் அசுரர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

அத்யாத்மிக அமைப்பில் சூரபத்மன், ஹிரண்யாக்ஷன், இராவணன் போன்றவர்கள் ஜீவர்களிடத்திலுள்ள அசுர இயல்பின் உருவமாகிறார்கள். ஜீவர்களிடத்தில் அசுர இயல்பு எல்லாப் பிறப்புக்களிலும் தொடர்ந்து வந்திருக்கிறது. எனவே அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தார்கள் என்பது

ஜீவர்களிடத்து அசுர இயல்பு தொடர்ந்து இருக்கிறது என்பதை விளக்குகிறது. மனிதன் செய்கின்ற கொடுமைகளுக்கெல்லாம் அவனிடத்துள்ள அசுர இயல்பே காரணமாகிறது. அசுர இயல்பை வளர்ப்பதன் மூலம் ஜீவாத்மன் துன்பப்படுகிறான். அசுர இயல்பால் பலகாலம் துன்பப்பட்ட பிறகுதான் ஜீவனுக்குப் புத்தி வருகின்றது. பிறகு அசுர இயல்பை அழிப்பதற்கு அவன் பலகாலம் போராடுகின்றான். பலதடவை அதை வெல்ல முடியாது தோல்வி அடைகிறான். இறுதியில் அவன் தெய்வ சகாயத்தை நாடுகின்றான். தெய்வத்தின் துணைகொண்டு அசுர இயல்பை அழித்துத் தள்ளுகின்றான். அசுர இயல்பை அழித்தான பிறகு அவனுக்கு உலக நாட்டம் உண்டாவதில்லை. தெய்வ நாட்டத்தில் அவன் தீவிரமாகச் சென்று பரத்தை அடைகின்றான்.

அசுர இயல்போடு போராடுவதைத்தான் உலக வாழ்வு என்கின்றோம். அசுர இயல்பை அழித்தான பிறகு உலக வாழ்வு இல்லை. பேரின்பப் பெருவாழ்வுதான் அதன்பின் அமைகின்றது. அசுரர்களுக்கு நீண்ட ஆயுள் தந்து பிறகு அவர்களை அழிப்பது அசுர இயல்போடு நீண்ட காலம் போராடித்தான் அதை அழிக்க முடியும் என்பதைக் குறிக்கிறது.

கேள்வி: *(476)* யமதர்ம ராஜா அழிக்கும் சக்தி படைத்தவர். மும்மூர்த்திகளுள் சிவன் ருத்ரனாக அழிக்கும் திறமை படைத்தவர். சிவனை வழுத்துகிறோம். ஆனால் யமனைப் போற்றுவதில்லை. ஏன்?

பதில்: மும்மூர்த்திகளுள் விஷ்ணு, சிவன் ஆகிய இரண்டு மூர்த்திகளே உபாசனைக்குரியவர்கள் ஆகிறார்கள். பிரம்ம தேவன் மும்மூர்த்திகளுள் ஒருவராயிருந்தும் அவரை உபாசிப்பதில்லை. எந்தத் தெய்வத்தை உபாசிக்கிறோமோ அந்தத் தெய்வத்தின் விபூதி அல்லது சிறப்பியல்பு உபாசனைக்கு உரியதாகிறது. பிறவிப் பெருங்கடலைத்தாண்டி அதீதத்துக்குப் போவது வாழ்க்கையின் குறிக்கோள். அதீத நிலையை வழங்கும் திறமை நாராயணனுக்கும், சங்கரனுக்குமே உண்டு. பிரம்ம தேவனுக்கு அத்தகைய தகைமை இல்லாமையினால் பிறவி வேண்டாம் என்னும் இலட்சியத்தைக் குறிக்கோளாகக்

கொண்டிருப்பவர்கள் பிறவியைப் பெருக்கும் தேவதையை வணங்குவதில்லை. இனி ருத்ரனும் சம்ஹார மூர்த்தியாயிருக்கிறார். யமதர்ம ராஜனும் சம்ஹார மூர்த்தியாயிருக்கிறார். இவர்கள் இருவருள் சிவனாருடைய அம்சமாயிருக்கிற ருத்ரனை மட்டும் நாம் வழுத்துவதற்குக் காரணம் உண்டு. பிறவிப் பிணியைப் படிப்படியாகத் துடைத்து ஜீவாத்மனை மேல் நிலைக்குக் கொண்டுவரும் தகைமை ருத்ரமூர்த்திக்கு உண்டு. அத்தகைமை யமதர்மராஜனுக்கு இல்லை. ஆயுள் முடிந்த ஜீவாத்மனைக் கரந்தெடுக்கும் கடமை மட்டும் யமதர்ம ராஜனுக்கு இருக்கிறது. அந்த ஜீவனைப் பண்படுத்தும் திறமை அத்தெய்வத்திடத்து இல்லை. ஆதலால்தான் யமன் உபாசனைக்குரிய மூர்த்தியாகமாட்டார்.

பரம்பொருளின் சொரூபங்கள் பல. அச்சொரூபங்களுள் ஜீவாத்மனைப் பண்படுத்தி மேல்நிலைக்குக் கொண்டுவரும் சொரூபங்களே உபாசனைக்குரிய மூர்த்திகளாகிறார்கள். அத் தகைமை வாய்க்கப்பெறாது அவரவர் கடமைகளை மட்டும் முறையாகச் செய்து வருகிறவர்கள் இயற்கையின் நடைமுறைப் பணியாளர்கள் ஆகிறார்கள். தங்கள் பணிவிடைகளை முறையாக நிறைவேற்றுவதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். ஆனால் உய்வு அடைவதற்கு நாம் அவர்களை வணங்குவதில்லை. இக்காரணத்தை முன்னிட்டே யமதர்மராஜன் வணங்கப் படுவதில்லை.

கேள்வி: *(477)* ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் வியாக்கியானம் எழுதிய திருவாசகம் புஸ்தகத்தில் மாணிக்க வாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைக்கவில்லை, அது சித்தரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடல் புராணத்தில் சோழனின் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விளக்கம் தேவை.

பதில்: மானுட வடிவெடுத்துள்ள ஜீவன் ஒருவன் செவிடாகப் பிறந்தால் அவன் ஊமையாகவும் அமைவது திண்ணம். ஏனென்றால் பிறந்த குழந்தை ஒன்று காதால் கேட்டதை நாவால் சொல்லிப் பழகுகிறது. உலகில் உள்ள எல்லா

மொழிகளுக்கும் இக்கோட்பாடு உண்மை. செவிடாகப் பிறந்தது ஓசை எதையும் கேட்பதில்லை. ஆகையால் அது ஓசையை உண்டுபண்ணிப் பழகுவதில்லை. எனவே அது ஊமையாகிறது. ஓசையை உண்டுபண்ணுவதற்கு மேல் சொல் ஒன்றையும் அதற்கு விளக்கமாக உள்ள பொருளையும் இணைத்துப் பழகவேண்டும். அது மிக முக்கியமான பயிற்சி. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். பார்வை என்னும் சொல் இருக்கிறது. இது சூழ்நிலைக்கேற்பப் பலவாறு பொருள்படுகிறது. அப்படிப் பொருள்படுவது பழக்கத்தால் வருகிறது. திடீரென்று ஒருநாள் காது கேட்கும் திறமை வந்துவிட்டால் அதினின்று கேட்ட சொல்லை எப்பொருளோடு இணைப்பது என்னும் பயிற்சி பெறாத ஜீவன் ஒருவன் சொல்லையும் அதன் பொருளையும் இணைக்கும் பயிற்சி பெற்றவன் அல்லன். பிறரால் தூண்டப் பெற்று ஓசை உண்டுபண்ணினால் அது யந்திரம் பேசுவது போன்று பேசுமேயொழிய பொருள் சேர்ந்த பேச்சாகாது. நனவிலே நம்மால் உண்டுபண்ணப்பட்ட மானுடன் ஒருவன் பேசுகிறான். அப்படிப் பேசுவது நம்முடைய மனதின் கூறேயொழிய அப்பேச்சு பேசுகிற மானுடனொருவன் நம்முடைய மனதுக்குப் புறம்பாக இல்லை. அதேவிதத்தில் பேசாதிருந்த பெண்ணொருத்தியை இறைவன் பேசுவித்தார் என்றால் அப்பேச்சும் அதன் பொருளும் இறைவனுக்குச் சொந்தம். பேசிய பெண்ணோ உயிரோடு கூடிய யந்திரமாகிறது. அதில் சிறப்பு ஏதுமில்லை.

பிறகு திருச்சாழலில் அடங்கியிருக்கும் விஷயம் இரண்டு தோழிகளுக்கு இடையில் சிவமகிமை வினா விடையாக அமைந்திருக்கிறது. அதில் புத்தமத சைவமத சம்வாதம் ஏதும் இடம்பெறவில்லை. இப்பொழுது ஆராய்ச்சி பண்ணினாலும் இவ்வுண்மை எல்லார்க்கும் வெளிப்படையாக விளங்குகிறது. பௌத்தர்கள் கேட்ட கேள்விக்கு விடையாக ஊமைப் பெண் பேசியது என்னும் அதிசயச் செயலை இதனோடு இணைப்பது முற்றிலும் பொருத்தமற்றதாம்.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் வியாசர் இயற்றிய ஏனைய புராணங்களோடு சேர்ந்து இடம் பெறுகிறது. இந்தப் புராணங்களில் கற்பனைக் கதைகள்

அல்லது கட்டுக் கதைகள் ஏராளமாக அடங்கி இருக்கின்றன. சில கட்டுக் கதைகளுக்கு அடிப்படையாகத் தத்துவ விளக்கங்கள் அமைந்திருக்கின்றன. ஏனைய கதைகள் பாமரர்களுக்கிடையில் ஊக்கத்தை ஊட்டுவதற்கு அமைக்கப்பெற்றவை. அவைகள் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகள் ஆகமாட்டா.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்பது கோட்பாடு. புராணங்களை வாசிப்பவர்களும் கேட்கிறவர்களும் அவைகளை வாச்சியார்த்தம் அல்லது சொற்படி கருத்தை வாங்கிக்கொள்ளலாகாது. அதற்கு லக்ஷ்யார்த்தம் அல்லது இன்ன நோக்கத்தோடு சொல்லப்பட்டது என்பதை அறிந்துகொள்வது முற்றிலும் அவசியமாகிறது. ஆகவே வாச்சியார்த்தம், லக்ஷ்யார்த்தம் ஆகியவைகளைச் சரியாகப் பொருள்படுத்தத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு மனக்குழப்பம் உண்டாவது திண்ணம். ஊமைப் பெண்ணைப் பேசவைத்தது பாலர் போன்றிருப்பவர்க்கு உற்சாகம் ஊட்டுவதற்கு அமைந்துள்ள வெறும் கட்டுக் கதையாம். அது தத்துவமாகாது.

கேள்வி: (478) கங்காதேவி சாபம் காரணமாக நிலவுலகிற்கு வந்தாள். அப்படியானால் நிலவுலகிற்கு வந்துள்ள நாம் அனைவரும் சாபம் பெற்றவர்களா? உயிர்களுக்குப் பிறப்பிடம் நரகமா? பூமியா? சொர்க்கமா?

பதில்: கங்காதேவி சொர்க்கலோகத்தில் இருக்கிறாள்; பூலோகத்துக்கு வருகிறாள்; பாதாள லோகத்துக்கும் போகிறாள். மூவுலகும் அவளுடைய சாந்நித்தியத்தால் நலனடைகின்றன. இது இயற்கையின் அமைப்பு. கங்காதேவி சாபத்துக்குட்பட்டுப் பூமியில் பெண்ணாய்ப் பிறந்து சந்தனுவை மணந்து, தேவவிரதனை மகவாகப் பெற்றாள். அத்தேவவிரதன் பின்பு பீஷ்மனானான். இது சரித்திர வரலாறு. அதன்படி சாபம் என்பதனுடைய பொருள் வினைப்பயனாம். அவரவர் வினைக்கேற்ற இடங்களில் பிறப்பெடுப்பது தத்துவ நியதி. அதினின்று யாரும் பிசகுவது இல்லை. தீவினையாளர் நரகப் பிராப்தியை அடைகின்றனர். ஆதலால் அவர்களை நரகத்தில் பிறந்தவர்கள்

என்று பொருள்படுத்துவது பொருந்தும். நலம் கேடு ஆகிய இரு வினைகளும் வாய்க்கப் பெற்றவர்கள் மண்ணுலகில் பிறக்கின்றனர். மண்ணுலக வாழ்வில் முன்னேற்றத்துக்கு வாய்ப்பு ஏராளமாக உண்டு. ஆதலால் மண்ணுலக வாழ்க்கையையே, மண்ணுலகில் பிறப்பதையே அறிவுடையோர் அனைவரும் விரும்புகின்றனர். புண்ணிய கர்மத்தின் விளைவாகச் சொர்க்கப் பிராப்தி வாய்க்கிறது. அதைச் சொர்க்கத்தில் பிறப்பு என்று பொருள்படுத்தலாம். சொர்க்க வாசத்தில் சுகஜீவனத்துக்கு ஏராளமாக இடமுண்டு. ஆனால் அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம பரிபாகத்துக்கும் ஆங்கு இடமில்லை. அவரவர் வினைக்கேற்ற இடங்களில் உயிர் வகைகள் பிறப்பெடுக்கின்றன. அவர்களுள் மண்ணுலகில் பிறந்திருப்பவர்கள் பாக்கியவான்கள்.

கேள்வி: *(479)* தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது அமிர்தம் கிடைத்த பின்னர் நஞ்சு எவ்வாறு வரக்கூடும்?

பதில்: மக்களாகிய நம்முடைய தினசரி வாழ்க்கைக்கு விளக்கமாகத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த புராண வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்தில் பகர்ந்துள்ள கதைகளெல்லாம் பெரும்பாலும் கட்டுக்கதைகளேயாம். ஆயினும் அந்தக் கட்டுக் கதைகளுக்கு அடிப்படையாக இருக்கும் தத்துவங்கள் மறுக்கப்படவோ, மாற்றப்படவோ முடியாதவைகளாய் இருக்கும். அத்தகைய புராணக் கதைகளில் ஒன்று பாற்கடலைக் கடையும் கதையாகும். உலகில் உள்ள நல்லவர்கள் தேவர்கள் என்றும், கெட்டவர்கள் அசுரர்கள் என்றும் புராணக் கோட்பாட்டில் பாகுபடுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். பாற்கடல் என்பதொன்று இல்லை. ஆனால் உலகில் உள்ள நிலம், நீர், காற்று ஆகிய யாவும் உணவு மயமாய் இருப்பதால் அவையாவும் ஒன்று சேர்ந்து பாற்கடல் எனத் தொகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதன் உண்ணும் உணவு அமிர்தம் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. மிருத்யு என்றால் மரணம். அமிர்தம் என்றால் மரணமிலா நிலை. நாள்தோறும் உணவு உண்பதன் வாயிலாக மரணம் ஒத்திவைக்கப்படுகிறது. அப்போதைக்கப்போது

அல்லது கட்டுக் கதைகள் ஏராளமாக அடங்கி இருக்கின்றன. சில கட்டுக் கதைகளுக்கு அடிப்படையாகத் தத்துவ விளக்கங்கள் அமைந்திருக்கின்றன. ஏனைய கதைகள் பாமரர்களுக்கிடையில் ஊக்கத்தை ஊட்டுவதற்கு அமைக்கப்பெற்றவை. அவைகள் சரித்திர பூர்வமான நிகழ்ச்சிகள் ஆகமாட்டா.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்பது கோட்பாடு. புராணங்களை வாசிப்பவர்களும் கேட்கிறவர்களும் அவைகளை வாச்சியார்த்தம் அல்லது சொற்படி கருத்தை வாங்கிக்கொள்ளலாகாது. அதற்கு லக்ஷ்யார்த்தம் அல்லது இன்ன நோக்கத்தோடு சொல்லப்பட்டது என்பதை அறிந்துகொள்வது முற்றிலும் அவசியமாகிறது. ஆகவே வாச்சியார்த்தம், லக்ஷ்யார்த்தம் ஆகியவைகளைச் சரியாகப் பொருள்படுத்தத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு மனக்குழப்பம் உண்டாவது திண்ணம். ஊமைப் பெண்ணைப் பேசவைத்தது பாலர் போன்றிருப்பவர்க்கு உற்சாகம் ஊட்டுவதற்கு அமைந்துள்ள வெறும் கட்டுக் கதையாம். அது தத்துவமாகாது.

கேள்வி: (478) கங்காதேவி சாபம் காரணமாக நிலவுலகிற்கு வந்தாள். அப்படியானால் நிலவுலகிற்கு வந்துள்ள நாம் அனைவரும் சாபம் பெற்றவர்களா? உயிர்களுக்குப் பிறப்பிடம் நரகமா? பூமியா? சொர்க்கமா?

பதில்: கங்காதேவி சொர்க்கலோகத்தில் இருக்கிறாள்; பூலோகத்துக்கு வருகிறாள்; பாதாள லோகத்துக்கும் போகிறாள். மூவுலகும் அவளுடைய சாந்நித்தியத்தால் நலனடைகின்றன. இது இயற்கையின் அமைப்பு. கங்காதேவி சாபத்துக்குட்பட்டுப் பூமியில் பெண்ணாய்ப் பிறந்து சந்தனுவை மணந்து, தேவவிரதனை மகவாகப் பெற்றாள். அத்தேவவிரதன் பின்பு பீஷ்மனானான். இது சரித்திர வரலாறு. அதன்படி சாபம் என்பதனுடைய பொருள் வினைப்பயனாம். அவரவர் வினைக்கேற்ற இடங்களில் பிறப்பெடுப்பது தத்துவ நியதி. அதினின்று யாரும் பிசகுவது இல்லை. தீவினையாளர் நரகப் பிராப்தியை அடைகின்றனர். ஆதலால் அவர்களை நரகத்தில் பிறந்தவர்கள்

என்று பொருள்படுத்துவது பொருந்தும். நலம் கேடு ஆகிய இரு வினைகளும் வாய்க்கப் பெற்றவர்கள் மண்ணுலகில் பிறக்கின்றனர். மண்ணுலக வாழ்வில் முன்னேற்றத்துக்கு வாய்ப்பு ஏராளமாக உண்டு. ஆதலால் மண்ணுலக வாழ்க்கையையே, மண்ணுலகில் பிறப்பதையே அறிவுடையோர் அனைவரும் விரும்புகின்றனர். புண்ணிய கர்மத்தின் விளைவாகச் சொர்க்கப் பிராப்தி வாய்க்கிறது. அதைச் சொர்க்கத்தில் பிறப்பு என்று பொருள்படுத்தலாம். சொர்க்க வாசத்தில் சுகஜீவனத்துக்கு ஏராளமாக இடமுண்டு. ஆனால் அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம பரிபாகத்துக்கும் ஆங்கு இடமில்லை. அவரவர் வினைக்கேற்ற இடங்களில் உயிர் வகைகள் பிறப்பெடுக்கின்றன. அவர்களுள் மண்ணுலகில் பிறந்திருப்பவர்கள் பாக்கியவான்கள்.

கேள்வி: *(479)* தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது அமிர்தம் கிடைத்த பின்னர் நஞ்சு எவ்வாறு வரக்கூடும்?

பதில்: மக்களாகிய நம்முடைய தினசரி வாழ்க்கைக்கு விளக்கமாகத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்த புராண வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்தில் பகர்ந்துள்ள கதைகளெல்லாம் பெரும்பாலும் கட்டுக்கதைகளேயாம். ஆயினும் அந்தக் கட்டுக் கதைகளுக்கு அடிப்படையாக இருக்கும் தத்துவங்கள் மறுக்கப்படவோ, மாற்றப்படவோ முடியாதவைகளாய் இருக்கும். அத்தகைய புராணக் கதைகளில் ஒன்று பாற்கடலைக் கடையும் கதையாகும். உலகில் உள்ள நல்லவர்கள் தேவர்கள் என்றும், கெட்டவர்கள் அசுரர்கள் என்றும் புராணக் கோட்பாட்டில் பாகுபடுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். பாற்கடல் என்பதொன்று இல்லை. ஆனால் உலகில் உள்ள நிலம், நீர், காற்று ஆகிய யாவும் உணவு மயமாய் இருப்பதால் அவையாவும் ஒன்று சேர்ந்து பாற்கடல் எனத் தொகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதன் உண்ணும் உணவு அமிர்தம் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. மிருத்யு என்றால் மரணம். அமிர்தம் என்றால் மரணமிலா நிலை. நாள்தோறும் உணவு உண்பதன் வாயிலாக மரணம் ஒத்திவைக்கப்படுகிறது. அப்போதைக்கப்போது

மரணத்தைத் தடுக்கவும், ஒத்திவைக்கவும் உணவு உதவுகிறது. இக்காரணத்தை முன்னிட்டே உணவுக்கு அமிர்தம் என்னும் பெயர் வந்துள்ளது. உலகில் வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் மக்களாகிய நாம் அனைவரும் அமிர்தத்தைப் புசித்து வருகிறோம். அப்படியிருந்தும் நம் எல்லாருக்கும் ஒரு காலத்தில் மரணம் வருகிறது. இந்த மரணமே நஞ்சு என இயம்பப்பட்டிருக்கிறது. வாழ்ந்திருந்த பிறகு மரணம் வருவதால் அமிர்தத்தைப் புசித்த பிறகு நஞ்சு வந்தது என்னும் கதை தத்துவத்துக்கு ஒத்திருக்கிறது. இனி, அமிர்தம் என்னும் சொல் ஆத்ம சொரூபத்திற்கும் பொருந்தியதாகிறது. ஆத்மானுபூதி அடையப் பெற்றவர்கள் மரணமிலாப் பெருநிலையை அடைகின்றனர். அன்னவர்களுக்கு மறுபிறப்பும் இல்லை. அக்கோட்பாட்டை விளக்குதற்கு இக்கதையில் மற்றொரு பகுதி அமைந்திருக்கிறது. பாற்கடலைக் கடைந்துகொண்டிருந்தபொழுது விஷம் வந்தது. அதினின்று தங்களை விடுவித்துக் கொள்ளுதல் பொருட்டுத் தேவர்களும், அசுரர்களும் விண்ணுலகம், மண்ணுலகம், பாதாளம் ஆகிய மூவுலகில் எங்கு ஓடியும் தப்பித்துக் கொள்ள அவர்களுக்கு இயலவில்லை. உலகத்தவர்கள் எல்லாருக்கும் விரைவில் அல்லது நாளடைவில் மரணம் உண்டு என்னும் கருத்தை இச்செயல் விளக்குகிறது. எங்கு ஓடியும் தப்பிக்க முடியாதவர்கள் கடைசியாகச் சிவனார் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். அந்த விஷத்தை அவர் ஏற்றுக்கொண்டு தஞ்சமடைந்தவர்களைப் பாதுகாத்தார். சிவனை அடைந்தவர்களுக்கு மரணமில்லை. கடவுளைச் சென்றடையும் வரையில் உலக வாழ்வு என்னும் அமிர்தம் முதலில் வந்து, பிறகு நஞ்சு என்னும் மரணம் வருகிறது. ஆனால் பரமனை அடைந்தவர்களுக்கு மேற்கொண்டு பிறப்பும் இறப்பும் அற்ற நிலையாகிய அமிர்த சொரூபம் வாய்க்கிறது. இந்த இரண்டு தத்துவங்களும் பாற்கடலைக் கடைதல் என்னும் கதையில் அடங்கியிருக்கின்றன. உலக வாழ்க்கையில் மட்டும் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு முதலில் அமிர்தம் வந்து பிறகு நஞ்சு வருகிறது. பரமனை அடையப்பெற்றவர்களுக்குப் பிரபஞ்ச வாழ்வு எனும் நஞ்சு பொருளற்றதாய்ப் போகிறது. அன்னவர்கள் அடைகின்ற அமிர்த சொரூபமே நித்தியானந்த சொரூபமாம்.

கேள்வி: *(480)* கடவுள் விருப்பு வெறுப்பு அற்றவர். அப்படியிருக்கப் பாற்கடலைக் கடைந்தபோது அமுதத்தைத் தேவர்களுக்கும் நஞ்சை அசுரர்களுக்கும் கொடுத்தது ஓரம் சாரும் நிலையல்லவா?

பதில்: பாற்கடலைக் கடைந்தவர்கள் தேவர்களும் அசுரர்களும் ஆவார்கள். அச்செயலில் கடவுள் கலந்துகொள்ளவில்லை. பாற்கடலினின்று வந்த திரவியங்களைப் பங்கு போட்டுக் கொண்டபொழுது நல்லவைகளையெல்லாம் தேவர்களே தங்களுக்குரியவைகளாக்கிக் கொண்டனர். பிறகு விஷம் வந்தபோது அது அசுரர்களுக்கு இருக்கட்டும் என்று தேவர்கள் ஒதுக்கித்தள்ளினர். அசுரர்களோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த விஷமானது இருதரத்தாரையும் தாக்கியது. தேவர்களும் அசுரர்களும் பாதாள லோகத்துக்கு ஓடினர்; மத்திய லோகத்துக்கு ஓடினர்; சொர்க்கலோகத்துக்கு ஓடினர்; எங்கு ஓடியும் தப்பிக்க முடியவில்லை. மகாதேவனிடம் சென்று அடைக்கலம் புகுந்தனர். அவர் அந்த நஞ்சை உண்டு உயிர்களைக் காப்பாற்றினார். இதுவே புராண வரலாறு.

உலக வாழ்வு என்னும் பாற்கடலை நல்லவர்களும் கெட்டவர்களும் ஒன்றுகூடிக் கடைகின்றனர். செல்வம், கல்வி, ஆபரணம், வண்டி வாகனம் ஆகிய திரவியங்கள் வாழ்க்கையில் வந்து வாய்க்கின்றன. அறிவு படைத்தவர்கள் அவைகளை நன்கு பயன்படுத்துகின்றனர். அறிவற்றவர்கள் உழைத்ததுதான் மிச்சம். வாழ்வில் வாய்ப்பவைகளை நன்கு பயன்படுத்தத் தெரியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு நிலைகளையும் எப்பொழுதும் உலகில் நாம் காணலாம். பிறகு இருதரத்தாருக்கும் மரணம் என்னும் விஷம் வருகிறது. எங்குச் சென்றாலும் மரணத்தினின்று தப்பித்துக்கொள்ள முடியாது. கடவுளை அடைகின்றவர்களே மரணமிலாப் பெரு நிலைக்கு உரியவராகின்றனர்.

ஆக, விருப்பு, வெறுப்பு நல்லவர் கெட்டவர்களாகிய மக்களுக்கிடையில் இருக்கிறது. கடவுளாகிய மகாதேவனிடம் விருப்புமில்லை; வெறுப்புமில்லை. ஆதலால் உலக வாழ்வைக் கடைதல் என்னும் செயலிலும் அவர் ஈடுபடுவதில்லை. உலக வாழ்வில் விளைகிற பலன்களில் பங்கு கொள்ளவும் அவர்

போவதில்லை. உலகத்தவர் உண்டுபண்ணுகிற விஷத்தை ஏற்பது அவருடைய கருணை. உலகத்தவர் கேட்டை ஒதுக்கி நலனை நாடுகின்றனர். வேண்டுதல் வேண்டாமையில்லாத கடவுளோ உலகத்தவர் நலன் பொருட்டுக் கேட்டைத் தாம் ஏற்றுக்கொள் கிறார். விஷம் உண்டதின் கோட்பாடு அதுவாம். அது அவருடைய தியாகம். ஆதலால் அவருக்குத் தியாகராஜன் என்னும் பெயர் வந்துள்ளது. விஷத்தைக் கழுத்தில் நிறுத்தியதால் அவர் நீலகண்டன் ஆனார். உலகத்தவர் கேட்டைத் தியாகம் பண்ணி நலனை நாடுகின்றனர். ஆனால் கடவுளோ நலனைத் தியாகம் பண்ணி உலகத்தவர் நலனுக்காகக் கேட்டை மனமுவந்து எடுத்துக்கொண்டார். அது அவருடைய கருணை. கடவுளின் கருணையினாலேயே உலகம் உய்வடைந்து வருகிறது. விஷம் உண்ணுதல் என்னும் கருணைச் செயலை அவர் ஒதுக்கி விடுவாராகில் உலகம் அழிந்துபட்டுப்போம். அவ்வாறு உலகம் அழிந்துபட்டுப் போகாது அவர் காத்து வருகிறார். ஆதலால் அவர் கருணாகரனாகவும் இலங்குகின்றார்.

கேள்வி: *(481)* திரேதாயுகத்தில் இராமாயணத்தில் காணப்பெறும் பரசுராமரும், துவாபரயுகத்தில் மஹாபாரதத்தில் பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகியோருக்குக் குருவாக அமைந்த பரசுராமரும் வேறு வேறு மூர்த்திகளா? அல்லது ஒரே மூர்த்திதானா?

பதில்: இதிகாசங்களிலும் புராணங்களிலும் காணப்பெறும் சில மூர்த்திகள் சரித்திர பூர்வமான வியக்திகள் ஆகமாட்டார்கள். திரேதாயுகம் முடிந்து துவாபரயுகம் முடியும் வரையில் உள்ள காலவரையறையோ அளவில் அடங்காதது. அங்ஙனம் சில யுகாந்தரங்களுக்கு ஒரே உடல் தாங்கியிருக்கும் மூர்த்தி யாரையும் நாம் காண்பதில்லை. அப்படியிருந்தும் இந்த இரண்டு யுகங்களில் பரசுராமர் முக்கியமான இடம்பெற்று வருகிறார். இதன் உட்கருத்தை ஆராய வேண்டும். பரசுராமருடைய வரலாறே ஒருவிதத்தில் புராணங்களில் அடங்கியுள்ள கற்பனா மூர்த்திகளில் ஒருவராகத் தென்படுகிறார்.

இனி, பரசுராமரை இயற்கையின் கோரசக்தி சொரூபம் என வைத்துக்கொண்டால் இத்தகைய சக்தி எல்லா

யுகங்களிலும் ஏதேனும் ஒருவிதத்தில் தாண்டவமாடி வருகிறது என்பது வெளியாகும். இந்தப் போக்கில் பொருள்படுத்து மிடத்தே உலக வரலாறுக்கு இது ஒத்துவருகிறது. தசரதராமன் அவதரித்த திரேதாயுகத்தில் பரசுராமரும் ஒரு முக்கியமான இடம் பெறுகிறார். அவருடைய கோபாவேசத்தைச் சமாளித்த தசரதராமனுடைய மகிமையை வெளிப்படுத்த அவர் உதவினார். அத்தகைய மூர்த்தி நெடிது வாழ்ந்திருந்து துவாபரயுகத்தில் மஹாபாரதத்துக்குரிய சில பாத்திரங்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்தார். பீஷ்மருக்கு அவர் கொடுத்த பயிற்சி குருவையே தூக்கியடிப்பதற்கான பெரிய பயிற்சியாக வடிவெடுத்தது. துரோணருக்கு அவர் கொடுத்த பயிற்சி மஹாபாரதப் போரில் கேடுடைய துர்ரியோதனனுக்குப் பேராதரவு தரக்கூடியதாக வடிவெடுத்தது. அதே விதத்தில் கர்ணனுக்கு அவர் கொடுத்த பயிற்சியும் துரியோதனனுக்கு ஆதரவாக வந்தமைந்தது. ஒருவிதத்தில் பீஷ்மருடைய வல்லமையும் துர்ரியோதனனுக்கே பயன்பட்டது. ஆயினும் துரியோதனன் வெற்றியடையவில்லை. இதனின்று உண்மை ஒன்று வெளியாகிறது. இயற்கையின் அமைப்பில் பயங்கரமான நாசகாரி சக்தி ஒன்று இருக்கிறது. அது நல்லவர்கள் கெட்டவர்களாகிய எல்லாரையும் அழிக்க வல்லது. ஆயினும் நல்லவர்கள் அதனுடைய ஆக்கிரமிப்புக்கு இலக்காவதில்லை. இக்கொள்கையின்படி பரசுராமருடைய வல்லமை இக்காலத்திலும் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஏதேனும் ஒரு ஜீவாத்மாவின் வாயிலாகப் பரசுராமர் என்னும் இயற்கைச் சக்தி செயலில் இறங்கி இயற்கையின் போக்கை மாற்றியமைக் கிறது. இக்காலத்திய பூலோக வரலாற்றைப் புராண பூர்வமாக எழுதினால் பரசுராமர் இக்காலத்தில் தம்முடைய பாங்கை நிறைவேற்றியிருக்கிறார் என்கின்ற முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும். அக்காலத்தில் அவர் ஒழித்துத் தள்ளிய அரசர்களெல் லாரும் அறங்காக்கத் தகுதியற்றவர்களாக இருந்தார்கள். பெரிய பதவிகளிலிருந்துகொண்டு பெரிய காரியங்களைத் திறமையுடன் நிறைவேற்றத் தகுதியற்றவர்களை இயற்கையின் நாசகாரி சக்தி துடைத்துத்தள்ளுவது எல்லாக் காலங்களிலும் நிகழ்கிற நிகழ்ச்சி யாகும். புராண பூர்வமாகப் பகருமிடத்துப் பரசுராமர் படேல் என்னும் நாமம் தாங்கிக் கி.பி. இருபதாம் நூற்றாண்டில்

பரதகண்டத்தில் அவதரித்துத் தகுதியற்ற அரசர்களையெல்லாம் பதவியை விட்டுக் கீழிறக்கித் தள்ளினார் என்று இயம்பினால் புராணத்துக்கும் இது ஒத்திருக்கிறது, சரித்திரத்திற்கும் இது ஒத்திருக்கிறது.

ஆதலால் பரசுராமர் என்னும் மூர்த்தியை இயற்கைத்தாயின் நாசகாரி சக்தி என்று நாம் பொருள்படுத்தவேண்டும். இந்தச் சக்தியானது அழிந்துபட்டுப்போகாது சாஸ்வதமாக மண்ணுலக வாழ்வில் இடம் பெற்றிருக்கிறது. பயங்கரமான ஆயுதங்களைச் சில வீரர்களுக்குக் கொடுத்தருள வல்லதாக அச்சக்தி இருக்கிறது. இன்றைக்கு அணுசக்தி என்னும் நாசகாரியாக ஒரு சிலர்க்குப் புகட்டப்பெற்றிருக்கிறது. இதை முறையோடு கையாண்டால் மக்கள் தீமையை அகற்றி நலனை நிலை நாட்ட முடியும். முறைதவறிக் கையாண்டால் கையாளுகிற வனுடைய கேட்டுக்கே அது முகாமையாகும். இந்தப் பாங்கில் பரசுராமர் என்னும் இயற்கையின் பேராற்றல் சிரஞ்சீவியாக நிலவுலகில் இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பாங்கில்தான் பரசுராமரை நாம் பொருள்படுத்தவேண்டும்.

கேள்வி: *(482)* தாயின் தலையைக் கொய்து வரச் சொன்னார் பரசுராமனின் தந்தை. அவரும் அப்படியே செய்தார். இது பொருந்துமா?

பதில்: பரசுராமனின் தந்தை ஜமதக்னி. தந்தை, மைந்தன் ஆகிய இருவரும் மிகக் கண்டிப்பான மூர்த்திகள். முன் கோபிகள். தயவுதாட்சண்யமின்றி எண்ணியதை எண்ணியாங்கு செய்து முடிக்க வல்லவர்கள் என்பது புராண ஐதிகம். இத்தகைய தந்தையும், மைந்தனும் சரித்திர பூர்வமான மூர்த்திகள் அல்லர். புராணக் கற்பனை மூர்த்திகளாக இலங்கி வருகிறார்கள். ஜமதக்னியின் மனைவியும் பரசுராமனுடைய தாயும் ஆகிய மாதரசி கற்பின் உச்சநிலையை எட்டியவள். அவள் நாள்தோறும் நதிக்குச் சென்று நீராடுவாள். பிறகு நதியிலுள்ள மணலைக் கொண்டு ஒரு கணப்பொழுதில் குடம் ஒன்றை அமைப்பாள். அதில் நிரம்ப நீரெடுத்துக்கொண்டு கணவனுடைய வழிபாட்டுக் காகக் கொண்டுவந்து சேர்ப்பாள். இது நெடுநாளாக நிகழ்ந்து வந்த நிகழ்ச்சியாகும். ஒருநாள் அவள் நீராடிக்கொண்டிருக்கும்

பொழுது வானவெளியில் ஓர் அசாதாரணமான காட்சியைக் கண்டாள். வானத்தில் மிக உயரத்தில் கந்தர்வ ஆடவன் மகளிர் ஆகிய இருவர் புணர்ந்துகொண்டிருந்தது அவள் கண்ட காட்சி. தானும் தன் கணவனோடு அங்ஙனம் புணரவேண்டும் என்னும் எண்ணம் அவள் உள்ளத்தில் உதித்தது. அதன் பிறகு மணல் குடம் அமைக்க முயன்றாள். ஆனால் அது அமையவில்லை. அவள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சி பயன்படாது போயிற்று. பெரிய ஏமாற்றம் அடைந்தாள். சீலம் அவ்வளவு கடினமானது. கணவனாகிய ஜமதக்னி தன் பூஜைக் காகத் தீர்த்தம் வந்துசேர வேண்டுமென்று ஆவலோடு காத் திருந்தார். மனைவி வெறும் கையோடு வருவதைப் பார்த்தார். அவருக்குக் கோபம் மூண்டது. நான்கு புதல்வர்கள் அவருக்கு இருந்தார்கள். தாயைக் கொல்லும்படி முதல் புதல்வனுக்கு ஆணையிட்டார். கொல்ல அவன் மறுத்தான். அந்தப் புதல்வன் சாகக்கடவது என்று அவர் சபித்தார். அக்கணமே அவன் மடிந்து வீழ்ந்தான். அதே ஆணையை இரண்டாவது மகனுக்கு இட்டார். அவனும் தாயைக் கொல்ல மறுத்தான். இரண்டாவது மகன் சாகக் கடவது என்று தந்தை சபித்தார். அவனும் மடிந்து வீழ்ந்தான். அதேகதி மூன்றாவது மைந்தனுக்கும் நிகழ்வதாயிற்று. நான்காவது மைந்தன் பரசுராமன். தாயைக் கொல் என்று தந்தை ஜமதக்னி உத்தரவு போட்டார். மைந்தனாகிய பரசுராமன் தந்தையின் உத்தரவுப்படி தன் கையிலிருந்த பரசு அல்லது கோடாரியைக் கொண்டு தாயின் கழுத்தை வெட்டித் தள்ளினான். கழுத்து துண்டிக்கப்பட்ட தாய் மடிந்து வீழ்ந்தாள். ஜமதக்னிக்கு மைந்தனாகிய பரசுராமனிடம் மகிழ்வு மிக உண்டாயிற்று. "தந்தை சொற்படி நடக்கும் பாங்குடைய உன்னைப் பாராட்டுகிறேன். ஒரு வரம் கேள். அதைத் தருகிறேன்" என்றார். பரசுராமன் அக்கணமே வரம் ஒன்று கேட்டார். அதில் அவருடைய தரம் வெளியாகிறது. "என் தாயும் தமையன்மார்களும் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி வரம் தாருங்கள்" என்றார். அங்ஙனமே தந்தை வரம் கொடுத்தார். மாண்டுபோன நால்வரும் உயிர்பெற்று எழுந்தார்கள், இதுவே பரசுராமன் தந்தையின் ஆணைப்படி தாயைக் கொன்ற வரலாறு. இது ஒரு புராண ஐதிகம். நல்லது ஆனாலும் சரி கெட்டது

ஆனாலும் சரி தாய் தந்தையர் உத்திரவுப்படி நடந்து கொள்ளுகிற மைந்தனுக்கு அலாதியான தெய்வீக ஆற்றல் வருகிறது என்பது கோட்பாடு. பரசுராமன் அதற்குச் சான்று.

கேள்வி: *(483)* கலைமகள் ஏன் வெண்தாமரையைத் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ளாள்?

பதில்: தெய்வ மகளிர் இருவர் உளர். ஒருத்தி திருமகள். மற்றவள் கலைமகள். திருமகள் செந்தாமரைப் பூவில் வீற்றிருக் கிறாள். கலைமகள் வெண்தாமரை மலரில் வீற்றிருக்கிறாள். கலைமகளைக் குறித்துக் கேட்பது போன்று திருமகளைக் குறித்தும் இக்கேள்வியைச் சிறிது மாற்றிக் கேட்கலாம். திரு ஏறுவது உழைப்பின் விளைவு. கல்வி ஏறுவது தூய்மையின் விழைவு. உழைப்புக்குச் சின்னமாயிருப்பது சிவப்பு. தூய்மைக்குச் சின்னமாயிருப்பது வெண்மை. மனத்தூய்மை ஓங்குதற்கு ஏற்பக் கல்வி வளர்கிறது. கலைகள் பிடிபடுகின்றன. ஞானபரிபாகம் வந்து அமைகிறது. வெள்ளை வஸ்திரத்தின் மீது வேறு ஏதேனும் நிறம் துளித்துளியாய் வீழ்ந்தால் அது வெண்மைக்கு இழுக்காக அமைகிறது. வேறு நிறங்கள் படைத்துள்ள வஸ்திரங்களின் மீது மற்ற நிறங்கள் துளித்துளியாய் வீழ்ந்தால் அவைகளால் நிகழும் மாசு ஒருவாறு மறைக்கப்படுகிறது. மற்று தூவெண் துகிலில் படிகிற மாசு தெற்றெனத் தென் படுகிறது. மாசுபடியாது மனதை வைத்திருக்கவேண்டுமானால் அதைத் தூவெண் நிறத்தில் பாதுகாப்பது அவசியமாகிறது. இக்கோட்பாட்டை விளக்குதற்கே கலைமகள் தானே வெண்மை நிறம் படைத்தவளாக இருக்கிறாள். அவள் அணிந்திருப்பது வெள்ளைத் துகில். அவள் வீற்றிருப்பது வெண்தாமரைப் பூ. ஆதலால் அவள் சொரூபம் யாண்டும் தூய்மைக்குச் சின்ன மாகிறது. மனத்தூய்மை படைத்திருப்பதற்கேற்ப மக்கள் கலை மகளைப் போற்றுதற்கும் கலையை வளர்ப்பதற்கும் தகுதி யுடையவர்கள் ஆகின்றனர் என்னும் கோட்பாட்டை வெண் தாமரையின் மீதிருந்து கலைமகள் விளக்கிக் கொண்டிருக் கிறாள். மனது மலரோடு ஒப்பிடப்படுகிறது. மனது வெண் தாமரை போன்று தூயதாயிருந்தால் கல்வி எளிதில் பிடிபடுகிறது.

கேள்வி: *(484)* மும்மூர்த்திகளில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோயில்கள் உண்டு. பிரம்மனுக்கு ஏன் கோயில் இல்லை?

பதில்: மும்மூர்த்திகளும் மூன்று கிருத்தியங்களில் ஈடுபட்டு இருக்கின்றனர். பிரம்மதேவனுக்குப் படைக்கும் தொழில் ஏற்பட்டு இருக்கிறது. காக்கும் கடமை விஷ்ணுவுக்குரியது. சம்ஹாரம் செய்வது சிவனார் செயல். இம்மூன்று கிருத்தியங்களுள் படைக்கும் தொழில் நின்றுவிட்டால் மனிதன் பிறவிப் பெருங்கடலினின்று விடுபடுகிறான். பிறவியைத் துடைத்துத் தள்ளுவது வாழ்க்கையின் குறிக்கோள். ஆனால் அது மானுடர் எல்லார்க்கும் விளங்குவதில்லை. பிறவிப் பிணியைப் பெருக்குதலிலேயே அவர்கள் யாண்டும் ஈடுபட்டு இருக்கின்றனர். அச்செயலின் வாயிலாக அவர்கள் உண்மையில் பிரம்மதேவனை வழுத்தி வருகிறார்கள். மணம்புரிந்து கொள்ளுதல் பிரம்மதேவனின் வழிபாடு ஆகும். மகப்பேறு பெறுவது பிரம்மதேவனின் வழிபாடு ஆகும். மக்களை வளர்த்தெடுத்து அவர்களுக்கும் மணம் முடித்துவைப்பது பிரம்மதேவனின் வழிபாடு ஆகும். உயிர் வாழ்வன அனைத்தும் உண்மையில் தங்களுடைய வாழ்க்கையின் வாயிலாகப் பிரம்மதேவனையே போற்றி வருகின்றன. அப்படிப் போற்றுதற்கு யாரும் பாடம் புகட்டவேண்டியதில்லை. பிரஜாவிருத்தி இயல்பாகவே உயிர்களிடத்து அமைந்திருக்கிறது. பிரஜாவிருத்திதான் பிரஜாபதியாகிய பிரம்மதேவனின் வழிபாடு ஆகும். இதை ஒழிக்கவேண்டும் என்னும் நல்லறிவு அரிதிலும் அரிதாக யாரோ சிலருக்குத்தான் உண்டாகிறது. பிறவிப்பெருங்கடலை நீந்திப் பரமனை அடைய வேண்டும் என்று ஆன்றோர்கள் புகட்டுகின்றனர். கடவுள் வழிபாட்டைப் பொதுமக்களுக்கிடையில் புகட்டியவர்கள் ஆன்றோர்கள். கடவுள் வழிபாட்டுக்காகவென்று ஆலய வழிபாட்டை அமைத்து வைத்தவர்களும் ஆன்றோர்கள். அன்னவர்கள் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஆலயங்கள் அமைத்து வைத்தனர். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனுக்கு அவர்கள் ஆலயம் நிறுவவில்லை. பிரம்மாவை வழுத்த வேண்டாம் என்று அவர்கள் போதித்தனர். அப்போதனையின் வாயிலாகப் பிறவியை ஒடுக்குதற்கு அன்னவர்கள் வழிகாட்டியருளினார்கள்.

அவர்களின் கொள்கைக்கு ஏற்ப நாட்டிலே பிரம்மதேவனுக்கு ஆலயங்கள் இல்லை. அரிதிலும் அரிதாக ஏதோ சில க்ஷேத்திரங்களில் பெயரளவில் சிறு கோயில்கள் பிரம்மனுக்காக வென்று அமைத்து வைத்திருக்கிறார்கள். பிரம்ம தேவனை வழுத்தக்கூடாது என்பது வாழ்க்கையின் குறிக்கோள். அதாவது பிறவி நோயைப் பெருக்கலாகாது என்பது லக்ஷியம். ஆனால் பிறவி நோயைப் போக்க முயலுபவர்கள் உலகிலே அரிதிலும் அரிதாக இருக்கின்றனர். பெரும்பான்மையோர் பிரஜா விருத்தியிலேயே மூழ்கியிருப்பதால் அவர்கள் உண்மையில் பிரம்மதேவனைத்தான் ஆராதித்து வருகின்றனர். அதை ஒதுக்கித் தள்ளுவது மானுட ஜன்மத்தின் லக்ஷியம் என்று மக்களுக்கு ஞாபகம் ஊட்டுதற்காகச் சிருஷ்டி கர்த்தாவுக்கு ஆலயம் அமைக்கவில்லை. இந்த உயர்ந்த கோட்பாட்டை அறிகின்றவர்கள் பிரஜாவிருத்தியினின்று விலகியிருந்து நிவிருத்தியில் பிரவேசிக்கின்றனர். ஆசையை ஒதுக்கியவர்களுக்கே நிவிருத்தி சாத்தியமாகிறது. காமத்தை வென்றவர்களுக்கும் வெல்ல முயலுகிறவர்களுக்கும் நிவிருத்தி சாத்தியமாகிறது. “பிரவிருத்தி என்னும் பிரபஞ்ச வாழ்விலே உழன்று கிடக்கும் மானுடா, பிரபஞ்ச வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பாரமார்த்திக வாழ்க்கையிலேயே ஈடுபடுவாயாக” என்பதுதான் பிரம்ம தேவனுக்கு ஆலயம் அமைக்காது ஒதுக்கி வைத்ததின் உட்கருத்து ஆகும். இதையறிந்து இதன்படி நடக்கின்றவர்கள் பாக்கியவான்கள்.

கேள்வி: *(485)* சிருஷ்டி கர்த்தா பிரம்மனுக்கு ஐந்து தலைகள். அவைகளுள் ஒன்றைச் சிவனார் கிள்ளி எறிந்தார். சிவனார் அப்படிச் செய்தது எதற்காக?

பதில்: புராணக் கதையும், தத்துவ விளக்கமும் இந் நிகழ்ச்சியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. துவக்கத்தில் சிவனாருக்கும் ஐந்து தலை; பிரம்மதேவனுக்கும் ஐந்து தலை. பார்வதி பரமேசுவரனுக்குத் திருமணம் நடந்தபொழுது அந்தச் சடங்கைப் பிரம்மதேவன் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய ஐந்து தலைகளுள் ஒரு தலை காதல் கொண்ட பாங்கில் அம்பிகையைப் பார்த்தது. அக்குற்றத்தை

அறியவந்த சிவனார் குற்றம் செய்த தலையைக் கிள்ளி எறிந்துவிட்டார். இது புராணக்கதை. இதில் பொருள் இல்லை. ஆனால் சிவனார் யாண்டும் ஐந்து தலை உடைத்திருப்பது தத்துவ விளக்கம். பிரம்மதேவன் யாண்டும் நான்கு தலை உடைத்திருப்பது தத்துவ விளக்கம். சிவனாருடைய நான்கு தலைகள் பிரபஞ்சத்தைப் பொருள்படுத்திப் பிரபஞ்ச சொரூப மாக இருக்கின்றன. ஐந்தாவது தலை பிரபஞ்சத்துக்கு அப்பாலுள்ள அதீத நிலையைக் குறிக்கிறது. சிவனார் மூன்று கண்களை உடைத்திருப்பதிலும் இதே கோட்பாடு அடங்கி யிருக்கிறது. அவருடைய சாதாரணக் கண்களிரண்டும் பிரபஞ்சக் காட்சிக்குப் பயன்படுகின்றன. அவருடைய அசாதாரணமான கண்ணாகிய நெற்றிக்கண் பரவஸ்துவின் காட்சிக்குப் பயன் படுகிறது. இகம், பரம் ஆகிய இரண்டும் சிவனார் காட்சிக்கு எட்டுகின்றன. மற்று பிரம்மதேவனுடைய காட்சிக்கோ இகம் மட்டும் எட்டுகிறது. இகம் காலதேச வர்த்தமானமாக இலங்கு கிறது. நான்கு யுகங்களாக இருப்பது காலத்தின் கூறு. நான்கு திக்குகளாக இருப்பது இடத்தின் கூறு. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களுக்கு நான்கு தலை. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆக நான்கு திக்கு களுக்கு நான்கு தலை.

சிருஷ்டியில் அமைந்துள்ள உயிர்வகைகள் அனைத்திடத் தும் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய நான்கு படித்தரங்கள் அமைந்திருப்பதற்குச் சான்றாகப் பிரம்ம தேவனிடம் நான்கு தலைகள் இருக்கின்றன. ஆக, சிவனார் ஐந்து தலை படைத்திருப்பதும், பிரம்மதேவன் நான்கு தலைகள் படைத்திருப்பதும் தத்துவ விளக்கங்களாகின்றன.

கேள்வி: *(486)* தன் ஒரு தலையைக் காத்துக்கொள்ள முடியாத நான்முகன் உலகைப் படைக்கிறார் என்பதை எப்படி நம்புவது?

பதில்: இது ஒரு புராண வரலாறு. சிவனார் ஐந்து தலைகளை உடையவராக இருக்கிறார் என்பது அவருடைய வடிவங்களில் ஒன்றாகும். அதேவிதத்தில் முன்பொருகாலத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனுக்கு ஐந்து தலைகள்

இருந்தன என்றும், அவைகளில் ஒன்றைச் சிவனார் கொய் தெடுத்து, அம்மண்டையோட்டைத் தமக்குப் பிக்ஷாபாத்திரமாக வைத்துக்கொண்டார் என்றும் புராணம் கூறுகிறது. புராணக் கதைகள் உண்மையாக நிகழ்ந்தவைகள் அல்ல. பலப்பல தத்துவங்களை விளக்குதற்குப் புராணக்கதைகள் கட்டுக்கதை களாக அமைக்கப்பட்டுள்ளன. வேண்டுமானால் நம்மவர்களும் புராணங்கள் எழுதலாம். தத்துவங்களுக்கு விளக்கமாகக் கதைகள் அமையுமானால், அக்கதைகளைப் புராணங்கள் என்கிறோம். பிரம்மதேவனுக்கு நான்கு தலைகள் அமைந்திருப் பதின் அடிப்படைக் கோட்பாடுகளை அறிந்துகொள்ளவேண்டும். அதேவிதத்தில் சிவனாருக்கு அமைந்துள்ள பலப்பல வடிவங் களுள் பஞ்சானனன் அல்லது ஐந்து தலைகளை உடையவன் என்பதன் அடிப்படைக் கோட்பாட்டையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். பின்பு இக்கதையை நாம் ரசிக்கமுடியும். நான்கு திக்கு, நான்கு வேதம், நான்கு யுகம் ஆகியவைகளின் சொரூபம் பிரம்ம தேவன். எனவே அவனுக்கு நான்கு தலைகள் தரப்பட்டுள்ளன. ஐம்பூதம், ஐம்பொறிகள், ஐந்து வேள்விகள் ஆகியவைகளின் சொரூபம் சிவனார். இக்கோட் பாட்டை விளக்குதற்குப் பிரம்மதேவனுடைய தலை கொய்து எடுக்கப்பட்டது என்னும் கட்டுக்கதை வந்துள்ளது. வாச்சி யார்த்தம், லட்சியார்த்தம் என்று இரண்டுவித அர்த்தங்கள் இருக்கின்றன. சொன்ன சொல்படி பொருள்படுத்துவது வாச்சியார்த்தம். சொல்லின் மூலம் வெளிப்படுத்திய கோட்பாடு லட்சியார்த்தம். பிரம்மதேவனுடைய தலை கொய்யப்பட்டதை லட்சியார்த்தமாக எடுத்துக்கொள்ளவேண்டும்; வாச்சியார்த்தமாக எடுத்துக் கொள்ளலாகாது.

கேள்வி: *(487)* அகல்யையை இந்திரன் ஏமாற்றினான். அவள் அதற்குப் பொறுப்பு இல்லாதிருந்தும் அவளைக் கல்லாக்கியது நியாயமாகுமா?

பதில்: கௌதம முனிவருடைய ஆஸ்ரமம் மிதிலாபுரிக்குப் பக்கத்தில் இருந்தது. அந்தக் கௌதம முனிவருடைய தர்மபத்தினி யின் பெயர் அகல்யை. அவள் கட்டழகே வடிவெடுத்தவளாக இருந்தாள். பெண்பால் ஒருத்திக்கு அழகு ஒருவிதத்தில்

பூஷணம் ஆகிறது. மற்றொரு விதத்தில் அது பேரிடைஞ்சலாக குறுக்கிடுகிறது. இது எக்காலத்திலும் மக்கள் எல்லார்க்கும் பொதுவாயுள்ள கோட்பாடாகிறது. அகல்யையின் அழகைப் பார்த்து தேவேந்திரன் மயங்கினான். பிறன்மனை விழைதல் பொல்லாதது. ஆயினும் அப்பொல்லாங்கு அவனுக்கு உசிதமான தாகத் தோன்றியது. காமத்தின் போக்கு அத்தகையது. தன் வடிவத்தை மாற்றிக்கொள்ளும் திறமை அவனிடத்திருந்தது. எனவே பொருந்தாத தீர்மானம் ஒன்றை அவன் செய்தான். அகல்யையின் கணவனாகிய கௌதம முனிவர் ஏதோ காரிய மாக வெளியே போயிருந்தபொழுது அந்த முனிவர் போன்று வடிவெடுத்து வந்து இந்திரன் அகல்யையைப் புணர்ந்தான். ஆயினும் அவன் தப்பித்துக் கொள்ளவில்லை. நிகழ்ந்ததை கௌதம முனிவர் உடனடியாகக் கண்டுபிடித்து விட்டார். அவருக்குச் சீற்றம் கிளம்பியது. நெறிவழுவிய இருவருக்கும் சாபம் போட்டார். இந்திரனுடைய மேனி முழுதும் கணக் கற்ற யோனிகள் மயமாக வேண்டுமென்பது இந்திரன் மீது போட்ட சாபம். அகல்யை கல்லாகக் கடவது என்பது மனைவியின் மீது போட்ட சாபம். அறியாமையினால் இந்தப் பாபச்செயலுக்கு இலக்கு ஆகிய தனக்கு விமோசனம் ஏதுமில் லையா என்று அகல்யை கெஞ்சிக்கேட்டாள். திரேதாயுகத்தில் அவதரித்து வருகிற தசரத ராமனுடைய திருவடி பட்டால் அவள் பழையபடி பெண் ஆவாள் என்று கௌதம முனிவர் பகர்ந்தது தக்க காலம் வரும்பொழுது அவள் உய்வு அடை வதற்கு உபாயம் ஆயிற்று. கோபித்துக் கொண்ட கௌதமமுனி தவத்துக்காக இமயமலைச் சாரலுக்குச் சென்றுவிட்டார்.

குற்றமற்ற அகல்யைக்கு இத்தகைய சாபம் வாய்த்தது நியாயமா என்பது கேள்வி. அவள் குற்றமற்றவளாயிருந்தாலும் நிகழ்ந்ததைக் கண்டுபிடித்த கணவன் கோபிக்காது இருக்க முடியாது. கௌதமர் நடந்துகொண்டது அவருடைய மனப் பான்மைக்கு ஏற்றபடி முற்றிலும் பொருத்தமானதே. அகல்யை சாபத்துக்கு இலக்காவதைத் தவிர வேறு வழியில்லை. சாதாரணமான உலக மக்களுடைய நிலையில் வைத்துப் பார்க்குமிடத்து அவள் குற்றமற்றவளே. குற்றமற்றவளாக இருந்தாலும் நிகழ்ந்ததைக் கண்டுபிடித்த கணவன் தக்க

தண்டனை தராது விட்டுவிடமாட்டான். அகல்யை சாதாரண மான மங்கை அல்லள். அவள் ஆழ்ந்து தவத்தில் ஈடுபட்டவள். தவத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு அசாதாரணமான ஆற்றல்கள் உருவெடுக்கின்றன. இந்த இடத்துக்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்ளுவது அவசியமாகிறது. தன் எஜமானன் எந்த வடிவெடுத்து வந்தாலும், எந்த வேஷம் போட்டு வந்தாலும் நாய் ஒன்று அவனை மோப்பத்தால் அறிந்துகொள்ளுகிறது. அந்த மோப்பத் திறமை நாய்க்கு உண்டு. சாதாரணமான மனிதனுக்கு அது இல்லை. தவத்தில் மேலோங்கியவர்களுக்குச் சாதாரணமான நிகழ்ச்சி விளங்கி விடுகிறது. அகல்யை முழுதும் பண்பட்டவளாய் இருந்திருப்பாளாகில் இந்திரனுடைய சூழ்ச்சியை அவள் எளிதில் கண்டுபிடித்திருக்கக் கூடும். அத்தகைய திறமை அவளுக்கு வாய்க்கவில்லை என்பது வெளிப்படை. ஆயினும் வேறு எந்த ஆடவனையும் காமக்கண் கொண்டு பார்க்கும் குறைநிலை அவளிடத்தில் இல்லை. அவள் ஏமாற்றப்பட்டாள். அதை முன்னிட்டு கௌதமர், அவளை மன்னிக்க முடியாது. அவர் சபித்தது முறையே. ஏமாற்றம் அடைந்தவர்கள் யாராயிருந்தாலும் ஏமாற்றத்திற்கேற்றவாறு துன்பத்திற்கு ஆளாகியே தீரவேண்டும். அதைத் தவிர்க்க முடியாது. ஆக, அகல்யைக்கு அனுதாபம் காட்டுவது பொருந்தாது. சிலருக்குப் பாபச் செயல் வலிய வந்து சேருகிறது. தம்மளவில் அவர்கள் நல்லவர்களாயிருந்தாலும் சூழ்நிலையின் விளைவாகத் தீச்செயலுக்கு அவர்கள் இலக்கு ஆகிறார்கள். இது இயற்கையிலுள்ள குறைபாடு. அகல்யைக்கு நிகழ்ந்ததை விட நெருக்கடியான நிலையில் பாகிஸ்தானில் வாழ்ந்து வருகிற இந்து மாதர்கள் இருக்கிறார்கள். முரடர்கள் பலாத் காரமாக அவர்களைத் தூக்கிச் சென்று கற்பழிக்கிறார்கள். அன்னவர்களை மீட்டெடுப்பதா அல்லது விதிவசத்துக்கு ஆளாக்குவதா என்பது பெரிய கேள்வி. அகல்யை பரிசுத்தப் படுத்தப்பட்டு மீண்டும் முனிவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டாள். அத்தகைய முறையை குற்றமற்ற இந்து மாதர்கள் விஷயத்திலும் கையாளுவது அவசியமாகிறது.

இந்த நிகழ்ச்சியில் அரியதொரு தத்துவம் அமைந்திருக்கிறது. அகல்யையின் கஷ்டதசையின் வாயிலாக அத்தத்துவம் விளக்கப்

பெறுகிறது. ஜடசக்தி சித்சக்தி ஆவதும், சித்சக்தி ஜடசக்தி ஆவதும் இயற்கையின் விளையாட்டு. இக்கோட்பாட்டைப் பர்வதராஜனுடைய புதல்வியாகிய பார்வதி தேவி தன் தவத்தின் வாயிலாக விளக்குகிறாள். கல்லினின்று பிறந்தவள் சிவத்தை மணந்துகொள்வதற்கேற்ற சிவ சைதன்யத்தைத் தவத்தின் வாயிலாகப் பெற்று வருகிறாள். இது இயற்கையின் கூறு. ஜடமாகப் போன அகல்யை சேதனமாக மாறுதற்கேற்ற சூழ்நிலை வாய்க்கும் என்று கௌதமர் பகர்ந்தது இத்தத்து வத்துக்கு விளக்கமாகிறது. தசரத ராமன் புருஷ தத்துவம். ஆத்ம சைதன்யத்தைத் தவிர வேறு ஏதும் அவனிடத்தில் இல்லை. ஆத்ம சைதன்யத்தோடு தொடர்பு வைக்கக்கூடிய ஜீவர்கள் எல்லார்க்கும் ஜடநிலையினின்று விடுபடுவதற்கும் சேதனத்தை ஓங்குவிப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்னும் கோட்பாடு அகல்யையின் விமோசனத்தின் வாயிலாக உலகுக்கு வெளி யாகிறது. அக்ஞானத்தில் உழலும் ஜீவாத்மாக்கள் எல்லாரும் சாபத்துக்கு உட்பட்ட அகல்யையின் நிலையிலிருக்கிறார்கள். ஆத்ம போதத்தை வளர்ப்பதற்கேற்ப ஜட நிலையினின்று விலகிச் சேதன சொரூபமாக அவர்கள் பழைய நிலையைப் பெறுகின்றனர். இராமனுடைய திருவடிபட்டவுடனே கல்லாகக் கிடந்த அகல்யை பெண்ணாக மாறியது ஆத்மபோதத்துக்கு விளக்கமாகிறது. கௌதமரும் உடனே ஹிமாசலத்திலிருந்து திரும்பி வந்து அகல்யையை ஏற்றுக் கொண்டார். கீழ்மை யினின்று ஆத்மபோதத்தின் வாயிலாக மேன்மையுறுகிற ஜீவாத்மாக்கள் எல்லாரும் பரநிலையில் நிலைத்திருக்கிற பெரியோர்களுக்கு உரியவர்களாகிறார்கள் என்பது வெளிப்படை. அகல்யையின் சாபத்தின் வாயிலாக இக்கோட்பாடு வெளியாகிறது.

இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இரண்டு இதிகாசங் களும் தர்மத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. தர்மமோ வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவெடுத்திருப்பது பொதுமக்கள் எல்லார்க்கும் விளங்குவதில்லை. விளங்காத கடினமான நிலையிலுள்ள தர்மத்தை விளக்குதற்கென்றே இந்த இரண்டு நூல்களும் அமைந்திருக்கின்றன. சமுதாயத்தில் அப்போதைக்கப்போது உண்டாகின்ற பிரச்னைகளை அகற்றி வைப்பதற்கு இந்நூல்கள் பிரமாணமாக அமைந்திருக்கின்றன.

எப்பொழுதாவது மாது ஒருத்தி சூழ்நிலையின் காரணமாகக் கற்பை இழக்க நேரிடுகிறது. அத்தகையவளைச் சமுதாயம் ஒதுக்கித் தள்ளுவதா அல்லது பொருத்தமான முறையொன்றைக் கையாண்டு அவளை மீட்டெடுத்துக் கொள்ளுவதா என்னும் கேள்வி வருகிறது. மீட்டெடுப்பதுதான் முறை என்பதற்கு இந்த நிகழ்ச்சி சான்று ஆகிறது. இடைக்காலத்திலிருந்த இந்துக்கள் அத்தகைய அனுதாபமான மனப்பான்மையைப் படைத்திருக்கவில்லை. அதை முன்னிட்டு இந்து மதத்தில் பிறந்து வளர்ந்த மங்கையர்கள் பலர் ஹிந்துக்களால் கைவிடப்பட்டுப் புறமதங்களாகிய இஸ்லாமிய மதத்தையோ, கிறிஸ்துவ மதத்தையோ தழுவ வேண்டியது நேர்ந்தது. அங்ஙனம் அவர்களைப் புறக்கணித்தது ஹிந்துக்கள் செய்த கொடூரச் செயலாகும். மற்று அங்ஙனம் வீழ்ந்த மாதர்களை மீட்டெடுத்துக் கொஞ்ச காலம் தவத்தில் ஈடுபடச் செய்து பிறகு சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ளுவதே பொருத்தமான செயலாகும். அப்படிச் செய்வது அன்புக்கும் அனுதாபத்துக்கும் அறிகுறியாகும்.

கேள்வி: (488) **இந்திரன் கௌதமர் போன்று மாறு வேடம் போட்டுக்கொண்டு வந்து அகல்யையின் கற்பை அழித்தான். அதை அறிந்த கௌதமர் இந்திரனுக்குச் சாபம் கொடுத்தார். அந்தச் சாபத்தின்படி உடல் முழுதும் முதலில் யோனிமயமானது. அவை பிறகு கண்களாக மாறியமைந்தன. அகல்யைக்கு வந்த சாபம் அவள் கல்லாகப் போவது. இந்திரனுக்குக் கொடுத்த சாபம் மரங்களுக்கும் பெண்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டதாகச் சிலர் பகர்கின்றனர். அவரவர் வினையை அவரவர் அனுபவித்தாக வேண்டும். தத்துவம் அங்ஙனமிருக்க மரங்களுக்கும் பெண்களுக்கும் இந்த சாபம் வந்து சேருவது பொருந்துமா?**

பதில்: இந்திரன் செய்தது பொருந்தாத செயல். அதற்கேற்ற தண்டனை அவனுக்குக் கிடைத்தது. இயற்கையின் நியதி உயிர்களனைத்துக்கும் பொதுவானது. நெறிபிறழ்பவன் கீழ்மையுறுகிறான். பிறகு அவன் துன்பத்துக்கு ஆளாகிறான். இக்கோட்பாடு இந்திரனுக்கு நிகழ்ந்த சாபத்தின் மூலமாக வெளியாகிறது. மரங்களில் உள்ள இலைகள் ஒருபோக்கில்

கண்கள் செய்கின்ற செயலைச் செய்கின்றன. வெளிச்சம் உள்ள இடத்துக்கு மரம் கிளையை அதிகம் செலுத்துகிறது. வெளிச்சத்தை இலைகள் ஸ்பரிசத்தால் அறிகின்றன. ஆதலால் அவைகள் கண்ணுக்கு நிகரானவைகள். இவ்வுண்மை இந்திர சாபத்தோடு கற்பனையாக இணைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இந்திர சாபம் மரங்களுக்கு வந்ததன்று.

அகல்யை இந்திரனால் ஏமாற்றப்பட்டாள். சரியான பண்பாடு அவளிடத்தில் இருந்திருக்குமாகில் அவளை யாரும் ஏமாற்றமுடியாது. ஏமாற்றமடைந்தது பண்படாத நிலை. அதன் வாயிலாகக் கல் போன்ற ஜடநிலையை அவள் பெறுவதாயிற்று. கடவுள் நாட்டம் ஒன்றே அக்குற்றத்திற்கு நிவர்த்தியாகிறது. இராமனுடைய திருவடி பட்டதும் அவள் பெண்ணாகப் பழைய நிலையை எய்தியதில் தத்துவம் ஒன்று புதைந்திருக்கிறது. அறியாமையில் கீழ்நிலையெய்தியவர்கள் கடவுள் நாட்டத்தின் வாயிலாகப் பழையபடி மேல்நிலைக்கு வரலாம் என்பது கோட்பாடு. ஒருவர் சாபம் இன்னொருவருக்குப் போவதில்லை. அவரவர் போக்கில் அவரவர் பண்பாடு அடைந்து வருகின்றனர். இந்திரன் சாபத்தில் வருகின்ற கோட்பாடு இதுவாம்.

கேள்வி: *(489)* பார்வதிக்கு இரு பிள்ளைகள் இருக்க முருகனுக்கு மட்டும் ஏன் வேல் கொடுத்தார்?

பதில்: பார்வதியும் அவளுடைய பிள்ளைகளாகிய கணபதியும் முருகனும் அவளுடைய சொரூபத்தில் இரண்டு பகுதிகளாகிறார்கள். எனவே புராணத்தில் அமைந்துள்ள மூர்த்திகள் தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்திருக்கிறார்கள். பார்வதி என்பவள் இயற்கைத்தாய். மக்களாகிய நாம் இயற்கையோடு நல்லிணக்கம் கொள்வது மிக அவசியம். அப்படிச் செய்வதற்கேற்ப நம்முடைய வாழ்வைப் பெருவாழ்வாக மேலோங்குவிப்பது சாத்தியம். கணபதி அறிவின் சொரூபம். முருகன் ஆற்றலின் சொரூபம். தாயாகிய பார்வதி அன்பின் வடிவினள். மானுடன் ஒருவன் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன்று பண்புகளையும் பெறுவானாகில் அவன் மேலோனாகத் திகழ்வது திண்ணம். இந்தச் சீரிய கோட்பாடு பார்வதி என்னும் இயற்கைத் தாயின் வாயிலாகவும் வெளியாகிறது.

அக்ஞானத்தை அறிவு வெல்கிறது. கையில் மோதகம் வைத்துள்ள விநாயகர் பூரண அறிவுக்கு விளக்கமாகிறார். ஆற்றலின் வடிவமான வேலைக்கொண்டு ஆங்காரத்தின் உருவமான சூரனை வென்றான் வேலவன். பரம்பொருள் ஒன்றேயாயினும் ஒவ்வொரு பேரியல்பையும் ஒருமுகப்படுத்தி ஒரு தனிக் கடவுளாகப் பாவித்தல் இந்துக்களின் மரபு. இதில் ஒன்றுக்கொன்று நிறைகுறைகளோ, வேறுவகைப் பேதங்களோ ஏதும் இல்லை.

ஆயுதம் இல்லாதவன் அரைமனிதன். முருகன் வேலாயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டு செயற்கரிய செயல்களைச் செய்து சாதிக்கிறான். இதுவே அவன் படைத்துள்ள வேலாயுதத்தின் உட்கருத்தாம்.

கேள்வி: *(490)* ஔவையார் கதையில் அவர் விநாயகரின் பேரில் அதிகப் பக்தியாக இருக்கிறார். விநாயகரும் அதை ஏற்றுக்கொண்டு அவருக்குப் பலவழிகளில் துணைபுரிகிறார். இப்படி இருக்கையில் ஔவையாருக்கு விநாயகர் மோக்ஷம் கொடுக்காமல் சுப்ரமணியர் மோக்ஷம் கொடுக்கக் காரணம் என்ன?

பதில்: தெய்வம் ஒன்று, பெயர்கள் பல. ஒரு மனிதன் நாட்டில் குடிமகன் என்னும் பெயர் பெறுகிறான். வீட்டில் தலைவன் என்னும் பெயர் பெறுகிறான். பிள்ளைக்கு அப்பா என்னும் பெயர் பெறுகிறான். மனைவிக்குக் கணவன் என்னும் பெயர் பெறுகிறான். இத்தனை பெயர்களுக்கும் பொதுவாக ஒரே மனிதன் இருக்கிறான். அங்ஙனம் மெய்ப்பொருள் சிவம் என்றும், சக்தி என்றும், கணபதி என்றும், கார்த்திகேயன் என்றும், திருமால் என்றும் அழைக்கப்படுகிறார். ஔவை உபாசித்தது கணபதியை. அவர் இறுதியில் அடைந்தது சிவ சாயுஜ்யம். ஞானநிலையில் அவர் அறிந்து கொண்டது ஒரே தெய்வம் இத்தனைவிதங்களில் விளையாடுகிறது என்பது. எனவே கணபதி அவருக்குத் துவக்கத்தில் துணைகள் பல புரிந்ததிலும், முருகன் இறுதியில் ஞானபண்டிதனாய் இருந்து ஞானத்தை நல்கியதிலும், சிவனார் தம் சொரூபத்தில் அடக்கிக் கொண்டதிலும் முரண்பாடு ஒன்றுமில்லை.

கேள்வி: *(491)* குமரக் கடவுளுக்குப் பெண் கொடுத்த குறவர் பரம்பரையினரை கோயிலுக்குள் விடாதது ஏன்?

பதில்: தெய்வ தத்துவத்தில் சிவ சொரூபம், சக்தி சொரூபம் என்பன யாண்டும் இயற்கையின்கண் உள்ள கோட்பாடுகள் ஆகும். உடல் சக்தி சொரூபம். அதனுள் இலங்கும் அறிவுப்பொருள் சிவ சொரூபம். அறிவு என்னும் சிவத்துக்கும், உடல் என்னும் சக்திக்கும் இடையிலுள்ள தொடர்பை மணம் முடித்து வைக்கும் பாங்கில் மக்களுக்குப் புகட்டுவது புராணத்தினுடைய போக்கு. புருஷன் என்னும் தத்துவம் பிரகிருதி என்னும் தத்துவத்தின்மூலம் தோற்றத்துக்கு வருவதை மணம் முடித்து வைப்பதாகப் புராணம் கூறுகிறது. பொதுமக்களுக்கு இத்தத்துவத்தை விளக்குதற்கென்றமைந்த கதையே பார்வதி பரமேசுவரனுடைய கல்யாணமாகும்.

முருகக் கடவுள் இரண்டு மனைவியர்களை மணந்திருக்கிறார். தத்துவ அமைப்புப் பிரகாரம் முருகக் கடவுளுடைய விவாகத்தை நாம் பொருள்படுத்த வேண்டும். அவரிடத்து இச்சா சக்தி, கிரியா சக்தி என்று இரண்டுவித சக்திகள் இயங்குகின்றன. கிரியா சக்தியாய் இருப்பவள் தேவலோகத்துக்குரிய தெய்வயானையாவாள். இச்சா சக்தியாயிருப்பவள் மக்கள் உலகுக்குரிய வள்ளியாவாள். கிரியை அல்லது செயல்களைக் கொண்ட ஜீவர்கள் தேவகணங்கள் ஆனார்கள். செயலின் மூலம் ஜீவர்கள் எவ்வளவு மேலான நிலைக்குப் போகலாமென்பதைக் கிரியாசக்தி சொரூபமாயிருக்கின்ற தேவயானை என்னும் சக்தி விளக்குகிறாள். இச்சை அல்லது அன்பின் மூலம் மக்களாயிருக்கும் ஜீவர்கள் எங்ஙனம் கடவுளுக்கே உரியவர்கள் ஆகக் கூடுமென்பதை இச்சா சக்தியாயிருக்கிற வள்ளி விளக்குகிறாள். கடவுளுடைய அன்புக்கு மக்களனைவரும் உரியவர் என்னும் கோட்பாட்டை விளக்குதற்கே வள்ளியை ஒரு குறத்தி என்று கற்பிக்கப்படுகிறது. குலத்தில் கீழ்மக்கள் மேன்மக்கள் என்கின்ற கோட்பாடுகள் கடவுள் பக்திக்குப் பொருந்தமாட்டா. உயிர்களனைத்தும் கடவுள் பக்திக்கு உரியவர்கள். பக்தியின் மூலம் உயிர்களனைத்தும் கடவுளை மணந்துகொள்ளுதல் என்னும் பெருநிலையை அடையலாம். இங்கு மணந்துகொள்ளுதல் என்னும் கோட்பாடு

யோக சித்தியாக அமைகிறது. கடவுளையடைதற்கான பக்தி சாதனத்துக்கும், உலக மக்களுடைய லௌகிகப் பழக்கவழக்கத் துக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. வள்ளியை முருகன் மணந்துகொண்டது உயிர்களுக்கிடையில் உலகத்தவர் செய்கின்ற வேற்றுமைகளையெல்லாம் தெய்வம் செய்கிற தில்லை என்பதையும், எந்த உயிரானாலும் தெய்வத்திற்கு அன்பின் மூலமாக உரியதாகக்கூடும் என்பதையும் வள்ளி திருமணம் புகட்டுகிறது.

குறவர்களைக் கோயிலுக்குள் விடுவது அல்லது விடாது விலக்கிவைப்பது உலகத்தவருடைய லௌகிகப் பழக்கவழக்க மேயாம். கிறிஸ்தவர்களையும் முஸ்லீம்களையும் ஹிந்துக்கள் தங்களுடைய ஆலயங்களுக்குள் நுழைய அனுமதிகொடுப்ப தில்லை. அதுவும் உலகத்தவருடைய பழக்கமேயொழிய கடவுளின் வழிபாட்டுக்கு அன்னவர்கள் புறம்பானவர்கள் என்பது உண்மையல்ல. ஆக, மக்களுக்கிடையிலுள்ள பழக்க வழக்கங்களைச் சமய தத்துவங்களாக நாம் எண்ணிவிடலாகாது. கடவுளின் விவாகத்தையும் தத்துவத்துக்கு ஒத்த முறையில் நாம் பொருள்படுத்த வேண்டும். அதை மக்கள் புரிகின்ற விவாகம் போன்றதென்று நாம் கருதிவிடலாகாது.

மக்களில் ஒரு கூட்டத்தாரை ஹிந்து ஆலயங்களுக்குள் இதுகாறும் நுழையவொட்டாது விலக்கி வைத்திருந்தனர். இப்பொழுது சட்டபூர்வமாக கோயிலுக்குள் போக அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் கோயிலுக்குள் வந்ததனால் கடவுளே கோயிலினின்று வெளியேகிவிட்டார் என்று மனப்பூர்வமாகக் கருதிவருபவர்களும் மக்களுக்கிடையில் இருக்கின்றனர். அப்படிக் கருதுகின்றவர்கள் தங்கள் அறியாமையையே விளம்பரம் பண்ணுகின்றனர். அண்டங்களனைத்தையும் தம்மிடத்திருந்தே தோற்றுவித்துள்ள தெய்வம் அண்டங்களனைத்துக்கும், ஜீவகோடிகள் அனைத்துக்கும் ஆதாரமாக இருந்து வருகிறார் என்பதுவே உண்மை. யாரையும் விலக்கிவைத்தல் என்னும் சிறு செயலுக்கு அவருடைய பெரும் திட்டத்தில் இடமில்லை.

கேள்வி: *(492)* விக்கிரமாதித்த அரசன் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது.

விசுவாமித்திரர் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக நாம் அறிகிறோம். விக்கிரமாதித்த அரசன், விசுவாமித்திரர் இவர்கள் எப்படிப் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார்கள்? இப்பொழுது நாமும் அந்த விதமாகப் பல ஆயிரம் ஆண்டுகள் உயிருடன் வாழமுடியுமா?

பதில்: சரித்திர பூர்வமான சில மனிதர்களைப் பற்றிய வரலாறுகள் எழுதுகின்றபொழுது புராணக் கோட்பாடுகளையும் சிலர் அவைகளினுள் புகுத்தி விடுகின்றனர். மனிதனுக்குத் தீர்க்க ஆயுள் நூறு என்றுதான் பெரியோர்கள் குறிப்பிட்டிருக் கின்றனர். நூறாண்டு வாழ்ந்திருப்பதே பெரும்பாலார்க்கு இயலுவதில்லை. அப்படி வாழ்கின்ற ஒரு சிலர் இரண்டாந் தடவை குழந்தைப் பருவத்தைப் பெறுவது போன்று ஆற்றல் களையெல்லாம் இழந்துவிட்டு ஞாபக சக்தி குன்றிப் போனவர் களாய் வெறுமனே வாழ்ந்திருக்கிறார்கள். இதுவே இக்காலத் திலும் எக்காலத்திலும் நாம் காணக்கூடிய காட்சியாகும்.

மேலும் சிலர் ஆயிரக்கணக்கான வருஷங்கள் வாழ்ந்திருந்த தாகக் கூறுவதை நாம் வாச்சியார்த்தத்தில் பொருள்படுத்தலாகாது. அதாவது உண்மையாகவே அவர்கள் அப்படி நெடுங்காலம் வாழ்ந்திருந்தவர்களல்லர். ஆனால் நெடுங்காலம் வாழ்ந்திருந்து செய்யக்கூடிய செயற்கரிய செயல்களைச் சாதித்தவர்களென பொருள்படுத்தவேண்டும். பொதுப்படத் தவம் புரிகின்றவர் களைப்பற்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்ததாகப் பகர்வது வழக்கம். அவ்வளவு நீண்டகாலம் எடுத்துக்கொண்டு அடைகிற மனபரிபாகத்தை அத்தவசிகள் ஒரே பிறவியில் அடைந்து விட்டால் அவர்களுடைய செயலைப் பெருமைப்படுத்துதற்காக நெடுங்காலம் வாழ்ந்திருந்ததாகக் கதை எழுதுகிறவர்கள் கூறுகிறார்கள். விசுவாமித்திரர் என்னும் பெயர் தாங்கியவர்கள் பலபேர் இருந்திருக்கக்கூடும். அப்படிப் பலபேரில்லாதவிடத்துக் கட்டுக்கதையையும் உட்புகுத்தி விடுவதுண்டு. அதுதான் யுக்திக்குப் பொருந்துகிறது. அப்படியல்லாது ஒரே மனிதர் பல தலைமுறைகளில் வாழ்ந்திருந்தாரென்பது யுக்திக்கும் அனுபவத்துக்கும் பொருந்தாது. இப்படிப் பலர் எழுதி வைத் துள்ள கட்டுக்கதைகளுள் புதைந்து கிடக்கும் அடிப்படைக் கருத்துக்களை மட்டும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(493)* வைஷ்ணவத்தில் சிவன் பிரம்மா காணமுடியாத திருமுடி என்றும், சைவத்தில் திருமால், பிரம்மா காணமுடியாத திருமுடி என்றும் சொல்லியிருக் கிறது. இதன் உட்கருத்து என்ன?

பதில்: மெய்ப்பொருளாகிய கடவுள் ஒருவர். அவர் அகண்ட சச்சிதானந்தம். எது அகண்ட வஸ்துவோ அது இரண்டு பொருள் ஆகமுடியாது. எனவே கடவுள் ஒருவர். அவரைச் சைவர்கள் சிவன் என்று அழைக்கிறார்கள். வைஷ்ண வர்கள் விஷ்ணு என்று அழைக்கின்றனர். அகண்ட சச்சி தானந்தமாகிய மெய்ப்பொருள் பிரகிருதியில் செயலில் ஈடுபடு கின்றபொழுது அவருடைய சொரூபம் கிரியைகளோடு கூடிய மும்மூர்த்திகளாக அமைகிறது. அந்த மும்மூர்த்திகளைப் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்று அழைப்பது வழக்கம். சிருஷ்டிப்பவர் பிரம்மா, காப்பவர் விஷ்ணு, அழிப்பவர் ருத்திரன். இத்தகைய செயல்களைச் செய்கின்ற மூர்த்திகள் பரம்பொருளிடத்திருந்து கீழ்நிலைக்கு இறங்கியுள்ள மூர்த்திகளாகும்.

சிவத்திடத்து உறுதியான பக்தி சைவனுக்கு வரவேண்டு மென்று கருதிய சைவப் பெரியார்கள் சிவனுடைய அடிமுடியை ஜீவபோதத்தில் இருக்கின்ற பிரம்மாவும் விஷ்ணுவும் காண முடியாது என்று பகர்ந்தார்கள். அகண்ட சச்சிதானந்தமாகிய விஷ்ணுவிடத்து வைஷ்ணவர்களுக்கு ஒப்பற்ற பக்தி வர வேண்டுமென்று கருதிய வைஷ்ணவப் பெரியார்கள் தாங்கள் வணங்கும் பெரிய பொருளின் அடிமுடியைப் பிரம்மாவும் சிவனும் காண முடியவில்லை என்று பகர்ந்தார்கள். இருசாரார் கூற்றும் தத்துவத்துக்குப் பொருத்தமானதே. கிரியைகளில் ஈடுபட்டிருக்கிற தேவதைகள் கிரியைகளைக் கடந்துள்ள அகண்ட வஸ்துவை முழுதும் அறிந்துகொள்ள முடியாது என்பது கோட்பாடு. அந்தந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவரவர் வணங்கும் தெய்வத்திடத்துச் சிறந்த பக்தி வரவேண்டு மென்கின்ற கருத்துடன் சிவத்தைப் பெரியதென்றும் விஷ்ணுவைப் பெரியதென்றும் அவர்கள் அனைவரும் பிரார்த்திக்கிறார்கள். அகண்ட வஸ்துவாகிறவிடத்துச் சிவனும் விஷ்ணுவும் ஒன்றே என்பதை அறிகின்றவரே உண்மையை அறிகின்றவர் ஆகின்றனர்.

கேள்வி: (494) சிவபிரானின் பாதத்தைப் பார்க்கும் படியாய் விஷ்ணுவும், முடியைப் பார்க்கும்படியாய்ப் பிரம்மாவும் வாக்குவாதம் செய்து கொண்டதாகப் புராணம் கூறுகிறது. அவர்கள் மூவரும் ஏகரூபியாக இருக்கப்பட்ட வர்களாயிருந்தும் அவர்கள் அடிமுடியைப் பார்க்கப் போவதின் அர்த்தமென்ன?

பதில்: புராணம் எதற்காக அமைந்துள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தத்துவத்தை உருவங்களின் வாயிலாக விளக்குதற்குப் புராணங்கள் அமைந்துள்ளன. மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியே என்பது தத்துவம். அவர்கள் மூன்றும் தனித்தனியான மூர்த்திகள் என்பது புராணக்கதை. புராணக் கதையின் துணைகொண்டு தத்துவத்தை நாம் மேலும் ஆராயவேண்டும். சொப்பனத்தில் நாம் வேறு ஒரு ஆள் ஆய்விடுகின்றோம். சொப்பன மனிதனாக இருந்துகொண்டு ஜாக்கிரதாவஸ்தையிலுள்ள மனிதனுடைய பாங்கு முழுதையும் அறிந்துகொள்ள நம்மால் இயலாது போய்விடுகிறது. ஆகவே ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே முழுதும் அறிந்து கொள்ள இயலாதவனாய் இருக்கிறான். கடவுளோ அகண்டா காரப் பெரிய பொருள். அவரது அகண்டாகாரப் பெருநிலையை வடிவெடுத்துள்ள அவருடைய ஒரு சிறு பகுதி அறிந்துகொள்ள இயலாது. கடலினின்றே வந்துள்ள அலை உருண்டோடிக் கடல் முழுதையும் தெரிந்துகொள்ளச் சக்தியற்றது. அங்ஙனம் அகண்ட சச்சிதானந்தத்தின் முழு சொரூபத்தை அதனிடத் திருந்து வந்துள்ள எந்த மூர்த்தியும் அளந்துவிடச் சக்தியற்றது. உண்மையில் உள்ளது ஒரு பொருளே. வடிவெடுத்து அப்பொரு ளிடத்திருந்து வந்துள்ள எந்தத் தெய்வமும் அப்பொருளை முழுதும் தெரிந்து கொள்ள இயலாது. இந்தத் தத்துவம்தான் இந்தப் புராணக்கதையின் வாயிலாக விளக்கப்படுகிறது.

கேள்வி: (495) மஹாவிஷ்ணுவானவர் வாமன அவதாரங்கொண்டு பலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டார். அவரும் அப்படியே தாரை வார்த்துக் கொடுத் தார். பின்பு திரிவிக்ரம ஸ்வரூபம் கொண்டு ஆகாய மெல்லாம் ஒரே அடியாகவும், பூமியெல்லாம் இரண்டாவது

அடியாகவும் அளந்தார். மற்றோர் அடிக்குப் பலிச்சக்கர வர்த்தியின் சரீரம் என்று அறிந்துகொள்ளக்கடவாய் என்று புராணம் கூறுகிறது. அவர் அந்தச் சரீரத்தை என்ன செய்தார்? அப்படிக் கபடநாடகமாகத் தானம் வாங்கிய தற்குக் காரணம் என்ன?

பதில்: பரமாத்மனைப் பற்றிய உயர்ந்ததொரு தத்துவத்துக்கு விளக்கமாக இப்புராண வரலாறு அமைகிறது. பலிச்சக்கரவர்த்தியின் நிலையில் சற்று ஏறத்தாழ உயிர்களனைத்தும் இருக்கின்றன. அவரவர் உடலை அவரவர் சொந்தம் பாராட்டுகின்றனர். உற்றாரைத் தங்களுக்குச் சொந்தமென்று கருதுகின்றனர். வீடுவாசலைத் தங்களுக்குச் சொந்தமென்று கருதுகின்றனர். ஆடை ஆபரணங்களைத் தங்களுக்குரியவைகள் என்று கருதுகின்றனர். ஊரையும், ஒரு வட்டாரத்தையும் தங்களுக்குரியவைகள் என்று கருதுகின்றனர். நாடு நகரங்களிடத்தும் அப்படிச் சொந்தம் பாராட்டுகின்றனர். மனிதனுக்குச் சொந்தமானவைகள் எனக் கருதப்படுபவைகள் உண்மையில் அவனுக்குச் சொந்தமல்ல. மனிதன் தானே தனக்குச் சொந்தமல்ல. பரம்பொருளோ அணுமயமாக இருக்கிறார். அண்ட சொரூபமாக இருக்கிறார். அண்டங்களுக்கு அப்பாற்பட்டவராகவும் இருக்கிறார். அவருடைய வண்ணத்தை ஜீவர்கள் யாருமே அளந்துவிட முடியாது. ஒரு குட்டை மனிதனாகப் பலிச்சக்கரவர்த்தியின் முன்னிலையில் அவர் தோன்றினார். இக்குள்ளன் மூன்றடி நடந்தால் நமது பரந்த பூமியில் எவ்வளவை எடுத்துக்கொள்ளப் போகிறான் என்னும் செருக்கு பலிச்சக்கரவர்த்திக்கு இருந்தது. பரம்பொருளுக்கு நிஜ சொரூபம் அகிலாண்டங்களையும் தன்னகத்து அடக்கிவைத்திருப்பதாம். அவர் மூன்றடி எடுத்து வைப்பது என்பதும் புராணக் கதையையொட்டி இயம்பப் பட்டிருக்கிறது. உண்மையில் அவருடைய சொரூபத்தில் அனைத்தும் அடங்கிவிடுகின்றன. அவருக்குப் புறம்பாக ஒன்றுமில்லை. இப்பேருண்மையைப் பலிச்சக்கரவர்த்திக்கு அவர் விளக்கியருளினார். இதை அறிந்துகொள்ள நாமும் கடமைப் பட்டிருக்கிறோம். யான், எனது என்பனவெல்லாம் உண்மையில் இறைவன் மயம் என்பதை அறிந்துகொள்ளுகிறவர்களுக்கு நிரந்தரமாக அல்லல் போய்விடுகிறது. ❑

27. வினைப்பயன்

கேள்வி: (496) **ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தவம் புரிந்தும் மகரிஷிகள் சித்தியடையப் பெரும்பாடுபட்டனர் என்று கதைகளில் படிக்கிறோம். ஆனால் கிருபா சித்தர்கள் அதற்கான தகுதியில்லாமலேயே, திடீரென்று பொக்கிஷ மொன்றைப் பெறும் ஏழைபோன்று, ஈசுவர கடாட்சம் பெறுகின்றனராமே. இது கர்மவிதிக்கு முரண்பட்டதல்லவா? ஈசுவரனுக்குப் பாரபட்சம் உண்டென்பதையும் காட்டு கிறதல்லவா?**

பதில்: ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தவம் செய்த ரிஷிகளைப்பற்றிய வரலாறுகள் புராணங்களில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான வருஷங்களாக நாட்டை ஆண்டு உலகில் வாழ்ந்திருந்த பேரரசர்களைப்பற்றிய வரலாறுகளும் புராணங் களில் இருக்கின்றன. மக்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக வாழ்ந்திருக்க முடியுமா என்பது கேள்வி. பூர்ண ஆயுசு வாழ்ந்துள்ள மக்களுக்கு நூறு வயதுதான் என்பது கோட்பாடு. இத்தகைய நீண்ட நாட்கள் ஒரு தத்துவத்தை விளக்குதற்காக கற்பனையாகச் சொல்லப்பட்டவைகள். ஒரு மனிதன் ஐந்து நிமிஷத்தில் ஒரு சொப்பனம் காணலாம். ஆனால் அந்த ஐந்து நிமிஷத்துக்குள் அவன் இருபது முப்பது வருஷத்து வாழ்வை நிறைவேற்றி விடமுடியும். சொப்பனம் காண்கின்றவர் அனைவருக்கும் பொதுவாய் ஏற்பட்டுள்ள அனுபவம் இது. நெடுங்காலம் வாழ்ந்திருந்து சாதிக்கவேண்டிய பெருங்காரியங் களைத் தவத்தின் மூலமாக அல்லது நேர்மையான வாழ்வின் மூலமாக மக்கள் சாதித்திருக்கிறார்கள் என்று நாம் இக்கூற்றைப் பொருள்படுத்த வேண்டும். பல்லாண்டுகளாகச் செய்த

முயற்சியின் விளைவு என்பதன் கருத்து இதுவேயாம்.

கிருபாசித்தர்கள் என்னும் கூட்டத்தார் இருக்கின்றனர். திடீரென்று அவர்களுக்கு ஆத்ம சாதனம் பூர்த்தியாய்விடுகிறது. கடவுளின் பக்ஷபாதத்தால் அது அப்படி அமைந்ததென்று சொல்லலாகாது. அவரவர் வினைக்கேற்ற வினைப்பயனை வழங்கிவிடுவது கடவுளின் செயல். பூர்வ ஜன்மங்களில் அத்தகைய கிருபாசித்தர்கள் வேண்டியவாறு முயற்சி செய்திருந் திருக்கக்கூடும். அதனுடைய விட்டகுறை தொட்டகுறை அடுத்த ஜன்மத்தில் விரைவில் பலனைக் கொடுத்துவிடுகிறது. எனவே அவர்கள் கிருபாசித்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் வினைப்பயன் எல்லார்க்கும் முறை பிறழாதது. அவரவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கேற்றவாறே வினைப்பயன் அமைகிறது. இம்மியளவும் அது பிசகுவதில்லை. சிலர் முறை தெரியாது நெடுங்காலம் அல்லல்பட்டு நேர்வழிக்கு வருகின்றனர். இன்னும் சிலர் அதிவிரைவில் நேர்வழிக்கு வந்துவிடுகின்றனர். முயற்சிக்கேற்ற வினைப்பயன் என்னும் கோட்பாட்டில் இவை யாவும் அடங்கிவிடுகின்றன. பூர்வ ஜன்மங்களில் மனிதன் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இந்த ஜன்மத்தில் அவன் விரைவில் சித்த புருஷன் ஆய்விடுகிறான். அத்தகையவனைக் கிருபாசித்தன் என்று அழைப்பது நம் உலக வழக்கம்.

கேள்வி: *(497)* மாற்றாந் தாய்மார்களிடமோ அல்லது அண்ணிமார்களிடமோ சிலர் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். இவ்விதம் அனுபவிக்கவேண்டியது அக்குழந்தையின் தீவினையா? அவர்களின் வினையை அனுபவிக்கவே இந்தச் சூழ்நிலையில் பிறந்திருப்பார் களாயின் துன்பப்படுத்துபவர்கள் அதனால் வரும் கேட்டைப் பிறகு அனுபவிக்க இடமுண்டா?

பதில்: ஒவ்வொரு ஜீவனுக்கும் அவனவன் வினைக்கு ஏற்ற சூழ்நிலை வந்தமைகிறது. பிறந்த குழந்தை ஒன்று மாற்றாந்தாயின் கையில் இன்னல்பட்டு வளர்வதைப் பல இடங்களில் காண்கிறோம். அக்குழந்தை இன்னல்படுவதற்கு அதனுடைய பழவினையே மூல காரணமாகும். ஆயினும்

அக்குழந்தையை உள்ளன்போடு வளர்க்கும் பேரியல்பு மாற்றாந் தாய்க்கு அமைந்திருக்குமாகில் அது அவள் பெற்றுவரும் நல்வினையாகும். குழந்தை தனக்குரியதன்று என்னும் வேற்று மையை வளர்த்து அக்குழந்தையை இன்னலுக்கு ஆளாக்கு வாளாகில் அது அவள் செய்யும் தீவினையாகும். தீவினைக்கு ஏற்ப அவளுடைய தரமும் கீழ்மையடைந்துவிடும். உயிர்களை யெல்லாம் துன்பத்தினின்று மீட்டெடுத்து இன்பத்தில் நிலைத் திருக்கும்படி முயற்சி பண்ணுகின்றவர்களெல்லாம் நல்வினை ஆற்றுபவர்கள் ஆகிறார்கள். இந்த நல்வினைக்கு ஏற்ப அவர் களுடைய வாழ்வு இம்மையிலும் மறுமையிலும் நலமுடைய தாகவே வந்தமையும். வேற்றுமையை வளர்த்து மற்ற உயிர் களுக்குத் துன்பத்தை நல்குபவர்கள் விரைவில் அல்லது நாளடைவில் துன்பத்தை அடைந்தாகவேண்டும். பிறர்க்குத் தாங்கள் எதை வழங்குகின்றார்களோ அதுவே தங்களை வந்து சாருகிறது என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை ஒவ்வொரு ஜீவனுடைய பிறப்பும், வாழ்க்கைக்குரிய சூழ் நிலையுமாம்.

கேள்வி: *(498)* ஒரு ஜீவன் இறந்தால் அவன் எமலோகத்துக்குப் போகிறான், அங்கு அவன் செய்த பாப, புண்ணியத்தை விசாரித்து அதற்குத் தகுந்த தண்டனை கொடுக்கிறார்கள். தண்டனை முடிந்த பிறகு உலகத்தில் மறு படியும் பிறக்கிறான் என்று புராணங்களில் சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால் சில யோகிகளோ ஜீவன் இறந்தால் எமலோகத்துக்குப் போவதில்லை. அவன் செய்த பாப, புண்ணியத்தை அனுசரித்து மறு நிமிடத்தில் உயர்ந்த அல்லது தாழ்ந்த ஜன்மத்தில் பிறக்கிறான் என்று சொல்லு கிறார்கள். இதில் எது உண்மை?

பதில்: யமலோகமும் சொர்க்கமும் இம்மண்ணுலகிலேயே இருக்கின்றன. தீவினையின் விளைவாகத் துன்பத்தை அனுபவிப் பதற்கு வேறு ஏதேனும் உலகுக்குப் போகவேண்டிய அவசிய மில்லை. வினைக்கேற்றபடி இன்பதுன்பங்களை உயிர்கள் இம்மண்ணுலகிலேயே அனுபவித்து வருகின்றன. புராணங்கள் கற்பனைக்கதைகள் மூலமாகப் புகட்டுவதும், யோகிகள்

தத்துவத்துக்கு விளக்கமாகப் புகட்டுவதும் ஒன்றே. கையாளுகிற மொழியில் வேற்றுமை இருக்கிறதேயொழிய வினையின் விளைவாக வருகிற வாழ்க்கை அமைப்பு யாண்டும் ஒரே பாங்குடையது. வினைக்கேற்ற வாழ்க்கை முறை என்பதுதான் இயற்கையின் திட்டம். அது எவ்வுலகில் வேண்டுமானாலும் நிகழும்.

கேள்வி: *(499)* மறுபிறவிக் கொள்கையும் சொர்க்க நரகக் கொள்கையும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன அன்றோ? ஆயினும் அவ்விரண்டும் நம் புராணங்களில் பேசப்படுகின்றன, நல்வினை தீவினைப் பயன்களை சொர்க்கத்திலோ நரகத்திலோ அனுபவித்து முடிந்த பின்பு, மறு பிறப்பிலும் அவ்வினைப் பயன் உயிரைத் தொடர்ந்து வரும் என்பது எவ்வாறு பொருந்தும்?

பதில்: வினை இருக்கும் பரியந்தம் வினைப்பயன் உண்டு. உயிர்களுக்கு வினையோ முடிவில்லாது பெருகிக்கொண்டே போகிறது. பழைய வினைகளை அனுபவித்து முடிப்பதற்கு முன்பு புதிய வினைகள் உயிர்களால் வருவிக்கப்படுகின்றன. வினைப்பயன் இன்பதுன்பமாக வடிவெடுக்கிறது. துன்பத்துக்கு ஏதுவான வினை அதிகரித்துவிட்டால் அப்பொழுது அது நரகம் எனப்படுகிறது. இவ்வுலகிலேயே நரகத்தை அனுபவிப்பவர் உண்டு. இன்பத்துக்கு ஏதுவான வினை அதிகரித்துவிட்டால் அது சொர்க்கம் எனப்படுகிறது. இம்மண்ணுலகிலேயே சொர்க்க வாழ்வு வாழ்பவர்கள் உண்டு. இங்கு ஒருவன் நோய்வாய்ப் பட்டிருந்தால் அது நரகத்துக்குச் சமானமானது. நோய் குணமடைந்த பிறகு திரும்பவும் நோய் வரவும் கூடும். அங்ஙனம் சொர்க்க நரகம் பலதடவைகளில் ஒரு ஜீவனுக்கு உண்டாகின்றன. புண்ணிய கர்மம் மிகைப்படும்போது சொர்க்கப் பிராப்தி ஏற்படுகிறது. புண்ணிய அனுபவித்தான பிறகு அந்த ஜீவன் திரும்பவும் வினையைப் பெருக்குதற்கு மண்ணுலகுக்கு வருகிறான். பாவம் அதிகரித்தால் அவன் நரகவேதனையடைகிறான். வேதனைப்பட்டுப் பாப மூட்டை குறைந்தால் அதே ஜீவன் மண்ணில் வந்து பிறக்கிறான். சொர்க்கம் நரகம் இரண்டுக்கும் இடை நிலையில் இருப்பது இவ்வுலகம். இதில்

சுகம் துக்கம் இரண்டும் உண்டு. ஆக, ஒவ்வொரு ஜீவனும் சொர்க்கத்திலும் மண்ணுலகிலும் நரகத்திலும் மாறி மாறி உழன்று வருகிறான். இவை யாவும் வினைப்பயனை அனுசரித்து வருகின்றன. மேலும் இவை யாவும் ஜீவனைப் பண்படுத்துதற்கு உதவுகின்றன. பண்பாடு அடையுமளவு புதிய வினைகள் வளர்வதில்லை. பழைய வினை தேய்கிறது. வினை முற்றிலும் ஒழிந்து போனால் முக்தியுண்டாகிறது. அதுவரையில் ஜீவன் வினைப்பயனாகிய சுக துக்கங்களை ஏதேனும் ஒருலகில் அனுபவித்தே ஆகவேண்டும். சொர்க்கம் அல்லது நரகத்தில் அனுபவிப்பது ஒரு சிறு பகுதியேயாம். பாக்கியுள்ள வினைப் பயனுக்கு ஏற்ற புதிய சூழ்நிலையில் பிறக்க மனிதன் மண்ணுலகுக்கு வருகிறான்.

கேள்வி: *(500)* உலகில் நாம் கர்மாவையும் அதன் பலனையும் அடுத்தடுத்து நிகழ்வதைக் காண்கிறோம். ஆனால் மனிதனுடைய வாழ்வில் முன் ஜன்மத்தின் கர்ம பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிப்பதாக வேதாந்தம் சொல்லுகிறது. இது ஏன்? கர்மாவும் அதனுடைய பலனும் ஏன் உடனே ஏற்படாது முந்தியதும், பிந்தியதுமான ஜன்மங்களில் பிரிந்து போகிறது? தக்க காரணத்துடன் விளக்குக.

பதில்: சில வினைகளுக்கு உடனே பயன் வந்தமைகின்றது. வேறு சில வினைகளின் பயன் நெடுநாளைக்குப் பிறகு கிட்டுகிறது. ஒரு பூமியில் ஒருவன் கீரை, நெல், பனை ஆகியவைகளுக்குரிய விதைகளை ஒரே வேளையில் விதைக்கிறான். கீரை சில வாரங்களில் பலன் கொடுத்து விடுகின்றது; நெல் சில மாதங்களில் பலன் கொடுகிறது; பனையின் பயன் மூன்றாம் தலைமுறைக்குத்தான் கிட்டும். இதை முன்னிட்டே பனை, பாட்டனார் காலத்தில் விதைக்கப்பட்டாக வேண்டும் என்னும் பழமொழி வந்தது. நம் வினைப்பயனும் இத்தகையதே. சில வினைப்பயனை ஜீவன் அதே ஜன்மத்தில் அனுபவிக்கின்றான். வேறு சில வினைப் பயனை அனுபவிக்கப் பின்வரும் பிறவிகளுக்கு அவன் காத்திருக்கவேண்டும். இதுவே நியதி.

கேள்வி: *(501)* அகால மரணம் வினையின் பயனா? திருக்குற்றாலத் தேனருவி தரிசனத்திற்காகச் சென்ற தம்பதி களில் ஒருவர் பாலத்தில் தவறி விழுந்து இறந்தார். மனை வியைக் காப்பாற்றும் பொருட்டுக் குதித்த கணவரும் இறந் தார். இவைபோன்று பல நிகழ்ச்சிகள் உள. திடீரென்று வீட்டின் சுவர் மேல் விழுதல், வேடிக்கை பார்க்கச் சென்ற இடத்தில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாதல் இவை போன்ற செயல்கள் நடைபெறுகின்றன. வினைக்கும் இச் செயல்களுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்க வேண்டு கிறேன். அபமிருத்யுவுக்கும் வினைக்கும் உள்ள சம்பந்தத் தையும் குறிப்பிட வேண்டுகிறேன்.

பதில்: வினைப்பயன் இடையறாது வந்து வாய்த்துக் கொண்டிருப்பதையே வாழ்வு என்கிறோம். வாழ்வும் வினைப் பயனும் ஒன்றே. வினைப்பயன் அற்றவிடத்து வாழ்வு இல்லை. வினைப்பயனோ காரண காரியமாய் வந்தமைகிறது. காரணத்துக் கேற்ற காரியம் உளது. காரணம் ஒன்றிருக்கக் காரியம் மற் றொன்று ஆகாது. இது இயற்கையின் முறைபிறழாத செயல் ஆகும். ஆனால் நமது அறிவுக்குக் காரணங்கள் எல்லாம் புலனாவதில்லை. காரணம் ஒன்றிருக்க மற்றொன்றைக் காரணமாக எடுத்துக்கொள்ளும் விபரீதம் நமக்கு வாய்த்துவிடுவதும் உண்டு. கர்மத்தின் இயல்பு முழுவதையும் சான்றோர்களே அறிந்து கொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றனர். பின்பு மற்றவர்கள் இது விஷயத்தில் மனக்குழப்பம் அடைவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. நம் அறிவுக்கு எட்டாது போய்விடினும் காரணத் துக்கேற்ற காரியம் இயற்கையில் யாண்டும் ஒழுங்காக நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. இக்கோட்பாட்டை மட்டும் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பாலத்தில் தவறி விழுந்தவருக்கு ஒருவேளை ஆயுள் அத்துடன் முற்றுப்பெற்றிருக்கலாம்; அல்லது இன்னும் ஆயுளில் ஒரு பகுதி பாக்கியிருக்க அவர் வீழ்ந்து மாய்ந்திருப்பாராகில் அது அகாலமரணம் என்பதாகிறது. இப்படி அமைந்த அகால மரணம் புதியதொரு வினை. இதன் பயனும் பாக்கியிருக்கிற பிராரப்த கர்மத்தின் பயனும் சேர்ந்து இனிவரும் அந்த ஜீவனுடைய பிறவியை இயக்கும்.

ஓர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு நதியில் குதித்தவர் மாண்டுபோனார். முதலில் விழுந்த உயிர் காப்பாற்றப் பெற்றது. இந்தச் சம்பவங்களை அவரவர் வினைக்கேற்ப அமைந்த ஆயுள் பலம் என்றுதான் சொல்லவேண்டும். யாருக்கு எவ்வளவு காலம் வாழ்ந்திருக்கவேண்டும் என்னும் பிராரப்தம் இருக்கின்றதோ அது முறையாக நடைபெற்று வருகிறது. காப்பாற்றப் போன வருக்கு அதற்குமேல் ஆயுள் இல்லை என்றும், முதலில் வழுவி நீரில் வீழ்ந்து சாகும் தறுவாயில் இருந்தவர்க்கு இன்னும் ஆயுள் பலம் இருக்கிறது என்றும் யூகிப்பது பொருந்தும்.

வீட்டின் சுவர் ஒருவர் மீது வீழ்ந்து அவர் மாய்ந்து போனதைப் பொதுவாக வினைப்பயன் என்றே எடுத்துக் கொள்ளலாம். அப்படி மாய்ந்தவர் அப்பாங்கிலே இந்த ஜன்மத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் வினைப்பயனுக்கு இலக்காக அமைந்திருக்கலாம்.

வேடிக்கை பார்க்கச் சென்ற இடத்தில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானது இயல்பாக அமைந்த மரணமாக இருக்கலாம், அல்லது அகால மரணமாகவும் இருக்கலாம். துப்பாக்கிக் குண்டுக்குத் திடீரென்று இரையாகி மாய்வது அந்த ஜீவனுடைய வினைப்பயனாய் இருந்தால் அது இயல்பாக அமைந்த மரணம் என்று சொல்லப்படுகிறது. இன்னும் ஆயுளில் கொஞ்சம் பாக்கி இருக்க அந்த ஜீவன் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாயிருந்தால் அது அகால மரணம் என்று சொல்லப்படுகிறது. அந்தந்த ஜீவனுக்கு அமைந்தது அவரவர் ஆயுள் பூர்த்தியான பிறகு அமைந்த பழைய வினைப்பயனா அல்லது அகால மரணத்தை உண்டுபண்ணுகின்ற அப்போதைக்கப்போது நிகழ்ந்த புதிய வினைப்பயனா என்று உறுதியாக முடிவு கட்டுவதற்கு வேண்டிய புள்ளிவிவரங்கள் நம் கைவசத்தில் இல்லை. ஆதலால் உத்தேச மாகத்தான் நாம் இங்ஙனம் கூற முடியும். புதிதாகத் திடீரென்று நிகழ்கின்ற வினைப்பயன் மூன்று காரணங்களால் வரக்கூடும் என்பதையும் பெரியோர் பகர்கின்றனர். ஆத்யாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதிதெய்வீகம் என இந்த மூன்று சூழ்நிலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை சேர்ந்து திடீரென்று புதிய வினைப்பயனை உண்டுபண்ணிவிடுவதும் உண்டு. இப்படி வரும் மரணத்துக்கே அகால மரணமென்று பொதுவாகப்

பெயர் கொடுக்கலாம். மேலே குறிக்கப்பட்டவர்களெல்லாம் மாண்டுபோனது காரண காரியம் என்னும் வினையின் விளைவு. எந்த மரணத்துக்கு எது காரணமாய் இருந்தது என்பதை யூகிப்பதுதான் சிரமம்.

கேள்வி: *(502)* ஒருவன் பிறவி எடுக்கும்பொழுது அவனுக்கு இத்தனை வயது, இன்ன காரணத்தினால் மரணம், முன்செய்த கர்மங்களுக்கு ஏற்பத் தகுந்த இடத்தில் பிறப்பு என்பன உண்டா? அப்படியானால் அகால மரணம் என்று ஏன் சொல்ல வேண்டும்?

பதில்: ஜாதகம் கணித்தல் என்பது பழைய வினைப்பயனைக் கணித்தல் எனப் பொருள்படுகிறது. அதன்படி ஒரு மனிதனுக்கு ஆயுள் இவ்வளவு, அவன் இத்தகைய மரணத்துக்கு ஆளாவான் என்று கணித்துவிடலாம். அப்படிக் கணித்தபடியே அவனுக்கு மரணம் வாய்ப்பதும் உண்டு; கணித்ததற்கு மாறாக மரணம் வாய்ப்பதும் உண்டு. பழைய வினைப்பயன் மட்டும் இப்பிறவியில் ஆதிக்கம் செலுத்திவந்தால் கணித்து வைத்தபடியே அவனுக்கு மரணம் வந்தமையும். ஆனால் பழைய வினைப்பயனுடைய வேகத்தைத் தணிக்கின்ற பாங்கிலும், மாற்றியமைக்கின்ற பாங்கிலும் இப்பிறவியில் புதியவினைகள் பலவற்றை மனிதன் செய்யமுடியும். அப்படி அவன் செய்கின்ற வினைகளுள் இப்பிறவியிலேயே பயன்தரும் பகுதிகள் இருக்கின்றன. அதற்கு ஒப்ப ஆயுள் அதிகரித்து விடுவதுண்டு. பழையவினை புதிய வினை ஆகியவைகளை முறையாகக் கணக்கெடுக்கத் தெரிந்து கொண்டால் வினைப்பயனை முன்னிட்டே ஜனன மரணங்கள் ஒழுங்காக நிகழ்கின்றன என்பது புலனாகும்.

அகால மரணம் யாருக்கு வேண்டுமானாலும் நிகழக்கூடும். ஞானிகளுக்கும் அது வந்து அமைவதுண்டு. இயற்கையின் நடைமுறையில் அகால மரணத்துக்கும் இடமுண்டு. ஒரு உதாரணத்தைக்கொண்டு இதை விளக்குவோம். பம்பரம் ஒன்றைச் சுழட்டுகிறோம். அதற்குக் கொடுத்துள்ள வேகத்தை முன்னிட்டு அது இவ்வளவு நேரம் சுழலும் என்று கணக்கெடுத்துச் சொல்லலாம். அப்படி அது சுழன்று கொண்டிருப்பதற்கிடையில் யாரோ ஒருவர் அவ்வழியே நடந்துவந்து

அதை மிதிக்கின்றார். உடனே அது கீழே விழுந்து விடுகிறது. அது இவ்வளவு நேரம் சுழலும் என்று கணக்கெடுத்தது பொய்த்துப் போய்விடவில்லை. இடையில் நிகழ்ந்த எதிர்பாராத செயல் பம்பரத்தின் செயலைத் தடைப்படுத்திவிட்டது. அப்பாங்கில் மானுட வாழ்க்கை தடைபட்டுவிடுவதும் உண்டு. அப்பொழுது அது அகால மரணம் என்னும் பெயர் பெறுகிறது.

ஒவ்வொரு ஜீவனும் தனது வினைக்குப் பொருத்தமான சூழ்நிலையில் வந்து பிறக்கிறான் என்பதும் உண்மை. வினைக்கேற்ற சூழ்நிலையில் ஜீவன் ஒருவனை அமர்த்தி வைப்பது இயற்கையின் நடைமுறைகளுள் ஒன்றாகும்.

கேள்வி: *(503)* ஒரு ஜீவனுக்குத் துன்பம் வருவது அதன் வினையின் விளைவு என்றால் அந்த ஜீவன் இந்தப் பிறவியில் எத்தனை நல்வினைகளைச் செய்தாலும் முன் வினைப்பயனை மாற்ற முடியாதா? அந்த ஜீவனுக்கு நல்வினை செய்யவேண்டும் என்ற எண்ணம் முன்வினைப் பயனால்தான் உண்டாகவேண்டுமா? வினைப்பயனை ஜீவர்களிடத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் மாற்றமுடியாத விடத்துக் கடவுள் எவ்வாறு ஜீவர்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறார்?

பதில்: மனிதனுக்கு இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன. இவ்விரண்டினுள் மனிதனுக்கு இயல்பாக அமைந்துள்ளது இன்பம். மயக்கத்தின் விளைவாக வருவிக்கப் படுவது துன்பம். சூரியன் இயல்பாகவே பிரகாசமுடையது. மேகத்தில் மறையும் பொழுது பிரகாசத்தை இழந்தது போன்று தென்படுகிறது. அதேபாங்கில் மனிதனுடைய இன்பசொரூ பத்தை மறைப்பது அவனுடைய தீவினைப்பயன். நல்வினைப் பயன் அவனுடைய இன்பசொரூபத்துக்குத் தடை செய்வ தில்லை. தீவினையோ அவனுடைய ஆனந்தசொரூபத்தைத் தாற்காலிகமாக மறைத்துவிடுகிறது.

நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளுள் விரைவில் பயன் தருபவைகளும் இருக்கின்றன; நெடுநாட்களுக்குப் பிறகு பயன்தருபவைகளும் இருக்கின்றன. முன்பு செய்த தீவினையின் விளைவாக இப்பொழுது துன்பம் வந்து வாய்க்கலாம். ஆனால்

அந்தத் துன்பத்தின் வேகத்தை இப்பொழுது மனிதன் கையாளும் விவேகத்தால் மறைக்க முடியும். சாம்பலுள் மறைந்துள்ள தீயினுள் தெரியாமல் மனிதன் கையை வைத்து விடுகிறான். கை காந்திப்போகிறது. தீவினைப்பயன் அதைப் போன்றது. அதனால் வரும் துன்பத்தைத் தவிர்க்கமுடியாது. ஆனால் மருந்தைக்கொண்டும், மனதின் உறுதியைக் கொண்டும் அந்தத் துன்பத்தின் வேகத்தைப் பெரிதும் குறைத்துவிடலாம். அதேபாங்கில் முன்புசெய்த தீவினைப்பயனால் வரும் துன் பத்தை இப்பொழுது பெரிதும் தவிர்க்க மனிதனுக்கு முடியும்.

கடவுளுக்கும் ஜீவர்களுக்கும் உள்ள தொடர்பு இணை பிரியாதது. கடலுக்கும் அலைக்கும் என்ன தொடர்பு உண்டோ அதே தொடர்பு கடவுளுக்கும் ஜீவர்களுக்கும் உண்டு. கடவுளுக்கு அந்நியமாக ஜீவர்கள் இருக்கமுடியாது. உருண்டு வருகிற அலை கரையிலுள்ள கற்பாறையின்மீது மோதுவதுண்டு. மணற்பரப்பில் உருண்டோடி இன்பகரமாகத் திரும்புவதும் உண்டு. அலைகள் மோதுவதும் இனிது உருண்டோடுவதும் அதனதன் வினைப்பயன் என்று சொல்லலாம். அதனால் கடல் பாதிக்கப்படுவதில்லை. ஜீவர்கள் அவரவர் வினைப் பயனுக்கு ஏற்ப இன்பதுன்பங்களை அனுபவிக்கிறார்கள். வினைப்பயன் முறைமாறாதிருப்பது கடவுளின் அருளால். கடவுள் முற்றிலும் தன்மயமாய் இருந்துகொண்டு வினைப் பயன்களாகிய இன்பதுன்பங்களின் வாயிலாக உயிர்களைப் பக்குவப்படுத்துகிறார்; ஞானத்துக்குத் தகுதியுடையவர்களாகச் சிறிதுசிறிதாக அவர்களைத் திருத்தி அமைத்துக்கொண்டிருக் கிறார்; அல்லது திருந்தியமைவதற்கு ஏதுவான சூழ்நிலைகளை அவர் அமைத்து வைத்துள்ளார். இதுவே கடவுளுக்கும் ஜீவர் களுக்கும் இடையில் உள்ள தொடர்பு.

கேள்வி: *(504)* சமயச் சொற்பொழிவாளர் ஒருவர் பகர்ந்ததாவது: கணவன் செய்த நல்வினையில் பாதி மனைவிக்கு உண்டு. கணவன் செய்த பாவத்தில் மனைவிக்குப் பங்கு இல்லை. மனைவி செய்த நல் வினையில் கணவனுக்குப் பங்கு இல்லை. மனைவி செய்யும் பாவத்தில் கணவனுக்குப் பங்கு உண்டு. இக்கூற்று

எனக்கு விளங்கவில்லை. இதை விளக்கும்படி வேண்டுகிறேன்.

பதில்: சொற்பொழிவு ஆற்றுகிறவர்கள் தங்களுக்குத் தோன்றுகிற கருத்துக்களையெல்லாம் தங்குதடையின்றி வெளியிடுகின்றனர். ஆனால் அவையாவும் யுக்திப் பிரமாணத்துக்கோ, சாஸ்திரப் பிரமாணத்துக்கோ ஒத்திருக்கும் என்று உறுதிகூற முடியாது. யுக்திப் பிரமாணம் ஒன்றைக் கொண்டுதான் இக் கேள்வியை ஆராய்ந்து பார்க்கவேண்டும். சுயநலத்தை அடிப் படையாக வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து மனைவிக்கு வினைப்பயன்கள் பெரிதும் அனுகூலமாகவே அமைந்திருக் கின்றன. கணவனுக்கோ வினைப்பயன் பிரதிகூலமாக அமைந் திருக்கின்றன. அறிந்தோ அறியாமலோ மனைவி செய்த பாவத்தி லெல்லாம் அவன் பங்கு எடுத்தாக வேண்டும். மனைவி செய்கிற புண்ணியத்தில் கணவனுக்குப் பங்கில்லை. கணவன் செய்கிற புண்ணித்தில் மனைவிக்குப் பங்கு கொடுத்தே ஆக வேண்டும். பின்பு தான் செய்கிற பாவம் தனக்கே உரியதாகத் தன்னிடம் நின்றுவிடுகிறது. இத்தகைய ஏற்பாட்டின் விளைவு கணவனுக்குப் பாவ மூட்டை அதிகரிக்கிறது. மனைவிக்குப் புண்ணிய மூட்டை அதிகரிக்கிறது. இக்கொள்கை யுக்திக்கு ஏற்புடையதாகாது. இயற்கையின் நடைமுறையும் இதற்கு இடந்தருவதில்லை.

கணவனும் மனைவியும் சரீரத்தில் இரண்டு பேர். ஆனால் கொள்கையிலும் வாழ்க்கை முறையிலும் முற்றிலும் ஒன்றுபட்டிருப்பவர்கள் உத்தம தம்பதிகளாகிறார்கள். அப்படி உத்தம நிலையில் இருப்பவர்களுக்குப் பாவம் ஆனாலும் சரி, புண்ணியம் ஆனாலும் சரி சமனாகவே வந்து வாய்க்கிறது. நோய்வாய்ப்பட்டிருக்கும் உடலில் வலது கைக்கும் இடது கைக்கும் நோய் ஒரேபாங்கில் அமைகிறது. அங்ஙனம் வினைப் பயன்களும் இன்ப துன்பங்களும் தம்பதிகள் இருவர்க்கும் சமனாகவே வந்து வாய்க்கின்றன.

கணவனும் மனைவியும் ஒத்து வாழ்ந்திருப்பதற்கிடையில் இலட்சியத்தில் வேறுபட்டிருக்கலாம். அப்படி இலட்சியத்தில் வேற்றுமை வருமிடத்து அவரவர் லட்சியத்துக்கு ஏற்ப அவரவர் வினைப்பயனை அவரவரே அனுபவிக்கின்றனர். காரைக்கால்

அம்மையாரும் அவருடைய கணவனும் லட்சியத்தில் வேறு பட்டவர்கள். தாம் எடுத்திருந்த அதே பிறவியில் காரைக் கால் அம்மையார் சிவபதவியடையத் தகுதியுடையவரானார். ஆனால் அவருடைய கணவன் அத்தகைய பெருநிலையை அடையவில்லை. ஸ்ரீ ராமானுஜாச்சாரியர் உலகம் போற்றும் சமய ஆச்சாரியர் ஆகிறார். உயிர்களுக்கு உடையவர் ஆனார். ஆனால் அவர் அடைந்திருந்த பெருநிலையை அடைய அவரை மணந்திருந்த மவைிக்கு முடியவில்லை. இலட்சியத்தில் மனைவி பின்வாங்கியிருந்ததே அதற்குக் காரணமாகும்.

கணித சாஸ்திரம் கொடுக்கிற கணக்கு ஒன்றைக் கணித்து நாம் சரியாக விடை சொல்லுவது போன்று கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் கர்மபலன் எத்தகைய விகிதாச்சாரத்தில் எப்படிப் பாகுபடுத்தி இருவருக்கும் தரப்படுகிறது என்பதைப் பற்றி உறுதிகூற முடியாது. அவரவர் மனநிலைக்கேற்றபடியே அவரவர்க்குக் கர்ம பலன் வந்து அமைகிறது.

கேள்வி: *(505)* மனித இனத்தில் நல்ல எண்ணம் படைத்தவர்கள் சிலர் திடீரென்று இறந்து விடுகிறார்கள். தீய எண்ணமும் நடத்தையும் உடையவர்கள் சிலர் நீண்ட நாட்களுக்கு உயிரோடு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பூர்வஜன்மத்தில் அவரவர் செய்த பாவ புண்ணியங்களா? இது விஷயத்தில் தாய் தந்தையரின் சேர்க்கை முறையும் சம்பந்தப்படுகிறதா? அல்லது இந்த ஜன்மத்தில் அவரவர் களின் நடத்தைக்கு ஏற்ப ஆயுள் அமைகிறதா? எந்த அடிப் படையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆயுள் நிர்ணயம் செய்யப்படுகிறது?

பதில்: மனிதனுக்கு ஆயுள் அமைவது அவனுடைய பிராரப்த கர்மத்தைப் பொறுத்தது. பிராரப்த கர்மம் என்றால் என்ன என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு சான்றின் மூலம் அதை விளக்குவோம். பம்பரம் ஒன்றுக்குச் சாட்டையால் வேகத்தை கொடுத்து அதைச் சுழற்றுகிறோம். நாம் கொடுத்துள்ள வேகம் அதற்கு அமைந்த பிராரப்த கர்மமாகும். அந்த வேகம் இருக்கும் பரியந்தம் அது சுழன்று கொண்டிருக்கும். அங்ஙனம் ஒவ்வொரு மனிதனும் ஒருவித

வேகம் படைத்தவனாக மண்ணுலகில் தோன்றுகிறான். அந்த வேகம் இருக்கும் பரியந்தம் அவன் உயிர் வாழ்ந்து வருகிறான். நீண்டநாள் வாழ்ந்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றும், அற்ப ஆயுள் படைத்திருக்கிறவர்கள் தெளர்ப்பாக்கியசாலிகள் என்றும் நாம் கருதலாகாது. திருஞானசம்பந்தருக்கும் மார்க்கண்டேயருக்கும் ஆயுள் பதினாறு. ஆதிசங்கரருக்கு ஆயுள் முப்பத்திரண்டு. சுவாமி விவேகானந்தருக்கு ஆயுள் முப்பத்து ஒன்பது. அதற்குமேல் அவர்கள் வாழ்ந்திருக்கமாட்டார்கள் என்று அந்தந்தக் காலத்துக்குரிய பெரியோர்களே அறிந்திருந் தார்கள். இனி, துஷ்டர்கள் பலர் அல்லது வீணே பொழுது போக்குகின்றவர்கள் பலர் நெடுங்காலம் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருப்பதனால் இவர்களுக்கோ உலகுக்கோ ஒரு நலனும் இல்லை. சுவாமி விவேகானந்தர் போன்றோர் குறுகிய காலத்தில் தமது உடலங்களை ஒதுக்கி விட்டதனால் அவர்களுக்கு ஒரு குறையும் வந்துவிடவில்லை. ஒருவேளை உலகத்துக்கு குறை வந்துவிட்டது என்றும் நாம் எண்ணலாம். உண்மையில் உலகத்துக்கும் ஒரு குறையும் இல்லை. ஏனென்றால் அவர்கள் வழங்கியுள்ள அருள்விருந்தை இன்றைக்கு வேண்டுமென்றாலும் நாம் அருந்தலாம். எனவே மனிதனுடைய தரத்தையும் பண்பையும் அவனுடைய ஆயுளைக் கொண்டு நாம் மதிப்புப் போடலாகாது.

கேள்வி: *(506)* அவனவன் கர்மவினையை அவனவன் அனுபவிக்கிறான் என்று ஹிந்து மதம் கூறுகிறது. புயல், பூகம்பம், போர் முதலியவற்றால் நாடு அல்லது நகர மக்கள் எல்லோரும் இறந்துபடுகின்றனர். எல்லோருடைய ஊழ் வினையின் பயனும் ஒரே நிலையில் ஒரே காலத்தில் ஏற்பட முடியுமா? கர்மவினையில் மனிதனுக்கு மனிதன் தாரதம்மியம் கிடையாதா?

பதில்: பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள கோளங்களுள் சூரியர்களாகத் திகழ்கின்றவைகள் கணக்கற்றவைகள் இருக் கின்றன. தனித்தனியாக ஒவ்வொரு சூரியனும் நாளடைவில் தன் வெப்பத்தை இழந்து பூமி போன்ற நிலைக்கு வந்து விடுவதுண்டு. பிறகு அந்த நிலையும் கலைந்துபோய் மறைந்து

விடுவதும் உண்டு. மஹாப்பிரளய காலத்தில் எண்ணிறந்த சூரியர்கள் ஏககாலத்தில் ஒடுங்குகின்றனர். பிரபஞ்ச அமைப்பில் இந்த நியதி யாண்டும் நிகழ்ந்து வருகிறது.

ஒவ்வொரு ஜீவனும் அவனவன் வினைக்கு ஏற்ப அப் போதைக்கப்போது தோன்றவும் மறையவும் செய்து வருகிறான். ஒரே பாங்கான வினையில் வசப்பட்டிருப்பவர்கள் ஏககாலத்தில் பூகம்பத்திலோ புயலிலோ அகப்பட்டு மறைந்து போவதும் இயற்கையின் நடைமுறையில் இடம்பெற்றிருக்கிறது. மஹாப் பிரளயத்தில் அண்டங்கள் எங்குமுள்ள உயிர்கள் அனைத்தும் சேர்ந்து ஒடுங்குகின்றன. பிறகு சிருஷ்டியில் கணக்கற்ற உயிர்கள் ஏககாலத்தில் தோற்றத்துக்கு வருகின்றன. இத்தகைய நடை முறையில் ஒரு சிறு கூட்டம் சேர்ந்தாற்போன்று ஒரு விபத்துக்கு உட்பட்டு மறைந்து போவதில் வியப்பொன்றுமில்லை. ஏதேனும் ஒரு விபத்துக்கு உட்பட்டுச் சில ஆயிரம் உயிர்கள் ஒரே வேளையில் மறைந்து போவதற்கும் இயற்கையின் நடைமுறையில் இடமுண்டு. மனிதனுடைய காட்சியில் இது பயங்கரமான விபத்து. இயற்கை நடைமுறையில் இது கணக்கில் எடுத்துக்கொள்ளத் தகுதியற்ற ஓர் அற்பச் செயலாகும்.

கேள்வி: (507) **போர்க்களத்தில் வீரமாகச் சண்டையிட்டு மரணமடைபவன் வீரசொர்க்கமடைவான் என்பது பழங்காலக் கோட்பாடு. அதன்படி கொடிய பாபங்களைச் செய்த துரியோதனனும் மற்றும் அவனுடைய சகோதரர் களும் சொர்க்கமடைந்தனரென்று மஹாபாரதம் கூறு கின்றது. இக்கோட்பாடு இக்கலிகாலத்திற்கும் பொருந்துமா? வாழ்வில் பல குற்றங்களைச் செய்து யுத்தத்தில் சேரும்படி நேர்ந்து மரணமடைந்தால் அவன் சொர்க்கமடைகிறானா?**

பதில்: சொர்க்கம் அல்லது நரகப்பிராப்தி எல்லா மனிதர்க்கும் அவரவர் வினைப்பயனாய் வந்து அமைகிறது. வினைப்பயனும் மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நல்வினை செய்கின்றவர்க்கு நல்ல மனப்பான்மை. இக் கோட்பாட்டை இன்னொரு பாங்கில் பகர்வதே முறை. அதா வது நல்ல மனமுடையவரிடம் உதிப்பதெல்லாம் நல்வினை களாகும். மனநிலையை ஒட்டியே வினை நல்லது அல்லது

கேடுடைய்து ஆகிறது. மன் நிலைக்கேற்ப ஒருவன் சொர்க் கத்தில் அல்லது நரகத்தில் இருக்கின்றான். பாப புண்ணியத்துக்கு மனதே மூல காரணமாகிறது. அங்ஙனம் சொர்க்க நரகத்திற்கும் மனதே மூலகாரணமாகிறது. மனம் எப்படியோ புறவுலகம் அப்படி ஒருவனுக்குக் காட்சி கொடுக்கிறது. இது எக்காலத் துக்கும் உரிய உண்மையாகும்.

போர்க்களத்தில் வீரனாகப் போர்புரிகின்றவன் வீர சொர்க்கமடைகின்றான் என்பதும் எக்காலத்துக்கும் உண்மை. ஆனால் போர்க்களத்துக்குப் போகின்றவர்கள் எல்லாரும் வீரமாகப் போர்புரிகிறார்கள் என்று சொல்லுதற்கில்லை. அக்கிரமத்தை அடக்குதல், துஷ்டர்களைத் துடைத்தல், நலத்தை நிலைநாட்டுதல் போன்ற உயர்ந்த லக்ஷியத்தின் பொருட்டு போருக்குப் போகின்றவனே வீரன் ஆகின்றான். பேராசையால் தூண்டப்பெற்றுப் பிறர் நாட்டையும் பொருளையும் அபகரிப்பதற்காக போருக்குப் போகின்றவன் வீரன் அல்லன். ஜீவனத்துக்கு வேறு வழி ஒன்றும் இல்லாது வெறும் சம்பளத் துக்காகவென்று படையில் தன்னைப் பதிவுசெய்து கொள்கின் றவன் வீரனாகான். அறப்போர் என்ன என்பதும் அவனுக்குத் தெரியாது. வாங்கிக்கொண்ட சம்பளத்துக்காக ஏவப்பட்டபடி சண்டை செய்ய அவன் ஆயத்தமாய் இருக்கிறான். அத்தகைய வனுக்கு வீராவேசம் உண்டாவதில்லை. போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு இடையிலேயே தான் எப்படியாவது தப்பித்துக் கொண்டால் நலமாய் இருக்குமென்று மனதில் அவாவுறுகிறான். அத்தகையவன் வீரன் அல்லன். வீரசொர்க்கமும் அவனுக்குக் கிடையாது. சாவைப் பொருள்படுத்தாதவனும், உயர்ந்த லக்ஷியத்தை நிலைநாட்டப் போர்புரிந்தே ஆகவேண்டு மென்றும் எண்ணித் துணிகிறவன் மரணத்துக்கு அஞ்சுதல் இல்லை. உயிர் வாழ்தலும், மாய்தலும் அவனுக்கு ஒன்று. அந்த உயர்ந்த மனநிலையில் இருந்துகொண்டு உடலை உகுக் கின்றவன் உண்மையாகவே வீரசொர்க்கம் பெறுகின்றான். இது எக்காலத்துக்கும் பொருந்திய உண்மை. துரியோதனன் அக்கிரமத்தில் ஈடுபட்டான். அக்கிரமமாகப் போர்புரியவும் ஆயத்தமாய் இருந்தான். அத்தகைய அக்கிரமத்துக்கு இடந் தரலாகாது என்பது பாண்டவர்களின் கொள்கை.

இராஜ்ஜியத்தை அவர்கள் அதிகமாக விரும்பவில்லை. காலமெல்லாம் வனவாசம் செய்யவும் ஆயத்தமாய் இருந்தார்கள். ஆனால் அக்கிரமம் தலையெடுக்க இடங்கொடுப்பது அரசாள்பவர்களுடைய அறம் ஆகாது. அக்கிரமத்தை அடக்குதற்கே அவர்கள் அறப்போரில் ஈடுபட்டார்கள். இரு தரத்தாரும் துணிந்து போர்புரிந்தார்கள்; அஞ்சாதும் போர்புரிந்தார்கள். அஞ்சாத மனநிலைக்கேற்ற வினைப்பயன் யாண்டும் உண்டு. துரியோதனன் முதலாயினோர் செய்த நல்வினை மிகக்குறைவு. தீவினையோ மிகைப்பட்டது. போரில் மடிந்தான பிறகு சிறுபான்மையான வினைப்பயனை முதலில் அனுபவித்துவிட்டுப் பெரும்பான்மையான வினைக்கு ஆட்படுவது பிறகு வந்தமைகிறது. அதே கோட்பாடு பாண்டவர்களுக்கும் ஏற்பட்டது. அறிந்தோ அறியாமலோ பாண்டவர்கள் செய்த பாபச்செயல் மிகக்குறைவு. புண்ணியச் செயல்கள் அளப்பரியவை. துரியோதனன் கூட்டம் தாங்கள் செய்த சிறிய நல்வினையின் விளைவாகச் சொர்க்கத்தை முதலில் அனுபவித்தார்கள். போரில் மடிந்ததும் சொர்க்கத்துக்குப் போனதால் அதை வீரசொர்க்கம் என்றே பகரவேண்டும். புண்ணியம் தேய்ந்ததும் அவர்கள் நரகத்தில் இடர்ப்பட்டார்கள். பாண்டவர்கள் செய்த சிறிய பாபத்துக்காக நரகத்தைக் கண்ணால் பார்க்கவோ அல்லது அங்கு சிறிதுகாலம் தங்கியிருக்கவோ ஏற்பட்டது. ஆக, அவரவர் வினைப்பயனை விட்டு யாரும் தப்பித்துக் கொள்ளவில்லை. வினையும் வினையின் விளைவாக வருகின்ற சொர்க்க நரகமும் மனநிலையைப் பொறுத்தவை என்பதை ஏற்கனவே ஆராய்ந்தோம். நல்ல மனமுடையார்க்கு இம்மை மறுமை ஆகிய இருமையிலும் மேலான வாழ்வே. கெட்ட மனமுடையார்க்கு இருமையிலும் கீழ்த்தரமான வாழ்வே.

ஒரு மனிதன் வாழ்க்கையில் அறியாமையினால் பல குற்றங்களைச் செய்யலாம். எப்பொழுதாவது அவனுக்கு விவேகம் உதயமாய்விட்டால் பிறகு அவன் நல்வாழ்வில் தீவிரமாகப் பிரவேசிப்பான். நல்வாழ்வைப் பற்றிய தீவிரமான உணர்ச்சி தீயவினைப் பயனைப் பெரிதும் அடக்கிவிடுகிறது. பிராரப்த கர்மத்தின் கேட்டை அவன் அனுபவித்தே ஆகவேண்டுமென்றாலும் அவன் பெற்றுள்ள புதிய மனநிலை அக்கேட்டைப்

பொருள்படுத்தாதது ஆய்விடுகிறது. போருக்குப் போவதும் உயர்ந்த லக்ஷியத்தால் தூண்டப்பெற்றதாய் இருக்குமானால் அது நல்வினையேயாம். வினைக்கேற்ற வினைப்பயன் என்னும் கோட்பாடு யுத்தத்தில் சேர்ந்தவனுக்கும் வருகிறது. நல்ல மனப்பான்மையுடன் அவன் யுத்தத்தில் உடலை உகுப்பானாகில் அவனுக்கும் வீர சொர்க்கம் உண்டு. பாண்டவர்க்கு ஏற்பட்ட தாற்காலிகமான நரகவேதனை ஒருவேளை அவனுக்கும் ஏற்படலாம். வினைக்கேற்ற வினைப்பயன் என்னும் கோட்பாட்டிலிருந்து யாரும் சிறிதளவும் தப்பித்துக் கொள்ளுதல் இல்லை.

கேள்வி: *(508)* நன்மை தீமைகளுக்குக் காரணம் வினைப்பயன் என்றால் அது முதன் முதலில் எவ்வாறு தோன்றியது?

பதில்: இயற்கையும் அதில் நடைபெறுகிற வினையும் இணைபிரியாதவைகள். இயற்கைக்குத் துவக்கம் கிடையாது. அது யாண்டும் உளது. அது தோற்றத்திலிருக்கிறபொழுது அந்நிலையைச் சிருஷ்டி என்றும், தோன்றாதிருக்கும்பொழுது அதைப் பிரளயம் என்றும் பகர்கிறோம். அயர்ந்த உறக்கத்துக்கு நிகர் பிரளயம். விழிப்பு நிலைக்கு நிகர் சிருஷ்டி. இந்தச் சிருஷ்டியில் யாண்டும் இருக்கிற வினை அல்லது நிகழ்ச்சிகள் நன்மையாகவோ, தீமையாகவோ காட்சி கொடுக்கின்றன. ஒரே வினையில் நன்மையும் தீமையும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. கோடைகாலத்தில் வெயிலின் வெப்பம் மிகக் கொடியதாயிருக் கிறது. ஆயினும் அது முற்றுமே கொடியதாகாது. வெயிலின் விளைவாகக் கடல் நீர் ஆவியாக மாறி மேலே போய் மழை யாகப் பொழிகிறது. அது வெப்பத்தால் விளையும் நலன் ஆகும். ஆனால் அதே வெப்பம் உயிர்களைத் துன்புறுத்துகிறது. ஆக கோடை வெப்பத்தில் நலன், கேடு இரண்டும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. மரணத்தைக் கொடியது என்கின்றோம். மரணம் இருப்பதால்தான் பழையன கழிதல், புதியன புகுதல் என்னும் இயற்கையின் எழில் யாண்டும் காப்பாற்றி வைக் கப்படுகிறது. ஆதலால் வினைப்பயனுக்குத் துவக்கம் இருக்கிறது என்பது உண்மையன்று. இயற்கையோடு இணைபிரியாததாக

வினை யாண்டும் இருக்கிறது. சூழ்நிலைக்கேற்றவாறு அவ்வினை அனுகூலமானதாகவோ, பிரதிகூலமானதாகவோ தென்படுகிறது. இயற்கையின் நடைமுறையைத் தன் பயிற்சிக்காக மனிதன் பயன்படுத்தவேண்டும். இயற்கையினின்று வடிவெடுக்கும் நலன் கேடுகளைச் சமதிருஷ்டியோடு பார்த்துப் பழகுதல் அவசியம். லாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி ஆகியவைகளுக்கு அடிமைப் பட்டு இன்ப துன்பங்களை மனிதன் ஏற்றுக்கொள்ளலாகாது. மனதை அவன் யாண்டும் நடுநிலையில் வைத்துப் பழக வேண்டும். இதுவே நல்வாழ்வுக்குரிய பயிற்சியாகிறது. இப் பயிற்சியில் கண்ணும் கருத்துமாயிருப்பவன் அனுகூலமான சூழ்நிலையில் மகிழ்கிறான்; பிரதிகூலமான சூழ்நிலையில் துன்புறுகிறான். அத்தகைய பயிற்சியின் விளைவாக உலக வாழ்வினின்று வருகிற இன்ப துன்பங்களை அவன் கடந்தவனா கின்றான். ஒவ்வொரு வினையிலும் நன்மையும் தீமையும் சேர்ந்தேயிருப்பதால் வினையை நல்லது என்றோ, கெட்டது என்றோ பாகுபடுத்த முடியாது. அவரவர் மனப்பான்மைக்கேற்ப வினையை நல்லது என்றோ கெட்டது என்றோ கருதுகின்றனர். மனிதன் தன்னைத் திருத்தியமைப்பதற்கேற்ப உலகில் உள்ள கேடுகள் எல்லாம் அவனுக்கு அகன்றுபோகின்றன. தன் மனத் தகத்து இருப்பதைப் புறவுலகில் மனிதன் காண்பதால் நலனுக்கும் கேட்டுக்கும் காரணம் மனிதனுடைய மனதே யொழிய வினை அதற்குக் காரணம் ஆகாது. மனம் அமைவதற் கேற்ப வினையில் உள்ள கேடுகள் அகன்றுபோகின்றன. ஆதலால் மனிதன் தன் மனதைத் திருத்தி அமைப்பதிலேயே கருத்தைச் செலுத்தவேண்டும். மனம் முற்றிலும் திருந்தி அமைந்தால் உலகிலோ, வினையிலோ கேடு ஏதுமில்லை என்பது அவனுக்கு வெளியாகும்.

கேள்வி: *(509)* வினைக்கேற்பச் சொர்க்கம், நரகம் வாய்க்கின்றன என்று சொல்லுகின்றனர். பிறப்பு ஏழு என்ற கோட்பாடு உளது. எனவே சொர்க்கமும் நரகமும் ஏழு பிறப்புகளுக்கும் பின்னரா?

பதில்: பிறப்பு ஏழு என்று சொல்லப்படுவது ஏழு ஞானபூமிகளில் என விரிவடைகிறது. ஜீவர்களுக்குப் பிறப்பு

எண்ணிக்கையில் அடங்காதவைகள். எத்தனை எத்தனையோ கல்பங்களில் எத்தனை எத்தனையோ பிறவிகளுக்கு ஜீவர்கள் உட்படுகின்றனர். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமித்து வருவதற்கு அத்தனை அத்தனைப் பிறவிகள் தேவையாயிருக்கின்றன. ஆனால் அப்பிறவிகள் அனைத்தும் ஏழு ஞானபூமிகளில் அடங்கிவிடுகின்றன. ஏழு ஞான பூமிகளுக்கு அப்பால் ஜீவ வியக்திக்கோ அவர்களின் பிறப்பு இறப்புக்கோ இடமில்லை. ஏழு ஞானபூமி எவை என்று ஆராய்ந்து பார்ப்போம். அதை அறிந்து கொள்ளுதற்கு இயற்கையின் அமைப்பே இடந்தருகிறது. நிறமற்ற சூரியகிரணம் முப்பட்டைக் கண்ணாடியில் செலுத்தப் படும்பொழுது ஏழு நிறங்களாகச் சிதறடைகிறது. இந்த ஏழு நிறங்களுக்குப் புறம்பாக இயற்கையில் வேறு நிறங்கள் இல்லை. இது ஒளியைப் பற்றிய உண்மை. இனி ஒலியைப்பற்றிய உண்மையை ஆராய்வோம். உச்சரிப்புக்கு அப்பால் இருக்கிற ஒலி உச்சரிக்கப்படும் பொழுது சப்த ஸ்வரங்களாக அமைகிறது. ஓசைகள் அனைத்தும் இந்தச் சப்த ஸ்வரங்களில் அடங்கிவிடு கின்றன. இதே உண்மை ஞானபூமிகளுக்கும் உரியதாகிறது. ஞானம் ஏழு படித்தரங்களில் இயற்கையினோடு தன்னை விளக்கிக் காட்டுகிறது. அந்த ஏழு ஞானபூமிகளே எழுமை என்றும் இயம்பப்படுகிறது. ஏழு ஞானபூமிகளில் மூன்று ஞானபூமிகள் நமக்குத் தினசரி அனுபவத்தில் அமைகின்றன. நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்றும் மூன்று ஞானபூமிகள். ஜாக்கிரதம், சொப்பனம், சுழுத்தி என்று இவைகள் இயம்பப் பெறுகின்றன. இவைகளை இன்னும் நுட்பமாகப் பிரிவு படுத்தினால் ஏழு ஞானபூமிகள் ஆகின்றன. அயர்ந்த உறக்கம் கல்போன்று உணர்ச்சியற்ற நிலை. ஆயினும் அதுவும் ஒரு ஞானபூமியாக இருக்கிறது. சாதனத்தின் வாயிலாகத் தெளிந்த பேரறிவு பெறும்போது அது ஒரு ஞானபூமியாகிறது. இந்த இரண்டு கோடிகளுக்கிடையில் ஐந்து நிலைகள் இருக்கின்றன. அங்ஙனம் ஞானபூமி ஏழு ஆகிறது. கடைத்தரத்தில் இருப்பது ஜடநிலை. அது கல்லுக்கு ஒப்பானது. தலைத்தரத்தில் இருப்பது தெள்ளத்தெளிந்த பேரறிவு அல்லது பேருணர்வு. இப்பொழுது ஏழு ஞானபூமிகளை நாம் ஒருவாறு அறிய வருகிறோம்.

இனி ஒவ்வொரு ஞானபூமியிலும் ஒரு ஜீவனுக்கு

அனந்தங்கோடி பிறவிகள் இருக்கின்றன. ஞானபூமியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது அத்தனை கோடிப் பிறவி களும் சேர்ந்து ஒரு ஞானபூமிக்கு உரியதாகுமிடத்து அது ஒரு பிறப்பு என்று கருதப்படுகிறது. இப்படி ஏழு ஞானபூமி களில் வாய்த்துள்ள கணக்கற்ற பிறவிகளை ஏழு பிறப்பு என்று தொகுத்துப் பொருள்படுத்துகிறோம். ஏழு ஞானபூமி களிலுள்ள கணக்கில் அடங்காத பிறவிகள் என்பது இதன் உட்பொருள். இத்தனை பிறவிகளைக் கடந்து பரமனை அடையும்பொழுது, அந்நிலை முக்தி எனப்படுகிறது.

பிறவிகளுக்கும், வினைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வினையின் விளைவாகவே பிறவி வளர்ந்துகொண்டு போகிறது. எல்லாப் பிறவிகளிலும் ஜீவர்கள் இன்பதுன்பங்களை மாறி மாறி அனுபவித்து வருகின்றனர். நல்வினையின் விளைவு இன்பம். தீவினையின் விளைவு துன்பம். ஜீவர்கள் நல்வினை தீவினை ஆகிய இருவினைகளையும் மாறிமாறிச் செய்து வருகின்றனர். அதன் விளைவாக இன்ப துன்பங்களையும் அவர்கள் மாறிமாறி அனுபவித்து வருகின்றனர். இன்பம் அதிகமாக இருக்கிற நிலை சொர்க்கம் எனப்படுகிறது. துன்பம் அதிமாக இருக்கிற நிலை நரகம் எனப்படுகிறது. சொர்க்கமும் நரகமும் அகம், புறம் ஆகிய இரண்டு நிலைகளிலும் உள. மனிதனுடைய மனம் அகம் எனப்படுகிறது. பிரபஞ்சத்தின் அமைப்பு புறம் எனப்படுகிறது. நல்ல மனமுடையவன் நல்ல வினைகளைச் செய்து சுகம் நிறைந்துள்ள உலகங்களில் பிறக்கிறான். அவ்வுலகங்களுக்குச் சொர்க்கம் என்பது பொதுப் பெயர். கெட்ட இயல்பு படைத்துத் தீவினை செய்கிறவன் துன்பம் நிறைந்துள்ள உலகங்களில் பிறக்கிறான். அவ்வுலகங் களுக்கு நரகம் என்பது பொதுப்பெயர்.

இனி, இம்மண்ணுலகோ இன்பம், துன்பம் ஆகிய இரண்டுக்கும் இருப்பிடமாகிறது. இன்புற்று இருக்கிறவர்களை இவ்வுலகில் காண்கிறோம். துன்புற்று இருக்கிறவர்களையும் இவ்வுலகில் காண்கிறோம். இங்கு பெரும்பான்மையோர் இன்பம், துன்பம் ஆகிய இரண்டுக்கும் இலக்காக அமைந்திருக்கின்றனர்.

அடுத்தபடி அவரவர் மனநிலையே சொர்க்கம் என்றோ நரகம் என்றோ இயம்பப்படுகிறது. நல்ல மனமுடையவர்கள்

எங்கு வசித்திருந்தாலும் இன்புற்று இருக்கின்றனர். அன்னவர்களுக்கு அவர்களுடைய மனதே சொர்க்கமாகிறது. கெட்ட மனம் படைத்தவர்கள் எங்கு இருந்தாலும் கேட்டை வரவழைத்துக்கொள்கின்றனர். ஆதலால் அவர்களுடைய மனதே அவர்களுக்கு நரகம் ஆகிறது.

ஜீவன் தன்னைத் திருத்தி அமைப்பதற்கு ஏற்பக் கீழான ஞானபூமியிலிருந்து மேலான ஞானபூமிக்குப் போகிறான். அதேவிதத்தில் அவன் துன்பத்தைத் தவிர்த்து இன்பத்தில் நிலைபெறுகிறான். பிறகு இருவினைகளையும் அவன் தாண்டிப் போகிறான். உலகை ஒட்டிய இன்ப துன்பங்களுக்கு அப்பால் போகிறான். அது முக்தி. பிறப்பு இறப்புகளில் உழலும்பொழுது சொர்க்க நரகங்களை வினைக்கேற்ப அப்போதைக்கப்போது அவன் அனுபவித்துக்கொண்டு இருக்கிறான்.

கேள்வி: *(510)* முன் செய்த தீவினையை இப்போது அனுபவிக்கின்றோம். பெரிய தண்டனையாக மரணமும் நேர்கின்றது. மறுபடியும் ஏன் துன்பம் வரவேண்டும்?

பதில்: முன் செய்த தீவினையை மட்டுமல்ல, நல்வினையையும் இப்போது அனுபவிக்கின்றோம். வினைக்கேற்ற வினைப் பயன் நெறிபிறழாது நிகழ்ந்து வருகிறது. நல்வினையின் விளைவு இன்பம். தீவினையின் விளைவு துன்பம். இன்பத்தையும் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்து வருவதே இவ்வையக வாழ்வின் விளைவு ஆகும். துன்பம் கலவாத இன்பத்தை இவ்வுலகில் யாருமே அனுபவிக்க முடியாது. வாய்க்கின்ற இன்ப துன்பங்களின் வாயிலாக ஜீவாத்மன் படிப்படியாகத் தன்னைப் பண்படுத்தி வருகிறது. இன்பத்தினின்றும் துன்பத்தினின்றும் பாடங்கள் பல ஜீவாத்மனுக்கு வாய்க்கின்றன. இன்பத்தின் வாயிலாகப் பெறுகிற பாடத்தைவிடப் பெரியதாயிருப்பது துன்பத்தின் வாயிலாக வருகிற பாடமாம். அப்படிப் பாடம் பயின்று வருகிற ஜீவாத்மனுக்கு அமைந்துள்ள உடல் சாசுவதமானதன்று. பிராரப்த கர்மம் பூர்த்தியானதும் அதன் விளைவாக வாய்த்த உடல் மடிந்துபட்டுப் போகிறது. உடல் அழிவதைப் பெரிய தண்டனை என்று பகரலாகாது. அணிந்திருக்கின்ற சட்டை கிழிந்துபோனால் அதைத் தண்டனை

என்று நாம் பொருள்படுத்துவதில்லை. நஷ்டம் என்றும் அதை நாம் கருதுவதில்லை. பயன்பட்டு வருகிற பழைய சட்டை எப்படி இயல்பாகக் கிழிந்து போகிறதோ அவ்வாறே ஒரு பிறவியில் எடுத்த உடலுக்கு ஏதுவாயிருந்த வினையின் வேகம் தணிந்தவுடன் அது வீழ்கிறது. அதன் பிறகு அந்த ஜீவாத்மன் அனுபவிப்பதற்கு வேண்டிய கர்மபலன் ஏராளமாக இருக்கிறது. அதற்காகவென்று அடுத்த பிறவியை அந்த ஜீவாத்மன் எடுத்துக்கொள்கிறது. ஆக, உலகின் வாயிலாக வருகிற ஜனனத்தையும், மரணத்தையும் தண்டனை என நாம் பொருள்படுத்தலாகாது. தேவைக்கு ஏற்றபடி சட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக மாறிமாறி வருவது போன்று சரீரங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. வினையும் வினைக்கேற்ற விளைவும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. பல பிறவிகளுக்குப் பிறகு உடல் வாழ்க்கையிலும் வினைப்பயனிலும் சலிப்புத் தட்டுகிறது. உடல் வாழ்க்கை வேண்டாம் என்னும் விரக்தி மேலோங்குகிறது. பற்றற்ற நிலையே விரக்தி எனப்படுகிறது. பண்பட்ட அந்த ஜீவாத்மன் பிறகு பக்தியிலும் ஞானத்திலும் கருத்தைச் செலுத்தி எஞ்சியிருக்கிற வினைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளுகிறது. முக்தி அல்லது வீடுபேறு என்னும் முடிந்த நிலையை அந்த ஜீவாத்மன் எட்டுகிறது. பரத்தில் அது ஒன்றுபடுகிறது. இதுவே வாழ்க்கையின் திட்டமாதலால் தண்டனை எனும் கருத்து எழ இடமில்லை.

கேள்வி: *(511)* நமது இன்ப துன்பங்களுக்கு முற்பிறவிப் பயன் காரணமா? அல்லது இப்பிறவியில் நாம் படைத்துள்ள அறியாமை காரணமா?

பதில்: முற்பிறப்புக்கும் இப்பிறப்புக்கும் தொடர்பு உண்டு. நேற்று மனிதன் வாழ்ந்த வாழ்வுக்கும் இன்று அவன் வாழ்கிற வாழ்வுக்கும் எங்ஙனம் தொடர்பு இருக்கிறதோ அங்ஙனம் கடந்துபோன பிறப்புக்கும் இப்பொழுது இருக்கிற பிறப்புக்கும் இடையில் தொடர்பு இருக்கிறது. நேற்றுச் செய்த தகாத செயல் ஒன்றைக் குறித்து இன்றைக்கு நாம் வருந்துவதுண்டு. ஆனால் முற்பிறப்பில் நாம் செய்த செயல்கள் இப்பொழுது

ஞாபகத்தில் இல்லை. ஆதலால் அதைக்குறித்து வருத்தம் எப்படி வரக்கூடும் என்ற ஐயம் எழலாம். முற்பிறப்பில் செய்த செயல்களெல்லாம் இப்பிறப்பில் அவனுடைய இயல்பாக வடிவெடுக்கிறது. இன்னாதது செய்வது ஒருவனுடைய இயல்பு. இனியதையே செய்வது இன்னொருவனுடைய இயல்பு. இந்த இயல்புகள் பூர்வஜன்ம வாசனைகளாக வந்து அமைகின்றன. பிறந்தது முதற்கொண்டு மகிழ்வுற்றிருப்பதும் சர்வகாலமும் அழுது கொண்டேயிருப்பதும் முற்பிறப்பில் பெற்ற வாசனைகளின் விளைவாம்.

இனி, பிராரப்த கர்மம் ஒன்று உண்டு. பிராரப்த கர்மத்திற்கேற்ப ஒவ்வொரு ஜீவனும் பிறப்பு எடுக்கிறான். பிராரப்த கர்மத்திற்கேற்ற ஆயுளை அவன் பெறுகிறான். பிராரப்த கர்மத்திற்கேற்ப அவன் அனுகூலமாக சூழ்நிலைகளை அல்லது பிரதிகூலமான சூழ்நிலைகளைப் பெறுகிறான். ஆகவே பிராரப்த கர்மத்தை இப்பிறவிக்குரிய மூலதனம் எனலாம். அதை நல்லதாகத் திருத்தியமைக்கவோ மேன்மேலும் கேடுடையதாகப் பாழ்படுத்தவோ மனிதனுக்கு இயலுகிறது. நல்லதாகத் திருத்தியமைப்பது நல்லறிவின் செயல். பாழ்படுத்துவது அறியாமையின் செயல். ஆகவே நல்லறிவைக்கொண்டு மிகமிகக் கேடான வாழ்க்கைப் பயன்களையும் நல்லவைகளாகத் திருத்தியமைக்க மனிதனுக்கு இயலுகிறது. வசதியான வாழ்க்கைப் பயன்களையும் பாழாக்கித் துன்புறுவதும் மனிதனுடைய செயலாகிறது. ஆக, தன்னை எடுக்கவோ மேலும் கெடுக்கவோ மனிதனுக்கு இயலுகிறது. தன்னைக் கெடுப்பதால் மனிதன் துன்புறுகிறான்; எடுப்பதால் இன்புறுகிறான். ஆதலால் இப்பொழுது நாம் படைத்துள்ள நல்லறிவைக் கொண்டு பழையவை புதியவையாகிய எல்லாச் சூழ்நிலைகளையும் நமக்கு நலம் தருபவைகளாக மாற்றிக்கொள்ள முடியும். இன்புற்று இருப்பதும் துன்புற்று இருப்பதும் நம் கைவசத்தில்தான் உள்ளது.

கேள்வி: *(512)* தலைவிதி என்றால் என்ன? நல்லவை நிகழ்ந்தால் அவை கடவுள் அருளால் நிகழ்ந்தவை என்றும், தீயவை நிகழ்ந்தால் அவை நம் தலைவிதி என்றும் இயம்புகிறோம். இது பொருந்துமா?

பதில்: விதியென்னும் சொல்லை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். இயற்கையின் நடைமுறை விதியெனப் படுகிறது. சட்டதிட்டம் என்பது விதியின் ஒரு பொருள். ஆட்சி இங்ஙனம் நிகழவேண்டுமென்று ஆளுபவர் விதிக்கின் றனர். அவ்விதியினின்று அறிவுடையோர் பிசகுவதில்லை. ஆக, தன்னுடைய நலனுக்காக மனிதன் அமைத்துக்கொள்ளும் சட்ட திட்டங்கள் விதிகளாகின்றன.

இயற்கையின் நடைமுறை நியதியெனப்படுகிறது. மானுட சட்ட திட்டங்களை மாற்ற முடியும். இயற்கையின் நியதியை மாற்ற முடியாது. சூரியன் கிழக்கே உதிக்கிறது. மேற்கே படிகிறது. இது இயற்கையின் நியதி. தீ எரிக்கிறது. நீர் நனைக்கிறது. இங்ஙனம் இயற்கையில் நிகழ்வன யாவும் இயற்கையின் விதிகளாம். செயற்கை விதி மாறுகிறது. இயற்கை விதி மாறுவதில்லை.

மனிதனுடைய ஜீவிதத்தில் இயற்கை விதி, செயற்கை விதி ஆகிய இரண்டும் கலந்திருக்கின்றன. வினைப்பயன் என்பதும் விதிக்கு ஒரு விளக்கமாம். காரண காரியமாக மனிதனுடைய கர்மம் நிகழ்ந்து வருகின்றது. தன்னுடைய முன்னேற்றத்துக்கு ஏதுவான கர்மம் நல்வினையென்றோ புண்ணியம் என்றோ பகரப்படுகிறது. தான் தாழ்வுறுவதற்கு ஏதுவான கர்மம் தீவினையென்றோ பாபம் என்றோ பகரப் படுகிறது. ஒருவன் முற்பிறப்பில் செய்த வினையின் பயன் பிற்பிறப்பில் வந்தமைகிறது. முற்பிறப்பில் செய்த நல்வினை பிற்பிறப்பில் நலனைத் தருகிறது. முற்பிறப்பில் செய்த தீவினை பிற்பிறப்பில் தீமையை விளைவிக்கிறது. நல்வினை தீவினை ஆகிய இரண்டும் விதியில் அடங்கி இருக்கின்றன. மக்களில் பெரும்பான்மையோர் தீவினையைத் தலைவிதி என்கின்றனர். உண்மையில் நல்வினை தீவினை ஆகிய இரண்டும் தலைவிதி களேயாம். பின்பு தலைவிதியென்று பகர்வதற்குப் பதிலாக வினைப்பயன் என்றோ, கர்மத்தின் பாங்கு என்றோ பகருவது முறை. ஆக விதியென்னும் சொல்லுக்குப் பாங்கு என்பதுவும் ஒரு பொருளாம்.

வினைக்கேற்ற வினைப்பயன் வந்தமைவது விதி அல்லது சிருஷ்டியின் நியதி. விதி பிசகாதிருக்கும்படி விதித்தவனாகிய

சிருஷ்டி கர்த்தா பார்த்துக்கொள்ளுகிறான். ஆக, நலனைத் தருவதும், தீங்கைத் தருவதும் படைத்தவனுடைய செயல்களாத லால் அவனுடைய செயலில் பட்சபாதமில்லை. அவரவர் செயலுக்கேற்ற வினைப்பயனை விதி வழுவாது படைத்தவன் கொடுத்தருள்கின்றான். இதுவே விதியைப்பற்றிய உண்மை. ஆதலால் தலைவிதி என்னும் சொல்லை அறிவுடையோர் இயம்பலாகாது. நலமே வாய்த்தாலும், கேடே வாய்த்தாலும்; நலம் கேடு இரண்டும் கலந்தே வாய்த்தாலும் அவரவர் வினைப்பயன் விதி பிசகாது வந்து அமைகிறது என்று பொருள்படுத்த வேண்டும். முற்பிறப்பில் செய்த தீவினைப்பயன் கேடாக இப்பொழுது வாய்க்கலாம். அதைத் தவிர்க்க முடியாது. ஆனால் அதன் கொடுமையை இப்பொழுது நல்வினை செய்வதன் வாயிலாகக் குறைக்கலாம். சில வேளைகளில் தீவினைப்பயனை அறவே மாற்றியமைக்கவும் முடிகிறது. விதியின் போக்கை உள்ளபடி அறிகிறவர்களுக்கு இது சாத்தியமாகிறது. இறைவன் இருவினையிலும் சம்பந்தப் பட்டவனல்லன். அவரவர் வினைக்கேற்ற வினைப்பயனை நல்குதல் என்னும் விதியை அவன் முறையாகப் பார்த்துக் கொள்கிறான்.

தீவினையை இரும்பு விலங்கு என்றால் நல்வினையைப் பொன்விலங்கு எனப் பகரலாம். நல்வினையைக்கொண்டு தீவினையின் வேகத்தைக் குறைக்கவேண்டும். பிறகு நல்வினை யையும் கடந்து வினைக்கு அப்பாற்பட்ட நிலையை அடைந்தாக வேண்டும். நல்வினை தீவினை ஆகிய இரண்டுமே பிறப்புக்கு வித்துக்களாக இருக்கின்றன. ஆகையால்தான் அவ்விருவினை களும் இருள்சேர் இருவினைகள் என்று பகரப்படுகின்றன. இவ்விரு வினைகளையும் கடப்பதுதான் வாழ்க்கையின் லட்சியமாகின்றது. இவ்விருவினைகளும் நம்மைச் சார்ந்திருப் பதற்கு நம்முடைய அறியாமையே காரணமாகும். இறைவனை வழுத்துவதன் மூலம் நம்முடைய அறியாமை நீங்குகிறது. அப்பொழுது இருவினைகளும் நம்மைச் சார்வதில்லை.

"இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பது குறள்.

கேள்வி: *(513)* அதிஷ்டம் என்றால் என்ன? அதனால் பிறருக்குத் தொல்லை உண்டா?

பதில்: அதிஷ்டம், துரதிஷ்டம் என்ற இரண்டு உண்டு. நல்வினையின் விளைவு அதிஷ்டம். தீயவினையின் விளைவு துரதிஷ்டம். நாம் முன்பு நல்வினையும் செய்திருப்போம், தீவினையும் செய்திருப்போம். அவை பயன்தருகிறபொழுது நமக்கு இன்பமோ, துன்பமோ வருகின்றது. திடீரென்று ஒருவன் பணக்காரனாகி விடுகிறான். அவனை அதிஷ்டசாலி என்கின் றோம். திடீரென்று ஒருவன் ஏழையாகி விடுகின்றான் அது அவனுக்கு வந்த துரதிஷ்டம் என்கின்றோம். நம் வாழ்வில் நம் அறிவுக்கு எட்டிய பகுதி மிகக் குறைவு. நம் அறிவுக்கு எட்டாத பகுதி மிகவும் அதிகம். அறிவுக்கு எட்டிய பகுதியி லிருந்து வரும் விளைவைக் குறித்து நாம் வியப்படைவதில்லை. நம் அறிவுக்கு எட்டாத பகுதியிலிருந்து வரும் விளைவைக் குறித்துத்தான் நாம் வியப்படைகின்றோம். ஆனால் அதிஷ்டம், துரதிஷ்டம் ஆகிய இரண்டுக்கும் நாம் செய்த வினையே காரணமாகும்.

நிலத்தில் தானியத்தை விதைக்கின்றோம். குப்பையோடு கலந்து முள் விதையும் நிலத்தின் மண்ணோடு சேர்கிறது. மழை பொழிந்த பின் தானியமும் முளைத்து வருகிறது. முட்செடியும் முளைத்து வருகிறது. இரண்டு விதைகளும் காத்திருந்து மழை பெய்தவுடன் இரண்டும் முளைத்து வருகின்றன. நாம் செய்த வினைகளின் விளைவு உள்ளத்தில் புதைந்திருந்து தக்க சூழ்நிலை வருகிறபொழுது அவை செயலாகப் பரிணமிக்கின்றன. அச்சம் நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்பொழுது காட்டில் ஒரு புலியைக் கண்டால் அச்ச உணர்வு செயலாகப் பரிணமிக்கிறது. உள்ளத்தில் காமம் இருக்கும்பொழுது கட்டழகோடு கூடிய வடிவங்களைப் பார்க்கும்பொழுது காம உணர்வு தலையெடுக்கிறது. உள்ளத்தில் பக்தி உணர்வு இருக்கும்பொழுது தெய்வீகச் சூழ்நிலையில் பக்தி உணர்வு மேலோங்குகிறது. கண்ணப்பன் காளஹஸ்தியில் குடுமித் தேவரைப் பார்த்தபொழுது அவர் உள்ளத்திலிருந்த பக்தி உணர்வு மேலோங்கிக் காளத்தியப்பன் மீது ஆராத அன்பு வைத்தார்.

சூழ்நிலையை அனுசரித்து நம்முடைய வினையின் விளைவு வேலை செய்ய ஆரம்பிக்கும். தீயவினையின் விளைவு செயலுக்கு வரும்பொழுது அதை எதிர்த்துப் போராடி வெல்ல வேண்டும். நல்வினையின் விளைவு செயலுக்கு வரும்பொழுது நாம் பிறருக்குப் பயன்படும்படியாக வாழ்ந்து நல்லியல்பை வலிவுடையதாக்கவேண்டும். நம்முடைய தீவினையினால் பிறருக்குத் தீங்கு வராதும்; நம்முடைய நல்வினையினால் பிறருக்கு நலம் வரும்படியும் நாம் நடந்துகொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். அதிஷ்டம் வந்தாலும், துரதிஷ்டம் வந்தாலும் பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தரக்கூடாது.

கேள்வி: *(514)* முன்னோர் செய்த கர்மம் பின்னோர்களைச் சார்கின்றது என்பர். இது சரியா? அவரவரே அனுபவித்த பின்னர், பின்னவர்களை எப்படிச் சாரும்?

பதில்: ஒருவன் சம்பாதித்த செல்வத்தை இன்னொருவனுக்கு உரியதாக்கலாம். ஆனால் ஒருவன் கற்ற கல்வியை இன்னொருவனிடம் ஒப்படைக்க முடியாது. கல்வி வேண்டுகிறவர்கள் அவரவர்களே அதைத் தேடிக்கொள்ளவேண்டும். கர்மத்தின் போக்கு கல்வியின் போக்கைவிடக் கண்டிப்பானது. ஒருவன் புரிகிற கர்மத்துக்கு அவனே பொறுப்பாளி. இன்னொருவனிடம் அவன் அதை ஈடுவைக்க முடியாது. ஒருவன் உண்கிற உணவை அவனே செரிக்கவேண்டும். ஒருவனுக்காக இன்னொருவ்ன் உணவு உண்ணமுடியாது. ஒருவனுக்காக இன்னொருவன் உண்ட உணவை ஜீரணம் பண்ணமுடியாது. கர்மம் அத்தகையது. அவரவர் கர்மத்தை அவரவரே அனுபவிக்கின்றனர். பிறகு இதை ஒட்டிய கோட்பாடு ஒன்று உளது. நல்லவர்களுக்கு நல்லவன் மகப்பேறாக வாய்க்கிறான். கெட்டவனுக்குக் கெட்டவன் மகப்பேறாக வாய்க்கிறான். மேற்போக்காகப் பார்க்கிறவர்களுக்குத் தந்தையின் கர்மத்தை மைந்தன் அனுபவிக்கிறான் என்று தோன்றுகிறது. உண்மையில் தந்தையின் கர்மத்தைத் தந்தையே அனுபவிக்கிறான். மைந்தனுடைய கர்மத்தை மைந்தனே அனுபவிக்கிறான். இயல்பில் இருவருக்குமிடையில் தொடர்பு இருக்கிறது. தந்தையின் பாங்கை ஒத்த மைந்தன் அவனுக்குப் பிள்ளையாக வாய்ப்பது இயற்கையின் நியதி.

ஆதலால் அவரவர் வினையை அவரவரே அனுபவிக்கிறார்கள் என்பதும் அவரவர் வினைக்கு அவரவரே பொறுப்பாளி என்பதும் மாற்றமுடியாத இயற்கையின் நியதியாம்.

தந்தை சம்பாதித்த சொத்துச் சுகத்தை மைந்தன் அனுபவிப்பதைப் பார்க்கிறோம். தந்தையின் செல்வம் மைந்தனுக்கு உரியது ஆவதுபோன்று தந்தையின் கர்மமும் மைந்தனுக்கு உரியதாகிறது என்று சிலர் கருதுவதில் பொருள் இருக்கிறது. தந்தை தேடிய செல்வம் தந்தையின் வினைப்பயனாம். அதை அனுபவிக்க அவனுக்கு மகனாகப் பிறந்தவன் தன் பூர்வஜன்ம வினைக்கு ஏற்ப அச்சொத்துக்குச் சொந்தக்காரன் ஆகிறான். வினைப்பயனும் அதேபாங்கில் அமைகிறது. நோயாளிக்கு மகனாக வருகிறவன் நோயாளியாவது தந்தையின் நோயை முன்னிட்டு என்று எண்ணலாகாது. நோயாளியாகப் பிறந்த மகன் தன் பழவினைப் பயனை அனுபவிக்கிறான். அதற்கேற்ற தந்தைக்குப் பிள்ளையாக வாய்க்கலானான். ஆக, அவரவர் வினையையே அவரவர் அனுபவிக்கின்றனர்.

கேள்வி: *(515)* தர்மம் செய்ய மனமில்லாத செல்வந்தர் ஒருவரை நல்வழியில் பணம் செலவிடும்படி ஒருவர் தூண்டுகிறார். அப்படிச் செய்த புண்ணியத்தின் பயன் யாரைச் சேரும்?

பதில்: நல்வழியில் பணம் செலவிடும்படி நல்லான் ஒருவன் பணக்காரன் ஒருவனைத் தூண்டுகிறான். அப்படித் தூண்டியது அவன் செய்த சத்கர்மம் ஆகிறது. நல்லானால் தூண்டப் பெற்றுச் செலவிட்டது பணக்காரன் செய்த புண்ணிய கர்மமாகிறது. அவரவர் வினைப்பயனை அவரவரே அனுபவிக்கின்றனர். எப்படி ஒருவனுக்காக இன்னொருவன் உணவு உண்ண முடியாதோ, கல்வி கற்க முடியாதோ அப்படி ஒருவனுக்காக மற்றொருவன் புண்ணியத்தைத் தேடித்தரமுடியாது. “தானே தனக்குச் சுற்றமும், தானே தனக்கு விதிவகையும்” என்பது கோட்பாடு. ஒருவனுடைய வினைப்பயனை மற்றொருவன் கூட்டவோ குறைக்கவோ முடியாது. மானுடன் ஒருவன் தான் நல்வழியில் நடந்துகொள்வது போன்று மற்றவர்களையும் நல்வழியில் தூண்டக் கடமைப்பட்டிருக்கிறான். அவன்

சொற்கேட்டு நல்வழியில் நடக்கிறவன் தனக்குத்தானே நலனைத் தேடிக்கொள்கிறான். நல்லானுடைய சொல்லைக்கேளாது தன் போக்கிலேயே கீழ்த்தரமான வாழ்க்கை வாழுகிறவன் அதற்கேற்ற வினைப்பயனைப் பெறுகிறான். ஆதலால் ஒவ்வொரு ஜீவாத் மாவும் நல்வழியில் ஏகித் தன்னை நல்லானாக்கக் கடமைப் பட்டிருக்கிறான். நலன் கேடு ஆகிய இரண்டுக்குமிடையில் வித்தியாசம் தெரியாதிருக்கிற ஒருவனைத் துஷ்டன் ஒருவன் கெட்டவழியில் நடாத்துகிறான். அந்தத் துஷ்டனுக்குக் கேடான வினைப்பயன் அதிகமாக வந்தமைகிறது. விஷயம் தெரியாத மற்றவனுக்குச் சிறிதளவு தீங்கு வருவது திண்ணம். தெரியாது தீங்கு செய்தாலும் தீவினையினின்று யாரும் தப்ப இயலாது.

கேள்வி: *(516)* நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணமிருக்கிறது. ஆயினும் உடலின் இயல்பு மனிதனைக் கெட்ட வழியிலேயே பலவந்தமாக இழுத்துச் செல்கிறது. அந்நிலையில் நல்ல எண்ணத்துக்குப் பலன் ஏதேனும் உண்டா?

பதில்: 'அறம் செய விரும்பு' என்பது கோட்பாடு. மக்களுள் பலருக்கு நலனையே புரிவதில் விருப்பமிருக்கிறது. ஆயினும் ஜன்மாந்தர வாசனையினால் உடலின் போக்கு மற்றொருவிதமாய் இருக்கிறது. அதன் போக்குக்குப் பலர் அடிமைகளாகின்றனர். சிந்தனையும் செயலும் முரண்படுகின்றன. நல்ல சிந்தனை; பொருந்தாத செயல் இந்நிலையில் பலர் இருக்கின்றனர். நாளடைவில் இவர்களுடைய சிந்தனை வலிவுபெறும். உடலின் கீழாம் செயல் சோர்வடையும். பிறகு எண்ணம் முற்றிலும் திண்ணியதாகும் பொழுது உடலும் அதற்கு உட்பட்டு நடக்கும். ஆதலால் எண்ணத்தை யாண்டும் மேல் நிலையில் வைத்திருக்கிறவர்கள் நாளடைவில் திருந்தியமைந்து மேலானவர்கள் ஆவார்கள். செயலிலும் சிறந்தது சிந்தனை என்பதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(517)* விதியை மதியால் மாற்ற முடியுமா?

பதில்: நாம் உண்கிற உணவு இரத்தமாக மாறுகிறது. இரத்தமாக மாறியது போக மீதி மலமாக மாறி வெளியே

வருகிறது. இரத்தமாக மாறியது உடல் வளர்ச்சிக்கும் உடல் பலத்துக்கும் பயன்படுகிறது. நாம் செய்கின்ற வினைகள் மிக நுண்ணியதாகி நம்முடைய இயல்பாக மாறுகிறது. அப்படி இயல்பாக மாறியதுபோக மீதி அவ்வப்பொழுது இன்ப மாகவோ, துன்பமாகவோ வடிவெடுத்துவிடுகிறது. இயல்பாக மாறிய பகுதி நம்மை இயக்கி வருகிறது. உணவு இரத்தமாக மாறிவிட்டபின் அந்த உடலை விட்டுப் பிரிப்பது கஷ்டம். வினை இயல்பாக மாறிவிட்ட பிறகு அதை அழிப்பது கஷ்டம். இயல்பாக மாறிய வினையைத்தான் விதி என்று அழைக்கின்றோம்.

விதி அல்லது இயல்பு வலிவு மிக வாய்ந்தது. அதை அழிப்பதோ வெல்லுவதோ சுலபமன்று. ஒரு செயலில் மனது ஆழ்ந்து ஈடுபட்டு அதை அடிக்கடி சிந்திக்கும்பொழுது அச்செயல் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துவிடுகிறது. அதுதான் இயல்பாக மாறி அமைகிறது. பல ஜன்மங்களில் நம் உள்ளத்தில் பதிந்து இயல்பாக மாறியது நம்மை இயக்கும் சக்தியாக இருந்து வருகிறது. காமம் என்பது ஊழ்வினையின் பயன். ஸ்தாவரமாக இருந்த நிலையிலிருந்து நாம் எடுத்த பிறப்புக்களில் எல்லாம் காமத்தை வளர்த்து வந்திருக்கின்றோம். அங்ஙனம் பொருள்பற்றையும் வளர்த்து வந்திருக்கின்றோம். காமமும் காஞ்சனமும் நம்முடைய இயல்பாக நம்மை இயக்கி வருகின்றன. அவ்விரண்டு ஆசைகளையும் அழிக்கவேண்டு மென்பது பரமஹம்சரின் உபதேசம்.

காமத்தை ஈசுவர பக்தியாக மாற்றி அமைக்கலாம். உலகப் பொருள்கள் தமக்குரியவை என்று எண்ணாமல் ஈசனுடைய சொத்து என்று எண்ணி அவற்றை உலக நன்மைக் காகப் பயன்படுத்தும்பொழுது பொருள்பற்றுக் குறைகிறது. காமத்தைப் பக்தியாகவும், பொருள்பற்றைத் தியாகமாகவும் மாற்றுகின்ற பொழுதுதான் நல்லியல்பு நம்மிடத்தில் உருவாகிறது. உலக சம்பந்தமான இயல்பைக் கெட்ட இயல்பு என்றும், தெய்வ சம்பந்தமான இயல்பை நல்லியல்பு என்றும் பகரலாம். பஞ் சேந்திரியங்கள் மூலமாக உலகத்தின்மீது பற்றுவைத்து நாம் செய்த செயல்களெல்லாம் கெட்ட இயல்பாக உள்ளத்தில் வடி வெடுத்திருக்கின்றன. இக்கெட்ட இயல்பை உண்டாக்கியவர்கள்

நாமே. இனி, நம்முடைய விவேகம் அல்லது மதியைப் பயன் படுத்தி இக்கெட்ட இயல்பை நல்லியல்பாக மாற்றி அமைக்க வேண்டும். இதை நாம்தாம் செய்தாகவேண்டும். நமக்காகப் பிறர் யாரும் செய்யமுடியாது. நாம் உண்ட உணவை நமக்காகப் பிறர் ஜீரணம் பண்ணமுடியாது. அதுபோன்று நாம் உண்டு பண்ணிக்கொண்ட விதியை நாமே மாற்றி அமைத்தாக வேண்டும். நமக்காக நம் விதியைப் பிறர் மாற்றி அமைக்க முடியாது.

உலகம் இன்பம் தரக்கூடியது என்று எண்ணி இந்திரியங் களையும் மனதையும் உலகத்தின் பால் செலுத்தி நம் மனதில் பதிவுகளை வாங்கி அப்பதிவுகளிலிருந்து லௌகிக இயல்பை உள்ளத்தில் உருவாக்கி இருக்கிறோம். அந்த இயல்புதான் உலகம் சாசுவதமானது என்றும், உலகத்திலுள்ள உறவுமுறைகள் எல்லாம் நிலையானவை என்றும் நமக்குக் கற்பித்து வருகின்றது. உலகத்தின் மீது பற்று வைப்பதற்கு யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. ஆண்கள் பெண்பாலர்களைக் காமுறுவதும், பெண்கள் ஆண்பாலர்களைக் காமுறுவதும் சொல்லித்தராம லேயே நிகழ்ந்து வருகின்றன. அதைப் புகட்டுவது விதி அல்லது இயல்பு ஆகும். லௌகீக இயல்புக்கு நாம் அடிமைபட்டுக் கிடக்கின்றோம். அவ்வியல்பு நம் உள்ளத்தில் பெரிய மயக்கத்தை உண்டுபண்ணி வருகிறது. இதைத்தான் வள்ளுவர்,

"ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"

என்று கூறியுள்ளார். ஊழை விலக்குவதற்கு வழியைக்கண்டு பிடிக்க முயன்றால் அம்முயற்சிக்குத் தடையாக ஊழ் வந்து நிற்கும். அதை அகற்றுவது மிகவும் கடினம். அதன் வலிவு பெரியது. இதுதான் வள்ளுவரின் கருத்து. வள்ளுவர் மேலும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

எனக் கூறியுள்ளார். தளராது முயல்கின்றவர்கள் விவேகத்தைக் கொண்டு பெருவலிவு வாய்ந்த ஊழையும் வென்றுவிடுகின்றனர்

என்பது வள்ளுவர் கருத்து. இனி நம்முடைய லௌகீக இயல்பைத் தெய்வீக இயல்பாக மாற்றுவதற்கு விவேகத்தைக் கொண்டு அயராது முயலவேண்டும். அப்படி முயன்றால் காமத்தையும், காஞ்சனத்தையும் பக்தியாகவும், தியாகமாகவும் மாற்றி அமைக்கலாம். அப்பொழுது நம்முடைய லௌகீக இயல்பு தெய்வீக இயல்பாக மாறி அமைந்துவிடும். எனவே விதியை மதியைக்கொண்டு நம்மால் மாற்றி அமைக்கமுடியும்.

கேள்வி: *(518)* "விதியை மதியால் வெல்லலாம்" விதி முன்னமே தெரிந்திருந்தால் வெல்லுவது எளிது. ஏன் அதனை அறியாதிருக்கிறோம்?

பதில்: "விதியை மதியால் வெல்லலாம்" என்னும் கோட்பாட்டைச் சரியாக அறிந்துகொள்ள வேண்டும். விதி என்னும் சொல், இயற்கையின் சட்டதிட்டம் எனப் பொருள் படுகிறது. இயற்கைக்கே விதியென்பது மற்றொரு பெயர். சிருஷ்டிக் கடவுளாகிய பிரம்மதேவனை விதியென்று விளக்குவது முறை. மதியென்னும் சொல் அறிவு எனப் பொருள்படுகிறது. அறிவைக்கொண்டு இயற்கையினுடைய நடைமுறையை நமக்கு ஒத்ததாகப் பயன்படுத்தலாம் என்பதே இக்கோட்பாட்டின் பொருள். இயற்கையின் நியதியை நாம் அறிந்திருக்கிறோம். மேலும் அறிந்துகொண்டும் வருகிறோம். ஆனால் விதியின் ஒரு பகுதியை நாம் அறியாதவர்களாய் இருக்கிறோம். பிறப்பெடுத்துள்ள ஒவ்வோர் உயிரும் மரணத்துக்கு உட்பட்டாக வேண்டும். இது விதி. ஆனால் நாம் எப்பொழுது சாவோம் என்பது நமக்குத் தெரியாது. தெரிந்தால் நாம் எளிதில் சாவை வெல்ல முடியும் என்னும் கருத்து இக்கேள்வியில் தொனிக்கிறது. எப்பொழுது சாவோம் என்பதையறிந்து கொண்டால் பெரும்பாலர் சாவு அடுத்து வரவரச் சோர்ந்து போய், வாழ்க்கைக்கு உதவாதவர்கள் ஆவார்கள். ஆதலால் சாவைப்பற்றி நாம் அறியாதிருப்பது பாக்கியம். நாளைக்குச் சாகப்போகிற ஒருவன் இன்றைக்குக் கண்ணுங்கருத்துமாக வாழ்க்கையில் ஈடுபடுகிறான். நாளைக்குச் சாவதைப்பற்றி இன்றைக்குத் தெளிவுற அறிவானாகில் இன்றைக்கே அவன் செத்தவன் போன்று ஆய்விடுவான். தூக்குத் தண்டனைக்கு

ஆளாயிருக்கிறவர்கள் இதற்கு எடுத்துக்காட்டு ஆகிறார்கள்.

என்றைக்குச் சாவோம் என்பதைத் தெரியாதிருந்தும் சாவை வெல்ல ஆத்ம ஞானிகளே முயலுகின்றனர். ஆத்ம ஞானம் அடைந்தவர்கள் ஆத்மா சாவதில்லை. உடல்தான் அழிகிறது என்னும் உண்மையை அறிந்து பரமானந்தத்தில் திளைத்திருக் கின்றனர். ஆதலால் அவர்கள் விதியை முற்றிலும் வென்றவர்கள் ஆகின்றனர்.

விதியை மதியால் வெல்லலாம் என்னும் கோட்பாட்டை பௌதிக விஞ்ஞானம் நன்கு நிரூபித்து வருகிறது. நடந்து காசிக்குச் சென்றுவர ஆறுமாதம் பிடிக்கும் என்பது விதி. ஆனால் ஆகாய விமானத்தில் ஒரேநாளில் காசிக்குச் சென்றுத் திரும்பலாம். இவ்விதத்தில் மனிதன் விதியை மதியால் வென்று வருகிறான். குளிர்ப்பிரதேசத்தில் மனிதன் குளிரால் செத்துப் போய்விடுவான். ஆனால் அப்பிரதேசத்திற்கேற்ற உடை, வீடு முதலியவைகளை அமைத்துக்கொண்டு மனிதன் குளிரைச் சமாளிக்கிறான். இம்முறையில் அவன் விதியை மதியால் வென்று வருகிறான். நோய் நமக்கு எப்பொழுது வரும் என்று தெரியாது. ஆயினும் நோயைத் தடுக்க அம்மை குத்துதல் போன்ற முறைகளைக் கையாளுகிறோம். வந்த நோயை நீக்குதற்கு நல்ல மருத்துவ முறைகள் இருக்கின்றன. இம்முறையிலும் நாம் விதியை மதியால் வென்று வருகிறோம். ஆக, ஒவ்வொரு படித்தரத்திலும் நாம் விதியின் போக்கை அறிந்து மதியால் அதை வென்று வருகிறோம். நாம் அதை அறியாதிருக்கிறோம் என்பது உண்மையன்று.

கேள்வி: *(519)* விதியை வெல்லுவது எப்படி?

பதில்: விதி என்பதும், ஊழ்வினை என்பதும், இயல்பு என்பதும் ஒன்றே. ஒவ்வொரு செயலும் அகங்காரத்தோடு செய்யப்படும்பொழுது மனதில் அது பதிவை உண்டாக்கு கின்றது. அப்பதிவுகளின் தொகுப்பு வினைப்பயனாக வருகிறது. நாம் செய்த வினையின் பயனை நாம்தாம் அனுபவித்தாக வேண்டும். ஒருவர் செய்த வினையின் பயனை மற்றவர்கள் அனுபவிப்பதில்லை. சில செயல்களின் பதிவுகள் மேலெழுந்த வாறு இருந்துகொண்டு இப்பிறவியிலேயே உடனுக்குடனோ

காலம் தாழ்ந்தோ பயன்கொடுத்து விடுகின்றன. சில பதிவுகள் உள்ளத்தின் ஆழ்பகுதியில் இடம்பெற்றுப் பல பிறப்புகளுக்குக் காரணமாக இருக்கின்றன. அந்த வினையைத்தான் இயல்பு என்றோ ஊழ்வினை என்றோ சொல்கின்றோம். பழைய வாசனை என்றும் அதைச் சொல்வதுண்டு.

விதி அல்லது வாசனையின் மூலம் தூண்டப்பட்டு உள்ளத்தில் எழும் எண்ணங்களும் உணர்ச்சிகளும் நம்முடைய அனுமதியில்லாமல் தாமாகவே எழுகின்றன. அவை நம் அறிவையே மயக்கிவிடுகின்றன. உதாரணமாக உடல் அழகில் உண்டாகும் காமவாசனை பல பிறவிகளில் நம்முடன் தொடர்ந்து வந்ததாகும். அந்தக் காமவாசனையை வெல்லுவது சுலபமன்று. விசுவாமித்திரர் போன்ற மஹரிஷியையே அது மயக்கிவிட்டதாக நாம் அறிகின்றோம். மனிதன் ஊழால் தூண்டப்பெறுகிறபொழுது அத்தூண்டுதலை மீற முடியாது தவறு செய்து, பிறகு வருந்துகின்றான். எத்தகைய புத்திக்கூர்மை படைத்தவர்களும் ஊழ் அல்லது வாசனையின் தூண்டுதலை வெல்ல முடியாது.

நல்ல வாசனை அல்லது நல்ல ஊழாக இருப்பது நல்ல செயல் செய்யத் தூண்டுகிறது. கெட்ட ஊழ் அல்லது கெட்ட வாசனையாக இருப்பது கேடான செயல் செய்யத் தூண்டுகிறது. மனதிலுள்ள கெட்ட சம்ஸ்காரங்களையெல்லாம் நல்ல சம்ஸ்காரங்களாக மாற்றுவதைத்தான் ஆத்ம சாதனம் என்கிறோம். நல்ல செயல்களைத் திருப்பித் திருப்பிச் செய்யும்பொழுது நல்ல சம்ஸ்காரங்களுடைய வேகத்தைக் குறைத்து இறுதியில் அவைகளை அழித்து விடுகின்றன. இடைவிடாத ஈசுவர சிந்தனை தீய சம்ஸ்காரத்தின் வேகத்தைக் குறைக்க மிகவும் பயன்படுகிறது. ஈசுவரனைக் குறித்த ஆழ்ந்த தியானம் மனதின் ஆழ்பகுதியிலுள்ள வாசனையையும் அழித்துத்தள்ளுகிறது. வாசனை அழியும்பொழுது ஈசுவரனுடைய அருள் நமக்குப் பரிபூரணமாகக் கிட்டுகிறது. அப்பொழுதுதான் விதியை முற்றும் வெல்லமுடிகிறது.

கேள்வி: (520) **மனிதனுடைய வாழ்க்கையை அவன் தானே அமைத்துக்கொள்கிறானா அல்லது கடவுளால் அது**

அமைக்கப்படுகிறதா? இக்குழப்பத்திற்கு விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: இக்கேள்விக்கு விடை சொல்லுதற்கு முன்பு கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள இணக்கத்தை முதலில் ஆராயவேண்டும். குயவன் மட்பாண்டத்தை வனைகிறான். வனைகிற குயவன் வேறு, வனையப்பட்ட மட்பாண்டம் வேறு. சிருஷ்டிக்கும், சிருஷ்டி கர்த்தாவுக்கும் இடையில் அத்தகைய வேற்றுமை இல்லை. சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளே சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமாகவும் அதிலுள்ள உயிர் வகைகளாகவும் இலங்குகிறார். "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்பது கோட்பாடு. பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் அனைத்துமாய் கடவுள் அமைந்துள்ளார். உயிர் வகைகள் எண்ணிக்கையில் அடங்கா. சிற்றுயிர், பேருயிர் ஆகிய உயிர்கள் அனைத்தும் கடவுளின் பலதரப்பட்ட தோற்றங்களாம். இனி அந்தந்த உயிர் தன்னிடத்து அமைந்துள்ள ஆற்றலைக் கொண்டு வளர்ந்து வருகிறது. கடவுள் அந்த உயிர்களுக்குப் புறம்பாக இருந்துகொண்டு அவைகளின் வாழ்க்கையையும் வளர்ச்சியையும் செய்து வருகிறார் என்று வைத்துக்கொண்டால் அதில் குறை ஒன்று உண்டாகிறது. ஒரு செடியை அதிக வலிவுடையதாகவும், மற்றொரு செடியை வலிவு அற்றதாகவும் கடவுள் ஏன் படைத்தார் என்னும் வினாவுக்கு விடைகாண முடியாது. ஒரு மனிதனை மேலோனாகவும், மற்றொரு மனிதனைக் கீழோனாகவும் கடவுள் ஏன் அமைத்தார் என்னும் கேள்விக்கும் விடைகாண முடியாது. அத்தனை உயிர்களாகவும் கடவுள் ஆனார். அந்தந்த உயிர் அதனிடத்துள்ள ஆற்றலுக்கு ஏற்றவாறு வளர்ச்சி அடைந்து வருகிறது. இதை வேறொரு பாங்கில் பகருமிடத்து ஒவ்வொரு ஜீவனும் தன் வினையின் வாயிலாகத் தன்னை விளக்குகிறான். வினையைத் திருத்தி அமைப்பதற்கு ஏற்ப ஓர் உயிர் உயர்நிலை எய்துகிறது. இதே கோட்பாடு மனிதனுக்கும் உரியது ஆகிறது. தன்னுடைய ஆற்றலுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை மனிதன் வகைப்படுத்துகிறான். ஆற்றலை வளர்க்க மனிதனுக்கு இயலுகிறது; ஆற்றலைப் பாழ்படுத்தவும் அவனுக்கு இயலுகிறது. எல்லா உயிர்களும் படைத்துள்ள ஆற்றல்கள் அனைத்தும் கடவுளிடத்திருந்து

வந்தவைகள். அந்தந்த உயிர் தன் திறமைக்கேற்றவாறு மேன்மை யுறவோ, கீழ்மையுறவோ செய்கிறது. ஆதலால் மனிதனுடைய வாழ்க்கையை அவன் தனக்குத்தானே அமைத்துக் கொண்டான் என்பதுதான் உண்மை. வாழ்வாங்கு வாழ்வதன் வாயிலாகக் கடவுளிடத்திருந்து அவன் அதிக ஆற்றலைப் பெறலாம். அப்படி யானால் மனிதனுடைய வாழ்க்கைக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்னும் கேள்வி பிறக்கிறது. கடவுளிடத் திருந்து மனிதன் அதிக ஆற்றலை பெறமுடியும். அது அவன் வைக்கிற இணக்கத்திற்கு ஏற்றவாறு அமைகிறது. இணக்கத்தைப் பொருத்தமாக அமைத்து வேண்டியவாறு தன் ஆற்றலை மனிதன் அதிகப்படுத்தலாம். மின்சக்தி ஒரேபாங்கில் எல்லா மின்விளக்குகளுக்கும் வருகிறது. மின்விளக்குகளின் அமைப்பில் உள்ள தாரதம்மியத்துக்கு ஏற்ப ஒன்று அதிக வெளிச்சம் தருகிறது. மற்றது குறைந்த வெளிச்சம் தருகிறது. அங்ஙனம் மக்களிடத்து ஆற்றல் வேற்றுமை அவரவர் பரிபக்குவத்துக்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறது.

கேள்வி: (521) ஒருவன் செயலுக்குக் காரணம் விதியா? ஜாதகம் கூறுகின்றபடி கிரகங்களின் ஆதிக்கமா? சூழ்நிலையா?

பதில்: நாள்தோறும் மனிதன் செய்து வருகிற செயல் களுக்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு இருக்கின்றன. காரண காரியமாகவே செயல்கள் யாவும் நிகழ்ந்து வருகின்றன. அப்போதைக்கப்போது மனிதனுடைய உள்ளத்தில் எழுகின்ற ஆசை உடனடியாக அமைந்த காரணமாகிறது. பிராரப்தம் அல்லது பழவினையின் விளைவு இரண்டாவது காரணமாகிறது. நல்ல பட்சணம் சாப்பிடவேண்டுமென்று காலையில் பசியுடன் எழுந்திருக்கிற மனிதன் தீர்மானம் பண்ணுகிறான். பட்சணம் பண்ணுவதற்கு ஏற்ற பொருள்களும் ஆள் வசதியும் அவனுக்கு அமைந்திருக்கின்றன. ஆதலால் காலையில் எழுந்ததும் எண்ணி யதை எண்ணியாங்கு அவன் செய்து முடிக்கிறான். இங்ஙனம் சில வினைப்பயன்கள் அப்போதைக்கப்போது எழுகின்ற ஆசையின் விளைவாக வாய்க்கின்றன. இத்தகைய வினை களுக்குக் காரணமாயிருப்பது அப்போதைக்கப்போது உள்ளத்தில்

உருவெடுக்கிற சாமானியமான ஆசைகளாம். சாமானியமான ஆசைகளை நிறைவேற்றுவதற்கு நெடுநாள் காத்திருக்க வேண்டியதில்லை. அவைகளுக்காக மற்றொரு ஜன்மம் எடுக்க வேண்டிய அவசியமுமில்லை. ஆக, சில ஆசைகளை அப் போதைக்கப்போது நிறைவேற்றிக் கொள்ளவல்லவனாக மனிதன் இருக்கிறான்.

உடல் எடுத்து வாழ்ந்து வருகிற மனிதன் சில வருஷங் களுக்குப் பிறகு ஏதோ சில கொடிய நோய்களுக்கு ஆளாகிறான். அந்நோய்களுக்கு ஏற்ற செயல்களை அம்மனிதன் இந்த ஜன்மத்தில் செய்யவில்லை. அப்படியிருந்தும் நோய் வருவது பிராரப்த கர்மத்தின் விளைவாகும். மற்றொரு மனித னுக்கு வாழ்நாளில் திடீரென்று செல்வம் வந்து வாய்க்கிறது. அதற்காகவென்று அவன் இந்த ஜன்மத்தில் முயற்சி எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. அன்னவனுக்கு எதிர்பாராதபடி செல்வம் வாய்ப்பதும் பிராரப்த கர்மத்தின் விளைவாம். ஆக, பழவினைப் பயனாக நலன் கேடு ஆகியவைகள் தற்செயலாய் வாய்க்கின்றன. அவைகளைப் பிராரப்தத்தோடு இணைத்து வைப்பதே முறையாகும்.

விதி என்பதும் இயற்கையின் நடைமுறையென்பதும் ஒன்றேயாம். இயற்கையின் நடைமுறையில் வருவன யாவும் காரண காரியங்களாக அமைந்திருக்கின்றன. காரணத்தினின்று காரியம் பிசகுவதில்லை. வினைக்கேற்ற வினைப்பயன் இதன் பொருள். மனிதன் செய்கின்ற அல்லது செய்திருந்த வினைக் கேற்ற வினைப்பயன் தக்க தருணத்தில் நிறைவேறுகிறது. உடனுக்குடனே நிறைவேறுகின்ற கர்மபலன் உண்டு. எதிர் காலத்திலோ அதற்கடுத்தோ நிறைவேறுகின்ற கர்மபலன்கள் இருக்கின்றன. இந்த நியதியினின்று இயற்கை பிசகுவதில்லை. ஆதலால் நெறிபிறழாத வினைப்பயனுக்கு விதி என்னும் பெயர் வந்துள்ளது. நலம் கேடு யாவும் விதியில் அடங்கியிருக்கின்றன.

ஜோதிட சாஸ்திரம் உண்மை. அந்தந்தக் கிரகங்கள் ஆதிக் கத்துக்கு வருகிறபொழுது அவைகளுக்கேற்ற வினைப்பயன்களும் ஒழுங்காக இயற்கையில் நடைபெறுகின்றன. எந்த ஜீவன் எந்தக் காலத்தில் பிறப்பெடுத்தானோ அந்தக் காலத்தை அனு சரித்து இயங்குகின்ற கிரகங்களின் ஆதிக்கம் மனிதனிடத்தும்

பிரதிபலிக்கிறது. அப்படிப் பிரதிபலிப்பது வெறும் குருட்டு வாய்ப்பு அன்று. எந்த மனிதன் எத்தகைய வினைப்பயனைத் தான் சம்பாதித்த செல்வமாக வைத்திருக்கிறானோ அந்த வினைப்பயனுக்கேற்ற காலம் பார்த்து அவன் பிறப்பெடுக்கிறான். சில விதைகள் கோடை காலத்தில் முளைக்கின்றன. வேறு சில விதைகளோ மாரிக்காலத்திலோ அல்லது குளிர்காலத்திலோ முளைக்கின்றன. அந்தந்தக் கிரகங்களின் ஆதிக்கங்களை அனு சரித்து அவனவனுடைய வினைப்பயனை வெளிப்படுத்துதற்கு ஏற்ற காலங்களில் ஜீவாத்மாக்கள் பிறப்பெடுக்கிறார்கள். இது ஜாதகத்தைப்பற்றிய உண்மை.

சூழ்நிலைக்கும் மனிதனுடைய வாழ்க்கை முறைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இதற்குச் சான்று எடுத்துக்கொள்ள லாம். கோடைகாலத்தில் விலங்குகளின் உரோமங்கள் பெரிதும் வீழ்ந்து போகின்றன. குளிர்காலம் வருகிறபொழுது புதிய உரோமங்கள் அதிகம் வளருகின்றன. சூழ்நிலைக்கேற்ற உடல் அமைப்புக்கு இது நல்லதொரு சான்றாகிறது. மற்றொரு சான்று செழித்து நன்றாக வளரக்கூடிய செடியைப் பண்படாத நிலத்தில் நட்டால் அது ஓங்கி வளருவதில்லை. மற்றும் வலி வற்ற செடியைப் பண்படுத்திய நிலத்தில் நட்டால் அது ஓரளவு ஓங்கி வளருகிறது. நல்லார்களுக்கிடையில் வாய்த்திருக்கும் வாய்ப்பு மனிதனுக்கு அமையுமாகில் அவன் அதிகம் முயற்சி எடுத்துக்கொள்ளாது மேல்நிலைக்கு வருகிறான். அதே மனிதன் பொருந்தாத சூழ்நிலையில் வாழ்ந்து வருவானாகில் அவன் தன்னையறியாது எப்படியோ பெரிதும் கீழ்நிலைக்குப் போகிறான். ஆகவே சூழ்நிலை என்பது மனிதனை எடுக்கவோ, கெடுக்கவோ செய்கிற பெரியதொரு வாய்ப்பு ஆகும். இனி மக்களுள் மூன்று தரத்தார் இருக்கின்றனர். தலைத்தரமான மனிதன், முயற்சி மிகப் படைத்தவனாக இருக்கிறான். புதிய முயற்சியைக் கொண்டு ஏற்கனவே அமைந்துள்ள இடைஞ்சல் களைப் பெரிதும் சமாளிப்பது முயற்சியுடையவனுக்கு சாத்திய மாகிறது. இடைத்தரமான முயற்சியுடையவன் ஓரளவு இடைஞ் சல்களை மீளுகிறான். கடைத்தரமான மனிதனோ, சூழ் நிலைக்கும் பிராரப்த கர்மத்துக்கும் இயற்கையின் நியதி அல்லது விதிக்கும் உட்பட்டவனாக நலன்களையும் கேடுகளையும் ஏதோ

ஒருபோக்கில் பெற்று வருகிறான். அமைப்புகள் யாவும் பிரதி கூலமாகவே போகுமிடத்தும் முயற்சி உடையார் ஒருபொழுதும் இகழ்ச்சி அடைவதில்லை. சுய அறிவையும் முயற்சியையும் முகாமையாக வைத்துக்கொண்டு விக்கினங்களையெல்லாம் அவர்கள் பெரிதும் வெல்லுகின்றனர். இவையாவும் மானுடர் வாழ்க்கையைப்பற்றிய கோட்பாடுகளாம்.

கேள்வி: *(522)* இன்ப துன்பங்கள் வினைப்பயனா?

பதில்: இன்பமும் துன்பமும் வினையின் விளைவாம். மனிதன் கர்ம சொரூபம்., கர்மம் புரியாது அவன் கணப் பொழுதாவது உயிர் வாழ்ந்திருக்க முடியாது. பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் மனிதன் மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறான். மூச்சு விடுவது கர்மம். உணவு உண்பது கர்மம். நீர் அருந்துவது கர்மம். நீராடுவது கர்மம். சரீரத்தினுள்ளே ஜீரணக் கருவிகள் செயல்புரிந்து வருவது கர்மம். எண்ணங்களை எண்ணுவது கர்மம். உள்ளத்தினுள் உணர்ச்சி ததும்பி எழுவது கர்மம். ஆதலால் கர்மம் செய்யாது உடல் எடுத்திருக்கும் எந்த ஜீவனும் ஒரு கணப்பொழுதாவது இருக்க முடியாது. அங்ஙனம் மனிதன் புரிகிற வினைகளுள் தனக்கு அனுகூலமானவை இன்பத்தைப் பெருக்குகின்றன. பிரதிகூலமானவை துன்பத்தை வளர்க்கின்றன. இதுவே இன்ப துன்பத்தைப் பற்றிய கோட்பாடாம். ❑

28. மறுபிறப்பு

கேள்வி: *(523)* மறுபிறவி உண்டு என்பது உண்மையா? இறந்த பிறகு ஆத்மா எங்கே செல்கிறது?

பதில்: ஜீவாத்மன் திரும்பத் திரும்பப் பிறப்பதற்கும் இறப்பதற்கும் மறுபிறவி என்பது பொதுப்பெயர். புனர்ஜன்மம் என்று இது சொல்லப்படுகிறது. இந்தியாவிலுள்ள மதங்களெல்லாம் ஜீவாத்மனுக்கு மறுபிறவி உண்டு என்று சாட்டுகின்றன. ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் தோன்றிய யூத மதமும், கிறிஸ்துவ மதமும், இஸ்லாமிய மதமும் மறுபிறவியை அங்கீகரிப்பதில்லை. மனிதனுக்கு இறைவன் அருளால் ஒரே பிறவிதான் வாய்க்கிறது என்பது அம்மதங்களின் கோட்பாடு. அந்த ஒரு பிறவியை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளாதவர்கள் நரகத்தில் இடர்ப்படுவார்கள் என்பதும் அன்னவர் நம்பிக்கையாகும். அது உண்மையானால் வாழ்வில் பெரும்பாலர் தோல்வியடைவது வெளிப்படையாகும். பின்பு இந்தியாவில் தோன்றியுள்ள மதங்கள் உயிர்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து வைக்கின்றன. மரம், செடி, கொடிகளுக்கு உயிர் உண்டு. அவைகளும் ஜீவாத்மாக்களே. புழு, பூச்சி முதலியவைகளுக்கும் உயிர் உண்டு. பறவை, விலங்கு ஆகியவைகளுக்கும் உயிர் உண்டு. இவையாவும் கீழ்நிலையினின்று மேல்நிலைக்குப் பிறப்பு இறப்பு வாயிலாகப் பரிணமித்துக் கடைசியாக மானுட நிலையை எட்டுகின்றன. மானுடனோ பல பிறவிகளில் தன்னைப் பக்குவப் படுத்திக் கடவுளில் தன்னை ஒடுக்கி ஒன்றுபடுத்துகிறான். அப்படிச் செய்வதற்கு முக்தி என்று பெயர். ஆக, முக்தியடையும் வரையில் ஜீவாத்மாவுக்குப் பிறப்பும் இறப்பும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்: நீந்தார்
இறைவன் அடி சேராதார்"

என்பது மறைமொழி. கல்வியை நிறைகல்வியாக்குதற்குப் பள்ளியில் பல வகுப்புகள் அமைந்திருப்பது அவசியம். அதே விதத்தில் எண்ணிறந்த பிறவிகளில் ஜீவாத்மன் தன்னைப் பக்குவப்படுத்திப் பரத்தை அடைகிறது.

பிறக்கும் குழந்தைகள் பலப்பல பாங்குகளை வெளிப் படுத்துகின்றன. மாறுபடுகிற பாங்குகளெல்லாம் முற்பிறப்பில் செய்த வினையின் பயன்களாம். முற்பிறப்பு ஞாபகத்துக்கு வருவதில்லை. ஆனால் முற்பிறப்பில் பெற்ற அனுபவங்கள் எல்லாம் இயல்புகளாக வடிவெடுத்து மறுபிறவியில் விளங்கு கின்றன. முற்பிறப்பை அறிந்துகொள்ளுதற்கு யோக சாதனங்கள் பல உண்டு. அவைகளைப் பயின்றால் பூர்வ ஜன்ம ஞாபகம் வரும். ஆனால் அவைகளில் வீண்காலம் போக்கவேண்டாம் என்கிறது யோகசாஸ்திரம்.

இறந்த பின்னர் ஆத்மா எங்கும் செல்லுகிறதில்லை. தூங்குகிற பாங்கில் அது தோன்றாத நிலையிலிருக்கிறது. அயர்ந்து தூங்குகிற மனிதன் எங்கும் போவதில்லை. அயர்ந்த உறக்கத்தில் அவன் தன்னை மறந்த நிலையில் இருக்கிறான். அதே கோட்பாடு மரணத்துக்கும் பொருந்துகிறது. மரண தசையில் ஜீவாத்மன் மறைந்திருக்கிறான். அவன் எங்கே மறைந்திருக்கிறான்? என்னும் கேள்வி எழ அவகாசமில்லை. ஏனென்றால் இடம் என்பது மனதின் கற்பனையாம். கற்பனைக்குப் புறம்பாக இடம் இல்லை. அயர்ந்த உறக்கம் மரணத்துக்கு நிகர். விழிப்பு ஜனனத்துக்கு நிகர்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்பது குறள்.

கேள்வி: *(524)* பூர்வ ஜன்மம், மறுபிறப்பு இவைகளை உண்மை என எப்படி ஏற்றுக் கொள்வது?

பதில்: பூர்வ ஜன்மத்தை ஞாபகத்துக்குக் கொண்டு வருவதற் கேற்ற சாதன முறைகள் யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டு

இருக்கின்றன. அந்தச் சாதனங்களை அனுஷ்டித்துப் பார்த்தவர்களுக்குத் தங்களுக்குப் பிறவிகள் பல இருக்கின்றன என்னும் நம்பிக்கை வந்தது. ஆனால் இந்தச் சாதனத்தை நாம் எல்லாரும் அனுஷ்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு நேற்று நிகழ்ந்தவைகளில் பல இன்று மறந்துபட்டுப் போகின்றன. அதை முன்னிட்டு நேற்று அவைகள் நிகழவில்லை என்று நாம் மறுக்க முடியாது. புதிய பிறவி எடுத்தான பிறகு பழைய சரீரம், சூழ்நிலை ஆகிய யாவும் மறைந்து பட்டுப்போகின்றன. ஆகையினால்தான் அவைகள் நம் ஞாபகத்திற்கு எட்டுவதில்லை. அப்படி எட்டாததனால் நமக்கு நஷ்டம் ஏதுமில்லை.

இன்று இருக்கிற நாம் நேற்று இருந்தோம், நாளைக்கும் இருப்போம் என்னும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றோம். இக்கோட்பாட்டைப் பூர்வ ஜன்மத்துக்கும் இனி வரப்போகிற ஜன்மத்துக்கும் கையாளலாம். அதற்குமேல் நாம் செய்யக் கிடக்கும் முக்கியமான கடமை ஒன்று இருக்கிறது. நிகழ் காலத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ப நாம் மேன்மையுறுகிறோம் அல்லது கீழ்மையில் மூழ்குகிறோம். இப்பொழுது வாய்த்துள்ள நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். சென்றதைப் பற்றியும் இனி வருவதற்கு இருப்பதைப் பற்றியும் எண்ணி எண்ணி ஏங்கிக்கிடப்பது பொருந்தாது. எதிர்காலத்தில் நாம் இருக்கமாட்டோம் என்று வைத்துக் கொண்டாலும் நிகழ்காலத்தை நன்கு பயன்படுத்துவதற்கேற்ப நாம் மேன்மையடைவது திண்ணம்.

கேள்வி: *(525)* மறுபிறப்பு உண்டு அல்லது இல்லை என்பதை எவ்வாறு நிரூபிக்க முடியும்?

பதில்: மனிதனுக்கு ஒரே பிறப்புத்தான் உள்ளது என்று கிறிஸ்துவ மதம் பகருகிறது. ஆனால் இந்துமதக் கோட்பாட்டுப் பிரகாரம் சிற்றுயிர்கள் பலகோடிப் பிறவிகளில் சிறிது சிறிதாகப் பண்பட்டுப் படிப்படியாக மேலான பிறவிகள் எடுத்துப் பிறகு மானுட நிலையை எட்டுகின்றன. ஆதலால் ஜீவாத்மா ஒருவனுக்குப் பிறவிகள் எண்ணிக்கையில் அடங்கா என்பது இந்துமதக் கோட்பாடு. இவ்விரண்டு விதக் கொள்கைகளுள்

எது தப்பு, எது சரியென்று எதைப் பிரமாணமாக வைத்து நிர்ணயிப்பது என்பது கேள்வி.

மனிதனுக்குப் பிறவி ஒன்றுதான் உள்ளது என்னும் கோட்பாட்டை யுக்தி பூர்வமாக ஆராய்வோம். பிறப்பெடுக்கிற மானுடப் பிண்டம் ஒன்று அன்றே சாகலாம், அல்லது என்று வேண்டுமென்றாலும் சாகலாம். சிறுவன் ஒருவன் வாழ்க்கைத் தத்துவம் எதையும் அறிந்துகொள்ளுவதற்கு முன்பே மடிந்து போகிறான். செவிடனும், குருடனும் உலக நடைமுறை களை முற்றிலும் அறிந்து கொள்ளாது வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருகிறார்கள். இத்தகைய ஜீவர்களுக்குக் கிறிஸ்துவக் கடவுள் எத்தகைய கதியைக்கொடுப்பார்? மனிதனுக்கு ஒரே பிறவியைக் கொடுக்கிற அந்தக் கடவுள் ஏதோ ஒருகாலத்தில் செத்தவர்களை எழுப்பித் தீர்ப்புக்கொடுக்கிறார். நல்லவர்களைச் சொர்க்கத்திற்கும், கெட்டவர்களை நரகத்திற்கும் அவர் அனுப்பு கிறார். ஈண்டு இயம்பியுள்ள குறைநிலையிலுள்ள மக்களை அவர் என்ன செய்வார்? கிறிஸ்துவர்களிடமிருந்து இதற்கு விடை கிடையாது.

ஹிந்து மதத்தின் தத்துவ ஆராய்ச்சி இயற்கையின் நடை முறைக்கு ஒத்திருக்கிறது. பரம்பொருள் என்பது பேருயிர். அந்தப் பேருயிர் என்னும் பரவஸ்துவினின்று உயிர்வகைகள் தோன்றிப் படிப்படியாகப் பரிணமித்து மேல்நிலைக்கு வரு கின்றன. ஆதலால் ஜீவகோடிகளனைத்தும் பரவஸ்துவோடு சம்பந்தப்பட்டவைகள். அலைகளனைத்தும் கடலை ஆதாரமாகக் கொண்டிருப்பதற்கு நிகராக ஜீவகோடிகளனைத்தும் பரவஸ் துவை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கை நடை முறையில் உயிர்களனைத்துக்கும் தொடர்பு உண்டு. மடிந்து போவதை எந்த உயிரும் விரும்புவதில்லை. ஆதலால்தான் உயிர்கள் அனைத்துக்கும் மரணபயம் பொதுவானது. முன்பு பல தடவைகள் மரணத்தை அனுபவித்திருப்பதால் உயிர்கள் மரணத்தைக் குறித்துப் பயப்படுகின்றன. பல பிறவிகள் இருப் பதற்கு மரணபயம் ஒரு சான்று. அடுத்தபடியாகக் காலி மனதோடு எந்த ஜீவனும் பிறப்பெடுப்பதில்லை. ஒரு பிறவிதான் என்றால் உயிர்களுக்கிடையில் தென்படும் உயர்வுதாழ்வுக்குக் காரணம் கண்டுபிடிக்கமுடியாது. இப்பொழுது அமைந்துள்ள

வாழ்க்கையில் ஒருநாளில் பெறுகிற அனுபவம் அடுத்த நாளுக்குத் தொடர்வது போன்று ஒரு பிறவியின் அனுபவம் மறுபிறவிக்குத் தொடர்கிறது. பூர்வ ஜன்மாந்திர வாசனை அந்தந்த ஜீவனுடைய மனதில் புதைந்து கிடக்கிறது. தொடர்ந்து வரும் பிறவிகளில் பழைய ஜன்மக்கூறுகளைத் தோற்றத்துக்குக் கொண்டுவருவதே வாழ்க்கையின் நோக்கமாகிறது. நீண்ட ஆயுள், குறுகிய ஆயுள் ஆகியவைகள் கடவுளால் கொடுக்கப்பட்ட வைகள் அல்ல. பழவினைப்பயனாகப் புதிய பிறவியின் கால வரையறை அமைகிறது. இங்ஙனம் படிப்படியாகப் பல பிறவி களில் பண்பாடடைந்து ஜீவாத்மாக்கள் பழையபடி பரத்தைச் சென்றடைகின்றன. இது யுக்திக்கு ஒத்தது. இயற்கையின் நடை முறை இதற்குச் சான்றாக இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவக் கொள்கையாகிய ஒரே பிறவி என்பது பொருளற்றது. சிறு பிள்ளைகளின் கற்பனைபோன்று அது தென்படுகின்றது. தத்துவத்துக்கு ஒரு பிறவிக்கொள்கை ஒவ்வாதது.

கேள்வி: *(526)* வினைக்கேற்ப மறுபிறப்பு முறையாக நடந்துகொண்டிருக்குமானால் ஜனத்தொகைப் பெருக்கத் துக்குக் காரணம் யாது?

பதில்: உலகில் ஜனத்தொகை ஒரு காலத்தில் அதிகரிப்பதும், மற்றொரு காலத்தில் குறைந்திருப்பதும் இயற்கையின் நியதியாம். ஜீவாத்மாக்கள் ஸ்தூல சரீரம் எடுக்கும் நிலை, அந்தச் சரீரத்தை எடுக்காது அமைதியுற்றிருக்கும் நிலை ஆகிய இரண்டு நிலை களில் மாறி மாறி இருந்துவருகின்றன. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்ளுவோம். ஒரு வருஷத்தில் தானியங்களை மக்கள் ஏராளமாக விதைக்கின்றனர். அது பிறப்பெடுப்பதற்கு நிகர். மற்றொரு வருஷத்தில் தானியங்களை மூட்டை மூட்டையாக அடுக்கி வைத்துக்கொண்டு விதை விதைப்பதைக் குறைத்து விடுகின்றனர். தானிய நிலையில் இருப்பது தோன்றா நிலை. பயிர் பச்சைகளாக வந்திருப்பது தோன்றிய நிலை. அதே விதத்தில் ஜீவாத்மாக்கள் சில காலங்களில், சில சூழ்நிலை களில் ஏராளமாகப் பிறப்பெடுக்கின்றனர். வேறு சில காலங் களில், சூழ்நிலைகளில் குறைந்த நிலையில் பிறப்பெடுக்கின்றன. பிறப்பெடுக்கிற நிலைக்கு வியக்தம் என்றும், பிறவாது ஒடுங்கி

இருக்கும் நிலைக்கு அவ்யக்தம் என்றும் விளக்கங்கள் பல வந்துள்ளன. வியக்தமாகவோ, அவ்யக்தமாகவோ ஜீவகோடிகள் அனந்தம். அவைகளை அளக்க யாருக்கும் இயலாது. உடல் எடுத்துத் தோற்றத்துக்கு வருவதில் ஏற்றத்தாழ்வு உண்டு. ஆனால் எவ்வுயிரும் அழிந்துபட்டுப் போவதில்லை. சந்தைக் கடைக்கு ஒரு வாரத்தில் கூட்டம் அதிகம் வருகிறது. மற்றொரு வராத்தில் கூட்டம் குறைகிறது. அதேபாங்கில் மண்ணுலகம் என்னும் கர்மக்ஷேத்திரத்துக்கு ஜீவாத்மாக்களின் வருகை அதிகரிக்கவும், குறைவுபடவும் செய்கிறது. இதுவே ஜனத்தொகையின் உயர்வு தாழ்வுக்குக் காரணமாகிறது. பண்பு ஓங்கி வ்ருகிற காலத்தில் ஜனத்தொகை குறையும், சுகபோக நாட்டம் அதிகரிக்கும் காலத்தில் உயிர்ப்பெருக்கு அதிகரிக்கும். இதுவும் இயற்கையின் நியதி.

கேள்வி: *(527)* மறுபிறவி உண்டென்று இந்து மதம் பகர்கிறது. மனிதனுக்குக் கடவுள் கொடுத்திருப்பது ஒரே ஒரு பிறவிதான் என்று பிற மதங்கள் பகர்கின்றன. முரண் படுகின்ற இவ்விரண்டு கோட்பாடுகளுள் எதை ஏற்பது?

பதில்: மனிதனுக்கு அமைந்திருப்பது ஒரே ஒரு பிறவி என்றால் அந்த ஒரு பிறவியைக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்றால் அக்கடவுள் பட்சபாதம் உள்ளவர் எனப் பொருள் படுகிறது. ஏனென்றால் சிலர் அற்ப ஆயுள் படைத்தவர்களாகவும் வேறு சிலர் நீண்ட ஆயுள் படைத்தவர்களாகவும் அமைகின்றனர். கருணாகரக் கடவுளுக்கு இத்தகைய பட்சபாதம் பொருந்தாது. சிலர் பிறவியிலிருந்தே அறிவு படைத்த நல்லவர்களாக இருக் கின்றனர். வேறு சிலர் துஷ்டர்களாகவும், கேடே வடிவெடுத்தவர் களாகவும் இருக்கின்றனர். மக்களை இப்படிப் படைப்பதும் கருணையே வடிவெடுத்துள்ள கடவுளுக்குப் பொருந்தாது.

இனி, ஆத்ம பரிபாகம் அடைவது வாழ்க்கையின் குறிக்கோள் என்றால் அப்பெருநிலையைப் பெறுதற்கு ஒரு பிறவி போதாது. பள்ளிக்கூடத்தில் பாலர் வகுப்பில் துவங்கிக் கல்வி கற்று, படிப்படியாக மேல்நிலைக்குப் போவதற்கு ஒப்பானது பிறவியின் நோக்கம்.

கடவுள் அந்தந்த உயிர் வகைகளை ஒன்றோடொன்று சம்பந்தப்படாத தனிக்கூட்டங்களாகப் படைத்தார் என்பது

புறமதக் கொள்கை. அதுமட்டுமன்று, மற்ற உயிர்களை மனிதனுடைய நலனுக்காகவென்றே கடவுள் படைத்திருக்கிறார் என்பதும் புறமதக் கொள்கை. ஆனால் பரம்பொருள் என்னும் ஒரு பேருயிர் அனந்தங்கோடி ஜீவர்களாகத் தோன்றிப் படிப்படியாகப் பல பிறவிகளில் மேல்நிலைக்கு வருகின்றது என்பது இந்துமதக் கோட்பாடாகும். ஆதலால் உயிர் வகைகள் அனைத்திடத்தும் நல்லிணக்கம் கொள்வது கடவுள் வழிபாட்டுக்கு நிகர் என்பது இந்துமதக் கொள்கை. பிறவிகளுள் உச்சநிலையை எட்டியிருப்பது மானுடப் பிறவி; மனிதப்பிறவி வாய்த்தல் அரிது. பரிணமித்துப் பல பிறவிகளின் மூலம் மனிதனுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மனிதனாகப் பிறந்த பிறகும் முக்திக்குத் தன்னைப் பக்குவப்படுத்தும் வரையில் பிறவிப் பெருங்கடலில் மனிதன் ஈடுபடுகிறான். இந்தக் கோட்பாடே தத்துவத்துக்கும் யுக்திக்கும் பொருந்தியது. ஆக, அந்தந்த உயிர் அமையும் நிலைக்கு அதனதன் முயற்சியே முகாமையாகிறது. வினைக்கேற்ற வினைப்பயன் அமைவது இறைவனுடைய பெரிய திட்டம். அந்தத் திட்டத்தின்படி கடவுளுக்குப் பட்சபாதம் இல்லை. ஆத்மசாதகர்கள் சாதனத்தில் முன்னேற்றம் அடைந்தான பிறகு சுவானுபவத்தில் இந்த உண்மைகளைக் கண்டறிகின்றனர். இதுவே ஹிந்து மதத்தின் கோட்பாடாம்.

மனதைப் பண்படுத்தும் ஓசை மந்திரம் எனப்படுகிறது. அந்த ஓசைகளுள் ஒன்று 'சிவ' என்னும் சொல். இது இறைவனுக்கு அமைந்த நாமங்களுள் ஒன்று. சிவ என்னும் நாமத்தின் பொருள் மங்களம் என்பதாம். அந்த அர்த்தத்தை அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும் "சிவ சிவ" என்று ஓயாது ஓதிக்கொண்டிருக்கின்றவர்கள் மனபரிபாகம் அடைகின்றனர்.

மருந்து ஒன்று எப்பொருள்களைக் கொண்டு ஆயத்தப் படுத்தப்பட்டது என்பதை நோயாளி ஒருவன் அறிந்திருந்தாலும் அல்லது அறியாதிருந்தாலும் அதை முன்னிட்டு மருந்தின் பயன் வீண்போவதில்லை. அதேவிதத்தில் பக்திபூர்வமாக மந்திரங்களை ஜபிக்கின்றவர்களுக்கு மனத்தூய்மையும் தெளிவும் தானே வந்திடுகின்றன.

கேள்வி: *(528)* மனிதனுக்குப் பிறவி ஒன்றுதான் இருக்கிறது என்பது சில மதவாதிகளின் கொள்கை. மனிதனுக்குப் பிறவிகள் பல இருக்கின்றன என்பது வேறு சில மதவாதிகளின் கொள்கை. இவ்விரண்டு கொள்கைகளுள் இறைவனுடைய திட்டத்துக்கு ஒத்தது எது?

பதில்: மனிதனுக்குப் பிறவி ஒன்று என்னும் கொள்கை யூத மதத்துக்கும், அதன் கிளைகளாக வந்துள்ள கிறிஸ்துவ மதத்துக்கும், இஸ்லாமிய மதத்துக்கும் பொதுவானது. மற்று, இந்தியாவில் தோன்றியுள்ள மதங்கள் யாவும் மனிதனுக்குப் பிறவிகள் பல என்னும் கொள்கையைக் கொண்டிருக்கின்றன. சீனாவில் தோன்றியுள்ள கம்பூஷிய மதமும் இக்கொள்கையை ஏற்றுக்கொள்கிறது.

மனிதனுக்குப் பிறவி ஒன்று என்னும் கொள்கையில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் ஏனைய உயிர்வகைகள் தனித்தனியாகக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவைகள், அவைகளுக்கும் பிறவி ஒன்றுதான் என்பது அவர்களின் நம்பிக்கை.

இந்து மதத்தின் கொள்கைப்படி சிருஷ்டி முழுதும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு இருக்கின்றன. சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டம். எண்ணறிய பிறவிகளில் கல், புல் நிலையிலிருக்கிற உயிர் வகைகள் பரிணமித்து மேல்நிலைக்கு வருகின்றன. ஸ்தாவரங்களாய் இருப்பவைகள் ஜங்கமங்களாய் மாறுகின்றன. நிலைத்திணை என்றும் இயங்குதிணை என்றும் அவைகளை இயம்புகின்றோம். பிரதிகூலமான சூழ்நிலைகளிலிருந்தும் எதிரிகளிடத்திலிருந்தும் தங்களை விடுவித்துக்கொள்ள உயிர்வகைகள் முயலுவதால் அவைகள் பிறவிகளில் மேல்நிலைக்கு வருகின்றன. விலங்குகளாக வடிவெடுத்து வந்தவைகள் பிறகு மக்களாக மாறுகின்றன. மக்கள் பிறவியின் சிறப்பு ஒன்று உண்டு. கல் போன்றும், மரம் போன்றும் அறிவற்ற நிலையிலிருக்கிற மக்களை உலகில் காணலாம். புழு, பூச்சி போன்ற வாழ்வு நடாத்துகிற மக்களையும் காணலாம். பறவைகள் போன்றும், விலங்குகள் போன்றும் இருக்கிற மக்களையும் காணலாம். தேள், பாம்பு போன்ற பாங்குடையவர்கள் உண்டு. புலி வேங்கை போன்ற கொடூரத்தன்மை வாய்ந்தவர்கள் உண்டு.

மனிதனுக்குப் பிறவி ஒன்றென்றால் இந்தப் பாங்குகளைத் தாண்டி மேலாம் நிலைக்கு வருவதற்கு அவனுக்கு அவகாச மில்லை. அத்தகைய திட்டம் பொருளற்றது. பிறவிகள் பல எடுத்து ஆராய்ச்சிகள் பல செய்து படிப்படியாக மேல் நிலைக்கு வருவதுதான் பொருத்தமான திட்டமாகிறது. கீழ்நிலை யிலிருந்து மேல்நிலை வரை எல்லா உயிர்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. கடவுள் என்னும் பேருயிரினின்றே இத்தனை கோடி உயிர்வகைகள் உருவெடுத்துப் படிப்படியாகப் பரிணமித்து மேல்நிலைக்கு வருகின்றன. இதுவே இறைவனு டைய பெருந்திட்டமாகும். இயற்கையினுடைய நடைமுறை இதற்குச் சான்று ஆகிறது. பெருநிலையை எட்டிப் பரம் பொருளில் ஒன்றுசேரும் வரையில் மானுடன் எண்ணிறந்த பிறவிகளை எடுத்தாகவேண்டுமென்பது கோட்பாடு.

கேள்வி: *(529)* புண்ணியம் செய்பவர்களுக்கு மறு பிறப்பு இல்லை. பாபம் செய்கிறவர்களுக்கு மறுபிறவி உண்டு. ஏழு பிறவிகள் என்பன சரியா?

பதில்: புண்ணியம் செய்கிறவர்களுக்கு மறுபிறப்பு இல்லை என்பது உண்மையன்று. அவர்களுக்கும் மறுபிறப்பு உண்டு. ஆயினும் புண்ணியம் செய்கிறவர்களுக்கு மேலும் மேலும் தொடர்ந்து வருகிற பிறவிகள் நல்லவைகளாகவும் இன்பத்தில் ஊறியவைகளாகவும் இருக்கின்றன. இதற்கு மாறாகப் பாபம் செய்பவர்களுடைய பிறவிகள் கீழானவைகளாகவும் துன்பத்தில் உழல்பவைகளாகவும் இருக்கின்றன. பாப புண்ணியமாகிய இரண்டுவித வினைகளைச் செய்துகொண்டிருப்பவர்களுக்கும் பிறவிகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. பிறவிப் பெருங்கடலைக் கடக்க முயலுகின்றவர்கள் இரண்டுவித வினைகளையும் தாண்டி அப்பால் செல்லக் கடமைப்பட்டிருக் கின்றனர். இக்கோட்பாட்டை அனுசரித்தே "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்னும் கோட்பாடு வந்துள்ளது.

பரிணமித்து வருகின்ற உயிர்கள் படிப்படியாக எடுக்கிற பிறவிகள் எண்ணிக்கையில் அடங்கா. கோடிக்கணக்கில் அவைகள் விரிந்துகொண்டு போகின்றன. ஆயினும் அவையாவும்

ஏழுவித ஞான பூமிகளில் அடங்கியுள்ளன. ஒரு வகுப்பில் படிக்கும் மாணாக்கன் அந்த வருஷம் முழுதும் அல்லது அவன் மந்தமாயிருக்கும் சில வேளைகளில் ஒரு வருஷமோ அதற்கு மேற்பட்ட காலமோ அதே வகுப்பில் படிக்கிறான். அந்தப் பாங்கில் ஒரு ஞான பூமியில் பரிபாகம் அடையும் வரையில் பிறவிகளைக் கணக்கற்றவாறு ஒரு ஜீவன் எடுத்து வருகிறான். ஆக, ஏழுமை என்று சொல்லுவதும் ஏழு பிறப்பு என்று சொல்லுவதும் ஏழு ஞான பூமிகளைக் குறிக்கின்றன. எடுக்கின்ற சரீரங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவை. மனம் அடைந்து வருகிற பரிபாக நிலையைத்தான் ஏழு பிறப்பு என்கின்றோம்.

கேள்வி: *(530)* முற்பிறவியில் செய்த பாபம் நமக்குத் தெரியாது. அப்படியிருக்க இப்பொழுது ஏன் அதை அனுபவிக்கவேண்டும்?

பதில்: எண்ணம் வாழ்வாகப் பரிணமிக்கிறது. நாம் அறிந்துள்ள விஷயங்கள் மிகக் குறைவு; அறியாத விஷயங்கள் அதிகம். முற்பிறவியில் செய்தது இப்பிறவிக்கு வருகிறதா? இல்லையா? என்பது ஈண்டு எழுந்துள்ள கேள்வியாகும்.

இப்பிறவியில் நல்ல செயல்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் துன்பத்துக்கு ஏதுவானவைகள் வந்து வாய்க்கின்றன. இப் பிறப்பில் கேடு செய்கின்றவர்களுக்குச் சுகத்துக்கு ஏதுவான வைகள் வந்து வாய்க்கின்றன. இவற்றிற்குக் காரணம் என்ன என்று ஆராய்கின்றபொழுது முற்பிறவிக்குத்தான் போயாக வேண்டும். காரணமில்லாது காரியம் நிகழ்வதில்லை. நாம் செய்கின்ற ஒவ்வொரு வினையும் மனதில் பதிவாகி விடுகின்றது. அது எப்பொழுது செயலுக்கு வருகின்றது என்பதைச் சொல்ல முடியாது. சில வினைகளால் ஏற்படும் பதிவுகள் அடுத்த பிறவிக்கு விளைவாக வந்து அமையலாம். எனவே நாம் செய்த வினையின் விளைவு இப்பிறவியில் விளைவு தராவிட்டால் அடுத்த பிறவியில் அது விளைவைத் தரும். சென்ற பிறவியில் செய்த வினை இப்பிறவியில் விளைவுக்கு வருவதுண்டு.

உடலில் ஏற்பட்ட தழும்புகளுள் சில மறைந்து விடுவதுண்டு. சில தழும்புகள் இந்த உடல் இருக்கும் வரையில்

தென்பட்டுக்கொண்டே இருக்கும். மனதில் ஏற்பட்ட பதிவுகள் மனது உள்ள வரையிலும் இருப்பதுண்டு. உடல் அழியும் போது மனம் அழிவதில்லை. பிறவி மாறுகிறபொழுது உடம்பு நம்முடன் வராவிட்டாலும் உள்ளம் நம்முடன் வந்து கொண்டிருக்கும்.

உள்ளத்தில் ஏற்படுகின்ற பதிவுகள் அனைத்தும் நம் அறிவுப் பகுதிக்கு வருவதில்லை. அறிவுப் பகுதிக்குக் கீழ் உள்ள பதிவுகள் நமக்கு மறந்து போய்விடுகின்றன. அவை நம் அறிவுப் பகுதிக்கு வருகின்றபொழுதுதான் நமக்குத் தெரிகின்றன. முற்பிறப்பில் செய்த துன்பத்துக்கு ஏதுவான பதிவுகள் நம் உள்ளத்தில் ஆழ்பகுதியில் மறைந்து கிடக்கின்றன. அவை வாய்ப்புக் கிடைக்கும்பொழுது அறிவுப்பகுதிக்கு வரு கின்றன. எப்பொழுது அவை அறிவுப்பகுதிக்கு வருகின்றன என்பதை நாம் சொல்ல முடியாது. விதை ஒன்று பூமிக்குள் மறைந்திருக்கும்பொழுது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அது முளைத்துப் பூமிக்கு மேலே வருகிறபொழுதுதான் நம் கண்ணுக்குத் தெரிகிறது. அங்ஙனம் நாம் செய்த வினை விளைவுதருவதற்கு முன்பு நம் உள்ளத்தில் மறைந்து கிடக்கிறது. பிறகு அது விளைவுக்கு வருகிறபொழுதுதான் நமக்குத் தெரிகிறது.

அவரவர்கள் செய்த வினையை அவரவர்களே அனுபவித் தாகவேண்டும். அனுபவிக்கின்ற காலம் வினையின் பதிவைப் பொறுத்து இப்பிறவியிலும் அமையலாம்; அடுத்த பிறவியிலும் அமையலாம். நலம் செய்பவன் ஒருநாளும் கேடு அடைவ தில்லை. தீமை செய்தவன் அதன் விளைவை அனுபவித்தே ஆகவேண்டும். இதற்கு விதிவிலக்கு யாருக்குமில்லை.

இப்பிறப்பில் நம்முடைய முயற்சியில்லாது பல விஷயங் களை அறிகின்றோம். உதாரணமாகக் காமத்தைப்பற்றி யாரும் நமக்குப் புகட்ட வேண்டிய அவசியமில்லை. காம உணர்வு உள்ளத்தில் தானாகவே எழுந்து வருகிறது. அது ஜன்மாந்தர வாசனையாகும். நமக்குச் சுலபமாக விளங்காத விஷயத்தை இப்பொழுதுதான் புதிதாகக் கற்கத் தொடங்கி இருக்கிறோம். சுலபத்தில் விளங்குகின்ற விஷயத்துக்கு ஏற்கனவே பயிற்சி பெற்றிருக்கிறோம். பழைய பாடத்தைச் சுலபமாகப் புரிந்துகொள் வதுபோன்று முன்பு தெரிந்துள்ள விஷயத்தை அறிந்துகொள்வது

சுலபமாகிறது. எனவே நாம் செய்த வினையின் விளைவை இப்பிறவியிலோ அடுத்த பிறவியிலோ நாம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். நாம் செய்த வினை ஞாபகத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நம்மைக் கீழ் நிலைக்கு எடுத்துச்செல்லும் வினையை அகற்றிவிட்டு மேல் நிலைக்கு எடுத்துச்செல்லும் வினையைச் செய்துவருவோமாக.

கேள்வி: *(531)* குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி ஒரு சமயம் நடக்கும்போது அந்த நிகழ்ச்சியை முன்னரே கண்டது போன்று ஞாபகம் வரக் காரணம் என்ன?

பதில்: மனிதனுடைய ஜீவிதம் இப்பொழுது எடுத்துள்ள பிறவியிலே முதன் முதலாகத் துவங்கியது அன்று. கணக்கற்ற பிறவிகளை மனிதன் சதா எடுத்துக்கொண்டே வருகிறான். அப்பிறவிகளில் அவனுக்கு உண்டான அனுபவங்களில் சில மனதிலே ஆழ்ந்து இடம்பெறுகின்றன. அங்ஙனம் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் போன்றவைகள் அடுத்த பிறவியிலும் நிகழ்வது இயல்பு. அப்படி நிகழுங்கால், இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்றை நான் முன்பு எங்கேயோ பார்த்திருக்கின்றேனே என்னும் எண்ணம் மனதில் உதயமாகிறது. மனிதனுக்கு மறுபிறப்பு உண்டு என்பதற்கான அத்தாட்சிகளுள் இத்தகைய அனுபவமும் ஒன்றேயாம்.

இன்னி, இவ்வுலக வாழ்க்கையில் மனிதன் பெறுகிற அனுபவங்களுள் மனிதனோடு மனிதன் வைக்கும் இணக்கமும் நன்றேயாம். சிலரோடு ஒட்டி உறவாடுதலில் எடுத்த எடுப்பிலிருந்து இடைஞ்சல் ஏதுமில்லை. பழைய நண்பனோடு உறவாடுவது போன்று அந்த இணக்கம் தானாக வந்து அமைகிறது. இனி வேறு சிலரோடு இணங்கி நடந்துகொள்ள மனது மறுதலிக்கிறது. இத்தகைய செயலும் பூர்வ ஜன்மாந்திர வாசனைகளோடு இணைக்கப்படுகிறது.

மனிதன் உலக வாழ்வு எதிலும் பற்றற்றவனாக இருப்பானாகில் இங்ஙனம் வாழ்க்கை சம்பந்தமான பல உண்மைகள் தாமாகவே அவன் மனதில் உதயமாகின்றன. அதற்கு மேல் பரஞானத்தைப் பெறுதற்கும் படிப்படியாக அன்னவன் பக்குவமடைந்து வருகின்றான்.

கேள்வி: *(532)* முற்பிறவியில் நாம் எப்படி இருந்தோம் என்பதனை அறிய முடியுமா?

பதில்: முற்பிறவியில் நாம் எப்படி இருந்தோம் என்பதனை அறிந்துகொள்ளுவது சாத்தியம். அதற்கேற்ற முயற்சி எடுத்துக் கொள்வது முற்றிலும் அவசியமாகிறது. முதல்நாள் காலையிலிருந்து படுக்கப்போகும் வரையில் நாம் செய்த செயல்கள் முற்றும் இன்றைக்கு ஞாபகத்தில் இருப்பதில்லை. ஆனால் எண்ணிப்பார்த்து அவை யாவற்றையும் ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம். முற்பிறவியை அறிந்து கொள்ளும் பொருட்டு ஒருவன் செய்யவேண்டிய சாதனங்களை யோக சாஸ்திரம் விளக்குகிறது. அதே யோக சாஸ்திரம் மற்றொரு எச்சரிக்கையையும் சாதகனுக்கு ஞாபகமூட்டுகிறது. இந்தச் சரீரத்தில் நேற்றுச் செய்தது முழுதும் இன்றைக்கு ஞாபகத்தில் இல்லை. இது இப்படியிருக்க, வேறொரு சரீரத்தில் பல காலத்துக்கு முன்பு வாழ்ந்த வாழ்வை ஞாபகத்துக்குக் கொண்டுவருவதற்கு நீ முயலுவதால் உனக்கு வருகிற இலாபம் யாது? முறையாக முயன்றால் அதை நீ ஞாபகத்துக்குக் கொண்டு வரலாம். மற்று, அம்முயற்சியில் நீ வீண்காலம் போக்காதே. பிறப்பில்லாப் பெருநிலையை எய்துவதே மானுடப் பிறவியின் நோக்கமாகும். சென்ற பிறப்பில் செய்த வினைகளுக்கு ஏற்ற பிரகாரம் பாப புண்ணியங்களைத் துல்லியமாக இப்பிறப்பில் அனுபவிக்கின்றோம். மற்று, அது எத்தகைய பிறப்பு, அதில் என்னென்ன செயல்கள் செய்தோம் என்று ஆராய்வதால் புதிதாகத் தெரிந்து கொள்ளப்போவது ஒன்றுமில்லை. அதனால் வீண் மனக் குழப்பமே மிஞ்சும். ஜீவர்களின் மீது உள்ள கருணையினாலேயே இவற்றை இறைவன் மறைத்து வைத்துள்ளான். இந்த ஜன்மத்தில் நீ செய்து முடிப்பதற்கேற்ற அரிய பெரிய செயல்கள் பல உள. ஆக, சென்ற விஷயத்தில் சிந்தையைச் செலுத்துவதற்கு மாறாக நீ இப்பொழுது செய்து முடிப்பதில் கருத்து மிகச் செலுத்துவாயாக.

கேள்வி: *(533)* மனிதன் ஒரு தடவைதான் பிறக்கிறான்; பல பிறவிகள் அவனுக்கில்லையென்று சிலர் கருதுகின்றனர். பல பிறவிகள் உண்டு என்று நிரூபிப்பது எங்ஙனம்?

பதில்: இயற்கையில் ஒருதடவை மட்டும் நிகழ்கின்ற நிகழ்ச்சி ஒன்றுமில்லை. எல்லா நிகழ்ச்சிகளும் எல்லாப் பொருள்களிடத்தும் திரும்பத் திரும்ப நிகழ்கின்றன. ஒரு தடவை மழையாக விழுந்த நீர் பல தடவை மழையாக விழ வல்லது. அங்ஙனம் நிகழ்ந்துகொண்டும் இருக்கிறது. பிறப்பு மட்டும் ஏன் ஒரு தடவையோடு நின்றுவிட வேண்டும்?

ஜீவன் என்பது ஓர் ஆத்மா. அதற்கு உடலங்கள் மாறி மாறி அமைவது புதிய புதிய அனுபவங்களைத் தருதற் பொருட்டேயாம். ஒரே தடவை ஒருநாள் பள்ளிக்கூடத்துக்குப் போகும் மாணாக்கன் அதிகம் கற்கமுடியாது. கல்வி பூர்த்தி யாகும் வரையில் திரும்பத் திரும்ப அவன் பள்ளிக் கூடத் துக்குப் போய்க் கொண்டிருக்கவேண்டும். ஆத்மாவானது பரிபூரணத்தன்மை அடையும் வரையில் பிறந்துகொண்டே இருக்கவேண்டும். அதுதான் இயற்கையின் பேரமைப்பாகிறது.

ஒரு பிறப்புத்தான் உண்டு என்பது ஆத்மாவுக்குத் துவக் கமும் முடிவும் உண்டு என்பதாக முடியும். ஒரு பிறப்போடு அழிந்து போகும் ஆத்மா வாழ்ந்திருக்கும் போதும் நன்மைக் காகப் பாடுபட வேண்டியதில்லை என்று ஏற்படும். மனித னுக்கு ஒரே ஜன்மத்தைக் கொடுத்துவிட்டுப் பிறகு அவனுடைய பாவ புண்ணியத்துக்கு ஏற்பக் கடவுள் அவனை நரகத்திலோ சொர்க்கத்திலோ நிரந்தரமாக வைத்துவிடுகிறார் என்பதும் பொருந்தாது. ஒரு ஜன்மம் என்கிற குறுகிய காலத்தில் செய்த குற்றத்துக்கு முடிவில்லாத நரகவேதனை என்ற தண்டனையைக் கருணையுடையவன் விதிக்கமாட்டான். மானுட ஆட்சியிலேயே அத்தகைய கொடுமையில்லை. குற்றத்துக்கேற்ற தண்டனையும் பிறகு திருந்தியமைவதற்கேற்ற சந்தர்ப்பத்தையும் நல்ல மானுட ஆட்சிமுறையானது அளிக்கிறது. மறுபிறப்பு என்ற புதிய சந்தர்ப்பத்தைக் கடவுள் கொடுக்காவிட்டால் அவன் கொடியவன் என்ற குற்றத்துக்கு ஆளாவான். பேரறிவும் பேரருளுமுடைய கடவுள் அப்படி ஒரு ஜன்மத்தை மட்டும் கொடுத்து மனிதனுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்த மாட்டார். பூராயமாய் ஆராய்ந்து பார்த்தால் ஜீவர்களுக்குப் பலபிறவி உண்டு என்னும் கோட்பாடுதான் யுக்திக்கும் அனுபவத்துக்கும் பொருந்தும்.

கேள்வி: *(534)* ஆண்டவனால் அளிக்கப்பட்ட ஒரு பிறவிதான் உண்டு. அதைத்தொடர்ந்து வினைப்பயனும் மறு பிறப்புக்களும் இல்லை என்கின்றன சில சமயங்கள். அவை உண்டு என்கின்றன வேறு சில சமயங்கள். எதை ஏற்பது, எதை விலக்குவது?

பதில்: ஒரு பிறப்புதான் உண்டு என்பது ஏக ஜன்மவாதம். முக்தியடையும் வரையில் பல பிறவிகள் உண்டு என்பது புனர்ஜன்ம வாதம். ஏக ஜன்மவாதம் ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் தோன்றிய யூத மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாமிய மதம் ஆகியவைகளுக்குச் சம்மதம். புனர்ஜன்ம வாதம் இந்தியாவிலும் சீனாவிலும் தோன்றிய மற்றெல்லா மதங்களுக்கும் சம்மதம். ஆண்டவன் ஒரு பிறவியைத்தான் தருகிறார் என்பது யுக்திக்குப் பொருந்தாது. மனிதனை அறிவிலும் ஆற்றலிலும் ஏற்றத்தாழ்வாகக் கடவுள் ஏன் படைக்க வேண்டும்? அது அவருடைய விருப்பம் என்று சமாதானம் சொல்லுவது இயற்கை அமைப்புக்கு விரோதமானது. மனிதன் பக்குவமடைவதற்கு ஒரு ஜன்மம் போதாது. பள்ளியில் பாடம் படிப்பதற்குப் பல வகுப்புகள் வேண்டும். மாணாக்கன் தரத்துக்கு ஏற்ப ஒவ்வொரு வகுப்பிலும் சில காலம் இருந்தாக வேண்டும். பல பிறவிகள் என்பது அதே போன்றது. ஆத்மா பக்குவம் ஆவதற்குப் பல ஜன்மங்கள் எடுத்துக்கொள்கிறது. ஒரு ஜன்மத்தில் அடைந்துள்ள பரிபக்குவத்தை ஒட்டி அடுத்த ஜன்மம் வருகிறது. ஆகையால்தான் மக்களுள் ஏற்றத்தாழ்வையும் காண்கிறோம். பக்குவம் அடைதற்கு வேண்டியவாறு வசதியைச் செய்து கொடுப்பதுதான் கருணைக் கடவுளின் செயலாகும். தமக்கு விரும்பியபடியெல்லாம் தாறுமாறாக அவர் உயிர்களைப் படைத்து விடுகிறார் என்பது அறிவுடையோர்க்கு ஏற்புடையது ஆகாது.

முன்பு நிகழ்ந்த பல செயல்களை இப்பொழுது மறந்து விடுகிறோம். மறந்ததினால் முன்பு அச்செயல்கள் நிகழவில்லை என்று சொல்லலாமா? பழைய பிறவிகளை மறக்கடிப்பதற்கே புதிய பிறவிகள் வருகின்றன. அவைகளை ஞாபகத்துக்குக் கொண்டுவந்தால் ஞாபக சக்திக்கு அது பெரும் சுமையாகும். அதனால் துன்பமும் அதிகரிக்கும். ஆகவே பழைய அனுபவம்

மட்டும் சுபாவமாக மனதில் நின்றுவிடுகிறது. பயன்படாத மற்ற பகுதிகளெல்லாம் ஞாபகத்தினின்று மறைந்துபோய் விடுகின்றன. அதற்காகவென்று சில யோக சாதனங்கள் செய் தால் பழைய பிறவிகளை ஞாபகத்துக்குக் கொண்டு வரலாம் என்கிறது யோகசாஸ்திரம். ஆக பல பிறவிகள் இருப்பதுதான் உயிர்களின் முன்னேற்றத்துக்குத் தக்க துணையாகிறது. ஒரு பிறவி என்னும் கோட்பாட்டை ஒவ்வாதது என்று விலக்க வேண்டும்.

கேள்வி: *(535)* சென்ற பிறவியையும், இனி வரப் போகும் பிறவியையும் அறிந்துகொள்ள முடியுமா?

பதில்: இயற்கையின் நடைமுறையில் ஒழுங்குப்பாடு இருப்பதால் கடந்துபோன பருவத்தையும், இனி வருவதற்கு இருக்கும் பருவத்தையும் நாம் யூகித்து அறிந்து கொள்ளலாம். அவ்வளவு தெளிவுபட முற்பிறவியையும் இனி வருவதற்கு இருக்கும் பிறவியையும் நாம் அறிந்துகொள்ள முடியாது. இனி வருவதற்கு இருக்கும் பிறவி ஒருவிதத்தில் நம் கைவசத்தில் இருக்கிறது. இந்தப் பிறவியில் நாம் எதற்குத் தகுதியுடையவர்களாக நம்மை அமைத்துக் கொள்ளுகிறோமோ அதற்கு ஏற்றபடி எதிர்காலப் பிறவி அமையும். காரணத்துக் கேற்ற காரியம் என்னும் நியதியினின்று இயற்கை பிசகுவ தில்லை. ஆதலால்தான் நாம் இப்பொழுது ஆயத்தமாய்க் கொண்டிருப்பதை அனுசரித்து எதிர்கால நிலையை ஒருவாறு யூகிக்கலாம். அதுமட்டுமன்று, நம்மை நாம் ஆயத்தப்படுத்தும் பாங்கு அடிக்கடி மாறியமைந்துகொண்டே இருக்கிறது. சாகப் போகும் பரியந்தம் மனிதன் தன்னைத் திருத்தியமைத்துக் கொண்டே இருக்கிறான். அந்த அமைப்பின் தொகையை அனுசரித்தே எதிர்கால வாழ்வு வந்தமையும்.

முற்பிறவியில் நாம் எங்கு, எப்படி இருந்தோம் என்பது நமக்குத் தெரியாது. இது தெரியாதிருப்பது இயற்கைத்தாய் நமக்கு வழங்கியுள்ள வரப்பிரசாதமாகும். முற்பிறவியை உள்ள படி அறிந்துகொள்ளுதற்கேற்ப நமக்குத் துன்பம்தான் அதி கரிக்கும். ஏனென்றால் பழைய சூழ்நிலையில் நாம் வைத்திருந்த பற்றுதல் நம்மைவிட்டு அகன்று போவதில்லை. பழைய

இடத்துக்கும் உற்றார் உறவினரிடத்தும் திரும்பிப் போய்ச்சேர விரும்புவோம். அது தீராத தொல்லையாக வந்து முடியும். ஆதலால் பழைய இருப்பிடமும், உறவும் நம் மனதில் வராதிருப்பது நமக்கு அவசியம். பின்பு இப்பிறவியில் நாம் ஓர் அனுபவம் இல்லாது காலி மனதுடன் பிறந்து வந்தவர்கள் அல்லர். பழைய அனுபவங்கள் சம்ஸ்காரங்களாக நம் உள்ளத்தில் புதைந்து கிடக்கின்றன. அந்தச் சம்ஸ்காரங்களை அனுசரித்தே இப்பிறவியில் நாம் பெற்றுவரும் பயிற்சிகளில் விரைவில் அல்லது நிதானமாக முன்னேற்றமடைந்து வருகிறோம். நம்முடைய இயல்பைத் துருவி ஆராய்வதன் வாயிலாக முற்பிறவியில் நாம் எப்படி இருந்திருப்போம் என்பதை ஒருவாறு சரியாக யூகிக்கலாம். அந்த யூகம் நமக்குப் போதுமானது. அதற்குமேல் இப்பிறவியில் நாம் அடையவேண்டிய முன்னேற்றத்திலேயே முழுமனதைச் செலுத்தவேண்டும். அதற்கு மாறாகக் கடந்து போனதைக் குறித்து மிகைபடக் கணக்குப் பார்ப்பதில் பயன் ஏதுமில்லை.

கேள்வி: *(536)* மக்களுக்கு முற்பிறப்பும் மறுபிறப்பும் உண்டு. இவ்வாறு திரும்பத்திரும்பப் பிறப்பதால் என்ன பயன்?

பதில்: சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டம். குழந்தை ஒன்று சிசுவாகப் பிறக்கிறது. சரீரத்தில் சிறியதாயிருக்கும் அது பெரியதாக வளர்கிறது. அதற்கேற்றபடி உடையையும் பெரியதாக மாற்றியமைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. உடை பழையதாவது போன்று உடலும் விருத்தாப்பியத்தில் பழுதுபடுகிறது. அப்படிப் பழுதுபட்டுப்போன உடலை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புதிய உடல் எடுப்பது ஜீவாத்மனுக்கு அவசியமாகிறது. ஒவ்வொரு பிறவியிலும் அனுபவத்தின் வாயிலாக அந்த ஜீவன் பண்பாடடைந்து வருகிறான். மாணாக்கனொருவன் நாள்தோறும் திரும்பத் திரும்பப் பள்ளிக்கூடத்துக்குப் போவது போன்றும், வருஷந்தோறும் பள்ளிக்கூடத்துக்குப் போவது போன்றும் ஜீவாத்மன் பல பிறவிகளில் முயன்று தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டு வருகிறான். கல்வியில் தேர்ச்சி

அடைவதற்கு எங்ஙனம் ஒரு வருஷப் படிப்புப் போதாதோ அதே விதத்தில் மனிதன் பண்பாடடைவதற்கு ஒரு ஜன்மம் போதாது. முற்றிலும் பண்பாடடையும் பரியந்தம் பிறவிகள் பல எடுத்துக்கொண்டு இருப்பது அவசியமாகிறது. சிற்றுயிர் நிலையிலிருந்துதான் மனிதன் பெருநிலைக்கு வந்திருக்கிறான். ஆக, ஜீவாத்மனுக்குப் பண்பாட்டின் பொருட்டுச் சிற்றுயிர் நிலை, பேருயிர் நிலை ஆகிய எல்லா நிலைகளும் அவசிய மாகின்றன. "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம்பெருமான் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என்பது கோட்பாடு. ஆக இறைவனுடைய திருவடியை அடைந்து முக்தியடையும் பரியந்தம் ஜீவாத்மன் ஒருவனுக்குப் பிறவிகள் பல அவசியமாகின்றன. மானுடப் பிறவிதான் அவனுக்கு அமைந்த வாய்ப்பு என்று எண்ணலாகாது. முதலில் சிற்றுயிர் களாக வடிவெடுத்து அவன் பரிணமித்து வருகிறான். எந்தப் படித்தரத்தில் அவன் எத்தனை ஜன்மம் எடுத்தான் என்பதைக் கணக்கிட முடியாது. பலகோடிப் பிறவிகள் வாயிலாக ஜீவாத்மாக்கள் அத்தனை பேரும் அவரவர் முயற்சிக்கேற்பப் பண்பாடடைந்துகொண்டே வருகின்றனர். மானுட நிலையை எட்டிய பிறகு பிறவியின் மூலமாகப் பொதுவாகக் கீழ்நிலைக்குப் போவதில்லை. ஆனால் அரிதிலும் அரிதாகச் சில ஜீவாத்மாக்கள் மானுட நிலையினின்று தாற்காலிகமாகக் கீழ்நிலைக்குப் போவதும் உண்டு. அப்படிப் போவது, அதற்குற்ற ஆசையை நிறைவேற்றுதல் பொருட்டேயாம். மேல்நிலைக்கு வரவர ஆசைகள் மேலானவைகளாகத் திருந்தியமைகின்றன. முற்றிலும் பரிபாகமான ஜீவாத்மனுக்கு ஆசை ஏதும் உண்டாவதில்லை. ஆதலால் மேலும் பிறப்பெடுப்பதற்கு அவசியமில்லை. அங்ஙனம் ஆசைகள் அனைத்தும் அகலும் வரையில் ஒவ்வொரு ஜீவனும் புதிய பிறப்பு எடுத்துக்கொண்டே இருக்கிறான். பரமனை அடைவதோடு ஆசையும் முடிவுறுகிறது. பிறப்பெடுக்கும் செயலும் முடிவுக்கு வருகிறது. முக்தி அடையும் பரியந்தம் பிறவிகள் உண்டு. ❑

29. பாப புண்ணியம்

கேள்வி: *(537)* **பாபம் என்றால் என்ன?**

பதில்: பாபத்தைப் பற்றிய கருத்துவேற்றுமை மதங்களுக்கு இடையே உண்டு. மதங்கள் பல மக்களுக்கு இடையில் உள. ஐதிகத்தை முன்னிட்டும், தேசாச்சாரத்தை முன்னிட்டும் சீதம், உஷ்ணமாகிய சூழ்நிலையை முன்னிட்டும் தேசாச்சாரங்கள் வெவ்வேறு பாங்கில் அமைகின்றன. ஒரு தேசாச்சாரத்தை மற்றொரு தேசத்தார் பாபம் எனக் கருதுவது இயல்பு. ஒரு மனிதனுக்குப் பாபமாகத் தென்படுவது மற்றொருவனுக்குப் புண்ணியமாகத் தென்படுகிறது. வழிபாட்டுக்குக் கோயிலுக் குள்ளே நுழைகிற மானுடன் ஒருவன் காலில் பாதரக்ஷை அணிந்திருந்தால் அவன் செய்வது பாபம் என்று இந்துக்கள் கருதுவார்கள். ஆனால் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியுள்ள ஒருவன் அங்ஙனம் பகரமாட்டான். ஆக சமயாச்சாரத்தில் ஒரு மதத்துக்குப் பாபமாக இருக்கும் செயல் மற்றொரு மதத்துக்குப் பாபம் என்பது ஆகமாட்டாது. இந்நிலையில் பாபம் என்பது மனப்பான்மையை ஒட்டியதாகும்.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாயுள்ள விளக்கம் ஒன்றைப் பாபத்துக்குத் தரலாம். எதைச் செய்தால் மனிதன் தன்னுடைய உடலமைப்பிலோ, உள்ளத்தின் அமைப்பிலோ அல்லது ஒழுக்கத்திலோ, சீர்கேடு அடைவானாகில் அது பாபம் ஆகிறது. இதற்கு மாறாக எதைச் செய்வதின் வாயிலாக மனிதன் உடலமைப்பில் திண்ணியனாகவும், உள்ளத்தின் அமைப்பில் தெளிந்தவனாகவும் சீலத்தின் அமைப்பில் மேலோனாகவும் பரிணமிக்கின்றானோ அச்செயல் அவனுக்குப் புண்ணியச் செயல் ஆகிறது. இந்த விளக்கம் எல்லா மதஸ்தர்களுக்கும்

பொதுவானது. கீழ்மைக்கு ஏதுவான செயல்கள் யாவையும் பாபம் என்றும், மேன்மையுறுவதற்கு ஏதுவான செயல்கள் யாவையும் புண்ணியம் என்றும் பொருள்படுத்துவது எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாய் அமைந்துள்ள சீரிய கோட்பாடு ஆகும்.

கேள்வி: *(538)* தற்கொலை செய்து கொள்வது பாபம் என்கின்றனர். அது எப்படிப் பாபமாகும்?

பதில்: ஒவ்வொரு மனிதனுக்கும் ஆயுள் இவ்வளவு என்பது இயற்கையின் நியதி. அது அவரவர் பிராரப்த கர்மத்துக்கு ஏற்றவாறு அமைகிறது. பிறந்தவுடன் சாகும் உயிர்கள் உண்டு. நீண்ட ஆயுள் படைத்த உயிர்கள் உண்டு. அற்ப ஆயுள் படைத்த உயிர்கள் உண்டு. இப்படி அமைவது வினைப்பயன் ஆகும். வினை முடிந்ததும் உயிர் தானாக மடிகிறது. தானாக வந்தமையும் சாவை யாரும் தடுக்கமுடியாது. இயல்பாகச் சாவு வருவதற்கு முன்பே பொருந்தாத முறையில் உயிரை மாய்த்துக்கொள்வது தற்கொலையாகும். கிணற்றில் வீழ்ந்து சாவது, விஷம் உண்டு சாவது, தூக்குப் போட்டுக் கொண்டு சாவது, ஓடும் ரயில் வண்டியின் முன் வீழ்ந்து சாவது ஆகியவைகள் தற்கொலையாகக் கருதப்படுகின்றன.

மனிதன் ஏன் தற்கொலை செய்து கொள்கிறான் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். வாழ்க்கையில் ஏதேனும் நெருக்கடி நேர்ந்துவிட்டால் அதைச் சமாளிக்க முடியாதவன் தற்கொலை செய்து கொள்கிறான். நோயைச் சகிக்க முடியாதவன் தற்கொலை செய்து கொள்கிறான். சமாளிக்க முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறவன் தற்கொலை செய்து கொள்கிறான். பெரிய ஏமாற்றத்துக்கு ஆளாகிறவன் தற்கொலை செய்து கொள்கிறான். இவையாவும் பொருந்தாத செயல்களாம்.

தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானிக்கிறவன் நிதானமாகத் தீர்மானிப்பதில்லை. திடீரென்று உணர்ச்சிக்கு ஆளாகித் தற்கொலையில் இறங்குகிறான். சாகப்போகும் தறுவாயில் அவனை யாராவது காப்பாற்றிவிட்டால் அவன் மீண்டும் அச்செயலில் இறங்கமாட்டான். உதாரணம் ஒன்று எடுத்துக் கொள்ளுவோம். தற்கொலையின் பொருட்டு ஒருவன் கிணற்றில்

குதிக்கிறான். ஆங்கு அவன் திணறுகிறபோது யாராவது ஒருவர் அவனைக் கைதூக்கி விட்டால் பிறகு அவன் கிணற்றண்டை ஒருபொழுதும் போகமாட்டான். தற்கொலை செய்து கொள்கின்ற ஒவ்வொருவனையும் மரணவேதனையில் இருக்கும்போது விடுவித்துவிட்டால் பிறகு தற்கொலையைப் பற்றி அவன் சிந்திக்கவேமாட்டான். பயங்கொள்ளிகளும், அவிவேகிகளுமே தற்கொலையில் கருத்தைச் செலுத்துகின்றனர்.

வாழ்க்கையில் வரும் சோதனைகளைச் சமாளித்துப் பழகுவது வாழ்க்கையின் குறிக்கோள். என்னதான் நெருக்கடி வந்தாலும் மனந்தளராது இருந்து அதை நிவர்த்திக்க முயலு கிறவன் நல்லறிவு படைத்தவன். பிறப்பெடுத்ததின் நோக்கத்தை அவனே நிறைவேற்றி வைக்கிறான். தோல்விக்குமேல் தோல்வி வந்தாலும், ஏமாற்றத்துக்குமேல் ஏமாற்றம் வந்தாலும் நெருக் கடிக்கு மேல் நெருக்கடி வந்தாலும் அமைதியாக அவை களை மீள முயலுபவன் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்று கிறான். கடன்பட்ட ஒருவன் தற்கொலை செய்துகொள்ளுவதால் பட்ட கடனினின்று விடுபட்டவன் ஆகான். மறுபிறப்பிலும் அவன் கடனாளியாகவே இருக்கிறான். தற்கொலை செய்து கொள்ளுவதற்கு மாறாகக் கடனைக் குறைக்கச் சிறிது சிறிதாகப் பாடுபட்டாலும் அது பாராட்டத்தக்க செயலாகிறது. பாடுபட்டுக் கடனைக் கழிப்பேன் என்னும் எண்ணமே வாழ்வுக்கு உறுதி கொடுக்கிறது: அத்தகையவனுக்குக் கடனைத் தீர்க்க எதிர்பாராது புதிய உபாயங்களும் வந்து அமைகின்றன. சோதனைகளைச் சமாளிப்பவன் திண்ணியனாகிறான். சோதனைகளுக்குப் பயந்து தன்னை மாய்த்துக்கொள்ளுபவன் கோழை ஆகிறான்.

தற்கொலை செய்து கொள்ளுகிறவனுக்குச் சாந்தியில்லை. சிறிது காலம் யாதனா சரீரத்தில் இருந்துகொண்டு அவன் வேதனைப்படுகிறான். மறுபிறப்பிலும் அவன் சஞ்சலத்துக்கு ஆளாகிறான். தற்கொலை என்னும் தீவினை ஏற்கனவே அமைந்துள்ள தீவினைகளோடு சேர்ந்து இன்னும் அதிகத் துயரத்தை விளைவிக்கிறது. கடன்பட்டவன் புதிய கடன் வாங்குவதற்கு நிகர் தற்கொலை. ஆதலால் வினைப்பயனின் போக்கை அறிகிறவர்கள் தற்கொலை என்னும் புதிய தீவி னையை வருவித்துக்கொள்ளலாகாது. வாழ்வில் வந்தமைகின்ற

விபத்துக்களையெல்லாம் அமைதியாக மீள முயலுபவனே வாழ்வைச் சரியாகக் கொண்டு செலுத்துகிறான். மீள இயலாத விடத்தும் அடுத்த பிறவியில் மீளுதற்கு இப்பொழுது அவன் தன்னைத்தானே ஆயத்தப்படுத்தியவன் ஆகிறான். அறியாமை யினால் மனிதன் குற்றங்கள் செய்துவிடலாம்; வாழ்வில் தோல்வி யடைந்துவிடலாம். வாழ்நாள் முழுதிலும் அவைகளுக்கு நிவிருத்தி தேடுவது முறை. தற்கொலை ஒரு நலனையும் நல்காது.

கேள்வி: *(539)* அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது உண்மையானால் மனிதன் தன்னுடைய செயல் களுக்குப் பொறுப்பாளி அல்லன். ஏனென்றால் அவனுக்கு மீறிய சக்தி அவனைச் செயலில் உந்துகிறது என்பதாகிறது. அவன் கருவியாக மட்டும் இருக்கிறான் என்றால், அவனுக்குப் பாபமோ புண்ணியமோ எப்படி வரும்?

பதில்: மனிதனை இறைவனிடத்திலிருந்து பிரித்துவைப்பது அக்ஞானம். அக்ஞானத்திலிருக்கும் மனிதன் மயக்கத்துக்கு ஆளாகின்றான். போதை வஸ்துவை அருந்தியவனுக்குப் புத்தி யில் ஓர் மயக்கம் ஏற்படுகிறது. அப்பொழுது அவனிடத்திலுள்ள புத்தியானது அவனைச் சரியான வழியில் செலுத்துவதில்லை. போதை தெளிந்தபின் அவனுடைய புத்தி நன்கு வேலை செய்கிறது. அங்ஙனம் காம காஞ்சனத்தில் உழல்கின்றவன் மோகவலையில் அகப்படுகின்றான். அம்மோகனா சக்தி தெய் வீகத் தூண்டுதலை மறைத்து அவனைத் தீயவழியில் செலுத்து கிறது. மோகனா சக்திக்கு வசப்பட்டவன் தான் தெய்வம் என்பதை மறந்து தன்னை உடல் மயமாகவும், மனோ மய மாகவும் கருதித் தன்னிடத்து ஆணவத்தையும் அகங் காரத்தையும் வளர்க்கின்றான். அப்பொழுது அவன் கடவுளுக்குக் கருவியாக இருப்பதை மறந்து ஆணவ அகங்காரத்துக்குக் கருவியாகி விடுகின்றான், ஆணவ அகங்காரம் படைத்த மனிதன் செயல்களுக்குத் தான் கர்த்தா என்பதை உணர் கின்றான். அத்தகைய கர்த்ருத்துவம் இருக்கும் வரையில் அவனைப் பாபம் புண்ணியம் சாரும். அவன் பாப புண்ணி யத்திலிருந்து விடுபட முடியாது.

ஆத்ம சாதனையின் மூலம் விவேகத்தையும் வைராக்கியத்தையும் வளர்த்துத் தன்னிடத்திலுள்ள கீழான இயல்புகளையெல்லாம் மேலான இயல்புகளாக மாற்றி அமைக்கும்பொழுது காம காஞ்சன மயக்கத்திலிருந்து தெளிவு அடைந்து வருகின்றான். காம காஞ்சனத்தை வெல்லுகின்றவளவு உடல் உணர்வை வெல்லுகின்றான். அப்பொழுது தான் உடலன்று; மனமன்று; அவற்றிற்கெல்லாம் அப்பாலுள்ள ஆத்மா என்பதை உணர ஆரம்பிக்கின்றான். தான் ஆத்ம சொரூபம் என்று உணரும் பொழுதுதான் யாவும் இறைவனுடைய செயல் என்ற உண்மை விளங்குகின்றது. ஆத்ம சொரூபம் தான் என்பதை உணர்பவனிடத்தில் ஆசை ஆதிக்கம் செலுத்துவதில்லை. எல்லா உயிர்களையும் இறைவன் இயக்கி வருவதை அவன் தெளிவாக உணர்கின்றான். உடலையும் மனதையும் கருவியாகக்கொண்டு செயல்படுகின்ற திறமை ஆத்ம ஞானிக்கே வருகிறது. ஆத்மா செயலுக்கு அப்பால் இருந்துகொண்டு அனைத்தையும் செயல்படுத்தி வருகின்ற நிலையை உணர்பவன் கர்மத்தில் கட்டுப்படுவதில்லை. கர்மத்துக்குத் தான் கர்த்தா என்கின்ற செருக்கும் அவனைவிட்டு அகன்று போய்விடுகின்றது. கர்மாதீதத்தில் ஆனந்த சொரூபியாக அவன் இருக்கின்றான்.

கர்மத்தில் கட்டுண்டு கிடப்பவனுக்குப் புண்ணிய பாபம் உண்டு. கர்மாதீதத்துக்குப் போன ஆத்மசொரூபிக்குப் புண்ணியமுமில்லை; பாபமுமில்லை. புண்ணியம், பாபம் இரண்டும் மனிதனை உலகத்தில் பந்தப்படுத்துகின்றன. பாபத்தை இரும்பு விலங்கு என்றும், புண்ணியத்தைப் பொன் விலங்கு என்றும் கூறலாம். ஆத்மா தான் என்று உணர்பவன் உலகத்தில் கட்டுப்படுவதில்லை. அவன் புண்ணியத்தையும் விரும்புவதில்லை. பாபத்தையும் விரும்புவதில்லை. புண்ணிய பாபத்துக்கு அப்பாலுள்ள பேரானந்தம் அவனுக்கு உரியதாகிறது.

கேள்வி: *(540)* தந்தை செய்த பாப புண்ணியத்தில் தம் மக்களுக்கும் பங்கு உண்டா?

பதில்: உலக இயல்பில் வைத்து ஆராய்ந்து பார்த்தால் தாய் தந்தையர் செய்யும் குற்றத்தில் அவர்களுடைய புதல்வர்களுக்குப் பங்கு இல்லை. களவாடுதல் என்னும் குற்றத்தை

ஒரு மனிதன் செய்துவிட்டால் அதை முன்னிட்டு அவனுடைய மகனைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள சட்டத்தில் இடமில்லை. தான் செய்த குற்றத்துக்குத் தானே பொறுப்பாளி.

வினைப்பயன் இதே கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஜீவனும் தன் வினைப் பயனுக்குத் தானே பொறுப்பாளி ஆகின்றான். ஆனால் ஒவ்வொரு ஜீவனும் தன்னை மற்றவர்களோடு பந்தப்படுத்திக் கொள்ளுமளவு மற்றவர்களுடைய வினைப்பயனைத் தானும் சிறிதளவு அனுபவித்தே ஆகவேண்டும். நோய்வாய்ப்பட்டிருக்கும் பெற்றோருக்கு ஒருவன் பிள்ளையாகப் பிறக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பெற்றோரிடம் உள்ள நோய் பிள்ளை களுக்கு வருவதுண்டு. தம் வினைப்பயனால் பெற்றோர்கள் நோயாளிகள் ஆனார்கள். மைந்தன் நோயாளியாக அவர் களுக்குப் பிள்ளையாகப் பிறந்தது தன் வினைப்பயனைப் பொறுத்திருக்கலாம்; அல்லது இவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்ததின் விளைவாக அவர்களுடைய துன்பத்தில் சிறிது தானும் அனுபவித்தே ஆகவேண்டும். பந்தபாசத்தால் உற் றாருடைய வினையைத் தன் வினை போன்று கருதி அதன் பயனை அனுபவிப்பது உயிர்களிடத்துள்ள இயல்பு ஆகும். ஆதலால் ஒருவிதத்தில் தாய் தந்தையருடைய வினைப்பயனை மைந்தனும் அனுபவிக்கிறான் என்றே சொல்லவேண்டும். பற்றுதல் உடையவர்களுக்கு விதவிதமான பாங்கில் வினைப் பயன் வந்தமைகிறது. தாய் தந்தையரின் வினைப்பயன்களை மைந்தன் அனுபவிப்பது அம்முறைகளில் ஒன்று ஆகிறது. ஆனால் பற்றற்றார்க்கு அத்தகைய வினையின் தொடர்பு ஒன்றும் கிடையாது.

கேள்வி: *(541)* மழை இயற்கைக்குக் கட்டுப்பட்டுப் பெய்கிறதா அல்லது மக்கள் செய்கின்ற பாப புண்ணியங் களுக்கு ஏற்பப் பெய்கிறதா? அங்ஙனம் பாப புண்ணியங் களுக்கு ஏற்பப் பெய்யுமாயின் பாப புண்ணியத்திற்கும் மழைக்கும் உள்ள தொடர்பு யாது? ஆனால் மழையின்மை யால் மக்கள் மட்டும் துன்பப்படுவதில்லை. மற்றச் ஜீவன்கள்

துன்பப்படுகின்றன. அதற்குக் காரணம் அவைகள் செய்யும் பாப புண்ணியம் எனக்கொள்வதா? ஆனால், ஜீவன் சிற்றுயிராய் இருக்கும்பொழுது பாபம், புண்ணியம் என்ற வேற்றுமை கிடையாது என்பது நீங்கள் ஒரு இதழில் கொடுத்த விடையாகும். எனவே அவைகளும் ஏன் துன்பப் படவேண்டும்? பூஜை, யக்ஞம் முதலியவைகளினால் மழை பெய்யுமா?

பதில்: மழை இயற்கையின் செயல். சூரிய வெப்பத்தால் கடலிலும் நிலத்திலும் உள்ள நீர் ஆவியாக மாறி மேலே போகிறது. மேலே போகும் ஆவி அத்தனையும் திரும்பவும் மழையாகப் பூமிக்கு வந்தாக வேண்டும். வானத்திலேயே அது நெடிது இருக்கமுடியாது. அது மழையாக வரும்பொழுது எல்லா இடத்துக்கும் ஒரே அளவில் பெய்வதில்லை. சில இடத்தில் பெருமழையாகப் பெய்கிறது. மற்றொரு இடத்தில் சாமான்ய மழையாகிறது. இன்னுமோர் இடத்தில் மழையே இல்லாது போய்விடுகிறது. கடலில் அது ஏராளமாகப் பொழிவதும் இயல்பு.

மக்களுடைய பாப புண்ணியத்துக்கும் மழைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அறத்துப்பாலைத் துவக்குவதற்கு முன்பு நாயனார் வான் சிறப்பைப் பற்றிப் பகர்கின்றார். அறத்துக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை ஞாபகப்படுத் துதற்கே அவர் அங்ஙனம் பகர்கின்றார். யக்ஞத்தினின்று மழை வருகிறது. **'यज्ञाद्भवति पर्जन्यः'**

என்று யக்ஞத்திலிருந்து மழை வருகிறதென்று வேதம் கூறுகிறது. யக்ஞம் அல்லது வேள்வி வெறும் தீயை எரிக்கின்ற சடங்கு அல்ல. மனிதன் எண்ணுகின்ற எண்ணமும், அந்த எண்ணத்துக்கு ஏற்ப அவன் செய்கின்ற செயலும் வேள்வியாக வடிவெடுக்கிறது. நலம் தரும் செயல் புண்ணியம் எனப்படுகிறது. கேட்டை விளைவிக்கும் செயல் பாபமாகிறது. உணவுப் பொருளில் ஏனைய பண்டங்களைக் கலந்து விற்கவேண்டும் என்று வர்த்தகன் எண்ணுகின்றான். அச்செயலைச் செய்தும் முடிக்கின்றான். அது பாபச் செயல். பிறரை ஏமாற்றித் தான் பொருள் சம்பாதிக்க வேண்டும் என்னும் ஆசை அவனுக்கு வருகிறது. பிறரை ஏமாற்ற முயலுகின்ற அளவு பின்னொரு

நாளில் தானே ஏமாற்றம் அடைய வேண்டும். உணவுப் பொருளை உண்டுபண்ணும் கிருஷிகன் தான்னியம் நன்றாக விளைவதற்கு முன்பே அதை எடுத்து விற்க முயலுகின்றான். விரைவில் அது கெட்டுப்போய் நாற்றமெடுத்துவிடும் என்பதாய் இருந்தாலும் அதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. தான்னியம் தன் கையில் இருக்கும் வரையில் அது நல்ல நிலையில் இருக்கவேண்டும். தனக்கு விலை கிடைத்தான பிறகு அப்பொருள் என்ன பாங்கில் எப்படிக் கெட்டுப்போய் விட்டாலும் அதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. அத்தகைய மனப்பான்மை பாபச்செயல் ஆகும். இத்தகைய எண்ணம் ஊறியிருக்கின்ற சமுதாயத்துக்கு மழை கிடையாது போய் விடுகின்றது. பெய்கின்ற மழை வேறு எங்கேயோ பொழிந்துவிடுகிறது. கெட்ட மனமுடையவர்க்கு அம்மழை கிடையாது போய்விடுகின்றது. "பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்" என்னும் பழமொழியும் இக்கருத்தையே விளக்குகிறது. நல்ல உணவுப்பொருளையே உண்டுபண்ணவேண்டும். அதை நல்ல நிலையிலேயே சமுதாயத்துக்கு எடுத்து வழங்கவேண்டும். சமுதாயத்துக்கு அதை நல்ல நிலையில் வழங்குதல் தேவாரதனை ஆகும். இப்படிக் கருதி வேளாண்மையையும், வர்த்தகத்தையும் செய்தால் அது நல்ல வேள்வி ஆகிறது. நல்ல மனப்பான்மை யினின்று வரும் செயல் அது. அத்தகைய சீரிய மனப்பான்மை பெய்கின்ற மழையைத் தனக்குப் பயன்படக் கூடியதாகச் செய்யும் ஆற்றலைப் பெறுகிறது. எண்ணத்துக்கு உயர்ந்த சக்தி உண்டு. எண்ணம் தூயது ஆக ஆக அதன் சக்தியும் பன்மடங்கு அதிகரிக்கின்றது. யக்ஞத்திலிருந்து மழை வருகிறது என்பதின் கருத்து இதுவே. மழையைப் பெய்விப்பது இயற்கையின் செயல். அப்படிப் பெய்கின்ற மழையை நமக்கு அனுகூலமாகும்படி செய்யவல்லது எண்ணம். அந்த எண்ணம் மேலானதாயிருக்குமானால் அது புண்ணியச் செயல். இங்ஙனம் இயற்கையின் செயலும் மனிதனுடைய எண்ணமும் ஒன்றோடொன்று இணைக்கப் பெற்றிருக்கின்றன.

மனிதன் செய்கின்ற குற்றத்திற்கு எதிர்ச் செயலாக இயற்கை பெய்யாது பொய்த்துவிடுகிறது. அதனால் உயிர்கள் வருந்துகின்றன. ஆடுமாடுகளும் பறவை இனங்களும் என்ன

குற்றம் செய்தன, அவைகள் ஏன் வருந்தவேண்டும் என்னும் கேள்வி அடுத்தபடியாக வருகிறது. பல தடவைகளில் கெட்டவர் களுடைய வினைப்பயன் மற்றவர்களையும் வந்து தாக்குவ துண்டு. மனிதன் செய்தது பெருங்கேடு. அந்த வினைப்பயன் அவனை வந்து மூண்டுகொண்டது. ஆனால் அவன் துன்பப் பட்டதோடு அது நின்றுவிடவில்லை. அவனுடன் வாழ்ந்துவந்த பலபேர் துன்பப்பட வேண்டியதாயிற்று. பாப புண்ணியத்தில் ஈடுபடாத உயிர்கள் சூழ்நிலையை முன்னிட்டு இன்பத்தையோ துன்பத்தையோ அனுபவித்தே ஆகவேண்டும். நல்லார்க்கிடையி லுள்ள சிற்றுயிர்கள் நல்லார் அடையும் நலத்தை அடைகின்றன. பொல்லார்கிடையிலுள்ள சிற்றுயிர்கள் பொல்லார் அடையும் துன்பத்தில் பங்கெடுத்தே ஆகவேண்டும். இயற்கையின் போக்கு இத்தகையது. உலக நன்மையின் பொருட்டும் நம் சொந்த நன்மையின் பொருட்டும் நம்மை நாம் திருத்தியமைத்துக் கொள்ளுதலே நமது கடமையாகும். நாம் நல்லவர்களாக மாறியமையுங்கால் இயற்கை எல்லாவிதத்திலும் நமக்குத் துணை புரிகின்றது. இந்த இயற்கை என்பது பரம்பொருளின் புறத் தோற்றம். இயற்கை புரிகின்ற உதவியை இன்னொரு பாங்கில் பகர்வோமானால் அது இறைவனுடைய அருள் என்னும் பெயர்பெறுகின்றது. கடவுளின் அருள் நல்லார்க்கே கிட்டுகிறது என்னும் கோட்பாடு இயற்கையின் நடைமுறை மூலமாகவே நமக்கு அறிவுறுத்தப்படுகிறது.

கேள்வி: *(542)* தற்கொலை செய்வது பாபகர்மம் என்று சாஸ்திரம் கூறுகின்றது. ஆனால் சான்றோர் பிராயோப வேசம் செய்வதைப் போற்றுகின்றனர். ஒரே செய்கை பாபமாகவும் புண்ணியமாகவும் எவ்வாறு இருக்கமுடியும்?

பதில்: தற்கொலை வேறு; பிராயோபவேசம் வேறு. வாழ்க்கைத் தத்துவத்தை இன்னதென்று தெரிந்துகொள்ளாத கோழை ஒருவன் தற்கொலை செய்துகொள்ள எண்ணுகிறான். வாழ்க்கையில் பெரும்பாலும் தோல்வி அல்லது ஏமாற்றம் ஏற்பட்டு விட்டால் தற்கொலை செய்துகொள்ள ஒருவனுக்கு எண்ணம் வருகிறது. திடீரென்று தாற்காலிகமாக உண்டான உணர்வினால் தூண்டப்பெற்று ஒருவன் தற்கொலையில் இறங்குகிறான்.

கொஞ்சநாள் அவனைப் பிடித்துவைத்து அந்த உணர்வின் வேகத்தைக் குறைத்துவிட்டால் பிறகு உயிர்வாஞ்சை அவனுக்கு அதிகமாய் விடுகிறது. மேலும், தற்கொலை செய்து கொள்ளுதல் தகாது என்று சாஸ்திரம் கண்டிக்கிறது. நல்ல அரசாங்கங்கள் நியமித்திருக்கிற சட்ட திட்டங்களிலும் தற்கொலைக்கு இடமில்லை. தற்கொலை செய்துகொள்ள முயலுகின்றவர் களுக்குச் சட்டபூர்வமாகத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இனி, பிராயோபவேசம் என்பது இதற்கு முற்றிலும் மாறானது. அது பயங்காளி ஒருவனுடைய செயல் அல்ல. பிரயோவேசத்துக்குச் சில சான்றுகள் எடுத்துக்கொள்ளலாம். ஆஞ்சனேயர் முதலாயினோர், சீதையைத் தேடிக் கண்டு பிடிக்கும்படி தென்திசைக்கு அனுப்பப்பட்டனர். எங்குத் தேடியும் அவளைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு இயலவில்லை. தென்கடற்கரைக்கு வந்துவிட்டார்கள். மேற்கொண்டு தேடிச் செல்லுதற்கு நிலவுலகம் இல்லை. தோல்வியுற்றுத் திரும்புவதை விடப் பட்டினிகிடந்து சாவதுமேல் என்று தீர்மானித்து அவர்கள் பிராயோபவேசம் பண்ணத் தீர்மானித்தனர். அப்பொழுது ஆஞ்சநேயனுக்கு விவேகம் உதித்தது. புதியமுறை ஒன்றைக் கையாண்டான். கடலைக் கடக்க அவனுக்கு இயன்றது. அக்கூட்டத்தார் பிராயோபவேசம் பண்ணச் செய்த தீர்மானம் கோழைத்தனத்தால் வந்ததன்று. வீரத்தனத்தின் விள்ளவு என்று அதைச் சொல்லலாம். குமாரிலபட்டர் என்பவர் ஒருவர் கர்ம காண்ட சாஸ்திரத்தில் நிபுணராயிருந்தார். கர்மகாண்ட சாஸ்திரத்தை வைதிக சம்ஸ்காரம் பெறாத சூத்திரன் ஒருவனுக்குப் புகட்டலாகாது என்பது கர்மகாண்டத்தின் கோட்பாடு. ஆனால் சூத்திர இளைஞன் ஒருவன் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொண்டு அக்கர்மகாண்டக் கோட்பாட்டின் பெரும் பகுதியைக் குமாரிலபட்டரிடமிருந்து தெரிந்துகொண்டான். புகட்டியவருக்குப் புகட்டப்பெற்றவனைப் பற்றிய உண்மை வரலாறு பின்பு விளங்கிற்று. தாம் செய்த குற்றத்துக்கு ஈடாகப் பிராயோபவேசம் செய்வதுதான் முறையென்று அவர் தீர்மானித்தார். நெல்லுமியைக் குவித்து அதனுள் உட்கார்ந்துகொண்டு தீ மூட்டித் தமது உடல் அணு அணுவாய் வெந்துபோகும்படி அவர் செய்துவிட்டார்.

தம்து கொள்கைக்கு ஒப்ப அவர் நடந்துகொண்டது வீரச் செயல். அக்கொள்கை சரியானதென்று நாம் ஆமோதிப்பதில்லை. ஆனால் அவர் பிராயோபவேசம் செய்யத் தீர்மானித்து அதன்படிச் செய்து முடித்தது ஒரு பெரிய வீரச்செயல். அவருடைய உறுதிப்பாடான மனநிலையைப் பாராட்டியாக வேண்டும். அடுத்த பிறவியில் அச்செயலை முன்னிட்டு அவர் கீழ்மையடையமாட்டார். அப்பொழுது எடுத்திருந்த பிறவியிலும் மேலான பிறவிக்கே அவர் போயிருப்பார். ஏனென்றால் அவருடைய மனநிலை பண்பட்டதாயிருந்தது. நெறிதவறிய வாழ்க்கை இனித் தமக்கு வேண்டாமென்று உணர்ந்து அருணகிரிநாதர் கோபுரத்தினின்று கீழே குதித்தார். அது பிராயோபவேசத்தோடு சேர்ந்தது. ஆனால் முருகனுடைய அருளால் அவர் காப்பாற்றப்பட்டார். தாம் இன்னும் கடவுளைக் காணவில்லையே என்று உருகி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தம்மையே வாளால் வெட்டிக்கொள்ள முந்தினார். அப்படித் துணிந்தபொழுதே அவருக்குக் கடவுள் காட்சி கிட்டியது. அவருடைய செயல் தற்கொலையோடு சேராது. பிராயோபவேசத்தோடு சேர்ந்ததாகும். ஆனால் அவருக்கு ஈசுவரானுபூதி கிட்டிவிட்டது. தேகத்தியாகம் செய்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஹிந்துக்களிடமிருந்து தீண்டத்தகாதவர்களைப் பிரித்துவைக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் முயன்றபொழுது அதை முன்னிட்டுத் தாம் பட்டினிகிடந்து சாக மகாத்மா காந்தி தீர்மானம் செய்தார். அது தற்கொலையோடு சேராது. பிராயோபவேசத்துக்கு அது நல்ல எடுத்துக்காட்டு ஆகும். அது ஆண்மை நிறைந்த செயல். விவேகத்தின் விளைவாக வந்த செயலும் அதுவே. அப்பெருமுயற்சியின் பயனாக அரசாங்கமே தனது தீர்மானத்தைத் திருத்தியமைக்க வேண்டி வந்தது. பிராயோபவேசச் செயல் எப்பொழுதுமே பேரறிவையும், பேராற்றலையும் அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் சாஸ்திரம் அதை ஆமோதிக்கிறது.

தற்கொலை செய்துகொள்ள முயலும் அறிவிலிகளை உலகில் ஏராளமாகக் காணலாம். பிராயோபவேசம் செய்ய முயலும் வீரர்களையும், தீரர்களையும் காண்பது அரிதிலும் அரிது.

கேள்வி: *(543)* மனிதன் பாபம் செய்தால் விலங்கின மாகவும், புண்ணியம் செய்தால் தேவர் கூட்டத்திலும் பிறக்கிறான் என்றும், இரண்டையும் கலந்து செய்தால் மனித னாகப் பிறக்கிறான் என்றும், பிரம்மத்தை அடையவேண்டு மானால் இரண்டையும் செய்யக் கூடாது என்றும் ஒருவர் பிரசங்கம் செய்தார். பாபம் புண்ணியம் ஆகிய இரண் டையும் செய்யாமலிருப்பது எப்படி?

பதில்: மனிதன் செய்கின்ற ஒவ்வொரு கர்மத்திலும் பாபம், புண்ணியம் இரண்டும் கலந்தே இருக்கின்றன. இது புண்ணிய கர்மம், இது பாப கர்மம் என்று எக்கர்மத்தையும் பாகுபடுத்த முடியாது. சூழ்நிலையையும், மனப்பான்மையையும் அடிப்படையாகக்கொண்டு ஒரு கர்மம் மிகைபட்ட பாபமுடைய தாகவோ அல்லது புண்ணியமுடையதாகவோ மாறுகிறது. முன்னேற்றம் அடைய முயலுகிற மனிதன் புண்ணியம் மிகுந் திருக்கும் கர்மத்தையே ஓயாது செய்து வரவேண்டும். நாள டைவில் அப்புண்ணியம் மிகுந்த கர்மத்தையும் பற்றற்றவனாகச் செய்யவேண்டும். பற்று வைக்காது செய்கிற கர்மம் மனிதனைப் பந்தப்படுத்துவதில்லை. சரீரம் இருக்கும் பரியந்தம் ஏதேனும் ஒரு கர்மம் நிகழ்ந்துகொண்டே இருக்கும். அக்கர்மத்தில் சிறிதேனும் பற்று வைக்காது விட்டுவிட்டால் அந்த ஆத்ம சாதகன் கர்மம் செய்தும் செய்யாத நிலையில் இருக்கிறான். கர்மத்தை விடுதல் என்பதனுடைய கருத்து இதுவே. உண்மையில் கர்மத்தை விடுவது அல்ல, கர்மபலனில் பற்றை விடுவதுதான் ஆத்ம சாதனத்தின் நோக்கம். பற்றற்றுக் கர்மம் செய்து வருகின்றவன் நல்வினையை ஏராளமாகச் செய்தாலும் அந்த வினைக்குக் கர்த்தாவாகத் தன்னை நினைப்பதில்லை. பகவத்கீதையில் அத்தியாயம் 4 சுலோகம் 18 இக்கோட்பாட்டை தெளிவுபட விளக்குகிறது. அந்நிலையில் இருப்பவன் கர்மம் செய்வதற்கிடையில் கர்மத்தைக் கடந்தவனாகிறான். அவன் பிரம்மத்தை அடைகிறான்.

கேள்வி: *(544)* உலகில் எல்லாப் பொருளுக்கும் உயிர் உண்டு என்றால் முப்பது கீரைச் செடியைக் கொன்று ஒருவன் பசி தீர்க்கிறான். மற்றொருவன் ஒரு உயிர்

மாட்டைக் கொன்று அறுபது பேர் பசி தீர்க்கிறான். இதில் எந்த ஜீவகாருண்யம் நல்லது?

பதில்: அரிசி ஒவ்வொன்றுக்கும் உயிர் உண்டு. அதைச் சமைத்து உண்பவர் அதிகம் பாபம் செய்கிறார்கள் என்னும் நியமனம் இல்லை.

கீரை, காய்கறி ஏராளமாய் அகப்படும் உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பவன் மாட்டைக் கொல்லலாகாது. செடி கொடிகளைக் கொல்லுதலில் குற்றமில்லை. செடி கொடிகள் இல்லாத திபேத் போன்ற நாடுகளில் வசிப்பவர்கள் ஆட்டைக் கொன்று தின்று உயிர் வாழ்கின்றனர். அந்தச் சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு ஆட்டைக்கொன்று தின்பது பெரிய ஹிம்சை ஆகாது. மேலும் உயிர் வாழ்ந்திருப்பவர்கள் அனைவரும் ஓரளவு மற்ற உயிர் களுக்கு ஹிம்சை செய்தே ஆகவேண்டும். அப்படி ஹிம்சை செய்யாவிட்டால் தாங்களே அழிந்துபட்டுப் போவார்கள். உடல் வாழ்க்கைக்கு அப்பாலிருக்கிற பாரமார்த்திகப் பெரு நிலையை ஞானத்தால் அடைக்கின்றவர்களே ஹிம்சையைக் கடந்த நிலைக்குப் போகின்றார்கள். ஈண்டு இருப்பவர்கள் கூடிய வரையில் ஹிம்சையைக் குறைத்துப் பழகவேண்டும். ❑

30. கர்ம தத்துவம்

கேள்வி: *(545)* ஒரு மனிதன் தான் செய்யவேண்டிய நித்திய கர்மங்களை முறைபிறழாது செய்துவிட்டுப் பொய், திருட்டு, கொலை ஆகிய உலகில் எவ்வளவு தீய காரியங்கள் உண்டோ அவ்வளவும் செய்கிறான். ஆனால் அவன் நித்திய கருமங்களை மட்டும் நிறுத்தி விடுவதில்லை. அதனால் அவனுக்கு நற்பலன் உண்டா?

பதில்: பொதுவாக நித்திய கர்மங்கள் எவை என்பதை நாம் முதலில் அறிந்துகொள்வோம். ஒரு மனிதன் எக்கர்மத்தைச் செய்தால் அவனுக்குப் புதிய சிறப்பு ஒன்றும் வந்து அமைவதில்லையோ, ஆனால் ஏற்கனவே பெற்றுள்ள சிறப்புக்கள் எல்லாம் பாதுகாத்து வைக்கப்பட்டு இருக்கின்றனவோ, அது அவனுக்கு நித்திய கர்மமாகிறது. புதிய சிறப்புக்களை உண்டு பண்ணுகின்ற கர்மம் நைமித்திக கர்மம் ஆகிறது. மாணாக்கன் ஒருவனுக்குப் பாடங்கள் கற்பது நைமித்திக கர்மம். கல்வி பயின்றான முதியோர்களுக்கு நல்ல புஸ்தகங்கள் படித்துக் கொண்டிருப்பது நித்திய கர்மம். அதே பாங்கில் பண்பாடு அடையாத பாமரன் ஒருவன் கடவுள் வழிபாடு செய்து பழகுவானாகில் அது அவனுக்கு நைமித்திக கர்மம். பின்பு பண்பாடடைந்துள்ள நன்மகன் ஒருவன் கடவுள் வழிபாடு செய்வானாகில் அது அவனுக்கு நித்திய கர்மம். நீராடுவது, உண்பது போன்ற செயல்கள் மக்கள் அனைவருக்கும் நித்திய கர்மம். நித்திய கர்மங்களைச் செய்வதால் புதிய புண்ணியம் ஒன்றும் வருவதில்லை. ஆனால் அவைகளைச் செய்யாது புறக்கணித்து விட்டால் கேடுவரும். கடவுள் வழிபாடு என்னும் நித்திய கர்மத்தைச் செய்து வருகிற மனிதன் நல்லொழுக்கம்

உடையவனாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அப்படி யல்லாது அவன் பொய், திருட்டு, கொலை ஆகிய தீய கர்மங்களில் ஈடுபடுவானாகில் அவன் நன்மகனும் அல்லன்; பாமரர் கூட்டத்தைச் சேர்ந்தவனுமல்லன்; துஷ்டர் கூட்டத்தைச் சேர்ந்தவன் ஆகிறான். அவனிடத்துப் பண்பாடும் இல்லை; நாகரிகமும் இல்லை. அவன் புரிகின்ற நித்திய கர்மங்களெல்லாம் வெறும் வெளிவேஷம். கயவன் என்றே அவனைப் புறக்கணித்து வைப்பது முறை.

கேள்வி: *(546)* பம்பரத்தை ஒருவன் சுழற்றிவிட்ட வேகத்தால் சுழல்கிறது. சுழலும் பம்பரம் ஏதோ ஒரு இடை யூறால் நின்று விடுகிறது. சுழற்றிவிட்ட வேகமும் வீணே போய்விடுகிறது. பம்பரத்தை மறுபடி எடுத்துச் சுழற்றி விட்டால்தான் சுழலும். ஒரு ஜீவனுக்கு முன் செய்த நல்வினை தீவினைக்கொப்பப் பிறப்பு ஏற்பட்டு இடையில் அகாலமரணத்தால் அச்சரீரம் போய்விட்டால் முன் செய்த நல்வினை தீவினைகள் என்ன ஆகும்? அகால மரண மடைந்த ஜீவர்களின் நிலைமை எப்படியிருக்கும்?

பதில்: ஒரு ஜீவனுடைய பிராரப்த கர்மம் முழுதும் ஓய்ந்து போன பிறகு வருவது இயற்கை மரணம். முழுதும் ஓய்ந்து போவதற்கு முன்பு அகஸ்மாத்தாக வருவது துர்மரணம். துர்மரணத்தை முன்னிட்டு எஞ்சியிருக்கும் பிராரப்த கர்மம் அடுத்துவரும் பிறவிக்குரிய பிராரப்த கர்மத்தோடு சேர்ந்துவிடு கிறது. ஒரு ஜீவனுக்குரிய கர்மத்தில் மூன்று பிரிவுகள் உண்டு. ஒரு பிறவியில் பலன் தந்துகொண்டிருப்பது பிராரப்த கர்மம். அடுத்த பிறவியில் பலன்தர ஆயத்தமாய் இருக்கும் கர்மம் ஆகாமிய கர்மம். பின்வரும் பல பிறவிகளுக்காக என்று சேர்ந்துள்ள கர்மம் சஞ்சித கர்மமாகும். ஒவ்வொரு பிறவியிலும் இந்த மூன்றுவிதக் கர்மங்களுக்கும் புதிய சேமிப்பை ஜீவன் உண்டுபண்ணிக்கொண்டே இருக்கிறான். ஆகையால் அடுத்து வரும் பிறவிக்குக் கர்மபலன் எங்கே என்னும் கேள்விக்கு இடமில்லை.

துர்மரணத்தில் மறையும் ஜீவன் ஒருவன் கொஞ்ச காலத்துக்கு யாதனாசரீரம் என்னும் ஒரு சூக்ஷ்ம சரீர

நிலையில் இருக்கிறான். அந்த நிலையைப் பேய், பிசாசு என்று பகர்வதும் உண்டு. ஆனால் துர்மரணத்தில் மறையும் ஜீவன் சத்கர்மமே வடிவெடுத்திருப்பானாகில் அவன் பேய், பிசாசு ஆவதில்லை. இயற்கை மரணத்தில் சாகும் ஜீவர்கள் போன்று நித்திரை நிலைக்கு அவன் போய்விடுகிறான்.

கேள்வி: *(547)* ஜீவன் இரு வினையால் கட்டுண்டதாய் இருக்கிறது. அவ் இருவினையும் தீர்ந்தபின் இறைவன் தாளைச் சேருகிறது அல்லது ஒன்றாகிறது என்று சொல்லப் படுகிறது. ஆதியில், முதல் முதலில் ஜீவன் என்ன வினை செய்து பிறக்கிறது? ஜென்மமே இல்லாத காலத்தில் இதற்கு வினையேது? பரமாத்மா ஏன் பிறப்பிக்கவேண்டும்?

பதில்: கர்மம் முற்றுப்பெறும் பொழுது ஜீவன் பரமாத் மாவில் சேர்ந்து விடுகின்றான் என்பதைப்பற்றி ஐயம் திரிபு அற ஆன்றோர்கள் அனைவரும் பகர்ந்திருக்கின்றனர். ஆனால் ஜீவனுக்கு ஜீவபோதம் என்கின்ற துவக்கம் எப்படி உண்டா யிற்று என்பதை அறிந்துகொள்ள யாருக்கும் இயலுவதில்லை. இயற்கையை ஆராய்ந்து பார்ப்போம். கல்லுக்கு உயிர் இருக்கிறது என்பது ஞானிகளின் கொள்கை. மலை ஒன்று இருக்கிறது. உயிர்த்தத்துவம் அதனிடத்து இலங்குகிறது என்ப தைப் பௌதிக விஞ்ஞானிகளும் விளக்கிக் காட்டுகின்றனர். ஆனால் மலை என்பது ஓர் உயிரா அல்லது பல உயிர்களின் குவியலா என்பதை வரையறுத்துச் சொல்ல முடியாது. அதை விடத் தெளிவான மற்றொரு சான்றை எடுத்துக்கொள்வோம். மரத்தில் உயிர்த்தத்துவம் இன்னும் நன்றாக ஒளிர்கிறது. அதற்கு உறக்கம் விழிப்பு, பசி தாகம் முதலியன இருக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் தெளிவுபடக் கூறுகின்றனர். மரங்களில் சில ஓர் உயிராக இருந்துவருகின்றன. தென்னை மரம் ஒன்றை ஓர் உயிர் என்று சொல்லிவிடலாம். ஆனால் ஆலமரத்தை அப்படிச் சொல்லமுடியாது. ஒரு மரத்திலிருந்து பல துண்டுகளை வெட்டியெடுத்துப் பூமியில் பதியம் போட்டு வேறு பல மரங்களை உண்டுபண்ணிவிடலாம். அத்தகைய ஆலமரமாக வடிவெடுத்திருப்பது ஒரு ஜீவனா அல்லது பல ஜீவன்களா என்று பாகுபடுத்திச் சொல்லமுடியாது.

ஜீவர்களுக்குத் துவக்கநிலையில் தனி வியக்தி கிடையாது. ஆதலால் தனி வினைப்பயனும் கிடையாது. மேல்நிலைக்கு வரும்பொழுது சிறிது சிறிதாகத் தனி வியக்தி வருகிறது. வினைப்பயனின் விளைவும் அப்பொழுதே வந்துவிடுகிறது. உண்மையில் ஆரம்பதசை என்பது இல்லை. ஆத்மாவுக்கு முடிவு இல்லாததால் துவக்கமும் இல்லை. ஆனால் தன்னை ஜீவாத்மன் என்று ஓர் உபாதியோடு இணைத்துப் பொருள் படுத்திக்கொள்கிற பாங்குக்கு முடிவு இருப்பதால் துவக்கமும் இருந்தே ஆகவேடும் என்று யூகிக்க இடமிருக்கிறது. பின்பு ஜீவபோதத்தை ஜீவன் ஒருவன் எப்பொழுது எப்படிப் பெற்றான் என்பதை நிர்ணயிக்க யாருக்கும் முடிவதில்லை. நமக்கு இரவுதோறும் கனவு வருகிறது. அந்தக் கனவு நிலை நமக்கு நாமே உண்டுபண்ணிக் கொண்டுள்ள புதிய ஜீவநிலை ஆகிறது. அப்படிக் கனவு காண்கின்றபொழுது கனவு காண்கின்ற மனிதன் இன்னும் சில மனிதர்களைத் தனது கனவு நிலையில் சிருஷ்டிக்கிறான். அந்த ஜீவர்களையெல்லாம் அவனுடைய சிருஷ்டி என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அவனுடைய மனத்தோற்றத்துக்கு அந்நியமாக அந்தக் கனவு ஜீவர்கள் இல்லை. கனவு ஜீவர்களுக்கும் நன்மை தீமைகள் ஆகிய வினைகள் இருப்பதாகக் கனவில் தென்படுகிறது. அந்த வினைகளுக்குத் துவக்கம் எது என்பதைக் கனவு காண்பவனே கண்டுபிடிக்க முடியாது. தன் கனவுக்கு ஏற்பட்டுள்ள துவக்கத்தையே கண்டுபிடிக்க அவனுக்கு இயலுவ தில்லை. இது நாள்தோறும் நாம் பெற்றுவருகிற அனுபவம். இனி, பல ஜன்மாந்தரங்களுக்கு ஏதுவாக இருக்கிற ஜீவபோதம் நமக்கு எப்படி வந்தது என்பதைக் கண்டுபிடிக்க யாருக்கும் இயலாது.

புத்தர் பெம்மானுடைய பூர்வ விருத்தாந்தங்களை அவர் ஞான அனுபவத்தில் பெற்றதைப்பற்றிய விளக்கம் ஒன்று இருக்கிறது. பழைய பிறவிகள் ஐந்நூறு அவருடைய காட்சிக்கு எட்டின. அதற்கு அப்பாலிருந்தவைகள் தூரத்தில் போகும் காட்சி படிப்படியாக மறைந்து விடுவதுபோன்று அவருக்குப் புலப்படாது போய்விட்டதாம். ஜீவர்கள் எல்லாரையும் பற்றிய உண்மையும் இதுவே. கர்மமற்ற நிலையிலிருந்து கர்மமுற்ற

நிலைக்கு நாம் எப்போது எப்படி வந்தோம் என்பதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. கனவு நமக்கு எப்படியோ வந்துவிடுவது போன்று இந்த ஜீவபோதம் எப்படியோ வந்து விட்டது. இனி இதை ஒழிக்க முயலுவதே நாம் செய்யக்கிடக்கும் கடமையாகும்.

கேள்வி: *(548)* அவரவர் செய்த வினைப் பிரகாரம் ஆண்டவன் சுகதுக்கத்தையளிக்கிறார் என்று சாஸ்திரங்களும் பெரியோர்களும் கூறுகின்றனர். அவர் கருணா சொரூபர், தனிப்பெருங் கருணையர் என்றும் கூறுகின்றனர். நாம் செய்த நல்வினை தீவினைக்கேற்பச் சுகதுக்கமாகிய கூலியை இறைவன் கொடுக்கிறாரென்றால் சாதாரண கருணையற்ற மனித எஜமானன் கூட வேலைக்கேற்ற கூலியைக் கொடுத்துவிடுகின்றானே! தனிப்பெருங் கருணையன், தயாபரன் என்றெல்லாம் இறைவனைப் புகழ்ந்திருப்பதில் அர்த்தமென்ன இருக்கிறது? அவ்வாறு கருணையுடையவரானால் அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற முதுமொழிப்படி எல்லா ஜீவர்களுள்ளும் அந்தர்யாமியாய் இருந்து ஆட்டுவிக்கிற கடவுள் முதலிலிருந்தே எல்லா ஜீவர்களையும் தீயவழியில் செலுத்தாமல் நல்வழியிலேயே செலுத்தி எல்லா ஜீவர்களுக்கும் சுகத்தை ஏன் கொடுக்கக் கூடாது? பகவத்கீதை அத்தியாயம் 16 சுலோகம் 19ல் "பாவிகளை அசுரயோனிகளில் நான் தள்ளுகிறேன்" என்று கருணையற்றவர் போலப் பகவான் சொல்லுகின்றாரே, கடவுளைக் கருணைவடிவினன் என்பது எப்படிப் பொருந்தும்?

பதில்: இறைவன் கருணாகரன் என்பதனுடைய பொருள் நம்மை எப்பொழுதுமே சுகத்தில் வைத்திருப்பவன் என்பதல்ல. பல பிள்ளைகளுக்கு ஆசிரியராக அமைந்துள்ள ஒருவர் அப் பிள்ளைகளின் நலத்திலும் முன்னேற்றத்திலும் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார். பாடம் படிக்காது பிள்ளைகளை விளையாடிக் கொண்டிருக்கும்படி விட்டுவிட்டால் அச்செயல் பிள்ளைகளுக்குச் சுகத்தை உண்டுபண்ணும். ஆனால் சுகம் போன்று தென்படும் விளையாட்டுத்தனம் உண்மையில்

சிறுவர்களின் நலத்துக்கானதன்று. படிக்கவேண்டிய வேளையில் பாடத்தைப் படிக்கும்படி ஆசிரியர்கள் பிள்ளைகளை வற்புறுத்துகின்றனர். சில வேளைகளில் சிறுவர்களைத் தண்டிக் கின்றனர். இன்னும் ,சிலவேளைகளில் அவர்களிடம் தாமும் சிறுவனாக இருந்துகொண்டு மகிழ்வுற்று விளையாடுகின்றனர். இத்தனை விதச் செயல்களுக்கிடையில் பிள்ளைகளுடைய நெறியான வாழ்க்கையில் நல்லாசிரியன் ஒருவன் எப்பொழுதும் கண்டிப்பாக இருந்துவருகிறார். அத்தகைய ஆசிரியரின் செயலை சீரியது என்று நாம் பாராட்டுகின்றோம். இறைவன் கருணாகரன் என்பதனுடைய பொருள் இதுவே. வெவ்வேறு உயிர்கள் அடைந்துள்ள பரிபாகத்துக்கு ஏற்ப அவர்களைப் படிப்படி யாகப் பரமன் பக்குவப்படுத்திக்கொண்டு வருகிறார். வினைப் பயனை ஒட்டி கீழான பிறவி எடுக்கும்படி சில உயிர்களைக் கீழ்மையில் தள்ளுவதிலும் பொருள்மிக உண்டு. அத்தகைய கீழ்மையில் அந்த ஆத்மா பெறவேண்டிய அனுபவங்கள் பல இருக்கின்றன. விதவிதமான பிறவிகள் வாயிலாகவும் இறைவன் உயிர்களைச் சிறிது சிறிதாகப் பக்குவப்படுத்தி வருகின்றார். ஒரு ஜீவனுக்கு இன்பம் எவ்வளவு தேவையோ துக்கம் அவ்வளவு தேவையாய் இருக்கிறது. துன்பத்தின் மூலம் ஜீவன் பரிபாகம் அடைகின்றான். எனவே துன்பம் வேண்டப் படாததல்ல. எது தனக்கு துன்பத்தைத் தருகிறதோ அது பாபச் செயல்.. பாபச் செயலும் ஜீவனுக்குப் பாடம் கற்பிப்பதற்கு நன்கு பயன்படுகிறது. ஆகவே இறைவனுடைய பெரிய திட்டத்தில் இவை அனைத்துக்கும் முக்கியமான இடம் உண்டு. இறுதியில் உயிர்களைத் தம்மயமாக்கித் தம் சொரூபத்தில் எடுத்துக் கொள்கிறார். அத்தகைய சீரிய செயலை முன்னிட்டே அவர் கருணாகரன் என்று அழைக்கப்படுகிறார். ❑

31. கர்மகாண்டம்

கேள்வி: *(549)* கும்பகோணம் காவிரி ஆற்றிலுள்ள செட்டிப் படித்துறையில் நூற்றுக்கணக்கான சைவப் பெருமக்கள் கூடிக் காவிரி அன்னைக்குப் பால் முழுக் காட்டுச் செய்திருக்கிறார்கள். அதாவது செம்பு செம்பாகப் பசும் பாலைக் கறந்தெடுத்துச் சென்று காவிரி ஆற்றில் கொட்டுவது மூடத்தனமில்லையா? இதற்குப் பெயர் பக்தியா? போதுமான பாலில்லாமல் நம் நாட்டில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் அலறித் துடித்துச் சாகின்ற நிலையைக் கேள்விப்படுகிறோம். பத்திரிகை வாயிலாக அறிகிறோம். அதேநேரத்தில் ஆற்றில் பாலைக்கொண்டு போய்க் குடம் குடமாகக் கொட்டுவதையும் பார்க்கிறோம். சைவப் பெருமக்களுக்கு இது மூடத்தனமில்லையா?

பதில்: இக் கேள்வியைக் கேட்டிருக்கின்றவர் சைவப் பெருமக்களை மட்டும் பிரித்தெடுத்துப் பேசுகிறார். இப்பாங்கில் தேவாராதனை செய்கின்ற வைஷ்ணவப் பெருமக்களும் இருக்கின்றார்கள். பொருளை வீண்விரயம் பண்ணும் ஆரா தனை நல்ல ஆராதனையாகுமா என்பது கேள்வி. பண் டொரு காலத்தில் நம் நாட்டில் உணவுப் பொருள் ஏராளமாய் இருந்தது. மக்கள் வேண்டியவாறு அருந்திய பிறகு மேற்பட்டும் உணவுப்பொருள் மலிந்து கிடந்தன. செழிப்புற்றிருந்த அக் காலத்தில் தேவாராதனையின் பெயரால் உணவுப் பொருள்களை வேண்டியவாறு பயன்படுத்த அந்தச் சூழ்நிலை இடம் தந்தது. இன்றைக்கு நம் நாட்டில் நிலைமை வேறு போக்கில் இருக் கிறது. கடவுளுக்கு நைவேத்தியமாகவோ, அபிஷேகமாகவோ [illegible] உணவுப் பொருள்களை எல்லாம் பத்திரமாகச் [illegible]

சிறுவர்களின் நலத்துக்கானதன்று. படிக்கவேண்டிய வேளையில் பாடத்தைப் படிக்கும்படி ஆசிரியர்கள் பிள்ளைகளை வற்புறுத்துகின்றனர். சில வேளைகளில் சிறுவர்களைத் தண்டிக் கின்றனர். இன்னும் ,சிலவேளைகளில் அவர்களிடம் தாமும் சிறுவனாக இருந்துகொண்டு மகிழ்வுற்று விளையாடுகின்றனர். இத்தனை விதச் செயல்களுக்கிடையில் பிள்ளைகளுடைய நெறியான வாழ்க்கையில் நல்லாசிரியன் ஒருவன் எப்பொழுதும் கண்டிப்பாக இருந்துவருகிறார். அத்தகைய ஆசிரியரின் செயலை சீரியது என்று நாம் பாராட்டுகின்றோம். இறைவன் கருணாகரன் என்பதனுடைய பொருள் இதுவே. வெவ்வேறு உயிர்கள் அடைந்துள்ள பரிபாகத்துக்கு ஏற்ப அவர்களைப் படிப்படி யாகப் பரமன் பக்குவப்படுத்திக்கொண்டு வருகிறார். வினைப் பயனை ஒட்டி கீழான பிறவி எடுக்கும்படி சில உயிர்களைக் கீழ்மையில் தள்ளுவதிலும் பொருள்மிக உண்டு. அத்தகைய கீழ்மையில் அந்த ஆத்மா பெறவேண்டிய அனுபவங்கள் பல இருக்கின்றன. விதவிதமான பிறவிகள் வாயிலாகவும் இறைவன் உயிர்களைச் சிறிது சிறிதாகப் பக்குவப்படுத்தி வருகின்றார். ஒரு ஜீவனுக்கு இன்பம் எவ்வளவு தேவையோ துக்கம் அவ்வளவு தேவையாய் இருக்கிறது. துன்பத்தின் மூலம் ஜீவன் பரிபாகம் அடைகின்றான். எனவே துன்பம் வேண்டப் பட்டாததல்ல. எது தனக்கு துன்பத்தைத் தருகிறதோ அது பாபச் செயல்.. பாபச் செயலும் ஜீவனுக்குப் பாடம் , கற்பிப்பதற்கு நன்கு பயன்படுகிறது. ஆகவே இறைவனுடைய பெரிய திட்டத்தில் இவை அனைத்துக்கும் முக்கியமான இடம் உண்டு. இறுதியில் உயிர்களைத் தம்மயமாக்கித் தம் சொரூபத்தில் எடுத்துக் கொள்கிறார். அத்தகைய சீரிய செயலை முன்னிட்டே அவர் கருணாகரன் என்று அழைக்கப்படுகிறார். ☐

31. கர்மகாண்டம்

கேள்வி: *(549)* கும்பகோணம் காவிரி ஆற்றிலுள்ள செட்டிப் படித்துறையில் நூற்றுக்கணக்கான சைவப் பெருமக்கள் கூடிக் காவிரி அன்னைக்குப் பால் முழுக் காட்டுச் செய்திருக்கிறார்கள். அதாவது செம்பு செம்பாகப் பசும் பாலைக் கறந்தெடுத்துச் சென்று காவிரி ஆற்றில் கொட்டுவது மூடத்தனமில்லையா? இதற்குப் பெயர் பக்தியா? போதுமான பாலில்லாமல் நம் நாட்டில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் அலறித் துடித்துச் சாகின்ற நிலையைக் கேள்விப்படுகிறோம். பத்திரிகை வாயிலாக அறிகிறோம். அதேநேரத்தில் ஆற்றில் பாலைக்கொண்டு போய்க் குடம் குடமாகக் கொட்டுவதையும் பார்க்கிறோம். சைவப் பெருமக்களுக்கு இது மூடத்தனமில்லையா?

பதில்: இக் கேள்வியைக் கேட்டிருக்கின்றவர் சைவப் பெருமக்களை மட்டும் பிரித்தெடுத்துப் பேசுகிறார். இப்பாங்கில் தேவாராதனை செய்கின்ற வைஷ்ணவப் பெருமக்களும் இருக்கின்றார்கள். பொருளை வீண்விரயம் பண்ணும் ஆரா தனை நல்ல ஆராதனையாகுமா என்பது கேள்வி. பண் டொரு காலத்தில் நம் நாட்டில் உணவுப் பொருள் ஏராளமாய் இருந்தது. மக்கள் வேண்டியவாறு அருந்திய பிறகு மேற்பட்டும் உணவுப்பொருள் மலிந்து கிடந்தன. செழிப்புற்றிருந்த அக் காலத்தில் தேவாராதனையின் பெயரால் உணவுப் பொருள்களை வேண்டியவாறு பயன்படுத்த அந்தச் சூழ்நிலை இடம் தந்தது. இன்றைக்கு நம் நாட்டில் நிலைமை வேறு போக்கில் இருக் கிறது. கடவுளுக்கு நைவேத்தியமாகவோ, அபிஷேகமாகவோ பயன்படுத்தும் உணவுப் பொருள்களை எல்லாம் பத்திரமாகச்

சேகரித்து மக்களுக்குப் பிரசாதமாக வழங்குதலே நல்ல சமாராதனையாகும். அப்படிச் செய்யாது வழிபாட்டின் பெயரால் உணவுப் பொருளை வீண்விரயம் பண்ணுகிறவர்கள் கடவுளுக்கு அபராதம் செய்கின்றவர்களாகிறார்கள். மக்களை நடமாடும் தெய்வ சொரூபமாகக் காண இயலாதவர்கள் அவரை எங்குச் சென்றும் எவ்விதமான ஆராதனை செய்தும் காணமாட்டார்கள். தங்களுடைய வீணான ஆடம்பரத்தை வெளிப்படுத்தியதே அவர்களுடைய ஆராதனையின் விளைவாகும். இத்தகைய ஆராதனை முறையை அசுர இயல்பு படைத்த ஆராதனை என்று சாஸ்திரம் இயம்புகிறது. அறிவுடையோர்க்கு இத்தகைய ஆராதனை ஏற்புடையதாகாது. கடவுள் வழிபாட்டின் மூலம் மக்கள் பலபேருக்கு உணவையும் நல்லறிவையும் வழங்குதலே இறைவனுக்கு உகந்த ஆராதனையாகும்.

கேள்வி: *(550)* ரிஷிகளும் மகான்களும் இதுவரை போற்றியும் ஆதரித்தும் வந்துள்ள வேதத்தையும் வேதத்தில் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ள வேள்வியையும் சமணர்களும், பௌத்தர்களும் கண்டிப்பதேன்?

பதில்: வேதம் என்னும் சொல்லின் உட்பொருளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இயற்றப் பெற்றுள்ள ஏதோ ஒரு நூலை வேதம் என்ற சொல் குறிப்பதன்று. இயற்கையே வேதம் என இயம்பப்படுகிறது. வேதம் அழியாதது என்று சொல்லுமிடத்து இயற்கை அழியாதது எனப் பொருள்படுகிறது. அப்படியல்லாது நூலை வேதம் என்றால் அது அழிந்து போகக்கூடியது. நான்கு வேதங்களில் பல பகுதிகள் ஏற்கனவே மறைந்து போய்விட்டன. இயற்கையும், இயற்கையின் நடைமுறையும் யாண்டும் நிலைத்திருப்பவைகள். ஆகவே வேதத்தையும் வேள்வியையும் நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது இயற்கையையும் இயற்கையின் நடைமுறையையும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்பவர் ஆகிறோம். இயற்கையின் நடைமுறையில் ஒருபகுதியைப் போற்றுகிற பெரியவர்கள் இருக்கிறார்கள். அதே பகுதியைத் தூற்றுகிற பெருமக்களும் இருக்கிறார்கள். வேதத்தையும், வேள்வியையும் ரிஷிகள் எல்லோரும் போற்றினார்களென்று பகர்வது உண்மை

அல்ல. ஸ்ரீ கிருஷ்ணபகவானே கீதையில் "த்ரைகுண்ய விஷயாவேத. நிஸ்த்ரைகுண்ய பவார்ஜுன" என்று சொல்லி யிருக்கிறார். "முக்குணமயமானது வேதம். நீ அதற்கு அப் பாற்பட்டவன் ஆவாயாக" என்று சொன்னபொழுது வேதம் என்னும் இயற்கைக்கு அப்பால் ஒருவன் போகவேண்டும் என்று அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். நமக்கு ஒவ்வாதவர் ஒருவர் வேத நிந்தை செய்தால் அவர் செயலைக் கீழ்மைப்படுத்தி நாம் வியாக்கியானம் செய்கிறோம். சமணர்களும், பௌத் தர்களும் பயன்படாததும், உயிர்ப்பலியை அடிப்படையாகக் கொண்டதுமான வேள்வியைத் தாக்கினார்கள். அப்படி அவர்கள் செய்ததில் குற்றமொன்றுமில்லை. ஆதிசங்கரரே வேதத்திலுள்ள கர்மகாண்டப் பகுதிகள் பலவற்றைத் தீவிரமாகக் கண்டித்திருக்கிறார். மற்றவர்கள் ஏன் அவைகளைக் கண்டிக்க லாகாது? இயற்கையிலும், இயற்கையின் நடைமுறையிலும் நமக்கு ஒவ்வாதிருக்கும் பகுதிகளைக் கண்டிப்பது முறை.

கேள்வி: *(551)* போர்க்களத்திலே எதிரியைக் கொல்கின்றவனும் எதிரியால் கொல்லப்படுகின்றவனும் வீர சொர்க்கம் பெறுகின்றார்கள் என்பது கொள்கை. அதேபோன்று யாகத்திலே ஆகுதியாகத் தரப்பட்ட உயிர்களும், ஆகுதியாகத் தருகின்ற எஜமானனும் நற்கதி யடைகின்றார்கள் என்பது வேதவாக்கு. யக்ஞத்தில் பசுக் களை (ஆடு முதலியவைகளை) ஆகுதியாகத் தரலாகாது என்று முடிவு கட்டியது வேதப் பிரமாணத்துக்கு முரண் பட்டதல்லவா?

பதில்: போர்க்களத்திலே மடிப்பவனும், மடிபவனும் வீர சொர்க்கம் பெறுகிறார்கள் என்று முடிவுகட்ட யுக்தி வேண்டி யவாறு இடங்கொடுக்கின்றது. அதன் உண்மையை நாம் நன்கு உணரலாம். ஆனால் அதில் அடங்கியிருக்கிற உண்மை போரில் மடிகின்ற எல்லார்க்கும் பொருந்தாது. போரிலே உயிர்களைப் பாழாக்குகின்றவர்கள் எல்லாருக்குமே பொருந்தாது. எப்படி என்று பார்ப்போம். போர் புரிகின்றவன் எப்பொழுதும் சுயநலத்துக்கென்று சண்டையிடலாகாது. கேட்டை அகற்றி நலத்தை நிலைநாட்டுதற்கென்றே போராட வேண்டும். நலத்தை

நாடும் இருவர்க்கிடையில் போராட்டம் கிடையாது. ஏதேனும் ஒருகட்சி முறைதவறி நடந்தால்தான் போர் தொடுக்க ஹேது ஏற்படுகிறது. அக்கிரமத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவன் போர் புரியத் துணிகின்றான். சாவதற்கு அஞ்சுதலில்லை எனினும் சுயநலம் என்னும் அரக்கத்தன்மையால் தூண்டப் பெறுவதால் அவனிடத்து மிளிர்வது வீரம் அல்ல, அசுரனுக்குரிய சூரத் தன்மையேயாம். அவன் மடியுங்கால் தீமை மடிகிறது. அவன் மேன்மையடைவது மனம் மாறும்பொழுதேயாம். மனம் நல்லதாக அவனுக்கு மாறாவிட்டால் ஒவ்வொரு மரணமும், ஒவ்வொரு ஜனனமும் அவன் இன்னும் அதிகமாகக் கீழ்மை அடைவதற்கே முகாமையாகும். சுயநலமில்லாத மேலான லக்ஷியத்தின் பொருட்டுத் தர்மயுத்தத்தில் தன் உயிரைக் கொடுப்பவனே வீர சொர்க்கம் போன்ற மேன்மை எய்துகிறான். ஆக, இந்த உபமானத்தை இங்கு எடுத்துக்கொள்ளுதல் ஒவ்வாது.

யக்ஞம் என்பதின் அடிப்படைக் கருத்து சுயநலத் தியாகம் என்பதாம். ஒரு சிலர் கூடிக்கொண்டு அஜமேத யக்ஞம் என்னும் ஒரு யாகத்தை இந்நாளில் ஏதோ சில இடங்களில் செய்கிறார்கள். அப்படிச் செய்வதின் அடிப்படை நோக்கம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். எத்தகைய சுயநலத்தை அவர்கள் தியாகம் செய்துள்ளார்கள், என்ன பாங்கில் நாள் ஏறஏற அவர்கள் பரந்த பாங்குடையவர்களாக மாறியமைகிறார்கள், மன்னுயிர் அனைத்துக்கும் பயன்படுகிற நல்வாழ்வு அவர்களிடம் எப்படிப் புதியதாக வந்தமைந்து கொண்டிருக்கிறது என்றும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அஜமேத யக்ஞத்தில் சுயநல வளர்ச்சிக்கு அறிகுறிகளைக் காணலாம்; சுயநலத் தியாகத்துக்கு அறிகுறிகளைக் காணமுடியாது.

போர்க்களத்தில் இருதரத்தாரும் அவரவர் கொண்டிருந்த லக்ஷியத்தின் பொருட்டு உயிர்துறக்கத் துணிந்தே முன் வருகின்றனர். கெட்டவனும் தன் லக்ஷியத்தின் பொருட்டுத் தன் உயிரைக் கொடுக்க ஆயத்தமாக முன்வருவது பாராட்டத் தக்கது. ஆடு ஒன்று தான் யாகசாலையிலே உயிர்துறப்பதின் மூலம் மேன்மையடையப் போவதாக உணர்வதில்லை. உணரும் சக்தியும் அதற்கு இல்லை. அது மேன்மையடையும் என்று

அதன் உயிரை வாங்குகின்ற யாககர்த்தாக்கள் நினைக்கிறார்கள். ஆட்டின் வாயை அவர்கள் இறுகக் கட்டிவிடுகிறார்கள். அதற்குக் கூக்குரலிட இயலாது. உயிர்களின் உணர்ச்சியை அறிவிக்கும் கருவிகளைப் பலப்பல விதங்களிலே இக்காலத்திய பௌதிக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். யாகசாலையில் சித்திரவதை செய்யப்படும் ஆட்டின் உடலிலே அக்கருவியை வைத்துப்பார்த்தால் அது படும் வேதனையை கல்நெஞ்சம் படைத்த யாககர்த்தாக்கள் அறிந்துகொள்ள இயலாவிட்டாலும் அக்கருவியானது ஐயம் திரிபு அற விளக்கிக் காட்டிவிடும். வெட்டுண்டு சாவதில் துன்பம் அதிகம் இல்லை. பீஜத்தின்கண் நெறியுண்டு சாவதில் ஆடுபடும் வேதனையை ஆடுதான் உணருகிறது; இந்த விஞ்ஞானக் கருவிகள்தான் விளக்கிக் காட்டமுடியும். மறுமையில் மறி மேன்மையுறுகிறது என்பது குருட்டு நம்பிக்கையல்லாது அதற்குப் பிரமாணம் இம் மண்ணுலகில் எதையும் காணமுடியாது.

இத்தகைய குருட்டு நம்பிக்கையைச் சான்றோர்கள் எல்லாரும் தீவிரமாகத் தாக்கியிருக்கின்றனர். பொருந்தாத கர்ம காண்டத்தை ஒழித்தற்கென்றே ஆசாரியபுருஷர்கள் எல்லாரும் நாளடைவில் அவதரித்து வருபவர் ஆயினர். அவர்களுள் ஒருவர் கையாண்ட முறையை ஈண்டு ஞாபகத்துக்குக் கொண்டு வருவது பொருந்தும். ராஜகிருஹம் என்னும் பட்டணத்திலே பிம்பிசாரன் என்னும் மன்னன் நடாத்திய யாகத்திலே கணக்கற்ற ஆடுகள் பலியிடப்பட்டன. அதற்காக ஒரு மந்தை ஒருதடவை ஓட்டிக்கொண்டு போகப்பட்டது. அக்காட்சியை அங்கிருந்த புத்தர் பெம்மான் பார்த்தார். அவருக்கு மனம் இளகிற்று. ஆட்டு மந்தையைப் பார்த்து அவர் இயம்பினார்: "நீங்கள் எல்லோரும் மரணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. மண்ணுலகில் உங்கள் வாழ்வு முடிவுக்கு வந்துவிட்டது. அதற்கிடையில் உங்களுக்கேற் படும் துயரத்தில் ஒரு சிறிதையாவது துடைக்க, நான் பணிவுடன் முன்வருகிறேன்." இங்ஙனம் சொல்லிக்கொண்டு நடக்கமுடியாத ஆடு ஒன்றை அவர் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டார். இடையன் அதை வருத்தி ஓட்டியதைக் கண்டு சகிக்க அவருக்கு இயலவில்லை. ஆட்டுமந்தையுடன் அவர்

யாகசாலைக்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும் யாகசாலையில் இருந்தவர்கள் எல்லாரும் தங்களையறியாது வணக்கத்துடன் எழுந்து நின்றனர். போற்றுதற்குரிய பெரியவர் ஒருவர் முன்னிலையில் இத்தகைய வணங்கும் மனப்பான்மை இயல்பாக வந்துவிடுகிறது. பிறகு புத்தருக்கும் யாகம் செய்தவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நிகழ்ந்தது.

"பிற உயிரைக்கொன்று இம்மையிலாவது மறுமையிலாவது இன்பம் பெற முயலுவது பொருந்துமா?" என்று புத்தர் கேட்டார்.

"யாகத்தில் மடியும் உயிர்கள் மறுமையில் மேன்மை யடைகின்றன. யாகம் செய்கின்றவர்க்கும் மேன்மை உண்டு" என்ற பதில் வந்தது.

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினார்.

"வேதப்பிரமாணம் பொய் போகாதது" என்று வேதியர்கள் விடை விடுத்தனர்.

"யாகத்தில் மடியும் உயிர்களனைத்துக்கும் இது பொதுவான விதியா?" என்று காருண்யமூர்த்தி மேலும் கேட்டார்.

"யாகத்தில் ஆகுதியாகும் உயிர்களனைத்துக்கும் இது பொதுவிதி" என்று விடை வந்தது.

"யாகத்தில் மடியும் மனிதன் கதி என்ன ஆகிறது?" என்று புத்தர் கேட்டார்.

"மனிதனும் மேன்மையுறுகிறான்" என்று மறுமொழி கூறினர்.

"இதை முற்றிலும் நம்புகின்றீர்களா?"

"ஆம், நம்புகின்றோம்."

இப்பொழுது புத்தர் பகர்வாராயினர்: இதோ இங்கு அமர்ந்திருக்கும் வயோதிகர்களைப் பாருங்கள். இவர்களில் இரண்டொருவராவது உங்களுடைய பிதாக்களாகவோ, பிதா மகன்களாகவோ இருக்கக்கூடும். அவர்களுக்கு இவ்வுலகில் இனிப்பெறுதற்குச் சுகம் ஒன்றுமில்லை. இந்திரியங்கள் தேய்ந்து விட்டன. அங்கங்கள் தளர்ந்துவிட்டன. தள்ளாடிக் காலங்கழிக் கின்றனர். வீடு போபோ என்கின்றது; சுடுகாடு வாவா என்று அழைக்கின்றது. பயனற்ற இம்மை வாழ்வு அவர்களுக்கும் தலைச் சுமை, அவர்களைப் பராமரிக்கின்ற உங்களுக்கும் தலைச்சுமை. இவர்களைப் பிடித்து ஹோமாக்கினியில் ஆகுதியாகப் போட்டு

விடுங்கள். உடனே அவர்களுக்கும் சொர்க்கப்பிராப்தி வருகிறது. நீங்களும் தந்தை, பாட்டன்மார்க்குப் பெருங்கடமையைச் செய்த வர்கள் ஆவீர்கள். இச்செயலிலே துணியுங்கள் பார்க்கலாம்" என்றார். அதற்கு அக்கூட்டத்தார் சம்மதிக்கவில்லை. அப்படி யாயின் அவர்கள் வேதத்தில் நம்பிக்கை வைத்தவர்கள் அல்லர், வெறும் வேஷதாரிகள் என்று புத்தர் முடிவு கட்டினார்.

வேதத்தில் நம்பிக்கை வைக்கின்ற மக்கள் இம்மண் ணுலகில் மிக மிகச் சிலரே உளர். வேதப்பிரமாணம் என்னும் பெயர் வைத்துக்கொண்டு வாழும் சுயநலப் பித்தர்களையே ஏராளமாக எக்காலத்திலும் காணலாம். வேதம் இடுகிற ஆணைகளுள் மிக மிகப் பெரியது கர்மத்தாலன்று, சந்தான விருத்தியினாலன்று, செல்வத்தால் அன்று; தியாகத்தாலேயே அமிர்தத்வம் அடையப் பெறுகிறது" என்பதாகும். இப்படி ஆணையிடுகின்ற வேதத்துக்கு முற்றிலும் அடிபணிகின்ற வைதிகன் ஏதேனும் ஒருவனையாவது இன்றைக்கு நாம் காணமுடியுமா? உண்மையை உரைக்குங்கால் மனிதன் பொது வாக வேதத்தைப் பின்பற்றுபவனும் அல்லன், ஆகமத்தைப் பின்பற்றுபவனும் அல்லன், அல்லது வேறு எந்தச் சன்மார்க் கத்தைப் பின்பற்றுபவனும் அல்லன். வேதம், ஆகமம், சன்மார்க்கம் ஆகியவைகளின் பிரமாணம் என்று சொல்லிக் கொண்டு தன் சுயநலத்தையே நிலைநாட்டுகின்றான். சுயநலம் கொண்டுள்ள மனிதனுக்கு வைதிகவாழ்வு என்பது வெறும் பேச்சளவிலேயேயாம். இம்மையில் நலமடையாத ஒருவன், இம்மையில் உயிர்களுக்கு அன்புகாட்டாத ஒருவன் மறுமை யிலும் எந்த மேன்மையையும் அடையப் போவதில்லை.

கேள்வி: *(552)* சில வைதிக அந்தணர்கள் வேத தர்மத்தை மீண்டும் உறுதிபெறச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் பசுவதை (பசு, ஆடு) யுடன் கூடிய யாகத் தைச் சிற்சில இடங்களில் செய்து வருகின்றனர். ராஜ கிருஹத்தில் பிம்பிசார மன்னனுடைய யாகசாலையில் ஆடொன்றின் உயிரைக் காப்பாற்றத் தமது உயிரைத் தியாகம் செய்ய முன்வந்த புத்த மகான் வாழ்ந்த இந் நாட்டிலே இவ்வாறு நடைபெறுவது பொருத்தமாகுமா?

பதில்: பழையது ஒன்றுக்குப் பெரிய மதிப்புக் கொடுப்பது மானுட இயல்பு. மிகப்பழைய பழக்கவழக்கங்கள் பாருலகில் பல இடங்களில் மறைந்துபட்டுப்போகாது இருப்பதை ஆங்காங்குக் காணலாம். அப்படி அவைகள் காக்கப்படுகின்றன எனினும் அவையாவும் போற்றத்தக்க பெரும் செயல்கள் அல்ல என்பதும் துருவி ஆராய்கின்ற அறிவுடையோர்க்கு விளங்கும்.

பழையதை முன்னிட்டுப் பெரிய மதிப்புப் பெற்றிருப்பவைகளில் ஒன்று வேதம். நாளடைவில் நான்கு வேதங்களாக அது வடிவெடுத்தது. இயற்கையின் சிறப்புக்கும் இழிநிலைக்கும் சான்றாகும் வேதம். ஆகவே வேதத்தில் அடங்கியிருக்கின்ற அனைத்துமே மேலானவைகள் என்று எண்ணிவிடலாகாது. இயற்கையில் மேலான பாங்குகளும் உண்டு; கீழான பாங்குகளும் உண்டு. அதே பிரகாரம் வேதத்திலும் மேலான பாங்குகளையும் கீழான பாங்குகளையும் காணலாம்.

ஞானகாண்டம் என்னும் சீரிய பகுதி வேதத்தினின்று பிரித்தெடுக்கப்பட்டதாகும். வேதாந்தம் என்னும் பெயர் பெற்று என்றென்றும் அது சிறந்த நிலையிலே யாண்டும் இருந்து வருகிறது. எச்சமூகத்தாராலும் எக்காலத்திலும் ஞானகாண்டத்தின் மீது குறைகாண முடியாது. நல்லோர்க்குற்ற அருள்விருந்தென்று ஞானகாண்டத்தைப் பகரவேண்டும்.

கர்மகாண்டம் என்னும் பகுதியில் சிறப்பும் சீர்கேடும் கலந்து கிடக்கின்றன. சீர்கேடுகளை ஒழித்து விடுவதற்கென்றே மத ஆசாரியர்கள் அப்போதைக்கப்போது தோன்றி வந்திருக்கின்றனர். யாகம் என்னும் வைதிக கர்மத்தின் உயர்ந்த பகுதியானது தான், தனது என்பனவற்றைத் தியாகம் செய்வதற்கு அமைந்ததாம். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். விச்வஜித் யக்ஞம் என்பது ஓர் ஒப்பற்ற யாகம் ஆகும். அதைச் செவ்வனே செய்து முடிப்பவனுக்கு விச்வமனைத்தும் சொந்தமாய் விடுகிறது. அதற்கு முதல் நிபந்தனை அத்தகைய யாகம் செய்கின்ற யஜமானன் தான், தனது என்பனவற்றையெல்லாம் பிறர் பொருட்டு மனமுவந்து எடுத்து வழங்கிவிடவேண்டும். அத்தகைய யாகத்தில் அடங்கியுள்ள மேலாம் கோட்பாடு விவேகிகளுக்கு நன்கு விளங்குகிறது.

சுயநலக்காரர்களுக்கென்றமைந்த யாகங்கள் உண்டு, சுகபோ கங்களை விரும்புகின்றவர்களுக்கு என்றமைந்த யாகங்கள் உண்டு, பிறர்க்குத் தீங்கு செய்வதற்கென்று அமைந்துள்ள யாகங்கள் உண்டு, மற்றவர்களை வதைசெய்து அதன் பயனாகத் தான் நலன் அடையவேண்டுமென்று செய்யப்படும் யாகம் உண்டு. அவரவர் மனநிலைக்கு ஏற்பச் செய்யப்படும் யாகம் மேலானது அல்லது கீழானது ஆகிறது.

இன்றைக்குத் தேவாராதனையாக வடிவெடுத்திருப்பது வேத காலத்தில் யாகமென்னும் பெயர் பெற்றிருந்தது. தேவா ராதனையில் வனதேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுத்து வணங்கும் அசுரவழிபாடு முதல் நிர்குணப் பிரம்ம உபாசனைசெய்யும் பாரமார்த்திகப் பெருநிலை பரியந்தம் விதவிதமான படித்தரங்கள் உண்டு. அவரவர் மனபரிபாகத்துக்கு இத்தனைவித ஆரா தனைகளே சான்று ஆகும். உயிர்ப்பலி கொடுத்து தெய்வத்தை வணங்குகின்றவர்கள் எல்லாரும் கீழ்த்தரமான மக்களே. சங்கிலி கருப்பனுக்குக் கிடாவெட்டுபவரும் வேத நெறிப்படி அஜமேத யக்ஞம் செய்பவரும் பான்மையில் ஒரேவித மக்களே. ஒன்று கண்ணியமான ஸம்ஸ்கிருதப் பெயர் பெற்றிருக்கலாம்; மற்றொன்று கரடுமுரடான பிராகிருத மொழியாயிருக்கலாம். கீழ்த்தரமான மக்களே இத்தகைய அசுர ஆராதனையில் இறங்குவார்கள்.

காட்டுமிராண்டித்தனத்துக்கு நிகராயிருந்த உயிர்வதை செய்யும் யாகங்களை அறவே ஒழிக்கப் புத்தர் பெருமான் தோன்றினார். வெற்றிகரமான அவருடைய பெருமுயற்சிக்குப் பிறகு நாட்டில் அத்தகைய யாகங்களெல்லாம் எடுபட்டுப் போய்விட்டன. பின்பு அத்தகைய கர்மகாண்டத்தின் புன்மை களை மேலும் வேரறக் களைய சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலாயினோர் தோன்றினர். இம் மூன்று ஆசாரியர்கள் காட்டியுள்ள தெள்ளிய வேதாந்த நெறிகளைப் பின்பற்று பவர்களே உண்மையான அந்தணர் ஆகின்றனர். அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் என்னும் மறைமொழியை இலக்காக வைத்துக் கொண்டே அந்தணர் யார் என்று நாம் ஆராயவேண்டும். பொன் என்று பெயர் படைத்திருப்பதெல்லாம் பொன் ஆகாது.

பதில்: பழையது ஒன்றுக்குப் பெரிய மதிப்புக் கொடுப்பது மானுட இயல்பு. மிகப்பழைய பழக்கவழக்கங்கள் பாருலகில் பல இடங்களில் மறைந்துபட்டுப்போகாது இருப்பதை ஆங்காங்குக் காணலாம். அப்படி அவைகள் காக்கப்படுகின்றன எனினும் அவையாவும் போற்றத்தக்க பெரும் செயல்கள் அல்ல என்பதும் துருவி ஆராய்கின்ற அறிவுடையோர்க்கு விளங்கும்.

பழையதை முன்னிட்டுப் பெரிய மதிப்புப் பெற்றிருப் பவைகளில் ஒன்று வேதம். நாளடைவில் நான்கு வேதங்களாக அது வடிவெடுத்தது. இயற்கையின் சிறப்புக்கும் இழிநிலைக்கும் சான்றாகும் வேதம். ஆகவே வேதத்தில் அடங்கியிருக்கின்ற அனைத்துமே மேலானவைகள் என்று எண்ணிவிடலாகாது. இயற்கையில் மேலான பாங்குகளும் உண்டு; கீழான பாங்கு களும் உண்டு. அதே பிரகாரம் வேதத்திலும் மேலான பாங்கு களையும் கீழான பாங்குகளையும் காணலாம்.

ஞானகாண்டம் என்னும் சீரிய பகுதி வேதத்தினின்று பிரித்தெடுக்கப்பட்டதாகும். வேதாந்தம் என்னும் பெயர் பெற்று என்றென்றும் அது சிறந்த நிலையிலே யாண்டும் இருந்து வருகிறது. எச்சமூகத்தாராலும் எக்காலத்திலும் ஞானகாண்டத்தின் மீது குறைகாண முடியாது. நல்லோர்க்குற்ற அருள்விருந்தென்று ஞானகாண்டத்தைப் பகரவேண்டும்.

கர்மகாண்டம் என்னும் பகுதியில் சிறப்பும் சீர்கேடும் கலந்து கிடக்கின்றன. சீர்கேடுகளை ஒழித்து விடுவதற்கென்றே மத ஆசாரியர்கள் அப்போதைக்கப்போது தோன்றி வந்திருக் கின்றனர். யாகம் என்னும் வைதிக கர்மத்தின் உயர்ந்த பகுதியானது தான், தனது என்பனவற்றைத் தியாகம் செய்வதற்கு அமைந்ததாம். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். விச்வஜித் யக்ஞம் என்பது ஓர் ஒப்பற்ற யாகம் ஆகும். அதைச் செவ்வனே செய்து முடிப்பவனுக்கு விச்வமனைத்தும் சொந்தமாய் விடுகிறது. அதற்கு முதல் நிபந்தனை அத்தகைய யாகம் செய்கின்ற யஜமானன் தான், தனது என்பனவற்றையெல்லாம் பிறர் பொருட்டு மனமுவந்து எடுத்து வழங்கிவிடவேண்டும். அத்தகைய யாகத்தில் அடங்கியுள்ள மேலாம் கோட்பாடு விவேகிகளுக்கு நன்கு விளங்குகிறது.

சுயநலக்காரர்களுக்கென்றமைந்த யாகங்கள் உண்டு, சுகபோ கங்களை விரும்புகின்றவர்களுக்கு என்றமைந்த யாகங்கள் உண்டு, பிறர்க்குத் தீங்கு செய்வதற்கென்று அமைந்துள்ள யாகங்கள் உண்டு, மற்றவர்களை வதைசெய்து அதன் பயனாகத் தான் நலன் அடையவேண்டுமென்று செய்யப்படும் யாகம் உண்டு. அவரவர் மனநிலைக்கு ஏற்பச் செய்யப்படும் யாகம் மேலானது அல்லது கீழானது ஆகிறது.

இன்றைக்குத் தேவாராதனையாக வடிவெடுத்திருப்பது வேத காலத்தில் யாகமென்னும் பெயர் பெற்றிருந்தது. தேவா ராதனையில் வனதேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுத்து வணங்கும் அசுரவழிபாடு முதல் நிர்குணப் பிரம்ம உபாசனைசெய்யும் பாரமார்த்திகப் பெருநிலை பரியந்தம் விதவிதமான படித்தரங்கள் உண்டு. அவரவர் மனபரிபாகத்துக்கு இத்தனைவித ஆரா தனைகளே சான்று ஆகும். உயிர்ப்பலி கொடுத்து தெய்வத்தை வணங்குகின்றவர்கள் எல்லாரும் கீழ்த்தரமான மக்களே. சங்கிலி கருப்பனுக்குக் கிடாவெட்டுபவரும் வேத நெறிப்படி அஜமேத யக்ஞம் செய்பவரும் பான்மையில் ஒரேவித மக்களே. ஒன்று கண்ணியமான ஸம்ஸ்கிருதப் பெயர் பெற்றிருக்கலாம்; மற்றொன்று கரடுமுரடான பிராகிருத மொழியாயிருக்கலாம். கீழ்த்தரமான மக்களே இத்தகைய அசுர ஆராதனையில் இறங்குவார்கள்.

காட்டுமிராண்டித்தனத்துக்கு நிகராயிருந்த உயிர்வதை செய்யும் யாகங்களை அறவே ஒழிக்கப் புத்தர் பெருமான் தோன்றினார். வெற்றிகரமான அவருடைய பெருமுயற்சிக்குப் பிறகு நாட்டில் அத்தகைய யாகங்களெல்லாம் எடுபட்டுப் போய்விட்டன. பின்பு அத்தகைய கர்மகாண்டத்தின் புன்மை களை மேலும் வேரறக் களைய சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலாயினோர் தோன்றினர். இம் மூன்று ஆசாரியர்கள் காட்டியுள்ள தெள்ளிய வேதாந்த நெறிகளைப் பின்பற்று பவர்களே உண்மையான அந்தணர் ஆகின்றனர். அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் என்னும் மறைமொழியை இலக்காக வைத்துக் கொண்டே அந்தணர் யார் என்று நாம் ஆராயவேண்டும். பொன் என்று பெயர் படைத்திருப்பதெல்லாம் பொன் ஆகாது.

அந்தணர் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்கள் எல்லாம் அந்தணர் ஆகார். மனபரிபாகத்தையும் அதற்கேற்ற சீரிய செயலையும் கொண்டே அந்தணர் யார் என்று நிர்ணயிக்க வேண்டும்.

ஆட்டைச் சித்திரவதை செய்கின்ற அடாத செயல் அஜமேத யக்ஞம் என்னும் பெயருடன் அரிதாக ஆங்காங்குத் தென்படலாம். ஆனால் பழைய பெருவாரியான புல்லிய செயலாக இனி அது ஒருநாளும் வடிவெடுக்கப் போவதில்லை. இப்படித் தென்படும் செயல்கள் ஓர் உண்மையை விளக்குகின்றன. மனிதனிடத்திருந்து கீழான மனப்பான்மையை எத்தகைய பேராசாரியார் அல்லது பேர் அவதார புருஷன் தோன்றி வந்தாலும் அறவே நீக்கிவிட முடியாது என்பது வெளியாகிறது. முன்பொரு காலத்தில் இவர்கள் போன்ற மூட நம்பிக்கையுடையவர்கள் ஏராளமாய் இருந்திருக்கின்றனர் என்பதை இக்காலத்தவர் தெரிந்து கொள்ளுதற்கு இவர்கள் வெறும் மாதிரி மனிதர் ஆகின்றனர். தர்மத்தை உள்ளபடி நிலைநாட்டுதற்கோ, அல்லது யாகம் செய்பவர்களை எத்துறையிலாவது மேலோங்கச் செய்வதற்கோ உயிர் வதையுடன் கூடிய யாகம் உதவாது.

கேள்வி: *(553)* நம் வீடுகளில் ஒரு துக்கம் ஏற்பட்டாலோ பேறு காலம் ஏற்பட்டாலோ சூதகம் என்று பதினாறு நாட்களுக்குக் கோயிலுக்குள் போகக்கூடாது என்று கூறுகிறார்கள். அது சரிதானா?

பதில்: கடவுள் வழிபாட்டில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று கர்மகாண்டம், மற்றொன்று ஞானகாண்டம். பக்திகாண்டம் ஞானகாண்டத்தோடு ஒன்றுபட்டிருக்கிறது. உலக ஆசையில் உழலும் மக்கள் கர்மகாண்டத்தைப் பின்பற்றுகின்றனர். வீட்டில் யாராவது மடிந்துபட்டுப்போனால் அவ் வீட்டார் சில நாட்களுக்குக் கோயிலுக்குப் போகலாகாது என்னும் நியதி கர்மகாண்டத்தில் வந்திருக்கிறது. ஆனால் பக்திமார்க்கத்தையும் ஞானமார்க்கத்தையும் கடைப்பிடிப்பவர்களுடைய கோட்பாடு இதினின்று முற்றிலும் மாறுபடுகிறது. ஜனனத்தையும் மரணத்தையும் நிகராகக் கருதுவது ஞானமார்க்கம். மரணம்

போன்ற விபத்து ஒரு வீட்டில் நேர்ந்துவிட்டால் அப்பொழுது தான் கடவுள் வழிபாட்டில் மக்கள் தீவிரமாக ஈடுபடவேண்டும். அதன்பொருட்டுக் கோயில்களுக்குள் பிரவேசிப்பதும் அப்பொழுது அன்னவர்களுக்கு முற்றிலும் அவசியம் ஆகிறது.

என்றைக்கும் கர்மகாண்டத்துக்கும் ஞான காண்டத்துக்கும் இடையில் சமரசம் காண்பது அரிது. கர்மகாண்டம் உலகப் பற்றை வளர்ப்பதாக இருக்கிறது. ஞானகாண்டமோ உலகப் பற்றினின்று மனிதனை விடுவிப்பதற்கென்று அமைந்துள்ளது. எவ்வளவு விரைவில் சாதகன் ஒருவன் கர்மகாண்டத்தை ஒதுக்கி விட்டு ஞானகாண்டத்தைப் பின்பற்றுகிறானோ அவ்வளவு விரைவில் அவன் வாழ்வில் மேன்மையடைகிறான். ❑

32. பரிணாமத் தத்துவம்

கேள்வி: *(554)* மஹாவிஷ்ணு மத்ஸ்ய, கூர்ம, வராஹ முதலிய அவதாரங்களில் உண்மையாகவே மீன், ஆமை, பன்றி இவைகளாகத் தோன்றினாரா அல்லது உன்னதமான உண்மைகளை விளக்குவதற்காக இவ்விதம் ரூபகப்படுத்தி உரைக்கப்படுகிறதா?

பதில்: உலகனைத்துமானது கடவுளே. ஜடப்பொருள்களாகப் பிரபஞ்சத்தில் தென்படுபவைகளெல்லாம் கடவுளின் தோற்றங்களேயாம். எண்ணிறந்த உயிர்வகைகளாகப் பிரபஞ்சத்தில் வாழ்ந்திருப்பவைகளும் கடவுளின் தோற்றங்களேயாம். அத்தனை உயிர்வகைகளுக்கிடையில் மத்ஸ்ய அவதாரம், கூர்ம அவதாரம், வராஹ அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம் போன்றவைகள் சான்றுகளாக எடுத்துக்கொண்ட ஒருசில என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பஞ்சபூதங்கள் தோன்றிவந்தது பரம்பொருளிடத்து பஞ்சபூதங்களுள் ஆகாசம், வாயு, அக்னி ஆகியவை பரிணமித்த பொழுது உயிர் தோற்றத்துக்கு வரவில்லை. நீர் உண்டானதும் அதில் உயிர் தோன்ற ஆரம்பித்தது. நீர்வாழ்வன அனைத்தையும் தொகுத்து மத்ஸ்ய அவதாரம் என்று பொதுவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. கடவுள் ஓயாது இன்றைக்கும் மத்ஸ்ய அவதாரம் எடுத்துக்கொண்டே இருக்கிறார் என்று இயற்கையின் நடைமுறையை ஒட்டி நாம் இயம்பலாம். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிக்கிறது. அதுவும் கடவுளின் விளையாட்டு. நீர்வாழ்வன நிலத்துக்கு வர முயலுகின்றன. கூர்மம் அல்லது ஆமை அதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். பிறகு சேறுபடிந்த நிலத்தில் வாழும் உயிர் வகைகள் உண்டு. அதற்கு வராஹ அவதாரம்

நல்ல எடுத்துக்காட்டு ஆகும். விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு மேல்நோக்கி வரும் உயிர்கள் இருக்கின்றன. இயற்கையின் போக்கை அனுசரித்து மனிதக் குரங்குகளை அந்த நிலையில் வைக்கலாம். ஆனால் இங்கு பழைய ஐதிகம் நரசிம்ம அவதாரத்தை அந்த நிலையில் வைக்கிறது. மனித இயல்பும் விலங்கின் இயல்பும் சந்திக்கும் நிலை அது. அதினின்று மேல்நிலைக்கு வருகின்றபொழுது உயிர் குறுகிய ஆள் ஆகிறது. அதன் சின்னமாக வாமன அவதாரம் அமைகிறது. முற்றிலும் பரிபாகம் அடைந்த மனிதனுக்கு விளக்கமாகத் தசரத ராமன் வந்து அமைகின்றார். இங்ஙனம் தசாவதாரங்கள் இயற்கையின் நடைமுறைக்கு யாண்டும் ஒத்திருக்கின்றன; தத்துவத்துக்கும் அவைகள் பொருத்தமானவைகளாய் இருக்கின்றன. முடிவாகச் சொல்லுமிடத்து இயற்கையாகவும், இயற்கையில் உயிர்களின் தோற்றமாகவும் விளையாடிக் கொண்டிருக்கின்ற தெய்வத்துக்கு இந்தத் தசாவதாரங்கள் பொருத்தமான விளக்கங்கள் ஆகின்றன. இவைகள் முன் பொருகால் நிகழ்ந்தவைகள் என்பதை ஒதுக்கி வைத்துவிட்டு ஓயாது இச்செயல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்வி: *(555)* மனிதனுக்கும் குரங்குக்கும் உள்ள சம்பந்தம் என்ன? மனிதனைக் குரங்கிற்கு ஒப்பிடுகிறார்களே. அதற்குக் காரணம் என்ன?

பதில்: பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் அனைத்துக்கிடையிலும் நெருங்கிய தொடர்புண்டு. ஒரு பெரிய ஏணிப்படி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஏணியில் கீழே கடைசிப்படியில் மரம், செடி, கொடிகளாகிய ஸ்தாவரங்கள் இருக்கின்றன. ஏணியின் உச்சிப் படியில் பரிபூரணத்தை அடைந்துள்ள ஜீவன் முக்தன் இருக்கின்றான். பூமியில் நிலைத்திருக்கின்ற செடிகள் போன்று இடம்மாறிப் போகும் செடிகள் கடலில் இருக்கின்றன. பிறகு அவைகள் நீர்வாழ்வன ஆகின்றன. அடுத்தபடியாக நீரிலும் நிலத்திலும் வாழ்ந்திருக்கும் ஆமை, நண்டு, தவளை முதலியவைகளாக அவைகள் பரிணமிக்கின்றன. வானத்தில் பறக்கும் பறவைகளாக ஆவதும் உண்டு.

அடுத்தபடியாக விலங்குகள் ஆகின்றன. விலங்குகளுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. விலங்குகளுக்கும் மனிதனுக்கும் இடைநிலையில் குரங்கு இருக்கின்றது. குரங்கின் எலும்புக் கூட்டையும், மனிதனுடைய எலும்புக் கூட்டையும் ஆராய்ந்து பார்த்தால் அதிக வித்தியாசமில்லை. மனிதக் குரங்குகளுக்கு மோட்டார் வண்டி ஓட்டும் பயிற்சியை இக் காலத்தவர் சிலர் கொடுத்திருக்கின்றனர். குரங்குக்கு அமைந் துள்ள பெயர்களில் ஒன்று வானரம். வாலுள்ள நரன் என்று வைத்துக்கொண்டாலும் பொருந்தும். சம்ஸ்கிருதத்தில் இந்தச் சொல் வா நரன் என்பதாகிறது. வா என்றால் அப்படியா எனப் பொருள்படுகிறது. வானரம் என்று எடுத்துக்கொண்டால் இது மனிதனா என்று சந்தேகத்துக்கு இடந்தருகிற பொருள் வருகிறது. குரங்கைப் பார்த்தால் மனிதனா என்கிற சந்தேகம் வருகிறது. ஏனென்றால் மனிதனுக்கு ஒருபடிதான் அது கீழே இருக்கிறது. ஆக, அது கிட்டத்தட்ட மனிதனுக்கு ஒப்பானது.

_கேள்வி: (556)_ தங்களது பத்திரிகையான தர்ம சக்கரம் மேலட்டையில் விஷ்ணுவின் பத்து அவதாரத்தில் புத்தர் சேர்க்கப்பட்டுப் பலராமர் விடப்பட்டு இருக்கிறார். இதன் விளக்கம் யாது?

_பதில்:_ தசாவதாரங்களை எந்தெந்த யுகங்களிலோ நிகழ்ந்தவைகளாகப் பொருள்படுத்துவது புராணங்களின் போக்கு ஆகும். ஆனால் சரித்திர பூர்வமாக உடல் தாங்கி உலகில் வாழ்ந்திருந்தவர்கள் மூன்று மூர்த்திகள் மட்டுமேயாம். அவர்கள் முறையே தசரதராமன், கிருஷ்ணபரமாத்மா, புத்தர் ஆகியவர்களாம். இனி, புராண வரலாறுகளையும், சரித்திர நிகழ்ச்சிகளையும் இணைத்துப் பொருள்படுத்தினால் பரந்த வேதாந்தக் கோட்பாடு ஒன்று தெளிவுற வெளியாகும். அதாவது தசாவதாரங்கள் சர்வகாலமும் பிரபஞ்சத்தில் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சரியாக ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் தசாவதாரங்கள் இப்பொழுதும் இம்மண்ணுலகிலேயே இருப்பது புலனாகும். பஞ்ச பூதங்களுள் நீர் உருவெடுக்கிறபொழுது அந்த நீரினுள் உயிர் வகைகள் தாமாகவே உருவெடுக்கின்றன. ஜீவகோடிகளின் தொகையாகிய பிரம்மதேவன் சுயம்பு அல்லது

தானாகத் தோன்றியவன் என அழைக்கப்படுகிறான். அவனுடைய அம்சங்களாகிய ஜீவாத்மாக்களும் தாமாகத் தோன்றியவைகள் என்னும் கோட்பாட்டை நீரினுள் வடிவெடுக்கிற உயிர்வகைகள் நிரூபிக்கின்றன. நீரினுள் தோன்றி, நீரினுள்ளேயே வாழ்ந்திருக்கும் உயிர்வகைகளை மத்ஸ்ய அவதாரம் அல்லது மீனின் தோற்றம் எனப் புராணங்கள் விளக்குகின்றன. நீரினுள் தோன்றிய உயிர்வகைகள் பிறகு நிலத்துக்கு வர முயலுகின்றன. தவளை, நண்டு, முதலை, ஆமை, நீர்நாய் முதலியவைகளை இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். இவையாவும் உருவகப்படுத்திக் கூர்மாவதாரம் எனப் புராணம் பகருகிறது. நிலத்தில் வசித்து வருபவைகள் பூர்வ சம்ஸ்காரங்களை முன்னிட்டு அடிக்கடி நீரினுள் போய் அதில் கிடக்க விரும்புகின்றன. அதற்குச் சான்றாகப் பன்றி, எருமை, நீர் யானை, யானை முதலியவைகளைச் சொல்லலாம். இவையாவையும் உருவகப்படுத்தி வராஹ அவதாரம் அல்லது பன்றியின் அவதாரம் எனப் புராணங்கள் பகருகின்றன. விலங்கு நிலையில் இருப்பவைகள் படிப்படியாக மானுட நிலையை எய்துகின்றன. இதற்குச் சான்றாகக் குரங்குகள், மனிதக் குரங்குகள் ஆகியவைகளை எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய நிலையை நரசிம்ம அவதாரம் உருவகப்படுத்தி விளக்குகிறது. நரன் என்றால் மனிதன், சிம்மம் என்றால் விலங்கு, விலங்கு படிப்படியாகப் பரிணமித்து மனிதனாகிறது. அத்தகைய மனிதன் ஆரம்ப தசையில் வெறும் மானுட வடிவத்தை மட்டும் எடுத்திருக்கிறான். மானுடப்பண்பு இன்னும் உருவெடுக்கவில்லை. அது உருவகப்படுத்தி வாமனன் அல்லது குட்டை மனிதன் எனப் புராணம் பகருகிறது. நாளடைவில் அறிவில்லாதிருக்கும் மனிதன் அறிவையும், ஆற்றலையும் வளர்க்கிறான். ஆனால் அவனை விட்டு அகங்காரம், கொடூரத்தன்மை முதலியவைகள் இன்னும் போகவில்லை. அத்தகைய மானுட கூட்டத்துக்குப் பிரதிநிதியாயிருப்பவன் பரசுராமன். பிறகு பண்பட்ட மானுடனாக அல்லது நரோத்தமனாகத் தசரத ராமன் அவதரிக்கிறான். அதற்குமேல் கிருஷ்ணாவதாரத்தில் தோற்றத்தளவில் மனிதனாகத் தென்படுபவன் பரமாத்மனே என்னும் கோட்பாட்டைக் கிருஷ்ணன் விளக்குகிறான். புராணபூர்வமாக அது எட்டாவது அவதாரம்.

மனிதன் ஒருவன் முயற்சியால் பரமாத்ம சொரூபமாகத் திருந்தி அமையலாம் என்னும் உண்மையைப் புத்தர் பெம்மான் தம்முடைய ஜீவிதத்தின் மூலமாக விளக்குகிறார். புத்தரை ஒன்பதாவது அவதாரமாக எடுத்துக்கொள்ளுவது ஒரு சம்பிர தாயம். க்ஷீணித்துப்போன புத்தமதத்தைப் புறக்கணித்தல் பொருட்டுப் புத்தரையே கணக்கில் எடுத்துக்கொள்ளாது அதற்குப் பதிலாகப் பலராமனை அந்த ஸ்தானத்தில் வைப்பது மற்றொரு சம்பிரதாயம். ஆனால் பலராமனிடத்து மேலான பண்புகள் யாவும் அமையவில்லை. ஆதலால் தத்துவ விசாரத் தில் செல்லுகிறவர்கள் பலராமனை ஒரு அவதாரமாக எடுத்துக் கொள்வதில்லை. பிரபஞ்சம் முழுவதும் பிரளயத்தில் ஒடுங்கிப் போகின்றன என்னும் கோட்பாடு உருவகப்படுத்திக் கல்கி அவதாரம் என இயம்பப்படுகிறது. உயிர்வகைகள் தோன்றிப் படிப்படியாக மேல்நிலைக்கு வருவதற்குச் சான்றாக இயற்கை யின் நிகழ்ச்சிகளே யாண்டும் இருந்து வருகின்றன. யுக்திக்கு ஒத்ததாகப் புத்தரை நாம் ஒன்பதாவது அவதாரமாக எடுத்துக் கொண்டோம். இக்கோட்பாடே தர்ம சக்கரத்தின் அட்டையில் தசாவதாரங்களாக இடம்பெற்றிருக்கிறது. தசாவதாரங்கள் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பதற்கும் பிறகு நிறை மனிதன் ஆவதற்கும் கடைசியாகப் பரப்பிரம்ம சொரூபமாக யதார்த்த நிலைக்குப் போவதற்கும் சான்றுகளாக அமைந்திருக் கின்றன. இயற்கையிலே தசாவதாரங்களுக்குச் சான்றுகளை ஏககாலத்தில் காணலாம். அது இயற்கையின் மகிமையாகிறது.

கேள்வி: *(557)* பரிணாமத்தில் கீழே செல்ல நேரிடுமா?

பதில்: பரிணாமம் என்பது சிற்றுயிர் பேருயிராகத் திருந்தி யமைவது எனப் பொருள்படுகிறது. உயிர்களனைத்தும் படிப்படி யாகச் சிறிய நிலையிலிருந்து பெரிய நிலைக்கு வந்து கொண் டிருக்கின்றன. ஆயினும் தாற்காலிகமாகச் சில உயிர்கள் பெரிய நிலையினின்று கீழ்நிலைக்குச் சிறிது காலம் இறங்கி வருவதும் உண்டு. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். பரிணமித்து மானுட நிலையை எட்டிய ஜீவாத்மன் ஒருவன் மீண்டும் மிருகத்தின் நிலைக்குக் கீழே இறங்கி வருவதில்லை. அரிதிலும் அரிதாக மக்களுள் சிலர் மிருக நிலைக்குக் கீழே இறங்கி

வருகிறார்கள். ஓயாது உணவு உண்டுகொண்டே இருக்க வேண்டும் என்னும் ஆசை மானிடனொருவனுக்கு மிகைபட உண்டாகுமானால், அந்த ஆசையோடு அவன் உடலை நீத்தா னாகில் அடுத்த பிறவியில் அவன் மானுடனாகப் பிறக்க மாட்டான். ஓயாது மேய்ந்து கொண்டிருக்கும் மிருகமாக அவன் பிறப்பெடுப்பான். ஏனென்றால் இடையீடில்லாது தீனி தின்று கொண்டிருப்பதற்கு மானுட உடல் இடம் தராது. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கான விலங்கின் உடல்தான் ஒத்து வரும். இந்தப் போக்கில் மேல்நிலைக்கு வந்துள்ள உயிர் களுக்குக் கீழ்நிலைக்கு வருவதற்கும் பரிணாமக் கோட்பாட்டில் இடமுண்டு. பரிணமித்து வருவதற்கிடையில் புதிய ஆசைகள் மனிதனுடைய உள்ளத்தில் புகுவது சாத்தியம். புதிய ஆசை ஒன்றை நிறைவேற்றுவதற்கு மானுட சரீரம் ஒத்துவராது என்றால் அதற்கேற்ற கீழ்நிலையிலுள்ள சரீரத்தை எடுத்து அந்த ஆசையைப் பூர்த்திபண்ணுதல் வேண்டும். ஆக, மேல்நிலைக்கு வந்துள்ள ஜீவன் மீண்டும் கீழ்நிலைக்கு வருவதற்கான நிர்பந்தம் அவன் புதிதாகப் பூணுகிற ஆசையைப் பொருத்ததாம். அப்படிக் கீழ்நிலைக்கு வந்துள்ள உயிர்கள் அதிவிரைவில் மீண்டும் மேல்நிலைக்குத் திரும்பிப் போகின்றன. இதுவே இயற்கையின் நியதி.

கேள்வி: *(558)* சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிக் கின்றது என்பதை விளக்க வேண்டுகிறோம்.

பதில்: சிற்றுயிர்கள் பேருயிர்களாக மாறியமையும் செயலைப் பரிணாமவாதம் என்கிறோம். (Theory of Evolution) இயற்கையைச் சரியாக ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை வெளிப்படையாகிறது. உயிரற்ற ஜடப்பொருள் உயிருள்ள ஜடப்பொருளாக மாறியமைவது இயற்கையின் பாங்காகும். உயிரற்ற ஜடப்பொருளை Inorganic Matter ஜடம் எனப் பாகு படுத்துகின்றோம். உயிருற்றதை Organic Matter உயிருள்ளது எனப் பொருள்படுத்துகிறோம். இயற்கையின் திட்டம் ஏதேனும் ஓர் உயிரைப புசித்து முன்னேற்றமடைவதாம். முன்னேற்றம் அடைய அடைய உடலமைப்பிலும் முன்னேற்றம் உண்டாகிறது. புழு, பூச்சிகளில் சில எலும்பற்றவைகளாய் இருக்கின்றன.

படிப்படியாக மேல்நிலைக்கு வரவர அவைகள் எலும்பைப் பெறுகின்றன. சிற்றுயிர்களுக்குக் கால்கள் அதிகம். பேருயிராக அவைகள் பரிணமிக்கின்றபொழுது கால்களின் எண்ணிக்கை குறைகின்றது. கடைசியாக நான்கு கால்களுடையவைகள் விலங்குகள் எனப் பகரப்பெறுகின்றன. இரண்டு கால்களும், இரண்டு இறகுகளும் உடையவைகள் பறவைகள் எனப் பகரப்பெறுகின்றன. சிறகுகளுக்குப் பதிலாக முன்னங்கால்கள் இரண்டும் கால்களாகவும் கைகளாகவும் பயன்படக்கூடியவை கிட்டத்தட்ட மனிதனுடைய நிலையை எட்டுகின்றன. வானரம் என்ற சொல் நரன் வா. இது மனிதனா எனப் பொருள்படுகிறது. இங்ஙனம் உயிர் வகைகள் மேல்நிலைக்கு வரவரச் சரீர அமைப்பிலும், உணவைப் புசிக்கும் விதத்திலும், அறிவுத் திறனிலும் முன்னேற்றம் அடைந்து வருவதைக் காண்கிறோம்.

இனி, மனிதனாக வந்துள்ள உயிர்களுள் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஜடத்தினின்று சேதனமாக மாறி உயர்நிலை எட்டுகின்ற உயிர்வகைகள் எத்தனை உண்டோ அத்தனை பாங்குடையவர்களை மனிதர்களுக்கிடையிலே காணலாம். கல் போன்ற மனிதர், புழுப்பூச்சி போன்ற மனிதர், கொடிய இயல்புடையவர், நல்லியல்புடையவர், இவன் மானுடனோ, தேவனோ என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு ஏற்ற பண்புடையவன் ஆகிய இத்தனைவிதமான உயிர் வகைகளையும் மானுட ஜாதியில் காணலாம். மனிதன் ஒருவன் தன் முயற்சியால் ஒரே ஜென்மத்தில் மிகக் கீழ்நிலையிலிருந்து மிக மேல் நிலைக்கு வருவதற்கும் சான்றினைக் காணலாம். ஆக, இக் கோட்பாடுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து ஆராய்ந்து பார்த்தால் சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டம் என்பது வெளியாகிறது. ❑

33. வர்ணாச்ரம தர்மம்

கேள்வி: *(559)* **வர்ணாச்ரம தர்மம் என்றால் என்ன?**

பதில்: நம் நாட்டில் பழங்காலத்தில் அமைந்திருந்த சமுதாய நடைமுறைக்கு வர்ணாச்ரம தர்மம் என்ற பெயர் கொடுத்திருந் தார்கள். இன்றைய சமுதாய நடைமுறையில் இந்த அமைப்பு வழக்கில் இல்லை. பழங்காலத்தில் இது எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்ளுவது அவசியம். வர்ணாச்ரம தர்மம் என்னும் சொல் வருண தர்மம், ஆச்ரம தர்மம் எனப் பிரிவுபடுகிறது. பழைய அமைப்புப்படி வருணங்கள் நான்கு இருந்தன. அதேபோன்று ஆச்ரமங்கள் நான்கு இருந்தன. வருணம் என்றால் நிறம் என்பது ஒரு பொருள். ஜாதி என்பது மற்றொரு பொருள். முன்பு இருந்தவை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வருணங்களாம். பண்பாட்டையும் தொழிலையும் முன்னிட்டு அன்று ஜாதி வகுக்கப்பட்டது. ஜாதிக்கு வகுப்பு என்பது மற்றொரு பெயர். பள்ளிக்கூடத்தில் வகுப்பு இருக்கிறது. ஒரு வகுப்பு மாணாக்கன் அதைப் பூர்த்தி பண்ணிவிட்டு மேலான இன்னொரு வகுப்புக்குப் போவது இயல்பு. நல்ல சமுதாய அமைப்பில் ஒரு மனிதன் புரிந்த தொழிலையும், பண்பாட்டையும் முன்னிட்டு அவன் இன்ன வருணத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லி வந்தார்கள். ஜோதிட சாஸ்திரம் அதையொட்டி யதாய் இருக்கிறது. பிறந்த குழந்தை ஒன்று எந்த வருணத்தைச் சேர்ந்தது என்று ஜோதிடம் சொல்லுவது தாய் தந்தையர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்பதை முன்னிட்டல்ல. பிறந்த குழந்தையினிடத்து அமைந்துள்ள சுபாவத்தை முன்னிட்டு அதை நான்கு வருணத்தில் ஏதேனும் ஒன்றில் ஜோதிடம்

நிர்ணயிக்கும். ஒரே தாய்க்குப் பிறந்த நான்கு சிசுக்களை ஜோதிடப்படி நான்கு வருணங்களில் பிரித்துவைப்பது இயல்பு. மேலும் பிறந்த குழந்தை ஒன்று அசுரகணத்தைச் சேர்ந்ததா, நரகணத்தைச் சேர்ந்ததா, தேவகணத்தைச் சேர்ந்ததா என்றும் ஜோதிடம் நிர்ணயிக்கும்.

தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நான்கு வருணங்கள் வருமாறு: சத்துவகுணத்தில் ஓங்கிப் பிறந்திருப்பவன் பிராமணன். சத்துவகுணத்தின் வருணம் வெள்ளை. மனஅமைப்பில் தூயவனாய் இருந்தால் அவனுடைய மனநிறம் வெள்ளையாகிறது. பிராமணனாகப் பிறந்தவன் பாரமார்த்திக வாழ்க்கையிலேயே ஈடுபடுவான். வேதங்களையும் ஏனைய சாஸ்திரங்களையும் கற்பதிலும் அவைகளை மக்களுக்கு இடையில் பரப்புதலிலும் பிராமணன் ஈடுபடுகிறான். அவன் பொருள் சம்பாதிப்பதில்லை. அருளையே சம்பாதிக்கிறான். யாரிடத்திலும் அவன் சம்பளத்திற்கு வேலை செய்யான். அடக்கமே நிறைந்த எளிய வாழ்வு வாழ்வான். உடலை அவன் அலங்கரிக்க மாட்டான். கடவுளுக்கே அவன் அடிமைப்பட்டவன். மக்கள் யாருக்கும் அவன் அடிமை ஆகான். வாழ்வும் சாவும் அவனுக்கு ஒன்று. மரணம் நேரிடினும் தன் லட்சியத்தினின்று அவன் பிசகான். இப்பண்புகளை முன்னிட்டு அவன் தலையாயவன் என்று போற்றப்பட்டான்.

அடுத்த தரத்தில் உள்ள வருணம் க்ஷத்திரியனுக்கு உரியதாகிறது. மூன்று குணங்களுள் சத்துவகுணமும், ரஜோகுணமும் சேர்ந்த அமைப்பு க்ஷத்திரியன். ரஜோகுணத்தின் நிறம் சிவப்பு. ஆதலால் க்ஷத்திரியனின் நிறம் செந்தாமரை போன்றது. இது உடலின் நிறம் அன்று; மனபரிபாகத்தினுடையது. அறநெறியே வடிவெடுத்தவன் அரசன் அல்லது க்ஷத்திரியன். அறம் காப்பதில் என்றைக்கும் தன் உடலைப் பலிகொடுக்க க்ஷத்திரியன் ஆயத்தமாய் இருக்கிறான். க்ஷத்திரியன் என்னும் சொல்லுக்குப் பொருள் உடலில் காயம்பட்டவன் என்பதாம். சமுதாயத்தைக் காப்பதில் தன் உடல் வாழ்க்கையை ஒப்படைத்திருக்கிறவன் க்ஷத்திரியன். அறப்போரில் மடிவது க்ஷத்திரியனுக்குக் கிடைப்பதற்கு அரிய பேறு ஆகிறது. அந்தணனிடத்திருந்து அருளையும், வைசியனிடத்திருந்து பொருளையும் பிரித்தெடுத்துச் சமுதாய

நலனுக்குப் பயன்படுத்துபவன் க்ஷத்திரியன். மரணபயம் க்ஷத்திரியனுக்குக் கிடையாது.

வைசியனிடத்து ரஜோகுணமும் தமோகுணமும் ஓங்கியிருக்கின்றன. சத்துவகுணத்தின் பாங்கு அவனிடத்துப் பட்டும் படாது இருக்கிறது. தமோகுணத்தின் நிறம் கருமை. மன அமைப்பில் வைசியனுடைய நிறம் மஞ்சள். பொருளை ஈட்டுதலில் வைசியன் நிபுணன். ஈட்டிய பொருளைச் சமுதாயத்துக்குப் பயன்படும்படி அவன் வர்த்தகம் பண்ணுகிறான். பயிர்த்தொழிலும், கால்நடை அபிவிருத்தியும், வாணிபமும், பொருளைப் பெருக்குதலும் வைசியக் கர்மங்களாகின்றன.

நான்காவது இடம் பெறுபவன் சூத்திரன். அவனிடத்துத் தமோகுணமே ஓங்கியிருக்கிறது. ஆதலால் மன அமைப்பில் அவன் கருமை நிறம் ஆனவன். கல்வியில் அவன் கடையவன் ஆகிறான். உடலைக்கொண்டு உழைக்க அவனுக்கு முடியும். ஆனால் பிறர் ஆதிக்கம் இல்லாவிட்டால் அவன் உழைக்க மாட்டான். பொருளைப் பாதுகாக்க அவனுக்குத் தெரியாது. அகப்பட்ட பொருளை அப்போதைக்கப்போதே செலவழித்து விடுவான். ஆதலால் நல்ல சமுதாய அமைப்பில் சூத்திரனுக்கு உரிமைகள் யாவும் உண்டு. பொறுப்புகள் இல்லை. ஒரு குடும்பத்தில் உள்ள கடைசி மகனுக்கு நிகர் சூத்திரன்.

ஒரு சமுதாயத்தில் எப்போதுமே நான்கு வர்ணத்தாரும் இருக்கவேண்டும். ஆனால் இன்றைய இந்திய சமுதாயத்தில் பெரும்பான்மையோர் சூத்திரர், சிறுபான்மையோர் வைசியர், பிராமணரும் க்ஷத்திரியரும் இல்லை. நல்ல அரசாங்கம் இல்லாதிருப்பதற்குக் காரணம் க்ஷத்திரியர் இல்லாது போனதேயாம். பண்பும் ஒழுக்கமும் குறைந்து போனதற்குக் காரணம் பிராமணர்கள் இல்லாது போனதேயாம். இந்த அமைப்பு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது; பிறப்பை அடிப்படையாகக் கொண்டது அன்று.

இனி பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என ஆச்ரமங்கள் நான்கு உள. பிறந்த சிறுவர்கள் சிறுமிகள் ஆறாவது வயதிலிருந்து பதினான்கு வருஷங்கள் அல்லது அதற்குமேல் கல்வியிலும், வாழ்க்கைப் பயிற்சியிலும், புலனடக்கத்திலும் ஈடுபட்டவர்களாக இருக்கவேண்டும். இது

பிரம்மச்சரிய ஆச்ரமம். புலனடக்கம் இதற்கு முற்றிலும் இன்றியமையாதது. முதியோர்களுக்குப் பணிவிடை செய்யப் பிரம்மச்சரிய ஆச்ரமத்தார் கடமைப்பட்டிருக்கின்றனர். பணிவிடைக்கு ஏற்றவாறே பண்பு அதிகரிக்கிறது.

இருபதாவது வயதுக்குப் பிறகு மணம் புரிந்துகொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபடுவது கிரஹஸ்த ஆச்ரமம். இன்றைக்கு மணம் வேண்டியவாறு நிகழ்கிறது. அது காமத்தால் தூண்டப் பட்டது. பிரம்மச்சரிய ஆச்ரமம் என்ற அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்ட வீடு அன்று அது. காம நோயை அடிப்படை யாகக் கொண்ட குடும்ப வாழ்வைக் கிரஹஸ்த ஆச்ரமம் என்று ஆன்றோர்கள் அழைப்பதில்லை. இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்பது கோட்பாடு. இல்லறத்தான் முறையாக வாழ்ந்து வருவானாகில் அவனுக்கு வாய்க்கும் மகப்பேறு மாண்பு நிறைந்ததாக இருக்கும். இக்காலத்திய மக்களுக் கிடையில் சான்றோரைக் காண்பது அரிது. கிரஹஸ்த ஆச்ரமம் ஒழுங்காக நடைபெறாமையே அதற்குக் காரணம் ஆகும். நல்ல மரத்தில் இனிய கனிகள் உண்டாவது போன்று பண் பட்ட குடும்பத்தில் நன்மக்கள் பிறக்கின்றனர்.

மனிதன் காலமெல்லாம் குடும்பியாக இருக்கக்கூடாது. தவத்தின் பயனாகத் தான் பெற்றெடுத்த சந்ததிகளை நன்றாக வளர்த்துத் தக்க வயதில் அவர்களிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும். அதன் பிறகுதான் பாரமார்த்திக வாழ்க்கையில் ஈடுபடவேண்டும். அப்படிச் செய்கிறவன் வானப் பிரஸ்த ஆச்ரமத்தை எட்டியவன் ஆகிறான்.

தன்னுடைய ஜீவிதத்தை யாண்டும் பாரமார்த்திகத்திற் கென்றே ஒப்படைக்கின்றவன் சந்நியாச ஆச்ரமம் ஏற்றவன் ஆகிறான். பிரம்மச்சரிய ஆச்ரமத்தினின்று நேராகச் சந்நியாச ஆச்ரமத்திற்கு வருகிறவன் தலையாய துறவி ஆகிறான். மற்ற இரண்டு ஆச்ரமங்களின் வழியாக வருபவன் அடுத்த ஸ்தானம் பெறுகிறான்.

பழங்காலத்துப் பெரியோர் வகுத்து வைத்த இந்த வாழ்க்கை முறைக்கு வர்ணாச்ரம தர்மம் என்று பெயர். இந்த லட்சியத்தை நோக்கிப் போகும் சமுதாயம் மேன்மையடையும் என்பது திண்ணம்.

கேள்வி: *(560)* வர்ணாச்ரம தர்மம் என்னும் நூலை வாசித்தேன். அதில் ஆசிரியர் கொடுத்துள்ள வியாக்கி யானப்படி நந்தனார், சூத்திரன், வைசியன், க்ஷத்திரியன் ஆகிய நிலைகளைத் தாண்டிப் பிராம்மண நிலையை அடைந்தவர் என்றே கூறவேண்டும். இருப்பினும் அவரைத் தீயிலிறங்கிப் பரிசுத்தமடைந்த பிறகு தரிசனம் செய்யும்படி கடவுள் கட்டளையிட்டதேன்?

பதில்: நந்தனார் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் இயற்கையின் நடைமுறையை அனுசரித்தே நாம் பொருள்படுத்தவேண்டும். அவருக்கு நிகழ்ந்த நிகழ்ச்சி ஞான வாழ்க்கையில் செல்லுகின்ற எல்லாருக்குமே நிகழ்கின்றது. அது எப்படியென்று சுருக்கமாக ஆராய்வோம்.

பிறந்துள்ள உயிர்களனைத்தும் புலால் மயமான உடலில் பற்று வைத்திருக்கின்றன. உடல்பற்று வைத்திருக்கிறவர்கள் எல்லாம் புலையர்கள். புலையர் எனப்படுபவர் தத்துவத்தின்படி பார்க்கிறவிடத்துச் சூத்திரர்களுள் கடையானவர்கள். ஏனென்றால் இயற்கையின் அமைப்புப்படி நான்கு வருணங்களுக்குமேல் பஞ்சமன் என்கின்ற ஐந்தாவது வகுப்பு இல்லை. தத்துவத்தை அறியாத மனிதன் இந்த ஐந்தாவது வகுப்பைக் கற்பனையாக அமைத்துக் கொண்டான். சூத்திர நிலையில் வாழ்க்கையைத் துவக்குகின்ற மானுடன் படிப்படியாக வைசியன், க்ஷத்திரியன், பிராம்மணன் என்கின்ற மேலான நிலைக்குப்போக முயலு கிறான். இந்த மேலான நிலைகள் மனபரிபாகத்தை அடிப்படை யாகக் கொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் உள்ளவர்கள் தங்களை வைசியன், க்ஷத்திரியன், பிராம்மணன் என்று சொல்லிக் கொள்வது வெறும் லௌகீகப் பழக்கவழக்கங்களை அடிப்படை யாகக் கொண்டேயாம். தத்துவத்தின்படி பிராம்மண நிலைக்குப் போகிறவன் பத்து லட்சத்தில் ஒருவனைக் காணமுடியாது. நந்தனார் விரைவில் வைசிய, க்ஷத்திரிய நிலைகளைத் தாண்டி பிராம்மண நிலைக்குப் போய்விட்டார். எந்த மிராசுதாரர்க்காக அவர் பணிவிடை செய்தாரோ அந்த மிராசுதாரர்க்குத் தானியத்தை விளைவித்துக் கொடுத்தபொழுது நந்தனார் வைசியன் ஆய்விட்டார். பொருளைப் பெருக்குகிறவர்கள் எல்லாம் வைசியர்கள். தன் கிராமத்தில் இருந்தவர்களை

எல்லாம் சிவபக்தியில் திருப்பியபொழுது அவர் க்ஷத்திரியன் ஆய்விட்டார். ஏனென்றால் மற்றவர்களை அறநெறியில் நடாத்து கின்றவர்களே க்ஷத்திரியர் ஆகின்றனர். சிவபக்தி முதிர்ந்து போய் ஜனன மரணத்தைப் பற்றியோ, இப்பிரபஞ்ச நிகழ்ச்சி களைப் பற்றியோ அவர் கருத்தில் ஒன்றும் வாங்கிக் கொள்ள வில்லை. சிவபக்தி ஒன்றே அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது. அந்த நிலையில் அவர் தாமாகவே பிராம்மணன் ஆய்விட்டார். ஜீவன் ஒருவன் தானாகவே மானுடப் பிறவி எடுப்பதுபோன்று தானாகவே தனது மனபரிபாகத்தால் பிராம்மணன் ஆக வேண்டும். மற்றவர்கள் அச்சடங்குகளைச் செய்து வைப்பது வெறும் ஐதீகத்தை அனுசரித்தேயாம். நந்தனாருக்குச் சிவனுடைய அனுக்ரஹம் வந்தபொழுது சிவஞானம் என்னும் தீயில் அவர் புதுப்பிக்கப்பட்டவர் ஆய்விட்டார். இதைத்தவிர வேறு எந்தத் தீயிலும் அவர் மூழ்கி எழுந்திருக்கவில்லை. இன்றைக்குத் தீ மீது நடக்கின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அதை முன்னிட்டு அவர்களுடைய வாழ்க்கை திருந்தி அமைந்து விடுவதில்லை. ஞானாக்கினியில் மூழ்கி மேன்மையடைந்த நந்தனாரைப்பற்றி விறகுக்கட்டை போட்டு எரியும் தீயில் மூழ்கிப் பரிசுத்தமானார் என்று புராணிகர்கள் எழுதி வைத்துக் கொண்டார்கள்.

> *"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
> *மெய்ப்பொருள் காண்ப தறிவு."*

நந்தனார் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் நம் எல்லாருடைய வாழ்க்கையிலும் நிகழ்ந்தாக வேண்டும். ஒரே பிறவியில் அத்தனை விதமான மாறுதல்களையெல்லாம் கொண்டு வருகிறவர்கள் எல்லோரும் நந்தனார் போன்று மேலோர்கள் ஆவர். மற்றவர்கள் அவரவர், முயற்சிக்கேற்ப இடைத்தரமானவர் அல்லது கடைத்தரமானவர் ஆகின்றனர்.

கேள்வி: *(561)* பிரம்ம சூத்திரத்தில் முதல் அத்தியாயம் மூன்றாம் பாதம் 34 முதல் 38-வது வரையில் உள்ள சூத்திரங்களில், சூத்திரர்கள் வேதாத்யயனம் செய்வதும் பிரம்ம வித்தையைக் கற்றலோ, வாசித்தலோ கூடாது

என்றும் இருக்கிறது. உங்கள் பகவத்கீதை வியாக்கியானத்தின் முகவுரையில் பிரம்ம சூத்திரம் பிரஸ்தானத் திரயத்தில் ஒன்று என்று கூறியிருக்கிறது. ஆகையால் சூத்திரர்கள் பிரம்ம சூத்திரம், வேதம் முதலியவைகளைக் கற்கலாமா, கூடாதா? சூத்திரர்கள் என்பவர் யாவர்?

பதில்: இங்கு எழுந்துள்ள கேள்விகளுக்கு மட்டும் விடை கொடுத்துவிட்டு நாம் நின்று விடுவோமானால் அது அரை குறையான விடையாய்விடும். பல முக்கியமான கருத்துக்கள் ஒருவாறு ஆராய்ந்ததும் ஆராய்ச்சி செய்யாததுமாகிய நிலையில் விட்டுவைக்கப்படுவனவாகும். ஹிந்து மதத்தைப் பற்றியே, அதைப் பின்பற்றுபவர்களுள் சிலர்க்கிடையிலும், புறமதஸ்தர் களுக்கிடையிலும் விபரீதமான அபிப்பிராயங்கள் சில இருந்து வருகின்றன. அவைகளையெல்லாம் நம்மால் இயன்றவரையில் அகற்றிவைப்பது நம் கடமையாகும்.

ஹிந்து மதம் உலகிலுள்ள மதங்களுக்கெல்லாம் தாய் மதம் என்று அமெரிக்கா சர்வமத மஹாசபையில் விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார். அப்படி அவர் இயம்பியது தமது சொந்த ஹோதாவில் அல்ல. வாழையடி வாழையாக வந்துள்ள நம் நாட்டு மஹரிஷிகளின் பிரதிநிதியாகயிருந்து அவர் அங்ஙனம் பகர்ந்தருளினார். ஹிந்து மதத்தில் யாரையாவது விலக்கி வைத்தல் என்பது மட்டும் இடம் பெறக்கிடையாது என்று அவர் வைதிக மதத்தைப் பெருமை பாராட்டினார். அத்தகைய வேதாந்தத்தினுள் சிறுமையையும், அற்பத்தனத்தையும் எவராவது நுழைத்துவிடக் கிடையாதா? இதை ஆராய்வதற்கு ஆதாரங்கள் வேண்டியவளவில் இருக்கின்றன. இங்கு எழுந்துள்ள கேள்வியே அதைச் சுட்டிக்காட்டுகின்றது.

மலையுச்சியினின்று பார்த்தால் மேடும் மடுவும் தென்படமாட்டா. பரந்த வெட்ட வெளியே தென்படும். காலம் என்னும் மலையுச்சியினின்று பார்த்தால் ஹிந்து மதத்தின் மகிமையும் அதேபாங்கில் பரந்த ஞானவெளியாகப் புலப்படும். கணக்கற்ற மேலாம் கொள்கைகளையெல்லாம் அது தன்னகத்து அடக்கியது என்பது புலப்படும். சுருங்கச் சொல்லின் சர்வமத மஹா சபை என்பதும் வேதாந்த தர்சனம் என்பதும் ஒரே பொருளைக் குறிப்பவைகளாம். அத்தகைய பரந்த பாரமார்த்திகப்

பொக்கிஷத்தினுள் ஏதோ சிற்சில இடங்களில் மாசும் படிந்து விடுமானால் அதில் வியப்பு ஒன்றுமில்லை. அத்தகைய மாசு எவ்விதத்திலும் அதன் உயர்வைக் கெடுத்துவிடாது. கடலினுள் அழுக்குப் படிந்த நீர்ப்பரப்பு கடலின் மகிமையைக் குறைத்து விடுவதில்லை. அதேவிதத்தில் ஹிந்து மதத்தின் மகிமை மாசற்றதாக என்றென்றும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள உயிர்களெல்லாம் அறிந்தோ அறியாமலோ பரம்பொருளை நோக்கிப் பயணம் போய்க்கொண்டிருக்கின்றன. அவ்வுயிர்களின் பயணத்தில் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற ஊக்கத் தையும், உதவியையும் ஆங்காங்கு எடுத்து வழங்குவதே வேதாந் தத்தின் கோட்பாடு ஆகும். எவ்வுயிரையாவது, எப்பொருளை யாவது சிறுமைப்படுத்துவதும், தடைப்படுத்துவதும் வேதாந்தக் கோட்பாடு ஆகாது. பல்லாயிரம் ஆண்டுகளாக வேதாந்த தர்சனம் எல்லாப் படித்தரங்களிலும் இருக்கின்ற உயிர்களுக்குப் பாரமார்த்திகப் பெருவாழ்வைத் தக்கமுறைகளில் எடுத்து வழங்கி வந்திருக்கிறதென்பது அறிவுடையோர்க்கு நன்கு விளங்கும்.

அதிகாரி பேதம் என்பதை ஹிந்து மதம் அல்லது வேதாந்தம் முற்றிலும் அங்கீகரிக்கிறது. அவரவர் ஜீரண சக்திக் கேற்ற பிரகாரம் உணவை வழங்குவது போன்று மக்களின் பரிபாகத்துக்கேற்றவாறே பிரம்மவித்தையை எடுத்துப் பரிமாற வேண்டும் என்பது கோட்பாடு. இத்தனை ஆயிரம் ஆண்டு களாக இக்கோட்பாடு வெற்றிகரமாகவே அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. அவரவர் தகுதிக்கேற்ற மார்க்கத்தைச் சான்றோர் உயிர்களுக்குக் காட்டியிருக்கின்றனர்.

வேதத்தில் கர்மகாண்டம் என்றும் ஞானகாண்டம் என்றும் இரண்டு பகுதிகள் உண்டு. கர்ம காண்டத்தில் பிரவேசிக் கின்றவன் அதற்கேற்ற தகைமையுடையவனாக வேண்டும். சம்ஸ்காரம் பெற்றவனாக இருக்க வேண்டுமென்று பகரப் படுகிறது. உபநயனம் அல்லது லக்ஷியத்தின்பால் நடாத்தப் பெறுதல் என்பது அதன் பொருள். அப்படி நடாத்தப் பெறுகின்ற மாணாக்கர்களுள் தலை மாணாக்கன் பிராமணன், இடை மாணாக்கன் க்ஷத்திரியன், கடை மாணாக்கன் வைசியன். வைதிகக் கர்மத்துக்கு என்ற தகுதி சிறிதேனும் இல்லாதவன் சூத்திரன். இப்படி மக்களை நான்கு வகைப்படுத்தினர்

பண்டைப் பெரியோர். எக்காலத்திலும் எல்லாச் சமுதாயங்களிலும் இத்தகைய பாகுபாட்டைக் காணலாம். இது இயற்கையின் அமைப்பு. இதை அறிந்துகொண்டு அதற்கேற்ற முறைகளைக் கையாளுதல் அறிவுடையோர் செயல். நான்கு வர்ணத்தின் அமைப்பு என்பது இதுவே. நல்வினை எதையும் தானே ஆற்ற இயலாதவன், அறிவு மழுங்கியிருப்பவன், சர்வகாலமும் துன்பப்படும் தன்மையிலிருப்பவன் சூத்திரன் என்பதாகும். அறிவு வளர்ச்சியை அவன்பால் காண்பது அரிது. நுண்ணிய கர்ம விதிகளை முறையாக அனுஷ்டிப்பது அதிலும் கடின மானது. ஆகவே சூத்திரன் வைதிகக் கர்மத்துக்கு அதிகாரியல்ல. இது பிறப்பை முன்னிட்டதுமன்று, இனவேற்றுமையை வளர்ப் பதற்காக அமைந்ததுமன்று. பரிபாகத்திலுள்ள ஏற்றத்தாழ்வை அங்கீகரிப்பதாக அமைந்துள்ள ஏற்பாடாகும்.

எக்குடியில் பிறந்தவன் ஆயினும் அவன் ஈசுவர விபூதி களையெல்லாம் அடையப் பெற்றிருக்கலாம். அவன் அவதார புருஷனாக ஆன்றோர் எல்லாராலும் ஆராதிக்கப்பட்டு வருவ தற்கும் சான்றுகள் வேண்டியவாறு காணலாம். இடையர் குலத்தில் பிறந்து வளர்ந்த கண்ணனைக் கடவுள் என்றே ரிஷிகள் போற்றி வந்துள்ளதே இதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். ஆக, இந்தியன் ஒருவனுக்குப் பிறப்பு முட்டுக்கட்டை என்பது பரந்த ஹிந்து மதத்தின் ஐதிகத்தில் இல்லை.

வேதத்தையும் வேதாந்தத்தையும் வாழ்க்கையில் அனுஷ் டிக்க வல்லவர்கள் யாரோ அவர்கள் அதிகாரிகள் ஆகின்றனர். அனுஷ்டிக்க இயலாதவர்கள் அதிகாரிகள் ஆகமாட்டார்கள். அதற்கேற்ற பரிபாகம் இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்பதுதான் அதன் கருத்து. தக்க அதிகாரிகள் வாயிலாக பல்லாயிரம் ஆண்டுகளாக வேதாந்தம் நன்கு காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பண்டைப் பெருமக்களுக்கு நாம் என்றென்றைக்கும் நன்றியுடையவர்களாக இருந்தாக வேண்டும். ஞான வாழ்க்கைக்குத் தகுந்த அதிகாரி இல்லாது போய்விட்டால் அது க்ஷீணித்துப் போய்விடும். ஆதலால் தகுந்த சத்பாத்திரங்களைக்கொண்டு அதைக் காப்பாற்றி வைப்பதே ரிஷியக்ஞம் என்பதாகும். இது முறையாக நடைபெற்று வந்திருப்பது பாராட்டத்தக்கதேயாம்.

உபநிஷதங்கள், பிரம்மசூத்திரங்கள், பகவத்கீதை ஆகிய இம்மூன்றும் பிரஸ்தானத்திரயங்களே என்பதற்கு ஐயமில்லை. பிரம்ம வித்தையைப் புகட்டுவதுதான் இவைகளின் லக்ஷியம். பிரம்ம வித்தைக்கு ஏற்ற சத்புருஷர்கள் யார் என்பதைப் பற்றியும் ஐயம் திரிபு அற அவைகள் விளக்கியிருக்கின்றன. உயிர்களெல்லாம் தங்கள் சொரூப ஞானத்தை அடைய அல்லது பிரம்ம ஞானத்தை அடைய முயன்றுகொண்டிருக் கின்றன என்பதுதான் வேதாந்தத்தின் சாரம். அதற்குத் தகுதியுடையவர் விரைவில் ஞானத்தைப் பெற்றுவிடுகின்றனர். தகுதியில்லார் தகுதியடையும்வரை பல பிறவிகள் எடுத்தும் முயன்றாக வேண்டும். இங்ஙனம் வேதாந்தம் பகர்கின்றது. இயற்கையில் நாம் காணும் காட்சியும் இதற்குச் சான்றாகும்.

பிரம்மசூத்திரங்களில் முதல் அத்தியாயம் பாதம் 3-ல் 34 முதல் 38-வது வரையில் உள்ள சூத்திரங்கள் வேதத்துக்கும் வேதாந்தத்துக்கும் அதிகாரியில்லாதவர் யார் என்னும் கேள் வியை எடுத்துக் கொள்கிறது. சூத்திரர் அவைகளுக்கு அதிகாரி யல்ல என்று சொல்லுவதில் அர்த்தம் உண்டு. குணத்திலும் கர்மத்திலும் பண்படாதவன் ஒருநாளும் அதிகாரி ஆகமாட்டான். ஒருவனுடைய குணத்தையும் கர்மத்தையும் நிர்ணயிப்பதற்குப் பிறப்பு முக்கிய காரணமாகாது. பண்பும் செய்தொழிலுமே அவன் பரிபாகத்தை விளக்கிவிடும். பிறப்பை முகாமையாக வைத்துக்கொண்டு நான்கு வர்ணங்களையும் நிர்ணயிப்பது தத்துவத்துக்கு ஒவ்வாத பிரிவினையாகும். உலக மக்களது வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலே இவ்வுண்மை நன்கு விளங்கும். பிறப்பை அடிப்படையாகக்கொண்டு ஒரு மனிதன் பிரம்மஞானத்துக்குத் தகுதியற்றவன் ஆய்விடுகிறான் என்னும் கோட்பாடு உபநிஷதங்களில் இல்லை.

இனி, ஸ்மிருதி என்று எடுத்துக்கொண்டால் பகவத்கீதை யைத்தான் ஸ்மிருதி என்று சொல்லுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. பகவத்கீதையில்

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ।।

யார் என்னை எப்படி வழிபடுகிறாரோ அவருக்கு நான்

அப்படியே அருள் புரிகிறேன். பார்த்தா, மக்கள் யாண்டும் என் வழியையே பின்பற்றுகின்றனர். கீதை 4-11

अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः सम्यग्व्यवसितो हि सः । ।

கேடுமிக உடையோனும் வேறு ஒன்றையும் எண்ணாது என்னைப் பஜிப்பானானால், அவன் சாது என்றே கருதப்பட வேண்டும். ஏனென்றால் அவன் நன்கு தீர்மானித்தவன் ஆகிறான். கீதை 9-30

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् । ।

பார்த்தா, கீழான பிறவியர்களாகிய பெண்பாலர், வைசியர், சூத்திரர் ஆகியவரும் என்னைச் சார்ந்திருந்து நிச்சயமாகப் பரகதியடைகின்றனர். கீதை 9-32

இவ்வாறு பகரப்பட்டிருக்கிறது. ஆக, ஸ்மிருதியினின்றும் நமக்குக் கிடைக்கும் பிரமாணம் மக்கள் எல்லாரும் பிரம்ம ஞானத்துக்குத் தகுதியடைந்து வருகிறார்கள் என்பதேயாம். உலகிலுள்ள வெவ்வேறு மதங்களைப் பின்பற்றிச் சிறந்த ஞானிகள் ஆகியுள்ள சான்றோர்களது வரலாறுகளை ஆராய்ந்து பார்த்தாலும் இப்பேருண்மை விளங்கும்.

பிரம்ம சூத்திரங்களில் இந்த ஐந்து சூத்திரங்களுக்குப் பாஷ்யக்காரர் எடுத்துக்கொள்ளும் வியாக்கியானம் விந்தைக் குரியதாயிருக்கிறது. வியாக்கியானம் போகும் போக்கின் கருத்தை வேறொரு உபமானத்தைக்கொண்டு விளக்கினால் மற்றவர் களுக்கு அது எளிதில் விளங்கிவிடும். அதாவது - ஒருவன் ஏழையின் வயிற்றில் பிறந்திருக்கிறான். அவனிடத்துச் செல்வ மில்லை. ஆகையால் அவன் ஏழை. ஏழையாயிருப்பதால் பணம் தேடுவதற்கு அவனுக்கு அதிகாரமில்லை. பணம் தேட முயற்சி செய்தால் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு அப்படிப் பணம் சம்பாதிக்காது அவனைத் தடுத்துவிடவேண்டும். சூத்திரன் ஒருவன் வைதிக ஸம்ஸ்காரத் துக்கு ஆசைப்படுவதும், பிரம்ம வித்தைக்கு நாட்டம் கொள் வதும் இப்பாங்கில் விலக்கப்படுகின்றன. இனி ஒவ்வொரு சூத்திரத்தின் போக்கைச் சுருக்கமாக ஆராய்வோம்.

34, 35-வது சூத்திரங்களில் ஜானசுருதி என்னும் அரசனை ரைக்வ: என்னும் ரிஷி சூத்திரன் என்று திரஸ்கரித்தார். அதனால் வேந்தனுக்கு வியாகூலம் வந்துவிட்டது. ஜானசுருதி உண்மையில் சூத்திரன் அல்லன். துக்கப்படுகின்றவன் சூத்திரன். அந்தத் துக்கத்தை முன்னிட்டுத்தான் அவன் அங்ஙனம் அழைக்கப்படுகிறான் என்னும் கோட்பாட்டில் பாஷ்யம் போகிறது. பிறப்பை முதன்மையாக வைத்துக்கொண்டு பாஷ்யம் இங்கு விரிவடைந்து கொண்டு போகிறது என்றாலும் மனபரிபாகம் பிறப்பினும் முக்கியமானது என்னும் கோட்பாடு அதில் புதைந்துகிடக்கிறது: உண்மையை எவ்வளவு மறைக்க முயன்றாலும் அது ஏதேனும் ஒருவிதத்தில் முன்னணியில் வந்து நிற்கிறது.

36-வது சூத்திரத்தில் வைதிக ஸம்ஸ்காரமின்மையினால் சூத்திரனுக்கு வேதாத்யனத்துக்கும், பிரம்ம வித்தைக்கும் அதிகாரம் இல்லையென்று வாதிக்கப்படுகிறது. துவிஜனாவது சிலருடைய பிறப்புரிமை என்பதே இங்கு பாஷ்யத்தின் கருத்து ஆகும்.

37-வது சூத்திரத்தில் ஜாபாலசத்யகாமனுக்குப் பிரம்ம ஞானம் புகட்டியதற்குக் காரணம் யாது என்ற ஆட்சேபம் வருகிறது. அதாவது அவன் பொதுமாது ஒருத்தியினுடைய மகனாக இருந்தமையினால் பிரம்மஞானத்துக்குத் தகுதியற்றவன் என்ற தடைவந்தது. இந்தத் தடைக்குச் சமாதானம் வியப்புக்குரிய முறையில் பாஷ்யத்தில் வருகிறது. அவன் சத்தியத்தையே பேசியதினால் அவன் பிராமணனாகத்தான் இருக்கவேண்டும் என்று குரு யூகித்தாராம். சத்தியம் பேசுபவர்களெல்லாம் மேல் வருணத்தார் என்பது யுக்திக்கு ஒத்தது. பிறப்பினும் பண்பாடே மேலானது என்பதை ஞாபகமறதியாகப் பாஷ்யக்காரர் ஒத்துக் கொள்கிறார். பிறப்பு வேற்றுமையை நிலைநாட்ட முயன்ற முயற்சி தமக்கே பிரதிகூலமாகப் போய்விடுகிறது.

38-வது சூத்திரத்தில் ஸ்மிருதியும் ஆட்சேபனை செய்கின்ற தினால் சூத்திரர்களுக்கு வேதாத்யயனமும், வைதிக கர்மமும், பிரம்ம ஞானமும் வழங்கலாகாது என்று பாஷ்யக்காரர் முடிவு கட்டுகிறார். இங்கு ஸ்மிருதி என்று பகரப்படுவது ஐதிகமாக வந்துள்ள பகவத்கீதையை அல்ல; மனுஸ்மிருதியே பெரிதும்

ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. 'வேதத்தைக் காதால் கேட்கின்ற சூத்திரனுடைய காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும், அரக்கைப் போட்டு அடைத்துவிட வேண்டும்' என்பது ஸ்மிருதி வாக்கியம். 'சூத்திரன் ஒருவன் ஸ்மசானத்துக்கு ஒப்பானவன். ஆகவே அவன் அருகில் வேதபாராயணம் செய்யலாகாது. வேதத்தை அவன் உச்சரிப்பானாகில் அவனுடைய நாவைப் பிளந்து விடவேண்டும். வேதத்தைக் காப்பாற்ற முயலுவானாகில் சரீரத்தை வெட்டிவிட வேண்டும்.

விதுரர், தர்மவியாதர் போன்ற சூத்திரர்களுக்கு ஞானம் எப்படி வந்தது என்ற ஆட்சேபனைக்குப் பாஷ்யக்காரர் சமாதானம் கூறுகிறார். அது முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனாம். இப்படியெல்லாம் சூத்திரன் ஒருவன் வேதத்துக்கும் வேதாந்தத்துக்கும் அருகதை உடையவன் அல்லன் என்று ஸ்மிருதியை மேற்கோளாகக் கொண்டு பாஷ்யம் எழுதப்பட்டுள்ளது. பிறப்பில் எல்லோரும் சூத்திரர். பிறகு ஸம்ஸ்காரத்தால் மேன்மக்கள் துவிஜர் ஆகின்றனர் என்பதும் ஒரு ஸ்மிருதி வாக்கியம். பாஷ்யக்காரர் இதை மறந்துவிட்டார் போலும். சூத்திரன் ஸ்மசானத்துக்கு ஒப்பானவன் என்று ஸ்மிருதி பகர்கிறது. அக்காரணத்தை முன்னிட்டு அவனுக்கு அருகில் வேதாத்யயனம் நடைபெறலாகாதாம். ஸ்மிருதி பகர்வது போன்று ஸ்மசானம் அத்தகைய விலக்குதற்குரிய இடமன்று. உலகப் பற்றுடையார் வாழும் கிருகத்தைவிட அது புனிதமானது ஆகும். ருத்திரபூமி என்று அது பகரப்பெறுகிறது. ஸ்மசான வாசி என்பது சிவனுக்கு அமைந்த நாமங்களில் ஒன்று. ஸ்மசானத்துக்கருகில் வேத பாராயணம் செய்யலாகாதென்றால் சிவசன்னிதியில் அது செய்யலாகாது என்று பொருள்படுகிறது. இத்தகைய அனர்த்தமான கொள்கையைச் சான்றோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். காசிக்கே மஹாஸ்மசானம் என்பது ஒரு பெயர். காலமெல்லாம் ஆங்கு பிரேதங்கள் தகிக்கப்படுகின்றன. பிணம் வெந்து கொண்டிருப்பதற்கு அருகில் அமர்ந்து தியானம் பண்ணுவது சிறந்த சாதனம் என்றும் ஆங்கு யதிகள் அதைச் சர்வ காலமும் அனுஷ்டித்து வருகின்றனர். ஸ்மிருதியிலுள்ள இக்கோட்பாட்டின்படி காசி க்ஷேத்திரமே வேத அத்யயனத்துக்குத் தகுதியற்றதாகிறது. ஆனால்

ஆங்குத்தான் கணக்கற்ற யாகங்கள் நடைபெற்று வந்திருக் கின்றன. வேத வேதாந்த சிரவணத்துக்குத் தாயகமாகக் காசியம்பதி அமைந்திருக்கிறது. உண்மையை ஆராயுங்கால் சூத்திரன் ஸ்மசானம் போன்றவன் அல்லன், யதி ஒருவனே நடமாடும் ஸ்மசானத்துக்கு ஒப்பாவான். அவன் விரஜா ஹோமம் பண்ணுவதற்கு முன்பு தன்னை மாண்டுபோனவனாக வைத்து ஆத்ம பிண்டம் போட்டுக்கொள் கின்றான். அதற்கு அவன் ஏற்ற அதிகாரியாயிருப்பானாகில் அக்கணம் முதற்கொண்டு அவனுடைய உடலம் பிரேதத்துக்கு ஒப்பானதாக அவன் கருதிக் கொள்கின்றான். ஆகையினால்தான் விவாகம் முதலி யன நடைபெறு - இடங்களில் யதியின் மேனி தென்படலாகாது என்னும் ஐதிகம் வந்துள்ளது. இனி, ஸ்மிருதி யைப் பின்பற்றுத லென்றால் யதியின் அருகில் வேதாத்யயனம் செய்யலாகாது என்பதாகும். இது பொருளற்ற கொள்கை என்பது சொல்லாமலே விளங்குகிறது.

பிரம்மத்துக்கு அந்நியமாக ஒன்றும் இல்லவே இல்லை என்று அத்வைதத்தை ஸ்தாபிக்க வந்த பகவத்பாத ஆதிசங்கரர் இங்ஙனம் கூறியிருக்க முடியுமோ என்னும் ஐயம் இயல்பாகவே எழுகிறது. இக்கொள்கை சங்கரருடையதோ அல்லது சங்கரர் பெயரால் பாஷ்யத்தினுள் இதை நுழைத்த வேறு யாருடையதோ நாம் உறுதி கூறமுடியாது. இதைப் பகர்ந்துள்ள மனிதர் பரிபாகம் எத்தகையது என்பது தெற்றென விளங்கு கிறது. காசியில் கள் குடம் எடுத்து வந்த சண்டாளனை வணங்கி அபேத புத்தியைப் பெற்ற ஆதிசங்கரருக்கு இத்தகைய பேத புத்தியும், கல் நெஞ்சமும் வந்திருக்க முடியுமா என்பது கேள்வி. இனி இதில் அடங்கியுள்ள கோட்பாடுகளை ஒவ் வொன்றாக ஆராய்வோம். மனு ஸ்மிருதி போன்றது காலத்துக் கேற்றவாறு மாறுபாட்டையும் தன்மையுடையது. பெரும்பாலும் அது அரசர்களுக்குரியது. இக்காலத்தவர்களாகிய நமக்கு அவருணத்தான் என்று சொல்லப்படும் ஸ்ரீமான் அம்பேத்கார் தான் அவைத் தலைவராயிருந்து ஸ்மிருதியை (Constitution of the Republic India) அமைத்திருக்கிறார். இது முற்றிலும் லௌகிக மானது. சங்கரர் போன்ற வேதாந்தி ஒருவருக்கு மனுஸ்மிருதி பிரமாணமாகாது. இன்றைக்கு மனுஸ்மிருதியைக் கொளுத்த

ஒரு கூட்டம் முன்வந்திருக்கிறது. ஆனால் அதைக் குறித்து அவர்கள் அவ்வளவு ஆத்திரப்பட வேண்டியதில்லை. பயனற்ற பகுதிகளையுடைய அது தானே பின்னணிக்குப் போய்விட்டது. பொருட்காட்சி சாலையில் (Museum) பல பண்டைப் பொருள் களைப் பாதுகாத்து வைப்பது போன்று இத்தகைய ஸ்மிருதி களையும் பாதுகாத்து வைக்கலாம். என்னென்ன இயல்புடைய மாந்தர் முன்னாளில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இத்தகைய ஸ்மிருதிக்ள் பிரமாணங்கள் ஆகும். நாம் வசிக்கும் இந்த நூற்றாண்டில் வேதத்தை முறையாகத் தொகுத்தவர், மொழி பெயர்த்தவர், பாதுகாத்தவர் (Max Muller) மாக்ஸ் முல்லர் என்னும் மேல் நாட்டு மேன்மகன் ஆவார். கடை வருணமாகிய சூத்திர இனத்தையும்கூடச் சேர்ந்தவர் அவர் அல்லர். சண்டாளர் அல்லது யவனர் கூட்டத்தைச் சேர்ந்தவர் அவர். ஸ்மிருதியின் கூற்று ஆதரவற்றது என்பதை அவருடைய செயலே இன்று நமக்குக் காட்டி வருகிறது. அத்தகைய மாக்ஸ் முல்லரை விவேகானந்த சுவாமிகள் நேரில் சந்தித்து அவரோடு உறவாடி யிருக்கிறார். அவரை ஒரு ரிஷி என்றே சுவாமிகள் அங்கீகரித் தார். பாஷ்யக்காரர்களுடைய சில கொள்கைகளைக் குறித்துச் சுவாமிகள் (The Commentators have often been conscious or unconscious liers) பாஷ்யக்காரர்கள் பலதடவைகளில் வேண்டு மென்றே பொய் சொல்லியிருக்கிறார்கள், அல்லது அறியாமை யினால் பொய் சொல்லி இருக்கிறார்கள் என்று தாக்கியுள்ளார். இதுபோன்ற பாஷ்யத்தை அங்ஙனம் வகைப்படுத்துதற்கு இது இடம் கொடுக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சந்நியாசி சிஷ்யர் களுள் வெவ்வேறு குடிகளில் பிறந்தவர்களை எடுத்துக் கொண்டார். அவர்களில் ஒருவர் லாட்டு என்னும் சூத்திர இளைஞன். சூத்திரன் என்னும் சொல்லுக்குப் பிறப்பை முன்னிட்டு நாம் என்னென்ன விளக்கம் தரமுடியுமோ அதெல்லாம் லாட்டு என்னும் இளைஞனுக்கு ஒத்ததாயிருந்தது. கல்வியறிவும் அவனுக்குச் சிறிதும் கிடையாது. அத்தகைய இளைஞனைப் பரமஹம்சர் ஆட்கொண்டார், சந்நியாசி ஆக்கினார். அற்புதானந்த சுவாமிகள் என்பது அவரது தீக்ஷாநாம மாகும். பரமஹம்சருடைய அற்புதச் செயல் என்றே அந்தச்

சிஷ்யருடைய ஜீவிதத்தைச் சொல்லவேண்டும். பிரம்மஞானத்தைப்பற்றி உபநிஷதங்கள் கூறும் கோட்பாடுகளெல்லாம் அவருக்குச் சுவானுபவமாய் அமைந்திருந்தன.

இதையெல்லாம் ஆராயுங்கால் உண்மையான வேதாந்தம் எது, வேதாந்தத்தின் பெயரால் அதனுள் புகுத்தப்பட்டுள்ள கசடு எது என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். தத்துவ ஆராய்ச்சிக்கு ஒப்பச் சூத்திரர் என்பார் மனபரிபாகம் அடையாதவர். கற்றல், கேட்டல் விஷயத்தில் இன்னும் கீழ்த் தரமான நிலையில் இருப்பவர். ஒரே குடும்பத்திலுள்ள சில சகோதரர்களுள் ஒருவன் பிராமண இயல்பு உடையவனாக இருக்கலாம், இன்னொருவன் க்ஷத்திரிய இயல்புடையவனாக இருக்கலாம், வேறொருவன் வைசிய இயல்புடையவனாகலாம், மற்றொருவன் சூத்திர இயல்புடையவனாக இருக்கலாம். இது தான் இயற்கையின் நடைமுறைக்கு முற்றிலும் ஒத்ததாகிறது. பிறப்பை முன்னிட்டுப் பாகுபடுத்துவது ஏமாற்றத்தை உண்டு பண்ணும். பிரஸ்தானத்திரயத்தை இன்று உலகெங்குமுள்ள உத்தமர்களுக்கு எடுத்து வழங்குதற்கென்றே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்த சுவாமிகளும் தோன்றியுள்ளார்கள்.

கேள்வி: *(562)* உழைப்பாளிகள் ஏன் நான்கு வருணங்களில் கடைசியாக வைக்கப்பட்டுள்ளனர்?

பதில்: மக்கள் தங்கள் தரத்துக்கேற்ற பிரகாரம் நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இது இயற்கையின் கூறு; செயற்கையாக மக்கள் தங்களுக்குத் தாங்களே அமைத்துக் கொண்ட திட்டமாகாது. இயற்கையின் செயல் என்பதும் இறைவன் செயல் என்பதும் ஒன்றே. ஆகையினால்தான் கிருஷ்ண பரமாத்மா, நான்கு வருணங்கள் தம்மால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன என்று பகவத்கீதையில் பகர்ந்துள்ளார்.

நான்கு வருணங்களின் கூறுகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே அமைந்திருக்கின்றன. ஒரு மனிதன் எண்ணு கின்ற மேலான எண்ணங்கள் அவனுடைய மூளையின் செயலா கின்றன. ஆகையினால் ஒரு மனிதனுடைய அமைப்பில் அவன் தலைத்தரமான வருணமாகிய பிராம்மணன் எனக் கருதப் படுகின்றது. அடுத்தபடியாக அவன் ஆற்றுகின்ற அறங்கள்

அனைத்துக்கும் இருப்பிடமாக இருப்பது புஜம். அது க்ஷத்திரியனாகக் கருதப்படுகிறது. மூன்றாவதாக மனிதன் படைத்திருக்கிற வயிறு வைசியனாகக் கருதப்படுகிறது. அது உணவை ஏற்று ஜீரணம் பண்ணி உறுப்புக்கள் அனைத்துக்கும் உரிய பாங்கில் அதைப் பங்கிட்டுத் தருகிறது. மனிதன் படைத்துள்ள கைகளும் கால்களும் சூத்திரனாகக் கருதப்படுகின்றன. சரீர முன்னேற்றத்துக்குத் தேவையான சாதாரணச் செயல்களையே இந்த உறுப்புக்கள் செய்து வருகின்றன. இவைகளுள் ஏதேனும் ஒன்று பழுதுபட்டுப்போனால் மனிதனுக்கு அது பெரிய நஷ்டமாகாது. அக்கேட்டுக்கு ஈடும் செய்துகொள்வது அம்மனிதனுக்குச் சாத்தியம். ஆனால் நல்வாழ்வுக்கு இன்றியமையாத உறுப்புக்களாகிய தலை, புஜம், வயிறு ஆகியவை கெட்டுப்போகாதபடி காத்துக் கொள்ள மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். அதே விதத்தில் சமுதாயத்தில் அமைந்துள்ள மக்களுள் பேரறிஞர்களைப் பேணிப் பாதுகாக்கச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாகச் சமுதாய வாழ்க்கையைக் கேடில்லாமல் நடத்தி வரும் மக்கள் இரண்டாவதாக இடம் பெறுகின்றனர். பொருள் சம்பாதிப்பதும் அதைப் பொது நன்மைக்குப் பயன்படுத்துவதும் ஆகிய நல்ல செயல்களைச் செய்பவர்களுக்கு மூன்றாவது இடம் தரப்படுகின்றது. இனி, கொடுத்த வேலையை மட்டும் செய்ய வல்லவர்களாய் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு நான்காவது இடம் தருவதில் குறைபாடு ஏதும் இல்லை. இப்படி அமைவதுதான் முறைமை.

கேள்வி: *(563)* சூத்திரன் தன் முயற்சியால் பிராமணன் ஆக முடியுமா?

பதில்: இயற்கையின் நடைமுறையும் இறைவனின் திட்டமும் ஒன்றேயாம். அதில் பிழை உண்டாவதில்லை. ஆனால் பிறப்பை முன்னிட்டு மக்கள் அமைக்கும் கட்டுமானத்தில் பிழைகள் ஏராளமாக உண்டாகின்றன.

"நான்கு வருணங்கள் குணத்தையும் கர்மத்தையும் முன்னிட்டு என்னால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" என்பது கண்ணன் வாக்கு.

குணமும் கர்மமும் ஒரு மனிதனுக்கு அமைவது பிறப்பை

முன்னிட்டு அன்று. மனிதனுடைய இயல்பையும் நாட்டத்தையும் முன்னிட்டே அவன் தனக்கேற்ற கர்மத்தை எடுத்துக் கொள்கின்றான். இக்கோட்பாட்டைப் பரமஹம்சதேவர் இரண்டு சகோதரர்களுக்கிடையில் ஒருவன் சமையற்காரனாக அமைகின் றான், மற்றொருவன் கோவிலில் பூஜை பண்ணும் தொழிலில் அமைகின்றான். இவ்விருவருள் இரண்டாமவனைப் பிராம்மணன் என்றும் முதல்வனைச் சூத்திரன் என்றும் பகர்வதுதான் பொருந்தும் என்று பாகுபடுத்தினார். இறைவனுடைய திட்டப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் கர்மத்தில் மேல்நிலைக்கு வருகிற சுதந்திரம் உண்டு. இக்கோட்பாட்டை அனுசரித்தே விவேகானந்த சுவாமிகள் உலகில் உள்ள மக்கள் எல்லாரையும், பிராம்மணனாக்குதல் நம் குறிக்கோள் என்று பகர்ந்தார். மக்கள் எல்லாரும் மேல்நிலையை நாடி முயலலாம். இக் கோட்பாட்டின்படி சூத்திரன் பிராம்மணன் ஆகக்கூடும். ❑

34. ஜாதி வித்தியாசம்

கேள்வி: *(564)* 'ஒரு புண் ஆறிவிட்டால் பொருக்கு தானே விழுந்து விடுகிறது. அதற்கு முன் அந்தப் பொருக்கை எடுத்தால் புண்ணிலே ரத்தம் வருகிறது. அதுபோன்றே திவ்விய ஞானம் உண்மையில் உண்டாகும் பொழுது ஜாதி வித்தியாசங்களெல்லாம் ஒழிந்து விடுகின்றன. ஆனால் அக் ஞானிகள் அந்த ஜாதி வித்தியா சத்தை மீறி நடப்பது தப்பு' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார். இதன்படி திவ்விய ஞானம் உண்டாவதற்கு ஜாதி வித்தியாசங்கள் அவசியம் என்றுதான் அர்த்தப்படு கிறது. அப்படியானால் உலகில் காந்திஜி போன்ற பெரியோர்கள் ஒருமுகமாக ஜாதி வித்தியாசங்கள் ஒழிந்து எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம் என்று பறைசாற்றுவதெல்லாம் முரண்பாடுடையது ஆகிறதல்லவா? இது சரியா, தவறா?

பதில்: பரமஹம்ஸர் உபதேசத்துக்கும் மஹாத்மா நடந்து கொண்டதற்கும் முரண்பாடு இல்லை. ஜாதி வித்தியாசத்தை பலவந்தமாக விட்டுவிடலாகாது என்று பரமஹம்சர் பகர்கின் றார். அதற்கு உபமானமாக அவர் எடுத்துக்கொண்டது ஆறி வரும் காயத்தின் மீதுள்ள பொருக்கு ஆகும். காயமே பந்தோ பஸ்தாகப் பாதுகாக்கப்படுகிறது. அப்படிப் பாதுகாப்பதால் அது என்றென்றைக்கும் சரீரத்தில் இருக்கவேண்டும் என்கிற எண்ணம் வருவதில்லை. அதேவிதத்தில் ஜாதி வித்தியாசத்தை அனுஷ்டிக்கின்றபொழுது உயர்வு தாழ்வு என்கின்ற பேதத்தை வளர்ப்பதன் பொருட்டு அல்ல; அவரவருக்கு ஏற்ற கர்மத்தை அனுஷ்டித்தல் என்றுதான் பரமஹம்சர் புகட்டுகின்ற ஜாதி

வித்தியாசம் பொருள்படுகின்றது. பணிவிடை செய்வதைக் கடவுள் வழிபாடு என்று அப்பர் சுவாமிகள் வைத்துக்கொண்டார். கடவுளிடத்தில் வேலை வாங்குவதைக் கடவுள் வழிபாடு என்று சுந்தரர் வைத்துக்கொண்டார். ஒருவர் எடுத்துக்கொண்ட உபாசனை முறை மற்றொருவருக்கு ஒவ்வாது. உபாசனை முறையில் வேற்றுமை இருக்கிறது. ஆனால் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாதல் என்னும் குறியிலே வேற்றுமை இல்லை. நெறியில் வேற்றுமை உண்டு. அவரவருக்கு உகந்த தொழிலையே தேவாராதனையாகச் செய்தால் தெய்வத்தை அடையலாம். ஆனால் ஒருவர்க்குரிய தொழில் இன்னொருவருக்கு ஒவ்வாத தாகப் போய்விடக்கூடும். அறிவுடையோர் ஒரு தொழிலை உயர்ந்ததென்றும் மற்றொரு தொழிலைத் தாழ்ந்ததென்றும் கருதுவதில்லை. மற்றுமொரு சான்று எடுத்துக்கொள்வோம். கக்கூஸ் சுத்தம் செய்வதைத் தேவாராதனையாகக் கருதிச் செய்யலாம். கோயிலில் அர்ச்சனை செய்வதையும் தேவாராதனை யாகக் கருதிச்செய்யலாம். இங்குத் தொழில் வேற்றுமை உண்டு, ஆனால் உயர்வு தாழ்வு என்ற பேதம் இருக்கலாகாது. யார் எத்தொழிலுக்குத் தகுதியுடையவர்களோ அத்தொழிலை உயர்ந்த மனப்பான்மையுடன் செய்யலாம். பிறர் தொழிலை அல்பத் தொழிலாகக் கருதும் மனிதன் ஒருவன் அக்கர்மத்தின் மூலமாகத் தானே அற்ப மனிதன் ஆய்விடுகிறான். கக்கூஸ் சுத்தம் செய்யும் வேலையைப் பரமஹம்சரும் செய்தார், மஹாத்மாவும் செய்தார். ஆலயத்தில் தெய்வத்துக்கு அர்ச்சனை பண்ணும் தொழிலையும் பரமஹம்சர் செய்தார். அவர் கருத்தில் அவ்விரண்டும் தேவாரா தனையே. மஹாத்மா காந்தி கூட்டு வழிபாடு செய்தார், ஊரில் உள்ள குப்பைகளையெல்லாம் கூட்டுகிற தொழிலையும் செய்தார். இரண்டையும் தெய்வ வழிபாடாகவே அவர் கருதினார்.

அடிப்படைக் கருத்தை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். தொழிலில் வேற்றுமை உண்டு. அதை முன்னிட்டு உயர்வு தாழ்வு என்கின்ற பேதபுத்தி வரலாகாது. சமூகத்துக்குப் பயன்படு கின்ற எல்லாத் தொழில்களையும் தேவாராதனையாகச் செய்து பழக வேண்டும். ஒரு மனிதன் எக்கர்மத்துக்குத் தகுதியுடைய வனாகப் பிறந்திருக்கின்றானோ, அல்லது பயிற்சி பெற்றிருக்கின் றானோ அது அவனுடைய சுதர்மம் ஆகும். அவனுடைய

ஜாதிக்கேற்றது என்றும் பகரலாம். அவன் அத்தொழிலை நிறுத்தி விடலாகாது. முறையாகக் கையாண்டால் தெய்வத்தை அடைவதற்கு உற்ற சாதனமாக அத்தொழில் அமைகிறது. இப்பேருண்மையைப் பரமஹம்சரும் மஹாத்மா காந்தியும் தங்களுடைய வாழ்க்கையில் புகட்டியிருக்கின்றார்கள்.

கேள்வி: ***(565)*** **ஜாதியை முற்றிலும் ஒழிக்க இயலுமா?**

பதில்: ஜாதியை முற்றிலும் ஒழிக்க இயலாது. ஜாதி வேற்றுமையினால்தான் பிரபஞ்சம் நடைபெறுகிறது. சிருஷ்டி என்பதன் பொருள் வேற்றுமை. சிருஷ்டிக்கு எதிரிடையாயிருக்கின்ற பிரளயமாவது ஒற்றுமை. நனவு அல்லது ஜாக்ரதாவஸ்தை சிருஷ்டி. அயர்ந்த உறக்கம் அல்லது சுழுத்தி அவஸ்தை பிரளயத்திற்கு நிகர். நனவில் காட்சிகொடுக்கும் இயற்கையில் விதவிதமான புல், பூண்டு, மரம், செடி, கொடிகள் இருக்கின்றன. இனி, வாழையில் எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன. தென்னையும் அத்தகைய பாங்குடையதேயாம். நீர் வாழ்வன வற்றுள் விதவிதமான மீன்கள் இருக்கின்றன. பாம்பு, பட்டுப் பூச்சி ஆகியவைகளில் ஜாதிவேற்றுமைகள் ஏராளமாக உண்டு. காட்டில் வாழும் விலங்குகளுள் யானை, புலி, கரடி, மான் ஆகியவைகளில் ஜாதி வேற்றுமை உண்டு. பறவைகளின் பாங்கும் அத்தகையதேயாம். மக்களுள் மங்கோலியன் டைப், காக்கேசியன் டைப், நீக்ரோ டைப் ஆகிய மூன்று பிரிவுகள் முக்கியமானவைகளாம். இவைகளுக்குள் வேற்றுமையும் வேண்டியவாறு இருக்கின்றது. இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ளவர்கள் காக்கேசியன் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆயினும் அவர்களுக்குள் உள்ள வேற்றுமை கணக்கிலடங்காது. இத்தனை வித வேற்றுமைகளை ஒழிப்பது எப்படி?

ஜாதியை ஒழிக்க முடியாது. ஆனால் பண்பட்டுள்ள மக்கள் ஜாதிக்கொடுமையை ஒழித்தல் வேண்டும். இயற்கையைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு ஜாதியினிடத்திலும் தனிச்சிறப்பு உண்டு. சீர்கேடுகள் ஆங்காங்குத் தென்படுகின்றன. மக்களுள் கெட்டவர்களை நல்லவர்களாகத் திருத்தியமைப்பது சீரிய செயலாகிறது. இனி எவ்வளவுதான் முயன்றாலும் கெட்ட வர்களுள் சிலரை நல்லவர்களாகத் திருத்தியமைக்க முடியாது.

சாத்தியப்படுகின்ற இடங்களிளெல்லாம், தரத்திலே கீழோராய் இருப்பவர்களை மேல்நிலைக்குக் கொண்டுவருவது பாராட்டு தற்குரிய செயலாம். அச்செயல் கடவுள் வழிபாட்டுக்கு நிகரானது.

உயிர் வகைகள் ஜனிக்குமிடத்தை முன்னிட்டு ஜாதி என்பது வந்துள்ளது. உயிர் வகைகள் ஏதேனும் ஓர் இடத்தில் பிறந்தேயாகவேண்டும். பிறப்புக்கு மூலகாரணமாயிருக்கின்ற பெற்றோர், சூழ்நிலை முதலியவைகளை முன்னிட்டு ஜாதி பாகுபடுத்தப்படுகின்றது. பிறப்பு எடுப்பவைகளுள் மேலான குடியில் பிறப்பவர்கள் இருக்கிறார்கள். பண்பிலே கீழ்த்தரமான குடியில் பிறப்பவர்கள் இருக்கிறார்கள். பண்பிலே மேலோராய் இருப்பவர்களையும், கீழோராயிருப்பவர்களையும் ஒரேபாங்கில் பொருள்படுத்தலாகாது. நாய், குதிரை ஆகிய மனிதனுக்குப் பயன்படுகிற விலங்குகளுள் ஜாதி வேற்றுமை உண்டு.

அத்தகைய வேற்றுமைய்யை அறிந்து நடந்துகொள்ளா விட்டால் அது மனித்னுக்கு நஷ்டமாகும். மக்களுள் தேவகணம், நரகணம், அசுரகணம் ஆகிய மூன்று இனத்தாரை உலகில் பார்க்கிறோம். இந்த மூன்று கணங்களையும் ஒரே இனமாக்க முயலுவது பொருந்தாது. முயன்றால் அது மனிதனுக்குப் பெரிய நஷ்டமாக முடியும். ஆக, இனவேற்றுமை படைத்திருப் பதே இயற்கையின் பாங்கு ஆகிறது. பரிபாகத்தில் மக்களுக் கிடையில் உள்ள வேற்றுமையை முன்னிட்டுக் கீழோராய் இருப்பவர்களை நாம் அலட்சியப்படுத்தலாகாது. 'கீழோராயினும் தாழவுரை' என்பது கோட்பாடு. உலகம் இருக்கும்வரையில் சிருஷ்டி உண்டு. வேற்றுமையை வளர்ப்பதே சிருஷ்டியின் திட்டம். ஆனால் அவ்வேற்றுமையை முன்னிட்டு மனிதனை மனிதன் சிறுமைப்படுத்தலாகாது. மனிதனை மனிதன் கண்ணியப்படுத்துதற்கேற்பக் கண்ணியப்படுத்துகிறவன், கண்ணியப்படுத்தப்படுகிறவன் ஆகிய இருசாராரும் மேல்நிலை யுறுகின்றனர். மனிதனை மட்டுமன்று, ஈசுவர சிருஷ்டியிலுள்ள உயிர்களனைத்தையும் கண்ணியமாக நடாத்துதல் சான்றோர் போக்காகிறது.

ஆகவே ஜாதியை ஒழிக்க முயலுவது ஆகாத செயலாம். சான்றோர் கூட்டத்தைப் பெரியதாக்குவதே நன்று. முயற்சிக் கேற்றவாறு அதில் முன்னேற்றமடைவது திண்ணம். ❑

35. பிரம்மச்சரியம்

கேள்வி: ***(566)*** பிரம்மச்சரிய் உணர்வை ஊட்டுவது எப்படி?

பதில்: சில சீரிய போதனைகள் மறைமுகமாக வரவேண்டும். பொய் சொல்லாதே என்று எதிர்மறையில் புகட்டுவதற்குப் பதிலாகச் சத்திய விரதத்தைக் கடைப்பிடித்த சான்றோர் களுடைய வரலாறுகள் மூலம் அதன் மகிமையை விளக்குவது சாலச்சிறந்தது. அதேபாங்கில் பிரம்மச்சரியத்தின் மகிமையைச் சிறுவர்களுக்கு எடுத்துப்புகட்டுவது முற்றிலும் அவசியம். காப்பது விரதம் என்பது கோட்பாடு. ஐம்பொறிகளைப் புலன் வழியே ஆசைக்கு உட்பட்டுச் செல்லாது காத்தல் வேண்டும். விரதங்களுள் மஹா விரதமாயிருப்பது பிரம்மச்சரிய விரதம். பீஷ்மர் இதற்கு நல்ல சான்றாக விளங்குகிறார்.

அவர் ஆயுள் காலம் முழுதும் பெண் ஆசையை அறவே ஒதுக்கி வைத்தவர். பெண்பாலர் அனைவரையும் அன்னை பராசக்தியின் சொரூபமாக அவர் கருதியதே அவர் தூய வாழ்வுக்கு நல்ல திறவுகோலாக அமைகிறது.

இக்காலச் சூழ்நிலையில் பிரம்மச்சரிய விரதத்துக்கு இடைஞ் சலாயுள்ள சிற்றின்ப உணர்ச்சியானது சினிமா வாயிலாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் சமுதாயத்தில் எங்கும் நிலவி வருகின்றது. இதற்கிடையில் சிறுவர்களைத் தூய வாழ்வு வாழும்படி பெற்றோர்களும் பள்ளிக்கூடங்களும் தூண்டக் கடமைப் பட்டிருக்கின்றன. பிரம்மச்சரிய விரதத்திற்கு இடைஞ்சலாயுள்ள கருத்துக்கள் கூடியவரையில் சிறுவர்கள் காதுக்கு எட்டாது ஒதுக்கி வைப்பது முற்றிலும் அவசியம் ஆகிறது. இளமையில் கல் என்பது சிறந்த கோட்பாடு. மற்ற கல்விகளையெல்லாம்விடப்

பிரம்மச்சரிய விரத சம்பந்தமான கல்வியைச் சிறுவர்களுக் கிடையில் புகட்டுவது முற்றிலும் அவசியம் ஆகிறது. பிரம்மச் சரியத்தின் மகிமையை அவர்களுக்கு வேண்டியவாறு புகட்ட வேண்டும். பீஷ்மர், ஹனுமான், சுவாமி விவேகானந்தர் போன்ற பெரியோர்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்ததன் வாயிலா கவே மஹா வீரர்களாகவும், மஹா ஞானிகளாகவும், மஹா பக்தர்களாகவும் விளங்கினார்கள் என்பதை யாவருக்கும் புகட்ட வேண்டும். பிரம்மச்சரியத்தை அனுஷ்டிப்பதன் மூலம் பிரம்ம ஞானம் பெறலாம் என்ற உண்மையைத் தெளிவாக்க வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் மேன்மை அது அனுஷ்டித்து வரும் புலனடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முதிய வர்கள் தங்களுடைய வாழ்க்கையின் வாயிலாகவும் நடை, உடை, பேச்சின் வாயிலாகவும் புலனடக்கத்திற்கு எடுத்துக் காட்டாக இருத்தல் அவசியமாகிறது.

கேள்வி: *(567)* பிரம்மச்சரியத்திற்கு இன்றியமையாதது நாவடக்கம் என்கின்றனர் சான்றோர். ஞானேந்திரியங்களுள் ருசியை உணரும் நாவை மட்டும் அடக்கிவிட்டால் பிரம்மச் சரியம் வலிய வந்தமையும் என்கின்றனர். நாவடக்கமின்றி பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்க முடியாதா?

பதில்: ஆசைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண் டிருக்கின்றன. ஐம்பொறிகள் வாயிலாகவும் ஆசை உருவெடுக்கிறது. தீவிரமான பிரம்மச்சரிய விரதத்தில் எந்தவிதமான ஆசைக்கும் இடமில்லை. ஒவ்வொரு பொறிக்கும் புலனாவதை இந்திரிய விஷயம் என்கிறோம். காதுக்கு விஷயம் ஓசை; கண்ணுக்கு விஷயம் வடிவம்; இங்ஙனம் பஞ்சேந்திரியங்களுக்கும் விஷ யங்கள் இருக்கின்றன. ஏனைய நான்கு இந்திரியங்களும் இந்திரி யார்த்தங்களாகிய விஷயங்களில் போகாது தடுத்துவைத்து மனிதன் வாழ்ந்திருக்க முடியும். ஆனால் உணவு உண்ணாது ஒரு மனிதன் உயிர் வாழ்ந்திருக்கமுடியாது. உணவு உண்பது நித்திய கர்மமாகிறது. உணவை ஏற்குங்கால் அதைச் சுவைக்காது இருக்கமுடியாது. சுவைத்துப் பார்ப்பதன் மூலம் உணவு பொருந்தியதா அல்லது பொருந்தாததா என்பதை அறிந்து கொள்கிறோம். உண்ணும் உணவைச் சுவைத்துப் பார்ப்பதற்கு

இடையில் அந்தச் சுவையில் பற்றுவைக்காது இருந்து பழக வேண்டும். அது ஒருவிதத்தில் கடினமானது. சத்துடைய நல்ல உணவில் உப்பு, காரம் முதலியன இல்லாது போய்விட்டால் சுவையில் பற்று வைத்திருக்கின்றவர்கள் அந்த உணவை உண்ணமுடியாது திகைக்கின்றனர். ஆனால் பற்றை நீக்கிப் பழகியிருப்பவன் அறுசுவைகளின் தரங்களை உணர்ந்து உணவு உண்ணவும் முடியும்; அந்த அறுசுவைகள் முறையாக அமையாது போய்விடுங்கால் அச்சுவைகளைக் கருத்தில் வாங்கிக்கொள்ளாது உணவு உண்ணவும் முடியும். நாவை வென்றவனுக்கு இது சாத்தியமாகிறது. ஒரு மனிதனுக்கு ஆசை அடங்கியிருக்கிறதா என்பதை இங்ஙனம் நாவடக்கத்தினின்று அறிந்துகொள்ள முடியும். எல்லா ஆசைகளையும் அடக்கியவன் பிரம்மச்சாரி. ஆசையை அவன் எவ்வளவு தூரம் அடக்கியிருக்கிறான் என்பதை நாள்தோறும் சுவைத்தல் என்னும் செயல்புரிந்து வருகின்ற நாவை அவன் அடக்கி ஆளுதலிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். ஆக, ஆசையை அளந்தெடுப்பதற்கு நாவடக்கம் நன்கு பயன்படுகிறது. பிரம்மச்சரிய விரதத்தில் நன்கு நிலை பெற்றிருப்பவன் இயல்பாகவே நாவடக்கம் பழகியவனாக இருப்பான்.

கேள்வி: *(568)* திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் என்ற நூலில் "இல் வாழ்வில் தலைப்படாத ஒருவனது உள்ளத்தை ஜன்னல் களும், வாயிற்கதவுகளும் மூடப்பட்டுக் காற்று நுழையப் பெறாத பாழும் கட்டிடத்திற்கும், ஓட்டமில்லாத நீர் நிலைக் கும் ஒப்பிடலாம் என்று இல்லறப்பகுதியைச் சிறப்பித்துக் காண்பிக்கிறார். இல்லறத்தைப்பற்றி எழுதுகிறபோது இப்படி எழுதினாரா? அல்லது இது உண்மைதானா?

பதில்: திரு. வி.க. அவர்கள் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலை எழுதியிருப்பதுபோன்று 'பெண்ணின் பெருமை' என்கிற நூலையும் எழுதியிருக்கிறார். இந்த இரு நூல்களிலும் பிரம்மச்சரிய விரதத்தைக் கண்டிக்கின்ற பாங்கில் கருத்துக்கள் பலவற்றை அவர் வெளியிட்டிருக்கிறார். பிரம்மச்சரிய விரதம் இயற்கையின் நடைமுறைக்கு முரண்பட்டது

என்றும் அவர் எழுதியிருக்கிறார். சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் ஒரு சத்சங்கத்தின் ஆண்டு விழாவின்போது அவரை நேரில் சந்தித்து இக்கோட்பாட்டை அலசி ஆராயும் வாய்ப்பு நமக்குக் கிட்டியது. தாம் எழுதியிருந்த கருத்து ஒரு சார்புடையது என்பதையும் ஆத்ம ஞானத்தில் செல்லுகின்றவர்களுக்கு அது ஏற்புடையது ஆகாது என்பதையும் அப்பொழுது அவர் ஒத்துக் கொண்டார். காந்தியடிகளே தாம் ஆயுட்கால முழுதிலும் பிரம்மச்சரியத்தை அனுஷ்டித்திருந்தால் தாம் இன்னும் பன்மடங்கு மேலான நிலைக்குப் போயிருந்திருக்கக் கூடும் என்றும் தெரிவித்திருக்கிறார். பிறவியிலிருந்தே நைஷ்டிகப் பிரம்மச்சாரிகளாக இருந்தவர்களான சுகப்பிரம்மம், ஏசுநாதர், ஆதிசங்கரர், விவேகானந்தர் முதலியவர்கள் மனபரிபாகத்தில் அடைபட்ட அறை போன்றவர்கள் அல்லர். வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் உள்ளபடி கண்டறிந்தவர்கள் அப்பெருமக்களே யாம். உலகத்தில் தோன்றியுள்ள சான்றோர்கள் அனைவரும் பிரம்மச்சரியத்தாலன்றி பிரம்மஞானம் அடையப்படாதது என்பதை ஒருங்கே உறுதிகூறி இருக்கிறார்கள்.

நைஷ்டிகப் பிரம்மச்சரியம் இயற்கையின் நடைமுறைக்கு ஒவ்வாதது என்னும் கொள்கை ஏற்புடையதாகாது. இயற்கையின் நடைமுறையில் பல படித்தரங்கள் இருக்கின்றன. ஸ்தாவரங்களின் இயற்கை ஒருவிதமானது. விலங்குகளின் இயற்கை வேறு விதமானது. மக்களின் இயற்கை மற்றொரு விதமானது. பரத்தை அடைய விரும்புகிறவர்களுடைய இயற்கை முற்றிலும் அலாதியானது. மரம் செடி கொடிகளில் வித்து உண்டாவதற்கு ஆன ஆண் பெண் இயல்புகள் ஒரே பூவில் அடங்கியிருக்கின்றன. அது ஸ்தாவரத்தின் இயல்பு. விலங்குகளுக்கிடையில் காளை ஒன்று பருவம் வந்தானபிறகு தன்னை ஈன்றெடுத்த பசுவைத் தன் தாய் என்று உணராது அதனுடன் புணரும் பாங்குடையது. விலங்கு இனத்தின் இயல்பு அது. மானுட உலகில் பெற்றெடுத்த தாயைத் தெய்வமாகக் கருதுவது மானுட இயல்பு. இனி பரஞானம் அடைய விரும்புகிறவர்கள் பெண்ணுலகு அனைத்தையுமே பராசக்தி சொரூபமாகக் கருதியாக வேண்டும். மணந்து கொண்ட மனைவியையே ஸ்ரீராமகிருஷ்ணர் அங்ஙனம் பாராட்டிப் பரஞானத்தைப்

பெற்றார். எனவே பரஞானத்தைப் பெற விரும்புகிறவர்களுடைய இயல்பு காமத்தை அறவே தகனம் செய்துவிடுவதாகும். காமதகனம் சிவதத்துவத்தில் ஒரு பகுதியாய் அமைந்திருக்கிறது. காமதகனம் செய்தாலொழிய மனிதனுக்குச் சிவஞானம் கிட்டாது. எனவே பரஞானத்தைப் பெற விரும்புகிறவர்கள் பிரம்மச்சரிய விரதத்தை முற்றிலும் அனுஷ்டித்தே ஆகவேண்டும். ❑

36. துறவறம் / இல்லறம்

கேள்வி: *(569)* கணவனுக்குச் சிற்றின்பத்தில் விருப்பம் இருக்கிறது. ஆனால் மனைவியோ பாரமார்த்திகத்துடன் கூடிய சத்சங்கம் முதலிய மேலான இன்பத்தையே விரும்பு கின்றாள். மனைவி தன் மேலான விருப்பத்தை விட்டுவிட்டுக் கணவனின் விருப்பப்படி நடப்பதுதான் தர்மமா? தன் கணவனின் விருப்பத்தை நிராகரித்து விட்டுத் தன் மேலான விருப்பப்படி நடப்பது குற்றமாகுமா?

பதில்: மணந்துகொண்ட பிறகு கணவன் மனைவி ஆகிய இருவரும் பரஸ்பரம் ஒருவர் விரும்புகிற இன்பத்தை மற்றொருவர் நிறைவேற்றிவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். உலக இயல்புக்கு ஒத்த தர்மம் இது. இவர்களுள் யாரோ சிலர் உயர்ந்த பாரமார்த்திக நாட்டமுடையவர் ஆகின்றனர். அத்தகையவர் தமது வாழ்க்கைத்துணையை அடியோடு புறக்கணித்து விடுவதும் ஒவ்வாது; கீழான வாழ்க்கை முறைக்கு இறங்கி வருவதும் ஒவ்வாது. மனப்பூர்வமாகக் கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணித் தாங்கள் இருவரும் மேலான நெறியில் செல்லுதற்கான சீரிய மனப்பான்மையைத் தரவேண்டுமென்று ஒருவர் பிரார்த்தனை செய்தாலும் அப்பிரார்த்தனைக்குக் கடவுள் செவிசாய்க்கின்றார். மற்றவருடைய மனது மாறி அமைவதைக் கண்கூடாகக் காணலாம். ஆக, கடவுளுடைய துணையைப் பேரார்வத்துடன் நாடுவதே முறை. இருவர்க்கிடையில் பிணக்கை உண்டுபண்ணி விடுவது முறையன்று, உண்மையான பக்தி உள்ளவர்களுக்குக் கடவுள் துணைபுரிவார்.

கேள்வி: *(570)* இல்லறத்திலிருந்து சேவை செய்வது நல்லதா? துறவறத்திலிருந்து சேவை செய்வது நல்லதா?

பதில்: இல்லறத்தில் இருந்தாலும் துறவறத்தில் இருந்தாலும் உயிர்களுக்குச் சேவை செய்யவேண்டும். உயிர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் சுயநலம் துடைக்கப்படுகிறது. உயிர்களிடத்தில் அன்பு ஏற்படுகிறது. மனம் சுத்தி அடைந்து வருகிறது. இல்லறத்தில் இருப்பவர்களுக்கும் துறவறத்தில் இருப்பவர் களுக்கும் அந்தக்கரணசுத்தி ஏற்படவேண்டும். அந்தக்கரணம் சுத்தி அடைகிறபொழுதுதான் ஞானம் உண்டாகிறது. இல்லறத்தில் இருப்பவர்களும், துறவறத்தில் இருப்பவர்களும் ஞானம் பெற்றாகவேண்டும். ஞானம் பெறுவதற்கு மனம் தூய்மையாக வேண்டும். மனம் தூய்மை அடையச் சேவை செய்யவேண்டும். மனமுடையவர்கள் அனைவரும் இல்லறத்தில் இருப்பினும், துறவறத்தில் இருப்பினும் சேவை செய்து கொண்டே இருக்கவேண்டும். மனதற்ற பரிசுத்த நிலையில்தான் பரத்தோடு லயமாகின்றோம். பரத்தோடு லயமாகும் வரையில் இல்லறத்தானானாலும் சரி, துறவறத்தானானாலும் சரி சேவை செய்வதுதான் நல்லது.

கேள்வி: *(571)* இல்லறத்தில் இருந்துகொண்டு துறவறம் செய்வது சிறந்ததா? இல்லறத்தை ஒதுக்கித் துறவறம் மேற் கொள்வது சிறந்ததா?

பதில்: இல்லறம், துறவறம் ஆகிய இரண்டும் அறத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். ஒன்று கிருஹஸ்த ஆச்ரமம் எனப்படுகிறது. மற்றது சந்நியாச ஆச்ரமம் எனப்படுகிறது. ஆச்ரமம் என்னும் சொல்லுக்குப் பொருள் தூய பெருவாழ்வு வாழ்வதற்கு உற்ற சூழ்நிலையாம். உண்மையில் ஆச்ரம வாழ்வு நிரந்தரமாயுள்ளது. ஆதலால்தான் பிரம்மச்சரிய ஆச்ரமம், கிருஹஸ்த ஆச்ரமம், வானப்பிரஸ்த ஆச்ரமம், சந்நியாச ஆச்ரமம் என ஆச்ரம வாழ்வு ஆயுட்காலம் முழுதுக்கும் அமைந்திருக்கிறது. அத்தகைய வாழ்வே வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்வாகிறது.

மனைவி மக்களோடு ஓர் இல்லத்தில் வாழ்ந்திருப்பது இல்லறம் எனப்படுகிறது. மனைவி மக்களோடு வாழ்ந்திருப்பதற் கிடையில் இல்வாழ்பவன் ஒருவன் இவ்வுலகப் பற்றில்லாத வனாக வாழ்ந்திருக்கவேண்டும். மனைவி மக்களையும் தனக்குச்

சொந்தம் என்று அவன் கருதலாகாது. உண்மையில் அவர்கள் கடவுளுக்குச் சொந்தமானவர்கள். தாற்காலிகமாக அவர்கள் தங்களுக்குச் சொந்தமாயிருக்கிறார்கள். இத்தகைய மனப்பான்மை பூணுவது முற்றிலும் அவசியம். இது அகத்துறவு எனப்படுகிறது. உலக நடைமுறைக்கேற்ப மனைவி மக்களிடத்துப் பந்தபாசம் இருக்கிறது. பாரமார்த்திகப் பெருநிலைக்கேற்ப அவர்களிடத்துப் பந்தபாசம் ஏதுமில்லை. இத்தகைய மனநிலையோடு குடும்ப வாழ்க்கையை நன்கு நடாத்துகிறவர்களே இல்லறத்தார் ஆகின்றனர். அப்படி வாழ்வதால் படிப்படியாக அகப்பற்று அகன்று போகிறது.

துறவறத்தான் ஒருவன் அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருதரப் பற்றுக்களையும் ஒதுக்கித்தள்ளுகிறான். தனக்கென அவன் வீடு வாசல் எதையும் வைத்துக்கொள்வதில்லை. தன்னுடைய உற்றார் என்று எவரிடத்தும் அவன் அபிமானம் கொள்வதில்லை. எவ்விடத்தில் வசித்திருந்தாலும் இறைவனுடைய சந்நிதியில் வசித்திருப்பதாக அவன் உணருகிறான். இணக்கம் கொள்ளுகிற மக்கள் எல்லாரையும் தெய்வ சொரூபமாக அவன் பாராட்டுகிறான். உலகம் முழுதுக்கும் அவன் சொந்தம். அவனுக்கு உலகம் முழுவதும் சொந்தம். சமுதாய முழுதுக்கும் அவன் ஆசாரியனாகவும் அமைகிறான்.

சமுதாயத்தில் சரியான இல்லறத்தார் ஏராளமாக இருக்க வேண்டும். சரியான பாங்கில் இல்லறத்தாராய் இருப்பவர்களே பிறகு துறவறத்துக்கு முற்றிலும் பக்குவப்படுகின்றனர். நல்ல சமுதாயம் ஒன்றில் சரியான வீதாசாரப்படி இல்லறமும், துறவறமும் இடம்பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சமுதாயத்துக்கு நலன்கள் அனைத்தும் இனிது வந்தமையும். ஏனைய மூன்று ஆச்ரமங்களும் சந்நியாச ஆச்ரமத்தில் பூர்த்தி பெறுகின்றன.

கேள்வி: *(572)* இல்லறத்திலிருந்து பின்னர் துறவறம் மேற்கொள்வது நல்லதா?

பதில்: பண்பட்ட மானுட வாழ்க்கையானது நான்கு ஆச்ரமங்களாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அவையாவன: பிரம்மச்சரிய ஆச்ரமம், கிருஹஸ்த ஆச்ரமம், வானப்பிரஸ்த

ஆச்ரமம், சந்நியாச ஆச்ரமம் என்பனவாம். இந்த நான்கனுள் பிரம்மச்சரிய ஆச்ரமத்தில் சீரிய வாழ்க்கைமுறை துவங்குகிறது. பிரம்மச்சரிய ஆச்ரமம் பூர்த்தியாவதற்கு முன்பே ஒரு சிலருக்கு இந்நிலவுலக வாழ்க்கை நிலையற்றது என்பதும் துன்பம் நிறைந்தது என்பதும் தெற்றென விளங்குகிறது. ஆகவே அரிதிலும் அரிதாக ஒரு சிலர் பிரம்மச்சரிய ஆச்ரமத்திலிருந்து நேர் சந்நியாச ஆச்ரமத்துக்குப் போகிறார்கள். அக்காலத்தில் வாழ்ந்திருந்த ஆதிசங்கரரும் இக்காலத்தில் வாழ்ந்து வந்த சுவாமி விவேகானந்தரும் இதற்குச் சான்றுகளாவார்கள்.

சமுதாயத்தில் உள்ள மக்களில் பெரும்பான்மையோர் முறைப்படி பிரம்மச்சரிய ஆச்ரமத்தினின்று கிருஹஸ்த ஆச்ரமத்துக்கு வருகிறார்கள். இந்த ஆச்ரமத்தில் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்து இல்லறக் கடமைகளை நன்கு நிறைவேற்றுகின்றனர். அதற்கிடையில் இவ்வுலக வாழ்விலுள்ள இன்ப துன்பங்களின் பாங்குகளை அவர்கள் நன்கு அறிய வருகிறார்கள். மேற்கொண்டு பிறவி வேண்டாம் என்னும் வைராக்கியம் வாய்க்கப்பெற்றவர்கள் வானப்பிரஸ்த ஆச்ரமத்தின் வாயிலாகவோ நேரே கிருஹஸ்த ஆச்ரமத்தினின்றோ சந்நியாச ஆச்ரமத்துக்குப் போகிறார்கள். அப்படி அவர்கள் செல்வதையும் ஆன்றோர்கள் ஆமோதிக்கிறார்கள். ஆகவே துறவறத்தை மேற்கொள்வது பிறப்பு வேண்டாம் என்பவர்களுக்கு முற்றிலும் அவசியம். அந்த அவசியத்தை இல்லறத்தினின்று அறிந்து கொண்ட பிறகு சந்நியாச ஆச்ரமத்துக்குப் போவது முற்றிலும் பொருத்தமானதே.

கேள்வி: *(573)* இல்லறத்திற்குப் பின் துறவறமா? அல்லது துறவறத்திற்குப் பின் இல்லறமா?

பதில்: இக்கேள்வியின் இரண்டாம் பகுதி உலக நடைமுறைக்கு முரண்பட்டதாகவும் விபரீதமானதாகவும் தென்படுகிறது. ஆயினும் இக்கேள்விக்குரிய கோட்பாடுகளையெல்லாம் முறையாக ஆராயுமிடத்து வாழ்க்கைத் தத்துவம் நமக்கு உள்ளபடி விளங்கும். இல்லறம் என்றும் துறவறம் என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பவைகள் உண்மையில் நான்கு பகுதிகள் உடையவைகளாய் இருக்கின்றன.

பிரம்மச்சரிய ஆச்ரமம், கிருஹஸ்த ஆச்ரமம், வானப்பிரஸ்த ஆச்ரமம், சந்நியாச ஆச்ரமம் ஆகியவை சேர்ந்து நான்கு பகுதிகள் ஆகின்றன. ஏழு வயதுக்குப் பிறகு சிறுவன் அல்லது சிறுமி பிரம்மச்சரிய ஆச்ரமத்தில் சேர்ந்தாக வேண்டும். இப் பகுதியை இக்காலத்திய நடைமுறையில் பள்ளிப் படிப்புப் பகுதியென்று கூறுகிறோம். கல்லூரிப் படிப்பும் இதில் அடங்கியிருக்கிறது. பழங்காலத்து நடைமுறையில் வாழ்க்கையின் முதல்படியாகிய இது பிரம்மச்சரிய ஆச்ரமம் என்று பகரப் பட்டது. இந்த இரண்டுக்குமிடையில் சிந்தனைக்குரிய வேற்றுமை ஒன்று உண்டு. பிரம்மச்சரிய ஆச்ரமம் ஒழுங்குப் பாடான வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. பாடம் படிப்பது அதில் இடம்பெற்றிருந்தது. ஆனால் பாடம் படிப் பதைவிடக் கட்டுப்பாடான வாழ்வு அக்காலத்தில் முதன்மை பெற்றிருந்தது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது பழைய நியதி. சிலருக்கு நன்கு கற்க இயலுகிறது. வேறு சிலருக்கு அது இயலுவதில்லை. கல்வியை நன்கு கற்கா விட்டால் மாணாக்கன் ஒருவன் பிரம்மச்சரிய ஆச்ரமத்தினின்று வழுவியவன் ஆகான். ஆனால் ஒழுக்கத்தினின்று பிசகுகிறவன் நல்வாழ்வினின்று பிசகியவன் ஆகின்றான். பழைய ஏற்பாட்டின்படி பிரம்மச்சரிய ஆச்ரமத்தினின்று வழுவுகிறவன் நல்வழிக்கு வரும் வரையில் சமுதாயம் அவனுக்கு மணம் முடித்து வைக்காது. இல்லறத்தில் செல்லவொட்டாது அவனைத் தடுக்கும். அந்தக் கட்டுப்பாட்டின் வாயிலாகச் சமுதாயத்தின் தூய்மை பாதுகாக்கப் பட்டது.

இக்காலத்திய கல்வித்திட்டத்தில் ஒழுக்கம் பின்னணிக்குத் தள்ளப்படுகிறது. அது அவரவர் மனப்பான்மைக்கு ஏற்றது. மற்றவர் அத்துறையில் மிகைபடக் கருத்தைச் செலுத்தலாகாது. படிக்கவேண்டிய பாடத்தை முறையாகப் படித்து மேலே வருபவன் நல்ல மாணாக்கனாகக் கருதப்படுகிறான். இது இக்காலத்திய நடைமுறை. இதன் விளைவாக நல்வாழ்வு வாழ்பவருடைய எண்ணிக்கை அதிவேகம் குறைந்து வருகிறது.

"இல்லறமல்லது நல்லறமன்று" என்பது எக்காலத்துக்கும் பொருந்துகிற கோட்பாடு ஆகும்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்பது பழைய ஏற்பாடு. இக்காலத்திய இல்லறத்தான் இக்கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதில்லை. இயல்புடைய மூவர் என்பார் அறநெறி பிறழாத பிரம்மச்சாரிகள், வானப்பிரஸ்தர்கள், சந்நியாசிகள் என்பதாம். அம்மூவரையும் ஓம்பி வருவதால் பழங்காலத்து இல்லறத்தான் பிறர்க்கெனவே வாழ்பவனாக இருந்தான். தன்னுடைய சுகபோகத்துக்காகவென்று இல்லற வாழ்வு அமைந்ததன்று. அடக்கமே வடிவெடுத்தவனாக அக் காலத்திய இல்லறத்தான் இருந்தான். குடும்பக்கட்டுப்பாடு என்பது பாரமார்த்திகத்தை அடிப்படையாகக் கொண்டது. சந்ததி விருத்தியின் பொருட்டே குடும்பியொருவன் இரண்டு அல்லது மூன்று மக்களைப் பெறவேண்டும். பிறகு அவன் நியதிப்படி புலனடக்கம் பழகவேண்டும். அடக்கத்தோடும், ஒழுக்கத்தோடும் இல்வாழ்வு வாழ்பவனே பிறகு வானப்பிரஸ்த ஆச்ரமத்திற்கும், சந்நியாச ஆச்ரமத்திற்கும் தகுதியுடைவனா கிறான். இல்வாழ்க்கைக்கு ஏற்ற தபசும் தன்னடக்கமும் வகுத்து வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு மாறாக இக்காலத்திய இல்லறத்தான் சுயநலமே வடிவெடுத்தவனாக இருக்கிறான். தன்னுடைய சுகபோகத்துக்காக மணம்முடித்துக் கொள்கிறான். தான் பெற்றெடுத்த மகப் பேற்றை மட்டும் பேணுவது தன் கடமையென்று அவன் உணருகிறான். பொதுநலனில் அவன் கருத்துச் செலுத்துவ தில்லை. பொதுவுடைமையைத் தனியுடைமையாக்க அவன் முயலுகிறான். புலனடக்கத்தைப் பற்றிய கவலை அவனுக்கு இல்லை. கருத்தடை பண்ணினால் போதுமென்ற விபரீத புத்தியில் அவன் ஊறியிருக்கிறான். அதன் விளைவாக அரக்கர் இயல்பு சமுதாயத்தில் விரைவில் வளர்ந்து வருகிறது. இந்நிலையில் இருப்பவர்களைக் கிருஹஸ்த ஆச்ரமவாசிகள் என்று இயம்ப லாகாது. இன்றைக்குக் கிருஹஸ்த ஆச்ரமம் அழிந்துபட்டுப் போய்விட்டது. செழித்து வளர்கின்ற மரம் செடி கொடிகள்

இருந்தால்தான் அவைகளினின்று நல்ல மலர்களும், காய் கனிகளும் நமக்குக் கிடைக்கும். பலன் தருகிற மரம், செடி கொடிகள் தரத்தில் கீழே போய்விட்டால் நல்ல காய் கனிகளின் விளைவை நாம் எதிர்பார்க்க முடியாது. அதுபோன்று தூய இல்வாழ்வு வாழ்கின்றவர்கள் சமுதாயத்தில் இல்லாது போய் விட்டால் அந்தச் சமுதாயத்தில் சான்றோர்கள் தோன்று வதில்லை. பிரம்மச்சரிய ஆச்ரமத்துக்குரிய நன்மக்கள் பிறப் பதில்லை. காமப் புதல்வர்களே ஏராளமாகத் தோன்றுகின்றனர். அன்னவர்கள் நான்கு ஆச்ரமங்களுள் எந்த ஆச்ரமத்துக்கும் தகுதியுடையவர் ஆகார். அதுதான் இக்காலத்திய நிலை. இன்றைக்கு நம் சமுதாயத்தில் சீரிய கிருஹஸ்தர்களையோ, போற்றுதற்குரிய துறவிகளையோ காண்பது அரிதிலும் அரிதாய் விட்டது. சமுதாயம் முழுதிலும் தேடிப்பார்த்தால் மாதிரிக்கு யாரோ சிலர் ஆங்காங்கு அகப்படுவர். அச்சிலரை முன்னிட்டுச் சமுதாயம் சீரிய நிலையிலிருக்கிறது என்று நாம் சொல்லலாகாது. குடும்பிகள் பழைய பெருநிலைக்குத் திரும்பி வந்தாலொழியச் சமுதாயத்துக்கு விமோசனம் இல்லை.

இனி, தத்துவத்தை ஆராய்ச்சி பண்ணுவோம். நல்ல மகனாகப் பிறந்துள்ள ஒருவன் பிரம்மச்சரிய ஆச்ரமத்தில் பண்பாடு அடையவேண்டும். நேர்மையான பிரம்மச்சரிய ஆச்ரமம் துறவறத்துக்கு நிகரானது. நல்ல பிரம்மச்சாரியாக இருப்பவனே பிறகு நல்ல இல்வாழ்பவனாக ஆவான். அக்காரணத்தை முன்னிட்டே பண்பாட்டை அடிப்படையாக வைத்துக்கொண்டு துறவறத்துக்குப் பின் இல்லறம் என்று சொல்லலாம். இராமனும் சீதையும் இக்கோட்பாட்டைத் தங்களின் வாழ்க்கையின் வாயிலாக விளக்கிக் காட்டியிருக்கி றார்கள். வனவாசத்தை முடிக்கும்வரையில் அவர்கள் துறவி களாகவே வாழ்ந்திருந்தனர். அதன் விளைவாகவே குசன், லவன் என்ற தவப்புதல்வர்கள் இருவர் அவர்களுக்கு வாய்க்க லாயினர். மகப்பேறு பெற்றான பிறகு மீண்டும் அவர்கள் நெறியான வாழ்வே வாழ்ந்து வந்தனர். ஆக, இந்தியப் பண்பில் புலனடக்கம் படைத்த வாழ்வே யாண்டும் அமைந் துள்ளது. இந்திரியச் சுகபோக வாழ்வு மிகச்சிறிய காலத்துக்கே இடம் பெறுகிறது.

இனி, சந்தான விருத்தி உட்பட உலகக் கடமைகளை விரைவில் முடித்துக்கொண்டு நன்மகன் ஒருவன் துறவறத்தில் பிரவேசிக்கவேண்டும். துறவறத்தின் ஆரம்பதசை வானப்பிரஸ்தம் என்றும் பூர்த்தியான நிலை சந்நியாச ஆச்ரமம் என்றும் சொல்லப்படுகின்றன. சந்நியாச ஆச்ரமம்தான் நல்வாழ்வுக்கு இலட்சியமாக அமைந்துள்ளது. சந்நியாச ஆச்ரமத்தையொட்டி யவன் பிறகு உலக வாழ்வைக் கனவிலும் கருதலாகாது. இதுவே வாழ்க்கையின் நியதியாம். சந்நியாச ஆச்ரமத்தை நியதியாக ஏற்றுக்கொண்டுள்ள ஒருவன் மீண்டும் இல்வாழ்வில் ஈடுபடுவானாகில் அவன் பதிதனாகப் புறக்கணிக்கப்படுகிறான். அதாவது பெருநிலையினின்று வழுவி வீழ்ந்தவனாக அவன் சமுதாயத்தினின்று ஒதுக்கப்படுபவன் ஆகிறான்.

இந்த நியதிகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. அதாவது இப்பிரபஞ்ச வாழ்வு மனிதனுக்குக் குறிக் கோள் ஆகாது. பயிற்சியைப் பெறுதற்கே அவன் இவ்வுலகினுள் வந்துள்ளான். பயிற்சியைப் பெற்றான பிறகு அவனுக்கு இங்கு வேலையில்லை. தன்னுடைய வீடு ஆகிய பாரமார்த்திகப் பெருநிலையை எட்டுவதே அவனுக்குக் குறிக்கோள் ஆகிறது.

கேள்வி: *(574)* புத்தர் போன்று எல்லாரும் துறவு மேற் கொண்டால் குடும்பத்தின் கதி என்னாவது?

பதில்: மக்கள் எல்லாரும் பணக்காரர் ஆக விரும்பு கிறார்கள். ஆனால் எல்லாரும் விரும்பியபடி பணக்காரர் ஆவ தில்லை. முறையாகப் பாடுபடுபவர்களுக்கிடையில் ஒருசிலர்தான் செல்வம் மிகப்படைத்தவர்கள் ஆகிறார்கள். அது இயற்கையின் நியதி. மக்கள் எல்லாரும் நல்லவர்கள் ஆக முயலுகிறார்கள். முயன்றாலும் எல்லாரும் நல்வழியில் மேல்நிலையை எட்டு வதில்லை. யாரோ சிலர்க்குத்தான் அது சாத்தியமாகிறது. முற்றிலும் சாத்தியப்படாவிட்டாலும் நல்லவர்களாக முயலுவது முற்றிலும் அவசியம். புத்தர் துறவியாக விரும்பியது போன்று மக்கள் எல்லாரும் துறவியர்களாக விரும்புவதில்லை. துறவைப் பற்றிக் கேள்விப்படுகிறபொழுதே அதினின்று விலகிப் பயந்து பின்வாங்குவதே உலகத்தவர் போக்கு. அரிதிலும் அரிதாக ஆயிரத்தில் ஒருவன் துறவறத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறான்.

கேள்விப்படுகிற ஆயிரம் மக்களுள் துறவியாக முயலுகிறவன் யாரோ ஒருவன்தான் இருக்கிறான். முயற்சி பண்ணுகிற ஆயிரம் பேர்களில் யாரோ ஒருவன்தான் உலக வாழ்வை முற்றிலும் துறக்க ஆயத்தமாகிறான். உலகத்தின் நிலைமை இப்படி இருக்க எல்லாரும் துறவியர்கள் ஆகிவிட்டால் குடும்பத்தின் கதி என்னாவது என்னும் கேள்விக்கு இடமில்லை. துறவுக்குப் பக்குவமாய் இருப்பவனைப் பற்றிய கோட்பாடு ஒன்று உண்டு. உலகத்தவர்கள் எல்லாரும் கூடித் தடுத்தாலும் துறவு மார்க்கத் துக்குத் தகுதி வாய்ந்தவனைத் தடுக்க முடியாது. உலகப்பற்று உடையவனை உலகத்தவர்கள் எல்லாரும் ஒன்றுகூடித் துறவறத்தை மேற்கொள் என்று சொல்லி உந்தித் தள்ளினாலும் அவன் உலக வாழ்வினின்று இம்மியளவும் அசையான். மக்களினுடைய போக்கு இப்படியிருக்கப் புத்தர் போன்று எல்லாரும் துறவிகளாகப் போய்விட்டால் குடும்பத்தின் கதி என்ன ஆகும் என்னும் எண்ணத்துக்கே இடமில்லை.

மக்கள் எல்லாரும் உலக வாழ்வில் ஆழ்ந்து பற்று வைத்திருக்கிறார்கள். பற்று வைத்திருப்பது மட்டுமன்று, கணக் கற்ற ஆசைகளுக்கு அவர்கள் அடிமைகளாய் இருக்கிறார்கள். புதிய புதிய ஆசைகளும் அவர்களுடைய உள்ளத்தில் உரு வெடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆசைகளைப் பூர்த்தி பண்ணு வதற்கே மக்கள் திரும்பத் திரும்பப் பிறப்பு எடுத்துக் கொண் டிருக்கின்றனர். பிறவிப் பெருங்கடலில் மேலும் மேலும் மூழ்கிக்கிடப்பதே உலகத்தவர்களுடைய போக்கு.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்பது பொய்யாமொழி. உலக ஆசைகளையெல்லாம் அனு பவித்துப் பார்த்துவிட்டு யாருக்கு ஆஸ்சயில் நாட்டமில்லையோ அன்னவர்களே பிறவிப் பெருங்கடலை நீந்த முயலுகின்றனர். அப்படி நீந்துகிறவர்கள்தாம் துறவிகள். பிறவிப் பெருங்கடலில் உழன்றுகொண்டே இருப்பவர்கள் உலகத்தவர்கள். எக்காலத் திலாவது எக்காரணத்தை முன்னிட்டாவது உலகப்பற்று உடையவர்களுடைய எண்ணிக்கை குறைந்துபட்டுப் போகாது. அளப்பரியதாக அது பெருகிக்கொண்டேயிருக்கும். ஆனால்

உலகப்பற்றைக் குறைக்கின்றவளவு சமுதாய வாழ்வு நல்வாழ்வு ஆகும். பற்று அதிகரிப்பதற்கேற்பக் கேடுகளும் அதிகரித்துக் கொண்டே போகும். குடும்பத்தின் கதி என்ன ஆகும் என்று சஞ்சலப்படுவதைவிட உலக ஆசைகளைக் குடும்பிகள் குறைத்துக்கொண்டே வந்தால் உலக வாழ்க்கைக்குரிய துன்பங்களும் அதற்கேற்றவாறு குறைவுபடும். ஆதலால் குடும்பிகளாக இருக்கிறவர்கள் துறவறத்தைப்பற்றி எண்ணித் திகிலடைதற்குப் பதிலாகக் குடும்ப வாழ்க்கையைப் பேராசையற்ற பெருவாழ்வாகத் திருத்தியமைப்பார்களாக.

கேள்வி: *(575)* ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் தாம் துறவறம் மேற்கொள்ளும்போது தன் உடன் பிறந்தவர்களுக்குச் சொன்னது அவர்கள் திருமணம் செய்து கொள்ளாமலிருக்க வேண்டுமென்பது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையானால் இதன் உட்கருத்து என்ன? ஏன் மற்றவர்களுக்கு இந்த உபதேசம் செய்யவில்லை?

பதில்: விவேகானந்த சுவாமிகளும் அவருடைய குரு ஆகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் இக்காலத்துக்குப் பொருத்தமாயிருக்கின்ற யுக தர்மத்தை உலகிலே நிலைநாட்ட வந்தவர்கள் ஆவர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் மணம் புரிந்துகொண்டார். மக்கட் பேறு இல்வாழ்க்கைக்கு அவசியமானது என்று கருதப்படுகிறது. ஆனால் பிள்ளை பெறுவதைப் பற்றி இராமகிருஷ்ணரும், அவருடைய துணைவியும் கனவிலும் கருதக் கிடையாது. கடவுள் நாட்டத்திலேயே அவர்கள் முழுதும் மனதைச் செலுத்திவிட்டனர்.

தம் சொற்படி கேட்க ஆயத்தமாய் இருக்கிறவர்களுக்கு மணம்புரிந்து கொள்ளவேண்டாம் என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளனர். தம் சகோதரர்கள் மட்டுமல்ல, தம் சொல் கேட்க ஆயத்தமாய் இருந்த வேறு பலருக்கும் இதே புத்திமதியைக் கூறியிருக்கிறார்.

இவர்களுக்குப்பின் வந்த மகாத்மா காந்தியும் பிள்ளைகள் பல பெற்றெடுக்கக் கூடாது என்றும், ஆண்களும் பெண்களும் பிரம்மச்சரியம் பழகவேண்டும் என்றும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். இக்காலத்தில் ஈசல் போன்று மிகைபடப் பிள்ளை

களைப் பெற்றெடுப்பது மக்களுடைய இயல்பாகிவிட்டது. தன்னடக்கம் பழகாமையே அதற்குக் காரணமாகும். அனாவசியமாக மக்களினத்தை இப்படிப் பெருக்குவதில் ஒரு நலனும் ஏற்பட்டுவிடாது என்பது இவர்களுடைய போதனையாகும். ஜனத்தொகை ஓரளவுக்குமேல் மிகைப்பட்டால் மனப் பண்பாடு குன்றிப் போய்விடும். அதை நேரான வழியில் தடுப்பது சான்றோர் செயல். அதைத்தான் விவேகானந்த சுவாமிகளும் செய்தார்.

கேள்வி: *(576)* மன அமைதிபெறத் துறவறம்தான் சிறந்ததா?

பதில்: உலகப்பற்று மன அமைதியைக் கெடுக்கிறது. மனம் உலகப் பொருளின்மீது பற்றுதல் வைக்கும்போது அப் பொருளைப் பற்றி நினைக்கிறது. அந்த நினைப்பே கவலையை உண்டுபண்ணுகிறது. மனம் பிரகிருதியின் கூறு ஆகும். எனவே அது அலையும் தன்மையுடையது.

துறவறம் என்பது உலகப்பொருள்களிலுள்ள பற்றுதலிலிருந்து மனதை விலக்கி எடுப்பதாகும். உலகப்பொருள்களில் இன்பம் உண்டு என்னும் நினைவை அகற்றுவது துறவு ஆகும். உலகப்பொருளில் இன்பம் இல்லை என்பதை உள்ளத்துக்கு உணர்த்தியபின் அது உலகப் பொருளில் பற்று வைப்பதில்லை. பற்று நீங்கும்பொழுது மனதில் அலையும் தன்மை நின்று அது அமைதி அடைகிறது.

உலக மக்கள் உலகப்பொருள் சுகம் தரும் என்னும் எண்ணத்தில் ஊறி இருக்கின்றனர். அவ்வெண்ணத்தை அவர்கள் உள்ளத்திலிருந்து எளிதில் அகற்ற முடிவதில்லை. உள்ளத்தில் அவ்வெண்ணம் எவ்வளவு ஆழ்ந்து இடம் பெற்றிருக்கிறதோ அதற்கேற்ப அது அலையும் தன்மையுடையதாக இருக்கும்.

குடும்ப வாழ்வில் இருந்தாலும், குடும்பத்தை விட்டு விலகித் துறவற வாழ்க்கையில் இருந்தாலும் மனதை உலக சுகத்திலிருந்து மீட்டெடுப்பவர்கள் மன அமைதியைப் பெறலாம். மனதை உலக சுகத்திலிருந்து விலக்கி எடுப்பதற்குக் குடும்ப வாழ்க்கையைவிடத் துறவற வாழ்க்கையே உதவியாக இருக்கும்.

குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள் புகை நிறைந்த அறைக்குள் இருப்பவர்களுக்கு நிகராகிறார்கள். புகை உள்ள அறையில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் உடையில் கரி படியத்தான் செய்யும். அங்ஙனம் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் உலகப்பற்று உண்டாவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகும். எனவே மன அமைதிக்குத் துறவற வாழ்க்கை மிக உதவியாக இருக்கும்.

கேள்வி: *(577)* துறவறம் அவசியமா? துறவி தாய் தந்தையருக்குச் செய்யும் கடமையிலிருந்து தவறியவர் ஆகமாட்டாரா?

பதில்: துறவு என்பதைத் தியாகம் என்றும் சந்நியாசம் என்றும் கூறலாம். தியாகத்தின் மூலம்தான் அழியாப் பெரு நிலையை அடையமுடியுமென்று உபநிஷதம் பகர்கிறது. சந்நியாசம் என்றால் தம் உயிர் வாழ்வு முழுவதையும் பரம் பொருளுக்கென்றே ஒப்படைப்பதாகும். ஐம்பொறிகளை ஈசுவர ஆராதனைக்கென்றே ஒப்படைப்பது சந்நியாசம்.

ஐம்பொறிகளையும் உலக வாழ்வை அனுபவிப்பதற்குப் பயன்படுத்துபவன் சாதாரண மனிதன். ஐம்பொறிகளையும் தெய்வ வழிபாட்டுக்குப் பயன்படுத்துபவன் துறவி. இந்திரி யங்களை உலக வாழ்வுக்குப் பயன்படுத்துபவன் இந்திரிய சுகத்துக்கு அடிமைப்பட்டு உலகத்தில் கட்டுண்டவன் ஆய்விடு கிறான். ஐம்பொறிகளையும் ஈசுவர ஆராதனைக்கென்றே பயன்படுத்துகின்ற துறவி உலகத்தில் கட்டுப்படாதவனாக இருந்து உலகத்தைப் பரவாழ்வுக்குப் பயன்படுத்துகின்றான். இந்திரிய சுகத்தில் இன்பம் காண்பவனைவிட அறிவில் இன்பம் காண்பவன் மேலானவன். அறிவில் இன்பம் காண்பவனைவிட ஆத்மாவில் இன்பம் காண்பவன் மேலானவன். துறவு என்பது ஆத்மாவில் இன்பம் காண்பதாகும். இந்திரியங்கள் மூலமாகக் கிடைக்கும் இன்பத்தையும் அறிவின் மூலமாகக் கிடைக்கும் இன்பத்தையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு ஆத்மாவில் இன்பம் காணும் துறவுவாழ்க்கை மிகமிக அவசியமாகும். துறவற வாழ்க்கையில்தான் நிறைநிலை வந்து வாய்க்கிறது.

குறைநிலையை உடைய சம்சார வாழ்க்கையைவிட நிறை நிலையை உடைய துறவு வாழ்க்கை அவசியம் என்பதில் ஆக்ஷேபனை இருக்கமுடியாது.

இல்லறத்தான் ஒருவன் தாய் தந்தையர்களுடைய உடலைப் பாதுகாக்கின்றான். அழிந்துபோகும் தாய் தந்தையரது உடலை அது அழிகின்ற வரையிலும் பாதுகாப்பது இல்லறத்தானுடைய செயலாகிறது. துறவி ஒருவன் தாய் தந்தையர்களை இவ்வுலக பந்தத்திலிருந்து விடுவிப்பதற்குத் துணைபுரிகிறான். உலக வாழ் விலிருந்து விடுபடுவதற்கு வேண்டிய மனநிலையைத் துறவி ஒருவன் தன் பெற்றோர்களுக்கு அளிக்கின்றான். தாய் தந்தையர் களுடைய மனதை உயர்ந்த லட்சியத்தின்கண் செல்லுமாறு தூண்டுகின்ற செயலைத் துறவி ஒருவன் செய்து வருகின்றான். தாய் தந்தையரின் உடலுக்கு வரும் நோயைப் போக்குவதற்கு இல்லறத்தான் முயலுகின்றான். துறவியோ தாய் தந்தையர் களுடைய பிறவிப் பிணியையே போக்குவதற்கு உதவுகின்றான். எனவே துறவிதான் தாய் தந்தையர்களுக்கு உண்மையில் உதவிபுரிகின்றான்.

"எண்ணம் போல வாழ்வு" என்பது கோட்பாடு. நம் மனம் எதை எண்ணுகின்றதோ அதன் மயமாக நம் வாழ்வு மாறியமைகிறது. மனம் கடவுளை நினைக்குமானால் அது கடவுள் மயமாகிறது. கடவுளையே நினைத்துக்கொண்டிருக்கும் துறவியைப் பற்றி நினைக்கும் பெற்றோர்கள் கடவுள் சிந்தனை பண்ணுவதற்கு நிகராகின்றார்கள். துறவியாகப்போன மகனைப் பற்றி நினைக்கும் தாய் தந்தையர்கள் உள்ளம் உயர்நிலைக்குச் செல்கிறது. உள்ளம் உயர்வதுதான் உண்மையான உயர்வாகும். துறவி ஒருவன் தன் தாய் தந்தையர்களுடைய உள்ளம் உயர்ந்த லட்சியத்தை நினைப்பதற்கு உதவுகின்றான். ஆகையால் துறவிதான் பெற்றோர்களுக்கு உண்மையில் உதவி செய்தவன் ஆகின்றான்.

கேள்வி: *(578)* தம் ஒரே மகன் திருமணம் செய்து கொள்ளவேண்டுமெனத் தூண்டும் பெற்றோர்களுக்கு உதவியாக இல்லாமல் துறவு பூணுவது இயலுமா?

பதில்: துறவு பூணுவது கிட்டத்தட்ட மரணத்துக்கு

ஒப்பாகிறது. துறவி ஒருவன் இவ்வுலக சம்பந்தமான இன்பம் எதுவும் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளுகிறான். இவ்வுலக சம்பந்தமான இன்ப துன்பம் எதிலும் அவன் கலந்துகொள் ளுதல் இல்லை. அந்நிலையில் இவ்வுலக வாழ்க்கைக்குத் துறவி ஒருவன் செத்துப்போனவனுக்கு நிகராகிறான்.

இனி, மரணம் எந்த வேளையிலும் யாரை வேண்டு மானாலும் வந்து தாக்கலாம். பெற்றோருக்கு இருக்கிற ஒரே மகன் என்று கருதி மரணம் ஒருவனை விட்டுவைப்பதில்லை. அதேபாங்கில் தீவிர வைராக்கியம் படைத்துள்ள சாதகன் ஒருவன் தன்னையும் தன் உற்றார் உறவினர்களையும் மாண்டு போனவர்களாகவே கருதுகிறான். அத்தகைய எண்ணத்தை அவனுடைய உள்ளத்தினின்று யாரும் அகற்ற முடியாது. இவ்வுலக சம்பந்தமான நெருக்கடிகளைச் சிறிதும் பொருட் படுத்தாமல் தீவிரமான வைராக்கியமுடைய சாதகன் சந்நியா சத்தை நாடிப்போகிறான். அத்தகையவனுடைய போக்கைத் தடை செய்ய யாருக்குமே இயலாது.

கேள்வி: *(579)* என்னுடைய நண்பர் ஒருவர் நல்ல பக்திமான். தாய் தந்தையர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர். எப்பொழுதும் பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிக்க உறுதி கொண்டிருப்பவர். ஆனால் பெற்றோர் களுக்கு இது பிடிக்காமல் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். நண்பருக்கு இதில் மனம் செல்லவில்லை. இந்த நிலைமையில் பெற் றோர் சொல்லை உறுதியாகப் புறக்கணித்து விடுவதா? அல்லது திருமணம் செய்து கொள்வதா?

பதில்: உலக வாழ்க்கை முறையில் பெற்றோருடைய சொல்லுக்கு உட்பட்டே நடக்கப் புதல்வர்கள் கடமைப்பட்டிருக் கிறார்கள். சிலர் மேஜர் ஆய்விட்டால் பிறகு பெற்றோருடைய சொல்லைக் கேட்கவேண்டியதில்லை என்று கருதுகிறார்கள். சட்டத்துக்கு ஒருவேளை அது ஒத்ததாக இருக்கலாம்; மாத்ரு பக்தி, பித்ருபக்தி என்னும் சிறந்த கொள்கைக்கு அது ஒத்த தாகாது. காலமெல்லாம் தாய் தந்தையர் சொற்படி நடந்து கொள்ள மக்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். பிறகு அதற்கு

விலக்கு ஒரே ஒரு துறையில்தான் இருக்கிறது. யார் ஒருவன் அருள்தாகம் எடுத்து கடவுளை நாடிச் செல்லுகின்றானோ அவன் தாய் தந்தையருடைய சொற்படி நடந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை; தாராளமாக அவர்களை மீறி நடந்துகொள்ளலாம். இராமனைப் போற்றுதல் என்னும் அருள் நாட்டத்தில் பரதன் தன் தாய் சொல்லை மீறி நடந்தான். நெறியான வாழ்வும் பரமபுருஷனைப் பின்பற்றுதல் என்னும் கோட்பாட்டுக்கும் உட்பட்டு விபீஷண்ன் தமையன் சொல்லை மீறி நடந்தான். கடவுள் பக்தி என்னும் பாரமார்த்திக வாழ்வைப் பிரஹ்லாதன் தந்தை சொல்லை மீறி நடந்தான். இதே பாங்கில் பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ விரும்புகின்றவர்கள் எல்லாரும் பெற்றோருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டியதில்லை. ஆன்றோர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ள பெருநெறி இதுவேயாம்.

கேள்வி: (580) **போரில் உற்றார் உறவினரைக் கொன்று ஆட்சியைப் பிடிப்பது பிச்சை எடுப்பதை விடக் கேவலம் என்கிறான் அர்ஜுனன். "பவதி பிக்ஷாந்தேஹி" என்பது கேவலமா?**

பதில்: அர்ஜுனன் பகர்ந்தது சந்நியாச தர்மத்தை இகழ்ந்த தாகாது. சந்நியாச தர்மம் பிக்ஷை ஏற்பது. வறியவன் ஒருவனுடைய தர்மம் ஐயம் ஏற்பது. ஐயம் ஏற்பது இகழ்ச்சி. பிக்ஷை ஏற்பது பாராட்டுதற்குரிய பெரிய செயல். இராஜ்ஜி யத்தை முற்றத்துறந்த புத்தர் பெம்மான் 'பிக்ஷாந்தேஹி' என்று பகர்ந்துகொண்டு வீதியில் போகிறார். அவரைத் தொடர்ந்து யாசகன் ஒருவன் தனக்கு உணவு தரவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு வீதியில் போகிறான். பிக்ஷாந்தேஹி என்று துறவி ஒருவர் கேட்பது ஞானத்தின் விளைவு. உணவை வறியவன் ஒருவன் கெஞ்சிக் கேட்பது அக்ஞானத்தின் விளைவு. வறியவனுடைய செயலிலும் கடைப் பட்டதாகிறது உற்றார் உறவினரைக் கொன்று இராஜ்ஜியத்தைப் பெறுவது என்பது அர்ஜுனன் செய்த ஆட்சேபம்.

வெளித் தோற்றத்துக்கு ஐயம் ஏற்பதும் பிக்ஷை கேட்பதும் ஒன்றாகத் தென்படுகின்றன. மற்று, பிரபஞ்ச அதீதத்துக்கு

அப்பால் சென்ற ஞானி அல்லது அப்பால் செல்ல முயலுகின்ற முமுக்ஷு ஒருவனுடைய செயல் பிக்ஷை எடுப்பது, உலகத்தவர்கள் பக்தியுடன் துறவியர்களுக்குப் பிக்ஷை படைக்கின்றனர். அதே உலகத்தவர் இரக்கத்துடன் யாசகம் கேட்பவனுக்கு ஐயம் இடுகின்றனர். ஆதலால் செயலுக்கு அடிப்படையாகவுள்ள மனப்பான்மையை அறிந்துகொள்ளுதல் சிறந்தது. புறச்செயலைப் பார்த்து எம்மனிதனையும் நாம் மதிப்புப் போடலாகாது.

கேள்வி: *(581)* துறவை ஏற்கும் ஒருவன் துறந்த குடும்பத்தினரில் முன்னைய ஏழு தலைமுறைகளையும் பிந்திய ஏழு தலைமுறைகளையும் புனிதமாக்குகின்றான் என்பது நம்நாட்டுச் சித்தாந்தமாகும். நீத்தார் பெருமையைக் காட்டுவதற்காகச் சொல்லப்பட்ட அலங்காரக் கூற்றாக இதைக்கொள்ளுவதா, அல்லது இது பிரபஞ்சப் போக்கை இயக்கிவரும் மாறா விதிகளுள் ஒன்றா?

பதில்: இக்கூற்றினுள் அலங்காரப் பகுதியும், இயற்கையின் நடைமுறையின் மாறாவிதியும் கலந்து இருக்கின்றன. பிரபஞ்ச சம்பந்தமான அனைத்தையும் துறந்தவர்க்குத் தெய்வீக சம்பத்தெல்லாம் தாமாக உருவெடுத்துவிடுகின்றன. துறப்பது என்பது மனத்தகத்துள்ள மாசை அகற்றுவதாகும். மனதிலுள்ள மாசுகளுள் அகங்காரமும், மமகாரமும் மிகக் கொடியவைகளாம். அகங்காரத்தினின்றும் மமகாரத்தினின்றும் ஏனைய கேடுகள் அனைத்தும் உருவெடுக்கின்றன. மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்தி வைத்திருப்பவைகளும் இவ்விரண்டு கேடுகளேயாம். இவைகளை மனதினின்று அகற்றிவிடுமிடத்து அது நிர்மலமாய் விடுகின்றது, ஏற்கனவே அதன்பால் புதைந்துள்ள தெய்வீகம் பின்பு திகழ்கின்றது. இயற்கையில் ஜடப்பொருள்களிடத்தும் இக்கோட்பாட்டைக் காண்கிறோம். இரும்பை முற்றிலும் தூயதாக்குகின்ற இடத்து அது வெள்ளிபோன்று ஆய்விடுகிறது. அதைக்கொண்டு இன்றைக்கு வெள்ளிப்பாத்திரங்களுக்கு நிகரான பல பாண்டங்களைச் செய்கின்றனர். இயற்கை முழுதுக்கும் ஏற்பட்டுள்ள விதி இதுவே. ஜடப்பொருளானாலும் சரி, சேதனப்பொருளானாலும் சரி; அவைகளைத் தூயதாக்குமளவு அவை மேல் நிலைக்கு வந்துவிடுகின்றன. துறவறத்தின் மூலம் மனிதன்

தன்னைத் தூயவனாக்குகின்றான். மனத்தகத்துள்ள அழுக்குகளை அகற்ற யார்தான் இசையமாட்டார்கள்? துறவறம் பூணுதல் என்பது வாழ்க்கையை மேலாம் வாழ்க்கையாக மாற்றியமைப்பது எனப் பொருள்படுகிறது. உடலில் உள்ள அழுக்கைத் துறப்பதற்கான முறையை உலக மக்கள் அனைவரும் நாள்தோறும் கையாண்டு வருகின்றனர். மனதிலுள்ள அழுக்கை அகற்றுதற்கு அவர்கள் அப்படி முயலுதல் இல்லை. அழுக்கை அகற்றியாக வேண்டும் என்னும் கோட்பாட்டை உள்ளபடி அறிந்து கொள்பவர்களுக்குத் துறவறம் பூணுதலில் ஒரு சிரமமும் இல்லை.

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்னும் கோட்பாடு அலங்காரமாக அமைந்தன்று. முற்றிலும் அது உண்மை.

மனதைத் தூயதாக்குதல் வாழ்க்கைத் தத்துவம். இது துறவறம் என்னும் பெயர் பெற்றுள்ளது. அத்தகைய துறவினால் ஒருவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் முன்பு ஏழு தலைமுறையிலும், பின்பு ஏழு தலைமுறையிலும் இருப்பவர்கள் புனிதமடைகிறார்கள் என்பது உண்மையா என்ற கேள்வி இங்கு எழுந்திருக்கிறது. அத்தனை பேரும் புனிதமடைகிறார்கள் என்று உறுதிகூற முடியாது; அவர்களுள் பலபேர் புனிதமடைவார்கள் என்று இயம்பலாம். ஏற்கனவே காலமானவர்கள் எப்படிப் புனிதமடைய முடியும், அவர்கள் புனிதமடைந்ததைக் கண்டது யார் என்றெல்லாம் ஆக்ஷேபம் வரலாம். தத்துவ பூர்வமாக இதற்கு விளக்கம் கொடுக்கலாம். துறவறம் பூணுகின்ற ஆத்ம சாதகன் ஒருவன் துறவி ஆகும் தறுவாயில் தனது முன்னோர்களுக்குச் சிரார்த்தம் செய்கின்றான். துறவியான பிறகு அச்செயலை அவன் செய்யவேண்டியதில்லை. துறவி யாவதற்கு முன்பே முன்னோர்க்குரிய கடன்களை அவன் செய்து முடிக்கிறான். துறவறத்துக்கு அவனுக்குத் தகுதி அமைந்துவிட்டதனால் உலக சம்பந்தமான மனப்பற்றுதல்களெல்லாம் அவனிடத்திருந்து அகன்று போய்விட்டன என்று சொல்லலாம். தூய மனதில் எண்ணுகிற எண்ணம் வலிவுமிக வாய்ந்தது ஆகிறது. தன் முன்னோர்கள் எவ்வுலகில் எந்த

நிலையில் இருந்தாலும் அவர்கள் ஆத்ம சாந்தி அடையட்டும் என்கின்ற எண்ணத்தை அந்த ஆத்ம சாதகன் ஆழ்ந்து எண்ணுகின்றான். அந்த எண்ணத்துக்கு ஏற்ப அவனுடைய முன்னோர்கள் புதிய பிறப்பு எடுத்திருந்தாலும் நலன் பெறுகின்றனர். அப்படி நலன் பெறுகின்றவர்களுள் அவரவர் மனபரிபாகத்துக்கு ஏற்ப நலனில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. எல்லாரும் நலன் பெற்று விடுகிறார்கள் என்பது வெறும் அலங்காரக்கூற்று. சிலர் நலன் பெறுகிறார்கள் என்பது தத்து வத்துக்கு ஒத்தது.

துறவி ஒருவனுக்கு உடல் சொந்தம் படைத்துள்ள இனி வரும் ஏழு தலைமுறையினர் நலன் பெறுவதும் கிட்டத்தட்ட முன்னோர் பெறும் நலனுக்கு ஒப்பானது. உற்றார் ஒருவர் துறவியாய் விட்டதைக் குறித்து மற்றவர் சிற்சில வேளைகளில் சிந்திக்கின்றனர். துறவின் பெருமை அவர்களுக்கும் சிறிது புலனாகின்றது. அதற்கேற்றவாறு அவர்களுடைய மனப்பற்றும் நீங்கப் பெற்றுவிடுகிறது. அவர்களுள் நல்ல மனமுடையவர்கள் அதிகமாக நலன் பெறுகின்றனர். மற்றவர்கள் ஏகதேசம் நலன் பெறுகின்றனர். ஆக, எண்ணத்தின் விளைவாக முன்னவரும் பின்னவரும் ஓரளவு நலன்பெற்று வருகிறார்கள்.

கேள்வி: *(582)* துறவிகளுக்குச் சிறந்த பெருமை கொடுக்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் சில இடங்களில் துறவிகளை வரவேற்று மதிப்புக் கொடுப்ப தோடு வேறொரு செயலும் நடைபெறுகிறது. அதாவது துறவிகளை ஆசனத்திருத்திப் பாதம்கழுவி மலரிட்டு வணங்குகின்றனர். இதனை ஆடவர்கள் செய்வதோடு பெண்களும் செய்கின்றனர். பெண்களில் சுமங்கலிப் பெண்க ளும் விதவைகளும் செய்கின்றனர். இந்தப் பாத பூஜையை வழிபாடாகவே கருதிக் காஷாயம் போட்டவர்கள் எல் லாருக்கும் செய்யலாம் என்று பெண்களில் சிலர் கூறுகின் றார்கள். இந்த முறை சரிதானா? தன் கணவனுடைய காரியத் தில் முறையான செயல்கள் செய்யாமல் அசட்டை செய்து இல்லறத்தில் வாழும் பெண்கள், துறவிகளுக்கு இத்தகைய மதிப்புக்கொடுத்துச் செய்வது சிவனடியாராகவே பாவித்துச்

செய்வதாகும் என்றும் கூறுகின்றனர். சில துறவிகளிடம் கேட்டால் அது விரும்பத்தக்கதல்ல, பெண்களுக்குக் கூடாது என்கிறார்கள். பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் அப்பரைத் தம்மில்லத்தில் அழைத்து வந்து,

> "மனைவியாருடன் மக்கள்
> மற்றுமுள்ள சுற்றத்தோர்
> அனைவரையும் கொண்டிறைஞ்சி
> ஆராத காதலுடன்
> முனைவரை உள்எழுந்தருளு
> வித்தவர்தாள் – முன்விளக்கும்
> புனைமலர் நீர்தங்கள்மேல்
> தெளித்து உள்ளும்பூரித்தார்"

என்று பகரப்பட்டிருக்கிறது. அவர் மனைவியாரும் அங்ஙனம் வணங்கினார் என்றில்லை. பெண்துறவி, காஷாயம் போட்டவர்களுக்கும் இத்தகைய செயலை வழிபாடு என்று கூறிப் பெண்கள் மலரிட்டு வணங்கலாமா?

பதில்: எல்லா ஜீவர்களையும் கடவுள் சொரூபமாக வணங்குவது ஆத்ம சாதகனுக்குச் சாலச் சிறந்தது. அப்படிச் செய்ய இயலாதவர்கள் கடவுளுடைய மெய்யன்பர்களையாவது கடவுள் சொரூபமாகப் பாராட்டலாம். அப்படிச் செய்வதால் மன பரிபாகம் உண்டாகிறது. இது விஷயத்தில் கணவனும் மனைவியும் முழுதும் ஒத்திருக்கவேண்டும். கணவன் செய்வதைப் பின்பற்றி மனைவியும் பெரியோரைப் போற்றலாம். ஆனால் கணவனைப் புறக்கணித்துவிட்டு மனைவி தன்போக்கில் இத்தகைய செயலில் ஈடுபடலாகாது. கடவுளுடைய அன்பர்கள் ஆண்பாலராகவும் இருக்கலாம், பெண்பாலராகவும் இருக்கலாம். பால் வேற்றுமை பக்திக்கு இடைஞ்சல் அல்ல. தொண்டர் புராணம் முழுதும் பெரியோரைப் போற்றுதற்கு வழிகாட்டுகிறது.

கேள்வி: *(583)* சந்நியாசம் மேற்கொண்டவர் ஏன் காவி உடை அணிகின்றனர்? இதில் ஏதேனும் சிறப்புள்ளதா? விளக்கம் தரவேண்டுகிறேன்.

பதில்: மனிதன் அணிகின்ற ஆடைக்கும் அவன் படைத்திருக்கின்ற மனப்பான்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

படாடோபத்துடன் பகட்டான உடைகளை அணிபவனுக்குத் தற்பெருமை தானாக வருகிறது. கந்தைத் துணி அணிந்திருப்பவனுக்குக் கீழ்மை தானாக வந்தமைகிறது. மானுடனொருவன் நேர்த்தியாகத் தூய உடையணிந்துகொண்டு சங்கம் ஒன்றுக்குச் செல்லுகிறான். வழியில் வேகமாக ஓடுகிற மோட்டார் வண்டி ஒன்று சேற்றுநீரை அவன்மீது எடுத்து இறைத்துவிட்டு ஓடுகிறது. அந்நீர் ஆடையின் மீது படிந்து அதை மலினப்படுத்துகிறது. அந்நிலையில் அவன் சங்கத்துக்குச் செல்லத் தயங்குகிறான். அணிந்திருக்கிற உடைக்கும் மனிதன் கொள்ளுகிற மனப்பான்மைக்கும் நெருங்கிய தொர்டர்பு இருக்கிறது என்பதற்கு இவைகள் சான்றுகளாகின்றன.

காவியுடை தியாகத்தின் சின்னம். சந்நியாசி ஒருவன் காவியுடையை அணிந்திருப்பதால் தன்னுடைய மேலான இலட்சியத்தை அவன் தனக்குத்தானே ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறான். காவியுடை அணிந்திருக்கிற மனிதன் ஒருவன் தெருவிலே தாறுமாறாக நடந்துகொண்டால் மக்கள் அவனை ஏசுவார்கள். சாதாரண உடை அணிந்திருக்கிற மனிதன் தாறுமாறாக நடந்துகொண்டால் பொதுமக்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். சந்நியாசியின் பொறுப்பு மிகப் பெரியது. பொதுமக்களுக்கு அவன் நல்வாழ்வின் முன்மாதிரியாகிறான். காவியுடை அவனுக்கும் பொதுமக்களுக்கும் அப்பொறுப்பை எடுத்து ஞாபகமூட்டுகிறது.

மேடையில் நாடகத்திலே மானுடனொருவன் துறவியாக மிக நன்றாக நடித்தான். அதைப் பாராட்டி அவனுக்குச் சன்மானம் வழங்கப்பட்டது. அதைத் துச்சமாக அவன் ஒதுக்கித் தள்ளினான். நாடகம் முற்றுப்பெற்றான பிறகு சாதாராண உடையணிந்துகொண்டு மேடையினின்று கீழே வந்து சன்மானத்தைக் கேட்டான். பலர் அறிய மேடைமீது வைத்து வழங்கிய சன்மானத்தை அந்நிலையில் ஏன் ஏற்க மறுத்தாய் என்று சன்மானம் வழங்கியவர் கேட்டார். அதற்கு அவன் "நான் அப்பொழுது காவியுடை அணிந்திருந்தேன். துறவி ஒருவனுக்குச் சன்மானம் ஏற்பது பொருந்தாது" என்றான். இதினின்று காவியுடை அணிந்திருப்பதன் மேலாம் பொறுப்பு நன்கு புலனாகிறது.

காவியுடை அக்னியின் சின்னமாகிறது. நிறத்தில் அக்னியும் காவியுடையும் ஒரே பாங்குடையவைகளாக விளங்குகின்றன. அகத்திலுள்ள ஆசாபாசங்களையெல்லாம் ஞானாக்கினியில் போட்டுத் தகித்துவிட்டதாகத் துறவி ஒருவன் உணரவேண்டும். அந்த உணர்ச்சிக்குப் பொருத்தமாக அக்னியின் நிறம் படைத்திருக்கின்றன காவியுடை அமைந்திருக்கிறது.

இனி, ஒவ்வொரு நிறத்துக்கும் ஒருவிதக் கூறு உண்டு. அக்னியின் நிறம் காவியுடையின் வாயிலாகச் சர்வகாலமும் மனதில் கருதப்படுவதால் மனதுக்குப் பண்பாடு தற்செயலாய் வந்தமைகிறது. இக்காரணத்தை முன்னிட்டும் சந்நியாசி ஒருவன் காவியுடை அணிவது ஐதிகமாக வந்துள்ளது. ❑

37. மகப்பேறு

கேள்வி: (584) மணம் புரிந்துகொள்ள வேண்டாம் என்று சுவாமிகள் பகர்ந்தருளியதற்கும்; சந்ததி விருத்தியின் பொருட்டு மணம் செய்துகொண்டு ஓரிரண்டு குழந்தைகளைப் பெறலாம் என்று சொல்லுவதற்கும் பெரிதும் முரண்பாடு காண்கிறது அல்லவா? தன் வம்சத்திற்கே முற்றுப்புள்ளி வைக்கவேணுமென்ற எண்ணத்துடன் தான் திருமணமே வேண்டாமென்று சொல்லியிருத்தல் வேண்டுமல்லவா? அவ்வெண்ணம் நல்லதுதானா? நல்ல பிரஜைகளை உண்டாக்கப் பண்பாடுடைய சான்றோர்கள் மணம் செய்துகொண்டு மக்கட்பேறு அடையவேண்டுவது அவசியமில்லையா? மனைவி இல்லாமல் ஒருவன் குடும்பம் (இல்லறம்) நடத்துவது இயலுமா?

பின்னும், தன் தந்தையின் வயோதிகத்தில் இளைய தாரத்திற்கு மூன்றாவது பிள்ளையாகக் காந்தியடிகளும், பகவான் அரவிந்தகோஷ், ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரசாத் இவர்கள் ஐந்தாவது குழந்தைகளாகவும், சுபாஷ் சந்திரபோஸ் தன் பெற்றோர்களின் எட்டாவது குழந்தையாகவும் தோன்றினார்கள். இவர்களின் பெற்றோர்கள் விஷயத்தில் சந்ததி விருத்திக் கட்டுப்பாடு இல்லாதிருந்தது பெருநன்மையாகவன்றோ ஆயிருக்கிறது!

பதில்: மணம் புரிந்து கொள்கின்ற விஷயத்தைப் பற்றியும், மக்கட்பேறு எடுக்கின்ற விஷயத்தைப் பற்றியும், மணம் புரிந்து கொள்ளாது ஆயுட்கால முழுதிலும் நைஷ்டிகப் பிரம்மச்சரியத்திலேயே இருந்து விடுகிற விஷயத்தைப் பற்றியும் மக்கள் எல்லார்க்கும் ஒரேவிதமான லக்ஷியத்தை எடுத்து வழங்க முடியாது.

அவரவருடைய மனபரிபாகம் இது விஷயத்தில் முதன்மை பெறுகிறது. சூழ்நிலையைப் பற்றிய கருத்து அடுத்தபடியாக வருகிறது. வாழ்க்கையில் ஒருவர் கொண்டுள்ள லக்ஷியம் அதைத் தொடர்ந்து வருகிறது. மக்கள் அனைவருக்கும் பொதுவாயுள்ள சில தத்துவங்களைப் பற்றிச் சந்தேகம் தெளிதல் என்னும் பகுதியில்தான் ஆராய்ச்சி பண்ண முடியும். சில அடிப்படைத் தத்துவங்களை ஈண்டுத் தெரிவிக்கிறோம். இன்றைக்கு நம் சமுதாயத்தில் ஜனத்தொகை வரம்பு கடந்து மிகவும் அதிகரித்து வருகிறது. ஒரு மாவட்டத்தைப் பற்றி ஒரு அன்பர் தெரிவித்த விஷயத்தை இங்கே குறிப்பிடு கிறோம். திருவனந்தபுரம் கொச்சி மாவட்டத்தில் இன்றைக்கு ஜனத்தொகை ஆண்டுதோறும் ஒரு லக்ஷம் அதிகமாகிறது. செத்துப்போனவர்களுக்கு ஈடுசெய்தான பிறகு இங்ஙனம் ஒரு லக்ஷம் அதிகமாகிறது. தெருக்களில் சர்வ சாதாரணமாகத் தென்படும் காட்சி ஒன்று பார்ப்பவர், கேட்பவர் ஆகிய அனை வரையும் திடுக்கிடச் செய்துவிடும். தாய் ஒருத்தி பாதையில் நடந்து செல்லுகின்றாள். அவளுடன் தானாக நடந்துவரும் குழந்தை ஒன்று. தாய் கையைப் பிடித்து நடத்திச் செல்லும் குழந்தை மற்றொன்று. தாய் தன் தோளின்மீது எடுத்துச் செல்லும் குழந்தை மூன்றாவது. அவள் வயிற்றில் கருத்தரித் திருப்பது நான்காவது குழந்தை. சுமார் ஆண்டுக்கு ஒரு குழந்தையை அவள் பெற்றெடுக்கிறாள். இந்தப் போக்கில் சமுதாயம் போனால் சமுதாயத்தின் கதி என்ன ஆகும் என்பதை அன்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

வரம்புகடந்து ஒரு சமுதாயத்தில் ஜனத்தொகை அதிகரித் தால் ஆங்கு மனப்பரிபாகம் மிகமிகக் கீழ்நிலைக்கு வந்துவிடும். இப்பொழுது நம் நாட்டில் மக்களுடைய மனபரிபாகமும் ஆற்றல் திறனும் அதிவிரைவில் கீழ்நோக்கிப் போய்க்கொண் டிருக்கிறது. மிகைப்பட்ட ஜனத்தொகையே அதற்குக் காரண மாகும். இந்த நிலைமையில் எத்தனை பேர் விவாகம் செய்து கொள்ளாது நைஷ்டிகப் பிரம்மச்சரியத்திலேயே நெறியாக நிலைநின்று விடுகின்றார்களோ அத்தனைபேர் சமுதாயத்துக்கு நல்ல பாங்கில் சேவை செய்பவர்கள் ஆவார்கள். அப்படி நைஷ்டிகப் பிரம்மச்சரியத்தில் நிலைநிற்க இயலாதவர்கள்

இரண்டொரு குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதில் திருப்தி அடைந்திருக்கட்டும். அதற்குமேல் பிள்ளைகளைப் பெற்றெடுக்குமளவு சமுதாயத்துக்கு அது நல்லதொரு சேவையாகாது.

மகாத்மா காந்தியும், கவிஞர் தாகூரும் பாராட்டத்தக்க பெருமக்களைப் பெற்றெடுக்கவில்லை. அதற்குக் காரணம் இன்னதென்று மகாத்மா காந்தி தம்முடைய சத்திய சோதனையில் சொல்லியிருக்கிறார். தாம் மனபரிபாகம் அடையாமலிருந்த பொழுது இல்லறம் நடாத்தியதின் விளைவு பொருந்தாத பிள்ளை என்று அவர் பகர்ந்திருக்கிறார். பலதடவை மணம் புரிந்துகொண்டு பல பிள்ளைகளைப் பெற்றெடுத்தால் அவர்களில் யாரோ சிலர் நல்லவர்களாக வாய்க்கக்கூடும் என்னும் கருத்து இக்கேள்வியாளர் உள்ளத்தில் இருக்கிறது போலும். ஒரு சிறு பூமியில் பல பயிர்களை நட்டால் அவைகளில் சிலவாவது நன்றாக விளையும் என்னும் நம்பிக்கை ஒருவருக்கு இருக்கலாம். ஆனால் அதற்கு நேர்மாறாக சில பயிர்களை மட்டும் நட்டு வளர்த்தால் நல்ல விளைவு கிடைக்கு மென்பதை நாம் அனுபவத்தில் காணலாம். சமுதாயத்தில் இருப்பவர் சில குழந்தைகளை மட்டும் பெற்றெடுப்பது என்கிற விரதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வருவார்களானால் சமுதாயத்தில் சான்றோர்கள் ஏராளமாகத் தோன்றுவார்கள். யானையும் சிங்கமும் ஒன்றிரண்டு குட்டிகள் போடுகின்றன. சிங்கம் பன்னிரண்டு வருஷம் நிறைகாத்த பின்பே குட்டி போடுகிறது என்பது ஐதிகம். இதற்கு மாறாகப் பன்றி பல குட்டிகள் போடுகிறது. நம் சமுதாயத்துக்கு இன்றைக்குப் பன்றிக்குட்டி போன்றவர்கள் தேவையில்லை. யானைகளும் சிங்கங்களும் போன்ற திண்ணியர்களே வேண்டும். நன்மக் களைப் பெறும் பாங்கை நமது ரிஷிகள் காட்டியிருக் கின்றார்கள். ரிஷிக்குப் புதல்வனாகப் பிறப்பவன் ரிஷிபுத்திரனே. நெடுநாள் நிறைகாத்து தசரதராமன் இரு புதல்வர்களைப் பெற்றார். அவர்கள் இருவரும் இராம சொரூபமே. இந்த உயர்ந்த லக்ஷியத்துக்கு நம் நாட்டு மக்கள் அதிவிரைவில் திரும்பவேண்டும். அப்பொழுதுதான் உறுதிவாய்ந்த நன்மக்கள் பலர் நம் நாட்டில் தென்படுவார்கள்.

கட்டுப்பாடும், அடக்கமும், மனபரிபாகமும் உடையவர்களுக்கே சான்றோர் மக்களாகப் பிறக்கின்றனர் என்பது நெறிபிறழாத உண்மையாகும். வம்சத்துக்கு முற்றுப்புள்ளி என்கின்ற கேள்வி எல்லார் உள்ளத்திலும் எழவேண்டிய அவசியமில்லை. நல்வாழ்வைப் பற்றிய கேள்வியும் சமுதாயத்துக்குரிய நன்மக்கள் என்கின்ற கேள்வியையும்தான் நாம் யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: *(585)* கட்டுப்பாடற்ற வாழ்க்கையை நடத்தும் தற்காலத்திய மேனாட்டு மக்களைப்போன்று கருத்தடைக் கருவிகளை உபயோகிப்பதும், அணுக்கரு நாசத்திற்கு ஏதுவான அறுவைச் சிகிச்சைகளைச் செய்துகொள்வதும் பாபம் இல்லையா? பிண்டச்சிதைவு செய்வதுதான் பாபமென்றும், பிள்ளைகளைப் பெற்றுப் பலவீனமா வதைவிட, சக்தியற்ற பிள்ளைகளை வளர்ப்பதைவிட, அணுக்கரு நாசம் செய்யும் அறுவைச் சிகிச்சை புண்ணியமென்றும் சொல்லுகின்றனர். அரசாங்கமும் இதை ஆமோதிக்கிறது.

பதில்: அறநெறியில் தீவிரமான நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் இல்வாழ்க்கையில் பிரவேசிப்பதற்கு முன்பு நன்றாகப் புலனடக்கம் பழகவேண்டும். ஒரு உபமானத்தைக்கொண்டு இராமகிருஷ்ண பரமஹம்சர் இதை விளக்குகிறார். பலாப்பழம் அறுப்பதற்கு முன்பு கையிலும் கத்தியிலும் எண்ணெய் பூசிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பலாப்பழத்தில் உள்ள பிசின் போன்ற பால் கையிலும் கத்தியிலும் ஒட்டிக் கொண்டு இடைஞ்சல் செய்யும். மனிதன் முதலில் புலனடக்கம் பழகவேண்டும். பிறகு இல்வாழ்க்கையில் ஈடுபடலாம். இரண்டொரு புத்திரர்களைப் பெற்றெடுத்தான பிறகு திரும்பவும் தீவிரமாகப் புலனடக்கம் பழகவேண்டும். இப்படி வாழ்வது சான்றோரது இயல்பு. இந்நெறியைப் பின்பற்றுபவர்களுக்கு உலக வாழ்க்கையில் துன்பம் ஏற்படாது. நன்மக்களே அவர்களுக்குப் பேறு ஆக வாய்ப்பார்கள்.

நவீன மக்கள் சிற்றின்பத்துக்கு அடிமைப்பட்டவர்கள். சிற்றின்பத்தின் பொருட்டே அவர்கள் மணந்துகொள்கிறார்கள். அதன் விளைவு கணக்கற்ற காமப்புத்திரர்கள் உருவாகிறார்கள்.

அவர்களுக்கு உடல் நலம் குன்றியிருக்கும். அவர்களைப் பராமரிப்பதற்கு ஏற்ற பொருள் பெற்றோர்களிடத்து இராது. நரகவேதனை போன்ற வாழ்வே இதன் விளைவு ஆகிறது. சிற்றின்பத்துக்கு ஆளாவது ஒரு மடங்கு பாபம். உறுதியற்ற மக்களைப் பெருமிதமாக உண்டாக்கி அவர்களைத் துன்பம் நிறைந்த வாழ்க்கையில் கொண்டு செலுத்துவது இரண்டு மடங்கு பாபம் ஆகிறது. இன்று அரசாங்கம் பிரச்சாரம் செய்துவரும் மேல்நாட்டு வைத்திய முறைப்படி கர்ப்பத்தடை செய்து கொள்ளுதல் துன்பத்தையும் பாபத்தையும் ஏகதேசம் குறைப்பதாகிறது. ஆகவே இக்காலத்திய வைத்திய நிபுணர்களும் அரசாங்கமும் செய்துவரும் பிரசாரத்தில் ஓரளவு நன்மை இருக்கிறது. அதைச் சிசுவதை என்று சொல்லலாகாது. இரண்டு மடங்கு தீமையை அவர்கள் ஒரு மடங்கு தீமையாகக் குறைத்துவிட முயன்று வருகிறார்கள். அந்த அளவில் அது பாராட்டத்தக்கது. துன்பத்தைப் பெருக்குதற்கு ஏதுவாக இருக்கும் பிள்ளைகளைப் பெறலாகாது; ஆனால் சிற்றின்பத்தை அனுபவித்தே ஆகவேண்டும் என்னும் மனப்பான்மை அற நெறிக்கு ஒவ்வாது. தனது ஆத்ம வளர்ச்சிக்கு அது இடம் தராது. இன்பத்தை அனுபவிப்பதற்காக மனிதன் உயிர் வாழ்ந் திருக்கலாகாது. நல்லான் ஆவதற்கே அவன் உயிர் வாழ்ந்திருக்க வேண்டும். ஆதலால் அறநெறியில் ஆழ்ந்து செல்லுகிறவர்கள் சான்றோர்கள் காட்டியுள்ள மேலான நெறியாகிய புலனடக்கம் பழகுவதே சாலச்சிறந்தது. ❑

38. ஹிந்து மதமும் சமுதாயமும்

கேள்வி: *(586)* ஹிந்துக்களாகிய நம்மவர்களுக்கு ஹிந்து என்ற பெயரே புதியதாக வந்தது என்னும் குழப்பம் ஒன்று நாடெங்கும் பரவி வந்தது. இப்பெயர் பொருத்த மானதா? அல்லது பொருந்தாததா?

பதில்: நாம் வசித்து வரும் இந்த நாட்டுக்கு இப்பொழுது இந்தியா என்பது பெயர். இது பழைய பெயர் அன்று. ஆரிய வர்த்தம் என்பதும், பரத வர்த்தம் என்பதும் பழைய பெயர்கள். புதுப்பெயராகிய இந்தியா என்னும் நாமம் இக் காலத்திய மக்களாகிய நமக்கு விளங்குவது போன்று பழைய பெயர்கள் விளங்குவதில்லை.

அதேபோன்று நம் நாட்டில் இப்பொழுது பழக்கத் திலிருந்து வரும் முக்கியமான மதத்துக்கு ஹிந்து மதம் என்பது பெயர். சனாதன தர்மம் என்பது பழைய பெயர். எப்பெயரை வைத்து மக்களையும் அவர்கள் அனுஷ்டிக்கும் மதத்தையும் கூறுவது என்பது இப்போது முக்கியமான பிரச்னை அன்று. இந்நாட்டு மக்களாகிய நமக்கு இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிவர்த்தி பண்ணுவது எங்ஙனம்? இதுவே முக்கியமான கேள்வியாக இருந்து வருகிறது.

நம்நாட்டை இன்றைக்கு இந்தியா என்று கூறினால் அதில் பிழை ஒன்றுமில்லை. நாட்டு மக்கள் எல்லாருமே இப்பெயரை அறிந்து கொள்கின்றனர். இந்த நாட்டில் வசித்து வரும் மக்கள் எல்லாரும் இந்தியர்கள்.

இந்த நாட்டிலே இன்றைக்குப் பழக்கத்தில் இருந்துவரும் மதங்கள் மூன்று உள. அவை ஹிந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம் என்பனவாம். பிந்திய மதங்கள்

இரண்டும் வெளிநாட்டிலிருந்து வந்தவைகள். என்றென்றும் இந்நாட்டு மக்களுக்குச் சொந்தமாயுள்ள மதம் ஹிந்து மதம் என்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தில் மக்களுக்குக் குழப்பம் ஏதுமில்லை.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியோ ஹிந்துக்களுக் கிடையிலும் அவர்களை எதிர்க்கும் ஏனைய இரண்டு மதஸ்தர் களுக்குமிடையிலேயாம். இந்தச் சூழ்நிலையில் நம்மவர்களை எப்பெயரிட்டு அழைப்பது என்னும் கேள்வியைக் கிளப்பி மனக்குழப்பத்தை உண்டுபண்ணலாகாது. பண்டைக்காலம் தொட்டு நாம் அனுஷ்டித்துவரும் மதம் ஹிந்துமதம். புறமதஸ் தர்களை ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களாக மாற்றியமைக்கிற திட்டம் நம்மிடத்தில் இல்லை. ஆனால் வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள இஸ்லாமிய மதமும், கிறிஸ்தவ மதமும் அவரவர் மதத்தைச் சேர்த்தவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குதலில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றன. இதுகாறும் இவ்விஷயத்தில் நாம் கருத்து அதிகம் செலுத்தவில்லை. ஒரு போக்கில் இந்தப் புறமதங்களுக்கு ஆமோதிப்பும் தந்து வந்திருக் கிறோம். இதன் விளைவாகத் தாய் மதமாகிய ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிவேகத்தில் குறைந்து வருகிறது. புறமதஸ்தர்களின் எண்ணிக்கை மேலோங்கி அதிகரித்து வருகி றது. இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹிந்துக்களின் எண்ணிக்கை குறைந்து போய் இருக்கிறது. கிறிஸ்துவர்களின எண்ணிக்கை மேலோங்கி இருக்கிறது. இதன் விளைவாக ஹிந்துக்களை மடக்கித் தங்கள் மயமாக்க அவர்கள் துணிச் சலுடன் முயன்று வருகின்றனர். இதுவே ஆபத்தான சூழ்நிலை. தக்க தருணத்தில் நாம் விழிப்படைந்து தற்பாதுகாப்புக்காக முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் புறமதங்கள் நம் மதத்தை விழுங்கிவிடும். ஆதலால் ஹிந்துக்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்திருந்து நம் மதத்தைத் தக்க முறையில் பாது காக்கவும், ஆக்கிரமித்து வருகிற புறமதங்களைத் தோற்கடிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். மதத்தின் பண்பும் ஒரு நாட்டின் நாகரிகமும் ஒன்றேயாம். நம்முடைய பண்பையும் நாகரிகத் தையும் நாம் இழந்துவிட்டால் நம் சமுதாயமே அழிந்துபட்டுப் போனதற்கு நிகராகும். நாம் ஒன்றுபட்டால் இந்த

நெருக்கடியைச் சமாளிக்கலாம். பாராமுகமாகவோ, ஏனோ தானோ என்றோ இருந்தால் நம் தனி வியக்தியை இழந்து பிறர்க்கு நாம் அடிமைகளாவோம். இதுவே இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி. நமக்குரிய பெயர் எது என்று விவகரித்து வீண்காலம் போக்கலாகாது. உடனடியாக எழுந்திருந்து நம்மை நாம் காப்பாற்றிக்கொள்வோமாக.

கேள்வி: (587) **பொதுவாக இந்தியர்கள் சமயப்பொறை மிக்கவர்கள் என்று கருதப்படுகிறது. ஆனால் இந்து-முஸ்லீம், இந்து கிறிஸ்தவக் கலகங்களும் சண்டைகளும் ஒருபுறம் இருக்க, இந்துக்கள் தமக்குள் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டு வருகின்றனர். தம் இயல்பான பொறுமையை இந்துக்கள் இழந்து வருவதாகத் தோன்றுகிறதே?**

பதில்: பொதுவாகப் பகருமிடத்துப் புறமதச்சகிப்பை இந்தியாவில்தான் வேண்டியவாறு காணலாம். அவரவர்க்கு ஒத்துள்ள உணவை அவரவர் உண்டு உடல் வளர்ச்சி பெறுவதற்கு நிகராக அவரவர்க்கு ஒத்துள்ள சமயத்தை அவரவர் அனுஷ்டிக்க வேண்டும் என்பதே இந்நாட்டின் சீரிய கொள்கையாகும். ஆனால் காலப்போக்கு இதற்கு எதிரிடையாக அமைந்திருக்கிறது. இந்தியாவுக்குள்ளே புதியதாக வந்துள்ள சமயங்கள் இஸ்லாம், கிறிஸ்தவ மதம் ஆகிய இரண்டாம். இவை இரண்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்துக்கள் இதுகாறும் எந்தவிதத் தடையும் செய்யவில்லை. இந்த இரண்டு மதஸ்தர்களும் பரஸ்பரம் வெறுப்பது காலமெல்லாம் அவர்கள் போக்காய் இருந்து வந்துள்ளது. இன்றைக்கு அவர்கள் இருவரும் ஒன்றுகூடிக் கூடிய அளவு இந்துக்களைத் தங்கள் மதங்களில் சேர்க்க முயன்று வருகின்றனர். இத்தகைய முயற்சிக்கு அந்த இரு கூட்டத்தாருக்கும் வெளிநாடுகளினின்று வேண்டியவாறு உதவி கிடைக்கிறது என்று யூகிக்க இடம் உண்டு.

இந்துக்களுள் ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் கீழ் நிலையில் உள்ளவர்களையே தங்கள் மதங்களில் சேர்க்க அவர்கள் முயன்று வருகின்றனர். "கல்லைக் கடவுளாகக் கருதுகின்ற இந்துமதம் உங்களை மக்களாகப் பாராட்டுவதில்லை.

அத்தகைய சீர்கேடான நிலை உங்களுக்கு வேண்டாம். எங்கள் மதங்களில் சேர்ந்து எங்களோடு சம உரிமையுடன் வாழ்ந் திருங்கள்" என்னும் கொள்கையைத் தீவிரமாக அவர்கள் பரப்பி வருகின்றனர். பொருளாதாரத் துறையில் கீழ்நிலையில் இருக்கிறவர்களுக்கு ஏராளமான பணம் கொடுத்து அவர்களைத் தங்கள் மதத்திற்கு மாற்ற முயன்று வருகிறார்கள். இந்த முயற்சி இந்து மதத்துக்கு ஆபத்தானது. ஆதலால் இதை முற்றிலும் நிராகரிக்க இந்துக்களாகிய நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

இதுகாறும் இடைக்கால இந்துக்கள் தூங்கிக்கொண்டிருந் தார்கள். இப்பொழுது சிறிது சிறிதாக விழித்தெழுந்திருக் கிறார்கள். அவர்களுக்குள் இதுகாறும் நிகழ்ந்து வந்த சைவ சமயம் பெரியதா வைஷ்ணவ சமயம் பெரியதா என்பது மேற்போக்கான சண்டை. சமுதாய அமைப்புக்கு அது இடைஞ்சல் ஏதும் செய்யவில்லை. ஆனால் புறமதஸ்தர்கள் நம்நாட்டிற் குரிய சமுதாய அமைப்பையே மாற்றிவிட முயன்று வருகிறார்கள். சமயத்துறையில் இதுகாறும் உறங்கிக்கொண்டிருந்த இந்துக்கள் உடனே எழுந்திருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். சமயத்துறையில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை உணரவும் பரஸ்பரம் எடுத்து விளக்கிக்கொள்ளவும் அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். அதன் பொருட்டு விழித்தெழுந் திருக்கின்ற இந்துக்கள் அனைவரும் ஒன்று கூடுவதும் அவசிய மாகிறது. சகிப்புத்தன்மையே வடிவெடுத்துள்ள இந்துமதம் அவசியம் ஏற்படுமிடத்து எதிர்த்துப் போராடவும் வல்லது என்பதை நாம் நிரூபிப்போம். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்று பாரதியார் சொன்னது இன்றைக்கு முற்றிலும் பொருத்தமாக அமைந்துள்ளது. தற்பாதுகாப்பின் பொருட்டு இந்துக்களாகிய நாம் அனைவரும் உடனே எழுந்திருப்போம்; எதிரிகளை விரட்டி ஓட்டுவோம். தற்பொழுது நாடு முழுவதும் மக்களிடையே இந்து சமய உணர்ச்சி வெகுவாகக் கிளர்ந் தெழுந்துள்ளது. எனவே, அற்ப விஷயங்களை முன்னிட்டு இந்துக்கள் ஒருவர்க்கொருவர் வேற்றுமை பாராட்டிக் கொள்ளாமல் இந்து சமுதாயத்தின் பொதுவான நலனைக்

குறிக்கோளாகக் கொண்டு செயல் படுவதற்கான சிறந்த சூழ்நிலை ஏற்பட்டு வருவது பாராட்டுதற்குரியதாம்.

கேள்வி: (588) பால்ய விவாகம் ஏன் செய்தனர்?

பதில்: பால்ய விவாகம் இன்றைக்குச் சட்டபூர்வமாகத் தடுக்கப்படுகிறது. மற்றும் இந்தப் பழக்கம் நடைமுறையில் இருந்த காலத்தில் இதன் விளைவாக நன்மைகள் பல உண்டாயின.

இக்காலத்திய சமுதாயத்தில் காமத்தைப் பற்றிய உணர்ச்சி ஒருவாறு அதிகரித்திருக்கிறது. அத்தகைய உணர்ச்சியுடன் பால்ய விவாஹம் செய்தால் கேடு மிக உண்டாகும். ஆகையினால் அந்தப் பழக்கம் இக்காலத்திற்கு உதவாது. பண்டொரு காலத்தில் சமுதாயத்தில் காமத்தைப் பற்றிய உணர்ச்சி வயது வந்த பிறகு தான் தற்செயலாக மக்களுக்கிடையில் உருவெடுத்தது. அந்த எண்ணம் உருவெடுப்பதற்கு முன்பே சிறுவனும் சிறுமியும் எதிர்காலத்தில் கணவனும் மனைவியுமாக வாழ்ந்திருப்பார்கள் என்னும் சமஸ்காரம் சின்னஞ்சிறு வயதிலேயே ஊட்டப் பெறுவார்களாகில், அதன் மூலம் அவர்களுக்கிடையில் உள்ள இணக்கம் காமத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகாது. சின்னஞ்சிறு வயதில் இருந்தே உடன் பிறந்த ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் காம உணர்ச்சி வடிவெடுப்பதில்லை. சின்னஞ்சிறு வயதில் மணந்துகொண்ட சிறுவனுக்கும் சிறுமிக்கு மிடையில் உண்டாகிற தூய இணக்கம் காமத்தின் வேகத்தை மட்டுப்படுத்தியது. அதன் விளைவாக அவர்களுக்கு வாய்த்த மகப்பேறும் தூயதாக இருந்தது.

சிவனார் காமதகனம் செய்த பிறகே சிவனும் பார்வதியும் மணந்துகொண்டார்கள். அதன் விளைவாகக் கணபதியும் கார்த்தி கேயனும் அவர்களுக்குத் தூய மகப்பேறாக வாய்த்தார்கள். காமத்தின் விளைவாக வருகிற மகப்பேற்றுக்கும், தவத்தின் விளைவாக வருகிற மகப்பேற்றுக்கும் இடையில் வேற்றுமை மிக உண்டு. தவத்தின் விளைவாக வருகிற மகப்பேறு மேன் மைகள் பல வாய்க்கப்பெற்றதாக இருக்கிறது.

மேன்மக்களை உருவாக்குவது சமுதாயத்தின் பெரிய பொறுப்பாகிறது. இப்பொறுப்பைப் பழங்காலத்துப் பால்ய

விவாஹம் நிறைவேற்றியது போன்று இக்காலத்திய வாழ்க்கை முறை நிறைவேற்றுவதில்லை. ஆயினும் இக்காலத்திய சூழ் நிலைக்குப் பால்ய விவாஹம் ஒருபொழுதும் ஒத்துவராது. விவாஹம் செய்துகொள்ளும் முன்பும், அதற்குப் பிறகும் ஒவ்வொரு யுவனும், யுவதியும் தூய சீலம் நிறைந்த வாழ்க் கையில் ஈடுபடவேண்டும். இங்ஙனம் தம்பதிகள் இருவருக் கிடையில் வாழ்வு தூயதாகத் திருந்தியமைதற்கேற்றவாறு அவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் மேன்மையுற்றுத் திகழ்வது திண்ணம்.

கேள்வி: *(589)* தீண்டாமை எப்படி வந்தது? அதை எப்படி ஒழிப்பது?

பதில்: நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவனுக்குப் பத்தியம் வைக்கப்படுகிறது. இன்னதைப் பருகுவது, இன்னதை அருந்து வது, இன்னதை இன்னின்ன வேளைகளில் செய்வது என்னும் நியதிக்குப் பத்தியம் என்று பெயர். நோய் குணமானதும் பத்தியத்துக்கு அவசியமில்லை.

தீண்டாமை என்பது ஒருவித நோய். அது சமயக் கோட்பாடாக வடிவெடுத்திருப்பது மடமையின் உச்சநிலையாம். ஒரு குடும்பத்தில் இருப்பவர்களுள் ஒருவன் வீட்டுச் சாக்கடை களையும் கழிவறைகளையும் சுத்தம் செய்கிறான். அப்படிச் செய்தவன் நீராடி முடிக்கும் வரையில் மற்றவர்கள் அவனைத் தொடமாட்டார்கள். அது முறைமை.

நம் சமுதாயப் பழக்கவழக்கங்களில் ஒவ்வொரு கூட்டத் துக்கும் தனித்தொழில் என்னும் நியதியை இடைக்காலத்தில் அமைத்துக்கொண்டார்கள். தோட்டி வேலை செய்கின்றவர் களைத் தொடக்கூடாது என்னும் சுகாதாரக்கட்டுப்பாடும் அதைத் தொடர்ந்து வந்தது. நாளடைவில் அப்பழக்கம் ஒரு ஜாதிக் கொடுமையாக வடிவெடுத்தது. இது நம் சமுதாயம் செய்துள்ள பிழைகளில் பெரும் பிழையாம். எப்படியோ காஷ்மீரத்தி லிருந்து கன்னியாகுமரி பரியந்தம் எல்லா மாகாணங்களிலும் சற்று ஏற்றத்தாழ இப்பிழை புகுந்திருக்கிறது. தீண்டாமைக் கொடுமை தெற்கே வரவர அதிகமாயிருப்பதைக் காணலாம். அதன் உச்சநிலையைக் கேரளம் யாண்டும் கையாண்டு வருகிறது.

தீண்டத்தகாதவன், அணுகத் தகாதவன், காணத் தகாதவன் இப்படியெல்லாம் இப்பொல்லாத நோய் இந்த மாகாணத்தில் வடிவெடுத்திருக்கிறது.

ஆனால் நாளடைவில் புறவுலகோடு வைத்துள்ள தொடர் பின் வாயிலாகவும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், மகாத்மா காந்தி போன்ற சான்றோர்களின் முயற்சிகளின் விளைவாகவும் விவேக வளர்ச்சியின் விளைவாகவும் தீண்டாமை என்னும் நோய் நம் நாட்டினின்று மறைந்துபட்டுப்போகிறது. பட்டணங் களில் இந்த நோயை அகற்றுவதற்கு மிக எளிதாயிருக்கிறது. நாட்டுப் புறங்களிலோ இந்நோய் எளிதில் அகலமாட்டேன் என்கிறது. நோய்க்கு இடம் கொடேல் என்னும் கோட்பாட்டின் படி இதை அகற்றி ஒழிக்க நம்மவர்கள் எல்லாரும் கடமைப் பட்டிருக்கிறார்கள். தீண்டாமை என்னும் நோய் முற்றிலும் அகன்றுபோன பிறகே நம் நாடு பாருக்குள்ளே நல்ல நாடு என்னும் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

கேள்வி: *(590)* ஹிந்து சமயத்தில் கிறிஸ்தவர் முறை போன்று ஒன்றிய தொழுகை முறையை ஏற்படுத்த முடியாதா? அவ்வாறான இறைவழிபாடு நம்மிடையே ஒரு கட்டுக்கோப்பான உணர்வினை உண்டாக்கும் அல்லவா?

பதில்: கிறிஸ்தவர்கள் கையாண்டு வருகிற ஐக்கிய வணக் கத்தில் பாராட்டத்தக்க பகுதி உண்டு. அதில் உள்ள தகாத பகுதியைக் குறித்து விவேகானந்த சுவாமிகள் இங்ஙனம் பகர்கிறார்: "இப்பொழுது எல்லாரும் முழந்தாளிடுங்கள்; தெய்வ வழிபாடு பண்ணுங்கள்." இதுபோன்ற பட்டாளத்துக்கு இடுகிற ஆணை **(Regimentation)** கடவுள் வழிபாட்டுக்கு உதவாது. அவரவர் விருப்பப்படி உணவு உண்பது போன்று கடவுள் வழிபாடும் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ற பிரகாரம் நிகழ வேண்டும். பட்டாள அணிவகுப்பு அதற்கு உதவாது.

இனி, ஐக்கிய வழிபாடென்பது ஒன்று இந்து சமயத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்து வந்திருக்கின்றது. குறிப்பிட்ட நல்ல நேரத்தில் ஆயிரக்கணக்கான பேர் ஏககாலத்தில் இறை வனுடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டு புண்ணிய தீர்த்தமாடு வதாகும் அது. திருவண்ணாமலை போன்ற புண்ணிய

ஸ்தலத்தில் லட்சக்கணக்கான பேர் கூடி, "சங்கர மஹாதேவா" என்று கூவிக்கொண்டு தீப தரிசனம் பண்ணுவது எல்லார் உள்ளத்தையும் தொடக்கூடிய கவர்ச்சிகரமான நிகழ்ச்சி ஆகும். கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெறுகிற வழிபாட்டில் தலைவர் பட்டாளத்துக்கு ஆணையிடுவதைப் போன்று "முழந்தாளி டுங்கள், கும்பிடுங்கள்" என்று சொல்லுதல் நம் வழிபாட்டில் தேவையே இல்லை. அவரவர் மனது அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப நல்ல நேரத்தில் கடவுளை நாடிப் போகிறது. அதே வேளையில் ஆயிரக்கணக்கான பேர் ஒன்று கூடி ஏக காலத்தில் ஒருமை மனதாக வழிபாடு செய்யும்பொழுது எல்லார் உள்ளத்துக்கும் திருப்தியையும் ஆனந்தத்தையும் தரவல்ல நிகழ்ச் சியாக அது அமைகிறது. இந்நிகழ்ச்சியில் தலைவர் ஒருவர் இருந்துகொண்டு "இப்பொழுது கண்ணை மூடுங்கள், தியானம் பண்ணுங்கள்" என்று ஆணையிடுதல் பட்டாள அணிவகுப்புக்கு நிகராகும். அத்தகைய முறையை நாம் கையாளலாகாது. ஆயினும் கிட்டத்தட்ட கிறிஸ்தவர்கள் கையாளுகிற முறையை அனுசரித்து நவீன முறையில் நடாத்தும் அந்தர்யோகம் என்னும் ஆன்மிகப் பயிற்சி பட்டாள அணிவகுப்புப் போன்று தென் படுகிறது. பழைய பண்பிலும் அவரவர் மனதுக்கேற்ற வழிபாட்டு முறையிலும் வழிபடுவது அந்தர்யோகத்தில் இடம் பெறுகிறது. இம்முறையில் நூற்றுக்கணக்கான பேர் அமர்ந்துகொண்டு இறைவனுடைய நாமத்தை உச்சரிப்பதும், தியானம் பண்ணுவதும் அர்ச்சனை செய்வதும், கடவுளின் மகிமைகளைக் காது கொடுத்துக் கேட்பதும் பக்தியை வளர்க்கும். ஆகையினால் கிறிஸ்தவர்கள் கையாளுகிற முறைபோன்று அல்லாது நம் போக்கில் நம் பண்புக்கும் பக்திக்கும் ஏற்ப அந்தர்யோகம் நடாத்துவது சாலச்சிறந்த புதிய வழிபாட்டு முறையாகும்.

கேள்வி: *(591)* இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகியவை மக்களுக்குப் பணி செய்வதில் சிறந்து விளங்குகின்றன. ஹிந்துமதம் அப்படி ஏன் சேவை செய்வதில்லை? இதற்குக் காரணம் யாது?

பதில்: இக்கேள்வி ஆதரவற்றது. மக்கள் சேவையில் ஹிந்து மதத்துக்கு நிகரானது உலகில் வேறு எந்த மதமும்

இல்லை. கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் வழிபாட்டுக்காகத் தேவாலயம் சென்று திரும்பும்பொழுது வழியில் அமர்ந்திருக்கும் ஏழைகளுக்குத் தானம் பண்ணுகின்றனர். அது பாராட்டத்தக்க செயலே. ஆனால் அச்செயலில் பெரும்பகுதி அந்த ஏழை மக்களைப் பிடித்துக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றியமைப்பது அவர்களின் நோக்கமாகும். இனி, முஸ்லீம்கள் இஸ்லாமிய ஏழைகளுக்கு உதவிபண்ணுவது போன்று அவ்வளவு தாராளமாக ஏனையவர்களுக்கு உதவி பண்ணுவதில்லை. ஆனால் ஹிந்துக்களின் மனப்பான்மை அத்தகையதன்று. மதம் மாற்றுதலைப் பற்றிய எண்ணம் ஹிந்துக்களுடைய உள்ளத்தில் ஒருபொழுதும் எழுவதில்லை. நரசேவையே நாராயண சேவை என்றும், ஜீவ சேவையே சிவ சேவை என்றும் அடக்க ஒடுக்கத்தோடு பணிவிடை பண்ணும் பாங்கு ஹிந்துக்களுக்கே உரியதாம். மேல்நாடுகளில் யாசகம் பண்ணுகிறவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்து விடுகிறார்கள். அதுவே உண்மையில் அந்த நாட்டவர்கள் அனுஷ்டிக்கும் மதமாம். மற்று இந்தியாவில் வறியவர்களும் துறவியர்களும் கையில் காசு ஏதும் இல்லாது நாடெங்கும் யாத்திரை போகிறார்கள். ஆங்காங்கு மக்கள் பண்ணும் தானமே அவர்களை நன்கு பரிபாலித்து வருகிறது. துருவி ஆராய்ந்து பார்த்தால் மக்களுக்குப் பண்ணும் பணிவிடையில் ஹிந்துக்களுக்கு நிகரானவர்கள் உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லையென்றே இயம்பலாம்.

கேள்வி: *(592)* நாயன்மார்களும், ஆழ்வார்களும் பெண்களின் அங்கங்களையெல்லாம் வர்ணித்துப் பாடிய பாசுரங்கள் தேவாரத்திலும், நாலாயிரதிவ்யப் பிரபந்தத்திலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய ஆசைகளை ஒழித்தால்தான் பகவத்கிருபை உண்டாகும் என்பது பெரியோர்கள் கூற்று. அப்படியிருக்கத் தெய்வ தரிசனம் பெற்ற இப்பெரியோர்கள் அப்படியெல்லாம் வர்ணித்துப் பாடியது எதற்கு? இதில் வேதாந்த, உபநிஷத உட்கருத்துக்கள் ஏதேனும் உண்டா?

பதில்: நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவர்கள் போன்ற ஏனைய ஆத்ம சாதகர்களும் வாழ்க்கையிலுள்ள எல்லா படித்தரங்களையும் தாண்டிச் சென்றவர்கள். வாழ்க்கை என்பது நீண்ட பயணம். சிறுநிலையில் துவங்கி கடவுளை அடைதல் என்னும் பெருநிலையில் போய் முடிகிறது. நீண்டவழியில் நலன்களும் கேடுகளும் நிறைந்திருக்கின்றன. அப்போதைக்கப் போது கேடுகளில் அகப்பட்டுக் கொண்டவர்களாகவும் இத் தகைய ஆத்மார்த்தப் பிரயாணிகள் இருந்திருக்கிறார்கள். இன் றைக்கும் உலக மக்களில் பெரும்பான்மையோர் கேடு நிறைந்த சிற்றின்பங்களை நலம் நிறைந்த பேரின்பங்களாகக் கருதி அவைகளை நாடிச்செல்லுகின்றனர். பின்பு அவைகளால் விளை யும் தீங்குகளை அறிந்து அவைகளை விலக்க முயலுகின்றனர். அத்தகைய முயற்சிகள் நாயன்மார்களிடத்திலும் ஆழ்வார் களிடத்திலும் அக்காலத்தில் இருந்தது என்பதற்கு அவர்களு டைய சொற்களே சான்றுகள் ஆகின்றன. பரிபாகம் அடையா நிலையில் பெருமுயற்சிகள் எடுத்துக்கொண்டு அவர்களும் பாடுபட்டிருக்கின்றனர் என்பதற்கு அவர்களின் கூற்றுகள் பிரமாணங்கள் ஆகின்றன. அவைகளுள் நமக்குத் தேவை யில்லாத பல பகுதிகளை இப்பொழுது நாம் புறக்கணித்து விடலாம். உடல் வருணனையை அவர்கள் மிகைபடச் செய்தது எல்லார்க்கும் பயன்படக்கூடியதன்று. ரோஜாச் செடியில் முள்ளும் இருக்கிறது, புஷ்பமும் இருக்கிறது. கையில் முள் தைத்து விடாது பாதுகாத்துக் கொண்டு மலரைக் கொய்வது நமது குறிக்கோள். அதேபாங்கில் இப்பெருமக்கள் பகர்ந்துள்ள கூற்றுக்களில் நமக்கு உதவாதவைகளை ஒதுக்கி வைத்து விட்டு நமக்கு உதவுகின்றவைகளை மட்டும் நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். நிரந்தரமான சாஸ்திரங்களாகிய உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத்கீதை போன்றவைகள் இத்தகைய பொருளற்ற பேச்சுக்களை எடுத்துக் கொள்ளமாட்டா. உண்மையை விளக்கிக் காட்டுவதே அவை களின் போக்கு ஆகும். ஒவ்வொரு ஆத்ம சாதகனும் தன்னுடைய சாதனத்துக்குப் பொருத்தமான பகுதிகளை மட்டும் சாஸ்திரங்களிடத்தில் இருந்து பொறுக்கி எடுத்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: (593) கிறிஸ்தவர்களிலும் முஸ்லீம்களிலும் பெரும்பாலோர் நாள் தவறாது அல்லது வாரந்தவறாது அவரவர் ஆலயங்களுக்குச் சென்றுப் பிரார்த்தித்து வருவதைக் கடமையாகக் கொண்டு ஒழுகி வருகின்றனர். ஹிந்துக்களிலோவெனில் பெரும்பாலோர் தேர்த் திருவிழா, களியாட்டம் முதலிய கொண்டாட்ட காலங்களிலும், தின் பண்ட விநியோகக் காலங்களிலுமே ஆலயங்களை அணுகு கின்றனர். பிற மதத்தினர் சமயத்தையும், சமூகத்தையும் இணைத்தே வளர்க்கின்றபடியால் அவை பெருகிக் கொண்டே வருகின்றன. ஹிந்துக்களோ சமயத்தின் பேரால் குவியும் திரவியங்களையெல்லாம் சமூக வளர்ச்சிக்குச் சிறிதும் பயன்படுத்தாதபடி மேளம், நடனம், வானவெடி முதலியவைகளில் ஒன்றிரண்டு தினங்களில் கரைத்து விட்டு மேலும் கடவுள் பேரால் உறிஞ்சிக்கொண்டே வருவதனால் நமது மதம் அருகிக்கொண்டே வருகிறதென என் சிற் றறிவில் படுகிறது. இது சரியா? தவறா? சரியென்றால் இதற்கு எவ்விதம் விமோசனம் தேடுவது?

பதில்: சமய அனுஷ்டானத்திலும் சமூகப் பழக்கவழக்கத் திலும் ஹிந்துக்கள் கையாளும் முறை அலாதியானது. கிறிஸ்த வர்களும், முஸ்லீம்களும் கையாளும் முறைகளினின்று முற் றிலும் மாறுபட்டது. சமயத்தையும் சமுதாய அமைப்பையும் ஒன்றோடொன்று இணைத்து வைத்திருக்கிறார்கள் கிறிஸ்தவர் களும், முஸ்லீம்களும். ஹிந்துக்களுக்கோ சமய அனுஷ்டானம் வேறு, சமுதாயத்தின் நடைமுறை வேறு. இந்தியா போன்ற நாட்டில் கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள். தற்பாதுகாப்புக்காகச் சில பழக்க வழக்கங் களை அவர்கள் கட்டாயப்படுத்தவேண்டியதாகிறது. தங்களுக் கிடையில் ஒற்றுமை அவர்களுக்கு முற்றிலும் அவசியமானது. மதம், சமுதாயம் ஆகிய இரண்டையும் ஒன்றுபடுத்துவதே தற்பாதுகாப்புக்கு ஏற்ற ஏற்பாடாகிறது. ஐரோப்பாவிலுள்ள நாடுகளை எடுத்துக்கொண்டால் ஆங்கு இருக்கும் கிறிஸ்து மதத்தை இந்தியாவிலிருக்கும் கிறிஸ்து மதத்தோடு ஒப்பிட முடியாது. நாள்தோறும் அல்லது வாரந்தோறும் ஆலயத்துக்குப் போகின்ற பழக்கத்தை இந்தியாவில் காண்பது போன்று

அவ்வளவு சிறந்த முறையில் ஆங்குக் காணமுடியாது. ஆலயத்துக்குப் போகின்றவர்களுடைய எண்ணிக்கை அந்த நாடுகளில் ஆண்டுதோறும் அதிவிரைவில் குறைந்து வருகிறது. சமயத்தை அவர்கள் மூன்று காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். பிறப்பு, விவாகம், மரணம் ஆகிய இந்த மூன்றுக்கே அவர்களுடைய சமயம் பெரிதும் நிலைபெற்றிருக்கிறது. பிறந்த குழந்தைக்கு ஞானஸ்நானம் பண்ணி வைப்பது, பிறப்பை ஆலயத்தில் பதிவுசெய்து வைப்பது ஆகிய சடங்குகளுக்காக அவர்களுக்கு ஆலயம் இருக்கிறது. மணம் முடித்துக்கொண்டால் அதைப் பதிவு செய்வதற்கும் ஆலயம் இருக்கிறது. செத்த பிணத்தை ஆலயத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் கல்லறைகளில்தான் வைத்தாக வேண்டும். ஆக, சமயத்தின் பெயரால் மூன்று நிகழ்ச்சிகள் அவர்களுடைய சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. முஸ்லீம்களுடைய போக்கும் கிட்டத்தட்ட இது போன்றதே.

ஹிந்துக்களிடத்தோ வாழ்க்கை முறை இத்தகைய ஏற்பாட்டில் வந்து அமையவில்லை. பிறப்பும், விவாகம் பண்ணிக் கொள்ளுதலும், மரணமும் ஆலய வழிபாட்டோடு சம்பந்தப்பட்டவைகள் அல்ல. பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டையும் முன்னிட்டு யாரும் ஆலயத்துக்குள் போகலாகாது என்பதே ஹிந்துக்களுக்கிடையிலுள்ள ஐதிகம். இரண்டும் தீட்டாகக் கருதப்படுகின்றன. ஆனால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் ஆலயத்தோடு சம்பந்தப்பட்டவைகளாக மற்றவர்களுக்கு இருக்கின்றன. இனி, விவாகம் என்பது முற்றிலும் லௌகீகச் சடங்கு. ஆலயத்துக்குள் அது நடைபெறுவதற்கு நாம் இடந் தருவதில்லை. இன்றைக்குச் சில கோயில்களில் இடவசதியை முன்னிட்டு வெளி மண்டபங்களில் விவாகத்தை முடித்துக் கொள்கின்றனர். ஆனால் வழிபாட்டுக்குரிய இடத்தில் சென்று விவாகம் முடிப்பதில்லை. நமது ஐதிகம் அதற்கு இடந்தருவதும் கிடையாது. பிறப்புக்கும், மணச்சடங்குக்கும், மரணத்துக்கும் புரோகிதம் பண்ணுபவர்கள் உண்டு. ஆனால் ஆலயத்தை இச் சடங்குகளோடு சம்பந்தப்படுத்துவதில்லை. வழிபாட்டுக்கென்றே அமைந்தது ஆலயம். லௌகீகச் சடங்குகளுக்காக அமைந்தவைகளாக ஏனைய மதத்தவர்களுடைய ஆலயங்களும்,

தொழுகின்ற இடங்களும் இருந்து வருகின்றன. இந்தப் பெரிய வேற்றுமையை நாம் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஹிந்துக்கள் பல பிறவிகளில் நம்பிக்கை வைப்பவர்கள். கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பிறவி ஒன்றுதான் என்பது கொள்கை. அந்த ஒரு பிறவியில் மனிதனைத் தேவாலயத்தோடு சம்பந்தப்படுத்தி வைத்திருக்குமளவே அவனுக்கு மறுமைப் பயன் வந்தமைகிறது. சமயத்தார் நியமித்து வைத்திருக்கும் இடங்களில் செத்தவனைப் புதைத்தால்தான் பரலோகப் பிராப்தி என்பது அவர்களுடைய நம்பிக்கை. ஹிந்துக்களுக்கோ இக்கொள்கை அர்த்தமற்றது. எண்ணரிய பிறவிகளில் மனிதன் தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டு வருகின்றான். செத்ததும் பிணத்தை அவன் சுட்டெரித்து விடுகின்றான். பிணத்துக்கும் அந்த ஆத்மாவுக்கும் பிறகு ஒருவிதத் தொடர்பும் இல்லை என்பது ஹிந்துவினுடைய கோட்பாடு. ஆதலால் அவனைத் தேவாலயங்கள் கட்டுப்படுத்துவதில்லை. மனிதனை அப்படிக் கட்டுப்படுத்தலாகாது என்பதே நம் கொள்கை. சமயத்துறையில் ஹிந்துக்கள் அனுபவித்து வரும் சுதந்திரத்தை வேறு எந்த மதத்திலும் காணமுடியாது. மற்றவர்கள் அமைத்து வைத்திருப்பது (Origanised religion) அரசாங்க அமைப்பைப் போன்று சமயத்தைச் செய்து வைத்திருக்கின்றனர். அதில் அடங்கி நடக்காதவர்களுக்கு விமோசனம் இல்லை. ஹிந்து மதமோ அரசாங்கம் போன்று அமைக்கப்பட்ட சமயம் அல்ல. தனது கொள்கைக்கும் மனப்பான்மைக்கும் ஏற்ப மனிதன் எப்படி வேண்டுமானாலும் கடவுளை வழுத்தலாம். தன் வீட்டிலேயே கடவுளைக் கும்பிடலாம். தன் மனதுக்குள் கடவுள் குடிகொண்டிருக்கிறார் என்பதுதான் ஹிந்துக்களுடைய முக்கியமான கொள்கை. கடவுள் பரலோகத்தில் இருக்கின்றார்; ஆலயத்தில் தொழுவதின் மூலம் அவரை அணுகுதற்கு அனுமதி கேட்டுக்கொள்ள வேண்டும் என்பது மற்றவர்களுடைய நம்பிக்கை. அந்த நம்பிக்கை அவர்களை ஒருவிதத்தில் ஒரே கூட்டமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. ஹிந்துக்களோ வேண்டுமானால் ஆலயத்துக்குப் போகலாம், என்றைக்கு வேண்டுமானாலும் போகலாம், போகாமலும் இருந்து கொள்ளலாம். இத்தகைய ஐதிகத்தில் ஊறியவர்கள் நாம்.

ஆதலால் நம்மிடம் கட்டுப்பாட்டையோ ஒழுங்குப்பாட்டையோ காண்பது அரிதாய்விட்டது.

திருவிழாக்களெல்லாம் மக்களைப் பெருந்திரளாகத் திரட்டு தற்கென்றே அமைந்தவைகள். அதில் வேடிக்கை விநோ தங்களுக்கு வேண்டியவாறு இடம் உண்டு. அந்த வேடிக்கை விநோதங்களுக்கிடையில் கொஞ்சம் கடவுள் வழிபாடும் இருக் கின்றது. நரகப்பிராப்திக்குப் பயந்து ஆலயம் தொழுவது நம்முடைய ஐதிகம் அல்ல. இதைவிட உயர்ந்த நிலைக்குப் போகவேண்டும் என்கின்ற விருப்பம் உடையவர்களே ஆலயத் திலும், பூஜை அறைகளிலும், தங்கள் மனத்தகத்தும் தெய் வத்தை எழுந்தருளப் பண்ணி வணங்குகிறார்கள். சமயத்தின் பெயரால் ஹிந்துக்கள் படைத்திருக்கிற மனப்பான்மை வேறு, மற்றவர்கள் படைத்திருக்கிற மனப்பான்மை வேறு. அவர் களுடைய ஒழுங்குப்பாடு நம்முடைய மனத்தைக் கவருவது போன்று தென்படுகின்றது. நம்மிடத்து ஒழுங்குப்பாடு இல்லாதிருப்பது வருந்தத்தக்கது போன்று தென்படுகின்றது. ஆயினும் நமது முறை எந்தவிதத்திலும் அவர்களுடைய முறைக்குக் கீழ்ப்பட்டதன்று. சில ஒழுங்குப்பாடான பழக்க வழக்கங்களை நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்களுடைய மனப்பான்மை ஒருநாளும் நமக்கு உதவாது. நம் சமுதாயத்தில் ஆத்ம சாதனத்தில் மேலான நிலைக்குப் போனவர்கள் பலபேரைக் காணலாம். இந்தப் பாங்கில் வேறு எந்த சமயத்திலும் அல்லது சமுதாயத்திலும் காணமுடியாது. ஒரு மரம் நல்லதா கெட்டதா என்பதை அது தரும் கனியினின்று முடிவு கட்டுகிறோம். ஒரு சமயம் நல்லதா கெட்டதா என்று அதை அனுஷ்டிப்பதினின்று உருவெடுத்து வரும் சான்றோர்களைக் கொண்டு முடிவு கட்டவேண்டும். சான்றோர்களை ஆயத்தப்படுத்துவதில் என்றைக்கும் நம்முடைய சமயத்தின் முறையே தலைசிறந்த முறையாகும். வெளித்தோற்றத்துக்கு நாம் கட்டுப்பாடு அற்ற வராகத் தென்படுகின்றோம்; மனபரிபாகத்திலோ நம் போக்கு என்றைக்கும் பாராட்டத்தக்கதே.

விழாக்களிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் பணச் செலவாவதும், சுரண்டுதல் என்று சொல்லப்படுகிற செயலும்

உண்மையில் பெரியவிரயம் ஆகமாட்டா. சுரண்டுதல் என்னும் செயல் நம் சமயத்தில் இருப்பதைவிட மிக அதிகமாக ஏனைய சமயங்களில் இருக்கின்றன. நாம் பிற்போக்கில் போய்க்கொண் டிருக்கிறோம் என்பதும், அவர்கள் முற்போக்கில் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மையல்ல. பல்லாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்த மாறுதல்களையெல்லாம் சமாளிக்கும் உள்வலிவு நமது சமயத்திலும் சமுதாயத்திலும் உண்டு. இந்த உள்வலிவானது நம்முடைய வாழ்க்கை முறையும், நம்முடைய ஐதிகமும் மேம்பட்டதாக இருக்கும் வரையில் என்றைக்கும் குன்றிப்போகாது. நம் சமயத்திலும் சமுதாயத்திலும் வெளிப் பகட்டையும் கவர்ச்சிகரமான ஒழுங்குப்பாட்டையும் காண்பது அரிது என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆனால் சீலத்திலும் ஆத்மசாதனத்திலும் நாம் என்றைக்கும் மேல் நிலையில் இருப்போம்.

கேள்வி: (594) **நம் இந்திய நாட்டில் ஒரு உயிர்கூடப் பட்டினி இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே என் மதம் என்று விவேகானந்த சுவாமிகள் வாக்கியத்தில் இருக்கிறது. அதற்கு கம்யூனிஸம் வந்து எல்லாம் பொதுவுடைமை ஆக்கப்பட்டால் யாவரும் சம சந்தர்ப்பத்தில் சமமாக வாழ முடியும் என்று சொல்லப்படுவது உண்மையா? நம் நாட்டில் தற்போது கம்யூனிஸ்ட்டுக்கள் அனுஷ்டித்துவரும் கொள்கைகள் நாட்டிற்கு ஏற்றதா? அதனால் நாடு நலம் பெறுமா?**

பதில்: இப்பொழுது நம் நாட்டில் நாம் கண்டுவரும் கம்யூனிஸம் நல்ல மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டதன்று. யாரிடத்தில் பணமிருக்கிறதோ அதைப் பறிமுதல் பண்ணவேண்டும் என்பது நாம் காணும் கம்யூனி ஸத்தினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. ஒவ்வொரு மனிதனும் மனமார உழைத்துப் பாடுபட வேண்டும் என்கின்ற கோட்பாட்டை அவர்கள் பரப்புவதில்லை. பிறத்தியார் சம்பாதித்ததை தங்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று அவர்கள் காமுறுகின்றனர். வேதாந்தம் புகட்டுகின்ற கம்யூனிஸம் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. பொருள் மிகப்

படைத்தவன் அப்பொருள் அலாதியாகத் தனக்குச் சொந்தம் என்று கருத லாகாது. தான் தேடிய பொருளும் தான் வாழும் வாழ்க்கையும் உலகுக்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணத்தில் ஊறி வளர்பவனே நல்ல முதலாளி. செல்வத்தைப் பிறர்க்கெடுத்து வழங்குமளவு அவனுக்கு மேலும் செல்வம் வளரும். உழைப்பாளி முழுமனதுடன் உழைக்குமளவு அவனுக்கு ஆற்றல் அதிகரிக்கிறது, நல்ல மனப்பான்மை வருகிறது, செல்வமும் ஓங்குகிறது. ஆகவே சுயநல நோக்கத்துடன் முதலாளியோ தொழிலாளியோ இருக்கலாகாது. பொதுநல நோக்க மனப்பான்மையே வேதாந்தம் புகட்டுகிற கோட்பாடு ஆகும். ஆக, வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சமதர்மம் யாருக்கும் கேடு விளைவிக்காது; எல்லார்க்கும் நலன் விளைவிக்கும். சமுதாயத்தில் எவ்வளவு உயர்ந்த வாழ்க்கைமுறை அமைந்துவிட்டாலும் அதற்கிடையில் பட்டினி கிடக்கும் உயிர் ஏதோ சில இருக்கத்தான் செய்யும். இயற் கையின் அமைப்பு அத்தகையது. அதை யாரும் மாற்றிவிட முடியாது. ஆயினும் எல்லா உயிரும் இன்புற்று வாழ வேண்டுமென்று அவாவுறுவது சீரிய மனப்பான்மையாகும். அதைத்தான் விவேகானந்த சுவாமிகள் கூறியுள்ளார்

கேள்வி: *(595)* இந்து தர்ம ஆச்ரம முறைகளான பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகியவற்றில் மாதர்களின் பங்கு என்ன? தக்க சான்று களுடன் விளக்கம் தர வேண்டுகிறேன்.

பதில்: வாழ்க்கையில் ஆண்களுக்கு எது குறிக்கோளாக அமைந்திருக்கிறதோ அதுவே பெண்களுக்கும் குறிக்கோளாக அமைந்திருக்கிறது. பிரம்மச்சரியத்தில் பெண்களும் பயிற்சிபெற வேண்டுமென்பதற்குச் சீதாபிராட்டியே நல்ல சான்று ஆகி றாள். பதினான்கு வருஷகாலம் கணவனுடன் தானும் பிரம்மச் சரியத்தை அனுஷ்டித்தாள். பிறகு இல்வாழ்க்கையைக் கணவ னுடன் கூடி நடாத்தினாள். வானப்பிரஸ்த வாழ்க்கைக்கு நிக ராக அவள் வால்மீகி ஆச்ரமத்தில் இருந்ததை ஒப்பிடலாம். சந்நியாச ஆச்ரமத்துக்குப் போகாது ஸ்ரீராமனுக்கும் சீதைக்கும் வாழ்வு முற்றுப்பெற்று விடுகிறது. ஆண்கள் சந்நியாசம் பூண்டு

ஓயாது இடம்மாறிப் போய்க் கொண்டிருக்கலாம். ஆனால் பெண்களோ இருந்த இடத்திலேயே சந்நியாச லட்சியத்துக்கு ஏற்ப வாழ்ந்திருக்க வேண்டும் என்பது விதி. புத்தர் மனைவி யசோதரா அங்ஙனம் செய்தாள். ❑

39. சமுதாய ஒற்றுமை

கேள்வி: *(596)* மாறுபட்ட மனப்பாங்குடைய பாரத மக்களை ஒன்றுசேர்க்க ஒரு சிறந்த விளக்கமான திட்டம் யாது?

பதில்: மாறுபாடு இயற்கையின் அமைப்பு ஆகும். மாறு பாடு இல்லையெனில் சிருஷ்டி இல்லை. உடல் அமைப்பிலோ, மன அமைப்பிலோ, வாழ்க்கை முறையிலோ இரண்டுபேர் ஒரேவிதமாக இருக்கமுடியாது. எங்கு பார்த்தாலும் கண்கூடாக விளங்கும் மாறுபாட்டை நாம் அங்கீகரித்தே ஆகவேண்டும். மாறுபாட்டின் உச்சநிலையைப் பரதகண்டத்திலே காணலாம். உலகெங்குமுள்ள வேறுபாடுகளெல்லாம் ஒன்று கூடியது இந்த நாடு என்றால் அது மிகையாகாது. இன வேறுபாடு, நிற வேறுபாடு, மத வேறுபாடு, சமய வேறுபாடு, சமூகப் பழக்க வழக்க வேறுபாடு, மொழி வேறுபாடு இவைபோன்ற எண்ணிறைந்த வேறுபாடுகள் உண்டு.

இயற்கையைப் போற்றுதல் என்பது அதன்கண் உள்ள மாறுதலை ரசித்தலாம். அதை மாற்ற யாராலும் முடியாது; மாற்ற முயலுபவர் வீணே வருந்தியவர் ஆவர். மாறுபாட்டை அங்கீகரித்துக்கொள்ளுதல் வாழ்க்கையின் முதல் பாடமாகும். ஒரு குடும்பத்துக்குள் இருப்பவர் எல்லாருக்கும் ஒரேவித மனப்பான்மையில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருவித எண்ணமும் கொள்கையும் உடையவர் ஆகின்றனர். ஆயினும் குடும்பத்துக்குள் அன்பு உண்டு, ஒற்றுமையுண்டு. பிறர் கொள்கைக்கு அனுமதி கொடுப்பது அன்பின் அறிகுறி. கொள்கையில் வேறுபடுபவனை வெறுப்பது வெறியின் அறிகுறி. வெறி கொண்டவன் தனக்கும் நலம் செய்யமுடியாது, உலகுக்கும்

நலம் செய்யமுடியாது. நமக்கு நாம் நல்ல கொள்கை கொண் டிருத்தல் வேண்டும். அதை நன்கு கடைப்பிடிக்கவும் வேண்டும். இதே கொள்கைச் சுதந்திரத்தை மற்றவருக்கும் கொடுக்கவேண்டும். உலகில் எல்லாக் கொள்கைக்கும் இடமுண்டு. அன்புடன் அனைத்தையும் ஆமோதித்து அவைகளுக்கு இடந்தருதலே நல்ல திட்டமாகும். நம் நாடு இம்முறையை என்றைக்கும் கடைப்பிடித்து வந்துள்ளது. இதைவிட மேலான திட்டம் ஒன்றை மனதால் எண்ணவும் நமக்கு இயலாது.

கேள்வி: *(597)* நம் நாட்டில் கபீர்தாஸ் முதல் மகாத்மா காந்திஜி வரை ஹிந்து - முஸ்லீம் ஒற்றுமைக்காகச் சேவை செய்தும் அக்காரியம் சித்தியடையாமல் கடைசியாக நாட்டிற்கே கேட்டையும் விளைவித்தது. இதற்குக் காரணம் யாது?

பதில்: இந்தியாவினுள் எல்லாவிதமான சமுதாயங்களும் குடியேறின. வெல்லுதற்கு வந்தவர்கள், வியாபாரத்துக்காக வந்தவர்கள், வாழ வந்தவர்கள் ஆகிய எல்லாவிதமான பாங்குடையவர்களும் இங்கிருக்கிறார்கள். இது இந்தியாவின் தனிச்சிறப்பு ஆகும். உலகத்தில் உள்ள எல்லாவிதமான மக்களையும் ஒன்று சேர்த்து இந்தியாவில் காணலாம். அத்தனை பேர்க்கிடையில் சண்டை சச்சரவு இல்லாப்பான்மை பலர்க்கிடையில் வந்துவிட்டது. குடியேறியவர்களுள் பெரிய போராட்டம் இந்து - முஸ்லீம்களுக்கு இடையில்தான் நெடுநாளாக இருந்து வருகிறது. முஸ்லீம்கள் இந்தியாவுக்குள் வந்து சுமார் ஐந்நூறு வருஷங்கள் ஆய்விட்டன. ஒரு நாட்டுக்கு ஐந்நூறு வருஷம் நெடுங்காலம் ஆகாது. தனி மனிதனுடைய ஜீவிதத்தில் ஒரு மாதம் எவ்வளவோ அவ்வளவுதான் ஐந்நூறு வருஷம் என்பது ஒரு சமுதாயத்துக்கு. இதற்குள்ளாக மனப்பான்மையில் எவ்வளவோ முன்னேற்றம் வந்திருக்கிறது. இன்னும் இருநூறு வருஷங்களுக்குள் இதைவிடப் பன்மடங்கு அதிகமான மனம் மாறுதல் வந்துவிடும். கபீர்தாஸ், மகாத்மா காந்திஜி போன்றவர்கள் முன்மாதிரியாக அமைந்தவர்கள். அவர்கள் வழியைப் பின்பற்றி எதிர்கால சமுதாயம் நிச்சயமாக அமைந்துவிடும். இப்பொழுது கேடு என்று நாம் பகர்வது

தவிர்க்கமுடியாத நிலையாகும். உலக வாழ்வில் கேடுகள் பல இருக்கின்றன. அவைகளைச் சமாளிப்பதும் ஒருவிதப் பயிற்சியாகும். எதிர்கால இந்தியாவில் இந்து - முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டே ஆகும். இருதரத்தாருடைய நன்மையை முன்னிட்டு அவர்கள் ஒற்றுமைபண்ணிக் கொள்வார்கள். ❑

மக்களிடத்து இயல்பு வேற்றுமை உண்டு. அதை முன்னிட்டு மத வேற்றுமையும் இருந்தே தீரும். ஒரு மதத்தை அனுஷ்டிக்கின்றவன் மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களிடத்து அலட்சியம் பாராட்டலாகாது. புறமதஸ்தர்களைத் தனக்குக் கீழானவர்களாகக் கருதுகிறவன் தானே கீழ்மையடைந்து போகிறான்.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

F.C: M.R
B. Comp: Ra